TDRC No. 2395
RR No. 57-2-1897
திருக்கோவையார்

Q23:L172S
M47

உ

சிவமயம்.

சைவசமயாசாரியராகிய

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

திருக்கோவை

இஃது

நச்சினார்க்கினியரு

இயற்றமிழ்

விசாக

திரு

தீ

12-0915

...னை தங்கசாலை
சந்தில்வேலு
989 - ரூ.
மலை

02-347

(947)

(எ-து.) மதிபோலும் ஒள்ளிய நெற்றியையுடைய வஞ்சி யிளங்கொடிபோன்ற தலைமகளைக் கதிர்வேலை யுடைய தலைமகன் கண்டது.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக் [வ
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்
மருவளர்மாலையோர்வல்லியினொல்கியனநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே.

(இ-ள்.) திரு வளர் தாமரை - திருவளருந் தாமரைப் பூவினையும்,—சீர் வளர் காவிகள் - அழகுவளரும் நீலப்பூக்க[ளையும்],— ஈசர் தில்லை குரு வளர் பூங்குமிழ் - ஈசரது தில்லைக்காப்பிளக ணுண்டாகிய பூங்குமிழினது நிறம்வளரும் பூவினையும்,—கோங்கு - கோங்கரும்புகளையும்,—பைங் காந்தள் கொண்டு - பசிய காந்தட்பூக்களையும் (உறுப்பாகக்) கொண்டு,—ஓங்கு தெய்வம் மருவளர் மாலை - மேம்பட்ட தெய்வமணம் வளரும் மாலை,—ஓர் வல்லியின் ஒல்கி அன்னம் நடை வாய்ந்து-ஒரு கொடிபோல நுடங்கி அன்னத்தினது நடைவாய்த்து,—உரு வளர் காமன் தன் வென்றி கொடி போன்று - வடிவுவளரும் காமனது வெற்றிக் கொடிபோன்று,— ஒளிர்கின்றது - விளங்குகின்றது, (என்ன வியப்போ!) எ-று. * மெய்ப்பாடு - உவகை; பயன்-மகிழ்தல்.

திரு என்பது அழகு. வளருமென்பது மூன்றிடத்துக்கும் பொது. ஈசர் தில்லை யென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. பல நிலங்கட்கும் உரிய பூக்களைக் கூறியவதனால் நிலமயக்கங் கூறியவாறாயிற்று; ஆகவே பலநிலங்களினும் சென்று துய்க்

* மெய்ப்பாடென்பது புறத்துக்கண்டதோர் பொருள் காரணமாக நெஞ்சிற்றோன்றிய விகாரத்தின்விளைவு. பயனென்பது நெஞ்சினடுத்ததோர் மெய்ப்பாடு காரணமாகத் தன்னிடத்து நிகழ்ந்தசொல்லால் எய்துவது. இவற்றை வருமிடந்தோறும் கொள்க.

கும் இன்பமெல்லாம் தில்லையின்வாழ்வார் ஆண்டிருந்தேதுய்ப்பரென்பதுபோதரும்: அதனால் இம்மையின்பத்திற்குத் தில்லையே காரணமென்று கூறியவாறாயிற்று. அன்றியும் ஈசர்தில்லையென்பதனான், மறுமையின்பத்திற்கும் காரணமாதல் சொல்லாமையே விளங்கும்.

தாமரையால் மருதமும், நெய்தலால் நெய்தலும், குமிழால் முல்லையும், கோங்கால் பாலையும், காந்தளால் குறிஞ்சியும் என [illegible] வினால் ஐந்திணையுஞ்சுட்டிக் கூறப்பட்டது. ஆதலால் [illegible] ன்பெருமை கூறப்படாது தில்லைநகரின்பெருமை [illegible] வெனின், அற்றன்று சொல்லின்முடிவினப் பொருண்முடித்தல் என்னும் உத்தியால் பைங்காந்தளென்று குறிஞ்சிக்குரிய பூவிலேமுடித்தலால், புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய குறிஞ்சியே கூறப்பட்டது. கோங்கிற் கடைதொடாது ஏனைநான்குமலர்க்கும் அடைகொடுத்தமை, பாலைக்கு நிலமின்மையால் பாலைநிலஞ் சொல்லுதல்பற்றி; அடைகொடுத்தால் பிறவுறுப்புக்களோ டிதனையும் ஒப்பித்ததாம்.

ஐயம்.

தெரியவரியதோர் தெய்வமென்[illegible]ன
அருவரைநாட னையுற்ற[illegible]து.

(எ-து.) அருமையாகிய மலை நாட்டையுடையவனாகிய தலைமகன், (கண்டபின் இவ்வாறு தோன்றும் இம்மாது) தெரியவரியதாகிய (திருமகள்முதலிய) ஒப்பற்ற தெய்வமோ? (அல்லது மக்களுள்ளாளோ?) என்று ஐயங்கொண்டது.

போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோ
யாதோவறிகுவதேதுமரிதியமன்விடுத்த
தூதோவனங்கன்றுணையோவிணையிலிதொல்லைத்தில்லை
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே.

(இ-ள்.) யமன் விடுத்த தூதோ - இயமனால் விடுக்கப்பட்ட தூதோ,—அனங்கன் துணையோ - மன்மதனுக்கு (வசித்தற்கரியாரை வசித்தற்குண்டாயிற்றோர்) துணையோ,—இணையிலி தொல்லை தில்லைமாதோ - ஒப்பில்லாதவனது பழைமையாகிய (இத்) தில்லையின்கண் வாழ்வாரோர் மாதரோ,—மடம் மயிலோ என நின்றவர் - மடப்பத்தையுடைய மயிலோ என்று (சொல்லும் வண்ணம்) நின்றவரது,—வாழ்பதி - வாழ்பதியானது,—போதோ - தாமரைப்பூவோ,—விசும்போ - ஆகாயமோ,—புனலோ - நீரோ,—பணிகளது பதியோ - பாம்புகளது பதியாகிய (நாகருலகமோ),—யாதோ - யாதோ,—ஏதும் அறிகுவது அரிது - சிறிதும் அறித லரிது. எ-று. மெய்ப்பாடு-உவகையைச்சார்ந்த மருட்கை; பயன் - ஐயந்தீர்தல். (௨)

தெளிதல்.

அணங்கல்லளென் றயில்வேலவ[illegible]ன்
குணங்களைநோக்கிக் குறித்துரைத்தது.

(எ-து.) கூர்மையாகிய வேலையுடைய தலைமகன் (ஐயங்கொண்டபின்) அவயவம் இயங்கக்கண்டு இவள் தெய்வமல்லளென்று தெளிந்து கூறியது.

பாயும்விடை[illegible]ரன்றில்லையன்னாள்படைக்கண்ணிமைக்குந்
தோயுநிலத்[illegible]தூமலர்வாடுந்துயரமெய்தி
யாயுமனனேயணங்கல்லளம்மாமுலைசுமந்து
தேயுமரு[illegible]ங்குற்பெரும்பணைத்தோளிச்சிறுநுதலே.

(இ-ள்.) பாயும் விடை அரன் தில்லையன்னாள் - பாய்ந்துசெல்லும் விடையையுடைய அரனது தில்லையை யொப்பாளுடைய,—படை கண் இமைக்கும் - வாள்போலுங் கண்கள் இமையாநின்றன,—நிலத்து அடி தோயும் - நிலத்தின்கண் பாதங்கள் தீண்டாநின்றன,—தூ மலர் வாடும் - தூயமலர்கள் வாடாநின்றன,—துயரம் எய்தி ஆயும் மனனே - (ஆதலின்) துயரத்தையெய்தி ஆராயும் மனமே!—அம் மா முலை சுமந்து தேயும் மருங்

குல் பணை பெரும் தோள் இ சிறு நுதல் அணங்கு அல்லள் - அழகிய பெரிய முலைகளைச்சுமந்து தேயாநின்ற இடையையும், மூங்கில்போலும் பெரிய தோள்களையுமுடைய இச்சிறு நுதலாள் தெய்வமல்லள். எ-று. மெய்ப்பாடு - மருட்கையினீங்கிய பெருமிதம் ; பயன் - தெளிதல். (௩.)

நயப்பு.

வண்டமர் புரிகுழ லொண்டொடி மடந்தையை
நயந்தவண்ணல் வியந்துள்ளியது.

(எ-து.) வண்டுகள் அமரும் சுருண்டகுழலையும், ஒள்ளிய தொடியையுமுடைய தலைமகளை (மக்களுள்ளாளென்று தெளிந்தபின்) விரும்பிய தலைமகன் வியந்து நினைந்தது.

அகல்கின்றவல்குற்றடமதுகொங்கையவ்வையவநீ
புகல்கின்றதென்னைநெஞ்சுண்டேயிடையடையார்புரங்க
ளிகல்குன்றவில்லிற்செற்றோன்றில்லையீசனெம்மானெதிர்ந்த
பகல்குன்றப்பல்லுகுத்தோன்பழனம்மன்னபல்வளைக்கே.

(இ - ள்.) அடையார் புரங்கள் இகல் குன்றம் வில்லின் செற்றோன் - அடையாதவர் புரங்களது வலியை.குன்றமாகிய வில்லால் வென்றவன்,—தில்லை ஈசன் - தில்லையின்கண் உளனாகிய சிவன்,—எம்மான் - எம்முடைய இறைவன்,—எதிர்ந்த பகல் குன்ற பல் உகுத்தோன் - மாறுபட்ட ஆதித்தனது பெருமை குறையப் பல்லையுகுத்தவன்,— பழனம் அன்ன பல்வளைக்கு (அவனது) பழனத்தையொத்த பல்வளையுடையாளுக்கு—இடை உண்டு - இடை உண்டு.—அகல்கின்ற அல்குல் தடம் அது கொங்கை அவை - அகலாநின்ற அல்குலாகிய தடம் அது, முலைகள் அவை,—நெஞ்சு - நெஞ்சே;—அவம் நீ புகல்கின்றது என்னை - காரணமின்றி நீ சொல்லுகின்றதென்? எ - று. மெய்ப்பாடு - உவகையைச்சார்ந்த மருட்கை ; பயன் - ஐயந்தீர்ந்து மகிழ்தல்.

இகல்குன்ற வில்லிற் செற்றோன் என்பதற்கு, இகல்குறைய வில்லாற் செற்றோனெனினும் அமையும். (௪)

உட்கோள்.

இறைதிருக்கரத்து மறிமானோக்கி
யுள்ளக்கருத்து வள்ளலறிந்தது.

(எ-து.) இறைவனது திருக்கரத்திலுள்ள மறியாகிய மான்போலுங் கண்ணையுடைய தலைமகளை (நயந்தபின்) அவளது உள்ளத்தினெண்ணமாகிய காதலை வள்ளலாகிய தலைமகன் (அவள் கண்ணிற்கண்டு) தன்னுட்கொள்ளுதல்.

அணியுமமிழ்துமென்னாவியுமாயவன்றில்லைச்சிந்தா
மணியும்பரார்அறியாமறையோனடிவாழ்த்தலரிற்
பிணியுமதற்குமருந்தும்பிறழ்ப்பிறழமின்னும்
பணியும்புரைமருங்குல்பெருந்தோளிபடைக்கண்களே.

(இ - ள்.) அணியும் அமிழ்தும் என் ஆவியும் ஆயவன் - (எனக்கு) ஆபரணமும் அமிழ்தும் என்னுயிரும் ஆனவன்,— தில்லை சிந்தாமணி - தில்லையின்கண் சிந்தாமணிபோல் (நினைத்தவை கொடுப்போன்),— உம்பரார் அறியா மறையோன் - (அன்பரல்லாத) தேவர்கள் அறியாத அந்தணன்,— அடி வாழ்த்தலரின் - (அவனது) திருவடிகளை வாழ்த்தாதவரைப்போல,— மின்னும் பணியும் புரையும் மருங்குல் பெரு தோளி - மின்னையும் பாம்பையும் ஒக்கும் இடையினையும், பெரிய தோள்களையுமுடையாளது,—படை கண்கள் - வாள்போலுங் கண்கள்,— பிறழ பிறழ - பிறழுந்தோறும் பிறழுந்தோறும்,— பிணியும் - (பொதுநோக்கால்) பிணியும்,— அதற்கு மருந்தும் - (உள்ளக்கருத்து வெளிப்படுக்கு நானேடுகூடிய நோக்கத்தால்) அதற்கு மருந்தும் (ஆகின்றன). எ - று. மெய்ப்பாடு - உவகையைச்சார்ந்த பெருமிதம் ; பயன் - தலைமகளது குறிப்பறிந்து மகிழ்தல். (௫)

தெய்வத்தைமகிழ்தல்.

அன்னமென்னடை யரிவையைத்தந் த
மன்னிருந்தெய்வத்தை மகிழ்ந்துரைத்தது.

(எ-து.) (காதலையுட்கொண்ட தலைமகன்) அன்னம் போலும் மென்மையாகிய நடையையுடைய தலைமகளைத்தந்த நிலைபெற்ற பெருந்தெய்வத்தை மகிழ்ந்து கூறியது.

வளைபயில்கீழ்கடனின்றிடமேல்கடல்வானுகத்தின்
றுளைவழிநேர்கழிகோத்தெனத்தில்லைத்தொல்லோன்கயிலைக்
கிளைவயினீக்கியிக்கெண்டையங்கண்ணியைக்கொண்டுதந்த
விளைவையல்லால்வியவேனயவேன்றெய்வமிக்கனவே.

(இ-ள்.) வளை பயில் கீழ்கடல் நின்று இட - சங்கு நெருங்கின கீழ்த்திசைக்கடலிலே நின்று எறிய,—நேர்கழி மேல்கடல் வான் நுகத்தின் துளைவழி கோத்தாலென - அவ்வொத்தகழி மேற்றிசைக் கடலிலிட்ட பெரிய நுகத்தினது துளையின்கண் சென்று கோத்தாற்போல,— தில்லை தொல்லோன் கயிலை கிளைவயின் நீக்கி இ கெண்டையம் கண்ணியை கொண்டு தந்த - தில்லையிடத்துப் பழையோனாகிய சிவனது கயிலையின் ஆயத்தாரிடத்தினின்று நீக்கி இக்கெண்டைபோலுங் கண்ணையுடையாளை (கைக்) கொண்டு தந்த,— விளைவை அல்லால் - (நல்வினையின்) விளைவாகிய (தெய்வத்தை) யல்லது,—மிக்கன தெய்வம் - மிக்கனவாகிய பிறதெய்வத்தை,— வியவேன் - வியப்பதுஞ் செய்யேன்,— நயவேன் - நயப்பதுஞ் செய்யேன். எ - று. மெய்ப்பாடு - உவகையைச்சார்ந்த மருட்கை; பயன் - மகிழ்தல். (சு)

புணர்ச்சிதுணிதல்.

கொவ்வைச்செவ்வாய்க்கொடியிடைப்பேதையைத்
தெய்வப்புணர்ச்சி செம்மறுணிந்த து.

(எ-து.) (தெய்வத்தை மகிழ்ந்த தலைமகன் இது நமக்குத் தெய்வகதியாய் வந்த புணர்ச்சியெனத் தன் னெஞ்சிற்குச்சொல்லி) கொவ்வைக்கனிபோலுஞ் சிவந்த * வாயையும், கொடிபோலும் இடையையுமுடைய தலைமகளைப் புணரத் துணிந்தது.

ஏழுடையான்பொழிலெட்டுடையான்புயமென்னைமுன்னா
ளூழுடையான்புலியூரன்னபொன்னிவ்வுயர்பொழில்வாய்ச்
சூழுடையாயத்தைநீக்கும்விதிதுணையாமனனே
யாழுடையார்மணங்காணணங்காய்வந்தகப்பட்டதே.

(இ-ள்.) பொழில் ஏழுடையான் - ஏழுலகங்களை யுடையான்,—புயம் எட்டுடையான் - எட்டுப்புயங்களை யுடையான்,— என்னை முன் ஆள் ஊழுடையான் - (எனக்கு ஆட்படுந் தன்மை யுண்டாவதற்கு) முன்னே என்னை ஆள்வதொரு (புதிதாகிய) முறைமையை யுடையான்,—புலியூரன்ன பொன் - (அவனது) புலியூரையொக்கும் பொன்னனையாள்,— இ உயர் பொழில் வாய் - இவ்வுயர்ந்த பொழிலிடத்து,—சூழுடை ஆயத்தை நீக்கும் விதி துணையாக - (ஒருபொழுதும் விடாது) சூழ்தலையுடைய மகளிர் கூட்டத்தை நீக்குதற்குக் (காரணமாகிய) விதி துணையாக,—மனனே - மனமே!—யாழுடையார் மணம் - கந்தருவர் மணம்,—காண் அணங்காய் வந்து அகப்பட்டது - தான் முன் வருத்துவதாய் வந்து அகப்பட்டது, (இனிக் கூட்டத்துக் குடன்படுவாயாக). (எ - று.) மெய்ப்பாடு - உவகையைச்சார்ந்த மருட்கை; பயன் - துணிதல்.

அணங்காய் வந்தென்றது - உள்ளஞ்செல்லவும் இது தகாதென்று விலக்குதலால் முன்வருத்தமாயினமையின், தெய்வத் தன்மையுடைத்தாய் வந்ததெனினும் அமையும். புணர்ச்சி துணிந்தமையான் அகப்பட்டதென்று இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. இதுவும் உட்கோள் பாற்படும். (எ)

கலவியுரைத்தல்.

கொலைவேலவன் கொடியிடையொடு
கலவியின்பங் கட்டுரைத்தது.

(எ - து.) கொலைத்தொழில் பொருந்திய வேலையுடைய தலைமகன், கொடிபோலும் இடையையுடைய தலைமகளோடு (நிகழ்ந்த) புணர்ச்சி யின்பத் தியல்பு உறுதியாகக் கூறியது.

சொற்பாலமுதிவள்யான்சுவையென்னத்துணிந்திங்ஙனே
நற்பால்வினைத்தெய்வந்தந்தின்றுநானிவளாம்பகுதிப்
பொற்பாரறிவார்புலியூர்ப்புனிதன்பொதியில்வெற்பிற்
கற்பாவியவரைவாய்க்கடிதோட்டகளவகத்தே.

(இ - ள்.) சொற்பால் இவள் அமுது யான் சுவை யென்னத் துணிந்து - சொல்லும்பகுதியில் இவள் அமுதம் யான் (அதன்) சுவையென்று துணிந்துசொல்ல,—புலியூர் புனிதன் பொதியில் வெற்பில் - புலியூரின்கண் உளனாகிய அயோனது பொதியிலாகிய வெற்பில்,—கல் பாவிய வரைவாய் கடிதோட்ட களவகத்து - கற்பரந்த தாழ்வரையிடத்துக் காவலையாக்கிய களவிடத்து,— இங்ஙனே நற்பால் வினைத்தெய்வம் தந்து இன்று நான் இவளாம் பகுதி பொற்பு ஆர் அறிவார் - இவ்வண்ணமே நல்லகூற்றின் வினையாகிய தெய்வம் தர (இவ்வாறு வேறுபாடில்லையாயினும், புணர்ச்சியான்வரும் இன்பம் துய்த்தற் பொருட்டாக) இன்று யானென்றும் இவளென்றும் வேறுபாட்டோடு கூடிய அழகை (இதனை யனுபவிக்கின்ற யானே அறியினல்லது) யாரறிவார்? எ - று. மெய்ப்பாடு - உவகை, பயன் - மகிழ்ச்சி, அது தலைமகனை மகிழ்வித்தலுமாம்.

களவகத்துப் பொற்பு ஆரறிவாரெனக் கூட்டுக. கடிதோட்டவென்பதற்குக் கடியப்பட்ட தலைமகளாயமும் தன்னினனுரும் ஆகிய தொகுதியையுடைய களவென்றுரைப்பினும் அமையும்.()

இருவயினொத்தல்:

ஆராவின்பத் தன்புமீதூர
வாரார்முலையை மகிழ்ந்துரைத்தது.

(எ-து.) நீங்காத இன்பத்தால்வந்த (செயற்கை) அன்பு(புணர்ச்சிக்கு முன்னிருந்த அப்பெற்றியேபுணர்ந்த பின்னும்) நின்று வளர்தலால், கச்சணிந்த முலையையுடைய தலைமகளை (தலைமகன்) மகிழ்ந்து சொல்லியது.

உணர்ந்தார்க்குணர்வரி யோன்றில்லைச்சிற்றம் பலத்தொருத்
தன், குணந்தான்வெளிப்பட்ட கொவ்வைச்செவ்வாயிக் கொ
டியிடைதோள், புணர்ந்தாற்புணருந் தொறும்பெரும் போகம்
பின் னும்புதிதாய், மணந்தாழ்புரிகுழ லாளல்குல்போல வளர்
கின்றதே.

(இ - ள்.) உணர்ந்தார்க்கு உணர்வு அரியோன் - (ஒருகால் தன்னை) உணர்ந்தவர்கட்கு (பின்னுணர்வதற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலான்) மீட்டும் உணர்வதற்கு அரியவன்,— தில்லை சிற்றம்பலத்து ஒருத்தன் - தில்லையில் சிற்றம்பலத்தின்கண் உளனாகிய ஒப்பில்லாதவன்,—குணந்தான் வெளிப்பட்ட - (அவனது) குணமாகிய ஆனந்தம் வெளிப்பட்டாற் போலும்,— கொவ்வை செவ்வாய் இ கொடி யிடைதோள் புணர்ந்தால் - கொவ்வைக் கனிபோலுஞ் செவ்வாயை யுடைய இக் கொடிபோன்ற யிடையை யுடையாள் தோளைக் கூடினாலும்,—புணருந்தொறும் பெரு போகம் பின்னும் புதிதாய்-கூடுந் தோறும் பெரிதாகிய இன்பம் (முன்பு போலப்) பின்னும் புதிதாய்,—மணம் தாழ் புரி குழலாள் - மணந்தங்கிய சுருண்ட குழலையுடையாளது,—அல்குல் போல் வளர்கின்றது - அல்குல் போல வளரா நின்றது. எ - று. மெய்ப்பாடு - உவகை, பயன் - மகிழ்ச்சி.

உணர்ந்தார்க் குணர்வரியோ னென்பதற்குத் தவத்தானுந் தியானத்தானும் எல்லாப் பொருள்களையு முணர்ந்தவர்க்கும் உணர்வரியோ னென்னினும் அமையும். அல்குல் வளர்கின்ற தென்றதனால் ஒருகாலைக் கொருகால் வரம்பின்றி வளருமென்றாரல்லர்; மற்றென்னெனின், இயற்கைப் புணர்ச்சி புணர்கின்ற காலத்து இவள் பதினோராண்டும் பத்துத் திங்களும் புக்காளாகலின், இவளது அல்குல் இலக்கணக் குறைபாடின்றியே வளரா நின்று பன்னீராண்டு நிரம்பினால் ஒரு பெற்றியே நிற்கும். அது போல இவன்காதலும் உள்ளம் உள்ளளவு நிறைந்து பின்னைக் குறைபாடின்றி ஒரு பெற்றியே நிற்கு மென்பதாம். (கூ)

கிளவி வேட்டல்.

அன்னமன்னவ ளவயவங்கண் டு
மென்மொழிகேட்க விருப்புற்றது.

(எ - து.) (இருவயி னொத்தின்புறும் தலைமகன்) அன்னம்போன்ற தலைமகளது அவயவங்களைப் பார்த்து அவளது மென்மையாகிய வாய்மொழி கேட்க விருப்பத்தால் வருந்தியது.

அளவியையார்க்குமறிவரியோன்றில்லையம்பலம்போல்
வளவியவான்கொங்கைவாட்டடங்கண்ணுதன்மாமதியின்
பிளவியன்மின்னிடைபேரமைதோளிதுபெற்றியென்றாற்
கிளவியையென்றோவினிக்கிள்ளையார்வாயிற்கேட்கின்றதே.

(இ - ள்.) அளவியை யார்க்கும் அறிவரியோன் - அளவை யார்க்கும் அறிதற்கரியசிவனது,—தில்லை யம்பலம்போல்-தில்லை யம்பலம் போல,—வான் கொங்கை வளவிய - பெருங் கொங்கைகள் வளத்தை யுடையன,—தடம் கண் வாள் - பெரிய கண்கள் வாளோ டொக்கும்,—நுதல் மா மதியின் பிளவியல் - நுதல் பெரிய மதியின் பாகத்தி னியல்பையுடைத்து,—இடை மின் - இடைமின்னோ டொக்கும்,—தோள் பெரு அமை-தோள்

கள் பெரிய வேயோ டொக்கும்,—பெற்றி இது என்றால் - (இவளது) தன்மை இதுவானால்,—கிள்ளையார் வாயின் கிளவியை-கிள்ளைபோல்வாள் வாயின் மொழியை,— இனி கேட்கின்றது என்-இனிக் கேட்க வேண்டுகின்றதென்? (அதுவும் தக்கதேயிருக்கும்.) எ - று. மெய்ப்பாடு - உவகை, பயன் - நயப்புணர்த்துதல்.

கிளவி - வாய்மொழி. அவயவங் கண்டென்புழி உறுதன் முதலிய நான்கையுங் கண்டென்றார். (௧0)

நலம்புனைந்துரைத்தல்.

பொங்கிழையைப் புனைநலம்புகழ்ந்
தங்கதிர்வேலோ னயர்வுநீங்கிய து.

(எ - து.) (கிளவிவேட்டு வருந்தக்கண்ட) மிகுந்த ஆபரணத்தை யுடைய தலைமகள் (முறுவல் செய்யக் கண்டு) அழகிய ஒளியுள்ள வேலேந்திய தலைமகன் (அவளது) புனையப்பட்ட இயற்கை நலத்தைப் புகழ்ந்துகூறி (சொல்லாடாமையா லுண்டாகிய) வருத்தம் நீங்கியது.

கூம்பலங்கைத்தலத்தன்பரென்பூடுருகக்குனிக்கும்
பாம்பலங்காரப்பரன்றில்லையம்பலம்பாடலரிற்
றேம்பலஞ்சிற்றிடையீங்கிவடீங்கனிவாய்க்கமழு
மாம்பலம்போதுளவோவளிகாணும்மகன்பணையே.

(இ - ள்.) அளிகாள்-வண்டுகாள்!—நும் அகன் பணை - நுமது அகன்ற மருதநிலத்து,—கூம்பு கைத்தலத்து அன்பர் என்பு ஊடுருக குனிக்கும் - கூம்புங் கைத்தலங்களையுடைய அன்பரது என்பும் உள்ளுருகக் கூத்தாடாநின்ற,—பாம்பு அலங்காரப்பரன் தில்லையம்பலம் பாடலரின் - பாம்பாகிய அணியையுடைய சிவனது தில்லையம்பலத்தைப் பாடாதாரைப்போல,—தேம்பு சிறு இடை ஈங்கிவள் தீம் கனி வாய்-தேம்பும் சிறிய இடையையுடைய இவளது இனிதாகிய கனிந்த வாய்போல,—கமழும் ஆம்பலம்

போது உளவோ - நாறும் ஆம்பற் பூக்கள் உளவோ (சொல் லுயின்.) எ-று. மெய்ப்பாடு-உவகை. பயன்-நயப்புணர்த்துதல்.

அல்லும் அம்மும் அல்வழிச்சாரியை. கனிவாய்-கனிபோலும் வாயெனினும் அமையும். ஈங்கிவள்-ஒருசொல். (கக)

பிரிவுணர்த்தல்.

பணிவளரல்குலைப் பயிர்ப்புறுத்தி
பிணிமலர்த்தாரோன் பிரிவுணர்த்தியது.

(எ-து.) பாம்பின் (படம்போலும்) வளர்கின்ற அல்குலை யுடைய தலைமகளைத் தொடுக்கப்பட்ட மலர் மாலையை யுடைய தலைமகன்(அவள் மூறுவல்செய்து நாணினுல்வருந் துவதையறியாது) அவளுக்குப்பழக்க மில்லாத பிரிவினைக்கருதி வருந்துகின்றாளென வுட் கொண்டு, (நின்னை) நீங்கி (யான்) ஆற்றேனென் றுணர்த்தியது.

சிந்தாமணிதெண்கடலமிர் தந்தில்லையானருளால்
வந்தாலிகழப்படுமேமடமான்விழிமயிலே
யந்தாமரையன்னமேநின்னையானகன்றாற்றுவனோ
சிந்தாகுலமுற்றென்னைவாட்டந்திருத்துவதே.

(இ - ள்.) சிந்தாமணி - (ஒருவன் தவஞ்செய்துபெறுஞ்) சிந்தாமணியும்,—தெள் கடல் அமிர்தம்-தெளிந்தகடலின் அமிர் தமும்,— தில்லையான் அருளால் வந்தால்-தில்லையான் அருளால் (தாமே) வந்தால்,—இகழப்படுமே - (அவை) இகழப்படுமோ ?— மடமான் விழி மயிலே - மடமான்விழிபோலும் விழியையுடைய மயிலே!—அம் தாமரை அன்னமே - அழகியதாமரைக்கண்வாழும் அன்னமே!—நின்னை யான் அகன்று ஆற்றுவனோ - உன்னை நான் பிரிந்தாற்றி யுள்ளவனோ ?—சிந்தாகுலமுற்று என்னை வாட்டந் திருத்துவது என்னோ - சிந்தையின் மயக்கமுற்று

என்னை வாட்டுவதென்னோ ? எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம்; பயன் - பிரிவச்சமுணர்த்துதல்.

நின்னையென்புழி உயிரினுஞ் சிறந்தநின்னை யென்றும், யானெ ன்புழி இருதலைப்புள்ளி னோருயிரோனுகிய யானென்றும், அச் சொற்களான் விளங்கின. வாட்டத்திருத்துவதென்றும் பாடம்.

பருவரலறிதல்.

பிரிவுணர்ந்த பெண்கொடிதன்
பருவரலின் பரிசுநினைந்தது.

௪ (எ-து.) பிரிவென்பதொன்றுண்டென்றறிந்த பெ ண்ணுகிய கொடிபோன்ற தலைமகள் (அதனுல்) தனக் குண்டாகிய துன்பத்தின் தன்மையையெண்ணியது.

கோங்கிற்பொலியரும்பேய்கொங்கைபங்கன்குறுகலரூர்
தீங்கிற்புகச்செற்றகொற்றவன்சிற்றம்பலமனையா
ணீங்கிற்புணர்வரிதென்றோநெடிதிங்ஙனேயிருந்தா
லாங்கிற்பழியாமெனவோவறியேனயர்கின்றதே.

(இ - ள்.) கோங்கின் பொலி அரும்பு ஏய் கொங்கை பங்கன்-கோங்கின்கண் உண்டாகிய பொலிந்த அரும்பையொக்கும் முலை யுடையாளது பங்கையுடையான்;—குறுகலர் ஊர் தீங்கில் புக செற்ற கொற்றவன் - குறுகாதார்புரங்களை (பாசண்ட தருமமா கிய) தீங்கிலேபுகுதலான் (அவற்றைக்) கெடுத்த வெற்றியை யுடையான்,— சிற்றம்பலம் அனையாள் அயர்கின்றது - (அவ னது) திருச்சிற்றம்பலத்தை யொப்பாள் வருந்துகின்றது,— நீங்கில் புணர்வது அரிதென்றோ - பிரிந்தால்கூடுவ தரிதென்று நினைந்தோ?—நெடிது இங்ஙனே இருந்தால் ஆங்கு இல் பழியாம் எனவோ - நெடும்பொழுது இவ்வாறிருந்தால் அவ்விடத்துக் குடிப்பழியாமென்று நினைந்தோ ?— அறியேன் - அறிகிலேன். எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த மருட்கை ; பயன் - ஐயந் தீர்தல்.

ஆங்கு-சுற்றத்தாரிடத்தும் அயலாரிடத்தும் எனினும், ஆங்கு-அசைநிலை யெனினுமமையும். (கரு)

அருட்குணமுரைத்தல்.

கூட்டியதெய்வத் தின்னருட்குணம்
வாட்டமின்மை வள்ளலுரைத்த து.

(எ - து.) (நம்மிருவரையும்) கூட்டிய தெய்வத்தினது இனியஅருட்குணத்தால் (பிரிந்தேமாயினும் பிரிவில்லை யாதலால்) வாடுதலின்மையை வள்ளற்றன்மையுடைய தலைமகன் கூறியது.

தேவரிற்பெற்றநஞ்செல்வக்கடிவடிவார்திருவே
யாவரிற்பெற்றினியார்சிதைப்பாரிமையாதமுக்கண்
மூவரிற்பெற்றவர்சிற்றம்பலமணிமொய்பொழில்வாய்ப்
பூவரிற்பெற்றகுழலியென்வாடிப்புலம்புவதே.

(இ - ள்.) தேவரில் பெற்ற நம் செல்வ கடி - (முயற்சியும் உளப்பாடுமின்றி) தெய்வகதியாய்ப்பெற்ற நமது அழகியமணத்தை,—வடிவு ஆர் திருவே-வடிவார்ந்த திருவே!—இனி யாவரில் பெற்று யார் சிதைப்பார்-இனி (சிதைத்தற்கேதுவாகிய தன்மையை) யாவராலேபெற்று யார் சிதைப்பார்?—இமையாத முக்கண் மூவரில் பெற்றவர் சிற்றம்பலம் - இமையாத மூன்றுகண்களையும் மூவராலே பெற்றவரது சிற்றம்பலத்தை,—அணி மொய் பொழில்வாய் பூ அரில் பெற்ற குழலி - அழகுசெய்த செறிந்த பொழிலிடத் துளவாகிய பூக்களது பிணக்கத்தைப்பெற்ற குழலையுடையாய்!—வாடி புலம்புவது என் -(நீ) பொலிவழிந்து தனிப்படுகின்ற தென்னை? எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வன்புறை.

மூவர்—சந்திரர் ஆதித்தர் செந்தீக்கடவுள். (கச)

இடமணித்துக்கூறிவற்புறுத்தல்.

மடவரலை வற்புறுத் தி
இடமணித்தென் றவனியம்பியது.

(எ-து.) (அருட்குண முரைத்தும் ஆற்றாமை நீங்காத) தலைமகட்குத் தலைமகன் எமதூர் சமீபத்தினுள்ளதென வற்புறுத்திச் சொல்லியது.

வருங்குன்றமொன்றுரித்தோன்றில்லையம்பலவன்மலயத்
திருங்குன்றவாணரிளங்கொடியேயிடரெய்தலெம்மூர்ப்
பருங்குன்றமாளிகைநுண்களபத்தொளிபாயநும்மூர்க்
கருங்குன்றம்வெண்ணிறக்கஞ்சுகமேய்க்குங்கனங்குழையே.

(இ - ள்.) வரும் குன்றமொன்று உரித்தோன் - இயங்குமலையாகிய யானையையுரித்தவன்,—தில்லையம்பலவன் - தில்லையம்பலத்தையுடைய சிவன், — மலயத்து - (அவனது பொதியின்) மலையிடத்து,—இரும் குன்றவாணர் இளங்கொடியே - பெரிய குன்றத்தின்கண் வாழ்வாருடைய மகளே!— இடர் எய்தல் - வருத்தத்தைவிடு,—கனங்குழையே - கனங்குழாய்! — எம்மூர் பரும் குன்றம் மாளிகை - எம்மூரிடத்துப் பெரியகுன்றம்போலும் மாளிகைகளின்,—நுண் களபம் ஒளி பாய - நுண்ணிதாகிய சாந்தினொளி பரந்து,—நும் ஊர் கரு குன்றம் வெள் நிறம் கஞ்சுகம் ஏய்க்கும் - நும்மூர்க்க ணுண்டாகிய கரியகுன்றம் வெள்ளை நிறத்தையுடைய சட்டையிட் டதனோ டொக்கும். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - இடமணித்தென்று வற்புறுத்தல். (சரு)

ஆடிடத்துய்த்தல்.

வன்புறையின் வற்புறுத் தி
அன்புறுமொழியை யருககன்றது.

(எ-து.) பேருவகை மீதூரலான் வற்புறுத்தி அன்புற்ற மொழியையுடைய தலைமகளை (நோக்கி யானிங்

ஙனே ஒளித்து அங்ஙனே வருகின்றேனென) ஆடி
டத்துய்த்து நீங்கியது.

தெளிவளர்வான்சிலைசெங்கனிவெண்முத்தந்திங்களின்வாய்த்
தளிவளர்வல்லியன்னாய்முன்னியாடுபின்யானளவா
வொளிவளர்தில்லையொருவன்கயிலையுகுபெருந்தேன்
றுளிவளர்சாரற்கரந்துங்ஙனேவந்துதோன்றுவனே.

(இ - ள்.) தெளி வளர் வான் சிலை செம் கனி வெள் முத்தம் திங்களின் வாய்த்து - கால்சிமிர்ந்த பெரியசிலைகளும், சிவந்த கொவ்வைக்கனியும், வெள்ளிய முத்தங்களும், (ஒரு) திங்களின் கண்ணே வாய்ப்ப, — அளி வளர் வல்லியன்னாய் - வண்டுகள் தங்குங்கொடியை யொப்பாய்! — முன்னி ஆடு - (யான் சொன்னவற்றை) நினைந்து (முற்பட்டு) விளையாடுவாயாக,—ஒளி வளர் தில்லை அளவா ஒருவன் - ஒளி வளராநின்ற தில்லைக்கணுளனாகிய அளக்கப்படாத ஒருவனது, — கயிலை உகு பெரும் தேன் துளி வளர் சாரல் கரந்து யான் பின் உங்ஙனே வந்து தோன்றுவன் - கைலையிடத்துச்சிந்தும் பெருந் தேன்துளிகள் பெருகும் சாரற் (பொதும்பரில்) ஒளித்திருந்து யான் பின்னும் உவ்விடத்தேவந்து தோன்றுவேன். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - இடங்குறித்து வற்புறுத்தல்.

தெளிவளர்வான்சிலை யென்பதற்கு ஒளிவளருஞ் சிலையென்றுரைப்பினு மமையும். (கசு)

அருமையறிதல்.

சுற்றமுமிடனுஞ் சூழலுநோக்கி
மற்றவளருமை மன்னனறிந்தது.

(எ-து.) (பின் தலைமகளின்) ஆயவெள்ளத்தையும், (அவளிருந்த) இடத்தையும் (அதைச்சூழ்ந்த) சோலை

யையும் கண்டு (இனியிவள் எய்தற்கரியளென) அவள தருமையைத் தலைமகனறிந்து (வருந்தியது).

புணர்ப்போனிலனும் விசும்பும்பொருப்புந்தன் பூங்கழலின்,
றுணர்ப்போதெனக்கணி யாக்குந்தொல்லோன்றில்லைச் சூழ்பொ
ழில்வா, யிணர்ப்போதணிகுழ லேழைதன்னீர்மையிந் நீர்மையெ
ன்றாற், புணர்ப்போகனவோ பிறிதோவறியேன் புகுந்ததுவே.

(இ - ள்.) இணர் போது அணி குழல் ஏழைதன் நீர்மை இந் நீர்மை என்றால் - பூங்கொத்துகளை யணிந்த குழலையுடைய மாதினது நீர்மை இத்தன்மையாயின்,— நிலனும் விசும்பும் பொருப்பும் புணர்ப்போன் - மண்ணையும் விண்ணையும் (மண்ணின்கணுள்ள) மலையையும் படைப்போன்,— தன் பூம் கழலின் துணர் போது எனக்கு அணி ஆக்கும் தொல்லோன் - தன்னுடைய பொலிவினையுடைய திருவடியாகிய துணர்ப்போதுகளை எனக்கு முடியணியாக்கும் பழையோன்,— தில்லை சூழ் பொழில்வாய் - (அவனது) தில்லைநகரத்தின்கண் ணுண்டாகிய சூழ்பொழிலிடத்து, — புகுந்தது புணர்ப்போ கனவோ பிறிதோ அறியேன் - (இவள்) புகுந்தது மாயமோ கனவோ (இரண்டுமன்றி) வேறொன்றோ இன்னதென்றறியேன். எ-று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - தலைமகளது அருமை யுணர்தல்.

பூங்கழலென்பது பூப்போலுங் கழலென உவமைத்தொகையாய்க் கழலென்னுந் துணையாய்நின்றதெனினுமமையும். வீரக் கழலையுடைய துணர்ப்போதென் றுரைப்பினுமமையும். பிறிதோவென்பதற்கு நனவோ எனினுமமையும். பொழில்வாயிணர்ப்போதென்பாருமுளர். (கள)

பாங்கிலக்கியவறிதல்.

கடல்புரையாயத்துக் காதற்றோழியை
மடவரல்காட்ட மன்னனறிந்தது.

(எ-து.) கடல்போன்ற (அவ்) ஆயவெள்ளத்துள் தலைமகள் (தன்) காதற்றோழியைக் (கடைக்கண்) குறிப்பாற் காட்டத் தலைமகன் (இதுவும் தனக்கோர் சார்பாமென உட்கொண்டு) அவளை யறிந்தது.

உயிரொன் றுளமுமொன் றொன்றேசிறப்பிவட் கென்னொடெ
ன்னைப், பயில்கின்றசென்று செவியுறநீள்படைக் கண்கள்விண்
வாய்ச், செயிரொன்றுமுப்புரஞ் செற்றவன்றில்லைச்சிற்றம்பலத்
துப், பயில்கின்றகூத்த னருளெனலாகும் பணிமொழிக்கே.

(இ - ள்.) இவட்கு என்னொடு உயிர் ஒன்று உளமும் ஒன்று சிறப்பு ஒன்று என்ன - (அருகிலிருக்கும்) இப்பாங்கிக்கு என்னோடு உயிருமொன்று மனமுமொன்று (குரவர்களாற் செய்யப்படும்) சிறப்புக்களும் ஒன்றென்றுசொல்லி,— விண்வாய் செயிர் ஒன்றும் முப்புரம் செற்றவன் - விண்ணிடத்துக் குற்றம்பொருந்தின மூன்றுபுரத்தினையும் கெடுத்தவன்,— தில்லைச்சிற்றம்பலத்து பயில்கின்ற கூத்தன் - தில்லைச்சிற்றம்பலத்தின்கண் இடைவிடாதாடுகின்ற கூத்தை யுடையவன்,— அருள் எனலாகும் - (அவனது) அருளென்று துணியத்தகும்,— பணி மொழிக்கு - தாழ்ந்த மொழிகளை யுடையாட்கு,— நீள் படை கண்கள் - நீண்ட படைபோலுங் கண்கள்,— செவியுற - செவியுறும் வண்ணம்,— சென்று பயில்கின்ற - சென்று பயிலாநின்றன (அதனால் இவள்போலும் இவட்குச் சிறந்தாள்). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - ஆற்றாமைநீங்குதல்.

அருளென்பது - அருளின்வரும் ஆனந்தம். (௧௮)

இயற்கைப்புணர்ச்சி முற்றிற்று.

பாங்கற்கூட்டம்,

என்பது, தெய்வப்புணர்ச்சி புணர்ந்ததலைமகன், தெருண்டு வரைதலைத் தெருளானாய்த் தன்பாங்கனாற் சென்றெய்துதல்.

இக்கிளவி முப்பது துறைகளையுடைத்து. அவைவருமாறு:—

நினைதல்வினாதல் உற்றதுரைத்தல், கழறல்மறுத்தல் கவன்றுரைத்தல்லே, வலியழிவுரைத்தல் விதியொடுவெறுத்தல், நொந்துகூறல் நோதனீங்கி, இயலிடங்கேட்ட லியலிடங்கூறல், வற்புறுத்தல்குறி வழிச்சேறல்காண்டல், வியந்துரைத்தலம் மெல்லியல்தன்னைக், கண்டமைகூறல் கருத்துக்கேற்பச், செவ்விசெப்ப லவ்விடத்தேகல், ஈங்கிவைநிற்க விடந்தலைதனக்கும், ஆங்கவன்மெலிதல் பொழில்கண்டுமகிழ்தல், நீங்காமகிழ்வொடு நிலைகண்டுவியத்தல், தளர்வகன்றுரைத்தல் மொழிபெறவருந்தல், கண்புதைவருத்தங் காவல்நாண்விடல், நண்பொடுசென்று நன்மருங்கணைதல், இன்றியமையாமை யாயத்துய்த்தல், நின்றுவருந்தல் இகழாறைந்தும், துன்றுபாங்கற் றுறையெனமொழிப.

பாங்கனைநினைதல்.

எய்துதற்கருமை யேழையிற்றோன்றப்
பையுளுற்றவன் பாங்கனைநினைந்தது.

(எ - து.) தலைமகளிடத்தே (தான்) சென்றடைதற் கருமைதோன்ற மயக்கமுற்ற தலைமகன் தன் பாங்கனை நாடியது.

பூங்கனையார்புனற்றென்புலியூர்புரிந்தம்பலத்து
ளாங்கெனையாண்டுகொண்டாடும்பிரானடித்தாமரைக்கே
பாங்கனையானன்னபண்பனைக்கண்டிப்பரிசுரைத்தா
லீங்கெனையார்தடுப்பார்மடப்பாவையையெய்துதற்கே.

(இ-ள்.) பூ கனை ஆர் புனல் தென்புலியூர் அம்பலத்துள் புரிந்து - பூக்களையுடைத்தாய் முழங்குதல் நிறைந்த புனலையுடைத்தாகிய தென்புலியூர் அம்பலத்தின்கண் விரும்பி,—ஆங்கு எனை ஆண்டுகொண்டு ஆடும் பிரான் அடி தாமரைக்கே பாங்கனை - அவ்வாறு என்னை ஆண்டுகொண்டு ஆடும்பிரானுடைய அடியாகிய தாமரைகளுக்கே பாங்காயுள்ளானை,—யான் அன்ன பண்பனை - என்னையொத்த குணமுடையானை, — கண்டு இப்பரிசு உரைத்தால் - கண்டு (நிகழ்ந்த) இப்பரிசை யுரைத்தால், — மடம் பாவையை எய்துதற்கு ஈங்கு எனை தடுப்பார் யார் - மடப்பத்தை யுடைய பாவைபோன்றவளை அடைதற்கு இவ்வுலகத்தின்கண் என்னைத் தடுப்பவர் யாவர்? எ - று. மெய்ப்பாடு - அசைவுபற்றிவந்த அழுகை; பயன்-ஆற்றாமை நீங்குதல்.

இன் - ஏழனுருபாதல் புறனடையாற் கொள்க. (௧௯)

பாங்கன்வினாதல்.

கலிகெழு திரடோண் மெலிவது கண்டு
இன்னுயிர்ப்பாங்கன் மன்னனை வினவுவது.

(எ-து.) புகழால்வந்த ஆரவாரந்தழைத்த தோள்கள் வருந்துவதுகண்ட இனிய உயிர்போன்ற பாங்கன் (தன்னை நாடிவந்த) தலைமகனை வினவியது.

சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு
முறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின்
றுறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே.

(இ - ள்.) சிறை வான் புனல் தில்லைச்சிற்றம்பலத்தும் - காவலாயுள்ள மிக்க நீரையுடைய தில்லைச்சிற்றம்பலமாகிய (நல்ல) இடத்தும்,—என் சிந்தையுள்ளும் - என்னுடைய நெஞ்சமாகிய (தீய) இடத்தும், — உறைவான் உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒள் தீம் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ - (ஒப்பத்) தங்குமவனது உயர்ந்த மதிலையுடைய கூடலின்கண் ஆராய்ந்த ஒள்ளிய இனிய தமிழின் துறைகளிடத்து நுழைந்தாயோ?—அன்றி ஏழ் இசை சூழல் புக்கோ - அல்லது ஏழிசையினது சூழலின்கண் புகுதலானோ, — இறைவா - இறைவனே !—தடம் வரை தோட்கு புகுந்து எய்தியது என்கொல் - பெரியவரைபோலும் (நின்) தோள்கட்கு (மெலிவுப்) புகுந்து எய்தியதென்னோ? எ-று. மெய்ப்பாடு - அணங்குபற்றிவந்த அச்சம்; பயன் - தலைமகனுக்கு உற்றதுணர்தல்.

கொல் - கொலாமென ஈறுதிரிந்தது. ஆம் - அசைநிலையெனினுமமையும். (௨௦)

உற்றதுரைத்தல்.

மற்றவன் வினவ
உற்ற துரைத்தது.

(எ - து.) பாங்கன் வினவத்தலைமகன் தனக்குற்ற (வருத்தத்தை) உரைத்தது.

கோம்பிக்கொதுங்கிமேயாமஞ்ஞைகுஞ்சரங்கோளிழைக்கும்
பாம்பைப்பிடித்துப்படங்கிழித்தாங்கப்பணைமுலைக்கே
தேம்பற்றுடியிடைமான்மடநோக்கிதில்லைச்சிவன்று
ளாம்பொற்றடமலர்சூடுமென்னாற்றலகற்றியதே.

(இ - ள்.) கோம்பிக்கு ஒதுங்கி மேயா மஞ்ஞை - ஓந்திக்கு விலகி (இரை) கவராத மயிலானது,—குஞ்சரம் கோள் இழைக்கும் பாம்பை பிடித்து படம் கிழித்தாங்கு - யானைக்குத் துன்பத்தைச் செய்யும் அரவினைப்பற்றிப் படத்தினைக் கிழித்தது போல, — மான் மடம் நோக்கி அப்பணை முலைக்கே தேம்பல் துடி இடை - மான்போலும் மடமைபொருந்திய விழியை யுடையாளுடைய அந்தப் பருத்த முலையினாலே தேய்தலையுடைய உடுக்கையையொத்த மருங்குலானது,—தில்லை சிவன் தாளாம் பொன் தடம் மலர் சூடும் என் ஆற்றல் அகற்றியது - தில்லை

யிலிருக்கின்ற சிவனுடைய பாதமாகிய பொன்னைப்போலச் (சிறந்த) பெரிய தாமரைப்பூவை அணிகின்ற எனது வலிமையை நீக்கியது. எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - பாங்கற்கு ணர்த்துதல்.

மற்று-அசை. குஞ்சரம் உவமைக்கு அடையாய்ப்பாம்பினது ஆற்றலை விளக்கிற்று; தடமலர் உவமிக்கப்படும் பொருட்கு அடையாய்த்தலைமகனது ஆற்றலை விளக்கிற்று. துடியிடையை யுடைய மான்மடநோக்கி என்றாற்றலகற்றியது, மஞ்ஞைபாம் பைப்பிடித்துப் படத்தைக் கிழித்தாற்போலுமெனக் கூட்டி யுரைப்பாருமுளர். (உக)

கழறியுரைத்தல்.

வெற்பனைத்தன் மெய்ப்பாங்கன்
கற்பனையிற் கழறியது.

(எ - து.) வெற்பனாகிய தலைமகனைநோக்கி அவ னுடைய உற்றதுகேட்ட உயிர்ப்பாங்கன் (இது) நின் கற்பனைக்குப் போதாதென் றுறுதியாகச்சொன்னது.

உளமாம்வகைநம்மையுய்யவந்தாண்டுசென்றும்பருய்யக்
களமாம்விடமமிர்தாக்கியதில்லைத்தொல்லோன்கயிலை
வளமாம்பொதும்பரின்வஞ்சித்துநின்றோர்வஞ்சிமருங்கு
லிளமான்விழித்ததென்றோவின்றெம்மண்ணலிரங்கியதே.

(இ - ள்.) உளம் ஆம் வகை உய்ய வந்து நம்மை ஆண்டு - (உளமாயும் இலமாயும் மாறிவாராது எப்பொழுதும்) உள்ளோ மாகும்வண்ணம் (பிறவித் துன்பத்தினின்றும்) பிழைக்க (தான்) வந்து நம்மை ஆதரவுசெய்து,— உம்பர் சென்று உய்ய களம் ஆம் விடம் - தேவர்கள் (தன்னிடத்தில்) வந்து பிழைக்கக்கண் டத்தின்கண் உளதாகும் நஞ்சை,—அமிர் தாக்கிய தில்லை தொல் லோன் - அமுதமாகச்செய்த தில்லையின்கணுள்ள பழையோ னாகிய (சிவனது), — கயிலை வளம் மா பொதும்பரில் வஞ்சித்து நின்று ஓர் வஞ்சி மருங்குல் இள மான் விழித்ததென்றோ - கயிலை மலையில் வளப்பம்பொருந்திய மாஞ்சோலைக்கண் வஞ்சனைசெய் வது (என்றறியாது) நின்று ஒரு பூங்கொடிபோலும் இடையினை யுடைய இளமையாகிய மான்பார்த்ததென்றோ,—எம் அண்ணல் இன்று இரங்கியது - எம்முடைய இறைவனாகிய (தலைமகன்) இன்று மயங்கினது. எ - று. மெய்ப்பாடு - எள்ளல்பற்றி வந்த நகை; பயன் - கழறுதல்.

நம்மையென்றது - தம்மைப்போல்வாரை. களமார் விடமெ ன்பதூஉம் பாடம். (உஉ)

கழற்றெதிர்மறுத்தல்.

ஆங்குயிரன்ன பாங்கன்கழற
வளந்தருவெற்ப னுளந்தளர்ந்துரைத்தது.

(எ - து.) உயிரன்னபாங்கன் அவ்வாறு சொல்ல, வளப்பத்தையுதவும் மலைநாடனாகிய தலைமகன் மன ந்தளர்ந்து சொல்லியது.

சேணிற்பொலிசெம்பொன்மாளிகைத்தில்லைச்சிற்றம்பலத்து
மாணிக்கக்கூத்தன்வடவான்கயிலைமயிலைமன்னும்
பூணிற்பொலிகொங்கையாவியையோவியப்பொற்கொழுந்தைக்
காணிற்கழறலைகண்டிலைமென்றோட்கரும்பினையே.

(இ - ள்.) சேணில் பொலி செம் பொன் மாளிகை தில்லைச் சிற்றம்பலத்து மாணிக்கம் கூத்தன் - தூரத்தில் விளங்குகின்ற சிவந்த பொன்னாற்செய்த மாளிகைகளையுடைய தில்லைநகரத்தி லுள்ள திருச்சிற்றம்பலத்தின்கண் மாணிக்கம்போலும் கூத் தைச்செய்கின்ற சிவனது, — வட வான் கயிலை மயிலை - வடக் கின்கண்ணுள்ள பெரிய கயிலைமலையினிடத்து (வாழும்) மயிலை யொப்பாளை, — மன்னும் பூணின் பொலி கொங்கை ஆவியை - பொருந்திய ஆபரணங்களால் விளங்குகின்ற முலைகளையுடைய (என்) உயிரையொப்பாளை, — ஓவியம் பொன் கொழுந்தை -

சித்திரமாகிய பொன் (வன்னமாகக் கொண்டெழுதிய) கொழுந்தை யொப்பாளை, — மெல் தோள் கரும்பினை கண்டிலை - மெல்லிய தோளையுடைய கரும்புபோல்வாளைக் காணவில்லை,— காணின் கழறலை - கண்டனையாகில் கழறமாட்டாய். எ - று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த வருத்தம்பற்றிவந்த இளிவரல்; பயன் - பாங்கனை யுடம்படுவித்தல்.

வளர்தருவென்பது வெற்புக்கடை. "வரப்பினும் வளர்தரும் வண்மையு மலைக்கே" என்பவாகலின் வெற்பனுக்காக்கிளவாம்.

கவன்றுரைத்தல்.

கொலைக்களிற்றண்ணல் குறையயத் துணைப்பக்
கலக்கஞ்செய்பாங்கன் கவன்றுரைத்த து.

(எ-து.) கொலைத்தொழில் புரியும் யானையையுடைய, தலைமகன் (தன்) குறையை விரும்பிக்கூறக் கலங்காநின்ற பாங்கன் கவலைகொண்டு கூறியது.

விலங்கலைக்கால்விண்டுமேன்மேலிட விண்ணுமண்ணுமுந்நீர்க்
கலங்கலைச்சென்றவன்றுங்கலங்காய்கமழ்கொன்றைதுன்று
மலங்கலைச்சூழ்ந்தசிற்றம்பலத்தானருளில்லவர்போற்
றுலங்கலைச்சென்றிதென்றேவள்ளலுள்ளந்துயர்கின்றதே.

(இ-ள்.) விலங்கலை கால் விண்டு மேல் மேல் இட - மலைகளைக் காற்றானது பிளந்து மேலுமேலுமிட,— விண்ணும் மண்ணும் முந்நீர் கலங்கலை சென்ற அன்றும் கலங்காய் - வானுலகும் மண்ணுலகும் கடலும் கலங்குதலை யடைந்த அப்பொழுதும் கலங்கமாட்டாய், — கமழ் கொன்றை துன்றும் அலங்கலை சூழ்ந்த சிற்றம்பலத்தான் - மணக்கின்ற கொன்றைப்பூக்கள் நெருங்கிய மாலையைச்சுற்றிய திருச்சிற்றம்பலத்திலுள்ள சிவனது,— அருள் இல்லவர்போல் - கிருபை யில்லாதவர்களைப்போல், — துலங்கலை சென்று உள்ளம் துயர்கின்றது இது என்றே வள்ளல் - துளங்குதலையடைந்து (நினது) மனம் துன்புறுகின்றது இஃது

என்னையோ? இறைவனே! எ-று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - கழறுதல்.

மேல் பொதுவகையானும், ஈண்டு விசேடவகையானுங் கழறினானென்பதாம். (உ௪)

வலியழிவுரைத்தல்.

நிறைபொறைதேற்ற நீதியொடுசால்பு
மறியுறுநோக்கிற்கு வாடினேனென்றது.

(எ - து.) (முன்பு நீகூறிய அத்தன்மையேயன்றி யான் இன்று) மான்போன்றவளது விழியால் நிறை, பொறுமை, தெளிவு, நீதியுடன் சால்பு, இவைகளை அழிந்து வருந்தினேன் என்றது.

தலைப்படுசால்பினுக்குந்தளரேன்சித்தம்பித்தனென்று
மலைத்தறிவாரில்லையாவையுந்தேற்றுவனெத்துணையுங்
கலைச்சிறுதிங்கள்மிலைந்தசிற்றம்பலவன்கயிலை
மலைச்சிறுமான்விழியாலழிவுற்றுமயங்கினனே.

(இ - ள்.) தலை படு சால்பினுக்கும் தளரேன் - முதன்மைப் படும் அமைதிக்கும் (மனம்) தளரேன்,— சித்தம் பித்தனென்று மலைத்து அறிவார் இல்லை - மனத்தில் பித்தங்கொண்டவனென்று மாறுபட்டறிபவருமில்லை,— யாவையும் எத்துணையும் தேற்றுவன் - யாவற்றையும் மிகவும் தெளிவிப்பேன்,— கலை சிறு திங்கள் மிலைந்த சிற்றம்பலவன் - (இப்போது) ஒருகலையாகிய சிறியபிறையைச் சூடிய திருச்சிற்றம்பலத்திலுள்ள சிவனது,— கயிலை மலை சிறு மான் விழியால் அழிவுற்று மயங்கினன் - கைலைமலையின்கணிருக்கின்ற சிறிய மான்போன்றவளது கண்ணினால் அழிவையடைந்து மயங்கினேன். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை யுணர்த்தல்.

தலைப்படுசால் பென்றதனால் - நிறையும் பொறையும் சால்பும்; பித்தனென்று மலைத்தறிவாரில்லையென்றதனால் - தேற்ற

மும் ; யாரையுந் தேற்றுவ னென்றதனால் - கீழியும் ; பெறப்பட்டன. அவற்றை இதுபொழுதுடையே னல்லனென்பார், வடினேனென்றும் ; அவை நீங்குதற்குக் காரணம் அவள் மாவ் விழி நோக்கென்பார், மறியுறு நோக்கென்றுங் கூறினர். நீடு என்றது கலங்கினாரைத் தெளிவித்தல். சால்பு என்றதை "அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ - டைந்து சால் பூன்றிய தூண்" என்பதனாலறிக. நோக்கிற்கு உருபு மயக்கம். (உரு)

விதியோடுவெறுத்தல்.

கல்விமிகுபாங்கன் கழறவெள்கிச்
செல்வமிகுசிலம்பன் றெரிந்துசெப்பியது.

(எ - து.) கற்றறிபாங்கன் சொல்லுதலால் நாணி, செல்வமிகுந்த சிலம்பனாகிய தலைமகன் (பின்னும்) தன் விதியொடு வெறுத்துக் கூறியது.

நல்வினையுந்நயந்தந்தின்றுவந்துநடுங்குமின்மேற்
கொல்வினைவல்லனகோங்கரும்பாமென்றுபாங்கன்சொல்ல
வில்வினைமேருவில்வைத்தவன்றில்லைதொழாரின்வெள்கித்
தொல்வினையாற்றுயருமெனதாருயிர்துப்புறவே.

(இ - ள்.) நடுங்கு மின்மேல் கோங்கு அரும்பு கொல்வினை வல்லன ஆமென்று - நடுங்காநின்ற மின்னல்மேல் உண்டாகிய கோங்கினுடைய அரும்புகள் கொல்லுந் தொழிலை வல்லனவா மென்று,—பாங்கன் சொல்ல - பாங்கன்றானே (இகழ்ந்து) சொல்லுதலாலே,—வில் வினை மேருவில் வைத்தவன் தில்லை தொழாரின் வெள்கி - வில்லின் றொழிலை மேருமலையிடத்து வைத்த சிவனது தில்லைத்தலத்தை வணங்காதாரைப்போல வெட்கப்பட்டு,—தொல் வினையால் துயரும் எனது ஆருயிர் துப்புற நல்வினையும் வந்து நயம் தந்தது இன்று - பழையதாகிய தீவினையால் துயரத்தை யுடைஇன்ற என்னுடைய அரிய வுயிரானது, வலி

மைபொருந்த, (முன்செய்த) நல்வினையும்வந்து பயனைக் கொடுத்ததில்லை. எ-று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - ஆற்றாமை புணர்த்தல்.

நாணமுடையார் மேனி வெள்குதலினால் வெள்கியென்றதென்க. (உசு)

பாங்கன்நொந்துரைத்தல்.

இன்னுயிர்ப்பாங்க னேழையைச்சுட்டி
நின்னதுதன்மை நினைந்திலையென்றது.

(எ - து.) இனிமையாகிய உயிர்போன்ற பாங்கன் (விதியொடு வெறுக்கும்) தலைமகனைநோக்கி (ஒரு) பெண் காரணமாக நினது ஒழுக்கத்தை அறிந்திலையென்றது.

ஆலத்தினாலமிர்தாக்கியகோன்றில்லையம்பலம்போற்
கோலத்தினாள்பொருட்டாகவமிர்தங்குணங்கெடினுங்
காலத்தினின்மழைமாறினுமாறாக்கவிகைநின்பொற்
சீலத்தைநீயுநினையாதொழிவதென்றீவினையே.

(இ - ள்.) ஆலத்தினால் அமிர்து ஆக்கிய கோன் தில்லையம்பலம்போல் கோலத்தினாள் பொருட்டாக-விடத்தினால் அமுதத்தை உண்டாக்கிய இறைவனாகிய சிவனது தில்லையின்கண்ணுள்ள அம்பலத்தைப்போலும் அழகை யுடையாள் காரணமாக,— அமிர்தம் குணம் கெடினும் காலத்தினால் மழை மாறினும் - அமுதமானது குணங்கெட்டாலும் பெய்யுங் காலத்தில் மேகமானது (பெய்யாது) மாறினாலும்,—மாறா கவிகை நின் பொன் சீலத்தை நீயும் நினையாது ஒழிவது - மாறாத ஈகையை யுடைய உனது பொன்னையொத்த ஒழுக்கத்தை நீயும் நினையாமலொழிகின்றது,—என் தீவினை - என்னுடைய தீவினைப் பயனும். எ - று. மெய்ப்பாடு - இளிவரல் ; பயன் - தலைமகனைத் தெருட்டல். (உஎ)

நின்னது - எதுகைநோக்கி விரித்தல் பெற்றது.

இயலிடங்கேட்டல்.

கழுமலெய்திய காதற்றோழன்
செழுமலைநாடனைத் தெரிந்துவினவியது.

(இ - து.) (தலைமகனோடு) அயர்த்தை யடைந்த காதற்றோழன், வளப்பமுடைய மலைநாடனாகிய தலைமகனை, அவனியங்குமிடம் அறிந்துகொள்ளக் கேட்டது.

நின்னுடைநீர்மையுநீயுமிவ்வாறினைத்தெருட்டு [மென்
னென்னுடைநீர்மையிதென்னென்பதேயில்லையேர்கொண்முக்க
மன்னுடைமால்வரையோமலரோவிசும்போசிலம்பா
வென்னிடம்யாதியனின்னையிவ்வாறுசெய்தவீர்ங்கொடிக்கே.

(இ - ள்.) நின்னுடைய நீர்மையும் நீயும் இவ்வாறு - நின்னுடைய குணமும் (இவ்வாறாயிற்று) நீயும் இவ்வாறாயினாய்,— நினை தெருட்டும் என்னுடை நீர்மை இது என்னென்பது - (இனி) உன்னைத் தெளிவிக்கும் என்னுடைய தன்மையாகிய இதை என்னென்று சொல்லுவதோ?—சிலம்பா - மலையையுடையவனே!— இல்லை ஏர்கொள் முக்கண் மன்னுடைய மால்வரையோ - இல்லைக்கணுள்ள அழகுகொண்ட மூன்று கண்ணையுடைய மன்னவனாகிய சிவனது பெரிய கைலைமலையோ,—மலரோ - தாமரைப்பூவோ,—விசும்போ - விண்ணுலகமோ,—நின்னை இவ்வாறு செய்த ஈரம் கொடிக்கு - உன்னை இத்தன்மையாகச்செய்த இனிமையாகிய கொடியை யொப்பாளுக்கு,—இடம் யாது இயல் யாது - இடமானது யாது? இயல்பானது எது? (கூறுவாயாக). எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - தலைமகனை யாற்றுவித்தல்.

தெரிந்து - தெரியவென்பதன் றிரிபு. (௨௰)

இயலிடங்கூறல்.

அழுங்கலெய்திய வாருயிர்ப்பாங்கற்குச்
செழுங்கதிர்வேலோன் றெரிந்துசெப்பியது.

(இ - து.) இரக்கமடைந்த அருமையாகிய உயிர்ப்பாங்கனுக்குச் செழுமையாகிய ஒளிகதிர் வேலையுடையனாகிய தலைமகன், அவன் இயலிடம் அறிய வுணர்த்தது.

விழியாற்பிணையாம்விளங்கியலான்மயிலாம்மிழற்று
மொழியாற்கிளியாமுதுவானவர்தமுடித்தொகைகள்
கழியாக்கழற்றில்லைக்கூத்தன்கயிலைமுத்தம்மலைத்தேன்
கொழியாத்திகழும்பொழிற்கெழிலாமெங்குலதெய்வமே.

(இ - ள்.) முதுவானவர்தம் முடி தொகைகள் கழியா கழல் தில்லை கூத்தன் கயிலை - தலைவராகிய இந்திரன்முதலிய தேவர்களுடைய மகுடத்திரள்கள் நீங்காத திருவடியையுடைய தில்லையிலுள்ள சிவனது கைலாயமலையிடத்து,—முத்தம் மலை தேன் கொழியா திகழும் பொழிற்கு எழிலாம் எம் குலம் தெய்வம் - முத்துக்களை மலைத்தேனானது கொழித்துவிளக்கும் சோலைக்கு அழகாகும் எம்முடையகுல தெய்வமானது,—விழியால் பிணையாம் - கண்களால் மானாம்,—விளங்கும் இயலால் மயிலாம் - விளங்காநின்ற சாயலால் மயிலாம்,— மிழற்றும் மொழியால் கிளியாம் - கொஞ்சுகின்ற சொற்களால் கிளியாம். எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - பாங்கற் குணர்த்தல். (௨௧)

வற்புறுத்தல்.

பெயர்ந்துரைத்த பெருவரைநாடனை
வியக்கெழுபுகழோன் வற்புறுத்தியது.

(இ - து.) கழற மறுத்துரைத்த பெரிய மலைநாடனை தலைமகனை, இயலிடக்கேட்ட மிக்க புகழையுடைய பாங்கன் (இப்பெற்றியாளை யான் கண்டுவருமளவும்) நீ ஆற்றுவாயாக வென வற்புறுத்திக் கூறியது.

துயிலச்சிலம்பக்கொம்பினைத்தில்லையெங்கூத்தப்பிரான்
கயிலைச்சிலம்பிற் பைம்பூம்புனங்காக்குங்கருங்கட்செவ்வாய்

மயிலைச்சிலம்பகண்டியான்போய்வருவன்வண்பூங்கொடிகள்
பயிலச்சிலம்பெதிர்கூய்ப்பண்ணைநண்ணும்பளிக்கறையே.

(இ - ள்.) சிலம்ப - சிலம்பனே!—குயிலை - குயிலையொப்பாளை,—சிலம்பு அடி கொம்பினை - சிலம்பைத்தரித்த பாதங்களையுடைய பூங்கொம்பையொப்பாளை,—தில்லை எம் கூத்தப்பிரான் கயிலை சிலம்பில் பைம் பூம் புனம் காக்கும் கருங்கண் செவ்வாய் மயிலை - தில்லையின்கணுள்ள எம்முடைய சிவனது கைலைமலையின்கண் பசுமையாகிய அழகிய தினைப்புனத்தைக் காக்கின்ற கரியகண்ணையும் செவந்தவாயையுமுடைய மயிலையொப்பாளை,—வண் பூ கொடிகள் பண்ணை பயில சிலம்பு எதிர் கூய் நண்ணும் பளிக்கறை - வளமாகிய பூங்கொடிகள்போலும் ஆயத்தார் நெருங்க மலையெதிரே கூவிப் பொருந்தும் பளிக்குப்பாறையினிடத்து,—யான் போய் கண்டு வருவன் - யான்சென்று பார்த்து வருவேன்,—(அது வரையும் நீ யாற்றுவாயாக). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வற்புறுத்தல்.

வயவென்னுமுரிச்சொல் விகாரத்தால் வயவென நின்றது. ()

குறிவழிச்சேறல்.

அறைகழலண்ண லருளினவழி யே
நிறையுடைப்பாங்க னினைவொடுசென்றது.

(எ-து.) ஒலிக்கின்ற வீரகண்டையையுடைய தலைமகன் இயலிடஞ்சொல்லி அனுப்பியபடி ஐம்பொறிகளையும் அடக்கிய பாங்கன், (யான் காணலாமோ வென்ற) நினைவினோடு சென்றது.

கோடுங்கால்குலவரையேழேழ்பொழிலெழில்குன்றுமன்று
நடுங்காதவனைநடுங்கநுடங்குநடுவுடைய
விடங்காலயிற்கண்ணிமேவுங்கொலாந்தில்லையீசன்வெற்பிற்
படங்கார்தருபெருவான்பொழினீழலந்தன்புனத்தே.

(இ - ள்.) கொடு கால் குலவரை ஏழ், பொழில் ஏழ், எழில் குன்றும் அன்றும் நடுங்காதவனை - கொடியகாற்றால் குலமலைகளேழும் உலகமேழும் அழகு கெடும் (ஊழியிறுதியாகிய) அக்காலத்தும் நடுங்காமலிருப்பவனை,— நடுங்க நுடங்கும் நடு உடைய விடம் கால் அயில் கண்ணி - நடுங்கச்செய்யும் இடையையுடைய விடத்தைத்தரும் வேல்போலும் கண்ணையுடையாள்,—தில்லை ஈசன் வெற்பில் படம் கார் தரு பெரு வான் பொழில் நீழல் தன் புனத்து - தில்லையிலிருக்கும் சிவனது மலையிடத்துப் பெரிய மேகம்போலும் மிகவும் பெரிய சோலையின் நிழலையுடைய குளிர்ந்த புனத்தினிடத்து,— மேவுங்கொலாம் - தங்கியிருப்பளோ? எ - று. மெய்ப்பாடு - பெருமிதஞ்சார்ந்த மருட்கை; பயன் - உசாவியுணர்தல்.

கார்தரு என்பதில் தரு - உவமவுருபு. கார் தரு - கார் தங்கு மெனினு மமையும். (கஅ)

குறிவழிக்காண்டல்.

குளிர்வரைநாடன் குறிவழிச்சென் று
தளிர்புரைமெல்லடித் தையலைக்கண்டது.

(எ - து.) (குறிவழிச்சென்ற பாங்கன்) குளிர்ச்சிபொருந்திய மலைநாடனாகிய தலைமகன் சொல்லிய குறியிடத்துப்போய், தளிர்போன்ற மெல்லியபாதங்களையுடைய தலைமகளைக்கண்டது.

வடிக்கணிவைவஞ்சியஞ்சுமிடையிதுவாய்பவளந்
துடிக்கின்றவாவெற்பன்சொற்பரிசேயான்றொடர்ந்துவிடா
வடிச்சந்தமாமலரண்ணல்விண்ணோர்வணங்கம்பலம்போற்
படிச்சந்தமுமிதுவேயிவளேயப்பணிமொழியே.

(இ-ள்.) வடி கண் இவை - வடுவகிர்போலும் கண்களும் இவையே,— வஞ்சி அஞ்சும் இடை இது - பூங்கொடி அஞ்சத்தக்க

மருங்குலும் இதுவே,—வெற்பன் சொல் பரிசே வாய் பவளம் துடிக்கின்றவா - வெற்பனானவன் சொன்ன தன்மையாகவே வாயானது பவளந்துடித்தாற்போலத் துடிக்கின்றவாறு,—யான் தொடர்ந்து விடா அடி சந்தம் மா மலர் அண்ணல் - நான்பற்றி விடமாட்டாத பாதமாகிய அழகிய பெரியதாமரைப்பூவையுடைய இறைவனாகிய (சிவனது), — விண்ணோர் வணங்கும் அம்பலம்போல் படிச்சந்தமும் இதுவே - தேவர்கள் வந்துதொழும் திருச்சிற்றம்பலம் போலும் அழகியவொழுங்கும் இதுவே,— அ பணிமொழி இவளே - அந்தப் பணிந்தமொழியை யுடையாளும் இவளே. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தெளிதல்.

படிச்சந்தம் - ஒன்றன்வடிவை யுடைத்தாய் அதுவென்றே யென்னப்படும் இயல்பையுடையது, அது பிரதிச்சந்தமென்னும் வடமொழிச்சிதைவு. வடியென்பது - வடுவகிருக்கோர் பெயர். பவளந்துடிக்கின்றவா என்பதற்குப் பவளம்போலப் பாடஞ்செய்கின்றவாறு என்னென் றுரைப்பாருமுளர். (௩௨)

தலைவனைவியந்துரைத்தல்.

நயந்தவுருவு நலனுங்கண் [illegible] டு
வியந்தவனையே மிகுத்துரைத்தது.

(எ - து.) (குறிவழிக்கண்டபாங்கன்) தலைமகன் விரும்பிய வுருவையும் அழகையும் பார்த்து அதிசயித்து அத்தலைமகனைத் திண்ணியானென்று வியந்து சொல்லியது.

துவளக்களத்தம்பலவன்குழைகழல்போற்கமலத்
தவளைப்பயங்கரமாகநின்றாண்டவவயவத்தி
னிவளைக்கண்டிங்குநின்றங்குவந்தத்துணையும்பகர்ந்த
கவளக்களிற்றண்ணலேதிண்ணியானிக்கடலிடத்தே.

(இ-ள்.) குவளை களத்து அம்பலவன் குழை கழல்போல் - நீலப்பூப்போலும் கண்டத்தை யுடைய திருச்சிற்றம்பலத்திலுள்ள சிவனது ஒலிக்குங் கழலையுடைய திருவடிபோலும்,— கமலத்து அவளை பயங்கரமாக நின்று ஆண்ட அவயவத்தின் இவளை கண்டு - தாமரைப்பூவிலிருக்குஞ் சீதேவியைப் பயத்தைச் செய்வனவாக நின்று அடிமைகொண்ட அவயவங்களையுடைய இம்மாதினைப் பார்த்து,—இங்குநின்று அங்கு வந்து அத்துணையும் பகர்ந்த கவளம் களிறு அண்ணலே - இவ்விடத்துநின்று அவ்விடத்துவந்து அவ்வளவும் கூறிய, [illegible]வளத்தையுண்ணும் யானையையுடைய, அரசனே,—இ கடலிடத்து - இக்கடல்சூழ்ந்த வுலகத்தினிடத்து,— திண்ணியான் - வலிமையையுடையான். எ - று. மெய்ப்பாடு - [illegible]ருட்கையைச்சார்ந்த அச்சம்; பயன் தலைமகனை வியத்தல். ( )

கண்டமைகூறல்.

பிடிமிசைவைத்துப் பேதையதுநிலைமை
அடுதிறலண்ணற் கறியவுரைத்த [illegible] து.

(எ - து.) (வியந்துரைத்த பாங்கன்) தலைமகளது தன்மையைப் பிடியின்மேல்வைத்து மாற்றானை அடுந் திறலையுடைய தலைமகனுக்குத் தெரியக்கூறியது.

பணந்தாழரவரைச்சிற்றம்பலவர்பைம்பொற்கயிலைப்
புணர்ந்தாங்ககன்றபொருகரியுன்னிப்புனத்தயலே
மணந்தாழ்பொழிற்கண்வடிக்கண்பரப்பிமடப்பிடிவாய்
த்திணந்தாழ்சுடரிலைவேலகண்டேனென்றுநின்றதுவே.

(இ - ள்.) வாய் திணம் தாழ் சுடர் இலை வேல - வாயின்கண் திணந்தங்கிய பிரகாசிக்கின்ற இலைபோலும் வேலினையுடையாய்!—பணம் தாழ் அரவு அரை சிற்றம்பலவர் பைம்பொன் கயிலை புணர்ந்து - படங்கள்தாழ்ந்த பாம்பையணிந்த அரையையுடைய சிற்றம்பலத்தையுடையவரது பசும்பொன்னையுடைய கயிலை

மலையிடத்துக் கூடி,—ஆங்கு அகன்ற பொரு கரி உன்னி - அவ்விடத்தினின்று நீங்கிய போர்செய்கின்ற யானையை நினைந்து,—புனத்து அயலே மணம் தாழ் பொழிற்கண் வடி கண் பரப்பி மடப்பிடி ஒன்று நின்றது கண்டேன் - தினைப்புனத்தருகிலே வாசனை தங்கிய சோலையினிடத்து வடுவகிர்போலும் கண்ணைப்பரப்பி மடப்பத்தையுடைய பெண்யானையொன்று நிற்கின்றதைப் பார்த்தேன். எ-று. மெய்ப்பாடு - உவகை ; பயன் - தலைமகனை யாற்றுவித்தல்.

பணைத்தாழ்தல் - முடிந்துவிழுதலால் தேக்கல்போலத் தாழ்தல். புனத்தில் விளையாடும் ஆயத்தை நீங்கி நிற்றலின் புனத்தயலென்றும், இன்னதிசையில் வருமென்றறியாது சுற்றுநோக்குதலின், வடிக்கண்பரப்பியென்றுங் கூறினார். ஆங்ககன்ற என்பதில் நின்று என்னும் ஐந்தாம்வேற்றுமைப் பொருள்படுவதோ ரிடைச்சொல் வருவித் துரைக்கப்பட்டது. (௧௪)

செவ்விசெப்பல்.

அற்புதன்கயிலை மற்பொலிசிலம்ப ற்
கவ்வுருக்கண்டவன் செவ்விசெப்பியது.

(எ - து.) அற்புதனாகிய இறைவனது கயிலைமலையிலுள்ள மற்போர்க்குரிய மலைநாடனாகிய தலைமகனுக்கு அவளது வடிவத்தைக்கண்ட பாங்கன் (பிடியிசைவைத்துக் கூறியும் அவன் ஆற்றாமை நீங்காமையான், அவனை யாற்றுவிப்பது காரணமாக) அவளது அவயவம் கூறியது.

கயலுளவேகமலத்தலர்மீதுகனிபவளத்
தயலுளவேமுத்தமொத்தநிரையரனம்பலத்தி
னியலுளவேயிணைச்செப்புவெற்பாநினதீர்ங்கொடிமேற்
புயலுளவேமலர்சூழ்ந்திருடேங்கிப்புரள்வனவே.

(இ-ள்.) வெற்பா - வெற்பனே!—நினது ஈரம் கொடிமேல் - உனது குளிர்ந்த பூங்கொடியின்கண்,—கமலத்து அலர்மீது கயல் உளவே - தாமரைப்பூவின்மேல் கயல்மீன்களுள்ளனவே,—கனி பவளத்து அயல் ஒத்த நிரை முத்தம் உளவே - கனிந்தபவளத்திற்கு அருகில் இணையொத்த வரிசையாகிய முத்துக்கள் உள்ளனவே,—இணை செப்பு அரன் அம்பலத்தின் இயல் உளவே - இரண்டாகிய செப்புகள் சிவனது திருச்சிற்றம்பலத்தின் இயல்பையுடையனவுளவே,—மலர் சூழ்ந்து இருள் தங்கி புரள்வன புயல் உளவே - பூமாலைசூழ்ந்து இருளானது தங்கி புரளுகின்றனவாகிய *மேகமுள்ளனவே. (உளவாயின் யான் கண்டவுருவம் நீ கூறிய உருவமாம்) எ - று. மெய்ப்பாடு - உவகை ; பயன் - தலைமகனை யாற்றுவித்தல்.

அம்பலத்தினியல் - ஆறாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. (௧௫)

அவ்விடத்தேகல்.

அரிவையதுநிலைமை யறிந்தவனுரைப்ப
எரிகதிர்வேலோ னேகிய து.

(எ-து.) தலைமகளது நிலைமையைத்தெரிந்து பாங்கன் சொல்ல, எரிகின்ற ஒளியுள்ள வேலையுடைய தலைமகன் (அவ்விடத்துச்) சென்றது.

எயிற்குலமூன்றிருந்தீயெய்தவெய்தவன்றில்லையொத்துக்
குயிற்குலங்கொண்டுதொண்டைக்கனிவாய்க்குளிர்முத்தநிரைத்
தயிற்குலவேல்கமலத்திற்கிடத்தியனநடக்கு
மயிற்குலங்கண்டதுண்டேலதுவென்னுடைமன்னுயிரே.

(இ-ள்.) எயில் குலம் மூன்று இரும் தீ எய்த எய்தவன் தில்லை ஒத்து - (இரும்பும் வெள்ளியும் பொன்னுமாகிய) மதிற்சாதி மூன்றும் பெரியநெருப்பை அடையும்படி எய்தசிவனது தில்லைநகரத்தை யொத்து,— குயில் குலம் கொண்டு தொண்டை கனி,

வாய் குளிர் முத்தம் நிரைத்து - குயிலினது சாதியைக்கொண்டு தொண்டைக்கனியினிடத்துக் குளிர்ந்த முத்துக்களை வரிசையாகப்பெற்று,— அயில் குல வேல் கமலத்தில் கிடத்தி - கூர்மையையுடைய நல்லவேலை தாமரைப்பூவினிடத்து கிடக்கச்செய்து,—அன்னம் நடக்கும் மயில் குலம் கண்டது உண்டேல்-அன்னம்போல் நடக்கும் மயிற்சாதி காணப்பட்டது உண்டாயின்,— அது என்னுடைய மன் உயிர் - அது என்னுடைய நிலைபெறுமுயிராம். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - ஆற்றாமைநீங்குதல்.

மொழியாற் குயிலினது தன்மையை யுடைத்தாகலின் குயிற்குலங் கொண்டென்றார். தொண்டைக்கனிவாய் என்பதற்கு தொண்டைக்கனிபோலும் வாயென்பாருமுளர்.

இவைநிற்க இடந்தலை தலைக்குமாமாறு சொல்லுமாறு. (௧௬)

மின்னிடைமெலிதல்.

மன்னனை நினைந்து
மின்னிடை மெலிந்தது.

(எ-து.) (முன்னைநாள் பிரிந்துபோனவர் காதல் மிகுதியால் இடமறியாமல் ஆயத்திடைவருவாரோ என்னும் பெருநாணினாலும், ஆற்றாமையால் இறந்துபட்டாரோ என்னும் பேரச்சத்தினாலும், யாருமில்லாத தனியிடத்திருந்து) தலைமகனை யெண்ணி, மின்போலு மிடையையுடைய தலைமகள் வருந்தியது.

ஆவியன்னாய்கவலேலகலேமென்றளித்தொளித்த
வாவியன்னார்மிக்கவாவினராய்ச்செழுமற்கழிவுற்
றாவியன்னார்மன்னியாடிடஞ்சேர்வர்கொலம்பலத்தெம்
மாவியன்னான்பயிலுங்கயிலாயத்தருவரையே.

(இ-ள்.) ஆவியன்னாய் கவலேல் அகலேமென்று அளித்து ஒளித்த ஆவி அன்னார் - உயிரை யொப்பானவளே கவலைப்படா

தே (உன்னை) நீங்கோமென்று தலையளிசெய்து மறைந்த (என்) உயிரை யொப்பார்,—மிக்கு அவாவினராய் செழுமல் கழிவுற்று - மிகுந்த விருப்பத்தை யுடையராய் (மனக்)தளர்தல் காரணமாக (மன) மழிந்து (இடமறியாது),—அம்பலத்து எம் ஆவி அன்னான் பயிலும் கயிலாயத்து அரு வரை-திருச்சிற்றம்பலத்தின்கணுள்ள எம்முடைய உயிரை ஒப்பவனாகியசிவன் சேர்ந்துவாழும் கைலாயத்தின்கணுள்ள அரிய தாழ்வரையினிடத்து,— ஆவியன்னார் மன்னி ஆடிடம் சேர்வர்கொல் - (என்) உயிரையொத்தஆயத்தார் நிலைபெற்று விளையாடுமிடத்துச் சேர்வாரோ. எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த மருட்கை; பயன் - உசாவியாற்றாமை நீங்குதல்.

அளித்தல் - பிரிகின்ற காலத்துச்செய்த தலையளி யெனினு மமையும். (௧௭)

பொழில்கண்டுமகிழ்தல்.

மணங்கமழ்பொழிலின் வடிவுக ண்
டணங்கெனநினைந் தயர்வுநீங்கியது.

(எ-து) (தலைமகளை நோக்கிச் சென்ற தலைமகன் முன்னைநாள் அவளைக் கண்ணுற்ற) வாசனைவீசும் பொழிலின் தோற்றங்கண்டு அதைத் தலைமகளென்றே யெண்ணி மகிழ்ச்சியடைந்தது.

காம்பிணையாற்களிமாமயிலாற்கதிர்மாமணியால்
வாம்பிணையால்வல்லியொல்குதலான்மன்னுமம்பலவன்
பாம்பிணையாக்குழைகொண்டோன்கயிலைப்பயில்புனமுந்
தேம்பிணைவார்குழலாளெனத்தோன்றுமென்சிந்தனைக்கே.

(இ-ள்.) காம்பிணையால் - மூங்கிலிணையாலும்,— களி மா மயிலால் - களிப்பை யுடைய கரியமயிலாலும்,— கதிர் மா மணியால் - ஒளியையுடைய பெரிய நீலமணியாலும்,— வாம்பிணையால் - தாவுகின்றமானாலும்,—வல்லி ஒல்குதலால் - பூங்கொடி

யசைதலாலும்,— மன்னும் அம்பலவன் - நிலைபெற்ற அம்பலத்தை யுடையோன்,— பாம்பு இணையா குழைகொண்டோன் - பாம்பை ஒப்பற்ற குழையாகக்கொண்டோன்,— கயிலை பயில் புனமும் - (அவனது) கயிலைமலையினிடத்து அவள் பயிலும் தினைப்புனமும்,—என் சிந்தனைக்கு - என் மனத்துக்கு,—தேம் பிணை வார் குழலாளென தோன்றும் - தேன்பொருந்திய மாலையையுடைய நெடிய குழலையுடையாளென்றே தோன்றா நிற்கும். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்தல்.

பாம்பை யிணைத்துக் குழையாகக்கொண்டவனெனினு மமையும். (௩௮)

உயிரோவியத்தல்.

வெறியுறுபொழிலின் வியன்பொதும்பரின்
நெறியுறுகுழலி நிலைமைகண் டது.

(எ - து.) (பொழில்கண்டு மகிழ்ந்து) மணம்பொருந்திய பொழிலின் மரஞ்செறிந்தவிடத்தில் நெறிப்புற்ற குழலினை யுடைய தலைமகளது நிலைமை கண்டு (என்னுயிர் இவ்வாறு செய்தோ நிற்பதென) வியந்தது.

நேயத்ததாய்நென்னலென்னைப்புணர்ந்துநெஞ்சநெகப்போ
யாயத்ததாயமிழ்தாயணங்காயரனம்பலம்போற்
றேயத்ததாயென்றன்சிந்தையதாய்த்தெரியிற்பெரிது
மாயத்ததாகியிதோவந்துநின்றதென்மன்னுயிரே.

(இ - ள்.) நேயத்ததாய் நென்னல் என்னை புணர்ந்து - உள்ளநெகிழ்ச்சியை யுடையதாய் நேற்று என்னைக்கூடி,—நெஞ்சம் நெகபோய் ஆயத்ததாய் - (பின் என்)மனம் நெகிழும்படி நீங்கிப் போய் ஆயத்தாரிடத்ததாய்,— அமிழ்தாய் - (இன்பத்தைச் செய்தலின்) அமிர்தமாகி,— அணங்காய் - துன்பஞ் செய்வ

போதிவர்கற்பகநாடுபுல்லென்னத்தம்பொன்னடிப்பா
யாதிவர்மாதவமம்பலத்தான்மலையெய்துதற்கே.

(இ-ள்.) தாது இவர் போது கொய்யார் - மகரந்தப்பொடிகள் பரந்த பூக்களைப்பறிக்கின்றிலர்,—தையலார் அங்கை கூப்ப நின்று சோதி வரி பந்து அடியார்-(ஆயத்தாராகிய)மாதர்கள் அஞ்சலி செய்யநின்று ஒளியையும் கட்டுதலையுமுடைய பந்துகளை அடிக்கின்றிலர்,—சுனை புனல் ஆடல் செய்யார்-சுனையின்கணுள்ள நீரில் முழுகுதலைச் செய்கின்றிலர்,—போது இவர் கற்பகம் நாடு புல்லென்ன - புட்பங்கள் பரந்த கற்பகவிருட்சங்களையுடைய தேவருலகும் அழகழிய,—தம் பொன் அடி பாய் - தமது பொன்போலும் அடியை (நிலத்தின்கண்ணே)பாவி,—அம்பலத்தான் மலை எய்துதற்கு - அம்பலவாணனது கயிலைமலையை அடைதற்கு,— இவர் மா தவம் யாது - இம்மாதர் (செய்கின்ற) பெரியதவமானது யாது. எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் மகிழ்தல்.(௪0)

மொழிபெறவருந்தல்.

கூடற் கரிதென
வாடி யுரைத்தது.

(எ - து.) (தளர்ச்சி நீங்கிய தலைமகன்) தலைமகளைச் சேர்தற் கரிதெனக்கருதி (சொல்லேனும் பெற வேண்டி) வருந்தி யுரைத்தது.

காவிநின்றேர்தருகண்டர்வண்டில்லைக்கண்ணார்கமலத்
தேவியென்றேயையஞ்சென்றதன்றேயறியச்சிறிது
மாவியன்றன்னமென்றேக்கிநின்வாய்திறவாவிடினென்
னாவியன்றேயமிழ்தேயணங்கேயின்றழிகின்றதே.

(இ - ள்.) காவி நின்று ஏர் தரு கண்டர் - நீலப்பூப்போலும் (விடம்) நின்று அழகைக்கொடுக்கும் கண்டத்தை யுடையவரது,—வண் தில்லை கண் ஆர் கமலம் தேவியென்றே ஐயம் சென்

தாய்,—அரன் அம்பலம்போல் தேயத்ததாய் - (புலப்பாட்டான்) அரனது சிற்றம்பலத்தைப்போலும் ஒளியை யுடையதாய்,— என்றன் சிந்தையதாய் - (புலப்படாதுவந்து)என்மனத்தின் கண்ணதாய்,—தெரியின் பெரிது மாயத்ததாகி - ஆராயின் மிகவும் மாயத்தை யுடையதாய்,— என் மன் உயிர் - எனது நிலைபெற்ற வுயிர்,— வந்து நின்றது இதோ - வந்துநின்ற இதுவோ. எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்தல்.

நேய முடைமையும் நேயமின்மையும், இன்பஞ் செய்தலுந் துன்பஞ் செய்தலும், புலப்படுதலும் புலப்படாமையு மொரு பொருளுக்குப் பொருந்தாமையால் பெரிது மாயத்ததாகி யென்றான். தேயம் - வடமொழிச் சிதைவு. என்னிடத் தருளுடைய தாய் முற்காலத் தென்னைவந்து கூடி, அருளில்லாததுபோல என் னெஞ்சுடையும் வகைபோய் தன் மெய்யடியார் கூட்டத்ததாய், நினைக்குந்தோறும் அமிர்தம்போல இன்பஞ்செய்து, கண்ணுக்குத் தோன்றாமையால் துன்பஞ்செய்து, அம்பலம்போலும் நல்ல தேசங்களி னிடத்ததாய் வந்து என் மனத்தினிடத்ததாய், இத்தன்மைத் தாதலால் பெரிது மாயத்தை யுடைத்தாய், எனது நிலைபெறு முயிர்வந்து தோன்றுகின்றதென வேறுமொரு பொருள் விளக்கிநின்றது. (௩௯)

தளர்வகன்றுரைத்தல்.

பனிமதிநுதலியைப் பைம்பொழிலிடைத்
தனிநிலைகண்டு தளர்வகன்றுரைத்த து.

(எ - து.) (உயிரொனவியந்த தலைமகன்) குளிர்ந்த சந்திரன்போலும் நெற்றியையுடைய தலைமகளைப் பசிய பொழிலின்கண் தனித்திருக்கக்கண்டு தளர்ச்சி நீங்கிக் கூறியது.

தாதிவர்போதுகொய்யார்தையலாரங்கைகூப்பநின்று
சோதிவரிப்பந்தடியார்சுனைப்புனலாடல்செய்யார்

றது - வளப்பம் பொருந்திய நிலைக்களுண்டாகிய, கண்ணிற் கழுகு நிறைகின்ற, தாமரைப்பூவில் வாழ்கின்ற சீதேவியோவெ ன்று சந்தேகம் தோன்றியது,—அறிய - (அதனைத்) தெளிந்தறிய, — மா இயன்றன்ன மென்னோக்கி - மானோக்கத்தாலே செய்தாற்போலும் மெல்லியநோக்கத்தை யுடையாய்!— சிறிது நின் வாய் திறவாவிடின் - சிறிதாயினும் உனதுவாயைத் திறவாதொழியின்,—அமிழ்தே - அமிர்தமே!— அணங்கே - தெய்வப்பெண்ணே!— இன்று என் ஆவி அழிகின்றது அன்றே - இப்பொழுதே என்னுடைய வுயிர் அழியாநின்ற தன்றே (இதனை நீகருதாதொழிகின்ற தென்னை? எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை புணர்த்துதல்.

இன்பமுந் துன்பமு மொருங்கு நிகழ்தலின் அமிழ்தே யணங்கே என்றான். தேவியென்றே ஐயஞ்சென்றதென ஐயத்துள் ஒருதலையே பற்றிக் கூறினான். (சக)

நாணிக்கண்புதைத்தல்.

ஆயிடைத்தனிநின் றுற்றுசுழிந் து
வேயுடைத்தோளியோர் மென்கொடிமறைந்தது.

(ஏ-து.) தலைமகனவ்வாறு கூறியவிடத்து ஆற்றுவிப்பாரையின்றி நின்று, நாணினா லாற்றாது வருந்தி, வேய் போன்ற தோளையுடைய தலைமகள் ஒரு மெல்லிய கொடியி னொதுங்கி (தன் கண்புதைய) மறைந்தது.

அகலிடந்தாவியவானோனறிந்திறைஞ்சம்பலத்தி
னிகலிடந்தாவிடையீசற்றொழாரினின்னற்கிடமா
புகலிடந்தான்சென்றெனதுயிர்மையாவகையொதுங்கப்
புகலிடந்தாபொழில்வாயெழில்வாய்தருபூங்கொடியே.

(இ - ள்.) அகலிடம் தாவிய வானோன் - உலகத்தைத் தாவியளந்ததிருமால்,—அறிந்து இறைஞ்சு அம்பலத்தின் இகலிடம் -

தெரிந்து வணங்கும் சிற்றம்பலத்தின்கணுள்ள பகைமையுடைய விடங்களிலே,—தா விடை ஈசன் தொழாரின் இன்னற்கு இடமாய் - தாவும் இடபத்தையுடைய பரமசிவனை வணங்காதவர்களைப்போலத் துன்பத்திற்கிடமாய்,— உகல் இடம் தான் சென்று எனது உயிர் ஐயா வகை ஒதுங்க புகல் இடம் - அழியும் அளவைத் தானடைந்து என்னுயிரானது வருந்தாதபடி, ஒதுங்குதற் கடைக்கலமாமிடத்தை,— பொழில்வாய் எழில்வாய் தரு பூங்கொடியே-பொழிலிடத்துள்ள அழகுவாய்ந்த பூவையுடைய கொடியையொப்பாளே! தா - தருவாயாக. எ-று. மெய்ப்பாடு- அச்சம்; பயன் - ஆற்றாமை நீங்குதல். (சஉ)

கண்புதைக்க வருந்தல்.

வேற்றருங்கண்ணிணை மிளிர்வனவன்றுநின்
கூற்றருமேனியே கூற்றெனக்கென்றது.

(எ-து.) (தலைமகன் கண்புதையாநின்ற தலைமகளை நோக்கி) வேல்போலும் கண்ணிரண்டும் விளங்குவன வன்று, நினது சொல்லற் கருமையாகிய படிவமே எனக்கு இயமன் (ஆகலான் நின்மேனி முழுதும் புதைப்பாயாகவெனத் தன் வருத்தமிகுதி) கூறியது.

தாழச்செய்தார்முடி தன்னடிக்கீழ்வைத்தவரைவின்னோர்
சூழச்செய்தானம்பலங்கைதொழாரினுள்ளந்துளங்கப் [ளைநீ
போழச்செய்யாமல்வைவேற்கண்புதைத்துப்பொன்னேயென்
வாழச்செய்தாய்சுற்றுமுற்றும்புதைநின்னைவாணுதலே.

(இ-ள்.) தாழ செய்தார் முடி தன் அடிக்கீழ் வைத்து அவரை விண்ணோர் சூழ செய்தான் - தன்னிடத்தில் வணங்குதலை செய்தவருடைய தலைகளை தனது திருவடியின்கீழ் வைத்துக்கொண்டு அவர்களை தேவர்கள் சூழும்படிசெய்தசிவனது,— அம்பலம் கைதொழாரின் - திருச்சிற்றம்பலத்தை வணங்காதாரைப்போல,— உள்ளம் துளங்க போழ செய்யாமல் வை வேல் கண்புதைத்து- மனமானது அஞ்சும்படி பிளக்கச்செய்யாமல் கூர்மையாகிய வேல்போலும் கண்ணைமூடி,— பொன்னே என்னை நீ வாழச் செய்தாய் - பொன்னை யொப்பாய்? என்னை நீ வாழும்படி செய்தாய்,—வாள் நுதலே - ஒளிபொருந்திய நெற்றியை யுடையாளே!— சுற்றுமுற்றும் நின்னை புதை - (என்னுள்ளம் துளங்காமை வேண்டின்) சுற்று முழுதும் உன்னை மூடிக்கொள்வாயாக. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன்-ஆற்றாமை யுணர்த்தல். ()

நாண்விடவருந்தல்.

ஆங்ஙனங்கண் டாற்றா கி
நீங்கினநாணொடு நேரிழைநின்றது.

(எ-து.) (தலைமகன்) அவ்வாறாற்றானுகக்கண்டு, தலைமகள் ஆற்றாதவளாய் நீங்கிப்போன நாணத்துடன் நின்றது.

குருநாண்மலர்ப்பொழில்சூழ்தில்லைக்கூத்தனையேத்தலர்போல்
வருநாள்பிறவற்கவாழியரோமற்றெங்கண்மணிபோன்
றொருநாள்பிரியா துயிரிற்பழகியுடன்வளர்ந்த
வருநாணளியவழல்சேர்மெழுகொத்தழிகின்றதே.

(இ-ள்.) குரு நாள் மலர் பொழில் சூழ் தில்லை கூத்தனை ஏத்தலர்போல் - நிறத்தையுடைய புதிதாகிய மலர்களையுடைய சோலைகள் சூழப்பெற்ற தில்லையிலுள்ள நடராசனைத் துதியாதவர் (துன்புறும்பிறவியிற் பிறப்பாராகலான், அவர்களைப்) போல,— வரு நாள் பிறவற்க-மேல்வரக்கடவதாகிய துன்புறுநாளில்(யான் இவ்வாறு) பிறவாதொழிக,—வாழி என் கண்மணிபோன்று ஒரு நாள் பிரியாது உயிரின் பழகி உடன் வளர்ந்த - இந்நாள் வாழ்வதாக எனது கண்மணியை யொத்து ஒருபொழுதும் பிரியாமல் உயிர்போலப் பழகி என்னோடுவளர்ந்த,—அளிய அரு நாண் அழல்சேர் மெழுகொத்து அழிகின்றது - அளித்தாகிவருகின்ற

நாணமானது நெருப்பைச்சேர்ந்த மெழுகையொத்து அழியா நின்றது. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

வருநாள் பிறவற்க என்பதற்கு ஏத்தாதாரைப்போல வருந்த இவ்வாறு பயின்றாரைப் பிரியவருநாட்கள் உளவாகா தொழிக எனினு மமையும். வாழி என்றது இத்தன்மைத்தாகிய துன்ப மின்றி இந்த நாள்வாழ்வதாக என்க. அரோவும் மற்றும் அசைநிலை. (௪௪)

மருங்கணைதல்.

ஒளிதிகழ்வார்குழ் லளிகுலம்விளக்கிக்
கருங்களிற்றண்ணல் மருங்கணைந்தது.

(எ-து.) (தலைமகள் நாணிழந்து நிற்க) அவளது ஒளிவிளங்கும் நீண்ட கூந்தலின்கண் வண்டின் கூட்டத்தை விலக்கிக் கருங்களிற்றையுடைய தலைமகன் அவள் பக்கத்தில் அணைந்தது.

கோலத்தனிக்கொம்பரும்பர்புக்கஃதே குறைப்பவர் தஞ்
சீலத்தனகொங்கைதேற்றகிலேஞ்சிவன் தில்லையன்ன [ற்
னூலொத்தநேரிடைநொய்ம்மையெண் ணாது நுண்டேனசையா
சாலத்தகாதுகண்டீர்வண்டுகாள்கொண்டைசார்வதுவே.

(இ-ள்.) கோலம் தனி கொம்பர் உம்பர் புக்கு அஃதே குறைப்பவர் தம் சீலத்தன கொங்கை - அழகையுடைய தனிமையாகிய கொம்பின் மேலேறி அதனையே அடியில் வெட்டுபவரது தன்மையையுடையன தனங்களானவை,—தேற்றகிலேம் - (விழுமென்று) தெளிகின்றிலேம்,—வண்டுகாள்-(அதனால்) வண்டுகளே!—சிவன் தில்லை அன்னாள் நூலொத்த நேர் இடை நொய்ம்மை என்ணாது - சிவனது தில்லையை யொப்பாளுடைய நூல்போன்ற நேர்மையாகிய மருங்குலினது நுட்பத்தை நினையாது,—நுண் தேன் நசையால் கொண்டை சார்வது சால தகாது - நுண்ணிய

தேனின்மே லுண்டாகிய விருப்பத்தால் நீயிர் கொண்டையைச் சேர்வது மிகவும் தகுதியல்ல. எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - சார்தல்.

கண்டீரென்பது முன்னிலை யசைச்சொல். அளிகுலம் வடமொழிமுடிபு. கொங்கை தேற்றகிலேம் என்பதற்கு முலைகளைத் தெளிவிக்கமாட்டேம் என்பாருமுளர். (௪௫)

இன்றி யமையாமைகூறல்.

வென்றிவேலவன் மெல்லியறனைக்
கின்றியமையாமை யெடுத்துரைத்தது.

(எ-து.) (புணர்ச்சி யிறுதிக்கண்) வெற்றிபொருந்திய வேலையுடைய தலைமகன், மென்மையாகிய இயலையுடைய தலைமகளிடத்துத் தனக்கு அவளையின்றி யமையாமையை எடுத்துக் கூறியது.

நீங்கரும்பொற்கழற்சிற்றம்பலவர்நெடுவிசும்பும்
வாங்கிருந்தெண்கடல்வையமுமெய்தினும்யான்மறவேன்
தீங்கரும்புமமிழ்துஞ்செழுந்தேனும்பொதிந்துசெப்புங்
கோங்கரும்புந்தொலைத்தென்னையுமாட்கொண்டகொங்கைகளே

(இ-ள்.) நீங்கு அரு பொன் கழல் சிற்றம்பலவர் - நீங்குதற்கரிய பொன்னாற்செய்த கழலையணிந்த திருவடியையுடைய திருச்சிற்றம்பலத்தி லுறைபவரது,—நெடு விசும்பும் வாங்கு இரு தென் கடல் வையமும் எய்தினும் - பெரிய தேவருலகத்தையும் வளைந்த பெரியதெள்ளிய கடல்சூழ்ந்த பூவுலகத்தையும் (ஒருங்கு) பெறவரினும்,—தீம் கரும்பும் அமிழ்தும் செழு தேனும் பொதிந்து - இனிமையாகிய கரும்பினது ரசத்தையும் அமிர்தத்தையும் செழுமையாகிய தேனையும் உள்ளடக்கிக்கொண்டு,—செப்பும் கோங்கு அரும்பும் தொலைத்து - செப்பையும் கோங்கரும்பையும் வென்று,—என்னையும் ஆள் கொண்ட கொங்கை

கள்-என்னையும் அடிமைகொண்ட தனங்களை,—யான் மறவேன்-நான் மறக்கமாட்டேன். எ-று. மெய்ப்பாடு - உவகை ; பயன் - நயப்புணர்த்துதல். (சசு)

ஆயத்துய்த்தல்.*

* தேங்கமழ் சிலம்பன்
பாங்கிற் கூட்டியது.

(எ - து.) (இன்றியமையாமை கூறிப் பிரியலுறுகின்ற) தேன்கமழ்கின்ற மலைநாடனாகிய தலைமகன் (பிரிவின்மைகூறி) தலைமகளை ஆயத்துக் கூட்டியது.

சூளாமணியும்பர்க்காயவன்சூழ்பொழிற்றில்லையன்னாய்க்
காளாயொழிந்ததென்னாருயிராரமிழ்தேயணங்கே
தோளாமணியேபிணையேபலசொல்லியென்னைதுன்னு
நாளார்மலர்ப்பொழில்வாயெழிலாயநணுகவே.

(இ-ள்.) உம்பர்க்கு சூளாமணி ஆயவன் சூழ் பொழில் தில்லை அன்னாய்க்கு - தேவர்களுக்கு முடிமணி யானவனாகிய சிவனது சூழ்ந்த பொழிலையுடைய தில்லையை யொப்பாளாகிய உனக்கு,—என் ஆர் உயிர் ஆளாய் ஒழிந்தது-என்னுடைய பெறுதற்கரிய வுயிரானது அடிமையாயிற்று,— ஆர் அமிழ்தே - நிறைந்த அமிர்தமே!—அணங்கே - தெய்வப்பெண்ணே!— தோளா மணியே - தொளைக்கப்படாத மாணிக்கமே!—பிணையே - பெண்மானே!— பல சொல்லி என்னை - பலவற்றைச்சொல்லி (பெறும்பயன்) யாது?—துன்னும் ஆர் நாள் மலர் பொழில்வாய் எழில் ஆயம் நணுக - சேர்தலினையுடைய நிறைந்த புதுமலரையுடைய சோலையின்கண் அழகையுடைய ஆயத்தைச் சேர்வாயாக. எ-று. மெய்ப்பாடு-பெருமிதம்; பயன்-பிரியலுறுந்தலைமகன் வற்புறுத்தல்.

* பலசொல்லி யென்னை யென்றது உயிர் நினக்கு ஆளாகிய பின் வேறுபல சொல்லுதல் பயனில கூறலன்றே என்றவாறு. பொழில்வாய் நணுகவென இயைப்பினு மமையும். (சஎ)

நின்றுவருந்தல்.

பாங்கிற்கூட்டிப் பதிவயிற்பெயர்வோ
னீங்கற்கருமை நின்றுநினைந்தது.

(எ-து.) தலைமகளை யாயத்துக் கூட்டித் தன்பதிக்குச் செல்பவனாகிய தலைமகன் அப்புனத்தை நீங்கற் கருமையை நினைந்து நின்று வருந்தியது.

பொய்யுடையார்க்கரன்போலகலும்மகன்றாற்புணரின்
மெய்யுடையார்க்கவனம்பலம்போலமிகநணுகு
மையுடைவாட்கண்மணியுடைப்பூண்முலைவாணுதல்வான்
பையுடைவாளரவத்தல்குல்காக்கும்பைம்பூம்புனமே.

(இ-ள்.) மையுடைய வாள் கண் மணியுடைய பூண் முலை வாள் நுதல் - மையையுடைய வாள்போலுங் கண்ணையும், மணியையுடைய அணியையணிந்த முலையையுமுடைய, ஒள்ளிய நெற்றியையுடையாளும்,— வான் பையுடைய வாள் அரவம் அல்குல் காக்கும் பூ பை புனம் - பெரிய படத்தையுடைய ஒளிபொருந்திய பாம்புபோலும் அல்குலையுடையாளுமாகிய (அவள்) காக்கின்ற பூக்களையுடைய பசுமையாகிய புனம்,— அகன்றால் பொய்யுடையார்க்கு அரன்போல் அகலும் - நீங்கினால், பொய்யையுடையவர்க்கு அரன்சேய்மையனாதல்போல், எனக்குச் சேய்மையதாம்,—புணரின் மெய்யுடையார்க்கு அவன் அம்பலம்போல மிக நணுகும் - சேர்ந்தால், மெய்யையுடையவர்க்கு அச்சிவனது சிற்றம்பலம் அணிமையதாதல்போல, எனக்கு மிகவும் அணிமையதாம். எ - று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - ஆற்றாமை நீங்குதல். (சஅ)

பாங்கற்கூட்டம் முற்றிற்று.

இடந்தலைப்பாடு,

என்பது, முன்னைநாள் கூடிய பொழிலிடத்துச் செல்லத் தலைப்படுதல்.

இக்கிளவி ஒருதுறையையுடைத்து. அது வருமாறு:—

பொழிலிடைச்சேற லிடந்தலைசொன்ன, வழியொடுகூட்டி வகுத்திசினோரே.

பொழிலிடைச்சேற லொன்றும் இடந்தலைக்கே யுரியது. இவ் விரண்டனுள்ளு மொன்றே விசழுமாகையால் இதற்கு, "மின்னிடை மெலிதல்" முதலாக "நின்றுவருந்தல்" ஈறாக வருங்கிளவியெல்லாம் எடுத்துரைத்துக் கொள்க.

பொழிலிடைச்சேறல்.

ஐயரிக்கண்ணியை யாடிடத்தேசென்
றெய்துவனெனநினைந் தேந்தல்சென்றது.

(எ-து.) அழகிய அரிபரந்த கண்ணையுடைய தலைமகளை (இன்னுந் தெய்வந் தானே தருமென்று) அவள் ஆடிடத்தே சென்றடைவேனென நினைந்து தலைமகன் சென்றது.

என்னறிவால்வந்ததன்றிது முன்னுமின்னும்முயன்றான்
மன்னெறிதந்ததிருந்தன்றுதெய்வம்வருந்தனெஞ்சே
மின்னெறிசெஞ்சடைக்கூத்தப்பிரான்வியன்றில்லைமுந்நீர் [தே.
பொன்னெறிவார்துறை வாய்ச்சென்றுமின்றோய் பொழிலிடத்

(இ - ள்.) இது முன்னும் என் அறிவால் வந்ததன்று - இப்புணர்ச்சியானது முன்னரும் எனதறிவோடுகூடிய முயற்சியினாலே வந்ததன்றாம், — இன்னும் முயன்றால் மன்னெறி தந்தது தெய்வம் இருந்தன்று - இன்னும் முயற்சி செய்தால் நிலைபெற்ற நெறியாகிய (களவொழுக்கத்தைத்) தந்ததாகிய தெய்வமானது இருந்தது (அதுமுடிக்கும்), —நெஞ்சே வருந்தல் - (அதனால்) மனமே வருந்தாதே, —மின் எறி செஞ்சடை கூத்தப்பிரான் - மின்னலை வெல்லுகின்ற சிவந்த சடையையுடைய நடேசனது, —வியன் தில்லை முந்நீர் பொன் எறி வார் துறைவாய் - அகன்ற தில்லை நகரத்தைச் சூழ்ந்த கடற்றிரையானது பொன்னை எறிகின்ற நெடிய துறையினிடத்து, — மின் தோய் பொழிலிடத்தே சென்றும் - மின்னலையுடைய மேகத்தைத் தொடுகின்ற சோலையினிடத்துச் செல்லுவோம். எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - இடந்தலைப்படுதல். (௪௧)

இடந்தலைப்பாடு முற்றிற்று.

மதியுடம்படுத்தல்,

என்பது, தலைமகன்றாற் கன்னுறக் காட்டப்பட்ட காதற் பாங்கியை வழிபட்டுச் சென்றெய்துதல் முறைமை யாகலான், அவ்வாறு வழிபடத் தலைமகன் பாங்கிக்குத் தெற்றெனத் தன்குறை கூறாது மறைந்த மொழிகளால் தன்கருத்தறிவித்து, அவளை ஐயவுணர்வினளாக்கி, அது வழியாக நின்று தன்குறை கூறுதல்.

இக்கிளவி பத்துத்துறைகளையுடைத்து. அவை வருமாறு:—

சேறல்துணிதல் வேழம்வினாதல், கலைமான்வழிபதி பெயர் வினாதல்லே, மொழிபெறுதுணைத்தல் கருத்தறிவித்தல், இடைவினாவோ டிவையீரைந்தும், மடவரற்றோழிக்கு மதியுடம்படுத்தல்.

பாங்கியிடைச்சேறல்.

காந்துறைகிளவியிற் காதற்றோழி யை
இரந்துகுறையுறவலென் றேந்தல்சென்றது.

(எ - து.) (உள்ளக்குறிப்பை) மறைத்துக் கூறுஞ் சொல்லால் உயிர்ப்பாங்கியைக் குறையிரப்பேனென்று தலைமகன் சென்றது.

எளிதன் றினிக்கனிவாய்வல்லிபுல்லலெழின்மதிக்கீற்
றொளிசென்றசெஞ்சடைக்கூத்தப்பிரானையுன்னாரினென்கட்
டெளிசென்றவேற்கண்வருவித்தசெல்லலெல்லாந்தெளிவித்
தளிசென்றபூங்குழற்றோழிக்குவாழியறிவிப்பனே.

(இ-ள்.) கனி வாய் வல்லி புல்லல் இனி எளிது அன்று - தொண்டைக் கனிபோலும் வாயையுடைய பூங்கொடியை யொப்பாளைக் கூடுதல் இனி எளிதான காரியமன்று,—எழில் மதிக்கீற்று ஒளி சென்ற செஞ்சடை கூத்தப்பிரானை உன்னாரின் - (அதனால்) அழகையுடைய பிறைமதியின் ஒளிபரந்த சிவந்தசடையையுடைய நடேசனை நினையாதாரைப்போல,— என்கண் தெளி சென்ற வேல் கண் வருவித்த செல்லல் எல்லாம் தெளிவித்து - என்னிடத்து தெளிதலைப்பொருந்திய வேல்போன்ற கண்கள் வருவித்த துன்பமெல்லாவற்றையும் தெளிவியாநின்று,—அளி சென்ற பூ குழல் தோழிக்கு அறிவிப்பன் - வண்டுகளடைந்த பூவையணிந்த குழலையுடைய பாங்கிக்குச்சொல்லுவேன். எ-று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த பெருமிதம்; பயன் - தோழிக் குணர்த்தி அவளால் முடிப்பலெனக்கருதி ஆற்றாமை நீங்குதல். வாழி - அசைச்சொல். (௩

துறையுறத்துணிதல்.

ஓரிடத்தவளா யொருங்குகண்டு தன்
பேரிடர்பெருந்தகை பேசத்துணிந்தது.

(எ-து.) (பாங்கியைக் கருதிச்சென்ற) பெருந்தகைமையுடைய தலைமகன் (தலைமகளும் பாங்கியுமாகிய) இருவரும் ஓரிடத்தொருங்கு நிற்கக்கண்டு (பாங்கியிடத்து) தன் பெருங்குறையைச் சொல்லத் துணிந்தது.

குவளைக்கருங்கட்கொடியேரிடையிக்கொடிகடைக்க
ணுவளைத்தனதுயிரென்றதுதன்னோடுவமையில்லா

தவளைத்தன்பால்வைத்தசிற்றம்பலத்தானருளிலர்போற்
றுவளத்தலைவந்தவின்னலின்னேயினிச்சொல்லுவனே.

(இ-ள்.) குவளை கரு கண் கொடியேர் இடை இக்கொடி கடைக்கண் - குவளைப்பூவையொத்த கருமையாகிய விழியினையும், கொடியையொத்த இடையினையுமுடைய, இம்மாதினது கடைக்கண்,—உவளை தனது உயிர் என்றது - அவளைத் தன்னுடைய வுயிரென்று சொல்லிற்று,— தன்னோடு உவமை இல்லாதவளை தன்பால் வைத்த சிற்றம்பலத்தான் - தன்னுடனே ஒப்பில்லாத அம்மையைத் தன்னுடைய வொருபங்கில் வைத்திருக்கின்ற திருச்சிற்றம்பலத்திலுள்ள சிவனது,— அருள் இலர் போல் - கிருபையை இல்லாதாரைப்போல,— துவள தலைவந்த இன்னல் இனி இன்னே சொல்லுவன் - வருந்தும்படி என்னிடத்து அலைந்த துன்பத்தை இனி இப்பொழுதே சொல்லுவேன். எ-று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த பெருமிதம்; பயன் - மதியுடம்படுத்தற் கொருப்படுதல். (௩௧)

வேழம்வினாதல்.

ஏழையரிருவரு மிருந்தசெவ்வியுள்
வேழம்வினாஅய் வெற்பன்சென்றது.

(எ-து.) (குறைகூறத்துணிந்த தலைமகன் தன்குறையைப் பாங்கி தானேயுணருமளவும் மறைந்த சொற்களால் சிலசொல்லிப் பின் குறைகூறுவதே காரியமெனவுட்கொண்டு வேட்டைகருதிச் சென்றானாக) தலைமகளும் பாங்கியும் இருந்தசமையத்தில் தலைமகன் (தன்காதல்தோன்ற) யானைவரக் கண்டதுண்டோ வென்று அவருழைச்சென்றது.

இருங்களியாயின்றியானிறுமாப்பவின்பம்பணிவோர்
மருங்களியாவனலாடவல்லோன்றில்லையான்மலை...

கொருங்களியார்ப்பவுமிழ்மும்மதத்திருகோட்டொருநீள்
கருங்களியார்மதயானையுண்டோவரக்கண்டதுவே.

(இ-ள்.) இரு களியாய் இன்று யான் இறுமாப்ப - பெரிய களிப்பை யுடையேனாய் இந்நாள் யானிறுமாக்கும்படி,— இன்பம் பணிவோர் மருக்கு அளியா - நிரதிசய வின்பத்தைப் பணிகின்ற அடியாரிடத்தே(அவரோம்பியானுறும்படி)எனக்களித்து,— அனல் ஆட வல்லோன் - தீயினாட வல்லவன்;— தில்லையான் - தில்லைக்கணுள்ள சிவன்;— மலை எங்கு - (அவனது) மலையாகிய யிவ்விடத்து,— ஒருங்கு அளி ஆர்ப்ப - ஒருசேர வண்டுகளாரவாரிக்க,— உமிழ் மும்மதத்து இருகோட்டு நீள் கரு களி ஆர் ஒரு மத யானை - உமிழாநின்ற மூன்றுமதத்தையும் இரண்டு கொம்பினையுமுடைய, நீண்ட கரியகளிபொருந்திய; ஒரு மதயானையானது,— வர கண்டது உண்டோ - வாராநிற்பப் பார்த்ததுண்டோ? உரைமின். எ-று. "வேழம்வினாதல்" முதல் "இடைவினாதல்" ஈறாகவுள்ள எட்டுப்பாட்டிற்கும் மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம்; பயன் - மதியுடம்படுத்தல்.

அனலாடவென்பது அனலோடாட வெனவிரியும். ஆர்ப்பவுமிழுமெனினு மமையும். களி - உள்ளச்செருக்கு. மதயானை - மதமிடையறாத யானை. (௫௨)

கலைமான்வினாதல்.

சிலைமா னண்ணல்
கலைமான் வினாயது.

(எ-து.) (யானைவரக் கண்டதுண்டோ வென்றுவினவி யுள்ளேபுகுந்தபின்பு, தான் கண்ணால் வருந்தினமை தோன்ற நின்று, கண்போலும்) பாணத்தாய், வருத்தின மலைபோன்ற தலைமகன், கலைமான் கண்டதுண்டோவென்று கேட்டது.

கருங்கண்ணனையறியாமைநின்றோன்றில்லைக்கார்ப்பொழில்வாய்
வருங்கண்ணனையவண்டாடும்வளரிளவல்லியன்னீர்
இருங்கண்ணனையகணைபொருபுண்புணர்ப்புனத்தின்
மருங்கண்ணனையதுண்டோவந்ததிங்கொருவான்கலையே.

(இ-ள்.) கரு கண்ணனை அறியாமை நின்றோன் தில்லை கார் பொழில்வாய் - கரியதிருமாலை அவனறியாமல் (தன்னை) யொளித்து நின்றவனது தில்லைநகரின்கணுண்டாகிய கரியபொழிலிடத்து,— வரும் கள் நனைய - புறப்படாநின்ற மதுவினால் தம்முடல் நனையும்படி,— வண்டு ஆடும் வளர் இள வல்லி அன்னீர் - வண்டுகளாடுதல்செய்யும் வளராநின்ற இளமையாகிய பூங்கொடியை ஒத்தவர்களே!— இரு கண் அனைய கணை பொரு புண் புணர் ஒரு வான் கலை - (உம்முடைய) பெரியகண்கள்போலும் அம்பு பொருதலாலுண்டாகிய புண்ணை அடைந்த ஒரு பெரிய கலைமானனது,— இ புனத்தின் மருங்கண் அனையது ஈங்கு வந்தது உண்டோ - இப்புனத்தின்மருங்கு அத்தன்மையது இவ்விடத்துவந்தது உண்டோ? உரைமின். எ-று.

ஐகாரம் அசைநிலையெனினு மமையும். வருங்கண்ணனைய என்பதற்கு உண்டாகக்கடவ கள்ளையுடைய அரும்புகளையுடைமையான் வண்டு காலம்பார்த்து ஆடுமாறுபோல, நம்முள்ளத்து நெகிழ்ச்சியுண்டாமளவும் நமது பக்கம்விடாது உழல்கின்றேனென்பது பயப்ப, வருங் கண்ணனையையுடையவென் றுரைப்பினுமமையும். மருங்கு என்பது மருங்கண்ணென ஈறு திரிந்துநின்றது. அணித்தாக என்னும்பொருட்டாய் அணி அண்ணெனக்குறைந்து நின்றதெனினு மமையும். கண்ணனென்னும் பொருளதோர் பாகதச்சிதைவு, அஃது அப்பண்பு குறியாது ஈண்டுப்பெயராய் நின்றது. (௫௩)

வழிவினாதல்.

கலைமான் வினாய கருத்துவேறறிய
மலைமா னண்ணல் வழிவினாயது.

(எ-து.) கலைமான்வரக் கண்டதுண்டோவென்று கேட்ட எண்ணம் வேறெனப் பாங்கி யதிர்ந்துகொள்ள, மலைபோன்ற தலைமகன் (கலைமான் வரவு கூறுவிட்டாலும்) நும்மூர்க்குச் செல்லும் வழியாயினும் சொல்லுமின் எனக் கேட்டது.

சிலம்பணிகொண்டசெஞ்சீறடிபங்கன்றன்சீரடியார்
குலம்பணிகொள்ளவெனைக்கொடுத்தோன்கொண்டுதானணியுங்
கலம்பணிகொண்டிடமம்பலங்கொண்டவன்கார்க்கயிலைச்
சிலம்பணிகொண்டநுஞ்சீறூர்க்குரைமின்கள்செல்னெறியே.

(இ-ள்.) சிலம்பு அணி கொண்ட செம் சிறு அடி பங்கன் - சிலம்பானது அழகுபெற்ற சிவந்த சிறியபாதத்தை யுடையாளது பங்கையுடையவன்,—தன் சீர் அடியார் குலம் பணி கொள்ள எனை கொடுத்தோன் - தன்னுடைய சிறப்புப்பொருந்திய அடியார் கூட்டம் குற்றேவல்கொள்ள என்னைக் கொடுத்தவன்,—தான் கொண்டு அணியும் கலம் பணி கொண்டு அம்பலம் இடம் கொண்டவன் - தான்கொண்டணியும் ஆபரணம் பாம்பாகக் கொண்டு, சிற்றம்பலத்தை யிடமாகக் கொண்டவன்,—கார் கயிலை சிலம்பு அணி கொண்ட நும் சீறூர்க்கு - (அவனது) மூங்கில்களையுடைய கைலையினிடத்து மலையானது அழகுகொண்ட உம்முடைய சிறியவூருக்கு,— செல் நெறி உரைமின்கள் - செல்லும் வழியைச் சொல்லுங்கள். எ-று. (௫௪)

பதிவினாதல்.

பதியொடுபிறவினைய் மொழிபலமொழிந்து
மதியுடம்படுக்க மன்னன்வலிந்தது.

(எ-து.) (வழிவினவவும் அதற்கு மறுமொழிகொடாத அவ்விருவரையும், பின்னும்) பதிமுதலியவற்றை வினவிப் பலமொழிகளைச்சொல்லிப் பாங்கியை வழிபடுதற்குத் தலைமகன் வலிந்தது.

ஒருங்கடமூவெயிலொற்றைக்கணைகொள்சிற்றம்பலவன்
கருங்கடமூன்றுகுநால்வாய்க்கரியுரித்தோன்கயிலை
யிருங்கடமூடும்பொழிலெழிற்கொம்பரன்னீர்களின்னே
வருங்கடம்மூர்பகர்ந்தாற்பழியோவிங்குவாழ்பவர்க்கே.

(இ-ள்.) மூ எயில் ஒருங்கு அட ஒற்றை கணை கொள் சிற்றம்பலவன் - மூன்றுமதிலையும் ஒருசேர அழிக்கவேண்டியோரம்பைக்கொண்ட திருச்சிற்றம்பலத்தி லுறைபவன்; — கரு கடம் மூன்று உகும் நால் வாய் கரி உரித்தோன் - கரியமதம் மூன்று மொழுகும் தொங்குகின்ற வாயினையுடைய யானையையுரித்தவன்;—கயிலை இரு கடம் மூடும் பொழில் எழில் கொம்பர் அன்னீர்கள் - (அவனது) கைலைக்கண் பெரியகாட்டினால் மூடப்படும் பொழிலினிடத்து அழகையுடைய பூங்கொம்பையொப்பாகிய நீங்கள்,— இன்னே வருங்கள் - இங்கே வாருங்கள், — தம் ஊர் பகர்ந்தால் இங்கு வாழ்பவர்க்கு பழியோ - தங்களூர் சொன்னால் இம்மலையில் வாழ்பவர்களுக்குப் பழியாமோ? எ-று.

இன்னே வருங்கள் என்பதில் வாருமென்பது குறுகின்றது.

பெயர்வினாதல்.

பேரமைத் தோளியர்
பேர் வினைய து.

(எ-து.) (பதிவினவியும் மறுமொழிகொடாத) பெரிய மூங்கில்போலும் தோள்களையுடைய அவரது பெயரை வினவியது.

தாவொன்னவோங்குஞ்சடைமுடிமேற்றனித்திங்கள்வைத்த
காவொன்னவாருங்கறைமிடற்றம்பலவன்கயிலை
பூவொன்னவென்னவும்வாய்திறவீரொழிவீர்பழியேற்
பேவொன்னவோவுமாயீர்விளையீர்க்குழற்பேதையரோ.

(இ-ள்.) ஓங்கும் சடை முடிமேல் தார் என்ன தனி திங்கள் வைத்த - உயர்ந்த சடைமுடியின்மீது மாலையாக ஒருகலையாகிய

பிறையை வைத்த,— கார் என்ன ஆரும் கறை மிடற்று - மேக மென்ன நிறைந்த கறுப்பையுடைத்தாகிய கண்டத்தை யுடைய,— அம்பலவன் கயிலை - சிற்றம்பலவனது கைலையினிடத்து,— ஊர் என்ன என்னவும் வாய் திறவீர் - உம்முடைய ஊர்களைத் தன்மையவென்று சொல்லவும் வாய்திறவா திருக்கின்றீர்,— பழியேல் ஒழிவீர் - (ஊர்சொல்லல்) பழியாகுமாகில் ஒழிவீராக,—பேர் என்னவோ - பெயர்களைத்தன்மையவோ,—வினை ஈரம் குழல் பேதையரோ உரையீர் - வாசனையும் நெய்ப்பையு முடைய குழலையுடைய மாதர்களே? சொல்வீராக எ-று. தனித் திங்கள்— ஒப்பற்ற திங்களெனினுமமையும். வாய்திறவா தொழிவீரென்பதூஉம் பாடம். (௫௬)

மொழிபெறாதுகூறல்.

தேமொழியவர் வாய்மொழிபெறாது
மட்டவிழ்தாரோன் கட்டுரைத்தது.

(எ - து.) (பெயர்வினவியபின்) தேன்போலுஞ் சொல்லை யுடையவரது வாய்மொழிபெறாமல் மணங் கமழும் மலர்மாலையையுடைய தலைமகன் கட்டுரை கூறியது.

இரதமுடையநடமாட்டுடையவரெம்முடையர்
வரதமுடையவணிதில்லையன்னவரிப்புனத்தார்
விரதமுடையர்விருந்தொடுபேச்சின்மைமீட்டதன்றேற்
சரதமுடையர்மணிவாய்திறக்கிற்சலக்கென்பவே.

(இ-ள்.) இரதம் உடைய நடம் ஆட்டு உடையவர் - இனிமையையுடைய கூத்தாட்டை யுடையவர்,—எம்முடையர் - எம்முடைய தலைவர்,—வரதம் உடைய - (அவரது) வரத்தை யளித்தலையுடைய,—அணி தில்லை அன்னவர் இ புனத்தார் - அழகிய தில்லைப்பதியை யொப்பவராகிய இந்தப்புனத்தில் வாழ்வோர்,— விருந்தொடு பேச்சு இன்மை விரதம் உடையார் - விருந்தின

ரோடு பேசாமையை விரதமாக வுடையார்,— மீட்டு அதன்றேல் - மேலும் அதுவன்றாயின்,—வாய் திறக்கின் சலக்கென்ப மணி சரதம் உடையர் - வாயைத்திறந்தால் சலக்கென்று விழுவனவாகிய முத்துமணிகளை மெய்யாக வுடையவர். எ-று.

வேழம் வினாதல் முதல் இவ்வாறுபாட்டானும் வம்புச்சொல் கூறுவார் வினவுந் தன்மைபோலத் தன் குறை தோன்றுவகை வினவினானென்பதாம். (௫௭)

கருத்தறிவித்தல்.

உரைத்த துரையாது
கருத்தறி வித்தது.

(எ - து.) வினவியவற்றிற்கு மறுமொழி கொடாமையின் (இத்தழை நும்மல்குற்குத் தகுமாயின் அணிமினென்று) தன்கருத்தை யறிவித்தது.

வின்னிறவாணுதல்வேனிறக்கண்மெல்லியன்மல்லற்
றன்னிறமொன்றிலிருத்திநின்றோன்றனதம்பலம்போன்
மின்னிறநுண்ணிடைப்பேரெழில்வெண்ணகைப்பைந்தொடியீர்
பொன்னிறவல்குலுக்காமோமணிநிறப்பூந்தழையே.

(இ-ள்.) வில் நிறம் வாள் நுதல் - வில்லினது இயல்பையுடைய ஒளிபொருந்திய நெற்றியையும், —வேல் நிறம் கண் - வேலினது இயல்பையுடைய விழிகளையுமுடைய,—மெல் இயலை மல்லல் தன் நிறம் ஒன்றில் - மென்மையாகிய இயல்பையுடைய உமாதேவியை வண்மையையுடைய தனது திருமேனி ஒன்றிலே,— இருத்தி நின்றோன் தனது அம்பலம்போல் - இருக்கச்செய்து நின்றவனது திருச்சிற்றம்பலத்தை யொக்கும்,—மின் நிறம் நுண் இடை பேர் எழில் வெண் நகை பை தொடியீர் - மின்னினது இயல்பையுடைய நுண்ணிய மருங்குலையும் மிகுந்த அழகினையும் வெண்மையாகிய பற்களையுமுடைய பசுமையாகிய வளையல்களையுடைய மாதர்களே! — மணி நிறம் பூ தழை -

மணியினது நிறத்தையுடைய இப்பூவோடுகூடிய தழையானது,—பொன் நிறம் அல்குலுக்கு ஆமோ - பொன்னினது நிறத்தையுடைய அல்குலின்மீது அணிதற்கு ஆகுமோ? (ஆமாயின் அணிவீராக). எ-று.

பொன்னிறத்திற்கும் மணிநிறத்திற்கும் பொருத்தமுடைத்தென்பது கருத்து. பொன்னிற வல்குலென்று அல்குலின் தன்மை கூறியவதனால் முன்னமே புணர்ச்சி நிகழ்ந்தமையு முண்டென்பது கூறியவாறாயிற்று. ஆமோ என்ற ஓகாரம் கொடுப்பாரது உண்மகிழ்ச்சியையும் கொள்வாரது தலைமையையும் விளக்கிநின்றது. (௫௮)

இடைவினாதல்.

வழிபதி பிறவினாய்
மொழிபல மொழிந்தது.

(எ - து.) வழிபதிமுதலியவற்றை வினவியும் (தழைகாட்டிக் கருத்தறிவித்தும் அதுவழியாக நின்று இடை வினவுதலாகிய) மொழிகள் பலகூறியது.

கலைக்கீழகலல்குற்பாரமதாரங்கண்ணார்ந்திலங்கு
முலைக்கீழ்ச்சிறிதின்றிநிற்றன்முற்றாதன்றிலங்கையர்கோன்
மலைக்கீழ்விழச்செற்றசிற்றம்பலவர்வண்பூங்கயிலைச்
சிலைக்கீழ்க்கணையன்னகண்ணீரெதுநுங்கள்சிற்றிடையே.

(இ - ள்.) கலை கீழ் - அகல் அல்குல் பாரமது - மேகலைக்குக் கீழாகிய அகன்ற அல்குலாகிய பாரமானது,—ஆரம் கண் ஆர்ந்து இலங்கும் முலை கீழ் சிறிதின்றி நிற்றல் முற்றாது - முத்துவடம் கண்ணிற்கு நிறைந்து பிரகாசியாநின்ற தனத்தின்கீழ் இடை சிறிதில்லாமல் தானேநிற்குதல் முடிவுபெறாது,—அன்று இலங்கையர்கோன் மலை கீழ் விழ செற்ற சிற்றம்பலவர் - (இம்மலையையெடுத்த) அப்பொழுது இராவணன் இம்மலையின்கீழ் விழும்படி நெரித்த திருச்சிற்றம்பலத்திலுள்ள சிவனது,— வண் பூ

கயிலை சிலைகீழ் கணையன்ன கண்ணீர் - வளப்பம்பொருந்திய பொலிவையுடைய கைலையில்நிற்கின்ற வில்லின்கீழ்வைத்த அம்புபோலும் புருவத்தின் கீழுள்ளவாகிய கண்ணையுடைய மாதர்களே!—நுங்கள் சிற்றிடை எது - உம்முடைய சிறிய இடையானது யாது. எ-று.

பாரமது நிற்றலென இயையும். பாரம் அது என எழுவாயும் பயனிலையுமாக்கி முலைக்கீழ்ச் சிறிதாயினும் ஒன்றுமின்றி இவ்வுருவம் நிற்றல் முற்றாதென் றுரைப்பாருமுளர். இவ்விரண்டு பாட்டாலும் இவன்குறை நம்மிடத்ததேயென்பது பாங்கிக்குப் புலப்பட இத்தழைகொள்வீரென்றும் நும் இடையாதென்றும் வினவினனென்பதாம். (௫௯)

மதியுடம்படுத்தல் முற்றிற்று.

இருவருமுள்வழியவன்வரவுணர்தல்,

என்பது, தலைமகளும் பாங்கியு மிருக்குமிடஞ்சென்று, தலைமகன் மறைந்தமொழியால் தன்கருத்தை யறிவிக்க, பாங்கி அவன் நினைவையறிதல்.

இக்கிளவி யிரண்டு துறையையுடைத்து. அவைவருமாறு:—
ஐயம்நாட லாங்கவையிரண்டு, மையறுதோழி யவன்வரவுணர்தல்.

ஐயுறுதல்.

ஆடற்கதிர்வேலோன் றளர்ச்சிநோக்கித்
தையற்பாங்கி யையமுற்றது.

(எ - து.) ஒளியுள்ள வெற்றிவேலையுடைய தலைமகன் (மேனி யொளியிழந்து) இப்புனத்தைவிட்டு நீங்காமையைநோக்கி புனையப்படுதலையுடைய பாங்கி (இவன் யாவனோவென) ஐயமுற்றது.

பல்லிலனாகப்பகலைவென்றோன்றில்லைபாடலர்போ
லெல்லிலனாகத்தொடேனம்விராவியன்யாவன்கொலாம்
வில்லிலனாகத்தழைகையில்வேட்டைகொண்டாட்டமெய்யோர்
சொல்லிலனாகற்றவாகடவானிச்சுனைப்புனமே.

(இ - ள்.) பல் இலனாக பகலை வென்றோன் - பற்களில்லாதவனாகச் சூரியனை வென்றசிவனது, — தில்லை பாடலர்போல் எல் இலன் - தில்லைப்பதியைப் பாடாதவர்களைப்போல ஒளியில்லாதவன் (ஆயினும்),—விரா நாகத்தொடு ஏனம் - விரவப்படுவன யானையும் மானுமாயிருந்தன,—இவன் யாவன்கொல் - இவன் யாவனோ?—வில் இலன் கையில் நாகம் தழை கொண்டாட்டம் வேட்டை - வில்லையுடையவனல்லன், கையில் நாகமரத்தினது தழைகளாகவிருந்தும் கொண்டாடப்படுகின்றது வேட்டை,—மெய் ஓர் சொல்லிலன் - மெய்யாயிருப்பதொரு சொல்லை முடையனல்லன்,—ஆ கற்றவா - ஆ (இவன் பொய்புனை) கற்றவாறென்? — இ சுனை புனம் கடவான் - (ஈண்டொரு குறையுடையான்போன்று) இந்தச் சுனையோடுகூடிய புனத்தைக் கடக்கமாட்டான்போலும். எ-று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - உசாவி யையந்தீர்தல். ஆ - வியப்பின்கட் குறிப்பு. (௬௦)

அறிவுநாடல்.

வெற்பன் விரைய சொற்பதநோக்கி
நெறிகுழற்பாங்கி யறிவுநாடியது.

(எ - து.) (ஐயுறுகின்ற) நெறிந்த கூந்தலையுடைய பாங்கி தலைமகன்வினவிய சொல்லளவை ஆராய்ச்சி செய்து அறிவால் நாடியது.

ஆழமன்றேவுடைத்திவ்வையர்வார்த்தையனங்கனைந்து
வீழமுன்னோக்கியவம்பலத்தான்வெற்பினிப்புனத்தே
வேழமுன்னாய்க்கலையாய்ப்பிறவாய்ப்பின்னுமென்றழையாய்
மாழைமென்னோக்கியிடையாய்க்கழிந்ததுவந்துவந்தே.

(இ-ள்.) அனங்கன் நைந்து வீழ - மன்மதன் அழிந்து விழும்படி,—முன் நோக்கிய அம்பலத்தான் வெற்பின் - முற்காலத்தில் நோக்கிய திருச்சிற்றம்பலத்தில் உறைபவனது மலையிலுள்ள,—இ புனத்தே முன் வேழமாய் கலையாய் பிறவாய் - இப்புனத்தின்கண்ணே முன் யானையாய் (பின்) மானும் வேறுபிறவாய்,—பின்னும் மென் தழையாய் வந்து வந்து மாழை மென் நோக்கி இடையாய் கழிந்தது - பின்னும் மெல்லிய தழையாய் வந்து வந்து. பேதைமையையுடைய மெல்லியபார்வையை யுடையாளது மருங்குலாய்விட்டது.—இ ஐயர் வார்த்தை - இவ்வையருடைய சொல்லானது,—ஆழம் உடைத்து - ஆழ்ந்தகருத்தை உடையது. எ-று. மெய்ப்பாடு - மருட்கையைச்சார்ந்த பெருமிதம்; பயன் - ஐயந்தீர்தல்.

மன்னும் ஓவும் அசைநிலை. மெல்லிய நோக்கத்தையுடையாளிடைபோலும் பொய்யாய் விட்டதென்பாருமுளர். சொற்பதம் - சொல்லளவு. (௬௧)

இருவருமுள்வழி யவன்வரவுணர்தல் முற்றிற்று.

முன்னுறவுணர்தல்,

என்பது, தலைமகன் வினாவுதற்கெல்லாம் பாங்கி மறுமொழி கொடாமையால் தலைமகன்வாட, அதுகண்டு தலைமகளும் வாட, அவ்விருவர் வாட்டத்தினும் முன்னுற்ற காரணத்தையறிய பாங்கி தலைமகளை வினவுதல்.

இக்கிளவி ஒரு துறையையுடைத்து. அதுவருமாறு:—

வாட்டம்வினாதல் முன்னுறவுணர்தல், கூட்டியுணரும் குறிப்புரையாகும்.

வாட்டம்வினாதல்.

மின்னிடைமடந்தை தன்னியனோக்கி
மின்குமென்முலைப் பாங்கிபகர்ந்தது.

(எ-து.) மின்போலும் இடையையுடைய தலைமகளது இயல்பினைநோக்கிப் பருத்தமென்மையாகிய முலையையுடைய பாங்கி (தலைமகளதுவாட்டம்) வினவியது.

திருத்தம்பயின்றவன்சிற்றம்பலத்துநெற்றித்தனிக்க
ணொருத்தன்பயிலுங்கயிலைமலையினுயர்குடுமித்
திருத்தம்பயிலுஞ்சுனைகுடைந்தாடிச்சிலம்பெதிர்கூய்
வருத்தம்பயின்றுகொல்லோவல்லிமெல்லியல்வாடியதே.

(இ-ள்.) சிற்றம்பலத்து திருத்தம் பயின்றவன் - திருச்சிற்றம்பலத்தின்கண் நடனத்தை (இடைவிடாமல்) செய்தவன்,—நெற்றி தனி கண் ஒருத்தன் - நெற்றியினிடத்து தனிமையாகிய கண்ணையுடைய ஒப்பில்லாதவன்,—பயிலும் கயிலை மலையின் - (அவன்) வாசஞ்செய்யும் கயிலை மலையினுடைய,—உயர் குடுமி திருத்தம் பயிலும் சுனை குடைந்து ஆடி - உயர்வாகிய உச்சியில் தீர்த்தம் நிற்கும் சுனையை மூழ்கியாடி,—சிலம்பு எதிர் கூய் - மலைக்கு எதிரே யழைத்து,—வருத்தம் பயின்றுகொல்லோ - (இவ்வாறு விளையாடியதால்) வருத்தத்தை அடைந்தோ (பிறிதொன்றினாலோ),—வல்லி மெல் இயல் வாடியது - வல்லிபோலும் மெல்லிய வியல்பினையுடையாள் வாடினது. (எ-று.) மெய்ப்பாடு-மருட்கை; பயன் - தலைமகட்குற்ற வாட்டமுணர்தல். (௬௨)

மூன்றுறவுணர்தல் முற்றிற்று.

குறையுறவுணர்தல்,

என்பது, தலைமகன் குறையுற, பாங்கி அதனைத்துணிந்தறிதல்.

இக்கிளவி, நான்குதுறைகளையுடைத்து. அவைவருமாறு:—

குறையுற்றுநிற்ற லவன்குறிப்பறிதல், அவள்குறிப்பறிதலோடவர்நினைவெண்ணல், கூறியநான்குங் குறையுறவுணர்வெனத் தேறியபொருளில் தெளிந்திசினோரே.

குறையுற்றுநிற்றல்.

கறையுற்ற வேலவன்
குறை யுற்றது.

(எ-து.) கறைதங்கிய வேலையுடைய தலைமகன், (நீவிர் வேண்டிய) இழிதொழிலையுஞ் செய்வேனென்று கூறியது.

மடுக்கோகடலின்விடுதிமிலன்றிமதிதிரைமீன்
படுக்கோபணிலம்பலகுளிக்கோபரன்றில்லைமுன்றிற்
கொடுக்கோவளைமற்றுநும்மையர்க்காயகுற்றேவல்செய்கோ
தொடுக்கோபணியீரணியீர்மலர்நுஞ்சுரிகுழற்கே.

(இ-ள்.) கடலின் விடு திமில் மடுக்கோ - கடலின்கண் விடப்படுந்தோணியைச் செலுத்துவேனோ,—அன்றி மதி திரை மீன் படுக்கோ - அல்லாமல் மடக்குகின்ற அலைகளையுடைய கடலிற்புக்கு மீன்களைப் பிடிப்பேனோ,— பணிலம் பல குளிக்கோ - (ஒரு குளிப்பில்) சங்குகள் பலவற்றை யெடுப்பேனோ,— பரன் தில்லை முன்றில் வளை கொடுக்கோ-சிவபிரானது தில்லைமுற்றத்திற்சென்று சங்குவளைகளை விற்பேனோ,—மற்றும் நும் ஐயர்க்கு ஆய குற்றேவல் செய்கோ - பின்னும் உம்முடைய ஐயன்மாருக்குப் பொருந்தின குற்றேவல்களைச் செய்வேனோ,— அணி ஈரம் மலர் நும் சுரி குழற்கு தொடுக்கோ பணியீர் - அணியப்படும் குளிர்ச்சிபொருந்திய மலர்களை உம்முடைய சுரிந்த கூந்தலிற்குத் தொடுப்பேனோ, சொல்லுங்கள். எ-று. மெய்ப்பாடு-இளிவரல்; பயன் - குறையுறுதல்.

மற்று-வினைமாற்று. இவன் உயர்ந்த தலைமகனாதலின் அவன் தன்னை வேறுபட வுணராமைக் கூறியவாறு. (௬௩)

அவன்குறிப்பறிதல்.

பொற்றொடித்தோழிதன் சிற்றிடைப்பாங்கி
வெறிப்பூஞ்சிலம்பன் குறிப்பறிந்தது.

(எ-து.) பொன்னாலாகிய தொடியையணிந்த தோளினையுடைய தலைமகளது சிறிய இடையையுடைய பாங்கி, மணங்கமழும் பூக்களையுடைய மலைநாடனாகிய தலைமகனது (குறையுறும்) நினைவைத் துணிந்தறிந்தது.

அளியமன்னும்மொன் றுடைத்தண்ணலெண்ணரன் றில்லையன்ன
கிளியைமன்னுங்கடியச்செல்லகிற்பிற்கிளரளகத் [ன்
தளியமர்ந்தேறினெறிதேயிருப்பிற்பளிங்கடுத்த [ந்தே.
வொளியமர்ந்தாங்கொன்று போன்றொன்றுதோன்றுமொளிமுக

(இ - ள்.) அரன் தில்லையன்னாள் - அரனது தில்லையையொப்பாள்,—மன்னும் கிளியை கடிய செல்லகிற்பின் - (புனத்தின்கண் பொருந்தும்) கிளிகளை ஓட்டுதற்குச் செல்லின்றாலும்,—கிளர் அளகத்து அளி அமர்ந்து ஏறின் - (இவளுடைய) விளங்குகின்ற கூந்தலின்கண் வண்டுகள் மேவி ஏறினாலும், — வறிதே இருப்பின் - (இவள்) சும்மா இருந்தாலும், — பளிங்கு அடுத்த ஒளி அமர்ந்தாங்கு - பளிங்கானது (தன்னை) அடுத்த நிறத்தைப் பொருந்தினாற்போல, — ஒளிமுகத்து - (இவளது) ஒளியையுடைய முகத்தினிடத்து, — ஒன்றுபோன்று ஒன்றுதோன்றும் - (முன்) ஒன்றைப்போலிருந்து (பின்) வேறொன்றுதோன்றும்.—அளிய அண்ணல் எண் மன்னும் ஒன்றுடைத்து - (அதனால்) அளிய அண்ணலது எண்ணமானது பொருந்திய ஒரு குறிப்பை யுடையது. (அஃது இவள் கண்ணதேபோலும்). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - துணிந்துணர்தல்.

கிளியை மன்னு மென்புழி மன்னும் அசைநிலையெனினு மமையும். ஒன்றுபோன் றொன்று தோன்றுமென்றது - கிளியைக்கடியச் சிறிதுபுடைபெயரின் கெட்டிடைகழிந்தாற்போல ஆற்றுகலாளும், வண்டுமூசப்பெருளென்று வருந்தி வன்னடை யோச்சுவான்போலச் சேறலாளும், வாளாவிருப்பிற் கண்டின்புறுத

லாளும், இவள் கண்ணிகழ்ச்சி இவன்முகத்தே புலப்படாநின்றது. ஏறிவறிதே யிருப்பினென்பது பாடமாயின், அளியேறி அளகத்தின்கட் சிறிதிருப்பினுமென வுரைக்க. ஒளிர் முகமே யென்பதூஉம் பாடம். (௬௪)

அவள்குறிப்பறிதல்.

ஆங்கவள் குறிப்பு ப்
பாங்கி பகர்ந்த து.

(எ-து.) (தலைமகன் குறிப்பறிந்த) பாங்கி, அவனைப்போலத் தலைமகள் குறிப்பும் (ஒன்றென) துணிந்தறிந்தது.

பிழைகொண்டொருவிக் கெடாதன்புசெய்யிற் பிறவியென்
னு, முழைகொண்டொருவன்செல் லாமைநின்றம்பலத் தாடு
முன்னே, னுழைகொண்டொருங்கிரு நோக்கம்பயின்றவெம்
மொண்ணுதன்மாந், தழைகொண்டொருவனென் னுமுன்னமு
ள்ளந் தழைத்திடுமே.

(இ - ள்.) பிழைகொண்டு ஒருவி கெடாது ஒருவன் அன்பு செய்யின் - பிழைத்தலைக்கொண்டு நீங்கிக் கெடாமல் ஒருவன் அன்பைச் செய்வானானால், — பிறவியென்னும் முழைகொண்டு செல்லாமை அமைத்து நின்று ஆடும் முன்னோன் - (அவன்) பிறப்பென்கின்ற முழையையடைந்து செல்லாதபடி திருச்சிற்றம்பலத்தின்கண் நின்று ஆடாநின்ற முதல்வனது, — உழைகொண்டு ஒருங்கு இருநோக்கம் பயின்ற - மானையொத்து ஒருசேர (வெள்ளைநோக்கமும், அதற்கில்லாத கள்ளநோக்கமுமாகிய) இருநோக்கத்தையுங் கற்ற,—எம் ஒள் நுதல் - எம்முடைய ஒள்ளிய நுதலையுடையாள், — மா தழைகொண்டு ஒருவன் என்னு முன்னம் உள்ளம் தழைத்திடும் - மாமரத்ினது தழையைக்கொண்டு ஒருவனென்று சொல்லுவதன்முன் மனம் மகிழாநிற்பாள். (அதனால் இவள் குறிப்பு அவன் கண்ணதேபோலும்.) எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - குறையுறுதல்.

அடைந்தார் பிழைசெய்யின், தலையாயினர் பிழையை யுட்கொண்டமைதலும், இடையாயினர் அவரைத் துறத்தலும், கடையாயினர் அவரைக் கெடுத்தலும், உலகத்துள்ளதாகலான், அம்மூவகையும் செய்யாதெனினு மமையும். (௬௫)

இருவர்நினைவு மொருவழியுணர்தல்.

அன்புறு நோக்காங்கறி ந்
தின்புறுதோழி யெண்ணியது.

(எ - து.) அன்புறுநோக்கம் அவ்விடத்தறிந்து (இருவர் காதலையுங் கண்டு) இன்புறுகின்ற பாங்கி, நினைத்தது.

மெய்யேயிவற்கில்லைவேட்டையின்மேன்மனமீட்டிவரும்
பொய்யேபுனத்தினைக்காப்பதிறைபுலியூரனையாள்
மையேர்குவளைக்கண்வண்டினம்வாழுஞ்செந்தாமரைவா
யெய்யேமெனினுங்குடைந்தின்பத்தேனுண்டெழிறருமே.

(இ-ள்.) இறை புலியூர் அனையாள் - இறைவனது சிதம்பரத்தை யொப்பாளுடைய — மை ஏர் குவளை கண் வண்டு இனம் வாழும் - மையழகுடைய குவளைமலர்போலும் கண்ணாகிய வண்டுக்கூட்டங்கள் வாழ்தற்குத் தகும், — செந்தாமரைவாய் எய்யேம் எனினும் குடைந்து இன்பம் தேன் உண்டு எழில்தரும் - (இவள்முகமாகிய) செந்தாமரைமலரின்கண் (யாம்) அறியோமாயினும் குடைதலைச்செய்து இன்பமாகிய தேனை யருந்தி யழகைப்பெறுவிக்கும். — மெய்யே இவற்கு வேட்டையின்மேல் மனம் இல்லை - (அதனால்) உண்மையாகவே இவனுக்கு வேட்டையாடுதலின்மேல் உள்ளமானது இல்லையாம். — மீட்டு இவரும் புனம் தினை காப்பது பொய்யே - மீண்டிவரும் புனத்திலுள்ள தினையைக் காத்தலைச்செய்வது பொய்யேயாம். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - குறையுறுதல்.

எய்யேமெனினு மென்பதற்கு ஒருவரையொருவர் அறியேமென்றிருப்பினும் எனினு மமையும். எழில்தருதல் - எழிலைப் புலப்படுத்துதல். நோக்கத்தின் பன்மைகருதி வண்டினம் என்றாள். (௬௬)

குறையுறவுணர்தல் முற்றிற்று.

நாணநாட்டம்,

என்பது, இருவர்நினைவும் ஐயமறத் துணிந்தபாங்கி, அவர் கூட்டமுண்மை அறிவது காரணமாகத் தலைமகளை நாணநாட்டாநிற்றல். இது கன்னிலைநாணமெனினு மொக்கும்.

இக்கிளவி ஐந்துதுறைகளை யுடைத்து. அவை வருமாறு:—

பிறைதொழுகென்றல் பின்னுமவளை, உறவெனவேறு படுத்துரைத்தல், கலையாடல்கூறல் தோற்றங்கண்டு, புணர்ச்சியுரைத்தல் பொதுவெனக்கூறி, மதியுடம்படுதல் வழிநாணநடுங்கல், புலிமிசைவைத்தல் புகலுங்காலே. இவற்றுள் புலிமிசைவைத்தல் நடுங்கநாட்டமாம்.

பிறைதொழுகென்றல்.

பிறைதொழுகென்று பேதைமாத ரை
நறுநுதற்பாங்கி நாணநாட்டிய து.

(எ-து.) பேதைமைத்தன்மையையுடைய தலைமகளைப் பிறையைக்காட்டித் தொழுகவென்று நல்ல நெற்றியையுடைய பாங்கி, நாணத்தான் அவள் நினைவை நாட்டியது.

மைவார்கருங்கண்ணிசெங்கரங்கூப்புமறந்துமற்றப்
பொய்வானவரிற்புகாதுதன்பொற்கழற்கேயடியே
னுய்வான்புகவொளிர்தில்லைநின்றோன்சடைமேலதொத்தச்
செவ்வானடைந்தபசுங்கதிர்வெள்ளைச்சிறுபிறைக்கே.

(இ - ள்.) மறந்தும் பொய் அ வானவரில் புகாது - மறந்தும் பொய்மையையுடைய அந்தத் தேவர்களிடத்துப் புகாமல்,— தன் பொன் கழற்கு - தன்னுடைய பொன்னாற்செய்த கழலையணிந்த திருவடிகளில்,—அடியேன் உய்வான் புக - அடியேன் பிழைக்கவேண்டிப் புகும்படி,—ஒளிர் தில்லை நின்றோன் - விளக்குகின்ற தில்லையின்கண் நின்றசிவனது,— சடைமேலது ஒத்து - சடையினிடத்ததாகிய பிறையை யொத்து,—செவ்வான் அடைந்த - செவ்வானத்தைச் சேர்ந்த, — பசுங்கதிர் வெள்ளை சிறு பிறைக்கு - செவ்விய கிரணத்தையுடைய வெண்மையாகிய சிறிய பிறைக்கு,—மை வார் கரு கண்ணி - மையையுடைய நெடிய கருமையாகிய கண்ணையுடையாய்!,—செம் கரம் கூப்பு - (நினது) செம்மையாகிய கைகளைக் கூப்புவாயாக. எ-று. மெய்ப்பாடு - நகை; பயன் - கரவுநாடி யுணர்தல்.

மற்று - அசைநிலை. மற்றையென்பது பாடமாயின் அல்லாத பொய்வானவரொன் றுரைக்க. பிறர்கூறும் பெருமை அவர்க்கின்மையின் பொய்வானவரொன்றார். சடை - செக்கர்வானத்துக் குவமை. (௬௭)

வேறுபடுத்துக்கூறல்.

வேய்வளைத்தோளியை வே[illegible]கண்
டாய்வளைத்தோழி யணங்கென்ற[illegible]து.

(எ-று.) மூங்கில்போலும் வளைவினையுடைய தோளையுடைய தலைமகளை (பிறைதொழாது தலைசாய்த்து) வேறுபட்டிருத்தல்கண்டு ஆராய்ந்த வளையலையணிந்த பாங்கி, வரையணங்காகப் புனைந்து கூறியது.

அக்கின்றவாமணிசேர்கண்டனம்பலவன்மலயத்
திக்குன்றவாணர்கொழுந்திச்செழுந்தண்புனமுடையா
ளக்குன்றவாறமர்ந்தாடச்சென்றாளங்கமவ்வவையே
யொக்கின்றவாறணங்கேயிணங்காகுமுனக்கவனே.

(இ - ள்.) அக்கு தவா மணி சேர் கண்டன் - அக்காகிய நல்ல மணியைப் பொருந்திய கண்டத்தையுடையவன். — அம்பலவன் - சிற்றம்பலத்திலுள்ளவன். — மலயத்து இ குன்றவாணர் கொழுந்து - (அவனது) பொதிய மலையின்கணுள்ள இந்தக் குன்றவாணருடைய மகளாகிய,—இ செழு தண் புனம் உடையாள் - இந்த செழுமையாகிய தண்ணிய தினைப்புனங் காவலுடையாள்,—அ குன்றம் ஆறு அமர்ந்து ஆட சென்றாள் - அக்குன்றத்தின்கணுள்ள நதியை விரும்பி மூழ்கப் போயினாள்,— அங்கம் அவ்வவையே ஒக்கின்றவாறு - உன் அவயவங்கள் அவ்வவயவங்களாகிய அவற்றையே ஒத்திருக்கின்றபடி,—அணங்கே - என்னணங்கே! — உனக்கு அவள் இணங்காகும் - நினக்கு அவள் இணக்குதற்காகும். (அதனால் அவளைக்கண்டுபோவாய்.) எ-று. மெய்ப்பாடு - நகை; பயன் - கரவுநாடியுணர்தல்.

இன் - அல்வழிச்சாரியை. (௬௮)

சுனையாடல்கூறி நகைத்தல்.

மா[illegible]நாட்டிய வார்குழற்பேதையை
ந[illegible]நாட்டி நகைசெய்த[illegible]து.

(எ - [illegible]சிமைப்பட்டு நிலைபெறுத்த நீண்ட கூந்தலை[illegible] (வேறுப்படுத்துக் கூறக்கேட்ட) தலைமகளை, (பாங்கி சுனையாடல்கூறி) காணத்தை விளைவித்து நகைசெய்தது.

செந்நிறமேனிவெண்ணீறணிவோன்றில்லையம்பலம்போ
லந்நிறமேனிநின்கொங்கையிலங்கழிக்குமரு
மைந்நிறவார்குழன்மாலையுந்தாதும்வளாய்மதஞ்சே
ரிந்நிறமும்பெறின்யானுங்குடைவனிருஞ்சுனையே.

(இ-ள்.) செம் நிறம் மேனி வெண்ணீறு அணிவோன் தில்லை அம்பலம்போல் - செவந்த நிறத்தையுடைய திருமேனியில்

வெண்மையாகிய திருநீற்றை அணிபவனது தில்லையம்பலத்தை யொக்கும், — அம் நிறம் மேனி நின் கொங்கையில் - அழகிய நிறத்தையுடைத்தாகிய மேனியையுடைய உன்னுடைய தனங்களில், — அங்கு அழி குங்குமமும் - அவ்விடத்தழிந்த செஞ்சாந்தையும், — மை நிறம் வார் குழல் மாலையும் - மையைப்போலும் நிறத்தையுடைய நெடிய கூந்தலிலுள்ள மாலையையும், — தாதும் - (அக்கூந்தலி லப்பிய) பூந்தாதினையும், — வளாய் மதம் சேர் இந்நிறமும் - (உடல்முழுவதும்) சூழ்ந்து (காமக்களிப்பாலுண்டாகிய) கதிர்ப்பைச் சேர்ந்த இந்நிறத்தையும், — பெறின் - பெறுவேனாயின், — இரும் சுனை யாறும் குடைவன் - (நீர்சூழ்ந்த) பெரிய சுனையில் யானும் மூழ்குவேன் [illegible] எ-று. மெய்ப்பாடு - நகை; பயன் - கரவுநாடியுணர்தல்.

அங்கழிகுங்கும மென்றது - முயங்குதலாலழியும் அவ்விடத்திலழிந்த குங்குமம். வளாவுதல் என்றது - புணர்ச்சிக்காலத்தில் மாலையின் முறிந்தமலரும், அளகத்தப்பியதாதும், சிதறிக் குங்குமத்தினமுந்தி வாங்குதற் கருமையாக விரவுதல். (சுக)

புணர்ச்சியுரைத்தல்.

மணக்குறி நோக்கி [illegible]
புணர்ச்சி யுரைத்த [illegible]

(எ-து.) (சுனையாடல்கூறி நகைசெய்தபாங்கி, தலைமகளிடத்து) மலர்நாற்றக் குறியைக்கண்டு புணர்ச்சி கூறியது.

பருங்கண்கவர் கொலைவேழப்படையோன்படப்படர்தீத்
தருங்கண்ணுதற்றில்லையம்பலத்தோன்றடமால்வரைவாய்க்
கருங்கண்சிவப்பக்கனிவாய்விளர்ப்பக்கண்ணாரளிபின்
வருங்கள்மலைமலர் சூட்டவற்றோமற்றவ்வான்சுனையே.

(இ - ள்.) பருகண் கவர் கொலை வேழம் படையோன் - பரியகணுக்களையும் விரும்பப்படுங் கொலையையுமுடைய கரும்புவில்லாகிய படையையுடைய மன்மதன், — பட படர் தீ தரும் கண்ணுதல் தில்லையம்பலத்தோன் - அழியச் செல்லுகின்ற நெருப்பைத் தருகின்ற கண்ணையுடைத்தாகிய நெற்றியையுடைய தில்லையம்பலத்திலுள்ள இறைவனது, — தட மால் வரைவாய் - மிகப்பெரிய மலையிடத்து, — அ வான் சுனை - (நீர்சூழ்ந்த) அந்த பெரிய சுனையானது, — கரு கண் சிவப்ப - கரியகண்ணானது சிவக்க, — கனி வாய் விளர்ப்ப - கொண்டைக் கனிபோலும் வாயானது வெளுக்க, — அளி பின் வரும் கள் ஆர் கள் மலை மலர் சூட்டவற்றோ - வண்டுகள் பின்றொடர்ந்து வரும் கண்ணிற்கு, நிறைந்த தேனையுடைய மலைமலரைச் சூடுந் தன்மையையுடையதோ? (சொல்வாயாக.) எ-று. மெய்ப்பாடு - நகை; பயன் - கரவுநாடி யுணர்தல்.

தடமும் மாவும் பெருமையாகலின் மிகப்பெரிய வென்பது விளங்கும். தடம் - தாழ்வரை யெனினு மமையும். மற்று - அசைநிலை. (எ0)

மதியுடம்படுதல்.

அயில்வேற்கண்ணியொ டாடவன்றனக்குயிரொன்
மயிலியற் [illegible] மதியுடம்பட்டது. [றென

(எ - து.) கூர்மையாகிய வேல்போன்ற கண்ணையுடைய தலைமகளோடு தலைமகனுக்கு உயிரொன்றேயென (புணர்ச்சியுணர்ந்த) மயிலினது சாயலையுடைய பாங்கி, வியந்து கூறியது.

கூகத்திருகண்ணிற்கொண்டேமணிகலந்தாங்கிருவ
ராகத்துளோருயிர்கண்டனம்யாமின்றியாவையுமா
மேகத்தொருவனிரும்பொழிலம்பலவன்மலையிற்
றோகைக்குந்தோன்றற்குமொன்றாய்வருமின்பத்துன்பங்களே.

(இ - ள்.) யாவையுமாம் ஏகத்து ஒருவன் - எல்லாப்பொருள்களுமாய் விரியும் பரமாத்துமாவையுடைய ஒருவன்.—இரும்பொழில் அம்பலவன் - பெரிய சோலைகளால் சூழப்பட்ட திருச்சிற்றம்பலத்தை யுடையவன்.—மலையில் - (அவனது) மலையின்கண்,—தோன்றும் இன்பத்துன்பங்கள் ஒன்றாய் வரும் - மயிலைப்போன்ற இம்மாதுக்கும் இவ்வரசனுக்கும் இன்பமுந் துன்பமும் ஒன்றாய் வராநின்றன.—காகத்து இரு கண்ணிற்கும் மணி ஒன்றே கலந்தாங்கு - (அதனால்) காக்கையினது இரண்டு கண்களுக்கும் மணி ஒன்றே கலந்தாற்போல,—இருவர் ஆக்கத்துள் ஓருயிர் யாம் இன்று கண்டனம் - இருவருடைய உடலின்கண் ஒருயிரை நாம் இன்று கண்டோம், எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - மதியுடம்படுதல்.

அம்பலவன் மலையில், இன்று யாம் கண்டனமென்று கூட்டி, வேறோரிடத்து வேறொரு காலத்து வேறொருவர் இதுகண்டறிவாரில்லை யென்பதுபட உரைப்பினுமமையும். கலந்தாங்கு என்பது பாடமாயின் காகத்திருகண்ணிற் கொன்றே மணியென்பதனை யெடுத்துக்காட்டாக வுரைக்க. (எச)

நாணநாட்டம் முற்றிற்று.

நடுங்கநாட்டம்,

என்பது, தலைமகன் பெருநாணினாளெனும் பாங்கி அவட்குற்றேவல் மகளாயினும், சொல்லாடாது தலைமகளைச்சென்று கேட்பதுகாரணமாக நெருங்கிநின்று, ஒருபுலி யொன்றிவனை யெதிர்ப்பட்டதெனப் பாங்கி, தலைமகளை நடுங்க நாடுதல்.

இக்கிளவி நடுங்கநாட்ட மென்னும் ஒரு துறையை யுடைத்து.

நடுங்கநாட்டம்.

நுடங்கிடைப்பாங்கி
நடுங்கநாட்டிய து.

(எ - து.) நுடங்கின்ற இடையையுடைய பாங்கி, (புலியெதிர்ப்பட்டதென) நடுங்கும்படி நாடுகின்றது.

ஆவா விருவ ரறியா வடிதில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்க நின்றோனையுள் ளாரின்முன்னித்
தீவா யுழுவை கிழித்தது அந்தோ சிறிதே பிழைப்பித்
தாவா மணிவேல் பணிகொண்ட வாறின்றோ ராண்டகையே.

(இ-ள்.) இருவர் அறியா அடி - அயனும் அரியுமாகிய விருவர் அறியாத திருவடியை,—தில்லை அம்பலத்து மூவாயிரவர் வணங்க நின்றோனை - தில்லை நகரத்திலுள்ள திருச்சிற்றம்பலத்தின்கண் மூவாயிரம் அந்தணர்கள் வணங்கும்படி (எளிவந்து) நின்றவனை,— உன்னாரின் - நினையாதவரைப்போல (வருந்த),—முன்னி தீவாய் உழுவை கிழித்தது - எதிர்ப்பட்டு (தன்) கொடியவாயினை புலி திறந்தது,—அந்தோ சிறிதே பிழைப்பித்து - (அப்போது) ஐயோ சிறிது தப்புவித்து,—இன்று ஓராண்டகை மணி வேலை பணிகொண்டவாறு - இன்று ஒரு ஆண்மகன் மணியையுடைய வேலினை ஏவல்கொண்ட விதம் என்? எ-று. மெய்ப்பாடு - நகை; பயன் - நடுங்கநாடிக் கரவுநாடியுணர்தல்.

ஆவாவென்பது, அயனும் அரியும் தில்லையம்பலத்திற் சென்று வணங்குமா றறிந்திலரென்னுங் கருத்தினராகலின், அருளின்கட்குறிப்பு. அந்தோவென்பது இரக்கத்தின்கட்குறிப்பு. இறுதிக்கண் ஆவாவென்பது வியப்பின்கட் குறிப்பு. (எரு)

நடுங்கநாட்டம் முற்றிற்று.

மடற்றிறம்,

என்பது, நயங்கூட்டவும் தலைமகள் நாணத்தால் தன்குறை கூறமாட்டாது நிற்ப, இனியிவள் இறந்துபடவுங் கூடுமெனவுட்கொண்டு, தலைமகனுடன் சொல்லாடத்துணிந்த பாங்கி, தானும் பெருநாணினளாதலின் பின்னும் அவன் குறையுறவேண்டி நிற்கு நிலைமைக்கண், தலைமகன்சென்று என்குறை நின்னால் முடியுமெனக்கருதி நின்னைவந்திரந்தேன், அது நின்னால் முடியாதாயின், மடலூர்ந்தாயினும் அக்குறையை முடித்துக்கொள்வேனெனப் பாங்கிக்கு மடலூருந்திறத்தைக் கூறுதல்.

இக்கிளவி ஒன்பது துறைகளையுடைத்து. அவைவருமாறு:—

ஆற்றாதுரைத்த லுலகின்மேல்வைத்தல், தன்றுணிபுரைத்த லொடுவகையுரைத்தல், அருளாலரிதெனல் நடையாலரிதெனல், அவயவமெழுத லரிதெனவிலக்கல், உடம்படாதுவிலக்க லுடம்பட்டுவிலக்கல், இடம்படவொன்பதும் செப்புங்காலை, மடம்படுமுலைமேல் மடலாகும்மே.

ஆற்றாதுரைத்தல்.

மல்லற்றிரள் வரைத்தோளவன்
சொல்லாற்றாது சொல்லியது.

(எ-து.) வளப்பம் பொருந்திய திரண்டமலைபோலுந் தோளையுடைய தலைமகன் (தன்வருத்தத்தை) சொல்லுதற்கும் ஆற்றாதுரைத்தது.

பொருளாவெனைப்புகுந் தாண்டுபுரந்தரன் மாலயன்பா
லிருளாயிருக்குமொளிநின்ற சிற்றம்பலமெனலாஞ்
சுருளார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்துடியிடையீ
ரருளாதொழியினொழியா தழியுமென்னாருயிரே.

(இ-ள்.) புகுந்து எனை பொருளா ஆண்டு - (தானேவந்து) புகுந்து என்னைப் பொருளாக மதித்து ஆட்கொண்டு,—புரந்தரன்

மால் அயன்பால் இருளாய் இருக்கும் - இந்திரன் திருமால் நான்முகன் (என்னும்) அவர்களிடத்து இருளாயிருக்கின்ற, — ஒளி நின்ற சிற்றம்பலம் எனலாம் - ஒளிதங்கிய திருச்சிற்றம்பலம் என்று சொல்லத்தகும், — சுருள் ஆர் கரு குழல் வெள் நகை செ வாய் துடி இடையீர் - சுருள்பொருந்திய கருமையாகிய கூந்தலினையும் வெண்மையாகிய பல்லினையும் சிவந்த வாயினையும் (உடைய) உடுக்கையையொத்த இடையினையுடையீர்! — அருளாது ஒழியின் - (நீயிர்) அருள் செய்யாதொழியின், — என் ஆர் உயிர் ஒழியாது அழியும் - எனது அருயிரானது தப்பாமலழியும். (அதனான் அருளத்தகும்.) எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமையுணர்த்துதல். (எஅ)

உலகின்மேல்வைத்துரைத்தல்

புலவேலண்ணல் புனைமடலேற்
றுலகின்மேல்வைத் துய்த்துரைத்தது.

(எ - து.) (ஆற்றாமைகூறி அதுவழியாகநின்று) நிணந்தங்கிய வேலையுடைய தலைமகன், அலங்கரிக்கின்ற மடலின்வயத்தனாய் உலகின்மேல் வைத்துக் குறிப்பாலுரைத்தது.

காய்சினவேலன்ன மின்னியல்கண்ணின் வலைகலந்து
வீசினபோதுள்ள மீனிழந்தார்வியன் றென்புலியூ
ரீசனசாந்துமெருக்குமணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சினமாவெனவேறுவர் சீறூர்ப்பனைமடலே.

(இ-ள்.) காய் சினம் வேல் அன்ன மின் இயல் கண் வலை கலந்து வீசின போது - காய்கின்ற கோபத்தையுடைய வேலையொத்த ஒளியியலும் விழியாகிய வலையை (மகளிர்) கலந்து வீசின காலத்து,—உள்ளம் மீன் இழந்தார் - மனமாகிய மீனை இழந்துபோன ஆடவர்கள்,—வியன் தென் புலியூர் ஈசன சாந்தும் எருக்கும் அணிந்து - (அதைப்பெறுதற்கு வேறுபாயமில்லாத

விடத்து) பெரிய தென்றிசையிலுள்ள தில்லை நகரத்திலிருக்கின்ற ஈசனுடைய திருநீற்றையும் எருக்கம்பூவையும் அணிந்துகொண்டு,— ஓர் கிழி பிடித்து - ஒரு படத்தை (கையில்) பிடித்து,—பாய் சினம் மா என பனைமடல் சிறு ஊர் ஏறுவர் - பாய்கின்ற கோபத்தையுடைய குதிரையென்னும்படி பனைமடலைச் சிறிய ஊரினிடத்து ஏறுவார்கள். எ - று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - ஆற்றாமை யுணர்த்துதல்.

மின்னியல்வேலென்று கூட்டினு மமையும். இன் அல்வழிச் சாரியை. கண்ணொன் வலையென்பதூஉம் பாடம். சாந்தும் எருக்குமென இரண்டாகலின் ஈசனவெனப் பன்மையுருபு கொடுத்தார். உள்ளமிழந்தவர் உள்ளம்பெறுமளவும் தம்வயமன்றி மடலின்வயத்தராய் நிற்றலான் கருவிகருத்தாவாகக் கொள்க.()

தன்றுணிபுரைத்தல்.

மானவேலவன் மடன்மாமி சை
யானுமேறுவ னென்னவுரைத்தது.

(எ-து.) (முன் உலகின்மேல்வைத்து அதுவழியாத நின்று) மானமாகிய குணத்தையுடைய வேலேந்திய தலைமகன், மடலாகிய குதிரையின்மேல் யானுமேறுவேனென்று (தன் துணிபை) சொல்லியது.

விண்ணைமடங்கவிரிநீர்பரந்துவெற்புக்கரப்ப
மண்ணைமடங்கவருமொருகாலத்துமன்னிநிற்கு
மன்னன்மடங்கலதளம்பலவனருளிலர்போற்
பெண்ணைமடன்மிசையான்வரப்பண்ணிற்றொர்பெண்கொடியே

(இ-ள்.) விண் மடங்க - விண்ணொடுங்கவும்,—விரிநீர் பரந்து வெற்பு கரப்ப மண் மடங்க - கடலானது பரவுதலால் மலையானது மறைய பிரிதிவியொடுங்கவும்,— வரும் ஒருகாலத்தும் மன்னி நிற்கும் - வருகின்ற ஊழிமுடிவாகிய வொருகாலத்திலும் நிலைபெற்றுநிற்கின்ற,—மன்னன் - இறைவன்,—மடங்கல் அதள் அம்பலவன் - சிங்கத்தினது தோலையுடைய திருச்சிற்றம்பலவன். — அருளிலர்போல் - (அவனது) அருளில்லாதாரைப் போல,—பெண்ணை மடல் மிசை யான் வர - (பிறரிகழ) பனைமடலின்மேல் யான் வரும்படி,— ஓர் பெண் கொடி - ஒரு பெண்கொடியானது,—பண்ணிற்று - (அறிவின்மையை) செய்தது. எ - று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - ஆற்றாமை யுணர்த்துதல்.

விண்ணை மண்ணை யென்புழி ஐகாரம் அசைநிலை. மடங்குதல் தத்தங் காரணங்களி னொடுங்குதல். மடங்கல் புலியெனினு மமையும். (எரு)

மடலேறும்வகையுரைத்தல்.

அடல்வேலவ னழிவுற் று
மடலேறும்வகை யுரைத்தது.

(எ-து.) (துணிபுரைக்கக்கேட்ட பாங்கிக்குப் பின்னும்) வெற்றிபொருந்திய வேலையுடைய தலைமகன், வருந்தி மடலேறும் வகையைக் கூறியது.

கழிகின்றவென்னையுநின்றநின்கார்மயிறன்னையும்யான்
கிழியொன்றநாடியெழுதிக்கைக்கொண்டென்பிறவிகெட்டின்
றழிகின்றதாக்கியதாளம்பலவன்கயிலையந்தேன்
பொழிகின்றசாரலஞ்சீறூர்த்தெருவிடைப்போதுவனே.

(இ-ள்.) கழிகின்ற என்னையும் - இயல்புகழியாநின்ற என்னையும்,—நின்ற நின் கார்மயில் தன்னையும் - தன்னியல்பாய்நின்ற உன்னுடைய கார்காலத்து மயிலையொத்தவளையும்,—யான் - நான்,—கிழி ஒன்ற நாடி எழுதி கை கொண்டு - படத்திற்பொருந்த ஆராய்ந்து சித்திரித்து (அதை) கையிற்கொண்டு,—என்பிறவி இன்று கெட்டு அழிகின்றதாக்கிய தாள் அம்பலவன் - என்னுடைய பிறவியை இப்பொழுது கெடுதலடைந்து அழியாநின்ற

தாகச்செய்த திருவடியையுடைய சிற்றம்பலவனுடைய, — அருலை அம் தேன் பொழிகின்ற சாரல் - கைலைமலையின் அழகிய தேனைச்சொரிகின்ற சாரலின்கணுள்ள, — நும் சிறு ஊர் தெருவிடை போதுவன் - உம்முடைய சிறிய ஊரின் தெருவினிடத்துத் திரிவேன். (பின் வருவதுகாண்.) எ-று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - ஆற்றாமை யுணர்த்துதல்.

என்னையும் நின்கார்மயில் தன்னையும் மடலிடத் தெழுதே னென்ற தென்னையெனின் - கார்மயிலை மடலெழுதிக் கையிற் கொண்டால் உரையாடுகையின்றி இவனும் ஓவியமாகலின், மடலின் தலையிலே தன்னுருவையும் தன்பேரையும், அவளுருவையும் அவள் பேரையும், எழுதுகையாம். பிறத்தற்குக் காரணமாகிய மலங்கெட்டும் யாக்கைக்குக் காரணமாகிய மலத்துடனே விளைந்து நின்றமையின், அழிகின்றதென நிகழ்காலத்தாற் கூறினர். (எசு)

அருளாலரிதெனவிலக்கல்.

அடல்வேலண்ண லருளுடைண்மயின்
மடலேற்றுனக் கரிதென்றது.

(எ - து.) (மடலேறும் வகையை வெளிப்படக் கூறக்கேட்ட பாங்கி) வெற்றிபொருந்திய வேலை யுடைய தலைமகனே! நீ அருளுடையா ளுதலால் மடலேறுதல் உனக்கரிதா மென்றது.

நடனாம்வணங்குந்தொல்லோனெல்லைநான்முகன்மாலறியாக்
கடனாமுருவத்தரன்றில்லைமல்லற்கண்ணார்ந்தபெண்ணை
யுடனாம்பெடையொடொண்சேவலுமுட்டையுங்கட்டழித்து
மடனாம்புனைதரின்யார்கண்ணதோமன்னவின்னருளே.

(இ-ள்.) நடன் - நடேசன்,—நாம் வணங்கும் தொல்லோன் - நாம் வணங்குகின்ற பழையோன்.—நான்முகன் மால் எல்லை அறியா கடனாம் உருவத்து அரன் - பிரமனும் நாரணனும்

(முடியுமடியுமாகிய) எல்லைகளை அறியாத இயல்பாகிய வடிவையுடைய அரன்,—தில்லை - (அவனது) தில்லை நகரத்தின்கண் (இருக்கின்ற),—மல்லல் கண் ஆர்ந்த பெண்ணை உடனாம் பெடையொடு ஒண் சேவலும் முட்டையும் கட்டு அழித்து - வளப்பத்தையுடைய கண்ணிற்கு நிறைந்த பனைமரத்தின்கண் உடனிருக்கின்ற பெட்டையுடனே ஒளியையுடைய சேவலையும் முட்டையையும் காவலையழித்து, — மடல் நாம் புனைதரின் - மடலினை நாம் (குதிரையாகச்) செய்யின், — மன்ன - அரசனே! — இன் அருள் யார்கண்ணதோ - இனிய அருளானது (இவ்வுலகத்தில்) யாவரிடத்ததாம்? எ-று. மெய்ப்பாடு - நகை; பயன் - மடல் விலக்குதல்.

அறியாவுருவமென இயையும். அறியாத அக்கடனாகா முருவமெனினுமமையும். மடல்விலக்கித் தழீஇக்கொள்கின்றுளாதலின், நாமெனவுளப்படுத்துக் கூறினள். (எஎ)

மொழிநடையெழுத லரிதெனவிலக்கல்.

அவயவமரிதி னெண்ணதீட்டினும்.
இவளிவை தீட்ட லியலா தென்றது.

(எ-து.) (அருளெடுத் துரைத்து விலக்கவும் தன்வழி நில்லாமை கண்ட பாங்கி, அவன்வழியொழுகி விலக்குவாளாக) தலைமகனே! அவயவம் அருமையின் எழுதுவையாயினும் (அவள் மொழிநடையாகிய) இவற்றை எழுதுதல் முடியா தென்றது.

அடிச்சந்தமால்கண்டிலாதனகாட்டிவந்தாண்டுகொண்டென்
முடிச்சந்தமாமலராக்குமுன்னோன்புலியூர்புரையும்
மடிச்சந்தயாழ்கற்றமென்மொழிக்கன்னியனநடைக்குப்
படிச்சந்தமாக்கும்படமுளவோநும்பரிசகத்தே.

(இ - ள்.) சந்தம் மால் கண்டிலாதன அடி காட்டி - வேதமும் திருமாலும் கண்டறியாதனவாகிய திருவடிகளை (எனக்

குக்) காண்பித்து,—வந்து ஆண்டுகொண்டு என் முடி சந்த மா மலர் ஆக்கும் - (தானே) வந்து ஆட்கொண்டு எனது தலையை (அவ்வடிகளை) சிறந்தையுடைய பெரிய பூவாகச்செய்யும்,— முன்றோன் புலியூர் புரையும் - முதல்வனாகிய இறைவனது புலியூரை யொக்கும், — வடி சந்தம் யாழ் கற்ற மென்மொழி கன்னி - சிறந்த சந்தத்தையுடைய யாழோசையின் தன்மையைக்கற்ற மெல்லிய மொழியையுடைய மாதினது, — அன்னம் நடைக்கு - அன்னத்தினது நடைபோலும் நடைக்கு, — படம் சந்தம் ஆக்கும் படம் உளவோ - அழகு கருதப்படும் இயல்பையுடையதாகப் பண்ணப்படும் படங்கள் உள்ளனவோ?—நும் பரிசகத்து - உமது சித்திரச்சாலையினிடத்து. எ - று. மெய்ப்பாடு - நகை; பயன் - மடல் விலக்குதல். (எஅ)

அவயவமெழுதலரிதெனவிலக்கல்.

அவ்வயவ மான வை
யிவையிவை யென்ற து.

(எ-து.) (அம்மொழிநடைகளிருக்க) இன்னின்ன அவயவங்கள் தாம் எழுதமுடியுமோ வென்றது.

யாழுமெழுதியெழின்முத்தெழுதியிருளின்மென்பூச்
சூழுமெழுதியொர்தொண்டையுந்தீட்டியென்றொல்பிறவி
யேழுமெழுதாவகைசிதைத்தோன்புலியூரிளமாம்
போழுமெழுதிற்றொர்கொம்பருண்டேற்கொண்டுபோதுகவே.

(இ-ள்.) யாழும் எழுதி - (மொழியாக) வீணையையுமெழுதி,— எழில் முத்து எழுதி - (பற்களாக) அழகையுடைய முத்துக்களையுமெழுதி,—இருளின் மென் பூ சூழும் எழுதி - (குழலாக) இருளின்கண் மெல்லிய பூக்களானியன்ற மாலையுமெழுதி, — ஓர் தொண்டையும் தீட்டி - (வாயாக) ஒரு தொண்டைக்கனியையும் எழுதி,—என் தொல் பிறவி யேழும் எழுதாவகை சிதைத்தோன் புலியூர் இள மாம்போழும் எழுதிற்று - (கண்ணாக) என்னுடைய பழமையாகிய பிறப்புக்களேழையும் எழுதாவிதம் கெடுத்தவனது புலியூரிடத்துள்ள மாம்பிஞ்சின் பிளவையும் எழுதப்பட்ட,—ஓர் கொம்பர் உண்டேல் - ஒரு பூங்கொம்பானது உண்டாயிருந்தால்,—கொண்டு போதுக - அதனைக் கைக்கொண்டு (எம்மூர்க்கண்) மடலேற வாரும். எ-று. மெய்ப்பாடு நகை; பயன் - மடல் விலக்குதல்.

முத்துமென்னுமும்மை விகாரத்தாற் றொக்குநின்றது. (எகூ)

உடம்படாதுவிலக்கல்.

அடிபடையண்ண லழிதுயரொழிகென
மடநடைத்தோழி மடல்விலக்கிய து.

(எ-து.) (அவயவம் எழுதலாகாமையை யெடுத்துக்காட்டிய) மடப்பம் பொருந்தியநடையினையுடைய பாங்கி, அடுகின்ற படையினையுடைய தலைமகனே! வருந்துகின்ற துயரம் ஒழிகவென்று மடலேறுதலைத் தானுடம்படாது விலக்கியது.

ஊர்வாயொழிவாயுயர்பெண்ணைத்திண்மடலின்குறிப்புச்
சீர்வாய்சிலம்பதிருத்தவிருந்திலைசீர்தில்லைக்
கார்வாய்குழலிக்குன்றரவோதிக்கற்பித்துக்கண்டா
லார்வாய்தரினறிவார்பின்னைச்செய்கவறிந்தனவே.

(இ - ள்.) உயர் பெண்ணை திண் மடல் ஊர்வாய் ஒழிவாய் - உயர்ந்த பனையினது வலிமையாகிய மடலையூர்வாய் அன்றியொழிவாய்!—சீர் வாய் சிலம்ப நின்குறிப்பு - சிறப்புவாய்ந்த மலையையுடையாய்! உன்னுடைய கருத்தை,—திருத்த இருந்திலம் - (யாம்) திருத்தம்படி இருந்திலேம், — சீர் தில்லை கார் வாய் குழலிக்கு - சீரார் தில்லைநகரத்தின்கண்ணுள்ள கருமைநிறம் பொருந்திய கூந்தலையுடையவளுக்கு,—உன் தரவு ஓதி கற்பித்து கண்டால் வாய்தரின் ஆர் அறிவார் - உன் விருப்பத்

தைச் சொல்லி (இதற்கு அவள் உடம்படச் சிலவற்றைக்) கற் பித்துப் பார்த்தால் இடந்தருமாயினும் யாவர் அறிவார்கள்,— பின்னை அறிந்தன செய்க - (இடங்கொடாளாயின்) பின்பு நீ அறிந்தவைவற்றைச் செய்வாயாக. எ - று. மெய்ப்பாடு - பெரு மிதம்; பயன் - தலைமகனை யாற்றுவித்தல். (௬௦)

உடம்பட்டுவிலக்கல்.

அரவருநுண்ணிடைக் குரவருகூந்தலென்
உள்ளக்கருத்து விள்ளாளென்றது.

(எ - து.) (முன் உடம்படாது பொதுப்படவிலக் கியபாங்கி,) அரவுபோலும் நுட்பமாகிய இடையை யையும் குராக்காயை யொத்த கூந்தலையு முடைய தலைமகள் என்னுள்ளத்திற் கொண்ட எண்ணத் தைத் தடுக்காளென்று (பின் உடம்பட்டுவிலக்கிக்) கூறியது.

பைந்நாணரவன்படுகடல்வாய்ப்படுநஞ்சமுதா
மைந்நாண்மணிகண்டன்மன்னும்புலியூர்மணந்தபொன்னிம்
மொய்ந்நாண்முதுதிரைவாயானழுந்திடுமென்னின்முன்னு
மெய்ந்நாளிதுமதுவார்குழலாட்கென்கணின்னருளே.

(இ - ள்.) பை நாண் அரவன் - படத்தையுடைய பாம்பா கிய நாணினையுடையவன்,— படு கடல்வாய் படு நஞ்சு அமுதாம் மை நாண் மணி கண்டன் - ஒலிக்குங் கடலிடத் துண்டாகி ய விடமானது அமிர்தமாகும் மையானது நாணுகின்ற நீலம ணியையொத்த கண்டத்தையுடையவன்,— மன்னும் புலியூர் மணந்த பொன் - (அவன்) தங்கும் புலியூரைப்பொருந்திய பொன்னையொப்பாள்,— நாள் மொய் இ முது திரைவாய் யான் அழுந்திடும் என்னின் முன்னும் - காலில்மூழ்கும் பெரு மையையுடைய இந்த முதிய கடலினிடத்து யானழுந்தினேனா யினும் (தான்) என்னின்முற்பட்டு (அழுந்துவாள்),— மது வார்

குழலாட்கு என்கண் இன் அருள் இந்நாள் இது - தேனையுடைய நெடிய கூந்தலையுடையாளுக்கு என்னிடத்துண்டாகிய இனிய அருள் இப்பொழுது இத்தன்மைத்தா யிராநின்றது. எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகனை யாற்றுவித்தல்.

மைந்நாணும் கண்டமென் இயையும். மொய் - வலி ஈண்டு பெருமைமேல் நின்றது. நாள் - புண்ணியகாலம். குற்றேவல் செய்வாரிடத்து பெரியோர்செய்யும் அருள் எக்காலத்தும் ஒரு தன்மைத்தாய் நிகழாதென்னுங் கருத்தான் இந்நாளிதுவென் றாள். எனவே தலைமகளது பெருமையும் தன்முயற்சியது அரு மையுங் கூறியவாறாயிற்று. (௬௧)

மடற்றிறம் முற்றிற்று.

குறைநயப்புக்கூறல்,

என்பது, தலைமகனை மடல்விலக்கிக் குறைநேர்ந்தபாங்கி, தலைமகளைக் குறைநயப்பிக்கத் தலைமகளது குறை கூறுகிற்றல்.

இக்கிளவி எட்டுத்துறைகளை யுடைத்து. அவையருமாறு:—

குறிப்பறிதலோடு மென்மொழிகூறல், விரவிக்கூற லறியாள் போறல், வஞ்சித்துரைத்தல் புலந்துகூறல், வன்மொழிகூறல் மனத்தொடுநேர்தல், சொன்னவிருநான்கும் துறைகுறைநயப் பென, மன்னியபொருளில் வகுத்திசினோரே.

குறிப்பறிதல்.

நறைவளர்கோதையைக் குறைநயப்பித்தற்
குள்ளறிகுற்றவொள் ளிழையுரைத்தது.

(எ-து.) தேன்தங்கிய மலர்மாலையையுடைய தலை மகளைக் குறைநயப்பித்தற்கு (அவளது) உள்ளக்குறி ப்பை அறியவேண்டி ஒள்ளிய பூணணிந்த பாங்கி, (தானொன்று மறியாதவள்போலச்) சொல்லியது.

தாதேய்மலர்க்குஞ்சியஞ்சிறைவண்டு தன்றேன்பருகித்
தேதேயெனுந்தில்லையோன்சேயெனச்சினவேலொருவர்
மாதேபுனத்திடைவாளாவருவர்வந்தியாதுஞ்சொல்லார்
யாதேசெயத்தக்கதுமதுவார்குழலேந்திழையே.

(இ - ள்.) தாது ஏய் மலர் குஞ்சி - தாதுகள் பொருந்திய பூவையணிந்த (தில்லைவாழ்வாரது) குடுமிகளில், — அம் சிறை வண்டு தன் தேன் பருகி தேதே எனும் - அழகிய சிறைகளையுடைய வண்டுகள் தண்ணியதேனை யுண்டு தேதேயென்று பாடும், — தில்லையோன் சேயென - தில்லையை யுடையானுடைய புதல்வனாகிய முருகக்கடவுளை யொப்ப, — சினம் வேல் ஒருவர் - கோபம்பொருந்திய வேலையுடைய ஒருவர், — மாதே - தையலே! — புனத்திடை வாளா வருவர் - (நம்) தினைப்புனத்தினிடத்தில் வாளாவருவார், — வந்து யாதும் சொல்லார் - வந்து யாதொன்றுஞ் சொல்லார், — மது வார் குழல் ஏந்திழையே - தேனிறைந்து நீண்ட கூந்தலையுடைய ஏந்திழாய்! செயத்தக்கது யாது - (அவரிடத்து நாம்) செய்யத்தக்கது யாது? (யாதென் றறிகிலேன்.) எ - று. மெய்ப்பாடு - இளிவரலைச் சார்ந்த பெருமிதம்; பயன் - தலைமகளை மெலிதாகச்சொல்லிக் குறையயப்பித்தல்.

குஞ்சி, தில்லைவாழ்வார்குஞ்சி - மலரினது குஞ்சியென விரித்து அல்லியென்றுரைப்பினு மமையும். (௮௭)

மென்மொழியாற்கூறல்.

ஒளிறுறுவேலவன் றளர்வுறுகின்றமை
இன்மொழியவட்கு மென்மொழிமொழிந்தது.

(எ - து.) (உள்ளக்குறிப்பறிந்தபாங்கி, அதுவழியாகவின்று) ஒளிசெய்கின்ற வேலையுடைய தலைமகன் வருந்தித் தளர்கின்றதை இன்சொல்லையுடைய தலைமகளுக்கு மென்மையாகிய சொல்லாற் கூறியது.

வரிசேர்தடங்கண்ணிமம்மர்கைம்மிக்கென்னமாயங்கொலோ
எரிசேர்தளிரன்னமேனியனீர்ந்தழையன்புலியூர்ப்
புரிசேர்சடையோன்புதல்வன்கொல்பூங்கணைவேள்கொலென்ன
தெரியேமுரையான்பிரியானொருவனித்தேம்புனமே. [ந்

(இ - ள்.) வரி சேர் தடம் கண்ணி - வரிகள்பொருந்திய பெரியகண்ணை யுடையாய்! — ஒருவன் மம்மர் கைம்மிக்கு எரி சேர் தளிர் அன்ன மேனியன் - ஒருத்தன் மயக்கம் கைம்மிகுந்து நெருப்பைச்சேர்ந்த தளிரையொக்கும் உடலை யுடையவனுமாய், — ஈரம் தழையன் - குளிர்ச்சிபொருந்திய தழையை யுடையவனுமாய், — இ தேம் புனம் பிரியான் - இந்த இனிமையான புனத்தைப் பிரிகிலன், — உரையான் - (ஒன்றுஞ்) சொல்லுகின்றிலன் (அவனை,) — புலியூர் புரி சேர் சடையோன் புதல்வன்கொல் பூ கணை வேள்கொல் என்ன தெரியேம் என்ன மாயங்கொல் - புலியூரிலுள்ள கட்டுதல்சேர்ந்த சடையையுடைய இறைவனது புதல்வனாகிய முருகனோ பூவாகிய அம்பையுடைய மன்மதனோ என்று (யாம்) அறியோம். ஈது என்ன மாயமோ. எ - று. மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம்; பயன் - தலைமகளை மெலிதாகச் சொல்லிக் குறையயப்பித்தல்.

சடையோன் புதல்வன்கொல் என்றதனால் நம்மை யழிக்க வந்தானோ வென்றும், பூங்கணை வேள்கொல் என்றதனால் நம்மைக் காக்கவந்தானோவென்றும் கூறியவாறாயிற்று. (௮௮)

விரவிக்கூறல்.

வன்மொழியின்மன மெலிவதஞ்சி
மென்மொழிவிரவி மிகுத்துரைத்தது.

(எ - து.) வன்மையாகிய சொல்லால் (தலைமகள்) மனமெலியா நிற்பதற்குப்பயந்து (பாங்கி)மென்மையாகிய சொற்களும் கலந்து (தலைமகனது)ஆற்றாமை மிகுத்துக் கூறியது.

நீகண்டனையெனின்வாழலைநேரிழையம்பலத்தான்
செய்கண்டனையன்சென்றாங்கோரலவன்றன்சீர்ப்பெடையின்
வாய்வண்டனையதோர்நாவற்கனிநல்கக்கண்டு
பேய்கண்டனையதொன்றாகிநின்றானப்பெருந்தகையே.

(இ-ள்.) நேரிழை - நேர்மையையுடைய அணியை யுடையாய்,! — அம்பலத்தான் செய்கண்டனையன் - சிற்றம்பலத்திலுள்ள இறைவனுடைய புதல்வனைக்கண்டாற் போன்றிருக்குமொருவன்,— ஆங்கு ஓரலவன் தன் சீர் பெடையின் வாய் வண்டனையது ஓர் நாவற்கனி சென்று நல்க கண்டு - அவ்விடத்து ஒரு நண்டானது தன்னழகிய பெடையின் வாயினிடத்து வண்டை யொத்ததாகிய ஒரு நாவற்பழத்தைப் போய், மிகவுங் கொடுக்கப் பார்த்து, — அப் பெருந்தகை - அந்தப் பெருந்தன்மை யுடையோன்,— பேய் கண்டனையது ஒன்றாகி நின்றான் - ஒரு வேறுபாட்டை யுடையனாகி நின்றனன்,— நீ கண்டனை யெனின் வாழலை - (அந்நிலையை) நீ கண்டாயானால் (உயிர்) வாழமாட்டாய். எ-று. மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம்; பயன் தலைமகனை மெலிதாகச் சொல்லிக் குறையயிர்த்தல்.

பேய்கண்டனைய தென்பதற்குப் பேயைக்கண்டாற் போல்வதோர் வேறுபாடென் றுரைப்பினு மமையும். (௮௬)

அறியாள்போறல்.

அறியாள் போன்று
குறியாள் கூறியது.

(எ-து.) (விரவிக்கூறக்கேட்ட) தலைமகள் அறியாதாள்போல (இதனைக்) குறியாதவளாகித் (தான் வேறொன்று) சொல்லியது.

சங்கந்தருமுத்தியாம்பெறவான்கழிதான்கெழுமிப்
பொங்கும்புனற்கங்கைதாங்கிப்பொலிகலிப்பாறுலவு
துங்கமலிதலையேந்தலினேந்திழைதொல்லைப்பன்மா
வங்கமலிகலிநீர்தில்லைவானவனேர்வருமே.

(இ-ள்.) சங்கம் தரு முத்து யாம் பெற - சங்குகள் தருகின்ற முத்துக்களை நாம் பெற்றுக்கொள்ள,— வான் கழி தான் கெழுமி - பெரிய கழிகளைத் தான் பொருந்தி,— பொங்கும் புனல் கங்கை தாங்கி - பொங்குகின்ற நீரையுடைய கங்கையைத் தாங்கிக்கொண்டு, — பொலி கலி பாறு உலவு - மிகுந்த ஆரவாரத்தையுடைய பாறிய மரக்கலங்க ளுலாவுகின்ற, — துங்கம் மலி தலை ஏந்தலின் - அலைகளின் மிகுதியையுடைத்தாகலின், — சங்கம் தரும் முத்தி யாம் பெற - (திருவடிக்கணுண்டாகிய) பற்றுத் தருகின்ற முத்தியை நாம் பெறும்படி, — வான் கழி தான் கெழுமி - ஆகாயத்தைக் கடந்துநின்ற தான் (ஒருவடிவுகொண்டுவந்து) பொருந்தி,— பொங்கு புனல் கங்கை தாங்கி - பொங்குகின்ற நீரையுடைய கங்கையைச்சூடி, — பொலி கலி பாறு உலவு - மிக்க ஆரவாரத்தையுடைய பாறிய பறவைகள் சூழாநின்ற, — துங்கம் மலி தலை ஏந்தலின் - உயர்வுமிக்க தலையோட்டை யேந்துதலின்,— ஏந்து இழை - தாங்குகின்ற அணியையுடையாய்!— தொல்லை பல் மா வங்கம் மலி கலி நீர் - பழையதாகிய பலபெரிய மரக்கலங்கள் மிகப்பெற்ற கடல், — தில்லை வானவன் - தில்லைநகரத்திலுள்ள இறைவனுக்கு,— நேர் வரும் - ஒப்பாகும். எ-று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - அறியாள் போறல்.

தலைமகள் பெருநாணின ளாகையாலும் இவ்வொழுக்கம் களவொழுக்க மாகையாலும் முன்பாங்கியாற் கூறப்பட்ட விறைக்களுக்கு வெளிப்படையாக மறுமொழி கொடாது, ஓர்ந்து கூட்டுதல் மறுமொழியாம்படி கடலின்மேல் வைத்துக்கூறினள். அஃதென்னையெனின் பெறுதற்கரிய சங்குதருகிற முத்தை

காம் பெறுவான் எளிதாகக் கடல் பெரிய கழியைவந்து பொருந்தினாற்போல, முன்னர் நீ புரிசேர்சடையோன் புதல்வனென்றும் பூங்கணைவேள் என்றும் உயர்த்திச் சொன்னவையெல்லாம் அவனுக்குரியன்; அப்பெரியோன் தன்மாட்டுண்டான புணர்ச்சியான பேரின்பத்தை நாம் பெறுகை காரணமாக இவ்வளம் எளிவந்து சேர்ந்தான், ஆகலான் இனி உனக்கு வேண்டியது செய்வாயாக வென மறுமொழியாயிற்று. வான்கழி - சிவலோகமெனினு மமையும். (௮௬)

வஞ்சித்துரைத்தல்.

நெஞ்சநெகிழ்வகை வஞ்சித்திறைவி வை
செஞ்சடையோன்புகழ் வஞ்சிக்குரைத்தது.

(எ - து.) அறியாள்போன்று குறியாது குறித்து (தலைமகள், நாணினாற் குறைநேரமாட்டாது வருந்திப் பின்னும்) மனநெகிழும்வகை மறுமொழியை வெளிப்படையாகக் கொடாமல் இவை இவையென்று செம்மையாகிய சடையையுடைய இறைவனது புகழினைக் கொடிபோல்வாளாகிய பாங்கிக்குக் கூறியது.

புரங்கடந்தானடிகாண்பான்புவிவிண்டுபுக்கறியா
திரங்கிடெந்தாயென்றிரப்பத்தன்னீரடிக்கென்னிரண்டு
கரங்கடந்தானொன்றுகாட்டமற்றாங்கதுங்காட்டிடென்று
வரங்கிடந்தான்றில்லையம்பலமுன்றிலம்மாயவனே.

(இ-ள்.) புரம் கடந்தான் அடி காண்பான் புவி விண்டு புக்கு அறியாது - முப்புரங்களையும் வென்ற இறைவனுடைய அடிகளைக் காணவேண்டி (நெடியல்லா நெடியால்) நிலத்தைப்பிளந்து புகுந்து காணாமல்,—எந்தாய் இரங்கிடு என்று இரப்ப - (பின்வழிபட்டுநின்று) எந்தந்தையே! அருள்செய்வாயென் றிரக்க,— தன் ஈரடிக்கு என் இரண்டு கரங்கள் தந்தான் - தன்னிரண்டு

திருவடிகளையும் வணங்குதற்கு என்னிரண்டு கைகளையும் தந்தருளிய (அவ்விறைவன்),— ஒன்று காட்ட - ஒரு திருவடியைக் காண்பிக்க,—மற்றாங்கதும் காட்டிடு என்று - மற்றொரு திருவடியையும் காட்டல்வேண்டுமென்று,— தில்லையம்பலம் முன்றில் அ மாயவன் - தில்லையினிடத்துள்ள சிற்றம்பலத்தின் முற்றத்தில் அத்திருமால்,— வரம் கிடந்தான் - வரம்பெறக் கிடந்தான்போலும். எ - று. மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன் - வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல்.

மாயோன் முதலாயினோர்க்கு அவ்வாறரியவாயினும் எம்மனோர்க்கு இவ்வாறெளி வந்தானென்னுங் கருத்தால் தன்னடிக்கென்னிரண்டு கரங்கள் தந்தானென்றார். இன்னும் வரங்கிடக்கின்றானாகலின், முன்கண்டது ஒன்றுபோலு மென்பது கருத்து. இது பாங்கிக்குத் தலைமகன் மறுமொழியாகக் கூறியவாறென்னையெனின், மற்றாங்கது காட்டிடென்று மால்வரங்கிடந்தாற்போலத், தலைமகன் முன்னாட் பாங்கற்கூட்டம் பெற்றுப் பின் நின்னுடைய கூட்டம்பெறுகை காரணமாக நின்னிடத்து வந்திரந்து குறையுறா நின்றான் என்பதாம். (௮௭)

புலந்துகூறல்.

திருந்தியசொல்லிற் செவ்விபெறாது
வருந்தியசொல்லின் வகுத்துரைத்தது.

(எ - து.) (தலைமகளிடத்து) வெளிப்படையாகிய சொற்களால் மறுமொழிபெறாது, (பாங்கி தலைமகளை நோக்கி நீ சொல்லத்தகும் காதற்பாங்கியோர்க்கு வெளிப்படச் சொல்லென்று) தன் வருத்தத்தை வெளிப்படுத்துஞ் சொல்லால் கேட்குமளவும் புலந்து கூறியது.

உள்ளப்படுவனவுள்ளியுரைத்தக்கவர்க்குரைத்து
மெள்ளப்படிறுதுணிதுணியேலிதுவேண்டுவல்யான்

கள்ளப்படிறர்க்கருளாவரன்றில்லைகாணலர்போற்
கொள்ளப்படாதுமறப்பதறிவிலென்கூற்றுக்களே.

(இ - ள்.) உள்ளப்படுவன உள்ளி - (இதன்கண்) ஆராய்ச்சி செய்யப் படுவனவற்றை யாராய்ச்சிசெய்து, — உரைத்தக்கவர்க்கு உரைத்து - வெளிப்படையாகச் சொல்லத்தக்கன நின்காதற் பாங்கியர்க்குச் சொல்லி, — படிறு மெள்ள துணி - (நீ) படிறென்று (நினைத்தவிதனை) மெல்லத் துணிவாய், — துணியேல் - (அன்றித்) துணியாதொழிவாய். — கள்ளம் படிறர்க்கு அருளா அரன் தில்லை காணலர்போல் அறிவிலேன் கூற்றுக்கள் கொள்ளப்படாது - (நெஞ்சில்) களவையுடைய வஞ்சகர்க்குக் கருணை செய்யாத அரனது தில்லை நகரத்தைக் காணாதவரைப்போல அறிவில்லாதேன் சொல்லிய சொற்களைக் கொள்ளத்தகாது, — மறப்பது - (அவற்றை) மறப்பாயாக. யான் வேண்டுவல் இது - யான் விரும்புவது இது. எ - று. மெய்ப்பாடு - இளிவரலைச் சார்ந்த பெருமிதம்; பயன் - வலிதாகச் சொல்லிக் குறையயப்பித்தல்.

தில்லைக்காணலர் பாங்கிக் கூற்றிற்கு உவமை. படிறு - களவு, பொய், வஞ்சம். மறப்பது - வியங்கோள்வினைமுற்று, (அஎ)

வன்மொழியாற்கூறல்.

கடலுலகறியக் கமழலர்த்துறைவன்
மடலேறுமென வன்மொழிமொழிந்தது.

(எ - து.) (புலந்துகூறிய பாங்கி, பின்னும்) கடல் சூழ்ந்த உலகமறிய மணங்கமழ்கின்ற துறையினையுடைய தலைமகன் மடலூர்வானென்று (தலைமகளுக்கு) வன்மொழி கூறியது.

மேவியந்தோலுடுக்குந்தில்லையான்பொடிமெய்யிற்கையி
லோவியந்தோன்றுங்கிழிநின்னெழிலென்றுரையுளதாற்

றூவியந்தோகையன்னாயென்னபாவஞ்சொல்லாடல்செய்யான்
பாவியந்தோபனைமாமடலேறக்கொல்பாவித்ததே.

(இ - ள்.) மெய்யில் அம் தோல் மேவி உடுக்கும் தில்லையான் பொடி - உடலில் (பூசியது) அழகிய தோலை விரும்பிச்சாத்தும் தில்லையானுடைய திருநீறு, — கையில் ஓவியம் தோன்றும் கிழி - கையில் (இருப்பது) சித்திரம்விளங்கும் படம், — நின் எழில் என்று உரை உளது - (அப்படம்) உன்வடிவமென்று உரையுமுள்ளது, — தூவி அம் தோகை அன்னாய் - இறகையுடைய அழகிய மயிலையொத்தவளே! — என்ன பாவம் - இது என்னதீவினை, — சொல்லாடல் செய்யான் - யாதொன்றுஞ் சொல்லான், — பாவி அந்தோ பனை மா மடல் ஏறக்கொல் பாவித்தது - (அவ்வாறிருந்தவாற்றான்) அந்தக்கொடியோன் ஐயோ பனைமரத்தினது பெரிய மடற்குதிரையை ஏறுதற்கோ நினைந்தது. எ - று. மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன் - வலிதாகச் சொல்லிக் குறையயப்பித்தல்.

கிழி என்பது கிழிக்கணெழுதிய வடிவு. தன் குறையுறுதல் கண்டு உயிர்தாங்கலேனாக அதன்மேலும் மடலேறுதலையும் துணிகின்றானென்னுங் கருத்தால் பாவி என்றாள். இதனால் அவனாற்றாமைக்குத் தானாற்றாளாகின்றமை கூறியவாறு. (அஅ)

மனத்தொடுநேர்தல்.

அடல்வேலவ னாற்றானெனக்
கடலமிழ்தன்னவள் காணலுற்றது.

(எ - து.) (மடலூரத் துணியாநின்றானெனக் கேட்ட) கடலமுதுபோன்ற தலைமகள், வெற்றிவேலையுடைய தலைமகன் ஆற்றானென அவனைக் காணவேண்டித் (தன் மனத்தொடுகூறி நேராநிற்றல்.)

பொன்னார்சடையோன்புலியூர்புகழாரெனப்புரிநோ
யென்னாலறிவில்லையானொன்றுரைக்கிலன்வந்தயலார்
சொன்னாரெனுமித்துரிசுதுன்னாமைத்துணைமனனே
யென்னாழ்துயர்வல்லையேற்சொல்லுநீர்மையினியவர்க்கே.

(இ - ள்.) பொன் ஆர் சடையோன் புலியூர் புகழாரென - பொன்போலும் நிறைந்த சடையையுடைய இறைவனது புலியூரைத் துதியாதவரைப்போல (வருந்த),—புரி நோய் என்னால் அறிவில்லை யான் ஒன்று உரைக்கிலன் - (எனக்குப்) புரிந்தநோய் என்னை லறியப்படுவதில்லை (ஆயினும்) யானொன்றுஞ் சொல்லமாட்டேன், — துணைமனனே - (எனக்குத்) துணையாகியமனமே!—வந்து - (இப்பாங்கி) வந்து,—அயலார் சொன்னார் எனும் இ துரிசு - அயலவர் சொன்னாரென்று சொல்லுகின்ற இக்குற்றம்,—துன்னாமை - என்னிடத்துப் பொருந்தாமல், — என் ஆழ் துயர் - (அவராற்றாமை கூறக்கேட்டனாலுண்டாகிய) என்னுடைய ஆழ்ந்த துன்பத்தை,—வல்லையேல் - (உள்ளவாறு சொல்ல) வல்லையானால்,—நீர்மை இனியவர்க்கு - குணத்தையுடைய இனியவர்க்கு,—சொல்லு - (நீ) சொல்வாயாக. எ - று.
மெய்ப்பாடு - அச்சம் ; பயன் - குறை நேர்தல்.

ஆழ்துயர் - ஆழ்தற்கிடமாகிய துயரம், புரிதல் - மிகுதல். சொல்லுநீர்மை யினியவர்க்கு என்பதனால் தன் துயரமும் வெளிப்படக்கூறி மடலால்வருங் குற்றமுந் தன்னிடத்து வராமல் விலக்கச் சொன்னாளாயிற்று. (அஅ)

குறைநயப்புக்கூறல் முற்றிற்று.

சேட்படை.

என்பது, தலைமகனைக் குறைநயப்பித்துத் தன் ஆயவெள்ளத் திற் கூட்டலுறும் பாங்கி, தலைமகனுக்கியைய மறுத்துக் கூறு நிற்றல்.

இக்கிளவி இருபத்தாறு துறைகளை யுடைத்து. அவை வருமாறு:—

தழைகொண்டுசேறல் நகாதுநின்றுமறுத்தல், நிலத்தின்மை கூறல் நினைவறிவுகூறல், படைத்துமொழிதலொடு பணிமதி நுதலியை, எடுத்துகாணுரைத்த லிசையாமைகூறல், செவ்வி யிலையென்றல் சேட்படைநிறுத்தல், அவ்வினியமொழிகீ யவட் குறையென்றல், குலமுறைகிளத்தல் கோதண்டத்தொழில், வலிசொல்லிமறுத்தல் மற்றவர்க்கிரங்கல், சிறப்பின்மைகூறல் சிறியளென்றுரைத்தல், மறைத்தமைகூறி நகைத்துரைசெய் தல், நகைகொண்டுமகிழ்தல் நாணவள்தன்னை, அறியேனென்ற லவயவங்கூறல், கண்ணயந்துரைத்தல் கையுறையெதிர்தல் முகம்புகவுரைத்தல் முகங்கண்டுசேறல், வருத்துரைத்தலொடு வண்டமழைவட்கு, மிகுத்துரைசெய்து விரும்பிக் கொடுத்தல், தழைவிருப்புரைத்தல் ஆகிருபத்தா, றிறைவனார்மலையாயிவை சேட்படையே.

தழைகொண்டுசேறல்.

கொய்ம்மலர்க்குழலி குறைநயந்தபின்
கையுறையோடு காளைசென்ற து.

(எ-து.) கொய்தமலரை யணிந்த கூந்தலையுடைய பாங்கி, குறைநயந்தபின் காளைபோல்வானாகிய தலைமகன் பின்பு கையுறையுடன் சென்றது.

தேமென்கிளவிதன்பங்கத்திறையுறைதில்லையன்னீர்
பூமென்தழையுமம்போதுங்கொள்ளீர்தமியேன்புலம்ப
வாமென்றருங்கொடும்பாடுகள்செய்துநுங்கண்மலராங்
காமன்கணைகொண்டலைகொள்ளவோமுற்றக்கற்றதுவே.

(இ-ள்.) தேம் மென். மொழி தன் பங்கத்து இறை உறை தில்லை அன்னீர் - தேனையொத்த மென்மையாகிய மொழியையுடைய உமையாளது பங்கையுடைய இறைவன் வாழுந்தில்லையை யொப்பீர், — பூ மென் தழையும் அம் போதும் கொள்ளீர் - (யான்கொணர்ந்த) பூவையுடைய மென்மையாகிய தழையையும் அழகிய பூக்களையும் ஏற்றுக் கொள்கின்றிலீர்,—தமியேன் புலம்ப ஆமென்று அரும் கொடும் பாடுகள் செய்து - தனியேன் துக்கிக்க வாகுமென்று பொறுத்தற்கரிய கொடுமையாகிய பாடுகளைச் (செய்யத்தகுமென்று) செய்து, — நும் கண் மலராம் காமன் கணைகொண்டு அலைகொள்ளவோ முற்றக்கற்றது - உங்கள் கண்மலராகின்ற மன்மதனுடைய அம்பைக்கொண்டு அலைத்தலைக் கொள்ளவோ முழுதுங்கற்றது. (நும்மால் அருளு மாறு கற்கப்பட்ட தில்லையோ). எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றுமை யுணர்த்துதல்.

பங்கத்துறை என்பதூஉம் பாடம். மேற்சேட்படை கூறுகின் றமையின் அதற்கியைவுபட ஈண்டும் குறையுறவு கூறினான். ()

சந்தனத் தழைதகாதென்று மறுத்தல்.

> பிறைநுதற்பேதையைக் குறையுறப்பித்தபின்
> வாட்படையண்ணலைச் சேட்படுத்த து.

(எ-து.) பிறைபோலு நெற்றியையுடைய பாங்கியைக் குறையுறப்பித்தபின் வாட்படையையுடைய தலைமகன் (தழையுடன்செல்ல) அவனைச் (சந்தனத் தழைதகாதெனப் பாங்கி), மறுத்துக் கூறியது.

> ஆரத் தழையராப் பூண்டம் பலத்தன லாடியன்பர்க்
> காரத் தழையன் பருளிநின் றோன்சென்று மாமலயத்
> தாரத் தழையண் ணறந்தா லிவையவ னல்குறக்கண் டா
> லாரத் தழைகொடு வந்தா ரெனவரு மையுறவே.

(இ-ள்.) ஆரம் தழை அரா பூண்டு அம்பலத்து அனல் ஆடி - ஆரமாகிய தழைத்த பாம்பையணிந்து சிற்றம்பலத்தின்கண் அனலோடாடி, — அன்பர்க்கு ஆர் தழை அன்பு அருளி நின்றோன் - அன்பராயுள்ளார்க்கு நிறையத் தழைந்த அன்பை யருளிச்செய்து நின்றவன், — சென்ற மா மலயத்து ஆரம் தழை அண்ணல் தந்தால் - சேர்ந்த பெரிய (பொதியின்) மலையிடத்து (உண்டாகிய) சந்தனத் தழைகளை அண்ணல் கொடுத்தால், — இவை அவன் அல்குல் கண்டால் - இத்தழைகளை (பிறர்) அவளது அல்குலினிடத்துப் பார்த்தால், — ஆர் அ தழை கொடுவந்தாரென ஐயுறவு வரும் - யாவர் (ஈண்டில்லாத) அந்தத் தழையைக் கொண்டுவந்தாரென்று சந்தேகம்வரும், (அதனால் இவைகொள்ளேம்.) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

ஆரத்தழையராப் பூண்டவாறென்று ஆரத்தழைத்த அரவெனினு மமையும். அந்தழை என்றது - அம்மலையத்தழை. (௯௩)

நிலத்தின்மை கூறிமறுத்தல்.

> கொங்கலர் தாரோய் கொணர்ந்த கொய்தழை
> எங்குலத் தாருக் கேலா தென்ற து.

(எ-து.) (சந்தனத் தழைதகாதென்றதால் தலைமகன் மற்றொருதழைகொண்டுசெல்ல, பாங்கி,) மணங்கமழும் மலர்மாலையையுடைய தலைமகனே! நீகொண்டெய்திய கொய்தழை (இக்குன்றிலில்லாதபடியால்) எங்குலத்தவருக்கு ஆகா தென்றது.

> முன்றகர்த் தெல்லா விமையோரை யும்பின்னைத் தக்கன் முத்தீச்
> சென்றகத் தில்லா வகைசிதைத் தோன்திருத் தம்பலவன்
> குன்றகத் தில்லாத் தழையண்ண றாக்தாற் கொடிச்சியருக்
> கின்றகத் தில்லாப் பழிவந் துறுமென்றெண் ணுதுமே.

(இ - ள்.) மூன் எல்லா இடையோனையும் தகர்த்து - முன் னர் (யாகத்துக்குப்போன) எல்லாத் தேவர்களையும் அடித் து, — பின்னை சென்று தக்கன் முத்தி அகத்து இல்லாவகை சிதைத்தோன்-பின்பு போய்த் தக்கனுடைய மூன்று தீயையும் குண்டத்தின்கண் இல்லையாம்படி அழித்தவன், — திருந்து அம் பலவன் - திருந்துமாகிய அம்பலத்தை யுடையவன், — குன்ற கத்து இல்லா தழை அன்னைல் தந்தால் - (அவனுடைய) மலை யினிடத்து இல்லாத தழையை அன்னைல் தந்தால், — கொடிச் சியருக்கு இன்று - குறத்தியருக்கு இப்பொழுது, — அகத்து இல்லா பழி வந்து மூடும் என்று என்குதும் - இல்லினிடத்து இல்லாத சிறுமைவந்து மூடிக்கொள்ளுமென்று அஞ்சுகின்றோம். (அதனால் இத்தழை கொணரற்பாலீரல்லீர்). எ-று. மெய்ப்பா டு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன்-செவ்விபெறுதல்.

குன்றகத்தில்லாத்தழை - குறிஞ்சி நிலத்துக்குரிய வல்லாத தழை. முன்றகத்தில்லா வென்பது பாடமாயின், இல்லையாம் வண்ணம் முன்றகத்தென் றுரைக்க. அன்னலென்பது முன் னிலைக்கண்ணும், கொடிச்சியென்பது தன்மைக்கண்ணும் வந் தன. (௬௨)

நினைவறிவு கூறிமறுத்தல்.

மைத்தழைக் கண்ணி மனமறிந் தல்லது
கொய்தழை தக்காய் கொள்ளேனென்றது.

(எ - து.) (அத்தினைத்தில்லாத தழையை மறுத்தத னல் தலைமகன் அத்திணைத்திற்குரிய தழைகொண்டு செல்ல, பாங்கி,) மையிட்ட கண்ணையுடைய தலைமக ளது நினைவறிதல்லாமல் நீ கொய்த தழைதந்தால் கொள்ள அஞ்சுவே மென்றது.

யாழார்மொழிமங்கைபங்கத்திறைவனெறிதிரைநீ
ரேழாயெழுபொழிலாயிருந்தோனின்றதில்லையன்ன

சூழார்குழலெழிற்றொண்டைச்செவ்வாய்நவ்விசொல்லறிந்தாற்
றாழாதெதிர்வந்துகோடுநின்கையிற்றருந்தழையே.

(இ - ள்.) யாழ் ஆர் மொழி மங்கை பங்கத்து இறைவன் - யாழினிசைபோலும் மொழியையுடைய உமையாளது பாகத் தையுடைய இறைவன், — எறி திரை ஏழு நீராய் எழு பொழி லாய் இருந்தோன் - எறிகின்ற அலைகளையுடைய ஏழு கடலு மாய் ஏழுலகுமாய் இருந்தவன், — நின்ற தில்லை அன்ன - (அவன்) இருந்த தில்லையை யொக்கும், — சூழ் ஆர் குழல் தொ ண்டை எழில் செவ்வாய் நவ்வி சொல் அறிந்தால் - சுருண்ட நிறைந்த கூந்தலினையும் தொண்டைக் கனிபோலும் அழகை யுடைய சிவந்த வாயினையுமுடைய மானையொத்தவளது சொ ல்லை அறிந்தால், — சிலம்ப - சிலம்பனே! — தரும் தழை தாழா து எதிர்வந்து கோடும் - (நீ) தருந்தழையைத் தாமதியாமல் உன்னெதிர்வந்து கொள்ளுதும். (அஃதறியாது கொள்ள அஞ்சு தும்). எ - று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்வி பெறுதல். (௬௩)

படைத்துமொழியான் மறுத்தல்.

அருந்தழைமேன்மேற் பெருந்தகைகொணரப்
படைத்துமொழிகிளவியிற் றடுத்தவண்மொழிந்தது.

(எ - து.) அருமையாகிய தழையை மேன்மேலும் தலைமகன் கொண்டுவர, (தலைமகளது நினைவறித் தல்லது தழைகொள்ளேனென்ற பாங்கி,) படைத்துக் கூறுஞ் சொல்லால் மறுத்துக் கூறியது.

எழில்வாயிளவஞ்சியும்விரும்பும்மற்றிறைகுறையுண்
டுழல்வாயலர்வொளியம்பலத்தான்மஞ்சுதோயுந்தில்
குழல்வாய்மொழிமங்கைபங்கன்குற்றாலத்துக்கோலப்பிண்டிப்
பொழில்வாய்த்தடவரைவாயல்லதில்லையிப்பூந்தழையே.

(இ - ள்.) எழில்வாய் இள வஞ்சியும் விரும்பும் - (யானே யன்றி) அழகுபொருந்திய இளமையாகிய வஞ்சிக்கொடியை யொப்பவளும் விரும்புவாள், — இறை குறை உண்டு - (ஆயி னும்) சிறிது குறையுண்டு, — அழல்வாய் அவிர் ஒளி - நெருப்பி னிடத்து விளங்கு மொளியாயுள்ளவன், — அம்பலத்து ஆடும் அம் சோதி - சிற்றம்பலத்தின்கண் ஆடுகின்ற அழகிய சோதி யாயிருப்பவன், — அம் தீம் குழல் வாய்மொழி மங்கைபங்கன் - அழகிய இனிய குழலோசைபோலும் மொழியையுடைய உமா தேவியினது பங்கை யுடையவன், — குற்றாலத்து கோலம் பிண்டி பொழில்வாய் தடவரைவாய் அல்லது - (அவனது) குற் றாலத்தின்க ணுண்டாகிய அழகையுடைய அசோகச்சோலை பொருந்திய பெரிய தாழ்வரையிடத்தி லல்லாமல், — இப் பூ தழை இல்லை - இந்தப்பூவையுடைய தழை (வேறோரிடத்தும்) இல்லை. (அதனால் இத்தழை வாங்குவா றென்னென்று ஆராயப் படுமாகலான் இணை கொள்ளேம்.) எ - று. மெய்ப்பாடு - அச் சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்வி பெறுதல்.

பிறவிடத்து முள்ளதனை அவ்விடத்தல்லது இல்லையென் றமையின் படைத்து மொழியாயிற்று. இத்தழையை இளவஞ்சி யும் விரும்பு மெனினு மமையும். மற்று - அசை. (௯௪)

நாணுரைத்து மறுத்தல்.

வாணுதற் பேதை யைய
நாணுத லுரைத்த து.

(எ-து.) (மேன்மேலும் தழையை மறுத்ததனால் தலைமகன் பூங்கண்ணி கொண்டெய்த, பாங்கி,) ஒளி பொருந்திய நெற்றியையுடைய பேதையாகிய தலை மகளது நாணுரைத்து மறுத்துக் கூறியது.

உறுங்கண்ணிவந்தகன்னையுரவோன்பொடியாயொடுங்கத்
தெறுங்கண்ணிவந்தசிற்றம்பலவன்மலைச்சிற்றிலின்வாய்

நறுங்கண்ணிசூட்டினுநாணுமென்வாணுதனாகத்தொண்பூங்
குறுங்கண்ணிவேய்ந்திளமந்திகணாணுமிக்குன்றிடத்தே.

(இ - ள்.) உறு நிவந்த கன்னை உரவோன் - உயர்ந்து மிகு ந்த தேனையுடைய மலையின் வலிய மன்மதன், — பொடியாய் ஒடுங்க தெறும் கண் நிவந்த சிற்றம்பலவன் - நீறு யக்கெட அழிக்கவல்ல கண்ணோங்கிய சிற்றம்பலவனது, — மலை சிற்றிலின்வாய் நறு கண்ணி சூட்டினும் - மலையினிடத்து இருக் கின்ற சிறுவீட்டினிடத்துச் செவிலியர் சூட்டிய மாலையின்மேல் யானேற்றி) நல்ல பூமாலையைச் சூட்டினாலும், — என் வாள் நுதல் நாணும் - (அத்தன்மையளேனை) என்னுடைய ஒளிபொருந்திய நெ ற்றியையுடையாள் (புதிதென்று) நாணுவாள், — இ குன்றிடத்து நாகத்து ஒள் பூ குறு கண்ணி வேய்ந்து இளம் மந்திகள் நா ணும் - (ஈகின்றாய் சொல்லுகின்றதென்) இம்மலையிடத்து நாக மரத்தினது தள்ளிய பூவினாற்செய்த குறுமையாகிய மாலை யைச் சூடி (அச்சூடுதலான்) இளமையாகிய பெண்குரங்குக ளும் வெட்கப்படும். எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

கண்ணிவந்தகனை - கண்மிக்க கனையெனினு மமையும். தெ றுங்கண்ணிவந்த என்றது அக்கண் மற்றிருகண்களுக்கும் மே லாயிருக்குங் கண்ணெனினும், அல்லதூஉம் மேனோக்கியிருக்குங் கண்ணெனினும் அமையும். (௯௫)

இசையாமைகூறி மறுத்தல்.

வசைதீர் குலத்திற்
கிசையா தென்றது.

(எ - து.) (நாணுரைத்து மறுத்தக்கூறிய பாங்கி,) குற்றநீங்கிய எங்குலத்தினுக்கு (இக்கண்ணி) இசை யாதென மறுத்துக் கூறியது.

நறமனைவேங்கையின்பூப்பயில்பாறையைநாகநண்ணி
மறமனைவேங்கையெனநனியஞ்சுமஞ்சார்சிலம்பா
குறமனைவேங்கைச்சுணங்கொடணங்கலர்கூட்டுபவோ
திறமனைவேங்கையதளம்பலவனெடுவரையே.

(இ-ள்.) நறவு மனை வேங்கையின் பூ பயில் பாறையை - தேனுக்கிடமாகிய வேங்கைப்பூக்கள் பொருந்தியிருக்கின்ற பாறையை,—நாகம் நண்ணி மறம் மனை வேங்கை என நனி அஞ்சும் - யானைசேர்ந்து கொலைக்கிடமாகிய புலியென்று மிகவுமஞ்சுகின்ற,—மஞ்சு ஆர் சிலம்பா - மேகம்பொருந்தும் மலையையுடையாய்!—திறம் மனை வேங்கை அதள் அம்பலவன் நெடு வரை - திறத்துக்கிடமாகிய புலித்தோலையணிந்த சிற்றம்பலவனது நெடுமையாகிய மலையினிடத்து,—குற மனை வேங்கை சுணங்கொடு அணங்கு அலர் கூட்டுபவோ - குறவருடைய மனையிடத்து உண்டாகிய வேங்கை மரத்தினது சுணங்குபோலும் பூவோடு (தெய்வத்திற்குரிய கழுநீர் முதலாகிய பூக்களை) சேர்ப்பரோ (சேர்க்கார்.) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

நறமனைவேங்கை - நறுமிக்க பூவெனினு மமையும். குறமனை கூட்டுபவோ - குறக்குடிக ளெவ்வாறு கூட்டுவரோ என்றுரைப் பாருமுளர். திறமனையில் - ஐகாரம் அசைநிலை, வியப்பென்பாருமுளர். திறம் - அத்தன்மைத்தாகிய அதளெனினு மமையும். வேங்கைப்பூவிற்குச் சுணங்கனிற்றிருக்கல் குணமாதலால், சுணங்கணியப்பட்டதைச் சுணங்கென்றே கூறினான். (௧௬)

செவ்வியிலளென்று மறுத்தல்.

கவ்வி நோக் கு
செவ்வி யிலளென்றது.

(எ - து.) (கன்னியை மறுத்ததனால் தலைமகன் குறையுமல்லுமென்று செல்லப்பாங்கி,) மான்போ

ணும் பார்வையையுடைய தலைமகள் செவ்விபெற்றாற் கொணருமென்று மறுத்துக்கூறியது.

கற்றிலகண்டன்னமென்னடைகண்மலர்நோக்கருளப்
பெற்றிலமென்பிணைபேச்சுப்பெறுகிள்ளைபிள்ளையின்றான்
முற்றிலளுற்றதுயிர்த்திலளாகத்தொளிமிளிரும்
புற்றிலவாளரவன்புலியூரன்னபூங்கொடியே.

(இ-ள்.) கண்டு அன்னம் மெல் நடை கற்றில - அவள் (புடைபெயர்ந்து விளையாடாமையின்) நடையைப்பார்த்து அன்னப்பறவைகள் மெல்லிய நடையைக் கற்கப்பெறவில்லை,—கண்மலர் நோக்கு அருள மென்பிணை பெற்றில - கண்மலர் நோக்கங்களை (அவள்) கொடுக்க மென்மையாகிய பெண்மான்கள் பெறவில்லை,—பேச்சு கிள்ளை பெறு - (அவள் உரையாமையின் தாங்கருதும்) மொழிகளைக் கிளிப்பிள்ளைகள் பெறவில்லை,—பிள்ளை இன்று ஒருவினை முற்றிலள் - (இவ்வாறு) என் குழந்தை இன்று ஒருவிளையாட்டையும் பொருந்திலள், — ஆகத்து ஒளி மிளிரும் புற்றில வாள் அரவன் - (அதுவேயுமன்றி) ஆகத்தின்கட்கிடந்து ஒளியினை வீசும் புற்றினிடத்துளவாகிய ஒளியையுடைய பாம்பை யணிந்தவனது, — புலியூர் அன்ன பூ கொடி - புலியூரையொக்கும் பூவையுடைய கொடியை யொப்பாள், — உற்றது உயிர்த்திலள் — எனிடத்து நீர் வந்தவாறும் யாவுமக்குக் குறைநேர்ந்த வாறும் இன்னுமறிந்திலள், (அதனால் செவ்வி பெற்றுச் சொல்லல் வேண்டும்.) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

புற்றிலவென்பதற்கு வெள்ளித்திரியிற் பிறந்து திருமேனிக்கண் வாழ்தலாற் புற்றையுடைய வல்லாத அரவென்றுரைப்பினு மமையும். ஆரத்தொளியென்பதூஉம் பாடம். கண்டென்பது கற்றலோடும், அருளவென்பது பெறுதலோடு முடிந்தன. (௧௭)

காப்புடைத்தென்று மறுத்தல்.

காப்புடைத் தென்று
சேட் படுத்த து.

(எ - து.) (செவ்விபெற்றுங் குறையிராதெனக் கருதிநின்ற தலைமகனுக்குப் பாங்கி,) இது காவலுடையதாகலான் இன்றுபோய் நாளைவாருமென்று இசைய மறுத்துக்கூறியது.

முனிதருமன்னையுமென்னையர்சாலவுமூர்க்கரின்னே
தனிதருமிந்நிலந்தன்மையுகுன்றமுந்தாழ்சடைமேற்
பனிதருதிங்களணியம்பலவர்பகைசெருக்குங்
குனிதருதிண்சிலைக்கோடுசென்றான்சுடர்க்கொற்றவனே.

(இ - ள்.) சுடர் கொற்றவன் - சுடர்களில் தலைவனாகிய சூரியன்,—தாழ் சடைமேல் பனிதரு திங்கள் அணி அம்பலவர் - தாழ்ந்த சடைமேல் குளிர்ச்சியைத் தரும் திங்களைச்சூடிய அம்பலவர்,—பகை செருக்கும் குனிதரு திண் சிலை கோடு சென்றான் - பகைவரையழிக்கும் வளைகின்ற வலிமையையுடைய மலையாகிய மேருவினுடைய சிகரத்தை அடைந்தான்,—அன்னையும் முனிதரும் - (இனித்தாழ்ப்பின் என்னுடையதாயுங்) கோபிப்பாள்,—என் ஐயர் சாலவும் மூர்க்கர் - என்னுடைய ஐயன்மார்களும் மிகவும் மூர்க்கர்,— இன்னே தனிதரும் - இவ்விடமும் (இயங்குவாரின்மையின் இப்பொழுதே) தனிமையைத்தரும்,—ஐய - ஐயனே!—குன்றமும் இ நிலத்து அன்று-(உனது) மலையும் இந்நிலத்தின்கண்ணது அன்று. (ஆதனூல் எண்டு நிற்கத்தகாது.) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

அம்பலவர் பகை செருக்கும் குனிதருத்தக்க திண்மைமுதலாகிய இயல்பு எக்காலத்து முண்மையால் செருக்குமென நிகழ்காலத்தாற் கூறினார். இந்நிலத் தன்றென்பது பாடமாயின் இக்குன்ற

மும் இவ்வாறு மகளிரும் ஆடவரும் தலைப்பெய்து சொல்லாடி நிலைமைத் தன்றெனவுரைக்க. (௬௪)

நீயே கூறென்று மறுத்தல்.

அஞ்சுதும்பெரும பஞ்சின்மெல்லடியைக்
கூறுவநீயே கூறுகென்ற து.

(எ - து.) (காப்புடைத்தென்று சொல்லக்கேட்ட தலைமகன் மறுநாள் வர, பாங்கி,) பெருமானே! பஞ்சின் மென்மையாகிய பாதங்களையுடைய தலைமகளை அஞ்சுவோம்; (ஆகலான்) சொல்லவேண்டியவற்றை நீயே சொல்லுகவென்று தான் உடம்படாது மறுத்துக்கூறியது.

அந்தியின்வாயெழிலம்பலத்தெம்பரனம்பொன்வெற்பிற்
பந்தியின்வாய்ப்பலவின்சுளைபைந்தேனொடுந்துக்கிள்ளை
மந்தியின்வாய்க்கொடுத்தோம்புஞ்சிலம்பமனங்கனிய
முந்தியின்வாய்மொழிநீயேமொழிசென்றம்மொய்குழற்கே.

(இ - ள்.) அந்தியின் வாய் எழில் - அந்திப் பொழுதினுடைய (செவ்வானின்) அழகையுடைய,—அம்பலத்து எம் பரன் அம் பொன் வெற்பில் - சிற்றம்பலத்தின்கண் உளனாகிய எம்முடைய பரமனது அழகிய பொன்னையுடைய வெற்பிடத்து,—பந்தியின் வாய் பைந்தேனொடும் பலவின் சுளை - வரிசையின்கண் பசுமையாகிய தேனொடும் பலாச்சுளையை,—கிள்ளை மந்தியின் வாய் கொடுத்து ஓம்பும் சிலம்ப - கிளியானது பெண்குரங்கின் வாயினிடத்துக் கொடுத்துப் பாதுகாக்கும் மலையையுடையாய்!—அ மொய் குழற்கு - அந்த நெருங்கிய கூந்தலையுடையாளுக்கு,—மனம் கனிய - (அவள்) மனங்கனியும்படி,—முந்தி இன் வாய்மொழி நீயே சென்று மொழி-முற்பட்டு (இந்த) இனிய வாய்மொழிகளை நீதானே போய்ச் சொல்லுவாயாக.

எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

எல்லாப்பொருளையுங் கடந்தானாயினும் எமக் கணியனென்னுங் கருத்தால் எம்பரனென்றார். சிலம்பு - மலையின்பக்கத்துளதாகிய சிறுகுவடு. வாய்மொழி - மொழியென்னும் துணையாய் நின்றது. மந்தி உயிர்வாழ்வதற்குக் காரணமாகியவற்றைக் கடுவன்தானே கொடுத்து மனமகிழ்வித்தாற்போல, அவள் உயிர்வாழ்வதற்குக் காரணமாகிய இன்வார்த்தைகளை நீயேகூறி அவளை மனமகிழ்விப்பாயென உள்ளுறையுவமமாயிற்று. (௯௯)

குலமுறைகூறி மறுத்தல்.

தொழுகுலத்திர் சொற்காகேம்
இழிகுலத்தே மெனவுரைத்தது.

(எ-து.) (இக்காரெல்லாம் என்குறை முடிப்பதாகச் சொல்லி நீயே முடித்துக்கொள்வென்று சொன்னானெனத் தலைமகன் ஆற்றாதுநிற்ப, பாங்கி, நீர்) உயர்குலத்திர் (யாம்) இழிகுலத்தேம், (ஆகலான்) சொல்லாடுதல் தக்கதேமல்லேமென்று (குலமுறை கூறி) மறுத்துரைத்தது.

தெங்கம்பழங்கமுகின்குலைசாடிக்கதலிசெற்றுக்
கொங்கம்பழனத்தொளிர்குளிர்நாட்டினைநீயுமைகூர்
பங்கம்பலவன்பரங்குன்றிற்குன்றன்னமாபதைப்பச்
சிங்கந்திரிதருசீறூர்ச்சிறுமியெந்தேமொழியே.

(இ-ள்.) தெங்கம் பழம் கமுகின் குலை சாடி - (முதிர்ந்து வீழுகின்ற) தெங்கினது பழங்கள் பாக்குமரத்தின் குலையை (உதிர) மோதி,—கதலி செற்று - வாழைகளை முறித்து,—கொங்கு அம் பழனத்து ஒளிர் குளிர் நாட்டினை நீ - பூந்தாதையுடைய அழகிய வயலிடத்து (கிடந்து) விளங்குகின்ற குளிர்ந்த நாட்டினுள்ளாய் நீ; — உமைகூர் பங்கு அம்பலவன் பரங்குன்றில் - உமையிருக்கும்பாகத்தையுடைய சிற்றம்பலவனது பரங்குன்றினிடத்து,—குன்று அன்ன மா பதைப்ப சிங்கம் திரிதரு - மலையையொத்த யானைகள் நடுங்கச் சிங்கங்கள் திரியும்,—சீறூர் சிறுமி எம் தேமொழி - சிறியவூரினிடத்து உள்ளாளாகிய சிறியள் எம்முடைய தேனையொத்த மொழியாள்; (ஆதலால் எம்மோடு நீ சொல்லாடுதல் தகாது.) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

பரங்குன்றிற் சீறூரென வியையும். பெருங்காட்டுச் சிற்றூரம்பலமென்பது போதரச் சிங்கந்திரிதரு சீறூரென்றார். (௧00)

நகையாடி மறுத்தல்.

வாட்டமழியாது சேட்புடுத்தவற்கு
மென்னகைத்தோழி பின்னகைசெய்தது.

(எ-து.) (குலமுறைகூட்டி) தலைமகன் மனமழிந்து (நிற்ப,) ஒளியுள்ள தழையை யெதிராது சென்றடுத்தற்கு மெல்லிய நகையினளாகிய பாங்கி (அவனிலையின் அடங்கச் சொல்லி) இனிய நகைப்போடு மறுத்துக்கூறியது.

சிலையொன்றுவாணுதல்பங்கன்சிற்றம்பலவன்கயிலை
மலையொன்றுமாமுகத்தெங்கணைப்பொய்க்கொழுமன்னர்முனிக்குங்
கலையொன்றுவெங்கணைபொட்டுந்திட்டதென்னிற்கட்டடேன்
கொலையொன்றுமில்லையவாந்தரியீகையிற்கொண்டேசிலையே.

(இ-ள்.) சிலை ஒன்று வாள் நுதல் பங்கன் - வில்லையொக்கும் ஒளிபொருந்திய நெற்றியையுடைய உமையாளது பங்கையுடையவன்,— சிற்றம்பலவன் - சிற்றம்பலத்து உள்ளவன்,—கயிலை மலை ஒன்று மா முகத்து - (அவனது) கயிலாயமலையிடத்து மலையையொக்கும் யானையின் முகத்தில், — எம் ஐயர் எய்த கணை மன்னி குளிக்கும் - எம்முடைய ஐயன்மார் எய்யும் அம்புகள் உருவி மறைவதன்றித் தோன்றும்,—கலை ஒன்று

வெம் கணையோடு கடுகிட்டதென்னின் - (அவ்வாறன்றி) ஒரு கலைமான் (இவரெய்த) வெய்ய அம்பினோடு விரைந்து ஓடும் என்றால்,—கெட்டேன் - கெட்டேன்,—ஐயர் கையில் கொடு சிலை - இவ்வையருடைய கையிலிருக்கின்ற வளைந்த வில், — கோலை ஒன்று இன்னியவாறு - கோலையாகிய ஒன்று வலிமையாகிய வகை (என்?), எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

கைகலைக்கன் மன்குளிக்குமென இயையும். கொடுஞ்சாமெனப்பதூஉம் பாடம். (௧௦௧)

இரக்கந்தோன்று மறுத்தல்.

கையுறையெதிராது காதற்றோழி
ஐயநீபெரி தயர்த்தனையென்றது.

(எ - து.) (கையுறை மறுத்து) காதற்பாங்கி, ஐயனே! நீ மிகவும் பித்தழையாநிற்கின்றாயென்று சொல்லி, (அதற்கிரக்க முற்றுப் பின்னும்) தழையேலாது மறுத்துக்கூறியது.

மைத்தழையாகின்றமாமிடற்றம்பலவன்கழற்கே
மெய்த்தழையாகின்றவன்பினர்போலவிதிர்விதிர்த்துக்
கைத்தழையேந்திக்கடமாவினுய்க்கையில்வில்லின்றியே
பித்தழையாநிற்பராலென்னபாவம்பெரியவரே.

(இ - ள்.) மை தழையாநின்ற மா மிடறு அம்பலவன் கழற்கே - கருமைநிறம் மிகாநின்ற கரிய கண்டத்தையுடைய திருச்சிற்றம்பலவனது திருவடியினிடத்தே,—தழையாநின்ற மெய் அன்பினர்போல - பெருகாநின்ற மெய் யன்பையுடையவரைப் போல,—விதிர் விதிர்த்து கை தழை யேந்தி - நடுநடுங்கி கையினிடத்துத் தழையை யேந்திக்கொண்டு, — கடம் மா வினுய் - (அதற்கு மாறுபட) மதத்தையுடைய யானையை வினவிக்கொண்டு,—கையில் வில இன்றியே - தங்கையில் வில்லில்லாம

லே,—பெரியவர் பித்தழையா நிற்பர் - இப்பெரியவர் பித்தம் மிகுந்து நின்றார்.—என்ன பாவம் - இது என்ன தீவினையோ! எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்வி பெறுதல்.

மா-கருமை. மாமிடறென்பது, பண்புத்தொகையாய் இன்னது வென்னுந் துணையாய் நிற்றலானும் மைத்தழையாநின்ற என்பது அக்கருமையது மிகுதியை புணர்த்தி நிற்றலானும், கூறியது கூறலாகாமை யறிக. மெய்த்தழையாநின்ற அன்பென்பதற்கு மெய்யாற்றழையாநின்ற அன்பெனினு மமையும். பித்து - பித்தாற்பிறந்த அழைப்பு. அழைப்பு - பொருள் புணரா வோசை. ஆல் - அசை. (௧௦௨)

சிறப்பின்மைகூறிமறுத்தல்.

மாந்தளிரு மலர்நீலமும்
ஏந்தலிம்மலை யில்லையென்றது.

(எ-து.) (இரக்கமுற்று மறுத்தபாங்கி) ஏந்தலே! மாந்தளிரும் நீலமலரும், இம்மலையிலில்லை, (ஆகலான் அவற்றை யாமணியிற்கண்டார் ஐயுறுவரென) மறுத்துக் கூறியது.

அக்குமரவுமணிமணிக்கூத்தன்சிற்றம்பலமே
யொக்குமிவளதொளிருருவஞ்சிமஞ்சார்சிலம்பா
கொக்குஞ்சுனையுங்குளிர்தளிருங்கொழும்போதுகளு
மிக்குன்றிலென்றுமலர்ந்தறியாதவியப்பினவே.

(இ-ள்.) மஞ்சு ஆர் சிலம்பா - மேகம்நிறைந்த மலையையுடையாய்!—அக்கும் அரவும் அணி மணி கூத்தன் - அக்குமணியையும் பாம்பையும் அணிகின்ற மாணிக்கம்போலும் கூத்தனது,—சிற்றம்பலம் ஒக்கும் இவளது ஒளிர் உருவு - திருச்சிற்றம்பலத்தை ஒத்திருக்கின்ற இவளுடைய விளங்காநின்ற வடிவை,—அஞ்சி - பயந்து, — கொக்கும் சுனையும் குளிர் தளிரும் கொழு

போதுகளும் - மாமரங்களும் சுனைகளும் குளிர்ந்த தளிர்களும் கொழுமையாகிய பூக்களும், — இக் குன்றில் என்றும் மலர்ந்து அறியாத இயல்பின - இத்தலையில் எக்காலத்தும் விரிந்தறியாத தன்மையையுடையன, (அதுகுறைவு கண்டிலமாகு இவற்றை யாம் இனிக் கண்டார் துயருறுவார்.) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல். (கoரு)

இளமைகூறி மறுத்தல்.

முலைமெய்யிற் றறி ... றைவ.
விலைவிலை சொன்ற ... து.

(எ - து.) (அஃதிளமைகூறித் தழைமறுத்தபடாகி,) முனைக்கின்ற பக்கலையுடைய பேதைக்கு (நீசொல் வது) சிறிதும் இசைவுடைத்தன்றெனக் கூறியது.

உருகுதலைச்சென்றவுள்ளத்து மம்பலத்து மொளியே
பெருகுதலைச்சென்றுநின்றோன்பெருந்துறைப்பிள்ளைகள்ளார்
முருகுதலைச்சென்றகூழைமுடியாமுலைபொடியா
வொருகுதலைச்சின்மழலைக்கென்னோவையவோதுவதே.

(இ - ள்.) உருகுதலை சென்ற உள்ளத்தும் - (அன்பருடைய) உருகுதலையடைந்த உள்ளத்தினிடத்தும், — அம்பலத்தும் - சிற்றம்பலத்தினிடத்தும், — ஒளி பெருகுதலை சென்று நின்றோன் - (இரண்டிடத்தும் ஒப்ப) ஒளி பெருகுதலையடைந்து நின்றவனது, — பெருந்துறை பிள்ளை - பெருந்துறைக்கணுளளாகிய (எம்) குழந்தையினுடைய, — கள் ஆர் முருகு தலைச்சென்ற கூழை முடியா - தேன் நிறைந்த வாசனையானது தம்மிடத்து அடைந்த கூந்தல்கள் முடிக்கப்படா, — முலை பொடியா - முலைகள் தோன்றா, — ஒரு குதலை சில் மழலைக்கு - ஒரு குதலைச் சின்மழலைச் சொல்லையுடையாட்கு, — ஐய - ஐயனே! — ஓதுவது என்னோ - நீ சொல்லுகின்ற இது யாதாம், (சிறிதும் இசையுடைத்

தன்று.) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செவ்விபெறுதல்.

ஏகாரம் - அசைநிலை. கள்ளார் கூழையென இயையும். குதலைமை - விளங்காமை. மழலை - இளஞ்சொல். (கoசு)

மறைத்தமைகூறி நகைத்தல்.

என்னைமறைத்தபி னென்னரியதென
நன்னுதற்றோழி நகைசெய்த ... து.

(எ - து.) (இதுவரையும் விளையாடுந்து இப்பொழுது இவளிளையளென்று இளமைகூறி மறுப்பதால் இனி இவ்வொழுக்கம் இவளொடு பொருந்துங் கடவதென்னத் தலைமகன் உட்கொண்டு நிற்ப) என்னை மறைத்தபின்னர் நீயெண்ணிய காரியம் முடியாதென நன்மையாகிய நெற்றியையுடைய பாங்கி, நகைத்துக் கூறியது.

பண்டாலியலுமிலைவளர்பாலகன்பார்கிழித்துத்
தொண்டாலியலுஞ்சுடர்க்கழலோன்றொல்லைத்தில்லையின்வாய்
வண்டாலியலும்வளர்பூந்துறைவமறைக்கினென்னைக்
கண்டாலியலுங்கடனில்லைகொல்லோகருதியதே.

(இ - ள்.) பண்டு - முற்காலத்து, — ஆல் இயலும் இலை வளர் பாலகன் - ஆலின்கண் பொருந்தும் இலையினிடத்துக் கண்வளர்கின்ற பாலகனாகிய மாயோன், — பார் கிழித்து தொண்டால் இயலும் - பூமியைப்பிளந்து (காணமையான் பின்) அடிமைத் திறத்தான் அடையும், — சுடர் கழலோன் - ஒளிபொருந்திய திருவடியையுடையவனது, — தொல்லை தில்லையின் வாய் - பழமையாகிய தில்லைநகர்க்கண்ணதாகிய, — வண்டு ஆல் இயலும் வளர் பூ துறைவ - வண்டுகள் ஆலிப்போடு திரிகின்ற வளர்கின்ற பூக்களையுடைய துறையையுடையாய்! — கண்டால் என்னை மறைக்கின் - ஆராயின் என்னைமறைத்தால், — கருதியது -

நீ கருதியது,—இடமும்பட்டன் இல்லெனினும் - முடியுமுறைமை யில்லையாயினும். எ-று. மெய்ப்பாடு - அச்சந்தைச் சார்ந்த நகை; பயன் - இவன் கருதலான் தன்குறை முடியுமென நினைந்து ஆற்றுதல்.

பண்டு தொண்டா கியதுமெனவும், தில்லைவனைப்பித் துறை யெனவு மியையும். தில்லைக்கண் குறைவினெனிறு மமையும். ()

நகைகண்டு மகிழ்தல்.

இன்னகைத் தோழி மென்னகை கண்டு
வன்னகத் திரிவே லண்ண லுவந்தது.

(எ - து.) (என்னிடை மறையா தொழிந்தால் நின்கருத்து முடியுமென் றுட்கொண்டிசைத்த) இனிமையாகிய நகையையுடைய பாங்கியினது மென்மையாகிய நகையைக்கண்டு அழகிய கதிர்வேலை யுடைய தலைமகன் (மகிழ்ந்து) கூறியது.

மத்தகஞ்சேர் தனிநோக்கினன் வாக்கிறந் தூறமுதே
யொத்தகஞ்சேர்ந் தென்னை யுய்யநின்றோன் றில்லையொத் திலங்கு
முத்தகஞ்சேர் மென்னகைப் பெருந்தோளி முகமதியின்
வித்தகஞ்சேர் மெல்லென்னோக்கமன் றோவென் விழுத்துணையே.

(இ - ள்.) மத்தகம் சேர் தனி நோக்கினன் - நெற்றியைச் சேர்ந்த தனிக்கண்ணை யுடையான்,—வாக்கிறந்து ஊறு அமுது ஒத்து அகம் சேர்ந்து என்னை உய்ய நின்றோன் - சொல்லைக் கடந்து ஊறுகின்ற அமுதத்தை யொத்து மனத்தைச் சேர்ந்து என்னைப் பிழைக்கும்படி நின்றவன்,—தில்லை ஒத்து இலங்கும் - (அவனது) தில்லைநகரத்தை யொத்துப் பிரகாசிக் கின்ற,—முத்து அகம் சேர் - முத்தைப்போலும் எயிறுகள் உள்ளடங்கிய,—மென் நகை பெருந்தோளி - மெல்லிய முறுவலையுடைய பெரிய தோளினையுடையாளது,—முக மதியின் - முகமாகிய சந்திரனிடத்துண்டாகிய,—வித்தகம் சேர் மெல்

லென் நோக்கம் அன்றோ - சதுரப்பாட்டைச் சேர்ந்த மெல்லென்ற பார்வையன்றோ,—என் விழுத்துணை - எனது சிறந்த துணை. (ஆதலால் ஆற்றத்தகும்.) எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

இலங்கு முகமதி என வியையும். மறுத்தாளாயினும் நகைகண் மலர்ந்தமுகத்தளென்னும் கருத்தான் இலங்கு முக மதியினென் றான். இடையென்ன இயையாமை கூறிமறுத்த இவ்வொழுக்கம் இனி யொழிய வொழுக்கடவேனென்று தலைமகன் தன்மனத் திற் குறிக்க, அக்குறிப்பைப் பாங்கி யறிந்து கூறினமையின் வித்தகஞ்சேர் மெல்லென் னோக்கமன்றோ எனக்குச் சிறந்ததுணை, பிறிதில்லையெனத் தனதாற்றாமை தோன்றக் கூறினான். (௧௦௭)

அறியான்போன்று நினைவுகேட்டல்.

வேந்தன்சொன்ன மாந்தளிர் மேனியை
வெறியார்கோதை யறியேனென்றது.

(எ - து.) (நகைகண்டுமகிழ்ந்த) தலைமகன் கூறிய மாந்தளிர் போலும் மேனியை யுடைய தலைமகளை மணங்கமழ்கின்ற மாலையையணிந்த பாங்கி யறியே னென்று (அவன்நினைவு) கேட்டது.

விண்ணிறந் தார்நிலம் விண்டவ ரென்றுமிக் காரிருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத் தார்கழுக் குன்றினின்று
தண்ணறுந் தாதிவர் சந்தனச் சோலைப் பந்தாடுகின்ற
ரெண்ணிறந் தாரவர் யார்கண்ண தோமன்னு மின்னுருவே.

(இ-ள்.) விண் இறந்தார் நிலம் விண்டவர் - விண்ணைக்கடந் தவர் நிலத்தைப்பிளந்தவர்,— என்று மிக்கார் இருவர் கண் இறந்தார் - என்று சொல்லப்படும் பெரியோராகிய (அயனரி) என்னுமிருவருடைய கண்ணைக்கடந்தார்,—தில்லையம்பலத்தார் - தில்லையம்பலத்தின்கணுள்ளார்,—கழுக்குன்றின் நின்று - (அவ

ரது) திருக்கழுக்குன்றினிடத்திருந்து,—தன்ன நறு தாது இவர் சந்தனம் சோலை - குளிர்ச்சிபொருந்திய நல்ல மகரந்தங்கள் பரந்த சந்தனச்சோலையினிடத்து,— என்னிறந்தார் பந்தாடுகின்றார் - அளவற்றவர் பந்தாடுகின்றனர், — மன்ன - அரசனே! நின் அருள் - உன்னுடைய அருளானது, — அவர் யார் கண்ணதோ - அவர்களில் யாரிடத்ததோ? (கூறுவாயாக.) எ - று. மெய்ப்பாடு - மருட்கையைச்சார்ந்த பெருமிதம்; பயன் - நாம் மாற்கருதப்படுவாளை அறியேனென்றுளாக, என்குறை இன்னுள் கண்ணதென அறிவித்தால் இவள் முடிக்குமென நினைந்து கூற்றுவானு மென்பது.

சோலைக்கணின்றென்று கூட்டிஉறு மமையும். என்னிறந்தார் பலரென்பதாஉம் பாடம். (கஎ)

அவயவங்கூறல்.

அவயவ மவளு க்
கிவையிவை யென்றது.

(எ-து.) (இன்னு மவனை இப்பாங்கி யறிந்திலளாகையால் அறியின் தழையை யேற்பாளென்ப து கொண்டு) அவனுக்கு அவயவங்க ளிவையிவையென் று கூறியது.

துவளினகொங்கைகுரும்பைகுழல்கொன்றைகொவ்வைசெவ்வா[ய்
கவளினவாணகைவெண்முத்தங்கண்மலர்செங்கழுநீர்
தவவினைதீர்ப்பவன்றாழ்பொழிற்சிற்றம்பலமனையாட்
குவளைநாண்மதிபோன்றொளிர்கின்றதொளிமுகமே.

(இ-ள்.) தவ வினை தீர்ப்பவன் - (விரதங்களான் வருந்தாமல்) தவத்தொழிலை நீக்கி (அன்பர்க்கு இன்புறும்வழியை) அருள்பவனது, — தாழ் பொழில் சிற்றம்பலம் அனையாட்கு - தாழ்ந்த சோலையையுடைய திருச்சிற்றம்பலத்தை ஒப்பவளுக்கு,—குவளின கொங்கை குரும்பை - குவிந்த முலைகள் குரும்பையை

யொக்கும்,—குழல் கொன்றை - கூந்தல் கொன்றைப்பூத்தை யொக்கும்,—செவ்வாய் கொவ்வை - செவ்வாய் கொவ்வைக் கனியையொக்கும்,—கவளின வாள் நகை வெள் முத்தம் - (அதனிடத்து) இடப்பட்ட ஒளிபொருந்திய பற்கள் வெண்மையாகிய முத்தையொக்கும்,—கண் மலர் செங்கழுநீர் - கண்ணாகிய மலர்கள் செங்கழுநீர்ப் பூக்களையொக்கும்,—ஒளி முகம் உவவினாள் மதிபோன்று ஒளிர்கின்றது - ஒளிபொருந்திய முகம் பூரணையில் உண்டாகிய செவ்விய சந்திரனையொத்துப் பிரகாசிக்கின்றது. எ-று. மெய்ப்பாடு-உவகையைச் சார்ந்த பெருமிதம்; பயன்-குறை மறுத்தல்.

தவவினை தீர்ப்பவனென்பதற்கு மிகவும் வினைகளைத் தீர்ப்பவனென்று மமையும். உவவினைமதி-பக்கங்கள் கூடினிறைந்த தன்மையையுடைய மதி. நாண்மதி - உவாவான நாளின் மதி. ( )

கண்ணயந் துரைத்தல்.

கண்ணிணை பிறழ்வ ன
வண்ண முரைத் து.

(எ-து.) (அவனவயவங்கள் கூறியவழிக் கூறியும் அமையாமல் பின்னும் தனக் கன்று பாங்கியைக் காட் டின) கண்ணிணைகள் பிறழ்வனவாகிய வண்ணத்தை க் கூறியது.

ஈசற்கியான்வைத்தவன்பினகன்றவன்வாங்கியவென்
பாசத்திற்காரென்றவன்றில்லையின்னொளிபோன்றவன்றோள்
பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன்பூங்கழல்யாம்
பேசத்திருவார்த்தையிற்பெருநீளம்பெருங்கண்களே.

(இ-ள்.) ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று - ஈசனிடத்து யான்வைத்த அன்பைப்போல அகலமாய், — அவன் வாங்கிய என் பாசத்தின் காரென்று - அவனால் வாங்கப்பட்டதான பாசம்போலக் கருமைநிறத்தைப்பொருந்தி,— அவன் தில்லையின்

ஒளிபோன்று - அவனது தில்லைநகரத்தின் ஒளியையொத்து,— அவன் தோள் பூசு அ திருநீறென வெளுத்து - அவனது தோள்களில் சாத்தும் அந்தத்திருநீற்றைப்போல வெளுத்து,— அவன் பூ கழல் யாம் பேசு அ திருவார்த்தையின் பெருநீளம் - அவனுடைய பூப்போலுந் திருவடிகளை யாம்பேசும் அந்தத்திருவார்த்தைபோல மிகவும் நெடியவாயிருக்கும்,— பெரும் கண்கள் (என்னாற் காணப்பட்டவளுடைய) பெரியகண்கள். எ - று. மெய்ப்பாடு - உவகையைச்சார்ந்த பெருமிதம்; பயன் - ஐயமறுத்தல்.

பூசுந்திருநீறு வெள்ளிதாய்த் தோன்றுமாறுபோல வெளுத்தென்றும், பேசுந் திருவார்த்தை நெடிய வாயினாற்போலப் பெருநீளமாமென்றும், வினையெச்சமாக்கிச் சிலசொல் வருவித்துரைப்பினு மமையும். கண்ணிற்கு அகலமுதலாயின கூறவே செம்மை கண்டிலே மென்பார்க்கு அவன் தோளிற் பூசுந் திருநீறென்றதனாற் சிவப்பும் சொல்லியதாயிற்று. அது செம்மையிற் றோன்றும் வரியென வறிக. ஆங்கு - அசைநிலை. (௧௦௯)

தழையெதிர்தல்.

அகன்றவிடத் தாற்றாமைகண் டு
கவன்றதோழி கையுறையெதிர்ந்தது.

(எ - து.) (கன்னையுந் துறைப்பக் கேட்டபின்) அவன் கருத்திற்கு மாறுபட்ட விடத்து, அவனது ஆற்றாமையைக் கண்டு கவலையடைந்த பாங்கி, கையுறை யெதிர்ந்தது.

தோலாக்கரிவென் றதற்குந் துவள்விற்குமில்லின்றொன்மைக்
கேலாப்பரிசுளவேயன்றியேலேமிருஞ்சிலம்ப
மாலார்க்கரியமலர்க்கழலம்பலவன்மலையிற்
கோலாப்பிரசமன்னாட்கையநீதந்தகொய்தழையே.

(இ-ள்.) இரு சிலம்ப - பெரிய மலையையுடையாய்!— தோலாக்கரி வென்றதற்கும் - (எம்மையே தஞ்செய்யவந்த) தோற்காத யானையை நீ வெற்றிகொண்டதற்கும்,— துவள்விற்கும் - (யான் மறுப்பவும் போகாது பேரன்புடையையாய் நீ விடாது துவண்ட) துவட்சிக்கும்,— இல்லின் தொன்மைக்கு ஏலா பரிசு உளவே - (எமது) குடியின்பழமைக்கு ஏலாத இயல்பையுடையவென்று எம்மாற்செய்யப்படாதன உளவோ?— ஐய - ஐயனே!— மாலார்க்கு அரிய - திருமாலானவர்க்கு அரிய, — மலர் கழல் - மலர்போலும் திருவடியையுடைய,— அம்பலவன் மலையில் - சிற்றம்பலவனது மலையினிடத்து,— கோலா பிரசம் அன்னாட்கு - செய்யப்படாத தேனையொப்பாட்கு,— நீ தந்த - நீ கொடுத்த,— கொய் தழை அன்றி ஏலேம் - கொய்யப்பட்ட தழையை பிறிதோராற்றால் ஏற்கமாட்டோம். எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம்; பயன் - குறைநேர்தல்.

உளவே என்னும் ஏகாரம் எதிர்மறை. அஃதென்போல வெனின், "தாற்றுதே னாவிடல்" என்பது தாற்றும் என்று பொருள்பட்ட வாறுபோல வென்றறிக. ஏலாப் பரிசுளவே என்பதற்கு எமது குடிப்பிறப்பின் பழமை பற்றி இத்தழை சுற்றத்தார் கூடி வாங்குவ தொழிந்து நாங்களாக வாங்கினாற் குடிப்பிறப்புக்குப் பழிவரு மென்பது பற்றி, வாங்குவ தன்றென்பது கருத்து. உளவேயன்றி யேலேமென்பது பாடமாயின் இற்பழியாங் குற்றம் இதற் குளவாகலான் இத்தழை நீசெய்த உதவியைப்பற்றி யேற்கின்றேம் அல்லது ஏலேமென்பது கருத்து. கோலிடத்துப் பிரசமென்பது கோற்றேன். தோலாக்கரி வென்றது முதலிய நிகழ்ச்சி செய்யுளின்கட் கண்டிலேமென்பார்க்கு இயற்கைப் புணர்ச்சி நீக்கத்தின்கண் நிகழ்ந்தனவென வுணர்க: அன்றியும் படைத்துமொழி வருத்தனை யென்பன வற்றானு மறிக. (௧௧௦)

குறிப்பறிதல்.

தழையெதிரா தொழிவதற்கோர்
சொல்லறியேனெனப் பல்வினைக்குரைத்தது.

(எ - து.) (தழையெதிர்ந்த பாங்கி இதுகாறுந் தழை யேலாமைக்குத் தக்க பொய்சொல்லி மறுத் தேன்; இன்று அவன் நோக்கங் கண்டபின்) தழை யை யேலாது ஒழிவதற்கோர் பொய்சொல்ல வறி யே னெனப் பல்வினையை யளித்த தலைமகளுடைய குறிப்பறிந் துரைத்தது.

கழைகாண் டலுஞ்சுளியுங்களியானையன் னான்கரத்தில்
தழைகண் டலும்பொய்தழைப்ப முன்காண்பன்சிற் றம்பலத்தா
னிழைகாண் டலுநினைப் பாகுமென் னோக்கின்மன் னோக்கங்கண்டால்
விழைகாண் பணைமுலை யாயறி யேன்சொல்லு மாறவர்க்கே.

(இ-ள்.) கழை காண்டலும் சுளியும் களி யானை அன்னான் - (குத்து)கோலைக் கண்டவளவில் கோபிக்கின்ற களிப்பையுடைய யானையை யொப்பானுடைய,—கரத்தில் தழை காண்டலும் - கையில் தழையைக்கண்டவளவில், — பொய் தழைப்ப முன் காண்பன் - (அப்பொழுது சொல்லத்தகும்) பொய்யைப்பெருக முன்னாக் காண்பேன், — அம்பலத்தான் இழை காண்டலும் நினைப்பு ஆகும் மென் நோக்கி - சிற்றம்பலத்தானுடைய யாகைக் கண்டவளவில் நினைவுண்டாகும் மெல்லிய நோக்கத்தையுடை யாய்!—மன் நோக்கம் கண்டால் - அம்மன்னனுடைய நோக்கத் தைப் பார்த்தால்,—இழை காண் பணை முலையாய் - ஆபரணங் கள் காணப்படும் பெரியமுலையை யுடையாய்!— இன்று அவ ற்கு சொல்லும் ஆறு அறியேன் - இன்று அவனுக்குப் பொய் சொல்லுநெறியை அறிகின்றிலேன். (இனியாது சொல்வாம்.) எ-று. மெய்ப்பாடு - அழுகையைச் சார்ந்த பெருமிதம்; பயன்-குறை நயப்பித்தல். (கக௫)

குறிப்பறிந்து கூறல்.

ஏழைக் கிருந்த ழை
தோழிகொண் டொழிந்தது.

(எ - து.) (தலைமகளது முகக்குறிப்பறிந்து, அத வழியாகநின்று) பாங்கி, இருந்தழையைக் கைக்கொ ண்டு தலைமகட்குக் கூறியது.

தவளத்தநீறணியுந்தடந்தோளண்ணறன்னொருபா
லவளத்தனுமகனுந்தில்லையானன்றுரித்ததன்ன
கவளத்தயானைகடிந்தார்கரத்தகண்ணார்தழையுந்
தவளத்தகுவனவோசுரும்பார்குழற்றாமொழியே.

(இ - ள்.) சுரும்பு ஆர் குழல் தா மொழி - வண்டுகள் பொருந்திய கூந்தலையுடைய சுத்தமான மொழியையுடையாய்!— தவளத்த நீறு அணியும் தடம் தோள் அண்ணல் - வெண்மை யையுடைய திருநீற்றையணியும் பெரிய தோள்களையுடைய பெரியோன்,—தன் ஒருபால் அவள் அத்தனும் மகனும் தில்லை யான் - தன தொருபாகத்துள்ளாளாகிய அவளுக்குத் தந்தையுமா கும் மகனுமாகும் தில்லை நகரத்துள்ளான்,—அன்று உரித்தது அன்ன - (அவன்) அன்றுரித்த யானையையொக்கும்,—கவளத்த யானை - கவளத்தை யுண்ணுந்தன்மையுடைய யானையை,—கடிந்தார் கரத்த - (நம்மேல்) வாராமல் துரத்தினவருடைய கையின் கணுள்ளன,—கண்ணார் - கண்ணிற்கினியவாய் நிறைந்த,— தழையும் தவ ளத்தகுவனவோ - தழையும் வாடத்தக்கனவோ? (தகா). எ-று. மெய்ப்பாடு - அழுகையைச் சார்ந்த பெருமிதம்; பயன்-குறை நயப்பித்தல்.

சிவதத்துவத்தி னின்றுஞ் சத்தித்தத்துவந் தோன்றுதலின் அவளத்தனென்றும், சத்தி தத்துவத்தினின்றுஞ் சதாசிவ தத்துவந் தோன்றுதலின் மகனென்றுங் கூறினார். "இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்" என் பதூஉம் அப்பொருண்மேல் வந்தது. யானைகடிந்த பேருதவி யார் கையனவுந் துவளத்தகுவனவோ என்றதனால் அவருள ளமுந் துவளாமற் குறைமுடிக்க வேண்டுமென்பது குறிப்பாற் கூறினன். (கக௬)

வகுத்துரைத்தல்.

கடித்தழைகொணர்ந்தகாதற்றோழி
மடக்கொடிமாதர்க்குவகுத்துரைத்தது.

(எ-து.) மணங்கமழ்கின்ற தழையைக் கொணர்ந்த காதற்பாங்கி, (நாணத்தால் தழைவாங்க மாட்டாது நிற்கும்) இளங்கொடிபோன்ற தலைமகட்கு, அவன் தழையை யேற்றலே கருமமென்று சொன்னது.

ஏறும்பழிதழையேற்பின்மற்றேலாவிடின்மடன்மா
வேறுமவனிடப்பக்கொடியேற்றிவந்தம்பலத்து
ளேறுமரன்மன்னுமீங்கோய்மலைநம்மிரும்புனங்காய்ந்
தேறுமலைதொலைத்தாற்கென்னையாஞ்செய்வதேந்திழையே.

(இ-ள்.) ஏந்திழை - தாங்குகின்ற அணியையுடையாய்!— தழையேற்பின் பழி ஏறும் - தழையை யேற்றுக்கொண்டால் (நமக்குப்) பழியேறும்,— ஏலாவிடின் மடல் மா அவன் ஏறும் - (தழையை) ஏலாவிட்டால் பனைமடலாற் செய்தகுதிரையை அவனேறுவான்,— இடபம் கொடி ஏற்றி வந்து அம்பலத்துள் ஏறும் - (தருமவடிவாகிய) இடபத்தைக் கொடியின்கண் வைத்து (நமது பிறவித்துன்பத்தை நீக்க ஒருப்பட்டு) வந்து சிற்றம்பலத்தின்கண் ஏறும்,— அரன் மன்னும் ஈங்கோய் மலை - அரன் தங்கும் ஈங்கோய்மலையில்,— நம் இரும் புனம் காய்ந்து - நமது பெரியபுனத்தை அழித்து,— ஏறும் மலை தொலைத்தாற்கு (நம்மை நோக்கிக்கொண்டு) ஏறுகின்ற மலையையொத்த யானையையும் தோற்பித்தவற்கு,— யாம் செய்வது என்னை - நாம்செய்வதென்னோ? (அதனையானறிகின்றிலேன்). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கையுறையேற்பித்தல்.

மற்று வினைமாற்று. மடன்மாவேறுமவனென்று தழையேலா விடினும் பழியேறுமென்பது படக்கூறினமையாலும், ஏறு

மலை தொலைத்தாற்கென அவன் செய்த உதவி கூறினமையா லும் தழையையேற்பதே கருமமென்பது படக்கூறினாளாம். ()

தழையேற்பித்தல்.

கருங்குழன்மடந்தைக் கரும்பெறற்றோழி
இருந்தழைகொள்கென விரும்பிக்கொடுத்தது.

(எ-து.) (தழை யேலாமையாற் பழியேறுமாயின் தழை யேற்பதே காரியமெனவுட்கொண்டு நிற்கும்) கருமையாகிய கூந்தலையுடைய தலைமகட்குப் பெறலருஞ் செல்வம்போன்ற பாங்கி, பெருமை பொருந்திய தழையைக் கொள்கவென்று விரும்பிக் கொடுத்தது.

தெவ்வரைமெய்யெரிகாய்சிலையாண்டென்னையாண்டுகொண்ட
செவ்வரைமேனியன்சிற்றம்பலவன்செழுங்கயிலை
யவ்வரைமேலன்றியில்லைகண்டாயுள்ளவாறருளே
இவ்வரைமேற்சிலம்பன்னெளிதிற்றந்ததண்டழையே.

(இ-ள்.) உள்ளவாறு அருளான் - உள்ளபடி (நம்மிடத்துண் டாகிய) பெருமையால்,— இவ்வரைமேல் - இம்மலையினிடத்து,— சிலம்பன் - சிலம்பனானவன்,— எளிதில் தந்த தண் தழை - எளிதாகக்கொண்டுவந்து கொடுத்த குளிர்ச்சிபொருந்திய இத் தழையானது,— தெவ்வரை மெய்யெரி - பகைவரை உடலெரித் து,— காய் - காய்கின்ற,— சிலை ஆண்டு - மேருமலையாகிய வில் லைப் பணிகொண்டு,— என்னை யாண்டுகொண்ட - (பின்) என்னை அடிமைகொண்ட,— செவ்வரை மேனியன் சிற்றம்பலவன் - சிவந்தமலைபோலும் திருமேனியையுடைய சிற்றம்பலவனது,— செழும் கயிலை அவ்வரைமேலன்றி - செழுங்கைலையாகிய அம்மலை யிடத்தல்லாமல்,— இல்லை - (வேறோரிடத்தும்) இல்லை. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - கையுறை யேற்பித்தல்.

தெண்ணை யென்பதின் ஐகாரத்தை யசைநிலையாக்கித் தெளி வார் மெய்யெரிதற்குக் காரணமாம் நிலையெனினு மமையும். வலியன வற்றை வயமாக்கிப் பயின்று பின் என்னை யாண்டா னென்பது போதரா கயிலையான் டென்னை யாண்டுகொண்ட வென்றார். கைகுந்தழையை எளிதிற் றந்தா னென்றதனால் வரைவுவேண்டிய வழித் தமர் மறுப்பின் வரைந்து கொள்ளும் தாளாண்மைய னென்பது கூறினாளாம். கண்டாய் முன்னிலை யசைச்சொல். (கக௬)

தழைவிருப்புரைத்தல்.

விருப்பவ டோழி
பொருப்பற் குரைத்தது.

(எ - து.) (தலைமகளைத் தழையேற்பித்த) பாங்கி,
அவள் விருப்பினைத் தலைமகனுக்குக் கூறியது.

பாசத்தளையறுத்தாண்டுகொண்டோன்றில்லையம்பலஞ்சூழ்
தேசத்தனசெம்மலீர்ந்தனசென்றியான்கொடுத்தேன்
பேசிற்பெருகுஞ்சுருங்குமருங்குல்பெயர்த்தனைத்தால்
பூசிற்றிலளன்றிச்செய்யாதனவில்லைபூந்தழையே.

(இ-ள்.) பாசம் தளை அறுத்து ஆண்டுகொண்டோன் - பாச மாகிய விலங்கை அறுத்து (என்னை) அடிமையாகக்கொண்டவ னது,—தில்லையம்பலம் சூழ் தேசத்தன - தில்லையம்பலத்தைச் சூழ்ந்த தேசத்திலுள்ளன;—செம்மல் ஈர்ந்தன-(அச்சிறப் பேயன்றி) அரசனே உன்னாற்றரப்பட்டன;—சென்று யான் கொடுத்தேன்-(அத்தழைகளை) போய் அவளுக்கு யான் கொடுத் தேன்,—பேசின் பெருகும்-(அங்கு நடந்தவைகளைச்) சொல்லுவோ மாயின் விரியும், — சுருங்கு மருங்குல் - சுருங்கிய இடையையு டையாள், — பெயர்த்து அணைத்து பூசிற்றிலள் அன்றி - பெயர் த்து அணைத்து(தன் மேனியெங்கும்) பூசிக்கொள்ளவில்லையே

யன்றி,—பூந்தழை செய்யாதன இல்லை-(அந்தப்) பூந்தழையைச் செய்யாதனவகையொன்றுமில்லை. எ-று. மெய்ப்பாடு - உவகை. பயன் - தலைமகனை யாற்றுவித்தல்.

பெயர்த்தென்பது பெயர்த்தென மெலிந்து நின்றது. பெயர் த்தனைத் தென்பதற்குப் பிசைந்தணைத்தென்று பாடமோது வாரு முளர். (ககஎ)

சேட்படை முற்றிற்று.

பகற்குறி,

என்பது, தலைமகளைத் தழையேற்பித்த பாங்கி, தலைமக னைப் பகற்குறிக்கண் தலைப்பெய்வியா நிற்றல்.

இக்கிளவி முப்பத்திரண்டு துறைகளை யுடைத்து. அவைவரு மாறு:—

குறியிடங்கூற லாடிடம்படர்தல், குறிவிடைச்சேற லிடந் துய்த்துநீங்கல், உவந்துரைத்தலொடு மருங்கணைதல்லே, அறி வறிவித்த லுண்மகிழ்தல், ஆயத்துய்த்தல் தோழிவந்து கூடல், ஆடிடம்புகுதல் தனிகண்டுரைத்தல், நடமென்மொழி யாள் பருவங்கூறி, வரவுவிலக்கல் வாராவடம்படாது, மிகுத் துரைத்தமொழி மெய்ம்மையுரைத்தல், வருந்தக்கூறல் தாயச் சங்கூறல், இற்செறிவறிவித்தல் தமர்நினைவுரைத்தல், எதிர் கோள்கூற லேறுகோள்கூறல், ஏதிலர்தம்முரை கூறல்வ ரைவு, கூறுவான்போன்று இனமுதிர்வுணர்த்தல், பகல்வரல் விலக்கல் பொழுதினையறிந், இனையொடுவெறுத்தல் நிறைப்புற மாக, வேங்கையொடுவெறுத்தல் வெற்பனாடுக்குக், கரும் புறத்திரங்கல் கடிப்புனங்கையறந், கொய்தமைகூறல் பிரிவரு மைகூறல், மயிலொடுகூறல் வறும்புனங்கண்டல், பதிபுக்கு கோத்துப் பதியிடைவாடல், சென்னனமெலிகுத் தோன்றுமியந் தை, மன்னியபகற்குறி வகையாகும்மே.

குறியிடங்கூறல்.

வாடிடத் தண்ணளவ் வண்டறைவெதிர்ந்தவன்
ஆடிடத் தின்னியல் பறியவுரைத்தது.

(எ - து.) (தழை விருப்புரைக்கக் கேட்டுத்) தலைமகன் வருத்தியவிடத்து வன்மையாகிய தழையை யெதிர்ந்த தலைமகள் விளையாடுமிடத்தை (வருவாயாகவெனப் பாங்கி,) அதன் இயல்பினைத் தெரியவுரைத்தது.

வானுழைவாளம்பலத்தரன்குன்றென்றுவட்கிவெய்யோன்
றானுழையாவிருளாய்ப்புறநாப்பண்வண்டாரகைபோற்
றேனுழைநாகமலர்ந்துதிகழ்பளிங்கான்மதியோன்
கானுழைவாழ்வுபெற்றாங்கெழில்காட்டுமொர்கார்ப்பொழிலே.

(இ-ள்.) வானுழை வாள் - (இருட்கு அப்பாலாகிய) வானிடத் துண்டாகிய ஒளியையுடையான்,—அம்பலத்தரன் - (இவ்வண்ணஞ் செயலுடையதற்கு ஏனையது) சிற்றம்பலத்தில் வாழும் அரன்,— குன்றென்று வட்கி - (அவனது) மலையென்று கூசினாற்போல,— புறம் வெய்யோன் தானுழையா இருளாய் - புறமெங்கும் சூரியன் தானுழையாத இருளாய்,— நாப்பண் வண் தாரகைபோல் தேன் நுழை நாகம் மலர்ந்து - நடுவில் வளப்பம் பொருந்திய விண்மீன்போல வண்டுகள் நுழையும் நாகப்பூ மலர்ந்து,— திகழ் பளிங்கான் மதியோன் கான் உழை வாழ்வு பெற்றாங்கு-பிரகாசிக்கும் பளிங்குக்கல்லினால் சந்திரன் (வானிடத்து வாழ்வை யொழிந்து) காட்டினிடத்து வாழ்வைப் பெற்றாற்போல,— ஓர் கார்பொழில் - ஒரு கரியசோலை,— எழில்காட்டும் - (தனது) அழகைப்புலப்படுத்தும். எ-று. மெய்ப்பாடு - உவகை ; பயன்-குறியிட முணர்த்துதல்.

'அண்டமாதிரு ளூடசைக்கப - குன்றுபோலுமோ ரொண்சுடர்' என்றதுடம் அப்பொருள்மேல் வந்தது. வட்கி என்றதனால் முன் பல்பதி யுண்டாகுதல் விளங்கும். (ககஅ)

ஆடிடம்படர்தல்.

வண்டழையெதிர்ந்த வொண்டொடிப்பாங்கி
நீடமைத்தோளியொ டாடிடம்படர்ந்தது.

(எ-து.) வண்மையாகிய தழையைத் தலைமகனிடம் பெற்று (அவனுக்குக் குறியிடங்கூறின)ஒண்மையாகிய தொடியையுடைய பாங்கி, நீண்ட மூங்கில் போலுந் தோளையுடைய தலைமகளுடன் விளையாடுமிடம்போகா நிற்றல்.

புயல்வளரூசன்முன்னாடிப்பொன்னேபின்னைப்போய்ப்பொலியு
மயல்வளர்குன்றினின்றேற்றருவி திருவுருவிற்
கயல்வளர்வாட்கண்ணிபோதருகாரந்தீர்த்தருளுந்
தயல்வளர்மேனியனம்பலத்தான்வரைத்தண்புனத்தே.

(இ-ள்.) பொன்னே - பொன்னையொப்பாய்!—ஆரம் தீர்த்தருளும்-(பிறவி காரணமாகவரும்) பயத்தை நீக்கியருள் செய்யும்,—தயல் வளர் மேனியன் அம்பலத்தான் - உமாதேவிதங்கு கின்ற திருமேனியை யுடையவனாகிய திருச்சிற்றம்பலத்தானது,—வரை தண் புனத்து - மலையின்கணுள்ள குளிர்ந்த புனத்தினிடத்து,—புயல் வளர் ஊசல் முன் ஆடி - மேகந்தங்கும் ஊசலை முன்னேயாடி,—பின்னை போய் - பின்னர்ப்போய்,—அயல் பொலியும் வளர் குன்றில் நின்று அருவி ஏற்றும் - அதற்கு அயலாகிய பிரகாசிக்கின்ற உயர்ந்த மலையின்கண் நின்று அருவியை யேற்போம்,—திரு உருவின் கயல்வளர் வாள் கண்ணி - திருப்போல வடிவினையும் கயல்மீனைப்போலும் வாட் கண்ணையுமுடையாய்!—போதரு - நீ போதுவாயாக. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம், உவகையுமாம் ; பயன்-குறியிடத்துப் போதருதல்.

தண்புனத்துப் போதரு என இயைப்பினு மமையும். உயர்ந்த வரைமரத்தில் தொடுத்தலால் புயல் வளருமென்றார். ()

குறியிடத்துக் கொண்டு சேறல்.

அணிவளராடிடத் தாயமெவன் ணி
மணிவளர் கொங்கையை மருங்ககன்றது.

(இ-ள்.) (ஆடிடம் படர்த்த பாங்கி, தலைமகளுக்குத் தான் சொன்ன குறியிடத்துத் தலைமகளைக் கொண்டு சென்றாய்க்கும்போது, ஆயத்தாரைத் தம்மிடத்தில் நின்றும் நீக்கவேண்டுதலின் தினைகாத்தல் முதலாகிய விளையாட்டுக்களைத் தான்கூறவே) அழகு வளரு மாடிடத்து (அவ்வவ் விளையாட்டுக்குரிய) ஆய வெள்ளமானது, மணியாரந் தங்கிய கொங்கையை யுடைய தலைமகளை (பின்னை வருவளெனக் கருதி) அங்கே விடுத்தகன்றது.

தினைவளங்காத்துச்சிலம்பெதிர்கூய்ச்சிற்றின்முற்றிழைத்துச்
சுனைவளம்பாய்ந்துதுணைமலர்கொய்துதொழுதெழுவார்
வினைவளநீறெழநீறணியம்பலவன்றன்வெற்பிற்
புனைவளர்கொம்பரன்னாயன்னகாண்டும்புனமயிலே.

(இ-ள்.) தொழுது எழுவார் வினை வளம் நீறெழ - தொழா நின்று துயிலெழுவாருடைய வினையினதுபெருக்கம் பொடியாக,— நீறு அணி அம்பலவன் தன் வெற்பில்-திருநீற்றை யணிந்த சிற்றம்பலவனது மலையிடத்து,— புனை வளர் கொம்பர் அன்னாய் - அலங்கரிக்கப்பட்ட வளர்கின்ற கொம்பை யொப்பாய்! — தினை வளம் காத்து - தினையாகிய வளத்தைக் காத்தலைச்செய்து, — சிலம்பு எதிர் கூய் - மலைக்கெதிர் அழைத்து, — சிற்றில் முற்றிழைத்து-சிறுவீட்டினை மிகவுஞ்செய்து,— சுனை வளம் பாய்ந்து - சுனைநீரில் மூழ்கி,—துணை மலர் கொய்து - ஒத்த பூக்களைப் பறித்து—அன்ன புனமயில் காண்டும் - அத்தன்மையவாகிய புனத்தின்கணுள்ளமயிலைக் காண்போம் (யாம்). எ - று. மெய்ப்பாடு - பெருமிதம், உவகையுமாம்; பயன்-ஆயம்பிரிதல்.

தினைவளம் என்றது - தினையினது மிகுதியெனினும் மலைக்கு வளமாதல் நோக்கி எனினும் அமையும். தொழுதெழுவாரென்றது - துயிலெழுங் காலத்தல்லது முன்னுணர் வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்பதாம். வினைவள நீறெழ நீறணியம்பலவன் என்றது—நீறணிந்த கோலம் நெஞ்சம் பிணிக்கு மெழிலுடைமையான் அக்கோலந் தொழுதெழுவாருள்ளத்து நீங்காது நிற்றலான் ஆண்டுள்ள வினை நீறுமென்னுங் கருத்தாம். புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற்போலத் தொழுதெழுவார் வினைக்குத் தான் நீறணிந்தா னென்பாருமுளர். வெற்பின் என்புழி வெற்பைத் தினைகாத்தல் முதலிய தொழிற்கு இடமாக வுரைப்பினு மமையும். அன்னபுனமயிலென்றது—இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கண் பாங்கி தனது வாட்டத்தை வினவியபோது யானோர் இளமயிலாலுவதுகண்டேன், அதனை நீயுங் காணப்பெற்றிலையென்று வாடினேனென்றுரைப்பக் கேட்டாளாதலான் அதனைப்பற்றி அம்மயிலைக் காண்டுமென்றுளாயிற்று. (ககஅ)

இடத்துய்த்து நீங்கல்.

மடத்தகைமாதனை யிடத்தகத் துய்த்து
நீங்கலுற்ற பாங்கிபகர்ந்தது.

(இ - ள்.) மடப்பத்தையுடைய தலைமகளைக் குறியிடத்து நிறுத்தி நீங்குகின்ற பாங்கி, சொல்லியது.

நரல்வேயினநினதோட்குடைந்துக்கநன்முத்தஞ்சிந்திப்
பரல்வேயறையுறைக்கும்பஞ்சடிப்பரன்றில்லையன்னாய்
வரல்வேய்தருவனிங்கேநிற்கென்றகன்றாருழற்கீங்
குரல்வேயளிமுரல்கொங்கார்தடமலர்கொண்டுவந்தே.

(இ-ள்.) பரன் தில்லை அன்னாய் - பரனது தில்லையை யொப்பாய்!—உங்கே சென்று-(யான்) அங்கேபோய்,—சாம்குரல் வேய் அளி முரல் கொங்கார் தடமலர் - குளிர்ச்சியையுடைய பூங்

கொத்தை யூழ்ப வண்டுகள் ஒலிக்குந் தாதுநிறைந்த பெரியபூக்களை,—கொண்டுவந்து உன்குழற்கு வேய்ந்தருவன் - பறித்துக்கொண்டுவந்து உன்னுடைய நீண்ட கூந்தலுக்குச் சூடுவேன்,—நாள் வேயினைப் - (காற்றாலொன்றோடொன்று தேய்த்து) ஒலிக்கின்ற மூங்கிலினங்கள்,— நின் தோட்கு உடைந்து உக்கன் முத்தம் இந்தி - உன்னுடையதோளுக்கு அஞ்சி உதிர்ந்த நல்லமுத்துக்கள் சிதறுதலால்,—பரல் வேய் அறை பஞ்சடி உறைக்கும் - பருக்கைகளூடிய பாறை (உனது பஞ்சடியினிடத்து உறுத்தும்,—வரல்-(அதனால் என்றோழி ஆண்டு) வரற்பாலையல்லை,—இங்கே நில் - இவ்விடத்தில் நிற்பாயாக, எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; உவகையுமாம்; பயன் - தலைமகளைக் குறியிடத்துய்த்து நீக்குதல்.

ஈரல்-பூங்கொத்து. தடமலர் என்பதற்கு தடத்து மலரென்றுரைப்பாரு முளர். (கக)

உவந்துரைத்தல்.

களிமயிற்சாயலை யொருசிறைக்கண்ட
ஒளிமலர்த்தாரோ னுவந்துரைத்தது.

(எ-து.) களிப்பினையுடைய மயில்போலுஞ் சாயலையுடையா ளாகிய தலைமகளை (பாங்கி குறியிடத்து நிறுத்தி நீங்கியபின்) ஒரு சிறைப்புறத்திற் கண்ட ஒளியையுடைய மலர்மாலையுடையானாகிய தலைமகன் மகிழ்ந் துரைத்தது.

படமாசுணப்பள்ளியிக்குவடாக்கியப்பங்கயக்க
ணெடுமாலெனவென்னைநீநினைந்தோநெஞ்சத்தாமரையே
யிடமாவிருக்கலுற்றேனினியின்றவனீர்ங்கயிலை
வடமார்முலைமடவாய்வந்துவைகிற்றிவ்வார்பொழிற்கே.

(இ-ள்.) வடம் ஆர் முலை மடவாய் - மணிவடம் பொருந்திய முலையையுடைய மாதே!—இல்லை நின்றவன் ஈரம் கயிலை - இன்

லைக்கண்ணின்றவனது குளிர்ந்த கைலைக்கண்,—வார் இ பொழிற்கு வந்து வைகிற்று - நீண்ட இச்சோலையினிடத்து வந்து தங்கியது,—இ குவடு படம் மாசுணம் பள்ளி ஆக்கி - இந்த மலையைப் படத்தையுடைய பாம்பாகிய சயனமாக்கி,—என்னை பங்கயம் கண் அ நெடுமாலென நீ நினைந்தோ - என்னை (அச்சயனத்திற்றங்கும்) தாமரைப் பூப்போலும் விழியையுடைய அந்நெடிய திருமாலென்று நீ நினைந்தோ?—நெஞ்சம் தாமரையே இடமா இருக்கலுற்றே - (நெடுமாலின் மார்பினன்றித் தாமரையினு மிருந்தலான் யான் நீங்கினும்) என்மனமாகிய தாமரைப் பூவையே நினக்கிடமாக இருக்க நினைந்தோ? (கூறுவாயாக.) எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - தலைமகளைக் கண்டு தன் காதன் மிகுதியாற் றோன்றிய பெருவகையை ஆற்றகில்லான் ஆற்றுதல்.

மாசுணப்பள்ளி - மாசுணத்தாலியன்ற பள்ளியெனினு மமையும். என்னெஞ்சத் தாமரைக்கண் இருக்கலுற்றோ என்றது இப்பொழிற்கண் வந்து நின்ற நிலை ஒருக்காலும் என்னெஞ்சை விட்டகலாதெனை உவந்து கூறியதாம். வான்பொழி லென்பதூஉம் பாடம். (கஉ)

மருங்கணைதல்.

வாணுதலரிவை நாணுதல்கண்ட
கோதைவேலவ னாதரவுரைத்தது.

(எ-து.) (உவந்துரைப்பக் கேட்ட) ஒள்ளிய நுதலையுடைய தலைமகளது நாணுதலைக் கண்ட மாலையை யணிந்த வேலையுடையனாகிய தலைமகன், ஆதரவுகூறி (இறுமருங்குல் தாங்குவானாகிச் சென்று சாருவது).

தோத்தின்மலர்ப்பொழிற்றில்லைத்தொல்லோனருளென்னமுன்
முத்தின்குவைமென்காந்தளின்மூடித்தன்னேரளப்பா [ளி
ளொத்தீர்ங்கொடியொதுங்குகின்றுண்மருங்குன்னெருங்கப்
பித்தீர்பணைமுலைகாளென்னுக்கின்னும்பெருக்கின்றதே.

(இ-ள்.) தொத்து ஈன் மலர் பொழில் தில்லை தொல்லோன் - கொத்துக்களைத் தருகின்ற பூஞ்சோலையையுடைய தில்லைநகர்க் கின்கணுள்ள பழையோனது,—அருள் என்ன முன்னி - அருள் போல வந்தெதிர்ப்பட்டு,—முத்து ஈன் குவளை மெல் காந்தளின் சூடி - (நீர்த்துளியாகிய) முத்தைச் சேர்கின்ற (கண்ணாகிய) குவளைப்பூக்களை (கையாகிய) மெல்லிய காந்தட்பூவால் சூடிக் கொண்டு,—தன் ஏர் அளப்பான் ஒத்து - தன்னழகை அளவிடு வானையொத்து,—ஈரம் கொடியின் ஒதுங்குகின்றான் - குளிர்ச்சி பொருந்திய கொடியினிடத்து (காணி) மறைகின்றவனுடைய,— மருங்குல் நெருங்க - இடையானது நெருங்குண்ண,— பணை முலைகாள் - பருத்த முலைகளே!— பித்தீர் - (நீர்) பித்துடையீர்,— இன்னும் பெருக்கின்றது என்னுக்கு - இன்னும் பெருத்துக்கொண்டு வருகின்றது எதற்கு? (இது நன்றன்று) எ-று. மெய்ப்பாடு - உவகை ; பயன் - சார்தல்.

முலைகள் இடையைத் தமக்காதாரமென்று கருதாது அடர்க் கின்றமை நோக்கிப் பித்தீரென்றான். ஈன்கொடி - மலரீன்ற கொடி. (௧௨௪)

பாங்கியறிவுரைத்தல்.

செறிகுழற் பாங்கி
அறிவறி வித்தது.

(எ-து.) (மருக்கணைந்த தலைமகன் இவ்வொழுக் கம்) செறிந்தகுழலையுடைய பாங்கி யறிந்தவாறிவென் று தலைமகனுக் கறிவித்தது.

அளிநீடளகத்தினட்டியதாதுமணியணியு
மொளிநீள்கரிகுழற்சூழ்ந்தவொண்மாலையுநின்னைநவுண்
களிநீயெனச்செய்தவன்கடற்றில்லையன்னாய்கலங்க
றெளிநீயனையபொன்னேபன்னுகோலந்திருநுதலே.

(இ-ள்.) நீ தன் நறவு உண் களி என செய்தவன் - நீ குளிர்ந்த கள்ளையுண்ணும் களியையுடையானென்று (பிறர்) சொல்லும் வண்ணம் (எனக்கின்பத்தைச்) செய்த இறைவன், — கடல் தில்லையன்னாய் - கடலையுடைய தில்லையை யொப்பாய்!—அளி நீடு அளகத்தின் அட்டியதாதும் - வண்டுகள் மிகவுந் தங்கு கின்ற கூந்தலினிடத்து அப்பியதாதும், — அணி அணியும் - அணிந்த ஆபரணங்களும்,—ஒளி நீள் கரி குழல் சூழ்ந்த ஒண் மாலையும் - ஒளியையுடைய நீண்ட கரிந்த கூந்தலினிடத்துச் சுற்றிய ஒள்ளிய பூமாலையும் (ஆகிய இவையெல்லாம்),—நீ அனைய பொன்னே பன்னு கோலம் - நின்னோடொத்த பாங்கியே ஆராய்ந்து (செய்யும்) கோலமே,—திரு நுதல் - அழகிய நுதலையுடையாய்,—கலங்கல் - (யான் பிறிதோர் கோலஞ் செய்தேனென்று) கலங்கவேண்டா.—தெளி-தெளிவாயாக. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம் ; பயன்-பாங்கியறிந்தமை தலைமகட் குணர்த்துதல்.

பொன்னே யென்பதில் ஏகாரம் பிரிநிலை. அணியணியும் என்பதூஉம் பாடம். (௧௨௫)

உண்மகிழ்ந்துரைத்தல்.

தண்மலர்க் கோதை யை
உண்மகிழ்ந் துரைத்த து.

(எ-து.) (பாங்கியறிவு உரைப்பக்கேட்டு இனி நம க்கொரு குறையில்லையென முகமலர்கின்ற) தண் ணிதாகிய மலர்மாலையணிந்த தலைமகளை (தலைமகன்) உள்ள மகிழ்ந்து கூறியது.

செழுநீர்மதிக்கண்ணிச்சிற்றம்பலவன்றிருக்கழலே
கெழுநீர்மையிற்சென்றுகிண்ணிவாய்க்கொள்ளுங்கள்ளகத்த
கழுநீர்மலரிவள்யானதன்கண்மருவிப்பிரியாக்
கொழுநீர்நறப்பருகும்பெருநீர்மையளிகுலமே.

(இ-ள்.) செழு நீர் மதி கண்ணி சிற்றம்பலவன் திருக்கழலே - செழுமையாகிய நீர்மையுடைய சந்திரனாகிய மாலையையுடைய சிற்றம்பலவனது திருவடிகளையே, — கெழு நீர்மையின் - பொருந்தும் நீர்மையால் (உண்மகிழ்ந்து முகமலர்வது போல), — இன்னினி சென்று - போதாகிய நிலைமையைவிட்டு, — வாய் கொள்ளும் கள் அகத்த கழுநீர் மலர் இவள் - (மலராம் நிலைமையையடைந்து) சிறிதே மலரத்தொடங்கும் தேனை யகத்திலுடைய செங்கழுநீர்ப் பூ இவள், — யான் தன்கண் மருவி பிரியா கொழு நீர் நறவு பருகும் பெரு நீர்மை அளி குலம் - யான் அம்மலரிடத்துப் பொருந்தி நீங்காத கொழுமையாகிய நீர்மையையுடைய தேனையுண்ணும் பெருந்தன்மையையுடைய வண்டுசாதி. எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - நயப்புணர்த்துதல்.

செழுநீர்மதிக்கண்ணி - வளவியநீரும், மதியாகிய கண்ணியும் என்பாருமுளர். திருக்கழலே என்பதில் ஏகாரம் பிரிநிலை. செழுநீர்மையை யுடைய கழுநீர்மல ரென்றியைப்பினு மமையும். சென்று இன்னினிவாய்க்கொள்ளு மென்பதனால் பேதைப் பருவங்கடந்து இன்பப்பருவத்த ளாயினாளென்பது விளங்கும். கள்ளகத்த வென்பதனால் - புலப்படாதுள்ளே நிறைந்த காதலென்பது விளங்கும். கள்ளகத்த கழுநீர்மல ரென்றது காலைக்குருகென்பதுபோல நின்றது. கழுநீர் மலரல்லது உளதாகாமையின் பெருநீர்மை யளிகுல மென்றான்; அதனால் வேறோரிடத்துந் தன்னுள்ளஞ் செல்லாமை விளங்கும். (கஉங)

ஆயத்துய்த்தல்.

கனைகடலன்ன கார்மயிற் கணத்துப்
புனைமடமானைப் புகவிட் டது.

(எ-து.) (மகிழ்வுற்றுப் பிரியலுறுகின்ற தலைமகன்) ஒலிக்கின்ற கடல்போன்ற கார்காலத்து மயில்போன்ற ஆயத்தார் கூட்டத்து அலங்கரிக்கப்பட்ட இளமான்போன்ற தலைமகளைப் போகவிட்டது.

கொழுந்தாரகைமுகைகொண்டலம்பாசடைவிண்மடுவி
லெழுந்தார்மதிக்கமலமெழிறந்தெனவிப்பிறப்பி
லழுந்தாவகையெனையாண்டவன்சிற்றம்பலமனையாய்
செழுந்தாதவிழ்பொழிலாயத்துச்சேர்கதிருத்தகவே.

(இ-ள்.) இப்பிறப்பில் அழுந்தாவகை எனை ஆண்டவன் சிற்றம்பலம் அனையாய் - இப்பிறவியின்கண் அழுந்தாத வண்ணம் என்னை அடிமைகொண்டவனது சிற்றம்பலத்தை யொப்பாய்! — கொழு தாரகை முகை - கொழுவிய விண்மீனாகிய அரும்பையும், — கொண்டல் பாசடை - மேகமாகிய பசிய இலையையும் (உடைய), — விண் மடுவில் - ஆகாயமாகிய மடுவின்கண், — எழுந்து ஆர் மதி கமலம் - எழுந்து நிறைந்த சந்திரனாகிய தாமரைப்பூ, — எழில் தந்தென - தனது அழகைப் புலப்படுத்தினாற் போல, — செழு தாது அவிழ் பொழில் ஆயத்து - செழுமையாகிய தாது அவிழ்கின்ற சோலையின்கண் (விளையாடுகின்ற) மாதர் கூட்டத்தில், — திருத்தக சேர்க - பொலிவுற (இனி) சேர்வாயாக. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - புறத்தாரறியாமைப் பிரிதல்.

கொண்டலம் என்பதில் அம் சாரியை - அல்வழிக்கண் வந்தது. அம் அழகெனினு மமையும். முகையோடு தாரகைக்கொத்த பண்பு - வெண்மைவடிவும் பன்மையும். தாரகையோடாயத்தார்க்கொத்த பண்பு - பன்மையும் ஒன்றற்கொன்று சுற்றமாய் அதனிற்றாழ்ந்து நிற்றலும். கமலத்தோடு மதிக்கொத்த பண்பு - வெண்மையும் வடிவும் பொலிவும். மதியோடு தலைமகட்கொத்த பண்பு - கட்கினிமையும் சுற்றத்திடை அதனின்மிக்குப் பொலிதலும். இவ்வாறொத்த பண்பு வேறுபடுதலான் உவமைக்குவமை யாகாமை யறிந்துகொள்க. (கஉச)

தோழிவந்துகூடல்.

நெறியுறுகுழலியை நின்றிடத்துய்த்து ப்
பிறைநுதற்பாங்கி பெயர்ந்தவட்குரைத்தது.

(எ-து.) பிறைபோலு நெற்றியையுடையபாங்கி, நெறிந்த கூந்தலையுடைய தலைமகளைக் குறியிடத் துய்த்து நீங்கிநின்று (தலைமகன் பிரிந்தபின்) மீண்டு சென்று அவளுக்குச் சொன்னது.

பொன்னனையான்றில்லைப்பொங்கரவம்புன்சடைமிடைந்த
மின்னனையானருண்மேவலர்போன்மெல்விரல்வருந்த
மென்னனையாய்மறியேபறியேல்வெறியார்மலர்க
ளின்னனயான்கொணர்ந்தேன்மணந்தாழ்குழற்கேய்வனவே.

(இ-ள்.) ஆய் மறியே - ஆராயப்பெற்ற மானையொப்பாய்!— பொன் அனையான் - பொன்னை யொப்பான். — தில்லை பொங்கு அரவம் புன் சடை மிடைந்த மின் அனையான் - தில்லையி லுறைவோனாகிய வெகுளாநின்ற பாம்பு புல்லிய சடையின்க ணெருங்கிய மின்னையொப்பான். — அருள் மேவலர்போல - (அவனது) அருளைப் பொருந்ாதவரைப்போல,—மென் விரல் வருந்த - மென்மையாகிய விரல்கள் வருந்த,—மென் அனை பறியேல் - மெல்லிய முகைகளைப் பறியாதொழிவாயாக,— மணம் தாழ் குழற்கு ஏய்வன வெறி ஆர் மலர் - (நின்) மணந்தங்கிய கூந்தலுக்குப் பொருந்துவனவாகிய வாசனை நிறைந்த மலர்கள், — இன்னன யான் கொணர்ந்தேன் - இத்தன்மையனவற்றை யான் கொண்டுவந்தேன். எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளை யாற்றுவித்தல்.

இவள் மலரைப்பறியாமல் மொட்டைப் பறிப்பாளோ வெனின், இவள் தலைமகனைப்பிரிந்த பிரிவாற்றாமையாலும், தலைமகன் புணர்ச்சி நீக்கத்தின்கண் செய்த கோலத்தைப் பாங்கி கண்டவளென்னும் பெருநாணினாலும், ஆற்றாளாய் மலரைப்

பறிக்கின்றவள் மயங்கி மொட்டைப் பறித்தாளென வறிக. மொட்டுக்களைப் பறியாதொழி நின்குழற்கு நறுமலர் கொண்டு வந்தேன் என்பதனான் இவ்வொழுக்கம் யானு மறிவேனென உடம்பாடு கூறியவாறாயிற்று. என்னனையாய் கொணர்ந்தேன் என்பதூஉம் பாடம். மிடைந்த என்னும் பெயரெச்சம் மின்ன னையானென்னும் வினைப்பெயர் கொண்டது. அரவஞ்சடைமிடை தலை மின்மே லேற்றி இல்பொருளுவமையாக வுரைப்பாரு முளர். இல்பொருளுவமை யெனினும், அபூதவுவமை யெனினு மொக்கும். (கஉ௫)

ஆடிடம்புகுதல்.

தனிவிளையாடிய தாழ்குழற்றோ ழி
பனிமதிநுதலியோ டாடிடம்படர்ந்தது.

(எ - து.) தனித்துவிளையாடிய தாழ்ந்த கூந்தலை யுடையபாங்கி (கொய்துவந்தமலரை) குளிர்ச்சிபொருந்திய மதிபோலு நெற்றியையுடைய தலைமகளுக் (களித்து) அவளோடு ஆடிடம் புகுந்தது.

அறுகானிறைமலரைம்பானிறையணிந்தேனணியார்
தறுகான்மலர்த்தொத்துத்தோகைதொல்லையமெல்லப்புகுக
சிறுகான்மருங்குல்வருந்தாவகைமிகவென்சிரத்தி
னுறுகால்பிறர்க்கரியோன்புலியூரன்னவொண்ணுதலே.

(இ-ள்.) என் சிரத்தின் மிக உறு கால் பிறர்க்கு அரியோன் - என்தலையினிடத்து மிகவும் பொருந்தியதிருவடிகளை பிறர்க்கு (அளிக்க) அரியவனது, — புலியூர் அன்ன ஒள் நுதல் - புலியூரை யொத்த ஒள்ளிய நெற்றியையுடையாய்! — அறுகால் நிறை மலர் ஐம்பால் - வண்டுகள்நிறைந்த மலரையுடைய (உன்) கூந்தலினிடத்து, — அணி ஆர் தறு கான் மலர்தொத்து நிறை அணிந்தேன் - அழகுநிறைந்த நெருங்கிய வாசனையையுடைய பூங்கொத்துக்களை நிறையப் புனைந்தேன்,—தோகை -, தோகை

யையொப்பாய்! — சிறுகால் மருங்குல் வருந்தாவகை - சிறிய இடத்தையுடைய இடையானது வருந்ாதவண்ணம்,—தொல் ஆயம் மெல்ல புகுக - பழையதாகிய மகளிர் கூட்டத்தில் மெல்லச் சேர்வாயாக. எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகனை யாற்றுமை நீக்குதல்.

அறுகானிறை மலரை யணிக்தேனென்றும், மலர்க்கொத்துக் கனையுடைய தோகாயென்றும், உரைப்பாருமுளர். நிறையவென் பது நிறையெனக் குறைந்து நின்றது. கால்என்னுஞ் சினைவினை பிறர்க்கரியோ னென்னும் தன்வினைக்கேலா வெழுந்துக்கொண்டது. (௧௨௬)

தனிகண்டுரைத்தல்.

வேயொத்ததோளியை யாயத்துய்த்துக்
குனிசிலையண்ணலைத் தனிகண்டுரைத்தது.

(எ - து.) மூங்கில் போன்ற தோளையுடைய தலைமகளை ஆயத்திற் செலுத்தி, வளைந்த வில்லையுடைய தலைமகனைத் தனிமையாகக்கண்டு கூறியது.

தழங்குமருவியெஞ்சீறூர்பெருமவிதுமதுவுங்
கிழங்குமருந்தியிருந்தெம்மொடின்றுகிளர்ந்துகுன்றோர்
முழங்குகுரவையிரவிற்கண்டேகுமுத்தன்முத்தி
வழங்கும்பிரானெரியாடிதென்றில்லைமணிநகர்க்கே.

(இ - ள்.) பெரும - பெருமையை யுடையாய்!—தழங்கும் அருவி இது எம் சீறூர் - ஒலிக்கும் அருவியையுடைய இஃது எமது சிறிய வூர், — மதுவும் கிழங்கும் அருந்தி - (இதன்கண் யாமருந்தும்) தேனையும் கிழங்கையும் (நீயும்) உண்டு, — இருந்து எம்மொடு இன்று - இன்று எம்மோடுதங்கி, — குன்றோர் கிளர்ந்து முழங்கும் குரவை இரவில் கண்டு - குறவர் எழுந்து ஒலிக்கின்ற (இந்நிலத்து விளையாட்டாகிய) குரவையாடலை

இரவிலேபார்த்து,—முத்தன் - (இயல்பாகவே பாசங்களை) நீங் கினவன்,—முத்தி வழங்கும் பிரான் - மோக்ஷத்தை அன்பர்க் களிக்கு முதல்வன்,—எரி ஆடி - ஊழித்தீயின்கண் ஆடுவோன்,— தென் தில்லை மணிநகர்க்கு ஏகுக - (அவனது) தெற்கின்கண் உள்ள தில்லையாகிய (சிறந்த) அழகிய நகரத்திற்கு (நாளை) போவாயாக. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - குறிப் பினாற் பிரிவாற்றாமை கூறிவரைவு கடாதல். ஏற்பார் மாட் டொன்றுங் கருதாது கொடுத்தலின் வழங்குமென்றார். (௧௨௭)

பருவங்கூறி வரைவுவிலக்கல்.

மாந்தளிர்மேனியை வரைந்தெய்தா
தேந்தலில்வா றியம்பலென்றது.

(எ-து.) (உலகியல் கூறுவாள்போன்று குறிப்பால் வரைவுகடாய பாங்கி) மாந்தளிர்போலும் மேனியை யுடைய தலைமகளை வரைந்தடையாது தலைமகனே இவ்வண்ணம் மொழுகவேண்டா மென்றது.

தள்ளிமணிசந்தமுந்தித்தறுகட்கரிமருப்புத்
தெள்ளிநறவந்திசைதிசைபாயுமலைச்சிலம்பா
வெள்ளிமலையன்னமால்விடையோன்புலியூர்விளங்கும்
வள்ளிமருங்குல்வருத்துவபோன்றவனமுலையே.

(இ-ள்.) மணி தள்ளி - மணிகளைத்தள்ளி,—சந்தம் உந்தி - சந்தனமரங்களை உந்திக்கொண்டு,—தறுகண் கரி மருப்பு தெள்ளி - பகைமையையுடைய யானையின் கொம்புகளைக் கொழித்து,—நறவம் திசைதிசை பாயும் - தேன் திசைதோறும் பாய் கின்ற,—மலைச்சிலம்பா - மலையையுடைய சிலம்பனே!—வெள் ளிமலை அன்ன மால்விடையோன் - (தனது) வெள்ளிமலையாகிய கைலையையொக்கும் பெரிய இடபத்தை யுடையவனது,—புலி யூர் விளங்கும் வள்ளி மருங்குல் - புலியூரைப்போல் பிரகாசி யாநின்ற நுசுப்பினது இடையினை, — வன முலை வருத்துவ

போன்ற - அழகிய முலைகள் (வளராநின்றபடியால்) வருத்துவனபோன்றன. (இனிவரைந் தெய்துவாயாக.) எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன்வரைவு கடாதல்.

சிலம்பனென்பது அதனை யுடையானென்னும் பொருண்மைக் கண்ணதோர் வினைப்பெயராய் நின்றது. புலியூர் புரையுமென்பதூஉம் பாடம். யாவருமறியா இம்மலைக்கண் வைத்ததேன் முதிர்ந்து சிந்த அருவிபோன் றெல்லாருங் காணத்திசை திசைபரந்தாற்போல மறைந்த காமம் இவள் கதிர்ப்புவேறுபாட்டாற் புறத்தார்க்குத்தெரிய வெளிப்படாநின்றதெனஉள்ளுறை யுவமையாயிற்று. (௧௨௮)

வரைவுடம்படாது மிகுத்துக்கூறல்.

வரைவுகடாய வாணுதற் றோழிக் கு
விரைமலர்த்தாரோன் மிகுத்துரைத்தது.

(எ-து.) (புருவங்கூறி) வரைவுகடாய ஒளியமைந்த நெற்றியையுடைய பாங்கிக்கு மணங்கமழும் மலர்மாலையணிந்த தலைமகன் வரைவுடம்படாது தலைமகளை மிகுத்துக் கூறியது.

மாடஞ்செய்பொன்னகருந்நிகரில்லையிம்மாதர்க்கென்னப்
பீடஞ்செய்தாமரையோன்பெற்றபிள்ளையையுள்ளலரைக்
கீடஞ்செய்தென்பிறப்புக்கெடத்தில்லைநின்றோன்கயிலைக்
கூடஞ்செய்சாரற்கொடிச்சியென்றேநின்றுகூறுவதே.

(இ-ள்.) மாடம் செய் பொன்னகரும் - மாடமாகச் செய்யப்பட்ட அமராவதிக்கண்ணும்,— இ மாதர்க்கு நிகரில்லை என்ன - இம்மாதர்க்கு ஒப்பில்லையென்று சொல்லும்படி,—பீடம் செய் தாமரையோன் பெற்ற பிள்ளையை - தாமரைப்பூவி லிருக்கின்ற நான்முகன் ஈன்ற குழவியாகிய (இவனை),— உள்ளலரை கீடம் செய்து - தன்னை நினையாதாரைப் புழுக்களாகச் செய்து,—என் பிறப்பு கெட தில்லை நின்றோன் - (நான் தன்னை நினைவேனாகச் செய்து அதனால்) என் பிறவி அழியத் தில்லைக்கண்ணின்றவனது,— கயிலை கூடம்செய் சாரல் - கைலைக்கண் கூடமாகச் செய்யப்பட்ட சாரலிடத்தி லிருக்கின்ற,— கொடிச்சியென்றே நின்று கூறுவது - குறத்தியென்றே (நீ) நின்று சொல்லுவது (இவ்வாறு சொல்லற்பாலையல்லை). எ - று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - தலைமகனது விருப்புணர்த்துதல்.

கூடமென்றது மன்றாகச் செய்யப்பட்ட தேவகோட்டத்தை, கூடஞ்செய்சாரலென்பதற்கு மாத்திரளாற் கூடஞ்செய்தாற் போலுஞ் சாரலெனினும், கூடஞ்செய்தாற்போலு முழைகளையுடைய சாரலெனினு மமையும். (௧௨௯)

உண்மைகூறிவரைவுகடாதல்.

கல்வரைநாட னில்லதுரைப் ப
ஆங்கவ ளுண்மை பாங்கி பகர்ந்தது.

(எ - து.) சிலம்பனாகிய தலைமகன், வரைவுடம்படாது மிகுத்துக்கூறப் பாங்கி, தலைமகளது உண்மையைக்கூறி வரைவு கடாயது.

வேய்தந்தவெண்முத்தஞ்சிந்துபைங்கார்வரைமீன்பரப்பிச்
சேய்தந்தவானகமானுஞ்சிலம்பதன்சேவடிக்கே
யாய்தந்தவன்புதந்தாட்கொண்டவம்பலவன்மலையிற்
றாய்தந்தைகாவலரேனலெங்காவலித்தாழ்வரையே.

(இ-ள்.) வேய்தந்த வெள்முத்தம் சிந்து பை கார் வரை-மூங்கில்தந்த வெண்மையாகிய முத்துகள் சிந்திய (சோலைகளால்) பசிய கருமையாகிய தாழ்வரை,—மீன் பரப்பி சேய் தந்த வானகம் மானும் - நக்ஷத்திரங்களைப் பரப்பிச் சேய்மையைப்புலப்படுத்திய ஆகாயத்தையொக்கும்,— சிலம்ப - மலையையுடையாய்!—தாய்தந்தை - (எமக்கு) தாயுந்தந்தையும்,— தன் சேவடிக்கு ஆய்தந்த அன்பு தந்து - தனது சிவந்ததிருவடிக்கு ஆராயப்பட்ட அன்பைக் கொடுத்து,— ஆட்கொண்ட அம்பலவன்

மலையில் - (என்னை) அடிமையாகக்கொண்ட சிற்றம்பலவனது மலையிலிருக்கின்ற,—கானவர் - குறவரோ,—இ தாழ்வரை எனல் எம்காவல்-இந்தத் தாழ்வரையிலுண்டாகிய தினை எமதுகாவலா யிருக்கும் ; (அதனால் நீவரைவு வேண்டாமையின் புணர்ந்து கூற வேண்டுவதில்லை). எ - று. மெய்ப்பாடு - பெருமிதம் ; பயன் - வரைவு கடாதல். வினைமுதலல்லாத கருவிமுதலாயின அவ்வினை முதல் வினைக்குச் செய்விப்பனவா மாதலின் பரப்பி எனச் செய்விப்பதாகக் கூறினர். (கஙo)

வருந்தங்கூறிவரைவுகடாதல்.

கனங்குழைமுகத்தவன்மனங்குழைவுணர்த்தி
நிரைவளைத்தோளிவரைவுகடாயது.

(எ-து.) கனமாகிய குழையை யணிந்த முகத்தை யுடைய தலைமகளது மனத்தின் குழைவினை (தலைமக னுக்கு) அறிவித்து நிரைவளையணிந்த கையையுடை ய பாங்கி தன் வருத்தங்கூறி வரைவு கடாயது.

மன்னுந்திருவருந்தும்வரையாவிடினீர்வரைவென்
றுன்னுமதற்குத்தளர்ந்தொளிவாடுதிரும்பரெல்லாம்
பன்னும்புகழ்ப்பரமன்பரஞ்சோதிசிற்றம்பலத்தான்
பொன்னங்கழல்வழுத்தார்புலனென்னப்புலம்புவனே.

(இ - ள்.) வரையாவிடின் மன்னும் திரு வருந்தும் - விவாகஞ் செய்யாவிட்டால் மிகவும் திருமகளையொப்பாள்வருந்துவாள்,—நீர் வரைவென்று உன்னுமதற்கு தளர்ந்து ஒளி வாடுதிர் - நீயிர் கலியாணமென்று நினைக்குமதற்கு மனந்தளர்ந்து ஒளிவாடா நின்றீர் (இவ்வாறு நும்முள்ளம் மாறுபட நிகழ்தலின்),—உம்பரெலாம் பன்னும் புகழ் பரமன் - தேவரெல்லாம் ஆராய்கின்ற புகழையுடைய பரமன்,—பரஞ்சோதி - (எல்லாப்பொருட்கும்) அப்பாலாகியவொளி, — சிற்றம்பலத்தான் - (அன்பர்க்கு இப் பாலாய்) சிற்றம்பலத்தின்கண் உள்ளவன்,—பொன்னங்கழல்-

(அவனது) பொன்னையொக்குந்திருவடியை, — வழுத்தார் புல னென்ன - துதியாதவருடைய அறிவுபோல,—புலம்புவன்- (யா ன்தனிமையுற்று) வருந்துவேன். எ-று. மெய்ப்பாடு - அச்சம் ; பயன் - வரைவு கடாதல்.

மன்னுந் திருவென்பதற்கு நிலைபெறுந் திருவென் றுரைப் பாருமுளர். மன்னுமென்பது ஓரிடைச்சொல். புலனென்னவெ ன்பதற்குச் சுவைமுதலாகிய தம்பொருள் பெறாது வழுத்தாதா ரைம்பொறியும் புலம்புமாறுபோல வெனினுமமையும். இருவ ருள்ள நெகிழ்ச்சியுங் கூறுவாள்போன்று தலைமகள் தாற்றுமை கூறி வரைவு கடாயது. (கஙச)

நாயச்சங்கூறிவரைவுகடாதல்.

மடத்தகைமாதர்க் கடுப்பனவறியா
வேற்கட்பாங்கி யேற்கவுரைத்தது.

(எ - து.) (எம்முடையஅன்னை) மடப்பம்பொருந் திய தகைமையையுடைய தலைமகளது பருவங்கண்டு (மகட்பேசுவார்க்கு இனி கொடுக்கவுங் கூடுமென) வேல்போலுங் கண்ணையுடைய பாங்கி, அறிந்து தலை மகனுக்கு முற்பட வரைவரென வுரைத்தது.

பணித்துண்டஞ்சூடும்படர்சடையம்பலவன்னுலகந்
தனித்துண்டவன்றொழுந்தாளோன்கயிலைப்பயில்சிலம்பா
கனித்தொண்டைவாய்ச்சிறுநீர்முலைப்பாரிப்புக்கண்டழிவுற்
றினிக்கண்டிலம்பற்றுச்சிற்றிடைக்கென்றஞ்சுமெம்மனையே.

(இ-ள்.) பணி துண்டம் சூடும் படர் சடை அம்பலவன் - பணி யையுடைய துண்டமாகியபிறையைச் (சூடும்) பரவிய சடையை யுடைய சிற்றம்பலவன்.—உலகம் தனித்து உண்டவன் தொழும் தாளோன் - உலகத்தைத் தனித்துநின்று உண்டவனாகியதிரு மால் வணங்குந் திருவடியை யுடையவன்.—கயிலை பயிலும் சி லம்பா - (அவனது) கைலாயமலையினிடத்து வாசஞ்செய்கின்ற

சிலம்பனே! — கனி தொண்டை வாய்ச்சி கதிர் நுதல் பாரிப்பு கண்டு - தொண்டைக் கனிபோலும் வாயை யுடையாளுடைய பிரகாசிக்கின்ற நுதலகனது பாரித்தலைக்கண்டு, — அழிவுற்று - (நெஞ்சம்) அழிந்து,—எம் அன்னை-எம்முடைய அன்னை,—சிற் றிடைக்கு இனி பற்று கண்டிலம் என்று அஞ்சும் - இவள் சிறிய இடைக்கு இனி ஒருபற்றுக்கோடுங் கண்டிலேம் என்றஞ்சுகின்ற னள். (இனி அடுப்பனவறியேன்). எ-று. மெய்ப்பாடு - அச்சத் தைச்சார்ந்த பெருமிதம் ; பயன் - செறிப்பறி வுறுத்து வரைவு கடாதல்.

துண்டம் ஒருபொருளின்று கூறு. பாரிப்பு - அடியிற்றலை யினு மமையும். இளமைப்பருவம் புகுந்தமையான் மகட்கூறு வார்க்கு அன்னைமறுக்காது கொடுக்கும், ஆகலான் நீமுற்பட்டு வரைவாயாகவெனத் தோழியேற்கக் கூறியபடியாம். (கஙஉ)

இற்செறிவறிவித்துவரைவுகடாதல்.

விற்செறி நுதலி யைய
இற்செறி வுரைத்தது.

(எ-து.) (தாயச்சங்கூறி வரைவுகடாயபாங்கி) விற் போலு நெற்றியையுடைய தலைமகளைப் புறம்போக வேண்டாவெனத் தாய் கூறினமையால் இனி இல் லில்வின்க ணிருக்கச்செய்வாள் போலுமெனத் (தலை மகனுக்கு) அறிவித்து வரைவு கடாயது.

ஈவிளையாடநறவிளைவோர்ந்தெமர்மால்பியற்றும்
வேய்விளையாடும்வெற்பாவுற்றுநோக்கியெம்மெல்லியலைப்
போய்விளையாடலென்றாளன்னையம்பலத்தான்புரத்திற்
றீவிளையாடநின்றேவிளையாடிதிருமலைக்கே.

(இ-ள்.) ஈ விளையாட நறவு விளைவு ஓர்ந்து - தேனீக்கள்பறக் து விளையாட (அவ்விளையாட்டான்) தேனினது விளைவை யறிந் து,—எமர் மால்பு இயற்றும் வேய் விளையாடும் - எம்முடைய

வர் கண்ணேணியைச் செய்கின்ற மூங்கில்கள் அசைந்தா டும்,—வெற்பா - மலையையுடையாய்!—உற்று நோக்கி - குறித் துப்பார்த்து, — எம் மெல்லியலை - எம்முடைய மிருதுவாகிய இயல்பையுடையாளை, — அன்னை - தாயானவள், — அம்பலத் தான் - அம்பலத்தினிடத்துள்ளான், — புரத்தில் தீ விளையாட நின்று - முப்புரத்தினிடத்தில் நெருப்பை விளையாடும்படி நின் று,—ஏ விளையாடி - அம்புத்தொழிலால் விளையாடுவோன்,—திரு மலைக்கு-(அவனது)திருமலைக்கு,—போய் விளையாடல் என்றாள்- (புறம்) போய் விளையாடவேண்டாமென்று சொன்னாள். எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம் ; பயன் - செ றிப்பறிவுறுத்து வரைவு கடாதல்.

போய்விளை யாடுகென்று ரென்பது பாடமாயின், உற்று நோக்கி, இன்றுபோய் விளையாடுக வென்றாள். அக்குறிப்பால் நாளை இற்செறிப்பாள் போலுமென வுரைக்க. ஈவிளையாட்டாற் றேன்விளைவை யோர்ந்து எமர்மால் பியற்று மாறுபோல, கதிர்ப் புவேறுபாட்டால் இவளுள்ளத்துக்கரந்த காம முணர்ந்து மேற் செய்வன செய்யக் கருதாநின்றாளென உள்ளுறை காண்க. எமர்மால்பியற்றும் வெற்பா என்றதனால் தாம் அந்நிலத்து மக்க ளாதலும் அவன் தலைவனாதலுங் கூறினாளாம். (கஙங)

தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்.

விற்செறி நுதலியை யிற்செறி விப்பவொண்
ணொளிவேலவற்கு வெளியேயுரைத்தது.

(எ-து.) (இற்செறிவித்து வரைவுகடாயபாங்கி) விற்போலு நெற்றியையுடைய தலைமகளை (தமர்) இற்செறி விப்பரென்று ஒளிவேலையுடைய தலைமகனு க்குரைத்து அயலவரும்மகட் பேசாநின்றாரெனத்தம மவர் நினைவை வெளிப்படக் கூறி வரைவு கடாயது.

சுற்றுஞ்சடைக்கற்றைச்சிற்றம்பலவற்றொழா தவர்தொல்சீர்
கற்றுமறியலரிற்சிலம்பாவிடைநைவதுகண்
டெற்றுந்திரையின்னமிர்தையினித்தமரிற்செறிப்பார்
மற்றுஞ்சிலபலசீறூர்பகர்பெருவார்த்தைகளே.

(இ-ள்.) சிலம்பா - வெற்பனே!—சுற்றும் சடை கற்றை சிற்றம்பலவன் தொழாது - சுற்றப்பட்ட சடைத்திரளையுடைய சிற்றம்பலவனை (முற்பிறவிகளில்) வணங்காமையால், — சுற்றும் தொல் சீர் அறியலரின் - (நூல்களைப்) படித்தும் (அவனது) பழமையாகிய புகழை அறியாதாரைப்போல,—இடை நைவது கண்டு - மருங்குலானது (முலையைத் தாங்கலாற்றாது) வருந்துதலைக்கண்டு,—எற்றும் திரை இன் அமிர்தை - அடிக்கின்ற திரையையுடைய கடலிற் பிறந்த இனிய அமிர்தத்தையொப்பாளை,—இனி தமர் இல் செறிப்பார் - இப்பொழுது சுற்றத்தார் இல்லின்கண் தங்கியிருக்கச் செய்வார், — மற்றும் சீறூர் பகர் பெருவார்த்தைகள் சிலபல - இதுவுமன்றி இச்சிறியவூரார் சொல்லும் பெரியமொழிகள் சிலபல வுள்ளன. எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செறிப்பறிவுறுத்து வரைவு கடாதல்.

சீறூர்ப்பகரொன்பதூஉம் பாடம். எற்றுந்திரையென்பது சினையாகிய தன்பொருட்கேற்ற வடையடுத்து நின்றதோராகுபெயர். இற்செறிப்பாரென்பது ஆீற்றுமுற்றுச்சொல். சிலபலவென்பது பத்தெட்டுள வென்பதுபோலத் துணிவின்மைக்கண் வந்தது. (கசஎ)

எதிர்கோள்கூறி வரைவுகடாதல்.

ஏந்திழைத்தோழி யேந்தலைமுன்னிக்
கடியாமாறு நொடிகென்ற து.

(எ-து.) ஏந்துகின்ற ஆபரணங்களையுடைய பாங்கி, தலைமகனை முற்பட வரைவுடன் வருவாயாகவெனச் சொல்லியது.

வழியுமதுவன்னையென்னின்மகிழும்வந்தெந்தையுநின்
மொழியின்வழிநிற்குஞ்சுற்றமுன்னேவயமம்பலத்துக்
குழியும்பரேத்துமெங்கூத்தன்குற்றாலமுற்றும்மறியக்
கெழியும்மவேபணைத்தோள்பலவென்னோவிளக்கின்றதே.

(இ-ள்.) வழியும் அது - (இவளை நீ யெய்துதற்கு) முறைமையும் வரைவுவேண்டுதலே,—அன்னை என்னின் மகிழும் - (இவள் நலத்துக்குத் தக்க கணவனை வேண்டுவளாகலின் நீ வரைவுவேண்டியிடத்து) தாயானவள் என்னைப்போல மகிழ்வாள்,—வந்து எந்தையும் நின்மொழியின்வழி நிற்கும் - (தகுதிநோக்கி) வந்து என்பிதாவும் உன்னுடைய சொல்லின்வழியே நிற்பான்,—சுற்றம் முன்னே வயம் - (இவளோடு நின்னிடை நிகழ்ந்தது குறிப்பானறிந்த) சுற்றத்தாரும் (நீ வரைவுவேண்டுதல்) முன் உனக்கு வசமாயிருப்பர்,—பல விளக்கின்றது என் - பல சொல்லுகின்றதென்,—குழி உம்பர் ஏத்தும் அம்பலத்து எம் கூத்தன் - கூடித் தேவர்களாற் றுதிக்கப்படும் அம்பலத்தின்கணுள்ளனாகிய எம்முடைய கூத்தனது,—குற்றாலம் முற்றும் அறிய கெழிய - குற்றாலமுழுதும் அறியப் பொருந்திய,—உம்மவே பணைத் தோள்-உம்முடையனவே பருத்ததோள்கள். (ஐயுறவேண்டா.) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்; பயன் - செறிப்பறிவுறுத்து வரைவு கடாதல்.

குற்றால முற்றுமறியக்கெழியவென்பதற்கு மறைந்தொழுகாது எல்லாருமறிய வரைவொடு வருவாயாகவென்றுரைப்பாருமுளர். கெழிஇய என்பது கெழியெனக்குறைந்தது.

கஉஎ - முதல் கஙடு-வரையில் செறிப் பறிவுறுத்து வரைவு கடாயின வென்பது. இவையெல்லாம் தோழியிற் கூட்டமும் தோழியிற் கூட்டத்தின் விகற்பமுமென வறிக. எந்தையுமென்பது இறந்ததுதழீஇய எச்சவும்மை. வழியுமென்பது உபாயமாதலே யன்றியென்றறிக. முன்னே வயமென வேறுபடுத்துக்

கூறலாற் சுற்றமுமெனை யும்மைகொடாது கூறினான். கலமுங் குலமு முதலியவற்றான் வேறாராயினும்வடுவையஞ்சி கோவரென் பது பயப்பக் குலமுற்று மறியக் கெழீஇய என்றான். கெ ழீஇய என்றது குறைந்து நின்றது. இன்மொழியென்று உம் மவேயென்றது * 'என்னீரறியாதீர்போல விவைகூற, நின் னீரவல்ல நெடுந்தகாய்' என்பதுபோல ஈண்டும் பன்மையு மொருமையும் மயங்கின்றன. (கஉ௫)

ஏறுகோள் கூறி வரைவுகடாதல்.

என்னையர் து ணி
வின்ன தென்ற து.

(எ - து.) (எதிர்கோள்கூறி வரைவுகடாயபாங்கி) என்னையன்மாரது துணிவு (விடையின் மருப்பைத் திருத்தி விடுதலெனக்) கூறி வரைவு கடாயது.

படையார்கருங்கண்ணிவண்ணப்பயோதரப்பாரமுநுண்
ணிடையார்மெலிவுங்கண்டண்டர்களீர்முல்லைவேலியெம்மூர்
விடையார்மருப்புத்திருத்திவிட்டார்வியன்றென்புலியூ
ருடையார்கடவிவருவதுபோலுமுருவினதே.

(இ-ள்.) படை ஆர் கரு கண்ணி - படைக்கலத்தை யொத்த கரிய கண்ணை யுடையாளுடைய,—வண்ணம் பயோதரம் பா ரமும் - நிறம்பொருந்திய முலைகளின் பாரத்தையும், — நுண் இடையார் மெலிவும் கண்டு - நுட்பமாகிய இடையாரது மெ லிவையும் பார்த்து,—அண்டர்கள் - (என்னையராகிய) இடை யர்கள்,—ஈரம் முல்லை வேலி எம்மூர் - குளிர்ச்சி பொருந்திய முல்லையாகிய வேலியையுடைய எம்மூரினிடத்து,—விடை ஆர் மருப்பு திருத்தி விட்டார் - எருதினது நிரம்பிய கொம்பை திருந்தச்செய்து விட்டார்கள்,—வியன் தென் புலியூருடையார்

* கலித்தொகை. செய்யுள்-௬. வரி-எ-அ.

கடவி வருவதுபோலும் உருவினது-(அவ்விடை) அகன்ற தென் புலியூரை யுடையவர் செலுத்திவரும் இடபத்தை யொக்கும் வடிவத்தை யுடையது (இனி என் நிகழும்). எ - று. மெய்ப் பாடு-அச்சத்தைச்சார்ந்த பெருமிதம் ; பயன்-ஏறுகோளுணர்த் தி வரைவு கடாதல்.

இயல்வதுமேற் கொள்ளாமையின் இடையாரென விழித்துக் கூறினான். முல்லையையுடைய வேலியெனினு மமையும். விடை யார் மருப்புத் திருத்திவிட்டார் நினக்குற்றது செய்யென்பத னைக் கேட்டுத் தலைமகனுள்ளம் வாடினான், அஃதெற்றிற்கெனின் ஏறுதழுவிக் கோடல் தங்குலத்திற்கு மரபாகலானும், தமக்குப் பொதுவர் பொதுவியரென்று பெயராகலானும், அவ்வேற்றைத் தன்னின் முற்பட்டொருவன் றழுவவுந் தகுமென் றுள்ளம் வாடினான். அதனைப் பாங்கிகண்டு அவ்வேறு புலியூருடையார் கடவிவருவதுபோலு முருவினதென்றாள். எனவே அதன்வெம் மை சொன்னவாறன்று, இவ்வொழுக்கம் புலியூருடையார் அரு ளான்வந்ததாகலின் அவ்வேறு நினக்கே வயப்படுவதன்றி மற் றொருவாறு மனுசுப் கரிது ஆகலான் நீ கடிதுவிரைந்துசெய், அஞ்சவேண்டா வென்றாளாயிற்று. இது முல்லைத்திணை. முல் லைத் திணைக்கு மரபாவது ஒரிடத்தொரு பெண்பிறந்தால் அப் பெண்ணைப் பெற்றவர் தந்தொழுவில் அன்றுபிறந்த சேவின்கன் றுகளையெல்லாம் தன்னுடையதாக விட்டுவளர்த்து அவற்றி னொன்றைத் தழுவினொருவனுக்கு அப்பெண்ணைக் கொடுத்த லென்பதாம். (கஉசு)

அயலுரையுரைத்துவரைவுகடாதல்.

கயல்புரை கண்ணி யை
அயலுரை யுரைத்த து.

(எ - து.) (ஏறுகோள்கூறி வரைவுகடாயபாங்கி) கயல்போலுங் கண்ணையுடைய தலைமகளை வேண்டி

அயலவர் மகட்பேசாநின்றா ரென்று அவரொருப்பட்ட வுரை கூறி வரைவு கடாயது.

உருப்பனையன்னகைக்குன்றொன் றுரித்துரவோனெரித்த
நெருப்பனையம்பலத் தாதியையும்பர்சென்றேத்திநிற்குந்
திருப்பனையூரனையாளைப்பொன்னாளைப்புனைதல்செப்பிப்
பொருப்பனைமுன்னின்றென்னோவினையேன்யான்புகல்வதுவே.

(இ-ள்.) பனை உரு அன்ன கை குன்று ஒன்று உரித்து - பனையின் வடிவையொக்கும் கையையுடைய மலையையொத்த யானையொன்றை யுரித்து,—உரவர் எரித்த நெருப்பனை - வலிமையையுடைய முப்புரங்களை எரித்தழித்த நெருப்பையுடையவனை,—அம்பலத்து ஆதியை - சிற்றம்பலத்தினிடத் துள்ள முதல்வனை,—உம்பர்சென்று ஏத்தி நிற்கும் திருப்பனையூர் அனையாளை - தேவர்கள் சென்று வாழ்த்தி நிற்பதற்கு இடமாகிய திருப்பனையூரையொப்பாளை,—நாளை பொன் புனைதல் செப்பி - (அயலார்) நாளை பொன்னாபரணங்களை யணிதலைச்சொல்லி,—வினையேன் யான் முன் நின்று பொருப்பனை புகல்வது என்னோ - தீவினையேனாகிய நான் முன்னர் நின்று சிலம்பனைச் சொல்லுவது யாது. எ-று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த பெருமிதம்; பயன் - வரைவு கடாதல்.

அயலவர் - தலைமகட்கியாதும் இயைபில்லாதவர். அயலவரொருப்பட்டவுரை யெனினு மமையும். பொருப்பனென்பது தலைமகன்முன்னிலையாகக் கூறினு ளெனினு மமையும். எரித்த நெருப்பனென்ற சொற்களி னாற்றலான், எரித்தது நெருப்பானென்றது போதரும். புகல்வ தென்றது வரைந்து எய்துவாயாக என்று பின்னும் சொல்லப்படும் காரியமாம். இது சிறைப்புறம். (கஅ)

தினைமுதிர் வுரைத்து வரைவுகடாதல்.

ஏனல்விளையாட் டினியில்லையென
மானற்றோழி மடந்தைக்குரைத்தது.

(எ - து.) தினைப்புனத்தினில் விளையாட லினி யில்லையாமென (அயலுரையுரைத்து) மான்போலும் நற்பாங்கி, தலைமகட்குச் (சிறைப்புறமாகக் கூறுவாள் போன்று) தினைமுதிர்வுரைத்து வரைவு கடாயது.

மாதிடங்கொண்டம்பலத்துநின்றோன்வடவான்கயிலைப்
போதிடங்கொண்டபொன்வேங்கைதினைப்புனங்கொய்கவென்
தாதிடங்கொண்டுபொன்வீசித்தன்கள்வாய்சொரியநின்று [று
சோதிடங்கொண்டிதெம்மைக்கெடுவித்ததுதூமொழியே.

(இ - ள்.) தூமொழியே - தூயமொழியை யுடையாய்!—மாது இடங்கொண்டு அம்பலத்து நின்றோன் - மாதேவியை இடப்பக்கத்துக்கொண்டு அம்பலத்தின்கணின்றானது,—வட வான் கயிலை போதிடங்கொண்ட - வடக்கின்கணுள்ள பெரிய கைலைமலைக்கணுளதாகிய பொருப்பிடங்கொண்ட,—பொன் வேங்கை - பொன்போலு மலரையுடைய வேங்கைமரங்கள்,—தினைப்புனம் கொய்கவென்று - தினைப்புனத்தைக் கொய்கவென்று,—தாது இடங்கொண்டு பொன் வீசி - தாதுகளைத் தன்னிடத்தே கொண்டு பொன்போலுமலரை (எல்லாருக்கும்) கொடுத்து,—தன்கள் வாய்சொரிய நின்று - தனது தேனைப் பூத்தவிடத்துச் சொரிய நின்று,—சோதிடம் கொண்டு - சோதிடஞ்சொல்லுதலைப் பொருந்தி,—இது எமைக் கெடுவித்தது - இஃதெம்மைக் கெடுத்தது (இனியென்செய்தும்). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - செறிப்பறிவுறுத்தல்.

பொன்னைக் கொடுத்துப் பிறர்க்கடிமையாதலைப் பொருந்தித் தானிழித்த சாதியாதலாற் றனக்குரியதன்மை. வாய்சொரிய நின்றெனச் சிலேடைவகையா னிழித்துக் கூறினளாகவு முரைக்க.( )

பகல்வரல்விலக்கி வரைவுகடாதல்.

அகல்வரை நாடனைப்
பகல்வர லென்றது.

(எ-து.) (இனைமுதிர் வுரைத்தபாங்கி) அகன்றமலை நாடனாகிய தலைமகனை (இனி) பகல்வரவேண்டாவெனப் பகல்வரல் விலக்கி வரைவு கடாயது.

வடிவார்வயற்றில்லையோன்மலயத்துநின்றும்வருதேன்
கடிவார்களிவண்டுநின்றலர்தூற்றப்பெருங்கணியார்
நொடிவார்நமக்கினிநோதகயானுமக்கென்னுரைக்கேன்
தடிவார்தினையெமர்காவேம்பெருமவித்தண்புனமே.

(இ-ள்.) வடிவு ஆர் வயல் தில்லையோன் - அழகுநிறைந்த வயல்சூழ்ந்த தில்லையையுடையவனது, — மலயத்து நின்றும் வருதேன் - பொதியிலினின்றும் வருந்தும் வராநின்ற தேன்களும்,— கடி வார் களி வண்டு - வாசனையைத் தேருகின்ற நெடிய களிவண்டுகளும்,— நின்று அலர் தூற்ற - இருந்து அலர்களைக் குடைந்து தூற்ற,— பெரு கணியார் நமக்கு இனி நோதக நொடிவார் - (வேங்கையாகிய) பெரியகணியார் எமக்கு இப்பொழுது நோவுபொருந்த (பருவம்) சொல்லுவாரா யிருந்தார், — யான் நுமக்கு என் உரைக்கேன் - நான் உமக்கு என்னசொல்லுவேன்,— தினை எமர் தடிவார் - (கணியார் சொல்லுதலால்) தினையை எம்முடையவர் அறுப்பார்,— பெரும இ தண் புனம் காவேம் - (அதனால்) பெருமானே! இந்தக் குளிர்ச்சி பொருந்திய புனத்தை (யாம்) காக்கமாட்டேம் (நீ பகல்வரவேண்டா). எ-று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - பகற்குறிவிலக்கல்.

வடிவார் தில்லையென்றியைப்பினு மமையும். மலயத்துவாழ்வார் பிறர்க்கு வருத்தஞ்செய்யாராகலின் மலயத்து நின்றுமென்று உம்மை கொடுத்தார். மலயத்து நின்றும் வருதே

னென் றுரைப்பாருமுளர். கடி புதுமையுமாம். வண்டொழுங்கினது நெடுமைபற்றிவார்களிவண்டென்றான், தம்மொடு பயின்றுணைக்கன்றேட்ட மின்றி அலர்தூற்றி வருத்துவாரைப்போல் நாம் கூடுமிடத்திருந்த வேங்கை மலர்தூற்றி வருத்தா நின்றதென்று முரைக்க. (௧௫௧)

தினையொடுவெறுத்து வரைவுகடாதல்.

தண்புனத் தோடு தளர்வுற்று
பண்புனை மொழிப் பாங்கிபகர்ந்தது.

(எ - து.) (பகல்வரல்விலக்கிய) பண்ணையொத்த மொழியையுடைய பாங்கி, தண்புனத்தால் தளர்வடைந்து சிறைப்புறமாகத் தினையொடு வெறுத்து வரைவு கடாயது.

நினைவித்துத்தன்னையென்னெஞ்சத்திருந்தம்பலத்துநின்று
புனைவித்தவீசன்பொதியின்மலைப்பொருப்பன்விருப்பிற்
றினைவித்திக்காத்துச்சிறந்தநின்னேமுக்குச்சென்றுசென்று
வினைவித்திக்காத்துவினையுண்டதாகிவிளைந்ததுவே.

(இ-ள்.) தன்னை நினைவித்து - (தானே வந்திருந்து நிருத்தல் வேண்டுதலின்) தன்னை (யான்) நினையும் வண்ணஞ் செய்து,— என் நெஞ்சத்து இருந்து - என்னெஞ்சத்துப் புகுந்திருந்து,— அம்பலத்து நின்று புனைவித்த ஈசன் - திருச்சிற்றம்பலத்தின் கணின்று (என்னுளே தன்னைப்) புகழ்வித்த ஈசனது,— பொதியின்மலை பொருப்பன் விருப்பின் - பொதியின்மலையிடத்துள்ள சிலம்பன்மேல் வைத்த விருப்பத்தினால்,— தினை வித்தி - தினையை விதைத்து,— காத்து - காத்தலைச்செய்து, — சிறந்த நின்னேமுக்கு - சிறப்புற்று நின்ற எமக்கு,— சென்று சென்று - அத்தினைக் காவல்போய்,— வினை வித்தி காத்து வினை உண்டதாகி விளைந்தது - தீவினையை விதைத்து அதைக் காவல்செய்து

அதன் வினைவையு முண்டதாகி முடிந்தது. எ-று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - பகற்குறி விலக்கல்.

நினைவித்துத் தன்னை என்னெஞ்சத் திருந்தென்பதற்கு ஒருகால் தன்னை நினைவேனாகவுஞ் செய்து அந்நினைவே பற்றுக்கோடாகத்தான் புகுந்திருந் தெனினு மமையும். பொருப்பன் விருப்பு என்றதனை நீர்வேட்கைபோலக் கொள்க. தினைவிளைந்தபோது இத்தினைக்காவல் தலைக்கீடாக அவனை எதிர்ப்படலாமென்று மகிழ்ந்து அதற் குடம்பட்டாராகலின் தாம் வித்தினாற்போற் கூறினர். (கச௦)

வேங்கையோடுவெறுத்து வரைவுகடாதல்.

நீங்குகவினி னெடுந்தகையெ ன
வேங்கைமேல்வைத்து விளம்பியது.

(எ - து.) (தினையொடுவெறுத்தபாங்கி) இந்நெடுந் தகையாகிய தலைமகன் கவினழியுமென வேங்கை யரும்பினமையான் அதனுடன் வெறுத்து வரைவு கடாயது.

கனைகடற்செய்தநஞ்சுண்டுகண்டார்க்கம்பலத்தமிழ்தாய்
வினைகெடச்செய்தவன்விண்டோய்கயிலைமயிலனையாய்
நனைகெடச்செய்தனமாயினமைக்கெடச்செய்திடுவான்
தினைகெடச்செய்திடுமாறுமுண்டோவித்திருக்கனியே.

(இ - ள்.) கனை கடல் செய்த நஞ்சு உண்டு - ஒலிக்கின்ற கடலினிடத் துண்டாக்கப்பட்ட விடத்தையுண்டு,— அம்பலத்து கண்டார்க்கு அமிழ்தாய் - சிற்றம்பலத்தின்கண் நின்று கண்டார்க்கு அமுர்தமாய்,— வினை கெட செய்தவன் - (நம்) தீவினை கெடச்செய்தவனது,— விண் தோய் கயிலை மயில் அனையாய் - ஆகாயத்தை யளாவிய கைலையினிடத்துள்ள மயிலையொப்பாய்!— நனை கெட செய்தனமாயின் - அரும்புகள் (அ

பியனுன்றே) அவைகளைக் கெடும்வண்ணஞ் செய்தோமாயினும்,—நம்மை கெட செய்திடுவான் - நம்மைக் கெடும்படி செய்யும்பொருட்டு,—இ திரு கனி - இத் திருவாகிய வேங்கையென்னுங் கனி,—தினை கெட செய்திடுமாறும் உண்டோ - தினைகெட முயற்சிசெய்யுமாறு முண்டோ! (யாம் அது செய்யப் பெற்றிலோம்). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - பகற்குறி விலக்கல்.

கனைகடற்செய்த வென்றதனுன் நஞ்சின்பெருமை கூறினர். செய்யாத நஞ்சினும் செய்த நஞ்சு கொடிதாகலின் அதன்கொடுமை விளங்கச்செய்த நஞ்சென்றார். அமிழ்தாதல் - அமிழ்தின் காரியத்தைச் செய்தல். கண்டார்க் கென்றதனுன் அல்லாத வமிழ்தொடு இவ்வமிழ்திற்கு வேற்றுமை கூறியவாறும். கெடச் செய்திடுவானென்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீரவாய்க் கெடுப்பானென்னும் பொருள்பட்டு தம்மையென்னு மிரண்டாவதற்கு முடிபாயின. கனி - தொழிற்பெயர். (கசக)

இரக்கமுற்று வரைவுகடாதல்.

செழுமலை நாடற்குக்
கழுமலுற் றிரங்கியது.

(எ - து.) (வேங்கையொடு வெறுத்து தலைமகனை யெதிர்ப்படுவதற்காகப் பாங்கி, இன்புற்று வளர்த்த தினைத்திர ளில்லனவாயிருந்தன, இனி அவனை யெதிர்ப்படுத லெவ்வாறோ வெனச் சிறைப்புறமாக) செழிய மலைநாட்டையுடைய தலைமகனுக் கிரக்கமுற் றிரங்கியது.

வழுவாவியல்வெம்மலையர்விதைப்பமற்றியாம்வளர்த்த
கொழுவார்தினைபின்குறைக்கவெல்லாமெங்குழாம்வணங்குஞ்
செழுவார்கழற்றில்லைச்சிற்றம்பலவனைச்சென்றுநின்று
தொழுவார்வினைநிற்கிலேநிற்பதாவதித்தொல்புனத்தே.

(இ - ள்.) வழுவா இயல் எம் மன்னையர் விதைப்ப - (பருவமறி த்து) வழுவாமற்செய்யு மியல்பினையுடைய (எம்மைவராகிய) குற வர் விதைக்க,—யாம் வளர்த்த கொழு வார் தினையின்குழா ங்களெல்லாம் - யாம்வளர்த்த செழுமையாகிய நெடிய தினை யின் திரள்களெல்லாம்,—எம் குழாம் வணங்கும் - எம்முடை ய கூட்டத்தார் தொழும்,—செழும் வார் கழல் தில்லை சிற்றம் பலவனை - செழுமையாகிய நெடிய கழலையுடைய தில்லைச் சிற் றம்பலத்தை யுடையானை,—சென்று நின்று தொழுவார் வினை நிற்கிலே - போய்நின்று வணங்குவாருடைய வினை (அவர்களிட த்தில்) நில்லாததுபோல,—இ தொல்புனத்து நிற்பதாவது- இப் பழைய புனத்தில் நிற்கின்றதாவது (இனி இல்லாது.) எ-று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - பகற்குறி விலக்கல்.

நிற்பதென்பது - நிற்றலென்னும் பொருட்டு. நிற்பதாவ தெ ன்பது பாடமாயின் அவ, வென்பதிரங்கற் குறிப்பாக வுரை க்க. நிற்ப, வென்பதூஉம் பாடம். குழுவார்தினையென்பதூஉம் பாடம். (௧௪௨)

கொய்தமைகூறி வரைவுகடாதல்.

நீடிரும்புனத்தினி யாடேமென்று
வரைவுதோன்ற வுரைசெய்தது.

(எ - து.) (இரக்கமுற்றபாங்கி) இந்நீண்டபெரிய புனத்துள்ளாது (கொய்தற்றமையால் இனிப்புனங் காவலில்லை அதனால்) ஆடவுஞ் செய்யேமென்று வரைவுதோன்றத் தினைகொய்தமை கூறியது.

**பொருப்பர்க்கியாமொன்றுமாட்டேம்புகலெம்புகலெமக்காம்
விருப்பர்க்கியாவர்க்குமேலர்க்குமேல்வருமூரெரித்த
நெருப்பர்க்குநீடம்பலவருக்கன்பர்குலநிலத்துக்
கருப்பற்றுவிட்டெனக்கொய்தற்றதின்றிக்கடிப்புனமே.**

(இ - ள்.) எமக்கு புகல் ஆம் விருப்பர்க்கு - எமக்கு அடைக் கலத்தானமாவதற்குக் (காரணமாகிய) விருப்பத்தை யுடைய வருக்கு,—யாவர்க்கும் மேலர்க்கு - எல்லார்க்கும் மேலானவரு க்கு,—மேல் வரும் ஊர் எரித்த நெருப்பர்க்கு - ஆகாயத்தினி டத்துச் செல்லும் முப்புரங்களை யெரித்த நெருப்பை யுடைய வருக்கு,—நீடு அம்பலவருக்கு - நிலைபெற்ற சிற்றம்பலத்தை யுடையவருக்கு,— அன்பர் குலம் - அன்பரா யிருப்பவருடைய கூட்டங்கள்,—நிலத்து கரு பற்று விட்டென-உலகத்தில் பிற விக்காரணத்தைப் பற்றுவிட்டு நீங்கினாற்போல,—இ கடி புனம்- இந்தக் காவலையுடைய தினைப்புனம்,—இன்று கொய்தற்றது - இப்பொழுது (தொடர்பறக்) கொய்யப்பட்டது,—பொருப்பர் க்கு யாம் ஒன்று புகல மாட்டேம் - (அதனால்) சிலம்பர்க்கு யா மொன்றுஞ் சொல்ல மாட்டோம். எ-று. மெய்ப்பாடு - அழு கை ; பயன் - பகற்குறி விலக்கல்.

* யாமொருதுணையில்லே மாயினும் தமக்கு விருப்பினு லெமக் குப் புகலிடமாயினு ரென்னுங் கருத்தால், புகலெமக்காம் விரு ப்பர்க் கென்றார். எம்மால் விரும்பப்படுவார்க் கென்பாருமு ளர். வீடென வென்பதூஉம் பாடம். (௧௪௩)

பிரிவருமைகூறி வரைவுகடாதல்.

மறைப்புறக் கிளவியிற்
சிறைப்புறத் துரைத்தது.

(எ - து.) (கொய்தமை கூறிய பாங்கி, இப்புனத் துப் பயின்ற கிளிகள் தமக்குத் துப்பாகக் கால த்து மிதனை விடாதிரா நின்றன, இனி நங்காதலர் நம்மாட் டென்செய்வரோவென்னுங் கருத்தினளாகிய) மறைப்புறக் கிளவியால் சிறைப்புறமாகக் கூறியது.

**பரிவுசெய்தாண்டம்பலத்துப்பயில்வோன்பரங்குன்றின்வா
யருவிசெய்தாற்புனத்தைவனக்கொய்யவுமிவ்வனத்தே.**

பிரிவுசெய்தாலரிதேகொள்கபேயொடுமென்னும்பெற்றி
யிருவிசெய்தாளினிருந்தின்றுகாட்டுமிளங்கிளியே.

(இ-ள்.) பரிவுசெய்து ஆண்டு - (எம்மைப்) பரிந்தாட்கொண்டு,—அம்பலத்து பயில்வோன் பரங்குன்றின்வாய் - சிற்றம்பலத்தின்கண் வாழ்கின்றவனது பரங்குன்றி னிடத்து,—அருவி செய் தாழ் புனத்து - அருவிநீரால் செய்யப்பட்ட தாழ்ந்த புனத்தின்கணுண்டாகிய,—ஐவனம் கொய்யவும் - ஐவனமென்னும் நெல்லினை யறுக்கவும்,—இ வனத்து - இக்காட்டி னிடத்து,—பேயொடும் செய்தால் பிரிவு அரிது - பேயோடாயினும் (நட்புச்) செய்தால் பிரிதல் அரிது,—கொள்க என்னும் பெற்றி - (இதனை) உள்ளத்துக் கொள்க என்னுந் தன்மையை,— இளங் கிளி - இளமையாகிய கிளிகள், — இருவி செய்தாளில் இருந்து இன்றுகாட்டும் - கதிரறுக்கப்பட்ட தினைத்தாளில் இருந்து கொண்டு இப்பொழுது காட்டாநிற்கும். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - பகற்குறி விலக்கல்.

பேயோடாயினும் பிரிவு செய்தா லாற்றுத லரிதென் றுரைப்பினு மமையும். இருவி என்பது-கதிர்கொய்த தட்டை. தாளென்பது - கதிர்கொய்யாத முன்னுஞ் சொல்வதோர் பெயர். ()

மயிலோடுகூறி வரைவுகடாதல்.

நீங்கரும்புனம்விடு நீள்பெருந்துயரம்
பாங்கிபகர்ந்து பருவரலுற்றது.

(எ - து.) நீங்குதற் கருமையாகிய தினைப்புனம் விட்டு நீங்கும் நீண்ட பெருந் துயரத்தைப் (பிரிவருமைகூறி வரைவுகடாய பாங்கி, (மயிலொடு) கூறித் துன்புற்றது.

கணியார்கருத்தின்றுமுற்றிற்றியாஞ்சென்றுங்கார்ப்புனமே
மணியார்பொழில்காண்மறத்திர்கண்டீர்மன்னுமம்பலத்தோ

னணியார்கயிலைமயில்காளயில்வேலொருவர்வந்தாற்
றுணியாதனதுணிந்தாரென்னுநீர்மைகள்சொல்லுமினே.

(இ - ள்.) கணியார் கருத்து இன்று முற்றிற்று யாம் சென்றும் - வேங்கையாரது எண்ணம் இன்று முடிந்தது (அதனால்) யாங்கள் போகாநின்றேம்,—கார் புனமே - கரிய புனமே!—மணி ஆர் பொழில்காள் - மணிகளார்ந்த பொழில்காள்!—மறத்திர் கண்டீர் - (வேங்கையொடு பயில்கின்றீராகலின் நீர் எம்மை) மறப்பீர்,—மன்னும் அம்பலத்தோன் - நிலைபெறும் அம்பலத்தை யுடையவனது,—அணி ஆர் கயிலை மயில்காள் - அழகார்ந்த கைலையினின்றும் வந்தமயில்காள்!—அயில் வேல் ஒருவர் வந்தால் - அயில்வேல் துணையாகத் தனிவருமவர் (ஈண்டு) வந்தால்,— துணியாதன துணிந்தாரென்னு நீர்மைகள் - (அன்புடையார்) துணியாதனவற்றைத் துணிந்தாரென்னு நீர்மைகளை,—சொல்லுமின் - அவருக்குச் சொல்லுங்கள். (நீவிர் கைலையி னுள்ளீராகலின் கண்ணோட்டமுடையீர் நீரிவ்வாறு சொல்லின் அவர் ஆற்றுவர்). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - பகற்குறி விலக்கல்.

நீர்மை - ஈண்டு வியப்பு. துணியாதனவாவன - பிரிதலும், வரையுந்துணையும் ஆற்றி யிருத்தலுமாம். புனமே, பொழில்காள், மயில்காள் ஒன்றுகூட்டி, நீரெம்மை மறப்பீராயினும் மறவாது சொல்லுமினென் றுரைப்பாருமுளர். கார்ப்புனமென்பதற்குக் கார்காலத்துப் பொலியும் புனமெனினு மமையும். ()

வறும்புனங்கண்டு வருந்தல்.

மென்புனம்விடுத்து மெல்லியல்செல்ல
மின்பொலிவேலோன் மெலிவுற்றது.

(எ - து.) மென்மையாகிய தினைப்புனத்தை விட்டுத் தலைமகள் (பாங்கியோடு) காவலொழிந்து போகாநிற்க, மின்னலைப்போல் விளங்கும் வேலையுடைய

தலைமகன் (அப்புனத்தின் பொலிவழிவுகூறி) வருந்தி
யது.

பொதுவினிற்றீர்த்தென்னையாண்டோன்புலியூரரன்பொருப்
யிதுவெனிலென்னின்றிருக்கின்றவாறெம்மிரும்பொழிலே [பே
யெதுநமக்கெய்தியதென்னுற்றனிரறையீண்டருவி
மதுவினிற்கைப்புவைத்தாலொத்தவாமற்றில்வான்புனமே.

(இ-ள்) பொதுவினில் தீர்த்து என்னை ஆண்டோன் - (அதுவோ இதுவோ வழியென்று மயங்கிப்) பொதுவாக நின்ற நிலைமையை நீக்கி என்னையாண்டவன்,—புலியூர் அரன் - புலியூரில் வாழும் அரன்,—பொருப்பே யெனில் - (அவனது) பொருப்பாய் (யான் முன் பயின்ற) இடமேயாயின்,—இது இன்று இருக்கின்றவாறு என் - இஃது இன்று இருக்கின்ற முறைமை யென்னை? — எம் இரும்பொழிலே - எம்முடைய பெரிய பொழிலே! — நமக்கு எது எய்தியது - நமக்குத்தான் (இன்று) வந்தது யாது? — என்னுற்றனிர் - (நீர்) என்னுற்றீர்? — இவான் புனம் அறை யீண்டு அருவி மதுவினில் - (அன்றியும்) இப்பெரிய புனம் ஒலியாநின்ற பெருகிய அருவியாய்விழும் மதுவின்கண்,—கைப்பு வைத்தால் ஒத்தவா (என்) - (அதன் இன்சுவையை மாற்றி) கைப்பாகிய சுவையை வைத்தா லொத்தவாறென்? எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

மற்றென்பது அசைநிலை. எல்லாரையும் ஆளும் பொதுவாகிய முறைமையினின்று நீக்கி என்னை யுளநெகிழ்விப்பதோ ருபாயத்தான் ஆண்டவனென் றுரைப்பினு மமையும். இன்பஞ்செய்வதும் துன்பஞ்செய்வதும் ஒன்றுமா மாட்டாதென்னுங் கருத்தால் புலியூரான் பொருப்பே யிதுவெனிலென்றான். அறையீண்டருவிகாள் நீரென்னுற்றீ ரென்றும், அறையீண்டருவிப் புனமென்றும் உரைப்பாருமுளர். (௧௫௫)

பதிநோக்கி வருந்தல்.

மதிநுதலரிவை பதிபுகலரிதென
மதிகனிகலங்கிப் பதிமிகவாடியது.

(எ-து.) (வறும்புனங்கண்டுவருந்திய) தலைமகன் மதியைப்போலு நெற்றியையுடைய தலைமகளிருக்கும் பதியை யடைவதரிதென்று தன்னறிவு மிகக் கலங்கி மிகவும் வாட்டமுற்றது.

ஆனந்தமாக்கடலாடுசிற்றம்பலமன்னபொன்னின்
தேனுந்துமாமலைச்சீறூரிதுசெய்யலாவதில்லை
வானுந்துமாமதிவேண்டியழுமழப்போலுமன்றே
நானுந்தளர்ந்தனைநீயுந்தளர்ந்தனைநன்னெஞ்சமே.

(இ-ள்.) ஆனந்தம் மா கடல் ஆடும் சிற்றம்பலம் அன்ன - ஆனந்தமாகிய நீரால் (நிறைந்தோர்) பெரியகடலானது நின்றாடும் சிற்றம்பலத்தை யொக்கும்,—பொன்னின் தேன் உந்தும் மா மலை - பொன்னினது தேன் ததைப்பாயும் பெரிய மலைக்கணுண்டாகிய,—சீறூர் இது - சிறிய ஊர் இது,—செய்யலாவது இல்லை - (இவ்வாறணித்தாயினும்) நம்மாற் செய்யலாவதொன்றில்லை,—வான் உந்து மா மதி வேண்டி அழும் மழவு போலும் - (அதனால்) வானின்கட் செல்லும் பெரிய மதியை (கொள்ள) வேண்டி (அதனருமை யறியாது) அழும் குழவியைப் போல (எய்தற்கரியானை விரும்பி)—நல் நெஞ்சமே - நல்லநெஞ்சமே!—நீயும் தளர்ந்தனை - நீயுந் தளர்ந்தாய்,—நானும் தளர்ந்தனன் - (நீயவ்வரும் பொருள் விரும்புதலான்) யானுந்தளர்ந்தேன். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன்—ஆற்றாமை நீங்குதல்.

தேனையுமிழு மாமலையெனினு மமையும். மழவைநெஞ்சத்திற்கேயன்றித் தலைமகனுக் குவமையாக வுரைப்பினு மமையும்.

நெஞ்சத்தைத் தன்னொடு படுத்தற்கு நன்னெஞ்சமெனப் புனைந்து கூறினான். இது பாங்கி தலைமகனை இற்செறிவிக்கின்ற காலத்து ஆற்றானாகிய தலைமகன் அப்பாங்கிகேட்பத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. மன்னும் ஒவும் அசைநிலை. (கசஎ)

பகற்குறி முற்றிற்று.

இரவுக்குறி.

என்பது, பகற்குறி புணர்ந்து விலக்கப்பட்ட தலைமகன், பின்னையும் பாங்கியைத் தலைப்பட்டு "களவினுட்டவிர்ச்சி இழவோர் இல்லை" என இரவுக்குறிவேண்டிச் சென்றெய்துதல்.

இக்கிளவி முப்பத்துமூன்று துறைகளை யுடைத்து. அவை வருமாறு:—

இரவுக்குறிவேண்டல், வழியருமைகூறல், இன்றுநெஞ்சடைதல், நிலைகண்டுரைத்தல், உட்கோள்வினாதல் உட்கொண்டுவினாதல், குறியிடங்கூறல் குறியேற்பித்தல், இரவரவுரைத்த லேதங்கூறல், குறைநேர்தலோடு குறைநயப்புரைத்தல், மயின்மேவிசைத்து வரவுணர்ந்துரைத்தல், தாய்துயிலறிதல் தலைவிதுயிலெடுத்தல், இடத்துய்த்துநீங்கல் தளர்வகன்றுரைத்தல், மருங்கணைதலோடு முகங்கண்டுமகிழ்தல், பள்ளியிடத்துய்த்தல் பள்ளிடத்துய்த்து, வரவுகடாவி வரவுவிலக்கல், வரவுடம்படாதாருதுரைத்தல், அதரிடைச்செலவிற் கிரக்கங்கூறல், இருளாநிலவு வெளிப்படவருந்தல், வேற்றுக்குறிகூறல் கடலிடைவைத்துத் துயிலறிவித்தல் தோழியுமின்றித், தானேயிடர்ந்து தனிமையுற்றுற்றும், காமமிக்க கழிபடர்கிளவி, காப்புச்சிறைமிக்க கையறுகிளவி, ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி, தன்னுட்கையாறெய்திடுகிளவி, நிலைகண்டுரைத்தல் நெடுங்கடற்சேர்த்தல், அலரறிவித்தலோடாறைம்மூன்றும், இரவுக்குறியிவை யென்றிசினோரே.

இரவுக்குறி வேண்டல்.

கள்ளிருட்குறியை வள்ளலினைந்து
வீங்குமென்முலைப் பாங்கிக்குரைத்தது.

(எ-து.) கள்ளிரவின்குறியை (பதிநோக்கி வருந்தாநின்ற) வள்ளன்மையுடைய தலைமகன், [illegible] மென்முலையையுடைய பாங்கிக்குரைத்தது.

மருந்தநம் மல்லற் பிறவிப் பிணிக்கம் பலத்தமிர்தா
யிருந்தனர் குன்றினின் றேங்கு மருவிசென் றேர்திகழப்
பொருந்தின மேகம் புதைந்திருள் தூங்கும் புனையிறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறூர் தனக்குமெல் வளையே.

(இ-ள்.) மெல்வளையே - மெல்லிய வளையலை யுடையாய்! நம் அல்லல் பிறவிப் பிணிக்கு மருந்தாய் - [illegible] நம்முடைய அல்லலைச் செய்யும் பிறவியாகிய பிணிக்கு (அருந்து) மருந்தாய் நின்றும், — அம்பலத்து அமிர்தாய் இருந்தனர் - அம்பலத்தின்கண் (சுவையால்) அமிர்தமுமாயிருந்தவரது, — குன்றின் நின்று ஏங்கும் அருவி சென்று - மலையின்கணின்றும் ஒலிக்கும் அருவிகள் பாய்ந்து, — ஏர் திகழ - அழகு விளங்கும் வண்ணம், — மேகம் பொருந்தின - மேகம் வந்து பொருந்தின, — புதைந்து இருள் தூங்கும் புனை இறும்பின் - (அதனால் மேகத்தின்கண்) புதைந்து இருள் செறியும் செய்காட்டையுடைய, — உங்கள் சிறு ஊர் தனக்கு - உம்முடைய சிறிய ஊருக்கு, — விருந்தினன் யான் - விருந்தினன் யான்; (என்னை ஏற்றுக் கொள்வாயாக). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - இரவுக்குறி நேர்தல்.

மேகம்வந்து பொருந்தின வென்றதனால், தன்னூர்க்குப் போகாமை கூறினானாம். இரவுக்குறிமாட்சிமைப்படு [illegible] இருள்தூங்கும் புனையிறும்பென்றதனால், யாவருங் காணாவகையின் [illegible] நிற்கின்றேன் என்றானாம். மாலை விருந்தினரை மாற்றுதல் அறமன்றென்பது தோன்ற விருந்தின

னென்றான். குன்றினின் றேறக்குழுவி ஏர்திகழச்சென்று பொருந்தின மேகமென்க. அருவி ஏர் பெற மேகம் பொருந்தின ஊர் இன்னூர், ஆதலான் என் னினைப்பற்று யாறும் நின்னைவந்து சேர்ந்தே னென்பது போதரும். (கசஅ)

வழியருமை கூறி மறுத்தல்.

இரவரலேற்கல் கருதியுரைப்ப ப்
பருவரற்பாங்கி யருமையுரைத்தது.

(எ-து.) இரவுக்குறியை வேண்டித் தலைமகனிரக் னிக்கூறத் தண்டமைத்திய பாங்கி, வழியருமை கூறி மறுத்தது.

விசும்பினுக்கேணிநெறியன்னசின்னெறிமேன்மழைதூங்
கசும்பினிற்றுன்னியளைநுழைந்தாலொக்குமையமெய்யே
யிசும்பினிற்சிந்தைக்குமேறற்கரிதெழிலம்பலத்துப்
பசும்பனிக்கோடுமிலைத்தான்மலயத்தெம்வாழ்பதியே.

(இ - ள்.) ஐயா ! — விசும்பினுக்கு ஏணி நெறி அன்ன — ஆகாயத்திற்கிட்ட ஏணிநெறிபோலும், — சில் நெறிமேல் மழை தூங்கு - இச்சிறுவழியின் மழையிடையறாது நிற்றலான், — அசும்பினில் துன்னி - வழுக்கு நிலத்தின்கண் சென்று பொருந்தி (ஏறுமிடத்து), — அளை நுழைந்தால் ஒக்கும் - மலைக்குகையுள் நுழைந்தாற்போன் றிருக்கும். — எழில் அம்பலத்து - (அழகையுடைத்தாகிய) அழகுபொருந்திய அம்பலத்தின்க ணுளனாகிய, — பசும் பனி கோடு மிலைந்தான் - குளிர்ந்த பனியையுடைத்தாகிய பிறையைச் சூடியவனது, — மலயத்து - (தென்) மலயத்தின்க ணுண்டாகிய, — எம் வாழ் பதி - எம்முடைய வாழ் பதியானது, — இசும்பினில் சிந்தைக்கும் ஏறற்கு அரிது - வழுக்கினால் சிந்தைக்கும் ஏறுதற் கரிதெனல், — மெய்யே - உண்மையே, (அதனாலாண்டுவரத்தகாது). எ-று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - இரவுக்குறி மறுத்தல்.

* இசும்பு - ஏற்றிழிவு முதலாயின குற்றமென்பாருமுளர். அசும்பு - சிறுதிவலை. இசும்பினிற் சிந்தைக்கு மேறற்கரிதென்றவதனான் எமதுவாழ்பதி இவ்வொழுக்கத்தைச் சிறிதறியுமாயிற் சிந்தையாலு நினைத்தற்கரிய அயர்த்தைத் தருமாதலால், தாஞ் செத்துங் காண்வாரில்லை, அதுபோல இவ்வொழுக்க மொழுகற் பாலீரல்லீரென்று மறுத்துக்கூறிய வாறாயிற்று. பசுமை - செவ்வியுமாம், அதனைக் கோட்டின்மே லேற்றுக. கோட்டையுடைமையாற் கோடெனப் பட்டது. (கசகூ)

நின்று நெஞ்சுடைதல்.

பருவரனாட ன்
நீங்கிவிலங்காது நெஞ்சுடைந்தது.

(எ-து.) பாங்கிவிலக்க (வழியருமை கூறக்கேட்ட) பருவரனாடனாகிய தலைமகன், நீங்கி (உள்ளஞ்செல்கின்ற செலவினின்றும்) விலங்காது (அடைதற் கரியாளை விரும்பி நீ மெலிவதற்கு ஆற்றேனென்று) தன்னெஞ்சுடைந்து வருந்தியது.

மாற்றேனெனவந்தகாலனையோலமிடவடர்த்த
கோற்றேன்குளிர்தில்லைக்கூத்தன்கொடுங்குன்றினீள்குடுமி
மேற்றேன்விரும்புமுடவனைப்போலமெலியுநெஞ்சே
யாற்றேனரியவரிவைக்குனைவைத்தவன்பினுக்கே.

(இ - ள்.) மாற்றேன் என வந்த காலன் - (ஒருவராலும்) மாற்றப்படேனென்று (வழிபடுவோனது உயிரை வௌவ) வந்த இயமனை, — ஓலம் இட அடர்த்த கோல் தேன் - (அவன்) ஓலமிடும் வண்ணம் கொன்ற கோற்றேன், — குளிர் தில்லை கூத்தன் - குளிர்ந்த தில்லைக்கணுளனாகிய கூத்தன், — கொடும் குன்றின் நீள் குடுமி மேல் தேன் - அவனுடைய கொடுங்குன்றினது நீண்ட உச்சியின்மேலுண்டாகிய தேனை, — விரும்பும் முடவனைப் போல - விரும்புகின்ற முடவனைப் போல, — மெலியும் நெஞ்சே

சே - (எய்துதற் கருமையை நினையாது) மெலிகின்ற நெஞ்சமே!—அரிய அரிவைக்கு நீ வைத்த அன்பிறைக்கு ஆற்றேன் - அரியளாகிய அரிவையிடத்து நீ வைத்த அன்பால் (யான்) ஆற்றேன். எ - று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - இரவுக்குறி நயப்பித்தல்.

மாற்றேனென்பது செயப்படு பொருட்கண் வந்தது. மாறேனென்பது விகாரவகையான் மாற்றேனெனநின்றதெனினு மமையும். அவை யிருதிபுடைமையிற் மாற்றேனென்றார். நீ யென்கண்மையை யாதலின் இவ்வாறுமெலிந்து முயிர்வாழ்ந்து, [illegible] படுவேனென்னுங் கருத்தான்மெலிவு நெஞ்சே யாற்றேனென்றார். (௧௫௭)

இரவுக்குறிநேர்தல்.

அகலவரைநாடன் றளர்வறிந்
மடநடைப்பாங்கி வருத்துரைத்தது.

(எ - து.) விசாலமாகிய மலைநாட்டையுடைய தலைமகன் (நெஞ்சொடுகூறி அசாவுற்றமை கண்டு) மடநடையையுடைய பாங்கி, அத்தலைமகனை (மறுத்த வாய்ப்பாட்டால்) இரவுக்குறி நேர வருத்துக் கூறியது.

கூளிநிரைக்கநின்றம்பலத்தாடுகுரைகழற்கீழ்த்
தாளிநிரைத்தசுடர்முடியோயிவடோணசையா
லாளிநிரைத்தடலானைகடேருமிரவில்வந்து
மீளியுரைத்திவினையேனுரைப்பதென்மெல்லியற்கே.

(இ - ள்.) கூளி நிரைக்க - (கூத்தின்கட் சுவையால்) பேய்களும் போகாது நிரைத்து நிற்ப,—நின்று அம்பலத்து ஆடு குரை கழற் கீழ் - நின்று அம்பலத்தின்கண் ஆடுவானது ஒலிக்கும் கழலையுடைய திருவடிக்க ணுண்டாகிய,—தாளிநிரைத்த சுடர்முடியோய் - தாளிமொய்த்த சுடர்வீசும் முடியை யுடையோய்!—

இவள் தோள் நசையால் - இவள் தோள்மேலுண்டாகிய விருப்பினால்,—ஆளி நிரைத்த அடல் ஆனைகள் தேரும் - ஆளிகள் நிரைத்து வலியையுடைய யானைகளைத் தேடும்,—இரவில் வந்து மீளி உரைத்தி - இரவின்கண் வந்து மீளுதலைச் சொல்லாநின்றாய்;—மெல்லியற்கு - (இனி) மெல்லியலுக்கு,— வினையேன் உரைப்பது என் - தீவினையேன் சொல்லுவதென்? எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - இரவுக்குறி நேர்தல்.

ஆளிநிரைத்த சுடர்முடியோ யென்றதனால், பாங்கி யிரவுக்குறி யுடம்படாளாகவின் அவனிருளின் வருதலான், வரும் ஏதத்தை அத்தாளி காக்குமென்று கூறினாளாம். வந்து மீளியென்பதற்கு வந்து போதலையுடைய இரவுக்குறி யென்பாருமுளர். உடம்பட்டு மறுக்கமாட்டாது இடையே நின்று வருந்துதலின் வினையேனென்றாள். மீடல் மீளியென நின்றது. (௧௫௮)

உட்கோள் வினாதல்.

வெறிவிலக்குற்றவ னுறுதுயர்நோக்கி
ஆய்கொருசூழ்ப் பாங்கி பகர்ந்தது.

(எ - து.) வெறிவிலக்குற்ற தலைமகனுறுகின்ற துயரத்தை நோக்கி (விளையுமோவாயின்) இத்தலைமகனென்றனை யுட்கொண்டுமென்று (இரவுக்குறி நேர்ந்த) பாங்கி, ஒரு சூழ்ச்சி கூறியது.

வரையன்றொருகாலிருகால்வளையநிமிர்த்துவட்கார்
திரையன்றழலெழவெய்தவனின்றோன்றில்லையன்னநின்னூர்
விரையென்னமென்னிழலென்னவெதிர்புனாதாவிவர்போ
துரையென்னகோசிலம்பாவம்பாலியொளிர்வளையே.

(இ - ள்.) சிலம்பா - மலையை யுடையவனே!—அன்று ஒரு கால் - முன்னொருகாலத்து,—வரை இருகால் வளைய நிமிர்த்து - மலையை இரண்டுகோடும் வளையும் வண்ணம் (மார்பையும் தோளையும்) நிமிர்த்து,—வட்கார் திரை அழல் எழ அன்று எய்து

நின்றோன் - பகைவரது நிணையை யழுகெழும்படி நின்று எய்து நின்றவனது,—இல்லை அன்ன - இல்லையெயொக்கும்,—மின் ஊர் கலம்பாவி ஒளிர்வன - மின்னூரின் கலம்பரந்து விளங்குவனவாகிய (அணிகலன்கள்),—வினா என்ன - (பூசம்) சார்ந்தத்தன்மையி?—மெல் கிழல் என்ன - (அவர்) விளையாடும் மெல்லிய நிழலைத்தன்மையி?—இவர் வெறி உறு தாது போது என்ன - அவர் (சூடும்) கறுனாற்றம் பொருந்திய தாது பரந்த போதுகள் எத்தன்மைய?—உரை - உரைப்பாயாக. எ-று. மெய்ப்பாடு. பெருமிதம்; பயன் - பாங்கி தலைமகளுல் தன்னை வினவுவித்தல்.

மெல்லிய நிலத்தையுடைய நிழலை மென்னிழலென்றார். அன்று நிமிர்ந்தெனவும், அன்றெய்து நின்றோனெனவும் இயையும். இது குறிப்பெச்சம். வன்றழு வென்பதூஉம் பாடம். (௧௬௨)

உட்கொண்டு வினுதல்.

தன்னை வினவத் தானவள் குறிப்பறிந்
தென்னை நின்குறை யென்றது.

(எ - து.) (தலைமகள்) தன்னைப்பாங்கி வினவத் தானவள் குறிப்பை யுட்கொண்டு (அப்பாங்கியை) நின்னுடைய இடுக்கண் யாதென வினவியது.

செம்மலராயிரந் தூய்கருமா றிருக்கண்ணணிய
மொய்ம்மலர்க் கழலம்பலத்தோன் மன்னு தென்மலையத்
தெம்மலர் சூடிநின் றெச்சாந் தணிந்தென்னநன்னிழல்வாய்
அம்மலர் வாட்கண்ணல் லாயெவ்விவாய்த் துமராடுவதே.

(இ-ள்.) அம் மலர் வாள் கண் நல்லாய் - அழகிய மலர்போலும் ஒளிபொருந்திய கண்ணையுடைய நல்லாய்!—ஆயிரம் செம்மலர் தூய் - ஆயிரம் சிவந்த தாமரைமலர்களைத் தூவி (அவற்றுள் ஒன்று குறைய),—கருமால் திரு கண் அணியும் - கரிய மாலானவர் (அதற்கீடாக்கும் தனது) திருக்கண்ணை யிடந்தணியும்,—மொய் மலர் கழல் - பெரிய மலர்போலும் செய்த்த (சிறந்தைப் பொருந்திய) திருவடியையுடைய,—அம்பலத்தோன் மன்னும் - சிற்றம்பலத்தான் தங்கும்,—தென் மலையத்து - தென்மலயத்திடத்து,—எவ்விவாய் - இராப்பொழுதின்கண்,—நுமர் ஆடுவது - நும்மவர் விளையாடுவது,—எம்மலர் சூடிநின்று - எத்தமலரைச் சூடிநின்று,—எச்சாந்து அணிந்து - எந்தச் சாந்தையணிந்து,—என்ன நல் நிழல் வாய் - எந்த நன்னிழலின்கீழ் (கூறுவாயாக). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் குறியிடமுணர்த்துதல்.

வாள் உவமை யெனினுமமையும். துமரொன்றது அவரோடொருநிலத்தாராகிய மக்களை; இருமாவென்பதூஉம் பாடம். நிழல் அணியன்றெனினும் பண்மைபற்றி அணியென்றார். (௧௬௩)

குறியிடங்கூறல்.

இரவுக்குறியிவ ணென்றுபாங் கி
யரவக்கழலவற் கறியவுரைத்தது.

(எ - து.) (உட்கொண்டுவினவிய) ஒலியையுடைய கழலையணிந்த தலைமகனுக்குப் பாங்கி, இரவுக்குறியிடம் இதுவென் றறியச்சொன்னது.

பனைவளர் கைம்மாப் படாத் தம்பலத்தரன் பாதம்விண்ணோர்
புனைவளர் சாரற்பொதியின் மலைப்பொலிசந் தணிந்து
சினைவளர் காவின் குடைப்பைக்கோதை துயில்பயிலுஞ்
சினைவளர் வேங்கைகள் யாங்கணின்றுஞ் செறும்பொழிலே.

(இ-ள்.) பனை வளர் - பனைபோலும் செறிய,—கைம்மா படாத்து - துதிக்கையையுடைய யானையின் (தோலாகிய) போர்வையையுடைய,—அம்பலத்து அரன் பாதம் விண்ணோர் புனை - அம்பலத்திருள்ள சிவனுடைய பாதங்களை விண்ணோர் புனைதற் கிடமாகிய,—வளர் சாரல் - வளருஞ் சாரலையுடைய,—பொதியின் மலை பொலி சந்து அணிந்து - பொதியின் மலைக்கண் பொலிதற் சந்தனச் சாந்தையணிந்து,—சினை வளர் காவின்கண் குடையாக்கள்

நின்றும் செறும் பொழில் - கிளைக்கண் வளரும் காவிக்கிளைச் சூழ் மரங்கள் நின்று விளையாடும் வளவிய பொழில்,—மைக் கோகை துயிலும் சினை வளர் வேங்கைகள் - பசிய மயில்கள் துயில் செய்யும் கோடு வளரும் வேங்கைப்பொழில். (நீடிமலை வாறு சாந்தணிந்து காவிசூழ் வேங்கைப் பொழில்கள் வந்து நின்வாவதிய மயிலெழுப்புவா யாக) எ - று. மெய்ப்பாடு - [illegible] - இரவுக்குறியிடம் [illegible] (௧௬௭)

இரவுக்குறி யேற்பித்தல்.

அரவக்கழலை யாற்றென் னா
இரவுக்குறி யேற்பித் தது.

(எ-து.) (தலைமகனுக்குக் குறியிடங் [illegible] தலைமகளிடஞ்சென்று) ஒலியையுடைய கழலையணி ந்த தலைமகன் ஆற்றானென்று (அத்தலைமகளை) யிர வுக்குறி யேற்பித்தது.

மலவன்குரம்பையைமாற்றியம்மாண்முதல்வானவர்க்கப்பாற்
செலவன்பர்க்கோக்குஞ்சிவன்றில்லைக்கானலிற்சீர்ப்பெடையோ
டலவன்பயில்வதுகண்டஞர்கூர்ந்தயில்வேலுரவோன்
செலவிவ்விடைக்கண்டனனென்னதாங்கொண்மன்சேர்துயிலே.

(இ-ள்.) மலம் வல் குரம்பையை மாற்றி - மலங்களையுடைய வலிய (யாக்கையாகிய) கூட்டை மாற்றி,—மால் முதல் அவானவர்க்கு அப்பால் - திருமால் முதலாகிய அவ்வானவர்களுக்கு மேலாகிய பதங்களில்,—செலவு - செல்[illegible],— அன்பர்க்கு ஒக்கும் - அன்பராயினோர்க்கென்று பார்த்துவைக்கும்,— சிவன் தில்லை கானலில் - சிவனது தில்லையைச் சூழ்ந்த கானலிடத்து,—சீர் பெடையோடு அலவன் பயில்வது கண்டு - நல்ல பெடையோடு ஆண் நண்டு பயின்று விளையாடுவதனைக்கண்டு,— அஞர் கூர்ந்து - வருத்தமிகுந்து,—அயில் வேல் உரவோன் - கூர்மைபொருந்திய வேலையுடைய வலியோன்,—அந்திவாய் செல

கண்டனன் - அந்திப்பொழுதின்கண் செல்ல (அவனைக்) கண் டேன்,—மன் - (பின்) அம்மன்னன்,—சேர் துயில் என்னதாம் - கொண்ட சேர்துயிலானது எத்தன்மைத்தாம்? (அறியேன்). எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த இளிவரல்; பயன் - தலைமகளை யிரவுக்குறி நேர்தல்.

அப்பாற் செலவு-மால் முதலாயினோர்க் கப்பாற்பட்ட பதங் கள். அன்பருட்போக வேட்கையையுடையார் அவற்றைப் பெ ற்று போகந் துய்ப்பாராகலின் செலவன்பர்க்கோக்கு (உவக்கு) மென்றார். பெடையொடு பயிலு மலவனைக் கண்டேம் உயிர்தாங் கிச் சென்றானுதலின் உரவோனென்றான். (௧௬௮)

இரவரவுரைத்தல்.

குரவரு குழலி. க்
கிரவர வுரைத் து.

(எ-து.) (இரவுக்குறியேற்பித்து இன்முகங்கண்ட பாங்கி), குராமலரையணிந்த கூந்தலையுடைய தலைமக ளுக்கு (தலைமகன்) இரவின்கண் வருதலை யுரைத்தது.

மோட்டங்கதிர்முலைப்பங்குடைத்தில்லைமுன்னோன்கழற்கே
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்.) [illegible] - மெல்லியலாய்!—மோடு அம் கதிர் முலை பங்குடை தில்லை முன்னோன், — பெரிய அழகிய கதிர்மு லையை யுடையதோர் கூற்றையுடைய தில்லைக்கணுளனாகிய எல் லாப் பொருட்கு முன்னாயவனது,—கழற்கு - திருவடிபொருந் தற்குமே,—கோட்டம் தரும் குரு முடி நம் வெற்பன் - வணக்கு தலைச் செய்யும் குருநிறம்வாய்ந்த முடியையுடைய நம் மலைய டன்,—மழை குழுமி நாட்டம் புதைத்தது அன்ன கன் இருள் - முகில்கள் திரளுதலான் நாட்டத்தைப் புதைத்தாற்போலிருக்

கும் செறிந்த இருளின்கண், —காகம் சிங்க சிங்கம் வேட்டந் திரி சரிவாய் - யானைகள் சிங்க சிங்கம் வேட்டந் திரியும் மலைச்சரியிடத்து (வாரேலென்றுச் சென்னாரென்றான், இனிஎன்செய்தகும்). என - று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த இளிவரல்; பயன் - தலைமகளை யிரவுக்குறி நேர்வித்தல்.

முன்றேறன் கழற்கல்லாத பிறிதொன்றிடத்தும் தாழ்ந்து நில்லாப் பிரியோன் தாழ்ந்து வேண்டுவதனை மறுத்தலியென்பது போதர முன்றேறன் கழற்கே கோட்டந்தரு நங்குரு முடியெனப்பெண்ணேன். குரு - நிறம். ஆற்றின்கண்வரு மதியினும் அவனது வேட்கைமிகுதியா வென்றுகொன்றாய் கூறுவதரிதாயிற்றென்பது போதர, கள்ளிருளுங் கடுங்கச்சிங்க வேட்டந்திரிசரிவா யென்றான். (௧௬௯)

ஏதங்கூறி மறுத்தல்.

இழுக்கம்பெரி திரவரினென ௭௦

அழுக்கமெய்தி யரிவையுரைத்தது.

(எ-து.) (தலைமகன் இரவரவுகேட்ட) தலைமகள் தனக்கவன்செய்த தலையளியு முதலிய நினைந்து இரவின்கண்வரிற் பெரிது ஏதமென்று அதனாலுண்டாகிய வருத்தமடைந்து ஏதங் கூறியது.

செழுங்கார் முழவதிர் சிற்றம்பலத்துப் பெருந்திருமால்
கொழுங்கான் மலரிடக் கூத்துயர் வோன்கழ லேத்தலர்போன்
முழங்கா ரரிமுரண் வாரணம் வேட்டைசெய் மொய்யிருள்வாய்
வழங்கா வதரின் வழங்கென்று மோவின்றெம் வள்ளலையே.

(இ - ள்.) செழு கார் முழவு அதிர் - வளவிய மேகம்போலக் குடமுழா முழங்கும், — சிற்றம்பலத்து - சிற்றம்பலத்தின்கண்ணே, — பெரு திருமால் கால் கொழு மலர் இட - பெரிய திருமால் கண்ணாகிய தாமரையுடைய கொழுவிய மலராக இட்டிறைஞ்சவும், — கூத்து அயர்வோன் - கூத்தை விரும்பிச் செய்வோ

னது கழல் ஏத்தலர்போல் - திருவடிகளை யேத்தாதாரைப் போல வருந்த, — முழங்கு ஆர் அரி முரண் வாரணம் வேட்டை செய் - முழங்காநின்ற கட்டிறந்த சிங்கம் முரணையுடைய யானை வேட்டையைச் செய்யும், — மொய் இருள்வாய் - வலியிருளின்கண், — வழங்கா அதரின் - (யாவரும்) வழங்காத வழியிடத்து, — எம் வள்ளலை இன்று வழங்கு என்றுமோ - எம்முடைய வள்ளலை இன்று வழங்குவாயாகவென்று சொல்லுதுமோ? (அவனுழை யாஞ் சேறலொழிந்து அவனை வரச்சொல்லக் கடவோமோ!) எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - இரவுக்குறி நேர்தல்.

ஏத்தலராயினைக் குவமையாக வுரைக்க. ஏத்தலர்போல் வழங்கென்றுமோ வென்றுகூட்டி யுரைப்பாருமுளர். முழங்காரரி யென்பதற்கு முழங்குதலார்ந்த வரியென்பாருமுளர். தனக்கவன்செய்த தலையளியு முதலிய நினையாநின்ற வுள்ளத்தனாகலின் வள்ளலென்றாள். எம்மைத்தலை யென்பது பாடமாயின் அன்புடைமைத்தன்மை தோன்றநின்றதாக வுரைப்பாருமுளர். ()

ஆற்றாது நேர்தல்.

அலைவேலண்ண னிலைமைகேட்டுக்

கொலைவேற்கண்ணி குறைநயந்தது.

(எ - து.) (ஏதங்கூறி மறுத்த) கொலைத்தொழிலை மேற்கொண்ட வேல்போலுங் கண்ணையுடைய தலைமகள், வருத்தும் வேலையுடையனாகிய தலைமகனது (ஆற்றாமையாகிய) நிலைமை கேட்டு (பேருதவிசெய்த அவனுக்குச் சிறியேன் சொல்லுவதறியே னென்று) உடம்பட்டு நேர்ந்தது.

குன்றுமொருவிடமுண்டம்பலத்தம்பருப்பவன்று
தூக்குமொருவன்றடவரையாய்த்தழங்குமருவி
வீழ்க்குஞ்சிலம்பனைப்பவ்வீழ்க்குன்றமுக்கப்பிடித்தெடுத்த
னாக்குமவர்க்கறியேன்சிறியேன்சொல்லும்வாசகமே.

(இ-ள்.) துன்றும் துறுவிடம் உண்டு - (உலகமுழுதையுந் துமிக்கவல்லதாம் மேன்மேலும்) வளராநின்றதோர் விடத்தைத் தானுண்டு,—உம்பர் உய்ய அன்று அளிக்கும் - தேவர்களெல்லாம் பிழைக்க அக்காலத்துக் கொடுத்தளித்த,—அம்பலத்து ஒருவன் - அம்பலத் திருக்கும் ஒப்பற்றவனது,—குடம் வரைவாய்-பெரிய வரையிடத்து,—தழங்கும் அருவி வீங்கும் சுனை புனல் - ஒலியா நின்ற அருவியாற் பெருகுகின்ற சுனைப் புனலின்கண்,—அன்று வீழ்ந்து அழுங்க - அன்று யான் விழுந்து கெடப்புக,—பிடித்து எடுத்து வாங்கும் அவர்க்கு - பற்றியெடுத்துக் கரைக்கணுய்த்த அப்பெரியோருக்கு,—சிறியேன் சொல்லும் வாசகம் அறியேன் - சிறியேனுகிய யான் சொல்லுவதோர் மாற்றமறியேன். எ - று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - இரவுக்குறி நேர்தல்.

ஒரு நன்றுசெய்ப தற்கு ஒப்பில்லாத நன்றுசெய்யுமாய். சுனைப் புனல்வாய் வீழ்ந்தழுங்கவன்று தாமே வந்தெடுத் தளித்தார் போல வழக்காத "அதரில் தாம் வருதலால் எனக்குவரும் இடுக்கண [illegible] இன்னும் கருத்தால் "சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித் தெடுத்து வாங்குமவர்க்" கென்றான், ஆற்றின தும் நினைத்து இரவுக்குறி மறுத்த தலைமகள் அவன்செய்த உதவியை நினைத்து பின் உடம்பட்டாளாதல் பொருத்தமை யறிந்துகொள்க. இக் கருத்தேபற்றி உதவிநினைந்து குறைநயந்து தென்றுரு அவ னது ஆற்றுமை நிலைமைகேட்டுக் குறைநயந்த தென்றார். அவன் செய்த பேருதவி சொல்லுகையால் அவன்செய்த வுதவிக்குக் கைம்மாறுவது சா வனிடத்து செல்லவேயென்ப துடம்பா டாயிற்று. பிறவிக் குட்டத்தில் யான் விழுந்து கெடப்புகத் தாமேவந்து பிடித்தெடுத்து அருளினும் வாங்கியபேருதவி யார்க்கும் சிறியேனுகிய யான் சொல்லுவ தறியேனென்று வேறுமொரு பொருள் தோன்றியவாறு காண்க. (௧௭௨)

குறைநேர்ந்தமை கூறல்.

குறைநயந்தனை நெறிகுழலியென
எறிவேலண்ணற் கறியவுரைத்தது.

(எ - து.) (குறைநயப்பித்து) பாங்கி, செறிப்பட்ட கூந்தலையுடைய தலைமகள் (யான்சொன்னதுகேட் டுக் குறைநேர்ந்தனள் என்று) எறிகின்ற வேலை யுடைய தலைமகனுக் கறியக்கூறியது.

ஏனற்பசுங்கதிரொண்டாழ்க்கழிய [illegible]
கானக்குறவர்கள்கம்பலைசெய்யும்வம்பார்சிலம்பா
யானிற்றையாமத்துநின்னருண்மேனிற்கவுற்றுச்சென்றேன்
றேனக்கக்கொன்றையன்றில்லையுறாரிற்செல்லுஞ்செல்லலுக்கே.

(இ-ள்.) ஏனல் பசுங்கதிர் ஒண்டாழ்க்கு அழிய - தினையின்து பசியகதிர் கொடையாலழிய,—எழில் உன்னி - (அஃதழியாமல்) மழைபெறக் கருதி,—கான குறவர்கள் கம்பலை செய்யும் - கா னகத்துவாழுங் குறவர்கள் (தெய்வத்துக்குப் பலிகொடுத்து) ஆரவாரிக்கும்,—வம்பு ஆர் சிலம்பா-புதுமை நிறைந்த சிலம்பை யுடையாய்!—இற்றை யாமத்து - இன்றிரவின்கண்,—யான் - நான்,—நின் அருள்மேல் நிற்கவுற்று-நின் அருளின்மேல் நிற்க வேண்டி,—தேன் நக்க கொன்றையன் - தேனோடு மலர்ந்த கொ ன்றை மாலையை யுடையானது,—தில்லை உறார் - தில்லையைப் பொருந்தாதார்,—செல்லும் செல்லல்கள் சென்றேன் - அடை யுந் துன்பத்தை யடைந்தேன். (நீ குறிப்பதுடம்பாடு) எ - று. மெய்ப்பாடு - பெருமிதம் ; பயன் - தலைமகனுக்குக் குறைநயந் தமை யுணர்த்துதல்.

வம்பு - காலமல்லாத காலத்துப் பெய்தமழை. யாமத்து நின் னருளே என்பதூஉம் பாடம். கானக்குறவர்கள் தமக்குணவா னதுவே என்பதாம் பசுங்கதிர்கொண்டழியக் கருதி யென்பதாய் பாலி யம் நினைக்கதிர்கொடையா லழியத் [illegible] பாலி மழைபெய்விக்க முயல்கின்றதுபோல, நினக்குத் துடம்பாடிய

இவள்நலம் அலர்முதலாயினவற்றால் தொலையாமன் முயன்று பாதுகாப்பாயென உள்ளுறையுமாறு காண்க. (கருக)

வரவுணர்ந்துரைத்தல்.

வளமயிலெடுப்ப விளமயிற்பாங்கி
செருவேலண்ணல் வரவுரைத்தது.

(எ-து.) மயிலினந் துயில்பெயரா நிற்பன (என்ன காரணமோ) வென்று (தலைமகனுக்குக் குறைநயப்புக் கூறிய) இளமயிற் சாயலையுடைய பாங்கி, (தலைமகளுக்குப்) போர்வேலையுடைய தலைமகனது வரவறிந்து கூறியது.

முன்னுமொருவரிரும்பொழின்மூன்றற்கு முற்றுமிற்றாற்
பின்னுமொருவர்சிற்றம்பலத்தார் தரும்பேரருள்போற் [ன்
றுன்னுமொரின்பமென்றே தோகைதன்றோகைக்குச் சொல்லுவபோ
மன்னுமரவத்தவாய்த்துயில்பேருமயிலினமே.

(இ-ள்.) இரு பொழில் மூன்றற்கு முன்னும் ஒருவர் - பெரிய வுலகங்கள் மூன்று முளவாதற்கு முன்னுந்தாமொருவருமே யாயினார்,—முற்றும் இற்றால் - அவ்வுலக முழுதும் மாய்ந்தால்,—பின்னும் ஒருவர் - பின்னுந் தாமொருவருமே யாயினார்,—சிற்றம்பலத்தார் - சிற்றம் பலத்தின் கண்ணார்,—தரும் பேரருள் போல் - (அவர்) தரும்பெரிய அருள்போல,—ஓரின்பம் துன்னும் என்று-(இவ்விரவின்கண்) ஓரின்பம் வந்துபொருந்து மென்று,—தம் தோகைக்கு நகை சொல்லுவபோல்,—மன்னும் அரவத்தவாய் - இடைவிடாது நிகழும் ஆரவாரத்தையுடையவாய்,—மயிலினம் துயில்பேரும் - மயிலினம் துயில் பெயரா நின்றன. (இஃதென்னோ?)எ-று. மெய்ப்பாடு-பெருமிதம்; பயன் - தலைமகன் வரவுணர்த்துதல்.

சிற்றம்பலத்தா ரென்பதற்கு உலகங்களுள்ளாய்ச் செல்லுங் காலத்துச் சிற்றம்பலத்தின் கண்ணுளரென்றுரைப்பினு மமையும்.

ஒருநாள் வெருவித்தாமே துயிலெழுந் துணையன்று, இஃது தலைமகன்செய்த குறியென்பது போதர, மன்னு மரவத்தவா யென்றான். (கசுo)

தாய்துயிலறிதல்.

ஊசன்மிசைவைத் தொள்ளமிளிழிழ்
றுயதுதாயி றுணறிந்த [illegible] து.

(எ-து.) (தலைமகன் வரவுணர்ந்த பாங்கி யாம் விளையாடுகின்ற பொழிலில் யானை நின்றூசலைத் தள்ளா நின்றதென) ஊசன்மேல் வைத்து துன்னிய படுக்கையிற்கிடந்த தாயது துயிலையறிந்தது.

கூடாரரணெரிகூடக்கொடுஞ்சிலைகொண்டவண்டன்
சேடார்மதின்மல்லற்றில்லையன்னாய்சிறுகட்பெருவெண்
கோடார்கரிகுருமாமணியூசலைக்கோப்பழித்துத்
தோடார்மதுமலர்நாகத்தைநூக்குஞ்செழும்பொழிற்கே.

(இ-ள்.) கூடார் அரண் எரி கூட - கூடாதாருடைய அரண்களை எரிசென்று கூட,—கொடு சிலை கொண்ட அண்டன் - வளைந்த சிலையைக் கைக்கொண்ட இறைவனது,—சேடார் மதில் மல்லல் தில்லையன்னாய் - பெருமை பொருந்திய மதிலையும் வளப்பத்தையுமுடைய தில்லையையொப்பாய்!— சிறுகண் - சிறிய கண்ணையுடைய,—பெரு வெண்கோடு ஆர் கரி - பெரிய வெண்கோடு நிரம்பிய யானையானது,—செழும் பொழிற்கு - அழகிய பொழிலின்கண்,—குரு மாமணி ஊசலை கோப்பழித்து - நிறத்தையுடைய உயர்ந்த மணிகளாற் செய்யப்பட்ட ஊசலைக் [illegible]த்து,—தோடு ஆர் மது மலர் நாகத்தை - இதழையுடைய [illegible]னையுடைய (அவ்வூசலைத் தொடுத்த) நாகமரத்தை,— நூக்காநின்றது (இதற்கென்செய்வேன்). எ-று. மெய் [illegible] ருமிதம் ; பயன் - இடையீடாராய்தல்.

சூழ்பொழிலே யென்பதூஉம் பாடம். இவ்வாறு கூறவும் வா(ரா)ளாகிடப்பின் தாய் துயின்றாளென்றறிதல் பயன். சூழ்பொழிற்கென்று நான்கனுருபு ஏழாவதன்பொருட்கண் வந்தது. (௧௬௧)

துயிலெடுத்துச் சேறல்.

தாய்துயி லறிந்து தாய்தரு பவள்
மெல்லியற்குச் சொல்லியது.

(இ-ள்.) தாயது துயிலறிந்து தலைமகனைப் (புறத்துக்கொடுபோய்) உபாய மாராயும் பாங்கி) தலைமகட்குக் கூறித் (துயிலெடுத்துச் சென்றது.)

விண்ணுக்குமேல்வியன்பாதலக்கீழ்விரிநீருடுத்த
மண்ணுக்குநாப்பணயன்மாற்கரியோன்றில்லைநின்றோன்மிடற்றின்
வண்ணக்குவளைமலர்கின்றனசினவாள்மிளிர்நின்
கண்ணொக்குமேற்கண்டுகாண்வண்டுவாழுங்கருங்குழலே.

(இ-ள்.) வண்டு வாழும் கருங் குழலே - வண்டுகள்வாழும் கரியகுழலையுடையாய்! — விண்ணுக்குமேல் - (எல்லாப் பொருளுக்கு மேலாகிய) விண்ணுக்கும் மேலாயவன், — பாதலம் கீழ் - (எல்லாப்பொருளுக்குங் கீழாகிய) [illegible] மிடற்றின் வண்ணம் குவளை மலர்கின்றன - (அவனது) கண்டத்தின் (நீல) வண்ணத்தை [illegible] உடைய குவளைப்பூக்கள் மலர்கின்றவை, — சின வாள் மிளிர் - சினவாளை ஒளிர்தல்போலப் பிரகாசிக்கும் நின் கண் ஒக்குமேல் - நின்கண்களை [illegible] ஒக்குமாயின், — காண் - காண்பாயாக. எ - று. மெய்ப்பாடு - பெ[illegible] பயன் - தலைமகளைக் குறியிடத்துய்த்தல்.

மண்ணினுள்ளுறு முனாறுதலின், மண்ணுக்கு நாப்பண் மண்முழுதுக்கு மிடையாயுள்ள தில்லையை நயந்

ன்றேயென்ன நுனைப்பாருமுளர். சினவாள் மிளிர் நின்கண்ணொக்குமே லென்புழி ஒத்த பண்பு வேறுபட்டமையான் உவமைக்குவமை யன்றென்க. கண்டு காணென்ப தொருசொல். ஆய்தருபவள் - புறத்துக்கொடுபோ முபாயமாராய்பவள். (௧௬௨)

இடத்துய்த்துநீங்கல்.

மைத்தடங்கண்ணியைப் பாங்கியிடத் தொருபா
[illegible]

(இ-ள்.) (துயிலெடுத்துக் கொண்டுசென்ற) மையணிந்த தடங்கண்ணையுடைய தலைமகளை, அக்குறியிடத் துய்த்து ஒருபாலொதுங்கி நின்ற பாங்கி கூறியது.

நந்திவரமென்னுநாரணனுண்மலர்க்கண்ணிற்கெஃகந்
தந்தவன்புலியூரனையாய்தடங்கண்கடந்த
இந்திவரமிவைகாணின்னிருள்சேர்குழற்கெழில்சேர்
சந்தவாமுறியும்வெறிவீயுந்தருகுவனே.

(இ-ள்.) நந்தி வரம் என்னும் நாரணன் - (கண்ணை யிடந்திட்டு) நந்தீ! வரந்தரவேண்டுமென்னும் நாரணனது, — நாண்மலர் கண்ணிற்கு - புதுமலர்போலும் கண்ணினுக்கு, — எஃகம் தந்தவன் புலியூரனையாய் - ஓர் சக்கரத்தைப்(படைத்துக்) கொடுத்த தலைவனது புலியூரை யொப்பாய்! — தடம் கண் கடந்த இந்திவரம் - (இவை நின்) பெரிய கண்கள்கடந்த குவளைமலர்கள், — இவை காண் - இவற்றைக் காண்பாயாக, — நின் இருள் சேர் குழற்கு - நினது கருமைசேர்ந்த கூந்தலுக்கு, — சந்து எழில் சேர் வாம் முறியும் - சந்தனமரம் தரும் அழகுபொருந்திய நல்ல தழைகளையும், — வெறி வீயும் - நறுநாற்றத்தை யுடைய பூக்களையும், — தருகுவன் - (யான்) கொணர்ந்து தருவேன். (நீ இப்பூக்களைக் கண்டு இங்கு நிற்பாயாக). எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளைக் குறியிடத்து நிறீஇ நீங்குதல்.

கந்தியென்பது ஒரு திருநாமம். அன்னையாயுடைய நடைக்கன்க ளென் றுரைப்பாருமுளர். இந்நிலைமை யிலைகா னென்பதற்கு இன்கண்ணை வென்ற இந்திவரமாவன இவைகா ளென்றுரைப் பினு மமையும். இது குறிப்பெச்சம். (கஎரு)

தளர்வகன்றுரைத்தல்.

வடுவகிரனைய வரிநெடுங்கண்ணியைத்
தடவரையன்பொடு தளர்வகன்றுரைத்தது.

(எ-து.) (பாங்கி குறியிடத்துய்த்து நீங்கினபின்) மாவடுவகிரன்ன செவ்வரிபரந்த நெடுங்கண்ணையு டைய தலைமகளைத் தலைமகனெதிர்ப்பட்டுத் தடுத்த லருமையாகிய அன்பொடு (சூரியன் வருவதன்முன் னம்முடைய கமலக்கோயிலை நீரோ திறந்துகொண் டோ வந்தது என்ப் பெரும்பான்மைகூறித்) தளர்வு நீக்கியுரைத்தது.

காமனைவென்றகண்ணோன்றில்லைப்பல்கதிரோனடைத்த
தாமரையில்லினிதழ்க்கதவந்திறந்தோதமியே
பாமரைமேகலைபற்றிச்சிலம்பொதுக்கிப்பையவே
நாமனையாமத்தென்னோவந்துவைகியதுவே.

(இ-ள்.) காமனை வென்ற கண்ணோன் றில்லை - (இறையழிக்க வந்த காமனைவென்ற கண்ணையுடையவனது தில்லைக்கண், — பல் கதிரோன் அடைத்த தாமரை இல்லின் - பல கிரணங்களை யுடைய சூரியனாகிய வாயிலோன் அடைத்துவைத்த தாமரை யாகிய (நும்) இல்லின்கண், — இதழ் கதவம் திறந்தோ போந் தது - இதழாகிய கதவத்தை (அவ்வாயிலோன் வருவதன்முன் நீரோ) திறந்துகொண்டோ போந்தது? (இதுவிடக்க), — பரந்த அரையின் கண் அணி மேகலை பற்றி சிலம்பு ஒதுக்கி - பரந்த அரையின் மேலுளதாக்க மேகலையை (ஒலியாமற்) பிடித்துச் சிலம்புகளை மேலேறவொதுக் கி,—தமியே பைய அரை யாமத்து நாம் வந்து வைகி யக

த்து என்னோ - தனியே மெல்ல அர்த்தராத்திரியின்கண் நாம் வைகும் வந்து தங்கி விரும்பியது என்னோ? (இதனைக் கூறுவீராயின்). எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - தலைமகளைக் கண்டு தோன்றிய உவகையைப் பரிக்கலாற்றாது தலைமகனுற்றுதல்; தலைமகளை மகிழ்வித்தலுமாம்.

காமமென்னும் ரகரவீறு - இறுதியின்கண் வந்தது. எல்லாரா னும் திருமகள் நயக்கப்படுவதல்லது திருமகள் தன்னால் நயக் கப்படுவ தொன்றில்லை யென்னுங் கருத்தான், திருமகளை யொ ப்பாய் நாம் நயத்தியதென்னோ வென்றான், காமமென்னுமுன் னிலை புணர்ப்பாட்டுத் தன்மை உயர்வுதோன்ற முன்னிலைக்கண் வந்தது. (கஎசு)

மருங்கணைதல்.

அன்புமிகுதி யளவளாயவளைப்
பொன்புனைவேலோன் புகழ்ந்துரைத்தது.

(எ-து.) (பெரும்பான்மை கூறக்கேட்ட தலை மகள் பெருநாணினளாகலின் தன்முன்னிற்கலாகா ளித் தலைவிதைந்நி வருந்தாநிற்ப) அன்புமிகுதியா லவளை யளவளாவிப் பொன்னுபான மணிந்த வே லையுடைய தலைமகன் புகழ்ந்து கூறியது.

அகிலின்புகைவிம்மியாய்மலர்வேய்ந்தஞ்சனமெழுதத்
தகிலுந்தனிவடம்பூட்டத்தகாள்சங்கரன்புலியூ
ரிகலுமவரிற்றளருமித்தேம்பலிடையொசியப்
பகலுமிவ்விகைவேயிதுமாக்கும்புணர்முலையே.

(இ-ள்.) அகிலின் புகை விம்மி ஆய் மலர் வேய்ந்து - (குழலி னகன்) அகிற்புகை விம்ம ஆராயப்பட்ட மலர்களைச் சூடி,— அஞ்சனம் எழுதத்தகினும் தனி வடம் பூட்டத்தகாள் - (கண்ம லர்க்கு) அஞ்சனமெழுதத் தகுவாளாயினும் ஒரு தனிவடத்தைப்

பூட்டத் தருவானல்லன்,—சங்கரன் புலியூர் இகழுமவரின் தளரும் இத் தேம்பல் இடை - சங்கரனது புலியூரின் பெருமைபுனராது அதனை இகழ்வாரைப்போலத் தளராநின்ற இத் தேய்த்தலையுடைய இடையானது,— நெரியப் புரிதும் - நெரிந்தொடியப் புரிதும்,—புணர் முலை - (அதனைப் புணராது) இப்புணர் முலைகள்,—இங்ஙனே மிக இறுமாக்கும் - இவ்வண்ணமே மிகவும் விம்மாநின்றன. (இஃதென்னாய் முடியும்!) எ-று. மெய்ப்பாடு - உவகை ; பயன் - தலைமகளைச் சார்தல்.

தேம்பலிடை - இருபெயர்ப் பண்புத் தொகை யெனினுமமையும். ஆய்மலராய்த்தென்பது பாடமாயின் ஆராய்ந்து சூட்டப் பெறாக் குடுமித்தலை ஆழ்தலான் வருவித்துரைக்க. புகழு மென்பது பாடமாயிற் புகழுதற்கெளியவல்லனாவனாய் என்பது மிகுதிக்க வொட்டித்து. (க௬௫)

முகங்கண்டு மகிழ்தல்.

முளையவிழ்குழலி முகமதிகண்டு
இகழ்வேலண்ணல் மகிழ்வுற்றது.

(எ - து.) (மருங்கணைவிறுதிக்கண்) அரும்பவிழ்ந்த கூந்தலையுடைய தலைமகளது முகமாகிய மதியின்மலர்ச்சி கண்டு, விளங்குகின்ற வேலையுடைய தலைமகன் (இவளும் யானும் மலரு மதியுமெனத் தன்னைப் புணர்த்தி) மகிழ்ந்தது.

அழுந்தேனரகத்தியானென் றிருப்பத்தானன்றுகொண்ட
செழுந்தேன்திகழ்பொழிற்றில்லைப்புறவிற்செறுவகத்த
கொழுந்தேன்மலர்வாய்க்குமுதமிவள்யான்குருகுச்சுடர்கொண்
டெழுந்தாங்கதுமலர்த்தும்முயர்வானத்திளமதியே.

(இ-ள்.) யான் அழுந்தேன் நரகத்து என்று இருப்ப - நா னினி நரகத்தின்கட் படேனென்று செம்மாந் திருக்கும்

வண்ணம்,—வந்து ஆண்டுகொண்ட செழுந் தேன் திகழ் பொழில் தில்லை - (தானே)வந்து ஆண்டுகொண்ட செழுந்தேன் போல்வானது விளங்கும் பொழிலையுடைய தில்லையைச் சூழ்ந்த,—புறவில் செறுவகத்த கொழு தேன் - (இனம்) காட்டிற் செய்யின்கண்ணவாகிய கொழுவிய தேனையும்,—மலர் வாய்-மலராநின்ற வாயையு முடைய,—குமுதம் இவள் - குமுதமலர் இவள்,—குரு சுடர் கொண்டு எழுந்து - நிறத்தையுடைய நிலவைக்கொண்டெழுந்து,—அது மலர்த்தும் உயர் வானத்து இள மதியான் - அக் குமுதத்தை மலர்த்தும் உயர்ந்த வானத்தின்கண் திகழும் இளஞ் சந்திரன் நான். எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - நயப்புணர்த்துதல்.

நரகம் - பிறவி. வீடு பேற்றின்பத்தோடு சாராத நரகமுஞ் சுவர்க்கமு மொரு நிகரன வாகலின் நரகமென்றார். ஆண்டு கொண்ட தென்பது பாடமாயின் செழுந்தேனைப் பொழிலின் மேலேற்றுக. செறு - நீர் நிலையுமாம். வாய் - முகம். மலர்வாய்க்குமுதம் - [illegible] இல்லை, [illegible] வேனாது பருவம் விளக்கும். குருகுச் சுடர்கொண்டு மலர்த்து [illegible] கூட்டிக் குருகுச்சுடரான் மலர்த்துமென் றுரைப்பினு மமையும்; அதனால், தலைப்பெய்தமை யானன்றிக் கண்டது துணையான் அவள் மகிழ்தலைக் கூறினாரும். இவ்வின்பம் வழிமுறையாற் பெருகுமென்பது போதர இளமதியென்றான். (க௬௬)

பள்ளியிடத்துய்த்தல்.

பிரிவுதகுதிய பெருவரைநாட
டொள்ளிழைப்பாங்கியொடு பள்ளிசென் றது.

(எ - து.) (மலர்மதிமேல் வைத்துக்கூறிப்) பிரிதலைக் கருதிய பெருமலை நாடனாகிய தலைமகன், (தலைமகளை நோக்கி) ஒள்ளிழையை யணிந்த பாங்கியிடஞ் சென்று துயில் பயில்வாயென்றது.

கரும்புற நீலக்கொய்யற்றமியின்று துயில்பயின்மோ
வரும்பெறற்றோழியொடாயத்துநாப்பண்ணமரரொன்னா
ரிரும்புறுமாமதிற்பொன்னிஞ்சிவெள்ளிப்புரிசையன்றோர் [கே.
அரும்புறச்செற்றகொற்றத்தெம்பிரான்றில்லைச்சூழ்பொழிற்

(இ-ள்.) அமரர் ஒன்னார் — தேவர்களுக்குப் பகைவராயினாருடைய, — இரும்பு உறு மா மதில் - இரும்பினாற் செய்யப்பட்ட பெரிய மதிலையுடைய (ஊரும்), — பொன் இஞ்சி - பொன் மதிலையுடைய (ஊரும்), — வெள்ளி புரிசை - வெள்ளி மதிலையுடைய (ஊரும்), — அன்று ஓர் அரும்பு உற - அன்று ஓர் அரும்பின் தன்மையைப் பொருந்தும்படி, — செற்ற கொற்றத்து எம்பிரான் - எரித்த வெற்றியையுடைய எம்பிரானது, — தில்லை சூழ் - தில்லைகளைச் சூழ்ந்த, — பொழிற்கு - பொழிலிடத்து, — தமியின்று கரும்பு உற நீலம் கொய்யல் - தனியே நின்று வண்டுகள் பொருந்திய நீலப்பூக்களைக் கொய்யாதொழி, — அரு பெறல் தோழியொடு - பெறுதற்கரிய (நின்) தோழியுடனே, — ஆயத்து நாப்பண் துயில் பயில் - ஆயத்திடை நித்திரை செய்வாயாக, (என்றவாறு). மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - புறத்தா ரையம் பிரிதல்.

மோ - அசை. கரும்புறு நீலம் - மேலாம் கரும்புவந்து பொருந்து நீலமலர். பொழிற் கென்பது - வேற்றுமை மயக்கம். பொழிலே யென்பதூஉம் பாடம். (கச

வரவு விலக்கல்.

தெய்வமன்றோனைத் திருந்தமளிசேர்த்தி
மையவனநாடனை வரவுவிலக்கியது.

(இ-ள்.) (பாங்கி), தெய்வம் போன்றனையாகிய தலைமகளைத் திருத்திய பள்ளியிடத்துச் சேர்த்துப் பின்னுஞ் சென்று மேகங்கள் தவழும் மலைநாடனாகிய

தலைமகனை இவ்வாறொழுக வேண்டாமென வரைவு பயப்பக்கூறி அவனதுவரவு விலக்கியது.

நற்பகற்சோமனெரிதருநாட்டத்தன்றில்லையன்ன
விற்பகைத்தோன்றும்புருவத்திவளின்மெய்யேயெளிதே
வெற்பகச்சோலையின்வேய்வளர்தீச்சென்றுவிண்ணினின்ற
கற்பகச்சோலைகதுவுங்கன்னாடவிக்கல்லதரே.

(இ - ள்.) வெற்பகம் சோலையின் வேய் வளர் தீ - வெற்பிடத்துச் சோலையின்கண் உண்டாகிய மூங்கிலினிடத்துப் பிறந்து வளரும் தீயானது, — விண்ணில் நின்ற கற்பகம் சோலை சென்று கதுவும் - விண்ணின்கணின்ற கற்பகச் சோலையைச் சென்று பற்றும், — கல் நாட - மலைநாடனே! — இ கல் அதர் - இக் கல்லையுடைய சிறுநெறியானது (உனக்கு), — நல் பகல் சோமன் எரி தரும் நாட்டத்தன் - நல்ல ஞாயிறும் திங்களும் தீயுமென்றாகிய (மூன்று) நாட்டத்தையுமுடையவனது, — தில்லை அன்ன வில் பகைத்து தோன்றும் புருவத்து இவளின் - தில்லையைப் பொருவும் விற்பகைத்து அதனின் மிகும் புருவத்தையுடைய இவள் காரணமாக, — மெய்யே எளிது - மெய்யாகவே எளிதாயிற்று. (ஆயினும் நீ வரற்பாலை யல்லை). எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - வரவுவிலக்கி வரைவுடன்படுதல்.

தில்லையன்ன வென்ன வியையும். இவளின்மெய்யே யெளிதே யென்பதற்கு இவள் காரணமாக எளிதாமோ எளிதன்றென வெதிர்மறையாக்கி யுரைப்பினு மமையும். வேயிற்பிறந்த தீ அண்டமளாவு சென்று தேவருலகத்தினின்ற கற்பகச் சோலையைக் கதுவினாற்போல நின்வரவினால் அயலாரிடத்துப் பிறந்த அலர்பெருகி நின்னுருமதிப்பாந்து நின்பெருமையைச் சிதைக்குமென உள்ளுறையான் அலரறிவுறுத்த வாறு. இவனுக்குப் பெருமையாவது இவ்வழியிற் பிறர்கள் கொண்டாட்டம். சிதைத்தலாவது இகலோக பரலோக மிரண்டையுஞ் சிதைத்தல், நன் - விகாரவகையால் வலித்து நின்றது.

ஆற்றாதுரைத்தல்.

வரைவுகடாய வாணுதற்றோழிக்
கருவரைநாட னாற்றாதுரைத்தது.

(எ-து.) வரைவுகடாவி வரவுவிலக்கிய வாணுதற் பாங்கிக்கு (அவ்வரை வுடம்படாமல் பின்னுங் கள வொழுக்கமே வேண்டி) அருமையாகிய [illegible] [illegible] தலைமகன் றன்னாற்றாமை தோன்றக் கூறியது.

பைவாயரவரையம்பலத்தெம்பரன்பைங்கயிலைச்
செவ்வாய்க்கருங்கட்பெரும்பணைத்தோட்சிற்றிடைக்கொடியை
மொய்வார்கமலத்துமுற்றிழையின்றெனுமுன்னைத்தவத்தா
லிவ்வாறிருக்குமென்றோநிற்பதென்றுமென்னின்னுயிரே.

(இ-ள்.) பை வாய் அரவு அரை - படத்தையும் (பெரிய) வா யையுமுடைய அரவை யணிந்த அரையையுடைய, — அம்பல த்து எம் பரன் - அம்பலத்தின்கண் ணுளனாகிய எம்முடைய பரனது, — பைங் கயிலை - (சோலையாற்) பசிய கைலைக்கண்ணுள்ள, — செவ்வாய் கருங்கண் பெரு பணைத்தோள் சிற்றிடை கொடி யை - செய்ய வாயையும் கரிய கண்ணையும் பெரிய மூங்கில் போலும் தோள்களையும் சிறிய இடையையு முடைய கொடி போல்வாளை, — மொய்வார் கமலத்து முற்றிழை - பெரிய (தா ளத்தால் நீண்ட கமலத்துவாழும் திருமகள், — என் முன்னை தவத்தால் இன்று இவ்வாறு இருக்குமென்றோ - எனது முற்பிறப் பின்க ணுண்டாகிய தவப்பயனால் (எனக்கெய்துவாம் வண்ணம்) இன்றிவ்வாறு (கொடிச்சியாய்) இருக்குமென்று கருதியோ, — என் இன் உயிர் என்றும் நிற்பது - என்னுடைய இன்னுயிர் என்றும் நிற்பது. (இத்தன்மையாளை யான்வரையுந்துணை யெளியளாக நீ கூறுகின்றதென்?) எ-று. மெய்ப்பாடு-உவகை; பயன்-வரை வுடம் படாமை.

கைலைக்கொடியென வியையும். கொடியையென்னு மிரண் டாமுருபு என்றுகருதியென எஞ்சிநின்ற வினையொடு முடியும்.()

இரக்கங்கூறி வரைவுகடாதல்.

அதிர்கழல்வ னகன்றவ ழி
யெதிர்வதறியா திரங்கியுரைத்தது.

(எ - து.) (களவிரும்பி ஆற்றாதுரைத்த) ஒலிக் கின்ற கழலையுடைய தலைமகன் நீங்கியபின் அவன் செல்லும் வழியில் இடையூறுண்டாமென்று மச்சத் தால் அழுதிரங்கா நிற்கின்றாளென்று பாங்கி, தலை மகனுக்குத் தலைமக ளிரக்கங் கூறியது.

பைவாயரவுமறியுமழுவும்பயின்மலர்க்கை
மொய்வார்சடைமுடிமுன்னவன்றில்லையின்முன்னினக்கா
செவ்வாய்கருவயிர்ச்சேர்த்திச்சிறியாள்பெருமலர்க்கண்
மைவார்குவளைவிடுமன்னநீண்முத்தமாலைகளே.

(இ-ள்.) மன்ன - மன்னனே! (நீ செல்லுமார்க்கத்தில் நினக் கிடையூறுண்டாகுமென்னும் அச்சத்தால்), — சிறியாள் பெரு மலர் கண் மை வார் குவளை - இச்சிறியாளுடைய பெரியமலர்போ லும் கண்களாகிய கருமையையுடைய நெடிய குவளைகள், — நீள் முத்தம் மாலைகள் விடும் - நீண்ட முத்தமாலைகளைப்புறப்பட விடாநிற்கும் (ஆகலான்), — பை வாய் அரவும் மறியும் மழுவும் பயி ல்மலர் கை - படத்தையும் பெரிய வாயையுமுடைய அரவும் மான் குட்டியும் மழுவாயுதமும் விடாது நிகழும் மலர்போலுங் கை யையும், — மொய் வார் சடை முடி - நெருங்கிய நீண்டசடைக ளாலாகிய முடியையுமுடைய, — முன்னவன் - (எல்லாப் பொரு ட்கு) முன்னுபவனது, — தில்லையின் முன்னினக்கால் செவ்வாய் கருவயிர் சேர்த்தி - தில்லையின் எல்லையில் சென்று கிட்டினால் நின் செய்யவாயைக் கரிய கொம்பின்கண் சேர்த்து ஊதவேண் டும். எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - வரைவு கடாதல்.

'கண்ணாகிய குவளைப்பெருமலரென்று கூட்டுவாரும், மலர் தலையுடைய கண்ணென்பாரு முளர். குறிஞ்சி நிலத்திற்குரிய

கோலத்தனைப் வருதலின் வயிர் கூறப்பட்டது. மலர்க்கண் என்றது உவமை கருதாது கண் என்னுந்துணையாய் நின்றது. (கஎ0)

நிலவு வெளிப்பட வருந்தல்.

தனிவேலவற்குத் தந்தளர்வறியப்
பனிமதிவிளக்கம் பாங்கிபகர்ந்தது.

(எ - து.) (இரக்கங்கூறி வரைவுகடாய) பாங்கி, ஒப்பில்லாத வேலையுடைய தலைமகனுக்கு, குளிர்மதி வெளிப்பட்டால் அதனால் தமக்குண்டாகுந் தளர்ச்சியைச் சிறைப்புறமாக அறியக்கூறியது.

நாகந்தொழுவெழிலம்பலநண்ணிநடம்பயில்வோ
னாகமிதுமதியேமதியேநவில்வேற்கையெங்க
ணாகம்வரவெதிர்நாங்கொள்ளுநன்னிருள்வாய்த்தறவோர்
நாகமலிபொழில்வாயெழில்வாய்த்துநின்னாயகமே.

(இ-ள்.) நவில் வேல் கை எங்கள் நாகம் வர - பயிலப்பட்ட வேலேந்திய கையையுடைய எங்கள் யானைவர, — நாம் எதிர்கொள்ளும் நன் இருள்வாய் - நாங்க ளெதிர்கொள்ளும் செறிந்த இருளிடத்து, — றவு ஓர் நாகம் மலி பொழில்வாய் - (அவ்விருளைச் சிதைத்து) தேன்பொருந்திய நாகமலர் நிறைந்த பொழிலிடத்து (நின்று), — எழில் வாய்த்த நின் நாயகம் - (நீசெய்கின்ற) அழகுவாய்த்த நினது முதன்மை, — மதியே - இக்கணே!, — மதியே - (நீ) அறிந்து செய்யும் காரியமோ, — நாகம் தொழு எழில் அம்பலம் நண்ணி - (பதஞ்சலியாகிய) நாகந்தொழும் அழகு பொருந்திய அம்பலத்தை யடைந்து, — நடம் பயில்வோன் - நடத்தைப் பயில்வோனது, — நாகம் இது - மலையிது. (இதனைக் கடைப் பிடிப்பாயாக.) எ - று. மெய்ப்பாடு - வெகுளி; பயன் - இடையீடு படவித்தல்.

நாகத்தான் விழுங்கப்படும் நீ நாகந்தொழு வம்பலத்து நடம் பயில்வோனது மலைக்கட் புகுந்து எமக்கு வருத்தமுண்டாகும்

படி விளக்கி வீற்றிருத்தல் எமக்கு நன்றி பயவாதென்பது கருத்து. அறிவு என்றது ஈண்டறிந்து செய்யப்படுங்காரியத்தை. துணிநாயகமென்பது உம்பாடம். (கஎக)

அல்லகுறியறிவித்தல்.

வல்லியன்னவ ளல்லகுறிப் பா
டறைப்புனற்றுறைவற்குச் சிறைப்புறத்துரைத்தது.

(எ - து.) குறியல்லாத குறி யெதிர்ப்பட்டதைக் கொடிபோல்வாளாகிய பாங்கி, அறைதலையுடைய புனலையுடைய துறைவனாகிய தலைமகனுக்குச் சிறைப்புறத்திற் கூறியது.

மின்னங்கலருஞ்சடைமுடியோன்வியன்றில்லையன்னா
யென்னங்கலமரலெய்தியதோவெழின்முத்தந்தொத்திப்
பொன்னங்கலர்புன்னைச்சேக்கையின்வாய்ப்புலம்புற்றுமுற்று
மன்னம்புலருமளவுந்துயிலாதழுங்கினவே.

(இ-ள்.) மின் அங்கு அலரும் சடை முடியோன் - ஒளி அவ்விடத்து விரியும் சடையா வியன்ற முடியை யுடையவனது, — வியன் தில்லை அன்னாய் - அகன்ற தில்லையை யொப்பாய்!, — எழில் முத்தம் தொத்தி அங்கு பொன் அலர் - அழகையுடைய (அரும்பாகிய) முத்துக்கள் தொத்தி யவ்விடத்து (தாதாகிய) பொன்மலரும், — புன்னை சேக்கையின் வாய் - புன்னைமரத்தின் கணுள்ள தம்படுக்கையிடத்து, — அன்னம் முற்றும் புலம்புற்று - அன்னங்களெல்லாம் துன்பமுற்று, — புலரும் அளவும் துயிலாது அழுங்கின - புலருமளவும் துயிலாது ஆரவாரித்தன, — அங்கு எய்தியது அலமரல் என்னோ - அவ்விடத் தெய்தியதாகிய வருத்தம் என்னும்? (அறிகின்றிலேன்). எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - அல்லகுறிப் பட்டமை தலைமகனுக் குணர்த்துதல்.

பின்னங்கலரு மென்பதற்கு மின் "அவ்விடத் தலர்த்தாற் போலுஞ் சடையெனினு மமையும். என்னங்கலமா லெய்திய தோ வென்பதற்கு என்ன வலமரலை யெய்தினாய் என்று கூட்டி யுரைப்பினு மமையும். செம்பொழுது துயின்றிலவென் பான் புலருமளவுமென்றான். பிறைநுதல் பகற்குறிவந்து நிற்பக் கூறினுமெனினு மமையும். அழுங்கல் இரக்கமெனினு மமையும். இனித்திணை செய்தல். (கஎஉ)

கடலிடைவைத்துத் துயரறிவித்தல்.

எறிகடன் மேல்வைத் திரவுறுதுயரம்
அறைகழலவற் கறியவுரைத் தது.

(எ-து.) (அல்லகுறியறிவித்தபாங்கி,) ஒலிக்கின்ற கழலையுடைய தலைமகனுக்குச் சிறைப்புறமாக அலையெறிகின்ற கடலின்மேல்வைத்து இரவில்வருந் துயர மறியச்சொன்னது.

சோத்துன்னடியமென்றோரைக்குழுமித்தொல்வானவர்சூழ்ந்
தேத்தும்படிநிற்பவன்றில்லையன்னாளிவணலனும்
வாய்த்துன்னமிழ்துந்திருவுமதியுமிழந்தவன்னீ
பேர்த்துமிப்பெற்றியாய்ப்பழிநோக்காய்பெருங்கடலே.

(இ-ள்.) பெருங்கடலே - பெரிய சமுத்திரமே!—ஆர்த்து உன் அமிழ்தும் திருவும் மதியும் இழந்தவன் - (முற்காலத்து யிவ்வாறு) ஒலித்து உன் அமிர்தத்தையும் திருவையும் இக்கலையும் இழந்தவனாயிருந்தாய்,—பேர்த்தும் - மீண்டும் (ஒருபயனு மின்றியே),—சோத்தம் உன் அடியம் என்றோரை தொல் வானவர் குழுமி சூழ்ந்து ஏத்தும் படி நிற்பவன் - சோத்தம் உன்னடியம் என்றொருகாற் சொன்னோரைப் பழையராகிய வானவர் கூடிப் பரிவாரமாய்ச் சூழ்ந்து நின்றேத்தும் வண்ணம் நிற்குமவனது,—தில்லை அன்னாள் இவள் நலன் - தில்லையை யொத்தவளாகிய இவள் வாட,—நீ இணைப்பு ஒழியாய்-நீ ஒழியாதிரைகின்றாய்,—பழிநோக்காய் - (காரணமின்றிப் பிறரை வருத்துத

லால்வரும்) பழியையும் நோக்காய். (நினக்கிது நன்றோ?)

எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - அல்லகுறிப்பட்டமை தலைமகனுக் குணர்த்துதல்.

சோத்தம் - இழிந்தார் செய்யுமஞ்சலி, அது சோத்தெனக் கடைக்குறைந்து நின்றது. சோத்த மடியமென்பதூஉம், அடிய மெனிற் குழுமித்தொல்லை வானவ ரென்பதூஉம், குழீஇத் தொல்லை வானவர்சூழ்ந் தேத்தும்படி வைப்பவ னென்பதூஉம் பாடம். திருவு மதியுமென்பது செல்வமு மதியுமென வேறொருபொருள் தோன்ற நின்றதென்பாரு முளர். இரா குறைநின்றது. (கஎங)

காமமிக்ககழிபடர்கிளவி.

தாமமிக்க தாழ்குழலேழை
காமமிக்க கழிபடர்கிளவி.

(எ-து.) (தலைமகனைக் காணலுற்று வருந்தாநின்ற) மாலையணிந்த தாழ்குழலையுடைய தலைமகள், வேட்கை மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல்.

மாதுற்றமேனிவரையுற்றவில்லிதில்லைநகர்சூழ்
போதுற்றபூம்பொழில்காள்கழிகாளெழிற்புள்ளினங்கா
ளேதுற்றழிதியென்னீர்மன்னுயிர்த்துணைமலர்க்கிவளோ
தீதுற்றதென்னுக்கென்னீரிதுவோநன்மைசெய்பவரே.

(இ-ள்.) மாது உற்ற மேனி - மாது பொருந்திய மேனியையுடைய,—வரை உற்ற வில்லி - வரையாகிய மிக்க வில்லையுடையவனது,—தில்லை நகர் சூழ் போது உற்ற பூம் பொழில்காள் - தில்லை நகரைச் சூழ்ந்த அரும்பு பொருந்திய மலர்களையுடைய பொழில்காள்!—கழிகாள் - (அப்பொழிலைச் சூழ்ந்த) கழிகாள்!—எழில் புள்ளினங்காள் - (அக்கழியனிற் பயிலும்) அழகையுடைய பறவைக் கூட்டங்காள்!—ஏது உற்று அழிதி என்னீர் - (என்னை நீங்கள் யாதனை யுற்றழிகின்றாயென்று ஒருகாற் கூறு

இன்றிலீர்;—சாம் துறைவர்க்கு - குளிர்ந்த துறைவருக்கு,— இவள் நீது உற்றது என்னுக்கு என்னீர் - இவள் குற்றஞ்செய்தது ஏதுக்கென்று கூறுகின்றிலீர்;—இதுவோ நன்மை - இதுவோ (நம்நாட்டுறும்) நற்றன்மை,— செப்புமின் - சொல்லுங்கள். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயர்வுயிர்த்துத் தானே ஆற்றுதல். மன்னும் - முயும் - அசைநிலை.

மாதுற்ற மேனியென்பது அருபெயராய் மேனியை யுடையாண்மேல் நின்றதெனினு மமையும். வளையுற்ற வில்லியென்பதற்கு வளைந்தன்மையைப் பொருந்திய வில்லையுடையா னெனினு மமையும். இதுவோ நன்மை என்பதற்குத் தில்லையைச் சூழ்ந்தவிடத் தன்னிராகலின் நமக்குண்டாகிய சிறப்புடைமை யிதுவோவெனினுமமையும். அழுகையென்பதூஉம்பாடம். (௧௬௯)

காப்புச்சிறைமீக்க கையறுகிளவி.

மெய்யறு காவலிற்
கையறு கிளவி.

(எ - து.) (காமமிக்கு எதிர்ப்பாடின்மையால் தலைமகள்) மீறமுடியாத மிக்க காவலாற் கையற்றுச் சொல்லுஞ் சொல்.

இன்னறவார்பொழிற்றில்லைநகரிறைசீர்விழவிற்
பன்னிறமாலைத்தொடைபகலாம்பல்விளக்கிருளின்
துன்னறவுய்க்குமிவ்வூருந்துயிலிற்றுறைவர்மிக்க
ஒண்ணிறவேலொடுவந்திடின்ஞாளிகுரைதருமே.

(இ - ள்.) இன் நறவு ஆர் பொழில் தில்லை நகர் இறை சீர் விழவில் - இனிய தேன் நிறைந்த பொழிலை யுடைய தில்லை நகர்க் கிறைவனது சீரையுடைய திருவிழாவின் கண்,—பல் நிறம் மாலைத் தொடை பகலாம் - பல நிறங்களையுடைய (மாணிக்க முதலிய மணிகளாற் றொடுக்கப்பட்ட) மாலைகளின் றொடைகளாற்

(இராப்பொழுதும்) பகலாகா நிற்கும்,—பல் விளக்கு துன் இருளின் அற உய்க்கும் - (அதுவேயு மன்றி) பலவாகிய விளக்குகள் பொருந்திய இருளை யறத்துரக்கும்,—இவ்வூரும் துயிலின் - (இவ்விடையீடேயன்றி யொருபொழுதுந் துயிலாத) இவ்வூரும் ஒருகாற் றுயில்வாராயின்,—துறைவர் மிக்க வொள் நிறம் வேலொடு வந்திடின் - துறைவர் (அச்சத்தைச் செய்யும்) மிக்க நிறத்தை யுடைய வேலொடு வருவாராயின்,—ஞாளி குரைதரும் - அப்பொழுது நாய் குரையா நிற்கும். (ஆதலால் அவரை நாமெதிர்ப்படுத லரிது போலும்). எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயர்வுயிர்த்துத் தானே ஆற்றுதல்.

மாலைத் தொடையும் இராப்பகலாகா நிற்கும், பலவிளக்கும் இருளைத் துரக்குமென் றுரைப்பினு மமையும். இவ்வூருந் துயிலினென்றதனால், அதுவு மோரிடையீடாகக் கூறப்பட்டதாம். மிக்கவேலென் றுரைப்பினு மமையும். (௧௭௦)

ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி.

காறவர்குழ லவ்வழிக் [illegible]
[illegible]ற்ற வச்சக்கிளவி.

(எ - து.) மணங்கமழ்கின்ற நீண்ட குழலையும் மான்போலு நோக்கையுமுடைய பாங்கி, தலைமகன் வந்த வழிக்குப் பரிவுற்றுக் குறிப்பின்றியே வருவதோர் நயக்கத்தாற் சொல்லுஞ் சொல்.

தாருறுகொன்றையன்றில்லைச்சடைமுடியோன்கயிலை
நீருறுகான்யாறளவின்றிவணுதலினது
போருறுவேல்வயப்போர்க்குருமஞ்சுகமழ்ந்திவருந்
குருஉச்சோலையின்வாய்வரற்பாற்றன்றுதூங்கிருளே.

(இ - ள்.) தார் உறு கொன்றையன் - தாராகிய மிக்க கொன்றையை யுடையவன்,—தில்லை சடை முடியோன் - தில்

மிக்க நுணுகிய சடையானியன்ற முடியையுடையவன்,—கயிலை நீர் உறு கான் யாறு அளவில நீத்தி வந்தால் - (அவனது) கைலையின் நீரான் மிக்க எண்ணிறந்த காறுகளை நீந்திவந்தால்,—வயம் பொங்கு உரும் - (அவ்விடத்து) வலியையுடைய பொங்கும் இடியேறு, — வினைது போர் உறு வேல் அஞ்சுவினது போர்மிக்க வேலையஞ்சி நின்பால் வாரா தொழிக, —சூர் உறு மஞ்சு இவரும் சோலையின்வாய் - (ஆயினும்) தெய்வம் பொருந்தும் மஞ்சு பரக்கும் சோலையிடத்து, — அங்கு இருள் - செறிந்த இருட்கண்,—வரற்பாற்றன்று - வரும்பான்மைத் தன்று. (அத்தெய்வங்களை யாமஞ்சுதும்). எ-று. மெய்ப்பாடு-அச்சம்; பயன் - வரைவுகடாதல்.

தாருறை கொன்றைய னென்பது பாடமாயின், தார் தங்கு கொன்றையனென முதலாகிய தன்பொருட் கேற்ற வடை யடுத்து நின்றதாக வுரைக்க. *இப்பாட்டிற்கு ஏனை மூன்றடியும் உறையென்றேதும். வரற்பாற்றன்றென்பதவினைமேனின்றது()

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

மின்னுப்புரைய[illegible]ண்மருங்குல்
தன்னுட்கையா றெய்தி[illegible]வி.

(எ-து.) மின்னலைப்போலு மழகிய நுட்பமாகிய இடையையுடைய தலைமகள், தன்னுட்கையாற்றினை யே இல்லதொன்றன்மேலிட்டுச்சொல்லுஞ்சொல்.

விண்டலையாவர்க்கும்வேந்தர்வண்டில்லைமெல்லங்கழிசூழ்
கண்டலையேகரியாக்கன்னிப்புன்னைகலந்தகள்வர்
கண்டிலையேவரக்கங்குலெல்லாமங்குல்வாய்விளக்கு
மண்டலமேபணியாய்தமியேற்கொருவாசகமே.

*(இ-ள்.) கங்குலெல்லாம் மங்குல் வாய் விளக்கும் மண்டலமே - இராமுழுதும் ஆகாயத் திடத்தைவிளக்கும் (மதி) மண்டலமே!,—விண் தலை யாவர்க்கும் வேந்தர் வண் தில்லை

மெல்லங் கழி சூழ் - விண்ணிடத் துள்ளாராகிய எல்லார்க்கும் வேந்தரா யுள்ளாரது வளவிய தில்லை வரைப்பின் மெல்லிய கழி சூழ்ந்த,—கன்னி புன்னை கண்டல் கரியாக கலந்த கள்வர் - இளைய புன்னைக்கண் (இத்) தாழை சான்றாகக்கொண்டு என்னைக் கலந்த கள்வர்,—வரக் கண்டிலையே - (ஒருக்கால்) வரக் கண்டிலையோ?—தமியேற்கு ஒரு வாசகம் பணியாய் - துணையில்லா தோருக் கொருசொல் லருளாய். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயர்வுயிர்த்தல்.

மென்மை-நிலத்தின் மென்மை. கழிசூழ் புன்னையெனக் கூட்டி, கரியாகக் கொண்டென வொருசொல் வருவித்து இரண்டாவதாக வுரைப்பினு மமையும். எஞ்ஞான்றும் மனத்துதொன் றாகத் தாமொன்று மொழிந்தாரொன்றுங் கருத்தாற் கள்வரென் றாள். கள்வர்க் கண்டிலையே யென்பது பாடமாயின் இரண்டா முருபுவிரிக்க. கங்குலெல்லாங் கண்டிலையே யென்று கூட்டி யுரைப்பினுமமையும். கண்டலை - ஐ-அசைநிலை.

நிலா[illegible]

மின்[illegible]னன மின்னிடையாளென
வரைவுதோன்ற வுரைசெய்[illegible]து.

(எ - து.) (தலைமகன் மதியொடுகூறி வருந்தாநின் றமை தலைமகன் சிறைப்புறமாகக் கேட்டு வருந்த, பாங்கி தலைமகளை நோக்கி) உன்று வழித்தனன்மின் போலு மிடையையுடைய தலைமகளென வரைவுதோன் றக் கூறியது.

பற்றொன்றிலார்பற்றுந்தில்லைப்பரன்பரங்குன்றினின்ற
புற்றொன்றரவன்புதல்வனென்னநீபுகுந்தின்றுநின்றாய்
மற்றுன்றமாமணிக்கென்னைவாழ்த்தியவத்திதலன்றி
மற்றென்றுமிக்கிப்பரேல்வல்லனோமங்கைவாழ்வகையே.

(இ - ள்.) பற்று ஒன்று இல்லார் பற்றும் இல்லைப்பரன் - (அறக்கப் படுவனவற்றின் மேல்) பற்றொன்று மில்லாதவர்கள் அறிந்து பற்றும் இல்லைக்க ஊனாகிய பரன், — பரங்குன்றில் நின்ற புற்று ஒன்று அரவன் புதல்வன் என - பரங்குன்றின்கண் நின்ற புற்றொன் றரவையணிந்த அப்பரனது புதல்வனாகிய முருகவேளைப்போல, — நீ புகுந்து நின்றால்-நீ (இவ் வரைப்பிற்) புகுந்து நின்றால், — மல்லல் அன்று மா மலர் இட்டு வாழ்த்தி - (கண்டவர்கள் இந்நிலத்திற் குரிய முருகவேளெனக் கருதி) வளத்தையுடைய நெருங்கிய பெரியமலர்களையிட்டு வாழ்த்தி, — உன்னை வந்தித்தல் அன்றி மற்று ஒன்று சிந்திப்பரேல் - நின்னை வணங்காதே பிறி தொன்றை நினைவாராயின், — மங்கை வாழ்வகை வல்லளோ - மங்கை யுயிர்வாழும் வகை வல்லளோ? — (அதனாலிவ்வாறு ஒழுகற்பாலையல்லை). எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - வரைவுகடாதல்.

பரங்குன்றினின்ற புதல்வனென வியையும். மல்லல் - கடைக்குறைந்து [illegible] றொன்று சிந்தித்தல் இவன் காரணமாக வந்தானென்று கருதுதல். முருக[illegible]ன்றலே பெரும்பான்மை யாகலின், உண்மை புணர்தலை மற்றொன்[illegible]றன்றாள். வுதஞ் செய்யக் கருதுத லென்பாரு முளர். (கஎ௦)

இரவுறுதுயரங் கடலொடுசேர்த்தல்.

எறிவேற்கண்ணி யிரவுறுதுயர [illegible]
செறிகடலிடைச் சேர்த்தியுரைத்தது.

(எ-து.) (தலைமகளை யெதிர்ப்படமாட்டாது வருந்தாநின்ற) எறிகின்ற வேல்போலுங் கண்ணினையுடைய தலைமகள் இராவின்கண் தானுற்ற துன்பத்தை எல்லைகடவா நிலைமையையுடைய கடலிடைச் சேர்த்திக் கூறியது.

பூக்கனைவேளைப்பொடியாய்விழவிழித்தோன்புலியூ
ரோங்கனைமேவிப்புரண்டுவிழுந்தெழுந்தோலமிட்டுத்
தீங்கனைந்தோரல்லுந்தேறாய்கலங்கிச்செறிகடலே
யாங்கனைந்தார்நின்னையும்முளரோசென்றகன்றவரே.

(இ - ள்.) பூ கனை வேளை - பூவாகிய கணையையுடைய மன்மதனை, — பொடியாய் விழ விழித்தோன் - பொடியாய் விழும்வண்ணம் விழித்தவனுடைய, — புலியூர் செறி கடலே - புலியூர் வரைப்பிற் செறிந்த கடலே! — ஓங்கு அனை மேவி புரண்டு விழுந்து எழுந்து ஓலமிட்டு தீங்கு அனைந்து ஓர் அல்லும் கலங்கித் தேறாய் - (நீ) யோங்கியபணைந்த கரையைப் பொருந்திப் புரண்டு விழுந்தெழுந்து கூப்பிட்டுத் துன்பமுற்று இராவுங் கலங்கித் தெளிகின்றிலை, — அணைந்தார் - (ஆகலான்) அணைந்தவர், — நின்னையும் அகன்று சென்றவர் - நின்னையும் விட்டுப் போனவர், — ஆங்கு உளரோ - அவ்விடத் துளரோ? (உரைப்பாயாக). எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயர்வுயிர்த்தல்.

புலியூர்க் கடலே கலங்கித் தேறுயென்று கூட்டினு மமையும். பிரிவாற்றாதார்க்கு அணைமேவுதல் பஞ்சியணைமேவுதல். அணைந்தாரொன்பதனாலும் சென்றகன்றவரொன்பதனாலும் அடுக்காய் உளரோ வென்னும் பயனிலைகொண்டன. ஆங்கு அசைநிலையுமாம். (கஎக)

அலராறிவுறுத்தல்.

அலைவேலண்ணான் மனமகிழு [illegible]ள்
பலராலறியப் பட்டதென்ற [illegible] து.

(எ - து.) (தலைமகளது துயரத்தைச் சிறைப்புறமாகக்கேட்டுக் குறியிடைச் சென்றுநின்ற தலைமகனை நோக்கிப் பாங்கி) பிறரைவருத்து மியல்பையுடைய வேலேந்திய தலைமகனே! யாவரு மனமகிழாநின்ற அருளாவது பலராலுமறியப்பட்டதென்று கூறியது.

அலராயிரந்தந்துவந்தித்தமாலாயிரங்கரத்தா
லலரார்கழல்வழிபாடுசெய்தாற்களவில்லொளிக
ளலராவிருக்கும்படைகொடுத்தோன்றில்லையானருள்போன்
றலராய்விளைகின்றதம்பல்கைமிக்கையமெய்யருளே.

(இ - ள்.) மால் - திருமால்,—அலர் ஆயிரம் தந்து வந்தித்து - தாமரை மலர் ஆயிரங்கொண்டு அருச்சித்து வணங்கி,— ஆயிரம் கரத்தால் - (தன்) ஆயிரங் கைகளாலும்,—அலர் ஆர் கழல் வழிபாடு செய்தாற்கு - மலர்போலும் கழலை வழிபடுதலைச் செய்வதற்கு,—அளவில் ஒளிகள் அலரா இருக்கும் படைகொடுத்தோன் - அளவில்லாத ஒளிகள் விரியாநிற்கும் ஆழியாகிய படையைக் கொடுத்தவன்,—தில்லையான் - தில்லையிலுள்ளான்,—அருள்போன்று - (அவனது) அருள்போல,—ஐய - ஐயனே! — மெய் அருள் - (நின்னுடைய) மெய்யாகிய அருளானது,—அம்பல் கை மிக்கு அலராய் விளைகின்றது - அம்பல் கைமிக்கலராய் விளையாநின்றது, (இனித்தக்கது செய்வாயாக). எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - அலரறிவுறீஇ வரைவு கடாதல்.

அலராவிருக்குமென்பது ஓர் நிகழ்காலச்சொல். தில்லையானை யருள்பெற்றார் உலகியல்பினராய் நில்லாமையின், அவ்வருளுடை யாரைக் கலராமென்பது கருத்து. * "நாடவர்நந்தம்மையார்ப் பவார்ப்ப" என்றதூஉம் அக்கருத்தே பற்றிவந்தது. அம்பல் - பரவாதவளவு, பழிமொழி.

† 'அம்பலுமலருங்களவு' என்பவாகலின். (௧௧௦)

இரவுக்குறி முற்றிற்று.

* திருவாசகம் - திருப்பொற்சுண்ணம், செய்யுள் - ௭.
† இறையனாரகப்பொருள். சூ - ௨௨.

ஒருவழித்தணத்தல்.

இவ்வாறிரவுக்குறிபுணர்ந்து அலரெழுந்ததென்று விலக்கப்பட்டபின் தெருண்டு வரைதலைத் தெருளானாயின் அவ்வலரடங்க ஒருவழித்தணத்தல், உடன்கொண்டுபோதல், வரைவுமுடுக்கம், ஆகிய இம்மூன்றனு ளொன்று முறையென்ப. அவற்றுள் ஒருவழித்தணத்த லென்பது தலைமகன் சிலகா லொருவழித்தணந்துறைதல்.

இக்கிளவி பதின்மூன்று துறைகளையுடைத்து, அவை வருமாறு:—

அகன்றணைவுகூற லாழியொடுகேட்டல், ஆழியொடு புலந்த லன்னமோடாய்தல், ஆழிக்குரைத்த லாழிவிளைத்தல், சுடரொடுபுலம்பல் பொழுதுகண்டிரங்கல், பையுளெய்தல் பரிவுற்றுரைத்தல், அன்னமோடழிதல் வரவுணர்ந்துரைத்தல், வருத்தங்கூறல் வருபதின்மூன்றும், திருந்தியவொருவழித் திறனாகும்மே.

அகன்றணைவு கூறல்.

வழிவேறு படமன்றும்
பழிவேறு படுமென்றது.

(எ-து.) (அலரறிவுறுத்த பாங்கி தலைமகனை நோக்கி) இவளைப்பெய்து முடையாயம் களவன்றி வரைவாய் வேறுபடுமாயின் இவளுக்குப் பழித்தன்மை நீங்கிக் கெடும், அதனால் நீ அகன்றணைவாயென்று கூறியது.

புகழும்பழியும்பெருக்கிற்பெருகும்பெருகிநின்று
நிகழுநிகழாநிகழ்த்தினல்லவிலக்கிலனைப்பி
னகழுமதிற்றுமணித்தில்லையோனடிப்போதுசென்னித்
திகழுமவர்செல்லல்போலில்லையாம்பழிசென்மொழிக்கே.

(இ-ள்.) புகழும் பழியும் - (காரண வசத்தாற் பிறந்த) புகழும் பழியும்,—பெருக்கில் பெருகும் - (அக்காரணங்களைச் செய்தொருவன்) வளர்க்குமாயின் தாம் வளரும்,—நிகழ்த்தின் - (அக்காரணங்களை யிடையறாமற் செய்து) நிகழ்த்துவானாயின்,—பெருகி நின்று நிகழும் - (அவ்வாறு) வளர்ந்து நின்று மாயாது உளவாய்ச் செல்லும்,— அல்லால் நிகழா - (இவ்வாறல்லது அவை தாமாக) நிகழமாட்டா,—இது நீ நினைப்பின் - (அதனால்) இப்பெற்றியை நீ கருதுவையாயின்,—அகழும் மதிலும் அணி தில்லையோன் - அகழையும் மதிலையும் அணிந்த தில்லையானுடைய,— அடிபோது சென்னி திகழுமவர் - அடியாகிய மலர்கள் தஞ்சென்னிக்கண் விளங்கும் பெரியோரது, — செல்லல் போல் - பிறவித் துன்பம்போல,—சின்மொழிக்கு பழி இல்லையாம் - இச்சின்மொழிக்குப் பழி யிப்பொழுதே யில்லையாம். (நீ நினையாமையிற் பழியாகா நின்றது). எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - அறத்தொடுநிற்ப வரைவுடன்படுதல். (சஅக)

கடலொடுவரவுகேட்டல்.

மணந்தவரொருவழித் தணந்ததற்கிரங்கி
மதிநுதல்சேரு மெறிகடற்கியம்பியது.

(எ-து.) தலைமகள் தன்னை மணந்தவர் ஒருவழித் தணந்ததற்காற்றாது வருந்தி மடங்குந் திரைகளெறியுங் கடலொடு தலைமகன் வரவுகேளா நிற்றல்.

ஆரம்பரந்துதிரைபொருநீர்முகின்மீன்பரப்பிச்
சேரம்பரத்திற்றிகழ்ந்தொளிதோன்றுந்துறைவர்சென்றார்
போரும்பரிசுபுகன்றனையோபுலியூர்ப்புனிதன்
சீரம்பர்சுற்றியெற்றிச்சிறந்தார்க்குஞ்செறிகடலே.

(இ-ள்.) புலியூர்ப் புனிதன் சீர் அம்பர் சுற்றி - தில்லையின்கணுள்ள தூயோனது புகழையுடைய அம்பரைச் சூழ்ந்து,—

எற்றி சிறந்து ஆர்க்கும் - (கரையை) மோதி மிக்கொலிக்கும்,—செறி கடலே - கரையில்லாத கடலே!—ஆரம் பரந்து திரை பொரு நீர் - முத்தைப் பரந்து திரைகள் தம்முட்போர் செய்யும் (கடல்) நீர்,—முகில் மீன் பரப்பி - மேகத்தையும் மீனையும் தன்கட் பரப்பி,—சேர் அம்பரத்தில் திகழ்ந்து - அழகிய ஆகாயமே போல விளங்கி,—ஒளி தோன்றும் துறைவர் - ஒளி புலப்படுந் துறையையுடையவர்,—சென்றார் - நம்மைவிட்டுச் சென்றவர்,—போரும் பரிசு புகன்றனையோ - மீண்டு வரும் பரிசு உனக்குக் கூறினையோ? (சொல்வாயாக). எ-று.

போதரும் - போருமென இடைக்குறைந்து நின்றது. பரப்பி என்னும் வினையெச்சம் சேரம்பரமென்னும் வினைத்தொகையின் முன்மொழியோடு முடிந்தது. பரப்பி விளங்குமென ஒருசொல் வருவித்து முடிப்பினுமாம். [illegible]னைடனையுவமமு ன்மையின் உள்ளுறையுவமம் [illegible]றிக. திகழ்ந்தென்றதனான் ஒளிமிகுதி விளங்கும். (சஅஉ)

கடலொடுபுலர்த்தல்.

செறிவளைச் சின்மொழி
எறிகடற் கியம்பியது.

(எ-து.) கையிற்செறிந்த வளையினையும் சின்மையாகிய சொல்லையுமுடைய (கடலொடுவரவுகேட்ட) தலைமகள் (தன்வினைகொண்டார் திறங்கேட்கத்தனக்கு அது வாய்திறவாமையின்) அலையெறிகின்ற அக்கடலொடு புலந்து கூறியது.

பாணிகர்வண்டினம்பாடப்பைம்பொன்றருவெண்ணிழிதந்து
சேணிகர்காவின்வழங்கும்புன்னைத்துறைச்சேர்ப்பர்திங்கள்
வாணிகர்வெள்வளைகொண்டகன்றார்திறம்வாய்திறவாய்
பூணிகர்வாளரவன்புலியூர்சுற்றும்போர்க்கடலே.

(இ-ள்.) பூண் நிகர் வாள் அரவன் - ஆபரணத்தை யொத்த வொளியையுடைய அரவை யணிந்தவனது,—புலியூர் சுற்றும் போர் கடலே - தில்லையைச் சூழ்ந்த பொருதலையுடைய கடலே! — பாண் நிகர் வண்டு இனம் பாட - பாணரை யொக்கும் வண்டினங்கள் சென்று பாட,—பைம்பொன் தரும் - (தாதாகிய) பசும் பொன்னைச் சொரியும்,—வெண் கிழி - (போதாகிய) வெண்கிழியை,—தம் சேண் நிகர் காவின் வழங்கும் - தமது செய்மைக்கண் விளங்குங் காவினின்று கொடுக்கும்,—புன்னை துறை சேர்ப்பர் - புன்னை மரங்களையுடைய துறையையணைந்த நெய்தனிலத்துத் தலைவர்,—திங்கள் வாள் நிகர் வெள் வளை கொண்டு அகன்றார் - திங்களினது ஒளிபோலும் ஒளியையுடைய (வெள்ளைத்) வெண்மையாகிய வளையைத் தம்மொடு கொண்டுபோனார்,—இறை வாய் திறவாய் - (அவரது) திறத்தை யெனக்குக் கூறுகின்றிலை. (நீ கூற வேண்டுகின்றதென்). எ - று.

கிழிதமென்று கிழிக்கும்பெயராக வுரைப்பாருமுளர். வாய்திறவா யென்பதற்குக் கூறுவாயாக வென்றுரைப்பினுமமையும்.()

அன்னமோடாய்தல்.

மின்னிடை மடந்தை
அன்னமோ டாய்ந்தது.

(எ - து.) (கடலொடு புலந்துகூறிய) மின்போலு மிடையையுடைய தலைமகள், என்னையகன்றவ ரகன்றே யொழிவரோ யானறியேன், நீயேனுஞ் சொல்லென அன்னத்தோ டாராய்ந்து அவரது வரவு கேட்டது.

பகன்றாமரைக்கண்கெடக்கடந்தோன்புலியூர்ப்பழனத்
தகன்றாமரையன்னமேவண்டுநீலமணியணிந்து [யா
முகன்றாழ்குழைச்செம்பொன்முத்தணிபுன்னையின்னுமுரை
தகன்றாரகன்றேயொழிவர்கொல்லோநம்மகன்றுறையே.

(இ-ள்.) பகன் - ஆதித்தனது,—தாமரை கண் கெட கடந்தோன் - தாமரைபோலுங் கண்கெட அவனை வென்றவனது,—புலியூர் பழனத்து - தில்லையைச் சூழ்ந்த பழனத்தின்கணுண்டாகிய,—அகல் தாமரை அன்னமே - அகன்ற தாமரைக்கண் வாழும் அன்னமே!—வண்டு நீலம் மணி அணிந்து - வண்டாகிய நீல மணியை யணிந்து,—செம்பொன் முத்து அணி - (தாதாகிய) செம்பொன்னையும் (அரும்பாகிய) முத்தையு மணிந்த,—முகம் தாழ் குழை புன்னை - முகத்தைத் தாழ்ந்த குழையையுடைய புன்னை,—இன்னும் உரையாது - இந்நிலைமைக் கண்ணும் (ஒன்று) சொல்லுகின்றதில்லை;—அகன்றார் - அகன்றவர்,—நம் அகல் துறை - நமதகன்ற துறையை,—அகன்றே ஒழிவர் கொல்லோ - அகன்றே விடுவரோ? (அறியேன் நீயுரைப்பாயாக). எ-று.

முகன்றாழ் குழை யென்றது இ[illegible] பொருள்பட நின்றது. யானித்தன்மையேனாகவும் மணியணிந்தின்புற்று நிற்கின்ற புன்னை எனக்கொன்று சொல்லுமோ, அன்னமே எனக்கு நீ கூறென்பது கருத்து. ஈண்டு நம்மோடு தாம் விளையாடும் விளையாட்டை மறந்தே விடுவரோவென்னுங் கருத்தான் நம்மகன்றுறையை யகன்றே யொழிவர்கொல்லோ வென்றாள். ()

தேர்வழிநோக்கிக் கடலொடுகூறல்.

மின்றோய்துறைவர் மீளுமளவு
மான்றேர்வழியை யழியேலென்றது.

(எ-து.) (அன்னத்தைக்கேட்க, அது வாய்திறவாமையான் எம்முயிர்க்குப் பற்றுக்கோடு இனி யிதுவே யென) மின்றோய்கின்ற துறையையுடைய தலைவர் மீளுமளவும் குதிரைபூட்டிய தேர்சென்ற வழியைத் தூர்க்கலென்று கடலொடு கூறியது.

உள்ளுமுருகியுரோமஞ்சிலிர்ப்பவுடையவனாட்
கொள்ளுமவரிலெனோர்கூட்டந்தந்தான்குனிக்கும்புலியூர்
விள்ளும்பரிசுசென்றார்வியன்றேர்வழிதூரற்கண்டாய்
புள்ளுந்திரையும்பொராச்சங்கமார்க்கும்பொருகடலே.

(இ-ள்.) புள்ளும் திரையும் பொரா சங்கம் ஆர்க்கும் பொரு கடலே - புள்ளும் திரையும் தம்முட்பொரா சங்குகளொலிக்கக் கரையோடு போர்செய்யுங் கடலே!—உள்ளும் உருகி உரோமம் சிலிர்ப்ப - உள்ளு முருகி மெய்ம்மயிர் சிலிர்ப்ப,—உடையவன் ஆட்கொள்ளுமவரில் - உடையவனாகிய தான் ஆட்கொள்ளும் அடியாருள்,—ஓர் கூட்டம் தந்தான் - எமக்கோர் கூட்டத்தைத் தந்தவன்,—குனிக்கும் புலியூர் - நின்று கூத்தாடுந் தில்லையை,—விள்ளும் பரிசு சென்றார் - நீங்கும் வண்ணஞ் சென்றவரது,—வியன் தேர் வழி - பெரிய தேர்போன வழியை,—தூரல் - (நின் திரைகளால்) தூராதொழிய வேண்டும், (எம்முயிர்க்குப் பற்றுக்கோடினி யிதுவே). எ-று.

உள்ளும் என்னு மும்மையால் புறத்துக் கண்ணீர் தழுவப்பட்டது. ஆட்கொள்ளுமவர் பெருமை தோன்ற உடையவனென்றார். விள்ளுதல் செலவான் வருங்காரிய மாகலின் விள்ளும் பரிசு சென்றாரென்றாள். குனிக்கும் புலியூர் நுகர்ச்சியை நினையாது நீங்கிய வன்கணாளர் இனிவருவரொன்றும் நசையிலம், அதனால் அவர் தேர்ச்சுவடாயினும் யாம்காண நீயதனை யழியாதொழியென்பது கருத்து. விள்ளும் பரிசுசென்றா ரென்பதற்குப் புலியூரை நீங்கினாற்போல யான் துன்புறும் வண்ணமெனினு மமையும். விள்ளுதல் - வாய்திறத்தலென்று, அலர்கூறி நகும் வண்ணஞ் சென்றவரெனினு மமையும்.

கூட்டந்தந்தானென்பு பாடமோதி ஆட்கொள்ளு மவனைப் போலின்புற எமக்கோர் புணர்ச்சியைத் தந்தானெனத் தலை

மகன்மேலேற வுரைப்பாரு முளர். கண்டாய்-முன்னிலையசைச் சொல். அல்பொருட்டற் குறிப்பேற்ற மென்னுமணி. (கஅரு)

கூடலிழைத்தல்.

நீடலந் துறையி ற்
கூட விழைத்த து.

(எ-து.) (தேர்வழிநோக்கிக் கடலொடு கூறுகின்ற தலைமகள், இம்மணற்குன்றின்கண் நீத்தகன்ற தலைமகனை மனமகிழ்ந்து இங்கேதரவல்லையோவென) மணங்கமழ்கின்ற துறையிற் கூடற்றெய்வத்தை வாழ்த்திக் கூடலிழைத்து வருந்தியது.

ஆழிதிருத்தும்புலியூருடையானருளினளித்
தாழிதிருத்துமணற்குன்றினீத்தகன்றார்வருகென்
றூழிதிருத்திச்சுழிக்கணக்கோதிநையாமலைய
வாழிதிருத்தித்தரக்கிற்றியோவுள்ளமென்னையே.

(இ-ள்.) ஆழி திருத்தும் புலியூருடையான் அருளின் - சமுத்திரம் (சூழ்ந்த மண்முழுதையுந்) திருத்தும் புலியூருடையவனது அருள் போல,—அளித்து - (இன்புற) அளித்து,—ஆழி திருத்தும் மணல் குன்றின் - கடல்வந்து திருத்து மணற்குன்றின்கண்,—நீத்து அகன்றார் வருக என்று - (என்னை நீத்தகன்றவர் வரவேண்டுமென்று,—ஆழிதிருத்தி சுழி கணக்கு ஓதி நையாமல் - கூடலையிழைத்துச் சுழிக்கணக்கைச் சொல்லி யான் வருந்தாமல்,— உள்ளம் திருத்தி - அவனுள்ளத்தை நெகிழ்த்து,—வள்ளலை தரக்கிற்றியோ - வள்ளலை மீண்டு தரவல்லையாயின்,—ஐய வாழி - அய்யனே! வாழ்வாயாக,—(யானிரக்கின்றேன்). எ-று. முதற்கணாழி - ஆகுபெயர்.

இரைவந்துபெயரும் பெருமணலடைகரையைப் பின்னினையாத கொடியோர் இனி வருதல் யானடையவென்னுங் கருத்

தான் ஆழிதிருத்து மணற்குன்றினீத்தகன்றானென்றாள். ஐய என்றது கூடற்றெய்வத்தை. (கஅசு)

கூடலொடுபுலம்பல்.

குணகடலெழுசுடர் குடகடற்குளிப்ப
மணமலிகுழலி மனம்புலம்பியது.

(ஏ-து.) (கூடலிழைத்துவருந்தாநின்ற) இயற்கை மணங்கமழும் கூந்தலையுடைய தலைமகள் (துறைவர் போக்கும் தில்லைப்பொழிலின்கண் அவர்கூளறவும் தன்னை வருத்துவதனால்)கீழ்த்திசைக்கடலி லெழுந்த சூரியன் மேற்கடலிலாழக்கண்டு மனம் வருந்தியது.

கார்த்தரங்கந்திரைதோணிசுறாக்கடன்மீனெறிவோர்
போர்த்தரங்கந்துறைமானுந்துறைவர்தம்போக்குமிக்க
தீர்த்தரங்கன்றில்லைப்பூம்பொழிற்செப்பும்வஞ்சினமு
மார்த்தரங்கஞ்செய்யுமாலுய்யுமாறென்கொலாழ்சுடரே.

(இ - ள்.) கார் தரங்கம் திரை தோணி சுறா மீன் எறிவோர் - கரிய திரையும், திரையாகின்ற தோணியும், சுறாமச்சமும் மீன் பிடிப்போரும்,—கடல் போர் தரு அங்கம் துறை மானும் துறைவர்தம் போக்கும் - கடலும் போரைத்தரும் அங்கங்களையும் போர்க்களத்தையும் ஒக்கும் துறையையுடையவரது பிரிவும்,—மிக்க தீர்த்தர் அம்கண் தில்லை - சிறந்த தூயோராகிய (அரியயர்களுடைய) என்பை யணிந்தவனது தில்லை வரையின்கணுள்ள,—பல்பூம் பொழில் செப்பும் வஞ்சினமும்-பல்பூஞ் சோலைக்கண் (பின்னிற் பிரியேனென்று) சொல்லும் வஞ்சினமும்,—ஆர்த்தார் அங்கம் செய்யும் - (என்மேனியை) நோயுற்றார் மேனியாகச் செய்யாநின்றன.—ஆழ் சுடரே உய்யுமாறு என்கொல் - (ஆகலான் குடகடலில்) வீழாநின்ற சூரியனே! யானுய்யு நெறி யென்னோ? (கூறுவாயாக). எ-று.

குதிரைத்திரள் தரங்கத்திற்கும், தேர்தோணிக்கும், யானை சுறவுக்கும், காலாள் மீனெறிவோர்க்கும், போர்க்களம் கடற்கும், உவமானமாகக் கூறப்பட்டுள்ளன. தரங்க முதலியவற்றால் போரைத்தரும் அங்கத்தையுடைய களத்தையொக்கும் துறையென மூன்றாவது விரித்துரைப்பாரு முளர். அங்கத் துறை என்றது மெலிந்து நின்றது. (கஅஎ)

பொழுதுகண்டுமயங்கல்.

மயறருமாலை வருவதுகண்டு
கயறருகண்ணி கவலையுற்றது.

(ஏ-து.) (கூடலொடு புலம்பாநின்ற) கயற்கண்ணைப் போலுங் கண்ணையுடைய தலைமகள் மயக்கந்தரு மாலைப்பொழுது வருவது கண்டு வருந்தியது.

பகலோன்கரந்தனன்காப்பவர்சேயர்பற்றற்றவர்க்குப்
புகலோன்புகுநர்க்குப்போக்கரியோனெவரும்புகலத்
தகலோன்பயில்தில்லைப்பைம்பொழிற்சேக்கைகளோக்கினவா
லகலோங்கிருங்கழிவாய்க்கொழுமீனுண்டவன்னங்களே.

(இ - ள்.) பகலோன் கரந்தனன் - சூரியன் மறைந்தான்,—காப்பவர் சேயர் - (இம்மாலைக் காலத்துவருந் துன்பத்தைக்) காக்குமவர் சேயராயிருந்தார்,— அகல் ஓங்கு இரும் கழி வாய் - அகன்று நீருயர்ந்த பெரிய கழியிடத்து,—கொழுமீன் உண்ட அன்னங்கள் - கொழு மீனையுண்ட அன்னங்கள் (இவ்விடத்தை விட்டு),—பற்று அற்றவர்க்கு புகலோன் - புலன்களிற் பற்றற்றவர்க்குப் புகலிடமாயுள்ளவன், — புகுநர்க்கு போக்கு அரியோன் - தன்கட் புகுவார்க்குப் பின் போதாவரியவன்,— எவரும் புகல தகலோன் - எல்லாரும் எத்தத் தகுதியையுடையவன்,— பயில் தில்லை பைம்பொழில் - (அவன்) பயிலும் தில்லை வரைப்பிலுள்ள பசிய சோலையின்கணுளவாகிய,—சேக்

கைகள் நோக்கின - தம்படுக்கைகளை நோக்கின, (இனி என் செய்வேன்). எ-று.

கொழுமீனென்பது ஓர் சாதி. ஆல் - அசை. ஓங்குதல் - ஓதமெறிந்துயர்தல். (கஅஅ)

பறவையோடு வருந்தல்.

செறிபிணிகைம்மிகச் சிற்றிடைப்பேதை
பறவைமேல்வைத்துப் பையுளெய்தியது.

(எ-து.) (பொழுதுகண்டு மயங்காநின்ற) சிறிய இடையை யுடைய தலைமகள் செறிந்த நோய்மிகலால் வண்டானப் பறவைமேல்வைத்துத் துன்பமடைந்தது.

பொன்னுமணியும்பவளமும்போன்றுபொலிந்திலங்கி
மின்னுஞ்சடையோன்புலியூர்விரவாதவரினுண்ணோ
யின்னுமறிகிலவாலென்னபாவமிருங்கழிவாய்
மன்னும்பகலேமகிழ்ந்திரைதேரும்வண்டானங்களே.

(இ-ள்.) இரு கழிவாய் - (என்னாற்றாமைக்குப் பரிகாரமாவது யாதுஞ் சிந்தியாது) பெரிய கழியிடத்து,—பகலே மகிழ்ந்து - பகலே புகுந்து விரும்பி,—இரை தேரும் வண்டானங்கள்- தமக்குணவு தேடும் வண்டான மென்னும் பறவைகள்,—பொன்னும் மணியும் பவளமும் போன்று பொலிந்து இலங்கி மின்னும் சடையோன் - பொன்போலப் பொலிந்து மாணிக்கம் போல விட்டு விளங்கிப் பவளம்போல மின்னுஞ் சடையையுடையவனது,—புலியூர் விரவாதவரின் - புலியூரைக் கலவாதவரைப்போல,—உள் நோய் - (யானுறும்) உள்நோயை,—இன்னும் அறிகில - இந்நிலைமைக் கண்ணும் அறிகின்றன வில்லை,—என்ன பாவம் - இஃதென்னபாவம். எ-று. ஆல் - மன்னும் - அசைநிலை.

புலியூரை விரவாதார் கண்ணோட்ட மில்லாராகலிற் புலியூரை விரவாதவரினின்னு மறிகிலவென் றியைத்துரைப்பினு மமையும். (கஅகூ)

பங்கயத்தோடுபரிவுற்றுரைத்தல்.

முருக்கவிழ் கா ன
லொடுபரி வுற்ற து.

(எ-து.) (பறவையோடு வருந்தாநின்ற தலைமகள் இப்பங்கயம் என் வருத்தங்கண்டு ஞாயிற்றை நோக்கி விரையவரவேண்டுமென்று தங்கை குவியாநின்றமையா லென்னிடத் தன்புடையன போலுமென) கானலின் வாசனைவீசும் வனசங்களோடு பரிவுற்றுக் கூறியது.

கருங்கழிகாதற்பைங்கானலிற்றில்லையெங்கண்டர்விண்டா
ரொருங்கழிகாதரமூவெயிற்செற்றவொற்றைச்சிலைசூழ்ந்
தருங்கழிகாதமகலுமென்றூழென்றலந்துகண்ணீர்
வருங்கழிகாதல்வனசங்கள்கூப்புமலர்க்கைகளே.

(இ-ள்.) தில்லை எம் கண்டர் - தில்லைக்கணுளராகிய எம்முடைய கண்டர்,—விண்டார் ஒருங்கு அழி காதரம் மூ எயில் செற்ற - பகைவர் ஒருங்கே அழியும் அச்சத்தையுடைய மூவெயிலைச்செற்ற,—ஒற்றை சிலை சூழ்ந்து-தனிவில்லைச் சூழ்ந்து,—அரு கழி காதம் அகலும் என்று - அரியவாகிய மிக்ககாதங்களைப் போகாநின்றதுஎன்று,—ஊழ் என்று அலந்து-(ஆகலான்) ஊழ் இனியிவனெங்ஙனே மாற்றுமென்று வருந்தி,—கருகழி காதல் பை கானலில் - கருங்கழியின் கண்ணும் காதலையுடைய பசிய கானலின் கண்ணுமுளவாகிய,— கண் நீர் வரும் கழி காதல் வனசங்கள் - கண்ணீர் வாராநின்ற கழிகாதலையுடைய தாமரைகள் (விரைந்து வரவேண்டுமென்று அஞ்ஞாயிற்றைநோக்கி),—மலர் கைகள் கூப்பும் - (தம்) மலராகிய கைகளைக் கூப்[illegible] வாநின்றன. (இவை யென்மாட் டன்புடைய போலும்) [illegible].

கானலிற் கைகூப்புமென வியைப்பினுமமையும். கதிரோன் றம்மைப்பிரிய வாற்றாது கடிது வரவேண்டுமென வனசங்கள் கைகூப்பா நின்றனவென்று அவற்றிற் கிரங்கினளாக வுரைப்பினுமமையும். அலர்த்தவென்பது பாடமாயின் அலர்ந்த வனசமென வியையும். (கக0)

அன்னமோடழிதல்.

இன்னகையவ ளிரவருதுய ர
மன்னத்தோ டழிந்துரைத்தது.

(எ-து.) இன்னகையையுடைய தலைமகள் (பங்கயத்தோடு பரிவுற்ற பின்பு) இரவில்வருந் தன் றுயரத்தை (அவர்க்குச் சொல்லாது துயிலா நின்றமைதனை), அன்னத்தோ டழிந்து கூறியது.

மூவறழீஇயவருண்முதலோன்றில்லைச்செல்வன்முந்நீர்
நாவறழீஇயவிந்நானிலந்துஞ்சுநயந்தவின்பச்
சேவறழீஇச்சென்றுதான்றுஞ்சும்யான்றுயிலாச்செயிரெங்
காவறழீஇயவர்க்கோதாதளியகளியன்னமே.

(இ-ள்.) மூவல் தழீஇய அருள் முதலோன் - மூவலென்னுந் திருப்பதியைப் பொருந்திய அருளையுடைய முதல்வன்,— தில்லை செல்வன் - தில்லைக்கண் உளனாகிய செல்வன்,— முந்நீர் நாவல் தழீஇய - அலைகடலாற் சூழப்பட்ட நாவலைப் பொருந்திய,— இ நால் நிலம் துஞ்சும் - இந்நானிலமுழுதுந் துஞ்சாநின்றது,— யான் துயிலா செயிர் - (இப்பொழுதினும்) யான் துயிலாமைக்குக் காரணமாகிய வருத்தத்தை,— எம் காவல் தழீஇயவர்க்கு ஓதாது - எமது காவலைப் பொருந்தினவருக் குரையாமல்,— அளிய களி அன்னம் - அளித்தாகிய களியன்னம்,— சென்று - இவ்விடத்தினின்றும் போய்,— தான் நயந்த இன்பம் சேவல் தழுவி - தான் நயந்த இன்பத்தைச் செய்யுஞ் சேவலைத் தழுவி,— துஞ்சும் - (ஒரு கவலையின்றித்) துயி

லா நின்றது. (இனியிது கூறுவார் யாவர்). எ-று. பரந்துமுதல் இப்பத்து பாட்டுக்கும் மெய்ப்பாடு - அழுகை; பயன் - அயாவுயிர்த்தல்.

பாலைக்கு நிலமின்மையின் கானலெனப் பட்டது. ஓதாதென்பதனை முற்றாகவுரைப்பினுமமையும். நெய்தற் றிணைகூறுவார் 'சோத்துன் னடியா' மென்பது தொட்டுப் 'புகழும்பழியு' மென்னுங்காறும் இரங்க னிமித்தமாகக் கூறி ஒருவழித் தணத்தல் துறையிடத்து 'ஆரம்பரந்'தென்பது தொட்டு இதன் காறும் இரங்கலே கூறுதலால் இனை நெய்தல். கைகோள் - கற்பு. (ககக)

வரவுணர்ந்துரைத்தல்.

சென்றவர்வரவுணர்ந்து நின்றவணிலை - மை
சிறப்புடைப்பாங்கி சிறைப்புறத்துரைத்தது.

(எ-து.) (தலைமகள் அன்னத்தோ டழிந்து வருந்தாநிற்ப) தலைமகன் ஒருவழித்தணந்து வந்தமை சிறப்பினையுடைய பாங்கி சிறைப்புறத்தறிந்து தலைமகளின்னிலைமையையவனுக்குச் சொல்வாளாய் மதியொடு கூறியது.

நில்லாவளைநெஞ்சநெக்குருகுந்நெடுங்கண்டுயிலாக்
கல்லாகதிர்முத்தங்காற்றுமெனக்கட்டுரைக்கதில்லைத்
தொல்லோனருள்கனில்லாரிற்சென்றார்சென்றசெல்லல்கண்டா
யெல்லார்மதியேயிதனின்னியாளின்றிரக்கின்றதே.

(இ-ள்.) எல் ஆர் மதியே - ஒளிபொருந்திய சந்திரனே!— தில்லை தொல்லோன் அருள் கள் இல்லாரின் சென்றார் - தில்லைக்கணுளனாகிய தொல்லோனது அருளுடையாரல்லாதாரைப் போலக் கண்ணோட்டமின்றிப்போனவர்,— சென்ற செல்லல் கண்டாய் - போதலாலுண்டாகிய இன்னாமையை நீயேகண்டாய் (யான் சொல்லவேண்டுவதில்லை),— வளை நில்லா - வளை

ணர் நிறுத்தற்கின்றனவில்லை,—நெஞ்சம் நெக்குருகும் - நெஞ்சம் நெகிழ்ந்துருகாநின்றது,—நெடு கண் துயிலக்கல்லா - நெடுங் கண்கள் துயிலாவாய்,—கதிர்முத்தம் கான்றும் என்ன (கண்ணீர்த் துளியாகிய) கதிர்முத்தங்களை விடாநின்றனவென்று,—கட்டுரைக்க -(அவர்க்குச்) சொல்வாயாக,—நின்னை யான் இரக்கின்றது இது - நின்னையான் இரக்கின்றது இதுவே. எ - று. மெய்ப்பாடு - அச்சம் ; பயன் - வரைவுகடாதல்.

முத்தங்காலு மென்பதூஉம் பாடம். எல்லாமதியே யென்பது பாடமாயிற் செல்ல லெல்லாமென்று கூட்டியுரைக்க. துயிலக்கல்லாவென்பது ஒருசொல். (கஅஉ)

வருந்தமிகுதிகூறல்.

நீங்கியணைந் தவற்குப்
பாங்கி பகர்ந்தது.

(எ - து.)* (இறைப்புறமாக மதியொடுவருத்தங்கூறிய) பாங்கி, தலைமகளையொருவழித்தணந்தணைந்த தலைமகனுக்கு அவளதுவருத்தமிகுதிகூறியது.

வளருங்கறியறியாமந்திதின்றம்மர்க்கிடமாய்த்
தளருந்தடவரைத்தண்சிலம்பா தனதங்கமெங்கும்
விளரும்விழுமெழும்விம்முமெலியும்வெண்மாமதியின்
றுளிருஞ்சடைமுடியோன்புலியூரன்னவொண்ணுதலே.

(இ-ள்.) வளரும் கறி அறியா மந்தி தின்று மம்மர்க்கு இடமாய் தளரும் - வளராநின்றமிளகுக்கொடியைத் தமக்குணவென்றறியாத இளையமந்திதின்று வருத்தத்திற்கிடமாய் நிலைதளரும்,— தடம் வரை தண் சிலம்பா - பெரியவரைகளையுடைய தண்சிலம்பையுடையாய் !—வெள் மா மதி நின்று ஒளிரும் சடை முடியோன் - வெள்ளியபெரியமதி நின்றுவிளங்குஞ் சடையானியன்றமுடியையுடையவனது,— புலியூர் அன்ன ஒண்

நுதல் - புலியூரையொக்கும் ஒள்ளியநுதலையுடையாள்,—தனது அங்கம் எங்கும் விளரும் - தன்மேனிமுழுதும் பசக்கும்,—விழும் - (அமளியின்கண்) விழாநிற்கும்,— எழும் - எழாநிற்கும்,—விம்மும் - பொருமாநிற்கும்,— மெலியும் - (நின் வன்கண்மையை நினைந்து) மெலியாநிற்கும். (அதனால் அவள் இன்னநிலைமையளென்று என்னாற்சொல்லப்படாது. எ-று. மெய்ப்பாடு - அச்சம் ; பயன் - வரைவு கடாதல்.

வளருமிளங்கறி கண்ணிற்கினிதாயிருத்தலின் இதுநமக்குத் துய்க்கப்படாதென் றுணராத இளமந்தி அதனைத்தின்று வருந்துமாறுபோலக் கண்ணு மனமு மகிழு முருவினையாகிய நின்னை நின்பெருமை யுணரா தெதிர்ப்பட்டு வருந்தா நின்றாளென வுள்ளுறை காண்க.

இவ்வாறு ஒருவழித்தணந்து வந்து வரைவுமாட்சிமைப்படலும்பெறும். அன்றியுமுடன்போக்குநிகழப்படும். (கஅங)

ஒருவழித்தணத்தல் முற்றிற்று.

உடன்போக்கு.

இவ்வாறு ஒருவழித்தணத்தல் நிகழாதாயின் உடன்போக்கு நிகழும். உடன்போக்கென்பது தலைமகளைத் தலைமகன் உடன்கொண்டுபோதல்.

இக்கிளவி ஐம்பத்தாறு துறைகளையுடைத்து. அவை வருமாறு :—

பருவங்கூறல் படைத்துமொழிதலொடு, மருவமர்கோதையை மகட்பேச்சுரைத்தல், பொன்னணிவுரைத்தல் பொருள் விலைகூறல், அன்னமென்னடையாளருமைகேட்டழிதல், தளர்வறிந்துரைத்தல் தாழ்குழலாடன், உளநினைவுரைத்த லுடன்கொண்டுசேறற், கருமையுரைத்த லாதரங்கூறல், மருவியதடங்கயல் வாழாளென்றல், பொருவருகற்பின் புனைநலனுரைத்தல், துணிக்

தமைகூறல் துணிவுகேட்டல், துணிவறிவித்தல் தொல்லோன்
விடல், துணிவெடுத்துரைத்தல்கொண் டகலெனவுரைத்தல்,
அடிவழிநினைந்துநின் றவனுளம்வாடல், கொடியிடையாளைக் கொ
ண்டுசென்றுய்த்தல், ஓம்படுத்துரைத்தல் வழிப்படுத்துரைத்
தல், தேம்படுகோதையைத் திறலுடுவேலோன், பையக்கொண்
டேகல் பயங்கெடவுரைத்தல், மையமர்கண்ணியை வழியயர்
வகற்றல், நெறிவிலக்கல்லொடு நெறியிடைக்கண்டவர், செறி
வெடுத்துரைத்தல் சேயிழையாளுடன், வழிவிளையாடல் வழி
யெதிர்வருவோ, ரொழினகரணிமை யிதுவெனவுரைத்தல், நகர்
காட்டலினொடு நகரிடைப்புக்குப், பதிபரிசுரைத்தல் பாங்கியை
க்கிட்டி, மதிநுதலாளை வளர்த்தவள்கேட்டல், அறத்தொடுநிற்
ற லறுகேட்டழுங்கல், திறப்பாடெண்ணிச் செவிலிகவன்றுரைத்
தல், அடிநினைந்திரங்க லதுதாய்க்குரைத்தல், மடவரல்போக
வாடியுரைத்தல், இளிமொழிக்கிரங்கல் இளர்சுடர்ப்பராய்தல்,
அளிபெறுபருவத்திற் கவள்கவன்றுரைத்தல், நாடத்துணிதல்
நற்றுய்நயத்தவர், கூடக்கரையெனக் கொடிக்குறிபார்த்தல்,
சோதிடங்கேட்டல் சுவடுகண்டறிதல், ஏதமுற்றலைகண் டிரங்
கியுரைத்தல், வேட்டமாதரைக் கண்டுவினவல், புறவொடுபுல
த்தல் குரவொடுவெருத்தல், திறலருந்தவத்தொடு செல்லாநின்ற,
மாவிரதியரை வழியிடைவினவல், வேதியர்தம்மை விரும்பி
வினவல், புணர்ந்துடன்வருவோரைப் பொருந்திவினவல், மண
ந்தருகுழலாள் மன்னியநிலையொடு, வேங்கைபட்டது கண்டு
வியத்தல், ஆங்கவரியைபணி யவட்கெடுத்துரைத்தல், மீள்
ரைத்தல் மீளாதவருக், கூழ்முறையிதுவென வுலகியல்புரைத்
தல், அழுங்குதாய்க்குரைத்த லேம்படேதோடாறு, முழுங்கொலை
வேலோ னுடன்போக்காகும்.

பருவங்கூறல்.

உருவது கண்ட வ
ளருமை யுரைத்த து.

(எ - து.) (அலரறிவுறுத்த) பாங்கி, (இவள்முலை
முதிர்வு கண்டமையால் மகட்பேசுவார்க்கு மாறுத
தொடுக்கவுங்கூடும், அஃதுண்டாகாமல்நீங்க, நீ முற்
பட்டுவரைகவெனத்) தலைமகளது பருவத்தினருமை
கூறியது.

ஓராகமிரண்டெழிலாயொளிர்வோன்றில்லையொண்ணுதலங்
கராகம்பயின்றமிழ்தம்பொதிந்திருஞ்சுணங்காடகத்தின்
பராகஞ்சிதர்ந்தபயோதரமிப்பரிசேபணைத்த
விராகங்கண்டால்வள்ளலேயில்லையேயெமரொன்னுவதே.

(இ - ள்.) ஒரு ஆகம் இரண்டு எழிலாய் ஒளிர்வோன் - ஒரு
மேனி பெண்ணழகு மாணழகுமாகிய இரண்டழகாய் விளங்கு
மவனது, — தில்லை ஒள் நுதல் - தில்லைக்கணுள்ளாகிய ஒள்
ளியநுதலையுடையவளது, — அங்கராகம் பயின்று அமிழ்தம்
பொதிந்து - பூசப்படுவனபூசி அமிர்தத்தைப் பொதிந்து, —ஈரம்
சுணங்கு ஆடகத்தின் பராகம் சிதர்ந்த பயோதரம் - நெய்த்த
சுணங்காகிய செம்பொன்னின் பொடியைச்சிதறின முலைகள், —
இ பரிசே பணைத்த இராகம் கண்டால் - இப்படியே பெருத்த
கதிர்ப்பைக் கண்டால், —வள்ளலே - வள்ளலே! —என்னுவது
இல்லை - இவள்மாட்டு (எமர்) நினைப்பதொன்றுமில்லை, (ஆயி
னும் சிலவுளவாம்). எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் -
வரைவுகடாதல்.

இராகம் - வடமொழிச்சிதைவு, ஈண்டுநிறமென்னும்பொரு
ட்டு. இராகம் - முடுகுதலென்பாருமுளர். இல்லையொண்ணுத
லிராகமெனவியையும்.

(ககூ)

மகட்பேச்சுரைத்தல்.

படைத்துமொழியினவியிற் பணிமொழிப்பாங்கி
அடற்கதிர்வேலோற் கறியவுரைத்த து.

(எ-து.) படைத்துமொழியால் பணிவைப்புலத்து மொழியையுடையபாங்கி, வெற்றியையுமொளியையுமுடைய வேலைத்தாங்கியதலைமகனுக்கு (விரைய வரைவொடுவருவாயாதல், அன்றி யுடன்கொண்டு போவாயாதல், இரண்டிலொன்று துணிந்துசெய்யக் கருதுவாய்; அதனை யின்றேசெய்வாயாகவென அயலவர் மகட்பேசுதலை) அறியக்கூறியது.

மணியக்கணியுமரனஞ்சமஞ்சிமறுகிவிண்ணோர்
பணியக்கருணைதரும்பரன்றில்லையன்னாடிறத்துத்
துணியக்கருதுவதின்றேதுணிதுறைவாநிறைபொன்
னணியக்கருதுகின்றார்பலர்மேன்மேலயலவரே.

(இ-ள்.) துறைவா - துறைவனே!—அக்குமணி அணியும் அரன் - அக்குமணியணியும் அரனானவன்,—நஞ்சம் அஞ்சி விண்ணோர் மறுகி பணிய - நஞ்சையஞ்சித் தேவர் கலங்கிச்சுழன்று சென்றுபணிய,—கருணை தரும் பரன் - (அந்நஞ்சானவரும் இடர்க்கு மருந்தாகத்தன்) கருணையைத்தரும் பரன்,—தில்லை அன்னாள் திறத்து - (அவனது) தில்லையை யொப்பாள் திறத்து,—துணிய கருதுவது இன்றே துணி - நீ துணிந்து செய்யக் கருதுவதனை யின்றே செய்வாயாக.—அயலவர் பலர் - அயலவரிற் பலர்,—நிறை பொன் மேல் மேல் அணிய கருதுகின்றார் - நிறைந்தபொன்னை மென்மேலும் அணியக்கருதுகின்றார். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வரைவு கடாதல்.

அக்குமணியெனினு மமையும். அலங்காரம் - ஒற்றுமைக் கொளுத்தல். (கரு)

பொன்னணி வுரைத்தல்.

பலபரிசினாலு மலர்நெடுங்கண்ணி னை
நன்னுதற்பாங்கி பொன்னணிவொன்றது.

(எ-து.) பலபரிசினாலுமலர்ந்த நெடுங்கண்ணினையுடைய தலைமகளை படைத்துமொழியான் மகட்பேசல்கூறின நன்னுதலையுடையபாங்கி, தலைமகனுக்கு அயலவர் பொன்னணிவொன்றது.

பாப்பணியோன்றில்லைப்பல்பூமருவுசில்லோதியைநற்
காப்பணிந்தார்பொன்னணிவாரினிக்கமழ்பூந்துறைவ
கோப்பணிவான்றோய்கொடிமுன்றினின்றிவையோர்குழுமி
மாப்பணிலங்கண்முழங்கத்தழங்குமணமுரசே.

(இ-ள்.) கமழ் பூந்துறைவ - பரிமளிக்கின்றபூந்துறைவனே!—பாம்பு அணியோன் தில்லை - பாம்பாகிய அணியையுடையவனது தில்லைக்கண்ணுளளாகிய,—பல் பூ மருவும் சில் ஓதியை - பலவாகிய பூக்கள்பொருந்திய நுண்ணியகூந்தலையுடையாளை,—நல் காப்பு அணிந்தார் - நல்ல காப்பையணிந்தார்கள்,—இனி பொன் அணிவார் - இனிப்பொன்னையணிவார்கள்,—கோப்பு அணி வான் தோய் கொடி முன்றில் நின்று - (கலியாணத்துக்குப்பொருந்திய) கோப்புகளையணிந்த ஆகாயத்தையளாவிய கொடிகளையுடைய முன்றிற்கணின்று,—மணம் முரசு இவை - மணமுரசங்களாகிய இவை,—ஏர் குழுமி மா பணிலங்கள் முழங்க தழங்கும் - ஏராகுழுமிப்பெரியசங்கங்கள்முழங்கத் தாமொலியாகின்றன. (இனியடுப்பது செய்வாயாக). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வரைவு கடாதல்.

தில்லைப்பல்பூவென்றியைப்பினுமமையும். காப்பு - காவல். அணிவார் - முற்றுச்சொல். கோப்பணி முன்றிலெனவியையும்.

அருவிலையுரைத்தல்.

பேதையரறிவு பேதைமையுடைத்தென
ஆதரத்தோழி யருவிலையுரைத்த து.

(எ-து.) (பொன்னணிவுரைப்பக்கேட்ட தலைமகன், யான் வரைவொடுவருதற்குமுலைப்பரிசங்கூ

நுவாயாகவென) தமரதறிவு பேதைமையுடையதெ
ன வாதரவுபுடையபாங்கி விலையருமைகூறியது.

எழும்பாலணியிறையம்பலத்தோனெல்லைசெல்குறுவோர்
நலம்பாவியமுற்றுநல்கினுங்கல்வரைநாடரம்ம
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பவொட்டார்
கலம்பாவியமுலையின்விலையென்னீகருதுவதே.

(இ - ள்.) சிலம்பா - மலையையுடையவனே!— எழும்பால் அணி இறை - எலும்புகளால் அலங்கரிக்கப்படும் இறைவன்,— அம்பலத்தோன் - அம்பலத்தின் கண்ணுளன்,— எல்லை செல்குறுவோர் - (அவனது) எல்லைக்கண் செல்லக்கருதுவாரது,— நலம் பாவிய முற்றும் நல்கினும் - நன்மைபரந்த வுலகமுழுதையும் நீகொடுப்பினும்,— கல்வரை நாடர் - (எமதுதமராகிய) கல்வரை நாடர்,— வடி கண்ணி சிற்றிடைக்கே விலை செப்ப வொட்டார் - வடுவகிர்போலுங்கண்ணையுடையாளது சிறிய இடைக்கே விலையாகச் சொல்லுதல் இசையார்,— கலம் பாவிய முலையின் விலை என் நீ கருதுவது - ஆபரணந்தரித்தமுலையின் விலையாக யாதனைநீகருதுவது. (ஒன்றற்கும் அவருடம்படார்). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளதருமையுணர்த்தல்.

எலும்பாற்செய்த வணியென்று ஒருசொல் வருவித்துரைப்பாருமுளர். எல்லைசேறல் - அறிவாலவனையணுகுதல். இல்லையெல்லையெனினுமமையும். அவர்நலம்பாவாவிடமின்மையின் எஞ்சாமைமுழுதுமென்பார் நலம்பாவியமுற்றுமென்றார். எனவே அவர்சீவன்முத்தராயிருத்தல். அஃதாவது சீவனுடனிருக்கும்போதே முத்தியையடைந்திருத்தல். இது அகண்ட பரிபூரணமென்றபடி. முத்தி - எங்குமொக்க வியாத்தியையடைந்திருத்தல். அம்ம - கேளென்னுங்குறிப்பின்கண்வந்தது. சிற்றிடைக்கேயென்னுமேகாரம்பிரிநிலை. இவ ளையர்க்குத்தலைமகளாதலால், தன்றமரைக்கல்வரைநாடரென்றுகூறினாள். (கஎ)

அருமைகேட்டழிதல்.

பெருமை நாட்டத்த . வ
ளருமைகேட் டழிந்த து.

(எ-து.) (அருவிலைகேட்டதலைமகன்) அவளருமையைக்கேட்டு வருந்தியது.

விசும்புற்றதிங்கட்கழுமழப்போன்றினிவிம்மிவிம்மி
யசும்புற்றகண்ணொடலறாய்கிடந்தரன்றில்லையன்னாள்
குயம்புற்றரவிடைகூரெயிற்றாரமல்குழன்மொழியி
னயம்பற்றின்றுநெக்கிந்துளர்கின்றநன்னெஞ்சமே.

(இ - ள்.) அரன் தில்லையன்னாள் குயம் - அரனது தில்லையையொப்பாளுடையமுலை,— புற்று அரவு இடை - புற்றின்கண் வாழும் பாம்புபோலுமிடை,— [illegible] - கூரிய பல்லின்கண் [illegible],— குழல் மொழி - குழலோசைபோலு மொழி,— நயம்பற்றி - (ஆகிய இவற்றின்கட்கிடந்த) இன்பத்தைப் பொருந்தி,— இன்று - விடாதுநின்று,— நெக்கு இந்து உளர்கின்ற நல் நெஞ்சமே - (அவளருமை கருதாயாய்) நெகிழ்ந்து வருந்தாநின்ற நல்ல நெஞ்சமே!— விசும்பு உற்ற திங்கட்கு - விசும்பைப் பொருந்திய திங்களைத் தரவேண்டி,— அழும் மழவு போன்று - அழுங் குழவியையொத்து,— அசும்பு உற்ற கண்ணொடு - நீருண்மையைப்பொருந்தியகண்ணையுடையையாய்,— விம்மி விம்மி - பொருமிப்பொருமி,— இனி கிடந்து அலறாய் - இனிக்கிடந்தலறுவாயாக. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

குழன்மொழியினென்னும் இன் - பலபெயருமைத்தொகை விகுதிக்கண்வந்த சாரியை. (கஅ)

தளர்வறிந்துரைத்தல்.

தண்டுறைவன் றளர்வறிந் து
கொண்டுநீங்கெனக் குறித்துரைத்தது.

(எ - து.) (பாங்கி,) தலைவனது மனத்தளர்ச்சியை யுணர்ந்து (வரைவுமாட்சிப்படாதாயினுந்) தலைமகளை யுடன்கொண்டு போவென்பதுதோன்ற, அவளது வருத்தங்கூறியது.

மைதயங்குந்திரைவாரியைநோக்கிமடலவிழ்பூங் [ப்
கைதையங்கானலைநோக்கிக்கண்ணீர்கொண்டெங்கண்டாரில்லை
பொய்தயங்குந்நுண்மருங்குனல்லாரையெல்லாம்புல்லினள்
பைதயங்குமரவம்புரையுமல்குற்பைந்தொடியே.

(இ - ள்.) பை தயங்கும் அரவம் புரையும் - படம்விளங்கும்பாம்பையொக்கும், — அல்குல் பைந்தொடி - அல்குலையுடைய பைந்தொடியானவள், — மை தயங்கும் திரை வாரியை நோக்கி - கருமைவிளங்குந் திரையையுடைய கடலையும்நோக்கி, — மடல் அவிழ் பூம் கைதையம் கானலை நோக்கி - மடலவிழாநின்றபூவையுடைய தாழையையுடையகானலையும்நோக்கி, — கண் நீர் கொண்டு - கண்ணீரைக்கொண்டு, — எம் கண்டார் - (பின்) எம்முடையகண்டாரது, — இல்லை - இல்லைக்கணுள்ளாகிய, — பொய் தயங்கும் நுண் மருங்குல் - பொய்யாதல்விளங்கும் நுண்ணியமருங்குலையுடைய, — நல்லார் எல்லாம் - நன்னுதலாராகியபெண்களை யெல்லாம், — புல்லினள் - தழுவிக்கொண்டாள். (அவள்கருதிய தொன்றுண்டுபோலும்). எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - உடன்போக்குணர்த்துதல்.

கண்ணீர்கொண்டென்றது - பெண்களுக் கியல்பானகுண மொன்று, நெடுங்காலங்கூட மருவினவரைவிட்டுநீங்குகின்றதுய ரத்தாற்றோன்றியதொன்று, இக்காலமெல்லாமுங்களைச்சேர்ந் துபோந்தபெருநலத்தான் உடன்போக்காகிய இப்பெருநலம்பெ றற்றேனென்றுமுவகைக் கண்ணீரொன்று; ஆகலின் நல்லாரை யெல்லாம் புல்லிக்கொண்டு கண்ணீர்கொண்டாள். பொய்போ லு மசைவு மருங்குலெனினு மமையும். (௧௯௯)

குறிப்புணர்த்தல்.

நகைக்குழ லி
குறிப்புணர்த்த து.

(எ - து.) (பாங்கி, தலைமகனுக்கு) மணங்கமழுங் கூந்தலையுடைய தலைமகளது உடன்போக்குக் குறிப் பினையெடுத்துக் கூறியது.

மாலைவந்தாண்டமென்னோக்கிதன்பங்கர்வண்டில்லைமல்லற்
கோலைவந்தாண்டசெவ்வாய்க்கருங்கண்ணிகுறிப்பறியேன் [டு
புன்னைதந்தாள்பொன்னம்பந்துதந்தாளென்னைப்புல்லிக்கொண்
பாவைதந்தாள்பைங்கிளியளித்தாளின்றென்பைந்தொடியே.

(இ - ள்.) என் பைந்தொடி - என்னுடைய பைந்தொடியை யுடையாள், — இன்று என்னைப் புல்லிக்கொண்டு - இன்று என் னைத்தழுவிக்கொண்டு, — புன்னை தந்தாள் - தான் நட்டுவளர்த்த புன்னை (என்கையில்) தந்தாள், — பொன் அம் பந்து தந்தாள் - பின் பொற்றகட்டாற்புனைந்தபந்தைத்தந்தாள், — பாவை தந் தாள் - பின் தன்சித்திரப்பாவையைத்தந்தாள், — பைங்கிளி அளித்தாள் - பின் தன்கிளியையுந்தந்தாள், — மாலை வந்து ஆண்ட மென் நோக்கி தன் பங்கர் - மானைச்சென்றடிமைகொ ண்ட மெல்லியநோக்கையுடையாளுடைய ஓர்பாகத்தையுடை யவரது, — வண் தில்லை - வளவியதில்லைவனப்பினுண்டாகிய, — மல்லல் கோலை வந்து ஆண்ட செவ்வாய் - வளத்தையுடைய தொண்டைக்கனியைச்சென்றாண்ட செவ்வாயையுடைய, — கருங் கண்ணி - இக்கருங் கண்ணியது, — குறிப்பு அறியேன் - கருத் தறிகின்றிலேன். (நின்னுடன் செல்லப்போலும்). எ-று. மெய் ப்பாடு - பெருமிதம்; பயன் - உடன்போக்குணர்த்துதல்.

புல்லிக்கொண்டுபாவையைத்தந்தாளென்றமையத்து, பாவை மேதுன்னவன்பால் அதனைத் தருவழிப் புல்லிக்கொண்டு தந்தா ளென்றுரைப்பாருமுளர்.

(௨௦௦)

அருமையுரைத்தல்.

கானின்கடுமையு மானின்மென்மையும்
பதியின்சேட்சியு மிதுவெனவுரைத்தது.

(எ - து.) (குறிப்புணர்த்தப் போக்குடம்பட்டிய பாங்கிக்குத் தான்செல்லும்) கானினது கடுமையும், மான்போல்வாளாகிய தலைமகளது மென்மைத்தன்மையும், தன்பதியின்சேய்மையு மிது விதுவெனத் தலைமகன் தன்போக்கருமை கூறியது.

மெல்லியல்கொங்கைபெரியமின்னேரிடைமெல்லடிபூக்
கல்லியல்வெம்மைக்கடங்கடுந்தீக்கதுவானெல்லாஞ்
சொல்லியசீர்ச்சுடர்த்திங்களங்கண்ணித்தொல்லோன்புலியூ
ரல்லியங்கோதைநல்லாயெல்லைசேய்த்தெம்மகனகரே.

(இ - ள்.) வானம் எல்லாம் சுற்று சொல்லிய சீர் - வானுலகெங்கும்(ஆன்றோரால்) சுற்றுச்சொல்லப்பட்டபுகழையும்,— சுடர் திங்கள் அம் கண்ணி - சுடரையுடையதிங்களாகிய அழகியகண்ணியையுமுடைய,— தொல்லோன் - பழையோனது,— புலியூர் - புலியூரில்,— அல்லியம் கோதை நல்லாய் - அல்லியங்கோதையையுடையநல்லாய்,— மெல்லியல் கொங்கை பெரிய - மெல்லியலுடையகொங்கைகள்பெரியன,— இடை மின் நேர் - அவற்றைத்தாங்குமிடைநுடங்குதலால் மின்னுக்குநேராயிருந்தது,— மெல் அடி பூ - மெல்லிய அடிகள் பூவேயாயிருந்தன,— கல் இயல் வெம்மை கடம் கடு தீ - கல்லின்கணுண்டாகியவெம்மையையுடையகாடு அவ்வடிக்குத்தகாததாய் கடுந்தீயாயிருந்தது,— எம் அகல் நகர் எல்லை சேய்த்து - (அதன்மேல்) எம்முடைய அகன்றநகரும் எல்லைதூரத்தது, (அதனால் நீ கருதியது பெரிதுமரிது). எ-று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - தலைமகனிலைமை யுணர்த்துதல்.

கல்லாநின்ற நடமெனவினையப்பிறமையும். வானவிரல் லாமென்புனவும் பாடம். எல்லைசேய்த்தென்பன ஒருசொன்னீர்மைப்பட்டு அதனையொன்றுமெமூமாய்க்குறுமுடிபாயின. (உ0க)

ஆதரங்கூறல்.

அழற்றடம்புரையு மருஞ்சுரமது வு
நிழற்றடமவட்கு நின்னொடேகினென்றது.

(எ - து.) (போக்கருமைகூறிய தலைமகனுக்குப்பாங்கி,) அழலாணிரைத்த வோமகுண்டத்தைபொக்கும் அரியபாலைநிலமும், நின்னொடுவரினவளுக்கு மருதநிலமும் பொய்கையுமா மென்றாதரங்கூறியது.

பிணையுங்கலையும்வன்பேய்த்தேரினைப்பெருநீர்நசையா
லணையுமுரம்புநிரம்பியவத்த[illegible]
யிணையுமளவுமில்லாவிறையோனுறைதில்லைத்தண்பூம்
பணையுந்தடமுமன்றேநின்னொடேகினெம்பைந்தொடிக்கே.

(இ - ள்.) பிணையும் கலையும் - பிணையும் கலையும்,— பெருநீர் நசையால் - மிக்க நீர்வேட்கையால்,— வன் பேய் தேரினை அணையும் - பெரியபேய்த்தேரினைச்சென்றணுகும்,— முரம்பு நிரம்பிய - முரம்பால்நிரம்பிய,— அத்தமும் - சுரமும்,— ஐய - ஐயனே!— நின்னொடு ஏகின் - நின்னொடுசெல்லின்,— மெய்யே - மெய்யாக,— எம் பைந்தொடிக்கு - எம்முடையபைந்தொடியையுடையாளுக்கு,— இணையும் அளவும் இல்லா - ஒப்பும் எல்லையுமில்லாத,— இறையோன் உறை - இறையவனுறைகின்ற,— தில்லை - தில்லைவளைப்பின்,— பூம் - பூக்களையுடைய,— தண் - குளிர்ச்சிபொருந்திய,— பணையும் தடமும் அன்றே - மருதநிலமும் பொய்கையு மல்லவோ? (நீ யிவ்வாறு கூறுவதென்?) எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - உடன்போக்கு வற்புறுத்தல்.

முரம்பு - கல்விரவியபருக்கைநிலம். அழற்கடம் - தீக்கானலம், விகாரவகையால் கடா - கடமெனநின்றது. அழனைவிறைந்தபொய்கையெனினு மமையும். அலங்காரம் - புகழாப்புகழ்ச்சி. (௨0௨)

இறந்துபாடுரைத்தல்.

கார்த்தடமுங் கயலும்போன்றீ ர்
வார்த்தடமுலையு மன்னனுமென்றது.

(எ-து.) (ஆதரங்கூறியபாங்கி, தலைமகனைநோக்கி, நீ தலைமகளையுடன்கொண்டுபோகாயாயின்) வாரையணிந்ததடமுலையாளாகிய அவள் கயலும், மன்னனாகிய நீபெரும்பொய்கையும், போன்று (தடந்துறந்தகயல்போல்) அவளிறந்துபடுமென்றது.

இங்கயனீபணிக்கின்றதென்னேந்தலிணைப்பதில்லாக்
கங்கையஞ்செஞ்சடைக்கண்ணுதலன்னல்கடிகொடில்லைப்
பங்கயப்பாசடைப்பாய்தடநீயப்படர்தடத்துச்
செங்கயலன்றேகருங்கயற்கண்ணித்திருநுதலே.

(இ-ள்.) இணைப்பது இல்லா கங்கை அம் செஞ்சடை கண்ணுதல் - ஒப்பில்லாதகங்கையையுடைய அழகியசெஞ்சடையையும் கண்ணையுடையநுதலையுமுடைய, — அன்னல் - அண்ணலது, — கடிகொள் தில்லை - காவலைப்பொருந்திய தில்லைவாய்பில், — பங்கயம் பாசடை பாய் தடம் நீ - தாமரையின் பசிய இலைகளையுடைய பரந்தபொய்கைநீ, — கரு கயல் கண் இ திருநுதல் - கருங்கயல்போலுங்கண்களையுடைய இத்திருநுதலாள், — படர் தடத்து செம் கயலன்றே - அகன்ற அப்பொய்கைக்கண்வாழுஞ் செங்கயலன்றோ? — ஏந்தல் - (அதனால்) அரசனே, — இங்கு - இவ்விடத்து, — நீ அயல் பணிக்கின்றது என் - (நின்றோடேகுமிடத்து வேறொன்றுன் ஒருதுன்பம்வருவதாக) நீ வேற்றுமை கூறுகின்றதென்? (செங்கயற்குப் பங்கயத்தட

மல்லது வேறு வேண்டப்படுவ தொன்றுண்டோ). எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - உடன் போக்குவலியுறுத்தல்.

கண்ணுதலாகியவன்னலெனினுமமையும். உடன்கொண்டு போகாராயின், அலராலுங் காவன்மிகுதியாலும் நின்னைத்தலைப்படுதலரிதாகலின் தடந்துறந்தகயல்போல இவளிறந்துபடும் என்பது கருத்து. (௨0௩)

கற்புநலனுரைத்தல்.

பொய்யொத்தவிடை போக்குத்துணிய
வையத்திடை வழக்குரைத்தது.

(எ-து.) (தலைமகளைப் போக்குடம் படுத்தியபாங்கி,) பொய்போலு மிடையையுடைய தலைமகள் போக்குத் துணியும் வண்ணம் வையத்தின்கண் உலகியல் கூறுவாள்போல் அவள் உடன்போக்குத்துணியக் கற்புநலங் கூறியது.

தாயிற்சிறந்தன்றுநாணதையலாருக்கந்நாணினுஞ்சால்
வேயிற்சிறந்தமென்றோளிகற்பின்விழுமிதன்றீங்
கோயிற்சிறந்தசிற்றம்பலத்தாடுமெங்கூத்தப்பிரான்
வாயிற்சிறந்தமதியிற்சிறந்தமதிநுதலே.

(இ-ள்.) ஈங்கோயிற் சிறந்து - ஈங்கோயிடத்துப்பொலிந்து மேவி, — சிற்றம்பலத்து ஆடும் - சிற்றம்பலத்தின்கணின்றாடும், — எம் கூத்தப்பிரான் - எம்முடைய கூத்தனாகியபிரானது, — வாயில் - வாயின்கண், — சிறந்த - (எப்பொழுதும்வந்து) சிறத்தற்குக் காரணமாகிய), — மதியில் சிறந்த - அறிவிற்சிறந்த, — மதிநுதலே - மதிபோன்றநுதலையுடையாய்! — தையலாருக்கு தாய் நாணில் சிறந்தது அன்று - மகளிர்க்கு (பழிநீக்கிப் பாதுகாத்தலில்) தாய் நாண்போற்சிறந்ததன்று, — அநாண் - அத்தன்மைத்தாகியநாண், — தகை சால் வேயில் சிறந்த மெல் தோளி அழகமைந்த வேய்போலச்சிறந்த மெல்லிய தோள்களையுடை

யாய்!,—நின் கற்பின் விழுமிது அன்று - இன்னிய கற்புப்போ லச்சிறிதன்று. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளை யுடன்போக்கு நேர்வித்தல்.

தாயிற்சிறந்தன்று நாமென்றுரைப்பினு மமையும். தாய் போல நாண்சிறத்தலும், நாணிற்கற்புசிறத்தலும், ஆகிய இரண்டும், கூத்தப்பிரான் வாயிற்சிறந்த நூல்களும் அந்நூல்களிடத்துச் சிறப்புடையபொருளும் என்றுரைப்பினு மமையும். (௨0௪)

துணிந்தமைகூறல்.

பொருவேலண்ணல் போக்குத்துணிந்தமை
செருவேற்கண்ணிக்குச் சென்றுசெப்பியது.

(இ-ள்.) (உலகியல் கூறுவார்போன்று கற்புவழிநி றுத்தி) போர்செய்யும்வேலையுடைய தலைமகன் தானுடன்போக்குத்துணிந்தமை வேற்படையன்னகண்ணையுடைய [illegible]ரைத்து நின் கருத்தென்னை வென்று[illegible]து.

[illegible] குழல்வேங்கையம்போதொடுகோங்கம்விராய்
குறப்பாடலம்புனைவார்தினைவார்தம்பிரான்புலியூர்
மறப்பானடிப்பதொர்தீவினைவந்திடிற்சென்றுசென்று
பிறப்பானடிப்பினும்பின்னுமன்னைத்தரும்பெற்றியரே.

(இ-ள்.) குறப்பாவை - குறப்பாவாய்,—தம்பிரான் புலியூர் மறப்பான் அடிப்பது ஒரு தீவினை வந்திடில் - தம்பிரானது புலியூரை மறக்கக் கூடுவதொரு தீவினைவிளைவு வருமாயின்,— சென்றுசென்று பிறப்பானடிப்பினும் - பல யோனிகளினும் சென்று சென்று பிறக்கக்கூடினும்,—பின்னும் அன்னைத்தரும் பெற்றியர் - பின்னுஞ்சென்று சேரத்தருந் தன்மையையுடையவர்,—நின் குழல் - நின் குழலின்கண்ணுள்ள,—வேங்கை யம் போதொடு - வேங்கைப் பூவோடு,—கோங்கம் விராய் - கோங்கம் பூவைவிரவி,—நறவு பாடலம் புனைவார் - தேனையுடைய

பாதிரிமலரைப்புனைவாராய் (உடன்கொண்டுபோதலை),—நினைவார் - நினையாநின்றார். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகன் உடன்போக்குநேர்ந்தமை யுணர்த்துதல்.

கோங்கம்விராய்ப் பாடலம்புனைவார்நினைவா ரென்றதனான், நீரிலாற்றிடை நின்னொடுசெல்லலுற்றா ரென்பது கூறினாளாம். புலியூரையுணர்ந்தார்க்குப் பின்னைமறத்தலரிதென்னுங் கருத்தான், மறப்பானடிப்பதோர்தீவினைவந்திடினென்றாள். புலியூரை யொருகாலுணர்ந்தவன்னையானே பிறவிகெடுமென்றே, அவ்வாறன்றி யதனை மறந்தவாற்றானே பிறக்கக்கூடினுமென்னுங் கருத்தால் 'பிறப்பானடிப்பினு' மென்றாள். அவர்நாணி உடன்போகாதுகண்டு இற்செறிக்கப்பட்டு அவனையெதிர்ப்படாதிருத்தல் அன்பன்றென்னுங்கருத்தால், பிறப்பானடிப்பினும் பின்னும் அன்னைத்தரும்பெற்றியரென்றாள். உன்னைத்தரும்பெற்றியரென் பதூஉம் பாடம். (௨0௫)

துணிவெடுத்துரைத்தல்... துணிவொடுவினாவல்.

நிலம்பன்றுணிவொடு செல்கரவினைந்து
கலம்புனைகொம்பர் கலக்கமுற்றது.

(எ-து.) (தலைமகனினைவுகேட்ட) ஆபரணமணிந்ததலைமகள் அவனினைவின்படியே அணிந்துநின்று, அவர் நம்மை யுடன்கொண்டு சாத்திற்போகக் காரணமென்றோவென்று கலக்கமுற்றுப் (பாங்கியை) வினாவியது.

நிழற்றலைதீநெறிநீரில்லைகானகமோரிகத்து
மழற்றலைவெம்பரற்றென்பவொன்றோதில்லையம்பலத்தான்
கழற்றலைவைத்துக்கைப்போதுகள்கூப்பக்கல்லாதவர்போற்
குழற்றலைச்சொல்லிசெல்லக்குறிப்பாகின்றதாற்றவர்க்கே.

(இ-ள்.) நிழல்தலை தீ நெறி - நிழலிடம் தீயோடொக்கு நெறி,—நீர் இல்லை - (அந்நெறி) நீருடைத்தன்று,—ஓரி கத்தும்

கானகம் - (இருமருங்கும்) நரி கூப்பிடுங் காடு,—அழல்தலை வெம் பரற்று என்று-(அக்காடு) அழற்கொழுந்துபோலும் முனையையுடைய வெய்ய பரல்களையுடைத்தென்று சொல்லுவர்,—தில்லையம்பலத்தான் - தில்லையம்பலத்தில் வீற்றிருப்பவனது,—கழல்தலை வைத்து கை போதுகள் கூப்ப கல்லாதவர்போல் - கழல்களைத் தலைமேல் வைத்துக் கையாகியபோதுகளைக் குவிக்கப் பயிலாதவரைப்போல,—குழல்தலை சொல்லி - குழலிடத்துச் சொற்போலும் சொல்லையுடையாய்!—நம் சொற்றவர்க்கு - நம்முடைய சொற்றவருக்கு,—செல்ல குறிப்பாகும் - (இத்தனிமைத்தாகிய நெறிக்கண்) செல்லக் குறிப்பாகின்றது,—என்னோ - இஃதென்னோ? எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைமிக்குதல்.

நெறிசுக னரிலைவேயவை விரிப்பினு மமையும். (உ௦௬)

போக்கறிவித்தல்.

பொருசுடர்வேலவன் போக்குத் துணிந்தமை
யரிவைக்கவ னறியவுரைத்தது.

(எ - து.) (இப்பொழுது அவர்போகைக்குக்காரணமென்னோவென்றுகேட்ட தலைமகளுக்குப்பாங்கி, நின்னை நமர் கொடாமையே காரணமென்று) அவனறியத் தலைமகனது போக்கை யறிவித்தது.

காயமுமாவியுநீங்கள்சிற்றம்பலவன்கயிலைச்
சீயமுமாவும்வெரீஇவரலென்பல்செறிதிரைநீர்த்
தேயமும்யாவும்பெறினுங்கொடார்நமரின்னசெப்பிற்
றோயமுநாடுமில்லாச்சுரம்போக்குத்துணிவித்தவே.

(இ-ள்.) நீங்கள் காயமும் ஆவியும் - நீங்கள் உடம்புமுயிரும்போல (ஒருவரையொருவர் இன்றியமையாத அன்புடையீர், இத்தன்மைத்தாகிய நுங்காதலை வினையாது),—சிற்றம்பலவன் கயிலை-சிற்றம்பலத்தான் கைலையில்,—சீயமும் மாவும் வெரீஇ - சீயத்தையும் மற்றவிலங்கையும் அஞ்சி,—வரல் என்பல்-(யான் அவனை)வரற்பாலை யல்லையென்று கூறுவேன்,—செறி திரை நீர் தேயமும் யாவும் பெறினும் - (அவ்வாறு வருதலையொழிந்து உன்னை மணம்புரிய வேண்டின்) நெருங்கிய திரைகளையுடைய கடலாற் சூழப்பட்ட இந்நிலத்தையும் (பொன்முதலிய) எல்லாவற்றையும் பெறினும்,—நமர் கொடார் - நமர் (நின்னைக்) கொடார்கள்,—தோயமும் நாடும் இல்லா - (அதனால்) நீரும் மக்கள் வாழுமிடமும் இல்லாத,—சுரம் போக்கு துணிவித்த - சுரங்களிற் போதலைத் துணிவித்தனவற்றை,—செப்பின் - சொல்லுமிடத்து,—இன்ன - (அவை) இத்தன்மையவன்றே. எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - உடன்போக்கு மாட்சிமைப்படுத்தல்.

நீங்கள் காயமுமாவியும்போல இன்றியமையாமையின் அவனுக்குவருமேதம் நினதென்றஞ்சி அவன்வரவு விலக்குவேனென்றுளாக வுரைப்பினு மமையும். துணிவித்தவென்பது பாடமாயின், துணிவித்ததனைச் செப்பினின்னவெனக் கூட்டியுரைக்க. (உ௦எ)

நாணிகழ்ந்துவருந்தல்.

கற்புநாணினு முற்சிறந்தமையிற்
சேணெறிசெல்ல வாணுதலுணிந்தது.

(எ - து.) (உடன்கொண்டுபோகைக்குக் காரணமறிந்த) ஒள்ளியநெற்றியையுடைய தலைமகள், கற்பானது ஒருநாளுந்தன்னைவிட்டுநீங்காமலுடன்வளர்ந்த நாணினுமிகச்சிறந்தமையால் சேணெறிசெல்லத் துணிந்தது.

மற்பாய்விடையோன்மகிழ்புலியூரென்னொடும்வளர்ந்த
பொற்பார்திருநாண்பொருப்பர்விருப்புப்புகுந்துந்தக்
கற்பார்கடுங்காற்கலக்கிப்பறித்தெறியக்கழிக
இற்பாற்பிறவற்கவேழையர்வாழியெழுமையுமே.

(இ - ள்.) மல்லல் பாய் விடையோன் மகிழ் புலியூர் - வளத்தையுடைய பாயும்விடையையுடையவன் விரும்பும்புலியூரில்,— என்றெனும் வளர்ந்த பொற்பு ஆர் திரு நாண் - எஞ்ஞான்றுந் தோன்றிவளர்ந்து பொலிவார்ந்த திருவையுடைய நாணனது,— பொருப்பர் விருப்பு புகுந்து உந்த - பொருப்பர்மேல் யான் வைத்தவிருப்பம் இடையேபுகுந்து தள்ள,— கற்பு ஆர் கடு கால் கலக்கி பறித்து எறிய - கற்பாகிய நிறைந்த கடியகாற்று அலைத்துப்பிடுங்கிப்புறத்தெறிய,— கழிக - என்னைக் கழிவதாக.— ஏழையர் - (ஆகலான் இனி) மகளிர்,— எழுமையும் - எழுபிறப்பின்கண்ணும்,— இப்பால் பிறவற்க - இப்பிறப்பிற் பிறவாதொழிக. எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - உடன்போக்கு வலித்தல்.

நாண்கழிகவென வியையும். வாழி - அசைநிலை. கற்பாங்கடுங்காலென்பதூஉம் பாடம். முற்சிறந்தமை - முன்னொன்னைச் சிறந்தமை. மல்லல் - கடைக்குறைந்துநின்றது. (௨0௮)

துணிவெடுத்துரைத்தல்.

செல்வமாதர் செல்லத்துணிந்த [illegible]மை
தொல்வரைநாடற்குத் தோழிசொல்லியது.

(எ-து.) (தலைமகளைக்கற்புவழி நிறுத்திச்சென்று) பெரியவரை நாடனாகிய தலைமகனுக்குத் தலைமகள் உடன்செல்லத்துணிந்தமையைப் பாங்கியறிவித்தது.

கம்பஞ்சிவந்தசலந்தரனாகங்கறுத்ததில்லை
நம்பன்சிவநகர்நற்றளிர்கற்சுரமாகுநம்பா
வம்பஞ்சியாவம்புகமிகநீண்டரிசிந்துகண்ணாள்
செம்பஞ்சியின்மிதிக்கிற்பதைக்கும்மலர்ச்சீறடிக்கே.

(இ-ள்.) நம்பா - நம்பா!— அம்பு அஞ்சி ஆவம் புக மிக நீண்டு அரி சிந்து கண்ணாள் - அம்புகள் அஞ்சித் தூணியிற்புக்கொளிப்ப மிகவும்நீண்டு செவ்வரிசிந்திய கண்களையுடையாளது,—

செம்பஞ்சியின் மிதிக்கில் பதைக்கும் மலர் சீறு அடிக்கு - செம்பஞ்சியின் மிதிப்பினும் நடுங்கும் மலர்போலுஞ் சிறியவடிக்கு,— கல் சுரம்-நீசெல்லுங் கல்லையுடைய சுரமானது (இவளது துணிவிருந்த வாற்றான்),— கம்பம் சிவந்த - அச்சத்தால் வரும் நடுக்கத்தைக் கெடுத்த,— சலந்தரன் ஆகம் கறுத்த - சலந்தரனாகத்தைமுனிந்த,— தில்லை நம்பன் - தில்லைக்கணுள்ள நம்பனது,— சிவநகர் - சிவநகரின்,— நல் தளிர் ஆகும் - நல்ல தளிராம்போலும். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - உடன்போக்கு வற்புறுத்தல்.

சிவநகரென்பது ஒரு திருப்பதி. அரிசிந்து கண்ணாள் மலர்ச் சீறடியென்று கூட்டுவாருமுளர். தொல்வரை - பெரியவரை. ()

குறியிடங்கூறல்.

மன்னியவிருளிற் றுன்னியகுறியிற் [று.
கோங்கினர்கொங்கையை நீங்குகென்றுரைத்த

(எ - து.) (துணிவெடுத்துக்கூறியபாங்கி, தலைமகனை நோக்கி) நிலைபெற்ற இவ்விருட்பொழுதில் நீமுன் புணர்ந்திவளை யெதிர்ப்பட்ட குறியிடத்தில் கோங்கமலரன்ன முலையையுடைய தலைமகளைக்கொண்டுபோவாயாக வென்றது.

முன்றேன்மணிகண்டமொத்தவனம்பலவர்தம்முடிதாழ்ந்
தின்றேதவர்வினைபோற்பரந்தோங்குமெனதுயிரே
யன்றேயருப்பெறலாவியன்றேயருளாசையினும்
பொன்றூர்மணிமகிழ்ப்பூவிழயாம்விழைபொக்கிருளே.

(இ-ள்.) எனது உயிர் அன்னாள் அரும் பெறல் ஆவி அன்னாய் - எனதுயிரையொப்பாளது அரிய பெறுதலையுடைய ஆவியையொப்பாய்!— அருள் ஆசையினும் - நினதருள்மேலுள்ள ஆசையால்,— பொன் ஆர் - பொன்போலும் நிறைந்த,— மணி - அழகிய,— மகிழ் பூ விழ - மகிழின் பூவிழ (அவை விழுகின்றவோ

சையை நீசெய்யுங்குறியாக வோர்க்து),—யாம் விழை பொங்கு இருள் - யாம்விரும்பு மிக்கவிருள்,—முன்னோன் மணி கண்டம் ஒத்து - எல்லோருக்கும் முன்னாயவனது அழகிய மிடற்றை யொத்து,—அவன் அம்பலம் தம் முடி தாழ்த்து உன்னாதவர் வினைபோல் - அவனதம்பலத்தைத் தம்முடிகளைத் தாழ்த்து நினையாதவரது தீவினைபோல, — பரந்து ஓங்கும் - (கருமையோடு) பரந்து மிகும். எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - குறியிட முணர்த்துதல்.

ஆவியன்னையதருளென் றுரைப்பாருமுளர். மணிமகிழ்பூவிழ வென்பதுபாடமாயிற் பூவிழவென்னுஞ்சொற்கள் ஒருசொன் னீர்மைப்பட்டு மணிமகிழென்னுமெழுவாயை யமைத்தனவாக வுரைக்க. (உ௪0)

அடியொடுவழிநினைந் தவனுளம்வாடல்.

செறியுறுகுழலியொடு நீங்கத்துணிந்த
உறுசுடர்வேலோ னுள்ளம்வாடிய து.

(எ - து.) (பாங்கி குறியிடம்படுத்திப்போகாநிற்ப) செறிந்தகுழலையுடைய தலைமகளோடு நீங்கத்துணிந்த மிக்கசுடராயுடைய வேலையுடைய தலைமகன், தான் செல்லும்வழியைநினைந்து உள்ளம்வாட்டமடைந்தது.

பனிச்சந்திரனொடுபாய்புனல்சூடும்பரன்புலியூ
ரனிச்சந்திகழுமஞ்சீறடியாவழல்பழுத்த
கனிச்செந்திரளன்னகற்கடம்போந்துகடக்குமென்று
னினிச்சந்தமேகலையாட்கென்கொலாம்புகுந்தெய்துவதே.

(இ - ள்.) பனி சந்திரனொடு - குளிர்ச்சியையுடைய மதியோடு, — பாய் புனல் சூடும் - பரந்த புனலையுடைய கங்கையைச்சூடும், — பரன் புலியூர் - பரனது புலியூரில், — அனிச்சம் திகழும் அம் சீறடி - அனிச்சப்பூப்போலும் அழகிய சிறிய அடிகள்,—அழல் பழுத்த கனி செம் திரள் அன்ன கல் கடம் -

தீயின்கண்பழுத்த பழத்தினது சிவந்த திரள்போலும் கற்களையுடைய காட்டை, — போந்து கடக்குமென்றால் : (இங்ஙனம்) போந்து கடக்குமாயின்,—சந்தம் மேகலையாட்கு - நிறத்தையுடைய மேகலையுடையாட்கு, — இனி புகுந்து எய்துவது என்கொல் - இனி என்காரணமாக வந்தெய்தும் துன்பம்வேறென். எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - நெஞ்சொடு சாவுதல்.

இவை - இரக்கக்குறிப்பு. (உ௪௧)

கொண்டுசென்றுய்த்தல்.

வண்டமர் குழலியைக்
கண்டுகொள் கென்றது.

(எ - து.) (தலைமகன் குறியிடைநின்று அடியொடு வழிநினைந்துள்ளம்வாடாநிற்ப, அந்நிலைமைக்கண் பாங்கி தலைமகளை சேர்ந்து நின்னுள்ளத்துக் கருதிய) வண்டமருங்குழலையுடையாளைக் கண்டுகொள்ளென்று தலைமகளைக்கொண்டு சென்றவனொடுங் கூட்டியது.

வைவந்தவேலவர்சூழ்வரத்தேர்வரும்வள்ளலுள்ளத்
தெய்வந்தருமிருடூங்குமுழுதுஞ்செழுமிடற்றின்
மைவந்தகோனில்லைவாழ்த்தார்மனத்தின்வழுத்துநர்போன்
மொய்வந்தவாவிதெளியுந்துயிலுமிம்மூதெயிலே.

(இ-ள்.) செழு மிடற்றின் மை வந்த கோன் இல்லை - வளவிய கண்டத்தின்கண் கருமையுண்டாகிய கோனது தில்லையை,— வாழ்த்தார் மனத்தின் முழுதும் இருள் தூங்கும் - வாழ்த்தாதாருடைய மனம்போல உலகமுழுது மிருள் செறியாநின்றது,— வழுத்துநர்போல் மொய்வந்த வாவி தெளியும் - அத்தில்லையை வாழ்த்துவாருடைய மனம்போலப் பெருமையுண்டாகிய பொய்கைகள் கலக்கமற்றுத் தெளியாநின்றன,—இம் மூதெயில் துயிலும் - இம்மூதியவூர் துயிலாநின்றது (அடங்கல்),—வை வந்த வேல்

வர் சூழ்வர தேர் வரும் வள்ளல் - கூர்மையுண்டாகியவேலையுடைய இளையர்சூழத் தேரின்கண்வரும் வள்ளலே!—உள்ளம் நினைதுள்ளத்திற் கருதியதனை,— தெய்வம் தரும் - தெய்வம் இப்பொழுதே நினக்குத்தரும். (என் தோழியைக் கொணர்ந்தேன் காண்பாயாக.) எ-று. மெய்ப்பாடு-பெருமிதம்; பயன்-தலைமகளைத் தலைமகனுடன் படுத்தல்.

வள்ளலதுள்ளமென்று விரித்துரைப்பினுமமையும். சூழ்வரத் தேர்வருமென்று பாடமோதி ஊர்காக்குமிளையர் ஊரைச்சூழ் வரும் வரவு மினியொழியுமென் றுரைப்பாருமுளர். (உ௩௨)

ஓம்படுத்துரைத்தல்.

தேம்படு கோதை யை
யோம்ப டுத்த து.

(எ - து.) (தலைமகளைப்பாங்கிகொண்டுசென்று ய்த்து இருவரையும்வலஞ்செய்துநின்று தலைமகனை நோக்கி) மீன்டுகள்நிறைந்தகுழலையுடைய இவளிடத்து (நின்னருளென்றுந்திரியாது காப்பாயெனத் தலைமகளைத் தலைமகனுக்கு) ஓம்படுத்துரைத்தது.

பறந்திருந்தும்பர்பதைப்பப்படரும்புரங்கரப்பச்
சிறந்தெரியாடிதென்றில்லையன்னாடிறத்துச்சிலம்பா
வறந்திருந்துன்னருளும்பிறிதாயினருமறையின்
றிறந்திரிந்தார்கலியும்முற்றும்வற்றுமிச்சேணிலத்தே.

(இ - ள்.) சிலம்பா - சிலம்பனே!—இருந்து உம்பர் பதைப்ப பறந்து படரும் புரம் கரப்ப - இருந்து தேவர் (இடைவிடாது) நடுங்கப்பறந்துசெல்லும் புரங்கள் கெட,— சிறந்து எரியாடி தென் தில்லையன்னாள் திறந்து - பொலிந்து எரியாடலையுடையவனது தெற்கின்கணுண்டாகிய தில்லையையொப்பாளிடத்து,— அறம் திருந்து - அறந்திருந்துதற்குக் காரணமாகிய,— உன் அருளும் பிறிதாயின் - உனதருளும் வேறுபடுமாயின்,—

இச் சேண் நிலத்து - இவ்வகன்றநிலத்து,— அருமறையின் திறம் திரிந்து ஆர்கலியும் முற்றும் வற்றும் - அரியமறைகளின் முறைமைதிறம்பக் கடலும் எஞ்சாதுவற்றும். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - ஓம்படுத்தல்.

அறந்திரிந்தென்பது பாடமாயின், அறந்திரிந் தருமறையின் றிறந்திரிந்தென மாற்றியுரைக்க. அறந்திரிந்தாற்போல நின்னருளும் பிறிதாயினென வொருசொல் வருவித் துரைப்பினு மமையும். அருமறையு மென்பதூஉம் பாடம். (உ௩௩)

வழிப்படுத்துரைத்தல்.

மறிதருவிழியை வழிப்படுத் து ப்
பதிவயிற்பெயரும் பாங்கிபகர்ந் து.

(எ-து.) (ஓம்படுத்துரைத்துத்) தன்பதிக்குச்செல்லும் பாங்கி, மறிபோலு நுதலினையுடையாளை வழிப்படுத்துச் செல்லுமினென் றிருவரையுநோக்கிக் கூறியது.

ஈண்டொல்லையாயமுமவ்வையுநீங்கவிவ்வூர்க்கௌவைதீர்த்
தாண்டொல்லைகண்டிடக்கூடுகநும்மையெம்மைப்பிடித்தா
ண்டின்றெல்லைதீரின்பந்தந்தவன்சிற்றம்பலமிலவு
சேண்டில்லைமாநகர்வாய்ச்சென்றுசேர்கதிருந்தகவே.

(இ-ள்.) எம்மை பிடித்து ஆண்டு இன்று எல்லை தீர் இன்பம் தந்தவன் - எங்களை வலிந்துபிடித்தாண்டு இன்றெல்லைநீங்கிய இன்பத்தைத்தந்தவனது,— சிற்றம்பலம் இலவு சேண் தில்லை மா நகர்வாய் - சிற்றம்பலம் நிலைபெற்ற சேய்த்தாகியதில்லையாகிய பெரியநகரிடத்து,— திருந்தக சென்று சேர்க - (நீர்) பொலிவுதகச்சென்று சேர்வீராயின்,— ஆயமும் அவ்வையும் ஈண்டு நீங்க - மகளிர்கூட்டமும் அன்னையும் பின்வராது இவ்விடத்தேநீங்க,— இவ்வூர் கௌவை ஒல்லை தீர்த்து - இவ்வூரின்

கனுண்டாகிய அலனா (ஒருவாற்றான்) விளையாநீக்கி, — ஆண்டு நம்மை ஒல்லை கண்டிடக்கூடுக - ஆண்டுவேந்தங்களை விளையக் காணக்கூடுவதாக. எ-று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - அச்சந்தவிர்த்தல்.

சேண்டில்லை யென்பதற்கு மதின்முதலாயினவற்று ணுயர்ந்த தில்லை யெனினு மமையும். (௨௨௩)

மெல்லக்கொண்டேகல்.

பஞ்சிமெல்லடிப் பணைத்தோளி யை
வெஞ்சுரத்திடை மெலிவகற்றி யது.

(எ - து.) (பாங்கியைநீக்கி யுடன்கொண்டுசெல்லுந் தலைமகன்) பஞ்சிபோலுமென்மையாகிய அடியையும் வேய்போலுந்தோளையுமுடையாளாகிய தலைமகளை (தன்னுயவெள்ளத்தோடும் விளையாடுமாறு போன்று) மெல்லக்கொண்டு சென்றது.

பேணத்திருத்தியசீறடிமெல்லச்செல்பேரரவம்
பூணத்திருத்தியபொங்கொளியோன்புலியூர்புரையு
மாணத்திருத்தியவான்பதிசேருமிருமருங்குங்
காணத்திருத்தியபோலுமுன்னுமன்னுகானங்களே.

(இ-ள்.) பேர் அரவம் பூண திருத்திய - பெரிய அரவங்களைப பூணும்வண்ணம் (அவற்றின் தீத்தொழிலை) நீக்கிய,— பொங்கு ஒளியோன் புலியூர் புரையும் - பெருகும் ஒளியையுடையவனது புலியூரை யொக்கும்,—மாண திருத்திய வான் பதி - மாட்சிமைப்படக் குற்றங்கடிந்து செய்யப்பட்ட பெரிய ஊர்கள்,— சேரும் இரு மருங்கும் - (நாம்) செல்லுநெறியின் இருபக்கமும் (ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும்),—முன்னும் மன்னு கானங்கள் காண திருத்தியபோலும்-முன்னுளவாகிய காடுகள் (நாம்சென்று) காணும்வண்ணந் திருந்தச் செய்யப்பட்டன போலும்.— பேண - (அதனால்யாம்) விரும்பும் வண்ணம், — திருத்திய

சீறடி - (கைபுனையப்பட்ட) சிறியஅடியையுடையாய்!—மெல்ல செல் - பையச்செல்வாயாக. எ - று. மெய்ப்பாடு - உவகை ; பயன் - தலைமகளை யயர்வகற்றுதல்.

அரவந் திருத்திய வெனவியையும். வான்பதிசேருமென்பதற்குப் பதிநெறியைச்சேர்ந்திருக்குமென்றுரைப்பினுமமையும்.

அடலேடுத்துரைத்தல்.

வரிசிலையவர் வருகுவரென ப்
புரிதருகுழலிக் கருளவனுரைத்த து.

(எ-து.) (மெல்லக்கொண்டுசெல்கின்றதலைமகன், செய்த்தாகவரும்) வரிசிலையவ ரின்றுரெனப்புரிகுழலையுடையதலைமகளுக்கு (அவளச்சந்தீரத் தன்னடலெடுத்) துரைத்தது.

கொடித்தேர்மறவர்குழாம்வெங்கரிநிரைகூடினென்கை
வடித்தேரிலங்கெஃகின்வாய்க்குதவாமன்னுமம்பலத்தோ
னடித்தேரலரென்னவஞ்சுவனின்னையரென்னின்மன்னுங்
கடித்தேர்குழன்மங்கைகண்டிடுவிண்டோய்கனவரையே.

(இ-ள்.) நின் ஐயர் என்னின்-நின்னுடைய ஐயன்மாராயின்,— மன்னும் அம்பலத்தோன் அடி தேரலர் என்ன அஞ்சுவன் - நிலைபெறும் அம்பலத்தின்கண்ணுடைய அடிகளையாராய்ந் துணராதாரைப்போல அஞ்சுவேன்,—கொடி தேர் - (அல்லது) கொடியையுடைய தேரும்,—மறவர் குழாம் - வீரருடைய திரளும்,— வெம் கரி நிரை - வெய்யயானைக்கூட்டமும்,—கூடின் - அனைத்தும் திரண்டுவரினும்,—என் கை வடித்து ஏர் இலங்கு எஃகின் வாய்க்கு உதவா - என்கையில் வடிக்கப்பட்டு அழகு விளங்காநின்ற வேலாயுதத்தினது வாய்க்கு இரையாகமாட்டா, — மன்னும் கடி தேர் குழல் மங்கை - நிலைபெற்ற நாற்றத்தை (வண்டுகள்) ஆராயும் குழலையுடைய மங்காய்!—விண் தோய் - ஆகாயத்தை யளாவிய,—இ கன வரை கண்டிடு - இப்பெரியவரை

யிடத்து (யான்செய்வதனைக்) காண்பாயாக. எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தன்வலியுணர்த்தி யாற்றுவித்தல்.

கூடினென்பதற்கு - என்னைக்கிட்டி னென்றுரைப்பினு மமையும். அடித்தேர்பவனென்பது பாடமாயின் என்னைவென்பதனை உவமவுருபாக்காது இவனையடித்தேர்பவனென்று பிறர்கூறுத வென்றுரைக்க. கண்டிடினென்பதூஉம் பாடம். இடைச்சுரத்து அவளுடையதமர் எதிர்படைதொடர்ந்துசிற்ப, வழிவருவார்வி லக்கி லைவித்துக்கொடுப்ப இதனை 'இடைச்சுரமருங்கின்' என்னுஞ் சூத்திரத்தானு மறிக. தொல் - பொருள் - செய் - ககூ. ()

அயர்வகற்றல்.

இன்னல்வெங்கடத் தெறிவேல வ
னன்னமன்னவ ளயர்வகற்றிய து.

(எ - து.) (அடலெறிந்துரைத்து அச்சந்தீர்த்து) துன்பம்விளைக்கும் வெம்மையாகியகாட்டிற்செல்லும் எறிவேலையுடையதலைமகன் இனி நமக்குக்குறையில்லையென அன்னம்போல்பவளாகிய தலைமகளது வழிவருத்தந் தீர்க்கூறியது.

மூன்றேனருண்மூன்றுமூன்றுவினையின்மூனகர் துன்று
மின்றுக்கடறிதிப்போழ்தேகடந்தின்றுகாண்டுஞ்சென்று
பொன்றோரணிமணிமாளிகைத்தென்புலியூர்புகழ்வார்
தென்னுவெனவுடையானடமாடுசிற்றம்பலமே.

(இ - ள்.) மூன்றேன் அருள் மூன்றும் உன்று வினையின் மூனகர் துன்றும் இன்று கடறு - (இது) எல்லார்க்கும் முன்றுய வனதருளை மூற்பிறப்பின்கண்ணும் நினையாத தீவினையையுடையவிசர் சேருந் துன்பத்தைச்செய்யும் பாலைநிலம்,—இது இப்போழ்தே கடந்து - இதனை இப்பொழுதே கடந்து, — பொன் ஆர் அணி மணி மாளிகை தென்புலியூர் - பொன்னிறைந்த வழகையுடைய மணியால் விளங்கும் மாளிகைகளையுடைய தென்

புலி யூரின்கண்,—புகழ்வார் தென்னுவென உடையான் நடம் ஆடும் - புகழ்ந்துரைப்பார் தென்னனேயென்றுபுகழ என்னையுடையான் நின்றுகூத்தாடும், — சிற்றம்பலம் இன்று சென்று காண்டும் - சிற்றம்பலத்தை யின்றுசென்றுகாண்பேம். (இது வன்றே நமக்குவரும் இன்பம்). எ-று. மெய்ப்பாடு-பெருமிதம்; பயன் - தலைமகளை யயர்வகற்றுதல்.

தென்புலியூர்ச்சிற்றம்பலமென வியையும். உடையானென்பது பாடமாயின், தென்னனேயென்றுபுகழ வொருசிறப்புடையானென் றுரைப்பினுமமையும். கடறு - காடு. அலங்காரம் - கூற்றிடத்திருபொருட்கண்வந்த உயர்ச்சிவேற்றுமை. (உகஎ)

நெறிவிலக்கிக்கூறல்.

சுரத்திடைக்கண்டவர் கூறற்குழைமாதொடு
சாத்தணிவில்லோய் தங்குகென்ற து.

(எ-து.) (அயர்வகற்றிக்கொண்டு செல்லும்போது இனிச்செல்லும்வழியில் நன்மக்களில்லை, நீ தனியை, இவள்வாடினள், பொழுதுஞ்சென்றதெனச்) சுரத் திடைக்கண்டோர், ஒளியுள்ள குழையையுடைய மாதுடன் வானியைத்தொடுக்கும் அழகிய வில்லையுடைய தலைமகனை வழிவிலக்கி இங்கே தங்கிப்போவெ ன்றது.

விடலையுற்றாரில்லைவெம்முனைவேடர்தமியைமென்பூ
விடலையுற்றார்குழல்வாடினண்மன்னுசிற்றம்பலவர்க்
கடலையுற்றாரினெறிப்பொழிந்தாங்கருக்கன்சுருங்கிக்
கடலையுற்றான்கடப்பாரில்லையின்றிக்கடுஞ்சுரமே.

(இ - ள்.) விடலை - விடலாய்!—உற்றார் இல்லை - (இனிச்செல்லுநெறிக்கண்) நன்மக்களில்லை,—வெம் முனை வேடர் - (உள்ளார்) வெய்யமுனையிடத்து வேடரே,—தமியை - நீ தனியை,—

மென் பூ மடலை உற்று ஆர் குழல் வாடினள் - மெல்லியபூவின் இதழைப்பொருந்தி நிறைந்த குழலையுடையாள் (வழிவந்த வருத்தத்தால்) வாடினாள், — மன்னு சிற்றம்பலவர்க்கு அடலை உற்றாரின் - நிலைபெற்றசிற்றம்பலத்தை யுடையவருக்கு ஆட்பட்டுந் தன்மையில்லாரைப்போல, — எறிப்பு ஒழிந்து ஆங்கு அருக்கன் சுருக்கி கடலை உற்றான் - விளக்கமொழிந்து அவ்விடத்து அருக்கன் (தன்கதிர்களைச்) சுருக்கிக் கடலைச்சென்றுற்றான், — இக்கடு சுரம் இன்று கடப்பார் இல்லை - இக்கடியசுரத்தை இப்பொழுது கடப்பாருமில்லை. (அதனாலீண்டுத் தங்குவாயாக). எ - று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - நெறிவிலக்குதல்.

வேடரொடுசாராத நன்மக்கள் இவர்க்கனியராதலின் அவரை உற்றாரென்றார். வேடரி லுற்றாரில்லையென்று நன்றிசெய்யாரென்பது பயப்பவுரைப்பினு மமையும். மடலென்றது - தாழம்பூ மடல். (உகஅ)

கண்டவர்மகிழ்தல்.

மண்டழற் கடத்து க்
கண்டவ ருரைத்த து.

(எ - து.) (நெறிவிலக்குற்று வழிவருத்தந் தீர்ந்து ஒருவரையொருவர் காணலுற்று இன்புற்றுச்செல்கின்ற இருவரையும்) நெருங்கிய அழலைச்சொரியுஞ் சுரத்திற்கண்டவர் இன்புற்றுமகிழ்ந்துகூறியது.

அன்பணைத்தஞ்சொல்லிபின்செல்லுமாடவனீடவன்றன்
பின்பணைத்தோளிவருமிப்பெருஞ்சுரஞ்செல்வதன்று
பொன்பணைத்தன்னவிறையுறைதில்லைப்பொலிமலர்மே
னன்பணைத்தன்னநவுன்னளிபோன்றொளிர்நாடகமே.

(இ - ள்.) அன்பு அணைத்து அம் சொல்லிபின் - (சிறப்புறும் அசைநடையுங் காண்டற்கு) அன்பானணைத்து அழகிய சொல்லையுடையாளது பின்னே, — ஆடவன் செல்லும் - ஆடவன் (ஒருகாற்) செல்லா நின்றான், — அவன் தன்பின் - (முன்செல்லகாணிப் புறக்கொடையும் வலிச்செலவுங்காண) அவனது பின்னே, — பணை தோளி ஈடு வரும் - வேய்போலுந் தோள்களையுடையாள் நெடும்பொழுது செல்லாநின்றாள், — இ பெரு சுரம் செல்வது அன்று - (இவ்வாறிருந்தவாற்றான் இவரதுசெயல்) இப்பெரியசுரத்தைச் செல்கையன்று: (மற்றென்னெனின்), — பொன் பணைத்தால் அன்ன இறை உறை தில்லை - பொன்னொரு வடிவுகொண்டு பெருத்தாற்போலும் இறையுறைகின்ற தில்லைவரைப்பின், — நல் பணை பொலி மலர்மேல் தண் நறவு உண் அளி போன்று - நல்ல பணையிற்பொலிந்த மலரிடத்துக்குளிர்ந்தமதுவையுண்ட வண்டுகளையொத்து, — ஒளிர் நாடகம் - (இன்பக்களியானே மயங்கி) விளங்குவதாகிய ஒரு நாடகம். எ - று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - நெறிவிலக்குதல்.

பெருஞ்சுரஞ்செல்வதன்றென்பதற்குப் பெருஞ்சுரந் தொலைவதன்றெனினு மமையும். பொன்பணைத்தாற்போலு மிறையென்பாருமுளர். கண்டார்க்கின்பஞ் செய்தலின் நாடகமென்றார்.

வழிவிளையாடல்.

வன்றழற்கடத்து வடிவேலண்ண ல்
மின்றங்கிடையொடு விளையாடிய து.

(எ-து.) (கண்டவர்மகிழ) வன்மையாகிய அழலைச் சொரிகின்ற சுரத்திற்கொண்டு செல்கின்ற வடித்த வேலையுடைய தலைமகன் மின்போலு மிடையையுடைய தலைமகளோடு விளையாடியது.

கண்கடம்மாற்பயன்கொண்டனங்கண்டினிக்காரிகைநின்
பண்கடமென்மொழியாரப்பருகவருகவின்னே
விண்கடாயகன்றில்லையின்மெல்லியல்பங்கனெங்கோன்
தண்கடம்பைத்தடம்போற்கடுங்கானகந்தண்ணெனவே.

(இ - ள்.) கண்டு கண்கள் தம்மால் பயன் கொண்டனம் - (நெறி செல்வருத்தத்தினெழிழ்ந்த மேனியையாகிய நின்னைக்) கண்டு கண்களாற்கொள்ளும் பயன்கொண்டனம்,— காரிகை - பெண்ணே !—விண்ணவர் தம் நாயகன் - விண்ணுலகங்களுக்குத் தலைவன்,—தில்லையின் மெல்லியல் பங்கன் - தில்லைக்கணுளனாகிய மெல்லியல் கூற்றையுடையான்,—எம் கோன் - எம்முடைய இறைவன்,— தண் கடம்பை தடம்போல - (அவனது) குளிர்ச்சிபொருந்திய கடம்பையிற் பொய்கைபோல,— கடி கானகம் தண்ணென - கடியகானகங் குளிருமளவும்,— இனி நின் பண்கள் தம் மெல் மொழி ஆர பருக - இனி (சிறிதிருந்து) நினதுபண்ணினது முறைமையையுடைய மெல்லியமொழியைச் (செவிநிறையப்) பருக,—இன்னே வருக - இவ்விடத்து வருவாயாக. எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்தல்.

தண்ணென வின்னேவருகவென வியையும். கடம்பையென்பது ஒருதிருப்பதி. கடம்பைத் தடம்போற் கடுங்கானகங்குளிரும்வண்ணம் நின்மொழியைப் பருகவென்று கூட்டினுமமையும். (உஉ0)

நகரணிமைகூறல்.

வண்டமர் குழலியொ டு
கண்டவ ருரைத்த து.

(எ - து.) (தம்மூரின்புறத்துச்செல்லும்) வண்டமருங்குழலையுடைய தலைமகளோடு தலைமகனைக்கண்டவர் நகரணிமை கூறியது.

மின்றங்கிடையொடுநீவியன்றில்லைச்சிற்றம்பலவர்
குன்றங்கடந்துசென்றானின்றுதோன்றுங்குருஉக்கமலந்
துன்றங்கிடங்குந்துறைதுறைவள்ளைவெள்ளைநகையார்
சென்றங்கடைதடம்புடைசூழ்தருசேணகரே.

(இ-ள்.) மின் தங்கு இடையொடு - மின்போலும் இடையையுடையாளோடு,— நீ வியன் தில்லைச்சிற்றம்பலவர் குன்றம் கடந்து சென்றால் - நீ அகன்றதில்லையிற் சிற்றம்பலத்தையுடையவரது குன்றத்தைக்கடந்து அப்பாற் சிறிதுதூரஞ்சென்றால்,—குரு கமலம் துன்று அம் கிடங்கும் - நிறத்தையுடைய தாமரைப்பூநெருங்கிய அழகியகிடங்கும்,— வள்ளை வெள்ளை நகையார் துறை துறை சென்று அங்கு அடை தடமும் - வள்ளைப்பாட்டைப்பாடும் வெள்ளைமுறுவலையுடைய மகளிர் துறைதோறுந் துறைதோறுஞ்சென்று அவ்விடத்துச்சேரும்பொய்கைகளும்,—புடை சூழ்தரு - பக்கத்துச்சூழ்ந்த,—சேண் நகர் - (அத்தில்லையாகிய) உயர்ந்தநகர்,—நின்று தோன்றும் - இடையறாது தோன்றும், (அத்துணையுங் கடிதுசெல்வாயாக). எ-று. மெய்ப்பாடு-பெருமிதம்; பயன் - இடமணித்தென்றல். (உஉக)

நகர்காட்டல்.

கொடுங்கடங்கடந்த குழைமுகமாதர்க்குத்
தடங்கிடங்குசூழ் தன்னகர்காட்டிய து.

(எ - து.) (நகரணிமை கூறக்கேட்டு இன்புறக் கொண்டுசெல்லுந்தலைமகன்) கொடுமையாகியசுரத்தைக்கடந்த குழையாடாநின்றமுகத்தையுடைய தலைமகளுக்குத் தடங்கிடங்குசூழ்ந்த தன்னகரைக்காட்டியது.

மின்போல்கொடிநெடுவானக்கடலுட்டிரைவிரிப்பப்
பொன்போல்புரிசைவடவரைகாட்டப்பொலிபுலியூர்
மன்போற்பிறையணிமாளிகைகுலத்தவாய்மடவாய்
நின்போனடையன்னந்துன்னிமுன்றோன்றுநன்னகரே.

(இ - ள்.) நின்போல் நடை அன்னம் துன்னி - நின்னுடைய நடைபோலும் நடையையுடைய அன்னங்கள் நெருங்கி,— பன்

போல் பிறை அணி மாளிகை - மன்னனைப்போலப் பிறையை யணிந்த மாளிகைகள்,—குலத்தவாய்-(அவனைப்போலச்) குலத்தை யுடையனவுமாய்,—முன் தோன்றும் நல் நீள் நகர் - முன் தோன்றுகின்ற நல்ல பெரியநகர்,—மடவாய் - பெண்ணே!—மின்போல் கொடி - (ஒளியானும் நுடக்கத்தானும்) மின்னை யொக்குங் கொடிகள்,—நெடு வானம் கடந்து துன் திரை விரிப்ப - பெரியவானமாகியகடலிடத்துத் திரையைப்பரப்ப,—பொன் போல் புரிசை வடவரை காட்ட - பொன்னானியன்ற புரிசை மேருவைக் காட்ட,— பொலி புலியூர் - பொலியும் புலியூர்காண், (தொகுவாயாக). எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - இடங் காட்டுதல்.

பொலென்பது - அசைநிலை. நிறத்தாற் பொன்போலும் புரிசையென்பாருமுளர். (உ௩உ.)

பதிபரிசுரைத்தல்.

கன்னலிவீவள நகர் கண்டுசென்றடைந்து
பின்னவில்வாணெடுத்துப் பதிபரிசுரைத்தது.

(எ - து.) கண்ணுக்கினிய வழகிய நகரத்தையுடைய வளநகரைக்காட்டி அங்கருட்சென்றடைந்து பின் பேதுமொழியையுடைய தலைமகளுக்குத் தன்பதி பரிசுகாட்டியது.

செய்குன்றுவைவிவைசீர்மலர்வாவிவிசும்பியங்கி
நைகின்றதிங்களெய்ப்பாறும்பொழிலவைஞாங்கரெங்கும்
பொய்குன்றவேதியரோதிடமீதிடமு
மெய்குன்றவார்சிலையம்பலவற்கிடமேத்திழையே.

(இ-ள்.) உவை செய் குன்று-உவை செய்குன்றுகள்,—இவை சீர் மலர் வாவி-இவை நல்லமலரையுடைய தடாகங்கள்,—அவை விசும்பு இயங்கி நைகின்ற திங்கள் எய்ப்பு ஆறும் பொழில் அவை ஆகாயத்தின்கண் இயங்குதலானவருந்துந் திங்கள் இளைப்பாறும் பொழில்கள்,—உக்கிடம் ஞாங்கர் எங்கும் பொய் குன்ற வேதியர் ஓதிடம் - உவ்விடம் மிசையெங்கும் உலகத்தில் பொய் (முதலிய குற்றங்) கெட மறையவர் வேதம் ஓதுமிடம்,—ஏத்திழையே-ஏத்திழாய்!—இத்தடமும் எப் குன்றம் வார் சிலை அம்பலவற்கு இடம் - இவ்விடமும் எய்தற்குக் (கருவியாகிய) குன்றமாகிய நீண்டவில்லையுடைய அம்பலவற்கிருப்பிடம், (இத்தன்மைத்திவ்வூர்). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - இடங்காட்டுதல்.

இவையென்பது தன் முன்னுள்ளவற்றை, உவை யென்பது முன்னின்றவிடத்தின்றி செயவற்றை, அவையென்பது அவற்றினுஞ் சேயவற்றைச் சொல்லப்பட்டனவேயன்றி இதுவெனப்புக்குறுகின்றெனென்பதுகருத்தாகலின் இந்தடமுமென்னு மும்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. உத்திடம் இத்திடமெனச் சுட்டீறுதிரிந்து நின்றன. (உ௩௩)

செவிலிதேடல்.

கவலையுற்ற காதற்றோழியை
செவிலியுற்றுத் தெரிந்துவினவியது.

(எ - து.) (இருவரையும்வழிப்படுத்திவர்து பிரிவாற்றுது) வருந்துகின்ற காதற்பாங்கியைச் செவிலி (நீ சுவல்வதற்குக் காரணமென்னேவென்று) வினவித் தலைமகளைத்தேடாநிற்றல்.

மயிலெனப்போர்த்திளவல்லியினொல்கிமென்மான்விழித்துக்
குயிலெனப்பேசமெய்க்குட்டமெய்துமறதென்னெஞ்சகத்தே
பயிலெனப்போர்த்தறியாதவன்றில்லைப்பல்பூங்குழலா
மயிலெனப்பேருங்கண்ணேவென்கொலாமின்றயர்கின்றதே.

(இ . ள்.) மயிலென பேர்ந்து - மயில்போலப் புடைபெயர்ந்து,—இள் வல்லியின் ஒல்கி - இளைய கொடிபோல நுடங்கி,—மெல் மான் விழித்து-மெல்லியமான்போல விழித்து,—குயிலென பேசும் எம் குட்டன் எங்குற்றது - குயில்போலப்பேசும் எங்குழந்தை யெங்கிருக்கின்றது?—என் நெஞ்சகத்தே பயிலென பேர்ந்து அறியாதவன்-என்னெஞ்சின்கண்ணே தனக்குப்பயிற்சி யென்று பலர்சொல்லும்வண்ணம் (என்னெஞ்சினின்று) நீங்கியறியாதவனது,—தில்லை பல் பூ குழலாய்-தில்லையின்கணுளவாகிய பலவித பூக்களையுடைய குழலையுடையாய்!—அயிலென பெரும் கண்ணாய்-வேல்போலப் பிறழுங்கண்ணையுடையாய்!—இன்று அயர்கின்றது என்கொல் - இன்று வருந்துகின்றதென்னோ? எ - று. மெய்ப்பாடு ...... பயன் - தலைமகட்குற்றதுணர்தல்.

எங்குற்றதென்பதொருசொல். என்னெஞ்சகத்தே பயிலெனப்போர்ந்தறியாதவனென்பதற்கு என்னெஞ்சின்கண்ணே நீ பயிலவேண்டுமென்றொருகால்யான்கூறப் பின்னீங்கியறியாதவனென்றுரைப்பினு மமையும். கண்ணிக்கென்பது பாடமாயின், அவள் காரணமாகப் போலும் இவள்வருந்துகின்றதென்றுட்கொண்டு உய்த்துணர்ந்து அவட்கு நீ வருந்துகின்றதென்னென விறுவிற்றாகவுரைக்க. (உஉ௪)

அறத்தொடுநிற்றல்.

சுடர்க்குழைப்பாங்கி படைத்துமொழி கிளவியிற்
சிறப்புடைச்செவிலிக் கறத்தொடுநின்றது.

(எ - து.) பிரகாசம்பொருந்திய கூந்தலையுடைய பாங்கி, தேடாநின்ற சிறப்புடைய செவிலிக்கு, (நீ போய்விளையாடச் சொன்ன தெய்வக்குன்றிடத்தே யாங்கள் யாவரும் போய் விளையாடியிருந்தேமாக அவ்விடத்தொரு பெரியோன் வழியோமாலைகு

டிப் போயினன் ; அதனைக்கண்டு நின்மகள் இம்மாலையை யென்பாவைக்குத் தாருமென்றாள், அவனும் வேண்டியது மறுக்காது கொடுப்பவனாகலின் பிறிதொன்று நினையாதுகொடுத்து நீங்கினன். அன்றறியாப்பருவத்து நிகழ்ந்ததனை "உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர், கொண்டார்க்குரியர் கொடுத்தார்" என்பதனை இன்றுட்கொண்டாள்போலும்). இவ்வளவேயானறிவே னெனப்படைத்துக் கூறுமொழியால் தலைமகளுடன்போக்குத் தோன்றக்கூறி யறத்தொடுநின்றது.

ஆளரிக்கும்மரிதாய்த்தில்லையாவருக்குமெளிதாந்
தாளரிக்குன்றிற்றன்பாவைக்குமேவித்தழல்திகழ்வேற்
கோளரிக்குநிகரன்னரொருவர்குருமலர்த்தார்
வாளரிக்கண்ணிகொண்டாள்வண்டலாயத்தெம்வாணுதலே.

(இ-ள்.) ஆளரிக்கும் அரிதாய் - நரசிங்கமாகிய அரிக்கும் அரிதாய்,—தில்லை யாவருக்கும் எளிதாம் தாளர் - தில்லைக்கண் எல்லாருக்கு மெளிதாந் தாளையுடையவரது—இ குன்றில் - இம்மலையிடத்து,—தழல் திகழ் வேல் - தழல்விளங்கும் வேலையுடைய,—கோளரிக்கு நிகர் அன்னார் ஒருவர் - சிங்கத்துக்கொப்பாகிய அத்தன்மைய ரொருவரது,—குரு மலர் தார் - நிறத்தையுடைய மலரானியன்ற மாலையை,—வாள் அரி கண்ணி - வாள்போலும் செவ்வரிபரந்த கண்ணையுடையளாகிய,—எம் வாள் நுதல் - எம்முடைய ஒளிபொருந்திய நுதலையுடையாள், — வண்டல் ஆயத்து - வண்டலைச்செய்யும் ஆயத்தின்கண்ணே!—தன் பாவைக்கு மேவி கொண்டாள் - தன்பாவைக்கென்று அமர்ந்து கொண்டாள், (இத்துணையு மறிவேன்). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம் ; பயன் - உடன்போக்குணர்த்துதல்.

இக்குன்றின்கண் வண்டலாயத்துமேவிக்கொண்டாளென விளையும். தாளிக்குன்றினென்றதனுன் இதுதெய்வந்தா வந் நதென்றும், பாவைக்கென்றதனுன் அறியாப்பருவமென்றும், கோளிக்கு நிகரன்றென்றதனுன் இவட்குத்தக்காளென்றும், மேவியென்றதனுற் பயிர்ப்பு நீக்கிற்றென்றும், தாமென்றத னுன் மெய்யுற்றதனோடொக்குமென்றுங் கூறினாம். (௨௨௯)

கற்புநிலைக்கிரங்கல்.

விற்புரை நுதலி கற்புநிலை கேட்டுக்
கோடாயுள்ள நீடாயழுங்கிய து.

(எ - து.) பாங்கியறத்தொடு நிற்கக்கேட்ட செவிலி, இது அறமேயாயினும் இவள்பருவத்திற்குத் தகாதென உள்ளம் நெடிதாயழுங்கியது.

வடுத்தான்வகிர்மலர்கண்ணிக்குத்தக்கின்றுதக்கன்முத்தீக்
கெடுத்தான்கெடலில்தொல்லோன்தில்லைப்பன்மலர்க்கேழ்கிளர
மடுத்தான்குடைந்தன்றழுந்தின்றழுங்கித்தழீஇமகிழ்வுற்
றெடுத்தாற்கினியனவேயினியாவனவெம்மனைக்கே.

(இ-ள்.) வடு வகிர் மலர் கண்ணிக்கு - வடுவகிர்போலும் மலர்ந்த கண்களையுடையாளுக்கு,—தக்கின்று - (இம் முதுக்குறைமை) தகாது,—எம் மனைக்கு இனி ஆவன - (ஆயினும்) எம்மனைக்கு இனி நம்மாற்செய்யத்தகுவன,—தக்கன் முத்தீ கெடுத்தான் - தக்கனது முத்தீயைக் கெடுத்தவன்,—கெடல் இல் தொல்லோன் - (ஒருக்காலும்) கேடில்லாத பழையோன்,—தில்லை பல் மலர் கேழ்கிளர் மடு தான் குடைந்தன்று அழுந்த-(அவனது) தில்லைக்கண் பலவாகிய மலர்களின் நிறம் ஒளிரும்படியான மடுவைத்தான் குடைந்து அதிலாழ்ந்து,—அழுங்கி தழீஇ மகிழ்வுற்று எடுத்தாற்கு இனியனவே - அதுகண்டிரங்கி யணைத்து (இவ்வாறுதவிசெய்யப் பெறுதலான்) மகிழ்ந்தெடுத்தாற்கு இனி யனவே (வேறில்லை.) எ - று. மெய்ப்பாடு - உவமையைச்சார்

ந்த அழுகை; பயன் - தலைமகளது கற்பினைப் பாராட்டி ஆற்றுமைநீக்குதல்.

இல்லைக்கணைதொடுத்தாற்கொளை விளையும். தான் - அசைநிலை. ()

கவன்றுரைத்தல்.

அவணிலை நினைந் து
செவிலி கவன்ற து.

(எ - து.) (கற்புநிலைக்கிரங்கிய) செவிலி, (பாங்கியை நோக்கி ஒருகாலைக் கவள் சிறிய வலக்காரங்கள் செய்தனவெல்லாம் இன்றவ்வலியகாட்டைச் செல்லவேண்டிப்போலும், இதனை காணப்பொழுதே யறியப்பெற்றிலேனென்று) தலைமகணிலைமை யெண்ணிக் கவலைகொண்டது.

முறுவலக்காற்றந்துவந்தென்முலைமுழுவித்தழுவிச்
சிறுவலக்காரங்கள்செய்தவெல்லாமுழுதுஞ்சிதையத்
தெறுவலக்காலனைச்செற்றவன்சிற்றம்பலஞ்சேர்ந்திலா
ருறுவலக்கானகந்தான்படர்வானுமொளியிழையே.

(இ - ள்.) ஒளி இழை - ஒளிபொருந்திய ஆபரணத்தையுடையவள் (உள்ளத்தொன்றுடையளாதலின்),—அக்கால் முறுவல் தந்து வந்து - அக்காலத்து முறுவலையெனக்குத்தந்து வந்து,—என் முலை முழுவி - எனது முலையை முத்தங்கொண்டு,—தழுவி - என்னைத்தழுவி,—சிறு வலக்காரங்கள் செய்த எல்லாம் - சிறிய விரகுகள்செய்தவெல்லாம்,—முழுதும் சிதைய - எல்லாப்பொருளுமழிய,—தெறு வல காலனை செற்றவன் - வெகுளுதல்வல்ல காலனை வெகுண்டவனது,—சிற்றம்பலம் சேர்ந்திலார் உறும் - சிற்றம்பலத்தைக் கருதாதார் சேரும்,—வல் கானகம் தான் படர்வான் ஆம் - வலியகாட்டைத் தான்செல்லவேண்டிப்போலும், (அக்காலத்திஃதறிந்திலேன்). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைநீக்குதல்.

எனக்கு வெளிப்படாமற் பிரிவார்செய்வன செய்தானென்னுங்கருத்தான் வலக்காரமென்றாள். வலக்காரம் - பொய், உபாயம். குறித்துணர்வார்க்கு வெளிப்படுமென்னுங்கருத்தாற் சிறுமைப்படுத்தாள். தெறும் வெற்றியையுடைய காலனென்னுமமையும். (உஉஎ)

அடிநினைந்திரங்கல்.

வெஞ்சுரமும்மவன் பஞ்சிமெல்லடியுஞ்
செவிலிநினைந்து கவலையுற்றது.

(எ - து.) (தலைமகளது நிலைமையையெண்ணிக் கவலைகொண்ட செவிலி), கொடியசுரத்தையும் அதைக்கடந்துசெல்லும் அவள்செம்பஞ்சியூட்டிய மெல்லியபாதத்தையும் நினைத்திரங்கியது.

தாமேதமக்கொப்புமற்றில்லவர் தில்லைத்தன்னணிச்சப்
பூமேன்மிதிக்கிற்பதைத்தடிபொங்குநங்காயெரியுந்
தீமேலயில்போற்செறிபரற்கானிற்சிலம்படிபா
யாமேநடக்கவருவினையேன்பெற்றவம்மனைக்கே.

(இ-ள்.) தாமே தமக்கு ஒப்பு மற்று இல்லவர் - தாமே தமக்கொப்பாக வேறொரொப்பில்லாதவரது,— தில்லை தன் அனிச்சம் பூமேல் மிதிக்கில் பதைத்து அடி பொங்கும் - தில்லையிற் குளிர்ந்த அனிச்சப்பூவின்மேல் மிதிப்பினும் கடுக்கித் தன்னடிகள் கொப்புட்கொள்ளும்,— நங்காய் - நங்காய்!— எரியும் தீமேல் அயில்போல் - எரியாநின்ற தீயின்மேற்பதித்த வேல்போல,— செறி பரல் கானில் சிலம்பு அடி பாய் - செறிந்தபரலையுடைய காட்டின்கண் சிலம்பையுடைய வவ்வடியைப்பாவி,— அருவினையேன் - அரிய வினையையுடையேன்,— பெற்ற அன்னைக்கு - பெற்றவன்னைக்கு,— நடக்க ஆமே - (இன்று) நடக்க இயலுமோ! (ஆண்டேன் செய்கின்றாள்). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைநீக்குதல்.

செறிவு - ஒத்தபண்பன்று. நிலத்தைச்செறிந்த பரலெனினுமமையும். அயில்போல் செறிபர லென்பது பாடமாயின், அயில்போலுஞ் செறிபரலென் றுரைக்க. (உஉஅ)

நற்றாய்க்குரைத்தல்.

முகிழ்முலைமடந்தைக்கு முன்னியதறிய த்
திகழ்மனைக்கிழத்திக்குச் செவிலிசெப்பியது.

(எ-து.) (அடிநினைந்திரங்கிய) செவிலி, அரும்பையொத்த முலையையுடைய தலைமகளுக்குவந்ததையறிய நற்றாய்க்குச் சொல்லியது.

தழுவினகையிறைசோரிற்றமியமென்றேதளர்வுற்
றழுவினைசெய்யுமையாவஞ்சொற்பேதையறிவுவிண்ணோர்
குழுவினையுய்யநஞ்சுண்டம்பலத்துக்குனிக்கும்பிரான்
செழுவினதாள்பணியார்பிணியாலுற்றுத்தேய்வித்ததே.

(இ - ள்.) தழுவின கை இறை சோரின் - தன்னைத் தழுவின என்கை சிறிதுசோருமாயின்,— தமியம் என்றே கையா தளர்வுற்று அழுவினை செய்யும் - (நாம்) தமியமென்றே கருதி நைந்து (உள்ளத்தளர்ந்து) அழுந்தொழிலைச்செய்யும்,— அம் சொல் பேதை அறிவு - அழகிய சொல்லையுடைய பேதையினறிவானது,— விண்ணோர் குழுவினை உய்ய நஞ்சு உண்டு அம்பலத்து குனிக்கும் பிரான் - விண்ணவர்குழாம் பிழைக்கத் தானஞ்சையுண்டு அம்பலத்தினின்றுகூத்தாடும் இறைவனுடைய,— செழுவின தாள் பணியார் பிணியால் உற்று தேய்வித்தது - வளவிய தாள்களைப் பணியாதார் (பிணிபோலும்) பிணியான்மிக்கு (என்னைக்) குறைவித்தது. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைநீங்குதல்.

உய்ய நஞ்சுண்டென்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீர்மைப்பட்டு உய்வித்து என்னும் பொருளவாய், குழுவினையென்னு மிர

ண்டாவதற்கு முடிபாயின. அறிவைக் கருத்தாகவும் பிணியைக் கருவியாகவும் கொள்க. (உ௩௯)

நற்றாய்வருந்தல்.

கோடாய் கூ ற
நீடாய் வாடிய து.

(எ - து.) (தலைமகள் உடன்போனமை) செவிலி கூறக்கேட்டு ஏதிலன்பின்னே என்னையும்பாங்கியையுந் துறந்து வேறோரயலாற்றக்கொடுஞ்சுரஞ்சென்றனளென நற்றாய் நெடிதுவருந்தியது.

யாழியன்மென்மொழிவன்மனப்பேதையொரேதிலன்பின்
தோழியைநீத்தென்னைமுன்னேதுறந்துதுன்னார்கண்முன்னே
வாழியிம்மூதூர்மறுகச்சென்றாளன்றுமால்வணங்க
ஆழிதந்தானம்பலம்பணியாரினருஞ்சுரமே.

(இ-ள்.) யாழ் இயல் மென்மொழி - யாழோசையினியல்பையுடைய மெல்லிய மொழியையும்,—வல் மனம் பேதை - வலிய மனத்தையுமுடைய பேதை,—ஓர் ஏதிலன்பின் - ஓரயலான்பின்னே,—தோழியை நீத்து - (தன்) பாங்கியைவிட்டு,—என்னை முன்னே துறந்து - என்னை முன்னே நீங்கி,—துன்னார்கள் முன்னே - பகைவர் முன்னே,—இ மூதூர் மறுக - இம்மூதூரிலுள்ளார் அலைவொடுத்துக்கலங்க,—அன்று மால் வணங்க ஆழி தந்தான் அம்பலம் பணியாரின் - அன்று திருமால்வணங்க அவனுக்காழியைக்கொடுத்தவனது அம்பலத்தைப்பணியாதாரைப்போல,—அரு சுரம் சென்றாள் - அரியசுரத்தைச்சென்றாள், (இனி யெங்ஙனமாற்றுகேன்). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைநீங்குதல்.

இற்செறிக்கப்பட்டபின்னர்ப் பாராமுகத்த ளென்பதனை உடன்போன பின்னருணர்ந்தாளாகலின் என்னை முன்னே துறந்தென்றாள். வாழி - அசைநிலை. (உ௪0)

கிளிமொழிக்கிரங்கல்.

மெய்த்தகைமாது வெஞ்சுரஞ்செல்லத்
தத்தையைநோக்கித் தாய்புலம்பியது.

(எ - து.) மெய்யாகிய கற்பையுடையதலைமகள் கொடுஞ்சுரம்போக (அப்பிரிவை யாற்றுமாறு வருந்துகின்ற) நற்றாய், அவள்கிள்ளையைப்பார்த்து அதன் மொழியைக் கேட்டிரங்கியது.

கொன்னுனைவேலம்பலவற்றொழாரிற்குன்றங்கொடியோ
டென்னனஞ்சென்றனளென்னனஞ்சேருமெனவயரா
வென்னனைபோயினள்யாண்டையளென்னைப்பருந்தடுமென்
றன்னனைபோக்கன்றிக்கிள்ளையென்னுள்ளத்தையீர்கின்றதே.

(இ-ள்.) கொல் நுனை வேல் அம்பலவன் தொழாரின் - கொற்றொழிலமைந்த முனையையுடைத்தாகிய (நுனை) வேலையுடைய அம்பலவனைத் தொழாதாரைப்போல,—கொடியோள் - கொடியன்னாள்,—குன்றம் என்னனம் சென்றனள் - மலைநெறியை எவ்வண்ணஞ்சென்றாள்?—என்னனம் சேருமென - (ஆண்டு) எவ்வண்ணந் தங்குமென்று (யான்) வருந்த,—என் அன்னை போயினள் - என்னுடைய அன்னை போயினாள்,—யாண்டையள் - அவளெவ்விடத்தாள்? — என்னை பருந்து அடுமென்று - இனியென்னைப் பருந்து கொல்லுமென்று சொல்லி,—என் அன்னை போக்கு அன்றி - என்னுடைய அன்னை போக்கொழிய,—கிள்ளை என் உள்ளத்தை ஈர்கின்றது - அவளுடையகிளி யென்னெஞ்சத்தைப்பிளக்கின்றது. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

என்னனஞ்சென்றனள் என்னனஞ்சேருமென்று நினைத்தயராவெனக் கிளிமேலேறவுரைப்பினுமமையும். என்னன்னை போக்கன்றி ஈர்கின்ற இக்கிள்ளையென மருத்துரைப்பினுமமையும். மெய்த்தகை மெய்யாகிய கற்பு; புனையா வழகுமாம். ()

சுடரோடிரத்தல்.

வெஞ்சுரந் தணிக்கெனச் செஞ்சுடரவற்கு
வேயமர்தோளி தாயர்பராய து.

(எ-து.) (கிளிமொழிகேட் டிரங்காநின்ற) நற்றாய், வேய்போலுந் தோளையுடைய தலைமகள் செல்லுங் கொடிய சுரத்தைத் தணிக்கவென்று செஞ்சுடரோ டிரந்து கூறியது.

பெற்றேனெடுங்கிளைவாட முதுக்குறைபெற்றிமிக்கு
கற்றேன்மொழியழற்கானடந் தான்முகமாணுகப்
பெற்றேன்பிறவிபெறுமற்செய்தோன் றில்லைத்தேன்பிறங்கு
மற்றேன்மலரின்மலர்த்திரந்தேன்சுடர்வானவனே.

(இ - ள்.) சுடர்வானவனே - சுடராகிய வானவனே! பெற்றேனெடும் - பெற்ற என்னேடும்,—கிளை வாட - (தன்) கிளைஞர் வருந்த,—முதுக்குறை பெற்றி மிக்கு [illegible] தேமொழி - அறிவுடைமைத் இயல்பு மிக்கு நல்ல தேன்போலு மொழியை யுடையாள்,—அழல் கான் நடந்தாள் முகம் - அழலையுடைய காட்டின்கண் நடந்தவளது முகத்தை (நின் வெங்கதிர்களான் வாட்டாது), — அணுகப்பெற்றேன் நான் - (ஒருவாற்றாற் றன்னை) யணுகப்பெற்றேனாகிய யான்,—பிறவி பெறுமல் செய்தோன் தில்லை - (பின்) பிறவியைப் பெறாதவண்ணஞ்செய்தவனது தில்லையின்,—தேன் பிறங்கு மல் தேன் மலரின் மலர்த்து இரந்தேன் - தேன்மிகுந்துவளவிய வண்டையுடைய தாமரைமலர்போல மலர்த்துவாயாக (நின்னை) யானிரந்தேன். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீக்குதல். (உ௱உ)

பருவநினைந்து கவறல்.

முற்று முலைக் கு
நற்றாய் கவன்ற து.

(எ - து.) (சுடரோடிரந்து வருந்துகின்ற) நற்றாய், (தலைமகள் கற்பிக்கு முதுபெண்டிருமின்றித் தானவனுக்குச் செய்யத்தகுங் குற்றேவல் செய்யவல்லள் கொல்லோ வென்று) அவளது பருவமெண்ணிக் கவலைகொண்டது.

வைம்மலர்வாட்படையூரற்குச்செய்யுங்குற்றேவன்மற்றென்
மைம்மலர்வாட்கண்ணிவல்லள்கொல்லாந்தில்லையான்மலைவாய்
மொய்ம்மலர்க்காந்தளைப்பாந்தளென்றெண்ணித்தன்னென்
றொளித்துக், கைம்மலராற்கண்புதைத்துப்பதைக்குமெங்கார்ம
யிலே.

(இ - ள்.) தில்லையான் மலைவாய் - தில்லையானுடைய இம்மலையிடத்து,—மொய் மலர் காந்தளை பாந்தளென்று எண்ணி - மொய்ம்மலர்க்காந்தளது பூவினைப் பெரும்பாம்பென்று கருதி,—தன்னென்று ஒளித்து கை மலரால் கண் புதைத்து பதைக்கும் எம் கார் மயில் - தன்னென்றுமறைந்து கைம்மலர்களாற் கண்புதைத்துநடுங்கும் எம்முடையகார்மயிலாகிய,—என் மை மலர் வாள் கண்ணி - என்னுடைய மையழகுபெற்ற வாள்போலுங்கண்ணையுடையாள்,—வை மலர் வாள் படை ஊரற்கு - கூர்மையையுடைய மலரணிந்த வாளாகிய படைக்கலத்தையுடைய ஊரனுக்கு,—செய்யும் குற்றேவல் வல்லள் கொல்லாம் - தான் செய்யத்தகுங் குற்றேவல்களைக் (கற்பிக்கு முதுபெண்டிருமின்றித்தானேசெய்ய) வல்லளோ? ([illegible] செய்கின்றான்). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீக்குதல்.

மற்று - அசைநிலை. தில்லையான் மலைவாய்ப்பதைக்கு மெனவினையும். நோக்கென்னு மலங்காரமாய்ப் பாம்பிற்கஞ்சுமியினை இல்குணமடுத்து வந்ததென்பாருமுளர். (உ௱௩)

நாடத்துணிதல்.

கோடாய் மடக்தை யை
நாடத் துணிக்த து.

(எ - து.) (பருவமென்னணிக் கவலைகொண்ட நற்றாய்க்கு நீ கவலைகொள்ளவேண்டா, யானவள்சென்ற விடமறியத் தேடுவேனென்று) செவிலி, தலைமகளைத் தேடத்துணிந்தது.

வேயினதோளிமெல்லியல்விண்ணோர்தக்கன்வேள்வியின்வாய்ப்
பாயினசீர்த்தியனம்பலத்தானைப்பழித்துமும்மைத்
தீயினதாற்றல்சிரங்கண்ணிழந்துதிசைதிசைதாம்
போயினவெல்லையெல்லாம்புக்குநாடுவன்பொன்னினையே.

(இ - ள்.) விண்ணோர் - தேவர்கள், — தக்கன் வேள்வியின் வாய் - தக்கனது வேள்வியின்கண், — பாயின சீர்த்தியன் அம்பலத்தானை பழித்து - பரந்த புகழையுடையனாகிய அம்பலத்தானையிகழ்ந்து கூறி, — மும்மை தீயினது ஆற்றல் சிரம் கண் இழந்து - மூன்றன்தொகுதியாகிய தீயினது வலியையும் தலையையும் கண்ணையும் இழந்து, — திசை திசை தாம் போயின எல்லையெல்லாம் புக்கு பொன்னினை நாடுவன் - திசைதோறுந் திசைதோறுந் தாம்போயினவெல்லையெல்லாம்புகுந்து பொன்னனையாளைத்தேடுவன், — வேயின தோளி மெல்லியல் - வேயின் தன்மையவாகிய தோள்களை யுடையாய்! நீ மெலியவேண்டா. எ-று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன் — நற்றாயை யாற்றுவித்தல்.

திசை திசை யென்பதூஉம் பாடம். தொக்கபொருட்குந் தொகுதிக்கும் ஒற்றுமையுண்மையின் ஆற்றன்முதலாயினவற்றையிழத்தலை விண்ணோர்மேலேற்றினர். முயற்சி விலக்கணி.()

கொடிக்குறிபார்த்தல்.

நற்றாய் நயந் து
சொற்புட் பராய து.

(எ-து.) (செவிலிநாடத்துணியாநிற்ப அவ்விருவரையும் இப்பொழுதே வரும்வண்ணம் நீ கரைவாயாகவென) நற்றாய்விரும்பி, வருவது சொல்லுதலையுடையபுள்ளை வேண்டிக்கொண்டது.

பணங்களஞ்சாலும்பருவரவார்த்தவன்தில்லையன்ன
மணங்கொளஞ்சாயலுமன்னனுமின்னேவரக்கரைந்தா
லுணங்கலஞ்சாதுன்னலாமொண்ணிணப்பலியொக்குவன்மாக்
குணங்களஞ்சாற்பொலியுநலசேட்டைக்குலக்கொடியே.

(இ-ள்.) மா குணங்கள் அஞ்சால் பொலியும் நல்ல சேட்டை குலம் கொடியே - பெரியகுணங்கள் ஐந்தான்விளங்கும் நல்ல சேட்டையையுடைய சீரியகாகமே! — பணங்கள் அஞ்சாலும் பரு அரவு ஆர்த்தவன் - படங்களைந்து ஆடாநிற்கும் பரிய அரவைச்சாத்தியவனது, — தில்லை அன்ன மணம் கொள் அம் சாயலும் மன்னனும் இன்னே வர கரைந்தால் - தில்லையைப்போலு நறுநாற்றம்பொருந்திய அழகியமென்மையை யுடையாளும், மன்னனும், இப்பொழுதே வரும் வண்ணம் (நீ) அழைத்தால், — உணங்கல் அஞ்சாது உண்ணலாம் - (யாமோட்டாமையின்) உணங்கலை யஞ்சாதிருந்துண்ணலாம், — ஒள் நிணம் பலி ஒக்குவல் - (தெய்வத்திற்குக்கொடுத்த) நல்ல நிணத்தையுடைய பலியையும் நினக்கே வைத்துவைப்பேன், (அவ்வாறு கரைவாயாக). எ-று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - எதிர்காலச் செய்கையுணர்தல்.

ஒக்குவலென்பதற்குத் தருவேனென்றுரைப்பினு மமையும். குணங்களைந்தாவன — மறைந்தபுணர்ச்சி, கலங்காமை, பொழு

திறவாதிடம் புகுதல், நெடுகக்காண்டல், மடியின்மை. சேட்டை-உறுப்பைப்புடைபெயர்த்தல். நலசேட்டைகுலக்கொடியே யென்று பாடமோதி, சேட்டையாகிய தெய்வத்தின் கல்லைகொடியேயென் றுரைப்பாருமுளர். (௨௩௫)

சோதிடங் கேட்டல்.

சித்தந்தளர்ந்து தேடுங்கோடாய்
உய்த்துணர்வோரை யுரைமினென்றது.

(எ - து.) (கொடிசிமித்தும்பெற்றும்) மனந்தளர்ந்து தேடுகின்றநற்றாய், வெளிப்படாதபொருளையே யுக்களாலுணரும் அந்தணாளச் சோதிடஞ்சொல்லுமினென்றது.

மூன்றுங்கவிடமுண்டதென்றில்லைமுன்னோனருளா
லின்றுங்கடியிக்கடிமனைக்கேமற்றியாமயர
மன்றுங்கடிமலர்க்கூந்தலுந்தான்பெறுமாறுமுண்டே
லொன்றுங்கடுதின்றியோதுங்கணான்மறையுத்தமரே.

(இ-ள்.) மூன்றும் கவ் விடம் உண்ட தென் தில்லை முன்னோன் அருளால் - பரந்துசெல்லுங்கடியவிடத்தையுண்ட தென்றில்லைக்கணுள்ளாகிய எல்லார்க்குமுன்னாயவனது அருளால், — இ கடி மனைக்கு - இக்காவலையுடையமனையின்கண், — கடி யாம் அயர - மணத்தை யாம்செய்ய, — மன்றும் கடி மலர் கூந்தல் இன்னும் தான் பெறுமாறுண்டேல் — நிலைபெற்றவாசனைபொருந்தியமலரைத்தரித்த கூந்தலையுடையாளை யின்னுந்தான்பெறுமாறுண்டாயின், — நான்மறை உத்தமரே - நான்மறையையுடைய தலைவிர்! — உன்னுங்கள் - (நும்முள்ளத்தால்) ஆராய்வீராக, — தீதின்றி ஓதுங்கள் - (ஆராய்ந்து) குற்றந்தீரச் சொல்வீராக. எ - று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - எதிர்காலச் செய்கையுணர்தல்.

அருளாற்பெறுமாறு முண்டேலெனவியையும். தேவர்சென்றிரப்ப நஞ்சையினைத்தலுங் கைம்மலர்க்கண்வந்திருந்ததாகவின், கருதப்படும் வெவ்விடமெனினு மமையும். யாங்கடியயரத் தான் கடிமலர்க்கூந்தலைப் பெறுமாறு முண்டேலென் றுரைப்பினு மமையும். இப்பொருட்குத் தாயென்றது தலைமகளை. தீதின்றி யுன்னுங்களெனினுமமையும். (௨௩௬)

சுவடுகண்டறிதல்.

சுவடுபடு கடத்துச்
செவிலிகண் டறிந்தது.

(எ-து.) (சோதிடம்பெற்றுச் செல்[illegible]) செவிலி, தலைமகளது காற்சுவடு சுரத்திற்கண்டறிந்தது.

தெள்வன்புனற்சென்னியோனம்பலஞ்சிந்தியாரினஞ்சேர்
முள்வன்பரன்முரம்பத்தின்முன்செய்வினையேனெடுத்த
வொள்வன்படைக்கண்ணிசீறடியிங்கிவையுங்குவையக்
கள்வன்பகட்டுரவோனடியென்றுகருதுவனே.

(இ-ள்.) தெள் வன் புனல் சென்னியோன் அம்பலம் - தெளியபெரியபுனலை யுடைத்தாகிய சடாபாரத்தை யுடையோனது அம்பலத்தை, — சிந்தியார் இனம் சேர் - கருதாதவாது இனஞ்சேரும், — முள் வல் பரல் முரம்பத்தின் இங்கிவை-முள்ளையும் வலியபரலையுமுடைய இம்முரம்பத்தின்கட் கிடந்த இவை, — முன் செய்வினையேன் எடுத்த ஒள் வல் படை கண்ணி சீறடி - முன்செய்த தீவினையையுடைய யானெடுத்து வளர்த்த ஒள்ளியவலியபடைபோலுங் கண்ணினை யுடையாளுடைய சிறிய அடிச்சுவடாம், — உங்குவை அக்கள்வன் பகட்டு உரவோன் அடி என்று கருதுவன் - (இனி) உவற்றை அக்கள்வனாகிய பகடுபோலும் வலியை யுடையானுடைய அடிச்

சுவடென் றயர்ந்தனராகின்றேன். எ - று. மெய்ப்பாடு அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

இங்கிவை உங்குவை என்பன ஒருசொல். (உஉஎ

சுவடுகண்டிரங்கல்.

கடத்திடைக்காரிகை யடித்தலங்கண் டு
மன்னருட்கோடா யின்னலெய்திய து.

(எ - து.) செவிலி, சுரத்தில் தலைமகளடிச்சுவடு கண்டு, இவ்வடிகள் ஒருவிடலையின் பின்போக எவ்வாறொத்தனவென நின்றிரங்கியது.

பாலொத்தநீற்றம்பலவன்கழல்பணியார்பிணிவாய்க்
கோலத்தவிசின்மிதிக்கிற்பதைத்தடிகொப்புள்கொள்ளும்
வேலொத்தவெம்பரற்கானத்தினின்றோர்விடலைபின்போங்
காலொத்தனவினையேன்பெற்றமாணிழைகான்மலரே.

(இ - ள்.) கோலம் தவிசின் மிதிக்கின் - கோலத்தையுடைய தவிசின்மேல் மிதிப்பினும்,—பால் ஒத்த நீற்று அம்பலவன் கழல் பணியார் பிணிவாய் - பாலொத்தநீற்றையுடைய அம்பலவன கழல்களைப்பணியாதவரைப்போல வருத்தம்வாய்ப்ப,—பதைத்து அடி கொப்புள் கொள்ளும்-நடுங்கி அவ்வடிகள் கொப்புள் கொள்ளும்,—வினையேன் பெற்ற மாண் இழை கால் மலர் - தீவினையேன்பெற்ற மாணிழையுடைய அத்தன்மையவாகிய காலாகியமலர்கள்,—இன்று வேல் ஒத்த வெம் பரல் கானத்து ஓர் விடலை பின்போம் கால் ஒத்தன - இன்று வேலையொத்த வெய்யபரலையுடையகாட்டின்கண் ஒருவிடலை பின்போதற்குத் தகும் அடியையொத்தன. (இதனை எவ்வாறு ஆற்றவல்லவாயின). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

தவிசு - நடுக்குழுதலாயின. கான்மலரென அவற்றை மலராகக் கூறினமையாற் காலொத்தனவென வுவமித்தாள். பிணியாயென்றும், பிணிபோலென்றும், காலொத்திரா வென்றும், பாடமோதுவாருமுளர். (உஉஅ)

வேட்டமாதரைக் கேட்டல்.

மென்மலர்கொய்யும் வேட்டமாதரைப்
பின்வருசெவிலி பெற்றிவினாயது.

(எ - து.) (சுவடுகண்டிரங்கி) அதுவழியாகச்செல்கின்றசெவிலி, மென்மையாகிய மலர்கொய்யாநின்ற வேட்டமாதரை நோக்கி, அயலானொருவனுடன்செல்லுமாதைக் கண்டதுண்டோவெனக்கேட்டது.

பேதைப்பருவம்பின்சென்றதுமுன்றிலெனைப்பிரிந்தா
னூதைக்கலமரும்வல்லியொப்பாண்முத்தனதில்லையன்ன
ளேதிற்சுரத்தயலானொடின்றேகினள்கண்டனையே
போதிற்பொலியுந்தொழிற்புலிப்பற்குறற்பொற்றொடியே.

(இ-ள்.) போதில் பொலியும் தொழில் புலி பல் குரல் பொற்றொடி - பூவின்கட்பொலியுந்தொழிலினையும், புலிப்பல்பொருந்தியகழுத்தினையுமுடைய பொன்னாற்செய்த வளையையுடையாய்!—பேதை பருவம் சென்றது பின்-பேதையாகிய பருவங்கழிந்தது (சாம்போந்த) பின்,—முன்றில் எனை பிரிந்தால் ஊதைக்கு அலமரும் வல்லி ஒப்பாள் - (இவ்வாறதியாப் பருவத்தளாய்) முன்றிற்கண் என்னைச்சிறிது நீக்கினால் (நடுங்குதலான்) ஊதைக்காற்றாற்சுழலுங்கொடியையொப்பாள், — முத்தன் தில்லை அன்னாள் - முத்தனதில்லையையொப்பாள்,—ஏதில் சுரத்து அயலானொடு இன்று ஏகினள் - (அவள்) தனக்கன்னியமான இச்சுரத்தின்கண் அயலானொருவனோடு இன்றுபோயினள்.—கண்டனையே - அவளை நீகண்டாயோ? (அவள் எவ்வண்

ணம் போயினள்.) எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைநீங்குதல்.

இல்லையுன்றானென்பதூஉம், பெற்றவினைய தென்பதூஉம் பாடம். (௨௩௯)

புறவோடு புலந்தல்.

காட்டுப் புறவொ டு
வாட்ட முரைத்த து.

(எ-து.) (வேட்டாதனைக்கேட்டு அதுவழியாகச் செல்கின்ற செவிலி, ஏதிலனும் தமியனுமாயவன் பின்னே அவன் சொற்றுணையாக மாது சென்றால்) காட்டுப்புறவே இது நினக்குத் தகுதியோவெனக் கூறுமையால் நீவாழ்கவென அதனோடு மனம்புலர்ந்து கூறியது.

புயலன்றலர்சடையேற்றவன்றில்லைப்பொருப்பரசி
பயலன்றனைப்பணியாதவர்போன்மிகுபாவஞ்செய்தேற்
கயலன்றமியனுஞ்சொற்றுணைவெஞ்சுரமாதர்சென்றா
லியலன்றெனக்கிற்றிலைமற்றுவாழியெழிற்புறவே.

(இ - ள்.) புயல் அன்று அலர் சடை ஏற்றவன் - நீரை அன்றுவிரிந்தசடையின்கணேற்றவன், — தில்லை பொருப்பு அரசி பயலன்தனை பணியாதவர்போல் — தில்லைக்கணுளதாகிய பொருப்பிற்கரசியது கூற்றை யுடையானைப் பணியாதாரைப் போல, — மிகு பாவம் செய்தேற்கு - மிக்க பாவத்தைச்செய்தேற்கு, — அயலன் தமியன் அம் சொல் துணை மாதர் வெம் சுரம் சென்றால் - ஏதிலனுமாய்த்தமியனுமா யவனது அழகிய சொல்லே துணையாக மாதர் வெய்யசுரத்தைச்சென்றால், — எழில் புறவே - எழிலையுடைய புறவே! — இயல் அன்று எனக்கு இற்றிலை - இது தகுதியன்றென்றுகூறிற்றிலை, — வாழி - வா

ழ்வாயாக. எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

பாவஞ்செய்தேற்கியலன்றெனக்கிற்றிலையெனக்கூட்டுக. வெஞ்சுரமாதல்கண்டாலென்பது பாடமாயின் ஆதலென்பதனை எல்லாவற்றோடுங்கூட்டுக. வெஞ்சுரம்போதல் கண்டா லென்பதூஉம் பாடம். பொருப்பரையன்மகளாதலிற் பொருப்பரசியெனத் தந்தைகிழமை மகட்குக்கூறப்பட்டது. (௨௪௦)

குரவோடு வருந்தல்.

தேடிச்சென்ற செவிலித்தாய ர்
ஆடற்குரவொடு வாடியுரைத்த து.

(எ-து.) (புறவொடுபுலந்து) தன்மகளைத் தேடிப் போகின்ற செவிலி, (என்பாவை இச்சுரத்திற் சென்றமை கண்டும் இவ்வாறு சென்றாளெனவாய்திறவாய், இதுநினக்கு நன்றோவென) ஆடற்குராவொடு வாடி யுரைத்தது.

பாயும்விடையோன்புலியூரனையவென்பாவைமுன்னே
காயுங்கடத்திடையாடிக்கடப்பவுங்கண்டுநின்று
வாயுந்நறவக்குழையெழில்வீசவண்டோலுறுத்த
நீயுநின்பாவையுநின்றுங்கலிநீள்குரவே.

(இ - ள்.) குழை எழில் வீச - குழை அழகுசெய்ய, — வண்டு ஓலுறுத்த - வண்டுகள் ஒலிக்க, — நின் பாவையும் நீயும் நின்று நிலாவிடு நீள் குரவே - நின்னுடையபாவையும் நீயும் நின்றுநிலாவும் பெருங்குரவே! — பாயும் விடையோன் புலியூர் அனைய என் பாவை - பாய்ந்துசெல்லும்விடையை யுடையவனது புலியூரையொக்குமென்பாவை, — முன்னே காயும் கடத்திடை ஆடி கடப்பவும் கண்டு நின்று - (நின்) முன்னே கொதிக்குங்கடத்தின்கண் அசைந்துசெல்லவும் விலக்காது

கண்டு நின்று, — வாயும் திறவாய் - (அத்துணையேயன்றி இன்னவாறுநிகழ்ந்ததென்று எனக்கு) வாயுந்திறக்கின்றிலை. (இது நினக்குத்தகுமோ?) எ - று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

குரவு - குராமரம் ; குழை - தளிர் ; ஒல் - ஒலித்தல். நிலாவிளையென்பது பாடமாயின் வழிச்சுரஞ்செல்லக்கண்டும் வாய்திறந்து ஒன்றுங்கூறாது குழையெழில்வீசவண்டோ துறுத்தநின்று விளங்கினையென்று கூட்டியுரைக்க. குழையெழில்வீசவண்டோதுறுத்தவென்பன - அணியாகியகுழைவிளக்கவென்பதூஉஞ் செவிலியரோளாட்டவென்பதூஉந் தோன்றநின்றன. (௨௪௧)

விரதியரை வினவல்.

வழிவருகின்ற மாவிரதிய ரை
மொழிமின்களென்று முன்னிமொழிந்தது.

(எ-து.) (குராவொடுவருந்திச் செல்கின்றசெவிலி) பத்தியர்போ லொருபித்தி தன்பின்வர ஒரு பெருந்தகை முன் செல்லக்கண்டதுண்டோ சொல்லுமென்று எதிர்வருவோராகிய விரதியரை வினவியது.

சுத்தியபொக்கணத்தென்பணிகட்டங்குஞ்சூழ்சடைவெண்
பொத்தியகோலத்தினீர்புலியூரம்பலவர்க்குற்ற
பத்தியர்போலப்பணைத்திறுமாந்தபயோதரத்தோர்
பித்திதற்பின்வரமுன்வருமோவொர்பெருந்தகையே.

(இ - ள்.) சுத்திய பொக்கணம் - சுத்தியை யுடைத்தாகிய பொக்கணத்தையும், — என்பு அணி - என்பாகிய வணியையும், — கட்டங்கம் - கட்டங்கமென்னும் படைக்கலத்தையும், — சூழ் சடை - சூழ்ந்த சடையினையும், — வெண் பொத்திய கோலத்தினீர் - மெய்ம்முழுதும்மூடிய வெண்கோலத்

தையுமுடையீர், — புலியூர் அம்பலவர்க்கு உற்ற பத்தியர் போல - புலியூர்க்கணுள்ள வம்பலவரிடத்து மிக்கபத்தியை யுடையாரைப்போல, — பணைத்து இறுமாந்த பயோதரத்து ஓர் பித்தி தன் பின் வர - பெருத்திறுமாந்த முலைகளையுடையாளொருபேதை தனக்குப்பின்வர, — ஓர் பெருந்தகை முன் வருமோ - ஒருபெருந்தகை முன்னேவருமோ? (உரைமின்.) மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைமகளைக்காண்டல்.

சுத்தி - பிறர்க்குத்திருநீறு கொடுத்தற்கு இப்பிவடிவாகத் தலையோட்டா னமைக்கப்படுவதொன்று. பொக்கணம்-சோளி. கட்டங்கம் - மழு; இது கட்டங்கமெனநின்றது. வெண்கோலம்-நீறணிந்த கோலம். பத்தியர்க்குப் பணைத்தல் - உள்ளத்தாங்கமும் இன்புறவால்மேனிக்கண்வருமொளியும், ஒடுங்காமையும். இறுமாத்தல் - தாழாதவுள்ளத்தராய்ச்செம்மாத்தல். முலைக்குப் பணைத்தல் பெருத்தல், இறுமாத்தல் ஏந்துதல். வெண் பத்திய கோலத்தினீ ரென்றபாடத்திற்கு வெண்ணீற்றூற்பத் திபடவிட்டமுண்டத்தையுடைய கோலமென்றுரைக்க. (௨௪௨)

வேதியரை வினவல்.

மாதின்பின் வருஞ்செவி லி
வேதியரை விரும்பிவினவி யது.

(எ - து.) (விரதியரைவினவி அதன்வழிச் செல்கின்ற) செவிலி, வேதியரை அயலானொருவனுடன் ஒரு மாதுசென்றதுண்டோவென வினவியது.

வெதிரேய்காத்திமென்றோலேய்சுவல்வெள்ளைநாலிற்கொண்
வதிரேய்மறையிவ்வாறுசெல்வீர்தில்லையம்பலத்தக் [மு
கதிரேய்சடையோன்கரமானனைவொருமான்மயில்போ
லெதிரேவருமேசுரமேவெறுப்பவொரேந்தலொடே.

(இ - ள்.) வெதிர் ஏய் காத்து - மூங்கிற்றண்டு பொருந்திய கையினையும், — மெல் தோல் ஏய் சுவல் வெள்ளை நூலின் -

மெல்லிய கலைத்தோலியைத்தசவுவினையும் வெள்ளைநூலினையும், — கொன்மூ அதிர் எய் மறையின் இவ்வாறு செல்வீர் - மேகமுழக்கம்போலு மறையொலியினையு முடைய இந்நெறிச்செல்வீர்! — ஒரு மான் - ஒருமான், — தில்லையம்பலத்துக் கதிர் எய் சடையோன் கர மான் என - தில்லையம்பலத்தின்கணுளனாகிய மதிசேர்ந்த சடையையுடையவனது கரத்தின்மான் போல (மருண்ட நோக்கத்தளாய்), — மயில்போல் - மயில் போல (அசைந்தசாயலளாய்), — சுரமே வெறுப்ப - (வருத்துஞ்) சுரந்தானே கண்டுஞ்ன்புற, — ஓர் ஏந்தலொடு எதிரே வருமே - ஒரேந்தலுடன் நும்மெதிரேவந்தனளோ? (உரைமின்.) எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைமகளைக் காண்டல்.

தோலேய்ந்த அவலின்கணுண்டாகிய வெள்ளைநூலினையுமெனினுமமையும். (உகூங)

புணர்ந்துடன்வருவோரைப் பொருந்திவினவல்.

புணர்ந்துடன் வரும் புரவலனொருபால்
அணங்கமர் கோதையை யாராய்ந்தது.

(எ-து.) (வேதியரைவினவி அதன்வழியாகச் செல்கின்ற செவிலி, உம்மைக்கண்டு என்னால் தேடப்படுவோர் மீண்டாரென் றெண்ணினேன்; அதுநிற்க, இவ்வா றும்மையொத்த வொழுக்கமுடையாரா யிருவரைப் போகக்கண்டீரோவெனப்) புணர்ந்துடன்வரும் தலைமகன் ஒருபாற் கொண்ட தெய்வமகளைப்பானைப் பொருந்தி வினவியது.

மீண்டாரெனவுவந்தேன்கண்டுநும்மையிம்மேதகவே
பூண்டாரிருவர்முன்போயினரோபுலியூரெனைநின்
றாண்டானருவரையாளியனானைக்கண்டேனயலே
தூண்டாவிளக்கனையாயென்னையோவன்னைசொல்லியதே.

(இ-ள்.) நும்மை கண்டு மீண்டாரென உவந்தேன்-உம்மைக்கண்டு என்னாற்றேடப்படுகின்றவர் மீண்டாரெனக்கருதி மகிழ்ந்தேன்,—இ மேதகவே பூண்டார் இருவர்முன் போயினரோ - (நும்மோடொத்த) இவ்வொழுக்கத்தையே பூண்டாரிருவர் முன்னே போயினரோ? (உரைமின்). எ - று.—புலியூர் எனை நின்று ஆண்டான் அரு வரை யாளி அன்னானை கண்டேன் - புலியூர்க்கணென்னை (ஒருபொருளாக மதித்து) நின்றாண்டவனது (இட்டுதற்) கரிய மலையின்கண் ஆளியை யொப்பானை (யான்) கண்டேன்,—தூண்டா விளக்கு அனையாய் - தூண்டவேண்டா விளக்கையொப்பாய்! — அயல் அன்னை சொல்லியது என்னை - (அவனது) அயல் அன்னைசொல்லியதுயாது? (அதனையவட்குச் சொல்வாயாக.) எ - று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த உவகை; பயன் - தலைமகளைக்காண்டல்.

அருவரைக்கட் கண்டேனெனக் கூட்டினுமமையும். ஆளியன்னா னென்றதனால், நின்மகட்கு வருவதோரிடையூறில்லையெனக்கூறினாளும். மணிவிளக்கெனினு மமையும். (உகூச)

வியந்துரைத்தல்.

வேங்கைபட்டதும் பூங்கொடிநிலையும்
நாடாவருங் கோடாய்கூறியது.

(எ - து.) (புணர்ந்துடன் வருவோரைவினவி அது வழியாகச் செல்கின்ற) செவிலி, தலைமகன் கையின் வேலினால் வேங்கை பட்டுக்கிடந்த இடத்தையும் தன்மகள் நின்றநிலையையுங்கண்டு வியந்து கூறியது.

பூங்கயிலாயப்பொருப்பன்திருப்புலியூரதென்னத்
தீங்கயிலாச்சிறியாளின்றவிவ்விடஞ்சென்றெதிர்ந்த
வேங்கையின்வாயின்வியன்கைம்மடுத்துக்கிடந்தலற
வாங்கயிலாற்பணிகொண்டதின்டிறலாண்டகையே.

(இ-ள்.) பூ கயிலாயம் பொருப்பன் திருப்புலியூரது என்ன - அழகிய கயிலாயப்பொருப்பையுடையவனது திருப்புலியூரத னைப்போல, — நீங்கை இல்லா சிறியாள் நின்றது இவ்விடம் - குற்றமற்றசிறியாள் நின்றது இவ்விடத்து;—சென்று எதிர்த்த வேங்கையின் வாயின் வியல் கை மடுத்து இடந்து அதற - சென்று (தன்னோ) டெதிர்த்தபுலியின்வாயில் பெரியகையைமடுத்து (விழுந்து) இடந்தலறும்வண்ணம்,—இன் திறல் ஆண்டகை அயிலால் பணிகொண்டது ஆங்கு - இன்னாலிய திறலையுடைய ஆண்டகைவேலாற் பணிகொண்டது அவ்விடத்து. (அதனால் அவர்போயினநெறி இதுவே.) எ - று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த உவகை? பயன் - ஆற்றாமை நீக்குதல்.

மகளடிச்சுவடு இடந்தவழிச்சென்று நின்றானாதலின், அதனை யிவ்விடமென்றும், வேங்கைபட்டவிடத்தை யவ்விடமென் றுக்கூறினள். வேங்கை தன்காதலியையணுகாமல் அதுவரும் வழிச்சென்றேற்றானதலிற் சென்றென்றாள். சென்றுபணிகொண்டதென வியையும். (௨௬௫)

இயைபெடுத் துரைத்தல்.

சேயிழையோடு செம்மல்போக ரா
ஆயிழையங்கனென் றயிர்த்தேமென்ற து.

(எ - து.) (வேங்கைபட்டது கண்டுவியந்து அது வழியாகச் செல்கின்ற செவிலி எதிர்வருவோரை வினவ, அவர், நீ சொன்னவரைக் குன்றிற்கண்டோம்:—) பொன்னணியையுடையாளோடு தலைமகனை யைமா அவ்விருவருந் தம்முனியைக்கு செல்வதனால் உமையொருபாக முடையானென்று ஐயங்கொண்டோமென்று அவரியைபெடுத்துக் கூறியது

மின்றொத்திடுகழனூபுரம்வெள்ளைச்செம்பட்டுமின்ன
வொன்றொத்திடவுடையாளொடொன்றும்புலியூரனென்றே
நன்றொத்தெழிலைத்தொழவுற்றனமென்னதோர்நன்மைதான்
குன்றத்திடைக்கண்டனமன்னைநீசொன்னகொள்கையரே.

(இ - ள்.) அன்னை நீ சொன்ன கொள்கையர் குன்றத்திடை கண்டனம் - அன்னாய்! நீகூறிய கோட்பாட்டையுடையாரைக் குன்றத்திடைக்கண்டேம்,—மின் தொத்திடு கழல் நூபுரம் - மின் திரளுண்டாகாநின்ற (அவனது) கழலும் (அவளது) சிலம்பும்,—வெள்ளை செம்பட்டு மின்ன - (அவனது) வெண்பட்டும் (அவளது) செம்பட்டும் விளங்க,—ஒன்று ஒத்திட உடையாளொடு ஒன்றும் புலியூரன் என்றே - ஒருவடிவையொத்தலான் எல்லாமுடையனாகிய தன் காதலியோடு ஒரு வடிவாய் விளையாடும் புலியூரனென்றேகருதி,—ஒத்து நன்று எழில் தொழ உற்றனம் - (யாங்களெல்லாம்) ஒத்துப் பெரிது அவ்வழகைத் தொழநினைந்தேம்,—என்னதோர் நன்மை - (அந்நன்மை) எத்தன்மையதோர் நன்மைதான்! (அது சொல்லலாவதொன்றன்று.) எ - று. மெய்ப்பாடு - உவகை. பயன் - செவிலியையெதிர்வருவார் ஆற்றுவித்தல்.

என்னதோர் நன்மையென்றதனான், அஃதறமாதலுங் கூறப்பட்டதாம். தானென்பது—அசைநிலை. கொள்கையரா யென்னு முருபு விகாரத்தாற் றொக்கது. (௨௬௬)

மீளவுரைத்தல்.

கடுங்கடங்கடந்தமை கைத்தாய்க்குரைத் து
நடுங்கன்மின்மீண்டு நடமினென்ற து.

(எ - து.) (இயைபெடுத்துரைத்தவர்) கடுமையாகிய சுரத்தை அவர்கள் கடந்துசென்று அவருரானு இனமையைச் செவிலிக்குரைத்து இனி நீசெல்வ தன்று, நீ வருந்தாமல் மீள்வதேகாரியமென்று அவளை மீளக்கூறியது.

யீன்வதுசெல்வதன்றன்னையிவ்வெங்கடத்தக்கடமாக்
கின்வதுசெய்தகிழவோனொடுமிளர்கெண்டையன்ன
நீள்வதுசெய்தகண்ணாளிந்நெடுஞ்சுரநீந்தியெம்மை
யாள்வதுசெய்தவன்றில்லையினெல்லையணுகுவரே.

(இ - ள்.) மிளிர் கெண்டை அன்ன நீள்வது செய்த கண்ணாள் - புடைபெயர்கின்ற கெண்டைபோலும் நீடலைச்செய்தகண்ணையுடையாள், — வெம் இ கடத்து கடமா கின்வது செய்த கிழவோனொடும் இ நெடு சுரம் நீந்தி,—வெய்ய இச்சுரத்தின்கண் அத்தன்மையகடமாவைப்பிளத்தலைச்செய்தகிழவனோடும் இந்நெடியசுரத்தைநீந்தி, — எம்மை ஆள்வது செய்தவன் தில்லையின் எல்லை அணுகுவர் - அவ்விருவரும் ஒர்டுக்கனின்றிப்போய் எம்மையாளுதலைச்செய்தவனது தில்லையின் எல்லையைச் சென்றணுகுவர், — அன்னை மீள்வது செல்வது அன்று - (அதனால்) அன்னாய் (செயற்பாலது) மீள்வதே, சேறலன்று. எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - செவிலிக்குலகியல்பு கூறி அவளை மீள்வித்தல்.

கிழவோனொடுமென்றதனால் அவன்பற்றுக்கோடாக நீந்தினாளென்பது விளக்கினார். இனி ஒடுவை எண்ணொடு வாக்கியுரைப்பினுமமையும். உம்மை அசைநிலை. (உகஎ)

உலகியல் புரைத்தல்.

செவிலியது கவலைதீர
மன்னியவுலகியன் முன்னியுரைத்தது.

(எ-து.) (மீளக்கூறவும் மீளாமற்) கவலைகொண்ட செவிலிக்கு அதுதீர உலகியல்பு கூறிவித்தது.

கரும்பிவர்சந்துந்தொடுகடன்முத்தும்வெண்சங்குமெங்கும்
விரும்பினர்பாற்சென்றுமெய்க்கணியாம்வியன்கங்கையென்னும்
பெரும்புனல்சூடும்பிரான்சிவன்சிற்றம்பலமன்னைய
கரும்பன்னமென்மொழியாருமந்நீர்மையர் காணுநர்க்கே.

(இ - ள்.) கரும்பு இவர் சந்தும் - (நறுநாற்றத்தால்) வண்டுகள்சேருஞ்சந்தனமும், — தொடு கடல் முத்தும் வெண் சங்கும் - தோண்டப்பட்ட கடலின்முத்தும் வெண்சங்கும்,—எங்கும் விரும்பினர்பால் சென்று மெய்க்கு அணியாம் - எத்தேயத்தும் (தாம்பிறந்தவிடங்கட்குப்பயன்படாது) தம்மை விரும்பியணிவாரிடத்தேசென்று அவர் மெய்க்கணியாகா நிற்கும்,— வியன் கங்கை என்னும் பெரு புனல் சூடும் பிரான் சிவன் சிற்றம்பலம் அன்னைய - அகன்ற கங்கையென்னும் பெரிய புனலைச் சூடும்பிரானாகியசிவனது சிற்றம்பலத்தையொக்கும்,—கரும்பு அன்ன மென் மொழியாரும் காணுநர்க்கு அந்நீர்மையர் - கரும்பு போலும் மெல்லியமொழியினையுடையமகளிரும் ஆராய்வார்க்கத்தன்மையர். (நீகவலவேண்டா.) எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - செவிலிக்குலகியல்பு கூறி அவளை மீள்வித்தல்.

சங்கு-மணியாயும் வளையாயும் அணியாகும். எங்குமணியாமெனவியையும். சிற்றம்பலத்துமன்னுங் கரும்பனமென் மொழியாளென்பதுபாடமாயின் சிற்றம்பலத்தையுடைய தில்லையினுளதாங் கரும்புபோலு மென்மொழியையுடையாளென்றுரைக்க. ()

அழுங்குதாய்க் துரைத்தல்.

செழும்பணை யணைந்த மை
அழுங்குதாய்க் குரைத்த து.

(எ - து.) (உலகியல்புகூறியும் மீளாமல் நின்று தானெடுத்து வளர்த்தமைசொல்லிக் கவலைகொண்ட செவிலியை முன்னிலைப் புறமொழியாக இவர் தாம் அவளை வளர்த்தவர்போலும்) அவர்போய் (இல்லையிடத்துச்) செழும்பணையைச் சென்றணைவரெனக் கூறுவார் போன்றுகூறி மீட்டுக்கொண்டு போகாநிற்றல்.

ஆண்டிலெடுத்தவராமிவர் தாமவரல்குவர்போய்த்
தீண்டிலெடுத்தவர் தீவினை தீர்ப்பவன் றில்லையின்வாய்த்
தூண்டிலெடுத்தவ ராலெழக்கொடெற்றப்பழம்வீழ்ந்து
பாண்டிலெடுத்தபஃறாமரைகீழும்பழனங்களே.

(இ - ள்.) இவர்தாம் ஆண்டு இல் எடுத்தவராம் - இவர்தாம் அவ்விடத்து இல்லின்கணெடுத்து வளர்த்தவர்போலும்,—தீண்டில் எடுத்து அவர் தீவினை தீர்ப்பவன் தில்லையின்வாய் - (யாவராயினும் தம்மை) அணுகில் (அவர் நரகத்தழுந்தாமல்) எடுத்து (அவரது) தீவினையைத் தீர்ப்பவனது தில்லையின்கண்,—தூண்டில் எடுத்த வரால் தெங்கொடு எற்ற பழம் வீழ்ந்து பாண்டில் எடுத்த பல் தாமரை கீழும் பழனங்கள் - தூண்டிலைவிழுங்கிய வரால் தெங்கொடுமோத அதன்பழம்வீழ்ந்து கிண்ணம்போலும் (பூக்களை) யுயர்த்திய பலவாகிய தாமரையைக்கிழிக்கும் பழனங்களை,—அவர் போய் அல்குவர் - அவர் சென்று சேர்வர் (இனியோ ரிடரில்லை) எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - செவிலிக்குலவியல்பு கூறி அவளை மீள்வித்தல்.

இல்லையின்வாய்ப் பழனங்களெனவியையும். ஆண்டிலெடுத்தவராமிவர்தாமென்று தம்முட்கூறிப் பின்செவிலிக்குக் கூறினாராக வுரைக்க. இவ்வாறுபகராது, செவிலிகேட்ப முழுவதூஉந் தம்முட்கூறினாராக வுரைப்பினுமமையும். தூண்டிலானெடுக்கப்பட்ட வராலெனினு மமையும். ஆமென்றது ஆக்கப்பொருட்டாது உவமைப் பொருள்குறித்து நின்றது. இல்லாவளைத்தொட்டு இதுகாறும்வரப் பாலைத்திணைகூறியவாறறிக. (உ௩க)

உடன்போக்கு முற்றிற்று.

வரைவு முடுக்கம்.

இவ்வாறுடன்போக்குநிகழாதாயின் வரைந்துகோடனிகழும். அதுநிகழுமிடத்துப் பாங்கியான்வரைவுமுடுக்கப்படும் வரைபொருட் பிரிந்தவந்தும் நிகழுமென்ப. அவற்றுள் வரைவு முடுக்கமென்பது பாங்கி வரைவுவேண்டித்தலைமகனை நெருக்குதல்.

இக்கிளவி பதினாறு துறைகளையுடைத்து அவை வருமாறு:—

வருத்தங்கூறி வவ்வமறுத்துரைத்தல், உள்ளதுகூறி வேறுபடுதல், பகல்வரலென்றல் தொழுதிரந்துரைத்தல், சிறைப்புறங்கூறல் மதிமேல்வைத்தல், கண்டுயிலாமை கண்டாருரைத்தல், பகலுடம்பட்டான்போன் றிரவாரலென்றல், இரவுடம்பட்டான்போன்று பகல்வாரலென்றல், இரவும்பகலும் வரலொழிகென்றல், காலங்கூறல் கூறுவிக்குற்றல், செலவுகூறல் பொலிவழிவுரைத்தலென், றீரொன்கிளவியு மியம்புங்காலை, வாரணிமுலையாய் வரைவுமுடுக்கம்.

வருத்தமிகுதிகூறி வரைவுகடாதல்.

இரவுக்குறியிடத் தேந்திழைப்பாங் கி
வரைவுவேண்டுதல் வரவுணர்த்தி [illegible].

(க-அ.) இரவுக்குறியின்கண் அலரறிவுறுத்த ஏந்திழைபாங்கி பாக்கி, (அலரினாலும் காவன்மிகுதியினாலும் நின்னை எதிர்ப்படமாட்டாமல் அழுது வருந்துகின்றவ ளிடத்து நின்னருளிருக்கின்ற வகையாதோவெனத் தலைமகளது வருத்த மிகுதிகூறித் தலைமகனை) வரைவுவேண்டுதல்வாக்கூறியது.

எழுங்குலைவாழையினின்கனிதின்றிளமந்தியந்தண்
செழுங்குலைவாழைநிழலிற்றுயில்சிலம்பாமுழவமே
அழுங்கொலிவேற்றிருச்சிற்றம்பலவரையுன்னலர்போ
லழுங்குலவேலன்னகண்ணிக்கென்னோநின்னருள்வகையே.

(இ - ள்.) எழும் குலை வாழையின் இன் கனி தின்று இள
மந்தி - எழாநின்றகுலைகளையுடைய வாழைத்திரளின்கணுண்டா
கிய இனியகனிகளைத்தின்று இளையமந்தி,—செழும் குலை வாழை
அம் தண் நிழலில் துயில் சிலம்பா-முதிர்ந்தகுலையையுடைய அவ்
வாழைத்திரளின் நல்லகுளிர்ந்தநிழற்கண் (வெருவுதலின்றித்)
துஞ்சுஞ்சிலம்பையுடையாய்! — முனைமேல் உழும் கொலை
வேல் - போரிடத்துழுங்கொலைவேலையுடைய, — திருச்சிற்றம்ப
லவனை உன்னலர்போல் - திருச்சிற்றம்பலவனைநினையாதா
ரைப்போல, — அழுங்கு உலை வேல் அன்ன கண்ணிக்கு நின்
அருள்வகை என்னோ - வருந்தாநின்ற உலைத்தொழிலமைந்த
வேல்போலுங்கண்ணையுடையாட்கு நினதருட்கூறு யாதோ?
(இவளதாற்றாமைக்கு மருந்தன்று). எ - று. மெய்ப்பாடு - அச்
சம்; பயன் - வரைவுகடாதல்.

நின்னருள் வகையென்னோ என்பதற்கு இவ்வாறு வருந்து
மிவள்திறத்து இனி நீ செய்யற்கருதியவகை யாதோவெனினு
மமையும். அழுங்கொலை வேலென்பது பாடமாயின் அழாநின்ற
கொலைவேல்போலுங் கண்ணையுடையாட் கென்றுரைக்க. எழு
ங்குலையு முதிர்ந்தகுலையு முடைமையான் இடையறாது பழுக்
கும் வாழைத்திர ளின்கணுண்டாகிய கனியை நுகர்ந்து, மந்தி
வேறொன்றான் வெருவாது, அவ்வாழை நிழலின்கீழின்புற்றுத்
துயிலுமாறுபோல, ஆராவின்பமிடையிட்டு நுகராது நீவரைந்து
கோடலான் இடையறாத பேரின்பந்துய்த்து, அன்னை சொல்லா
லுண்ணடுங்காது நின்றாணிழற்கீழ் இவளின்புற்று வாழ்தல்
வேண்டுமென உள்ளுறைகாண்க. (௨௬௦)

பெரும்பான்மை கூறிமறுத்தல்.

குலம்புரி கொம்பர்க்கு
சிலம்பன் செப்பிய

(எ - து.) (வரைவுகடாவிய) குலம்புரி கொம்பர்
போல்வாளாகிய பாங்கிக்கு (யானவளைத் தெய்வ
மானுடமென்றறிந்து வரைந்து கோடற்கு இக்குன்
றிற்றோன்றுகின்ற இடம் தெய்வமகளிரதிடமோ
அன்றிக் குறத்தியரதிடமோ கூறெனத்) தலைமகன்,
தலைமகளைப் பெரும்பான்மைகூறி மறுத்தது.

பரம்பயன்றன்னடியேனுக்குப்பார்விசும்பூடுருவி
வரம்பயன்மாலறியாத்தில்லைவானவன்வானகஞ்சே
ரரம்பையர்தம்மிடமோவன்றிவேழத்தின்என்புநட்ட
குரம்பையர்தம்மிடமோவிடந்தோன்றுமிக்குன்றிடத்தே.

(இ-ள்.) இ குன்றிடத்து தோன்றும் இடம் - இக்குன்றிடத்
துத்தோன்றுமிடமானது,—பரம் தன் அடியேனுக்கு பயன் -
எல்லாப்பொருட்கு மப்பாலாயவன் (ஆயினும்) தன்னடியேற்
குப் பெரும்பயனு முள்ளவன்,—பார் விசும்பு ஊடுருவி வரம்பு
அயன் மால் அறியா தில்லைவானவன் - பாரையும் விசும்பையும்
ஊடுருவிநிற்றலால் தன்னெல்லையை அயனுமாலு மறியாத தில்
லையின் வானவனது,—வானகம் சேர் அரம்பையர் தம்மிடமோ-
வானகத்தைச்சேர்ந்த தெய்வமகளிரிடமோ? — அன்றி வேழ
த்தின் என்பு நட்ட குரம்பையர் தம்மிடமோ - அன்றி யானை
யினென்பை (வேலியாக) நட்ட குரம்பைகளையுடைய குறத்
தியரிடமோ? (நீ கூறுவாயாக). எ-று. மெய்ப்பாடு - மருட்சி;
பயன் - இரவுக்குறியிட முணர்த்துதல்.

குரம்பை - சிறுகுடில். அவளையெட்டவுஞ் சுட்டவும் படாத
தெய்வமென நிருத்தலான், அவள் வாழுமிடத்தை அரம்பைய
ரிடமென்றே கருதுவல், அன்றாயினானையென வரைவுடம்பட்டாது
கூறியவாறு. (௨௬௧)

உள்ளதுகூறி வரைவுகடாதல்.

இன்மையுரைத்த மன்னனுக் கு
மாமைநோக்கி தோழியுரைத்த து.

(எ - து.) பெரும்பான்மைகூறி மறுத்த தலைமக னுக்கு (இவ்விடம் எந்தையது முற்றூட்டு, எமக்குற் றார் குறவர், எம்மைப்பெற்றவள் கொடிச்சி, யாங் களும் புனங்காப்போம் சிலர், நீ வரைவுவேண்டா மையால் எம்மைப்புனைந்துரைக்க வேண்டுவதில்லை யென) அழகிய கண்களையுடைய பாங்கி, பின்னும் வரைவுதோன்றத் தங்களுண்மையைக் கூறியது.

சிறார்கவண்வாய்த்தமணியிற்சிதைபெருந்தேனிழுமென்
றிறாற்கழிவுற்றெஞ்சிறுகுடிலுந்துமிடந்தெந்தை
உறாவரையுற்றார்குறவர்பெற்றாளுங்கொடிச்சியும்பர்
பெறாவருளம்பலவன்மலைக்காக்கும்பெரும்புனமே.

(இ - ள்.) சிறார் கவண் வாய்த்த மணியிற் சிதை பெரு தேன் - சிறார்கையிற்கவண்தப்பாமல் (அது) விட்ட மணியாற் சிதைந்த பெருந்தேனானது, — இழுமென்று இறாற் கழிவுற்று எம் சிறு குடில் உந்தும் இடம் இது எந்தை உறாவரை - இழுமென்னு மோசையுடன் இறாலினின்றுங் கழிதலையுற்று எமதுசிறுகுடிலைத் தள்ளுமிவ்விடம், எந்தையது முற்றூட்டு,— உற்றார் குறவர் பெற்றாளும் கொடிச்சி - எமக் குற்றார் குற வர், எம்மைப் பெற்றாளுங் கொடிச்சியே, — உம்பர் பெறா அருள் அம்பலவன் மலை பெரும்புனம் காத்தும் - (யாமும் தன்னன்பரல்லது) உம்பர்பெறாத அருளையுடைய அம்பலவ னதுமலைக்கண் பெரும்புனத்தைக்காப்போம்; (அதனால், நீயிர் வரைவுவேண்டாமையின் எம்மைப்புனைந்துரைக்கவேண்டுவதி ல்லை). எ-று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - குறிப்பிட முணர்த்துதல்.

“கோவையுந் தொகையு மாவயின் வரையார்” என்பதனான் இது தொடர்நிலைச்செய்யுளாதலிற் குரம்மையர் தம்மிடமோ வென்றுவினவப்பட்டவிடம் எஞ்சிறுகுடி உந்துமிடமெனவும் ஒருபுனத்தைச்சுட்டி இதெந்தையுறுவரையெனவுங் கூறினாக வுரைப்பினு மமையும். சிறார்விட்டமணியாற் பெருந்தேன் சிதைந்து அவ்விறாலைவிட்டுக்கழிந்து, சிறுகுடிலிற்பாய்ந்தாற்போ ல அயலார்கூறும் அலரான் நமது மறைந்தவொழுக்கம் நம் வயினடங்காது பலருமறியவெளிப்படாநின்றதென உள்ளுறை காண்க. உறுவரை - முற்றூட்டு. (உ௫௪)

ஏதங்கூறி யிரவரவுவிலக்கல்.

இரவருதுயர மேந்தலுக்கெண்ணி ப்
பருவரலெய்திப் பாங்கிபகர்ந்த து.

(எ-ஐ.)(உள்ளமை புணர்ந்து வரைவுகடாய)பாங்கி, இரவில் வருகின்ற துன்பத்தையெண்ணித் தலைமக னுக்கு ஏதங்கூறி யவனை யிரவரவு விலக்கியது.

கடக்தொறும்வாரணவல்சியினாடிப்பல்சீயங்கங்கு
லிடக்தொறும்பார்க்குமியவொருநீயெழில்வேலின்வந்தாற்
படக்தொறுந்தீயரவன்னம்பலம்பணியாரினெம்மைத்
தொடர்க்தொறுந்துன்பென்பதேயன்பநின்னருடோன்றுவதே.

(இ - ள்.) பல் சீயம் வாரண வல்சியின் நாடி கங்குல் கடக் தொறும் இடக்தொறும் பார்க்கும் இயவு - பல சிங்கங்கள் யானையாகிய வுணவைத் தேடி இராக்காலத்திற் காடுகள்தோ றும் காட்டிடங்கள்தோறும் (சென்று) பார்க்கும்வழியில்,— ஒரு நீ - தனிமையாகிய நீ,— எழில் வேலின் வந்தால் - எழிலையுடை ய வேல்துணையாகவந்தால்,— அன்ப - அன்பனே!— நின் அருள் - (எம்மிடத்துண்டாகிய) நின்னருளானது,— படக்தொறும் தீ அரவன் அம்பலம் பணியாரின் - படக்தோறுந் தீயையுடைய

அரவை யணிந்தவனது அம்பலத்தைப் பணியாதாரைப்போல வருந்த,—எம்மை தொடர்ந்து ஒறுக்கும் துன்பு என்பதே தோன்றுவது - எம்மை (விடாதே) தொடர்ந்து வருத்துந் துன்பமென்பதாகவே (எமக்குத்) தோன்றுகின்றது. (எமக்கு நீ செய்யுந் தலையளியை யாங்கள் துன்பமாகவே யுணராநின்றோம்). எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - இரவுக்குறியதேதங் காட்டி வரைவு கடாதல்.

நாடுதல் - மனத்தாலாராய்தல், பார்த்தல் - கண்ணாலேநோக்குதல். வேலியென்னு மைந்தாவது ஏதுவின்கண் வந்தது. ஒறுக்குமென்பது ஒறுமென விடைக்குறைந்து நின்றது. எம்மை நீ விடாது தொடருந் தொறுமெனினு மமையும்; இதற்குத் தொடருமென்பது இடைக்குறைந்து நின்றது. நின்னருளென்னு மெழுவாய் துன்பமென்னும் பயனிலை கொண்டது. (௨௫௫)

பழிவரவுரைத்துப் பகல்வரவுவிலக்கல்.

ஆங்ஙனமொழுகு மடல்வேலண்ணலைப்
பாங்கியைய பகல்வரலென்றது.

(எ - து.) (இவ்விருளில்வரா தொழிகென்றது பகல்வரச் சொன்னவாறுமென வுட்கொண்டு தலைமகன் பகற்குறிச்சென்றுநிற்ப, பாங்கி யெதிர்ப்பட்டுப் பகல்வந்து நீ எமக்குச் செய்கின்ற மெய்யருள் புறத்தவரறிந்து வெளிப்பட்டுப் பழியாகப் பெருகாநின்றது), ஆகலான் இனிப் பகலில்வருதலை யொழிகவெனப் பழிவருதலைக் கூறித் தலைமகனைப் பகல்வரவு விலக்கியது.

களிறுற்றசெல்லல்கனைவயிற்பெண்மரங்கைஞெமிர்த்துப்
பிளிறுற்றவானப்பெருவரைநாடபெடைநடையோ
டொளிறுற்றமேனியன்சிற்றம்பலநெஞ்சுறுதவர்போல்
வெளிறுற்றவான்பழியாம்பகனீசெய்யுமெய்யருளே.

(இ - ள்.) களிறு உற்ற செல்லல் பெண் கனைவயின் மரம் கை ஞெமிர்த்து பிளிறுற்ற வானம் பெருவரை நாட-(அசும்பின் கட்பட்டு) ஆண்யானை யுற்றவருத்தத்தைப் பெண்யானை நீக்கின்றவிடத்து, மரத்தைக் கையான்முறித்து ஆரவாரிக்கும் படியான வானத்தைத் தோயும் பெரிய மலை நாடனே!—பெடை நடையோடு ஒளிறுற்ற மேனியன் சிற்றம்பலம் நெஞ்சுறுதவர்போல் - அன்ன நடையாளோடுகூடி விளங்குதலையுற்ற மேனியையுடையவனது சிற்றம்பலத்தை நினையாதாரைப் போல,—நீ பகல் செய்யும் மெய் அருள் - நீபகலில்வந்தெமக்குச் செய்யும் மெய்யாகிய வருள்,—வெளிறுற்ற வான் பழியாம் - (யாமிடர்ப்பட) வெளிப்படுதலையுற்ற பெரிய பழியாகாநின்றது. எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - பகற்குறிவிலக்கிவரைவுகடாதல்.

பழியல்லா வழிச்சேறலான் அசும்பிற்பட்ட களிற்றினை வாங்குதற்குப் பிடிமுயல்கின்றாற்போல, இவனை யெய்துதற்குபாயமல்லாத இவ்வொழுக்கத்தினை விரும்பும் நின்னை இதனினின்று மாற்றுதற்கு யான்முயலாநின்றேனென உள்ளுறை காண்க. ( )

தோழிகிரந்துகூறல்.

இரவரவினைது மஞ்சிச்
சுரிதருகுழற்றோழி சொல்லியது.

(எ-து.) (பகல்வரவு விலக்கிய) பாங்கி, (இவனிரவு வரவுங் கூடுமென்றுட்கொண்டு, நின்னையெதிர்ப்படவேண்டி யழுதுவருந்துகின்ற இவள் காரணமாக) இரவில் வருகையி னிகழுந்துன்பத்துக்கஞ்சி (நின்கழல்களைக் கையாற்றொழுதேனென) வரைவுதோன்ற இரந்து கூறியது.

கழிகட்டலைமலைவோன்புலியூர்கருதாதவர்போற்
குழிகட்களிற்வெரீஇயரியாளிகுழீஇவழங்காக்

கழிகட் டிரவின்வரல்கழல் கைதொழு தேயிரந்தேன்
பொழிகட் புயலின் மயிலிற் றுவளுமிவள் பொருட்டே.

(இ - ள்.) பொழி கண் புயலின் மயிலின் துவளும் இவள் பொருட்டு - பொழியாநின்ற கண்ணிற் புனலையுடையதோர் மயில் போலத் துவள்கின்ற இவள் காரணமாக,— கழி கண் தலை மலைவோன் புலியூர் கருதாதவர்போல் - கழிந்த கண்ணை யுடைய தலைமாலையைச் சூடுவோனது புலியூரை நினையாதவ ரைப்போல,— குழீ கண் களிறு அரி யாளி வெரீ குழீஇ வழங் கா கழி கட்டிரவின் வரல் - குழிந்த கண்களையுடையயானைகள் சிங்கத்துக்கும் யாளிக்கு மஞ்சி (ஓரிடத்தே) திரண்டுநின்று (அவ்விடம்விட்டுப்) புடைபெயராது மிகுந்த அச்சத்தைச்செய் யும் இரவின்கண் வாராதொழிவாயாக,— கழல் கை தொழு து இரந்தேன் - (இதனை) நின் கழல்களைக் கையாற்றொழு திரந்தேன். எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - இரவுக் குறிவிலக்கி வரைவு கடாதல்.

குழீவழங்கா வென்று பாடமோதி அரியையும் யாளியையுங் குழியையும் வெருவிவழங்கா வென்றுரைப்பாருமுளர். கழி - அச்சத்தைச்செய்யு மியல்பாற் சிறத்தல். கழிகட்டிரவினென்ப தற்குக் கழி சிறப்பின்கண்வந்து அரை யிரவின்கணென்பது படாநின்ற *தெளிவுமின்மையும். பொழிகட்புயலின் மயிலிற்றுவ ளுமென்றதனால் இவ்வாறிவ ளாற்றாளெனினும் நீ வரற்பாலை யல்லை யென்றுகூறி வரைவுகடாவினளாம். வழியிடைவருமேத ங்குறித்து இவ்வாறுநின்ற விவள்பொருட் டென்றுரைப்பினு மமையும். கருதார் மனம்போலென்பது பாடமாயின், மனம் போலுங் கழிகட்டிரவெனவியையும். (௨௫௫)

தாயறிவுகூறல்.

சிறைப்புறத்துச் செம்மல்கேட்ப
வெறிக்குழற்பாங்கி மெல்லியற்குரைத்தது.

(எ - து.) (தொழுதிரந்துகூறவுந் தலைமகன் வேட் கை மிகுதியாற் பின்னுங் குறியிடைச்சென்று நிற்ப, அக்குறிப்பறிந்து தலைமகளுக்குக் கூறுவாள்போ ன்று) சிறைப்புறமாகத் தலைமகன்கேட்ப மணங்க மழுங் கூந்தலையுடைய பாங்கி, தாயறிவுகூறியது.

விண்ணுஞ்செலவறியாவெறியார்கழல்வீழ்சடைத்தீ
வண்ணன்சிவன்றில்லைமல்லெழிற்கானலரையிரவி
னண்ணன்மணிநெடுந்தேர்வந்ததுண்டாமெனச்சிறிது
கண்ணுஞ்சிவந்தன்னையென்னையுநோக்கினள்கார்மயிலே.

(இ - ள்.) கார் மயிலே - கார்காலத்து மயிலையொப்பாய்!— விண்ணும் செலவு அறியா வெறி ஆர் கழல் வீழ் சடை தீவண் ணன் சிவன் தில்லை - விண்ணுளாராலும் (எல்லாப் பொருளுக் கும்பரச் செல்லும்) செலவை யறியப்படாத நறுநாற்றம் பொருந்திய கழலினையும், தாழ்ந்த சடையினையுமுடைய, தீவண் ணனாகிய சிவனது தில்லையில்,— மல் எழில் கானல் அரை இர வின் மணி அண்ணல் நெடுந்தேர் வந்ததுண்டாமென - வள விய எழிலையுடைய கானலிடத்து நடுராத்திரியில் மணிகளையு டைய தலைவனது நெடுந்தேர்வந்ததுண்டாகக் கூடுமென (உட்கொண்டு),— அன்னை சிறிது கண்ணும் சிவந்து என்னையும் நோக்கினள் - அன்னைசிறிதேகண்ணுஞ்சிவந்து என்னையும்பார்த் தனள் (இதனால் இவ்வொழுக்கத்தினை யறிந்தாள்போலும்) எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - படைத்துமொழியால் வரைவுகடாதல்.

எல்லாப் பொருளையுங் கடந்து நின்றனவாயினும் அன்பர்க் கெளியவாய் அவரிட்ட நறுமலரான் வெறிகமழுமென்பது*தோ ன்ற வெறியார் கழலென்றார். (௨௫௬)

மந்திமேல் வைத்துவரைவுகடாதல்.

வரிவளையை வரைவுகடா வி
யரிவைதோழி யுரைபகர்ந் தது.

(எ - து.) (இறைப்புறமாகத் தாயறிவுகூறிச் சென்றெதிர்ப்பட்டு) வரிவளையையுடையளாகிய தலைமகள் நீவரையாமையை நினைந்தாற்றாளாயினாளெனத் தலைமகளது வருத்தங்கூறிப் பாங்கி, (மந்திமேல்வைத்து) வரைவுகடாவாநின்றது.

வான்றோய்பொழிலெழின்மாங்கனிமந்தியின்வாய்க்கடுவன்
றேன்றோய்த்தருத்திமகிழ்வகண்டாடிருநீண்முடிமேன்
மீன்றோய்புனற்பெண்ணைவைத்துடையாளையுமேனிவைத்தான்
வான்றோய்மதிற்றில்லைமாநகர்போலும்வரிவளையே.

(இ-ள்.) நீள் திருமுடிமேல் மீன் தோய் புனல் பெண்ணை வைத்து - நீண்ட திருமுடிக்கண் மீனைப் பொருந்திய புனலாகிய பெண்ணை வைத்து,—உடையாளையும் மேனி வைத்தான் - (எல்லாம்) உடையவளையும் திருமேனிக்கண் வைத்தவனது,— வான் தோய் மதில் தில்லை மாநகர் போலும் வரிவளை - ஆகாயத்தை யளாவிய மதிலையுடைய தில்லையாகிய பெரிய நகரை யொக்கும் வரிவளையையுடையாள்,— வான் தோய் பொழில் எழில் மாங்கனி கடுவன் தேன் தோய்த்து மந்தியின் வாய் அருத்தி மகிழ்வ கண்டாள் - வானைத்தோயும்பொழிலின்கணுண்டாகிய நல்ல மாங்கனியை, ஆண்குரங்கு தேனிற்றோய்த்து பெண்குரங்கின் வாயிற்கொடுத்து நுகர்வித்துத் (தம்முள்) இன்புறுமவற்றைக் கண்டாள் ; (இது நங்காதலர்க்கு நம்மாட்டரிதாயிற்றென ஆற்றாளாயினள்). எ - று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த பெருமிதம் ; பயன் - வரைவுகடாதல்.

தினைபுறங்காக்குங் கடுவனைக்கண்டு விலங்குகளு மிவ்வாறுசெய்யாநின்றன, இது நங்காதலர்க்கு நம்மாட் டரிதாயிற்

றென நீ வரையாமையை நினைந் தாற்றாளாயினாளென்றுமாம். கான்றோய் பொழிலென்பதூஉம்பாடம். (௨௫௭)

காவன்மேல்வைத்துக் கண்டுயிலாமைகூறல்.

நகர் காவலி ன்
மிகுகழி காத ல்.

(எ - து.) (மந்திமேல்வைத்து வரைவுகடாவப்பட்ட தலைமகன் தானு மாற்றாது இரவுக்குறிச்சென்று நிற்க, பாங்கி,) காவல் மிகுதியும் அவளதாற்றாமையுங் கூறி வரைவு கடாயவாறு.

நறைக்கண்மலிகொன்றையோனின்றுநாடகமாடுதில்லைச்
சிறைக்கண்மலிபுனற்சீர்நகர்காக்குஞ்செவ்வேலிளைஞர்
பறைக்கண்படும்படுந்தோறும்படாமுலைப்பைந்தொடியாள்
கறைக்கண்மலிகதிர்வேற்கண்படாதுகலங்கினவே.

(இ - ள்.) நறை கள் மலி கொன்றையோன் நின்று நாடகம் ஆடும் தில்லைச்சிறைக்கண் - நறுநாற்றத்தையுடைய தேன் மலிந்த கொன்றையையுடையவன் நின்று கூத்தாடுந் தில்லையாகிய சிறையிடத்து,—மலி புனல் சீர் நகர் காக்கும் செவ்வேல் இளைஞர் பறைக்கண் படும் படுந்தோறும் - (அதுபொறாமல்) மிகும் புனலையுடைய சீரிய நகரை (இராப்பொழுதின்கண்) காக்குஞ் செவ்வேலையுடைய இளைஞரது காவற்பறை படுந்தோறும் படுந்தோறும்,—படா முலை பைந்தொடியாள் கறை கள் மலி கதிர் வேல் கண் படாது கலங்கின - படக்கடவவல்லாத முலையையுடைய பைந்தொடியாளுடையகறை தங்கின்மிக்க கதிர்வேல் போலுங்கண்கள் (ஒருகாலும்) படாவாய் வருந்தின. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - வரைவுகடாதல்.

நாடகமென்றது ஈண்டு கூத்தென்னுந் துணையாய் நின்றது. கலங்கின வென்பதற்குத் துயிலாமையான் நிறம் பெயர்ந்தன

வென்றும் அழுதகலங்கின வென்று முரைப்பாருமுளர். காவன் மிகுதியும் அவளதாற்றுமையுங் கூறி வரைவுகடாயவாறு. இஃ தின்னார் கூற்றென்றது துறைகூறியகருத்து. (௨௫௮)

பகலுடம்பட்டாள்போன் றிரவரவுவிலக்கல்.

விரைதரு தா ரோ
யிரவர லென்ற தி.

(எ - து.) (இறைப்புறமாகத் தலைமகளது கன்று விளைமைகேட்ட தலைமகன் ஆதரவு மிகுதியா லெதி ர்ப்பட்டுநிற்க, பாங்கி, பகலுடம்பட்டாள்போன்று) மணங்கமழு மலர்மாலையை யுடையானே! இரவு வரலெனவிலக்கியது.

கலராயினர்நினையாத்தில்லையம்பலத்தான்கழற்கன்
பிலராயினர்வினைபோலிருண்டேங்கிமுழங்கிமின்னிப்
புலராவிரவும்பொழியாமழையும்புண்ணின்னுழைவேல் .
மலராவருமருந்தும்மில்லையோநும்வரையிடத்தே.

(இ-ள்.) கலராயினர் நினையா தில்லை அம்பலத்தான் கழற்கு அன்பிலராயினர் வினைபோல் - நிமக்களாயுள்ளார் கருதாத் தில்லை யம்பலத்தானுடைய திருவடிக் கன்பில்லாதாரது தீ வினைபோல,—இருள் தூங்கி புலரா இரவும் - இருள்செறிந்து புலராத இரவும்,—மின்னி முழங்கி பொழியா மழையும் - மின்னிமுழங்கிப் பொழிவதுபோன்று பொழியாதமழையும்,—புண் ணில் நுழை வேல் மலரா வரும் - (எமக்குப்) புண்ணின்கண் நுழையும்வேல் மலராமேவண்ணம் (கொடியவாய்) வாரா நின் றன.—மருந்தும் இல்லையோ நும் வரையிடத்து - (இதற்கு) ஒரு மருந்தும் இல்லையோ நும்வரையிடத்து. எ - று. மெய்ப் பாடு - அழுகை ; பயன் - இரவுக்குறிவிலக்குதல்.

மருந்தென்றமையான் வரையிடத்தென்றாள். ஒருநிலத்துத் தலைமகளுதலின் நும்வரையாகிய இவ்விடத்திதற்கோர் மருந்

தில்லையோவென ஓருலக வழக்காக வுரைப்பினு மமையும். வருத்துதலேயன்றித் தணித்தலுமுண்டோ வென்பதுபட நின் றமையின் மருந்து மென்னுமும்மை எச்சவும்மை. இரவின்கண் வந்தொழுகாநிற்பவும், இரவுறு துயரந்தீர்க்கு மருந்தில்லையோ வென்று கூறினமையான், வரைவல்லது இவ்வாறொழுகுதல் அதற்கு மருந்தன்றென்று கூறினாளாம். (௨௫௯)

இரவுடம்பட்டாள்போன்று பகல்வரவுவிலக்கல்

இகலடு வேலோ ய்
பகல்வர லென்ற து.

(எ - து.) (தலைமகன் பகற்குறிச்செல்லா நிற்பப் பாங்கி, யெதிர்ப்பட்டு) பகைவரையடுகின்ற வேலை யுடையானே (நீ பகல்வருவது அவள் வருத்தமுறும் படி யலராகா நின்றது, பகற்குறி வாற்பாலையல்லை யென இரவுக்குறியுடம்பட்டாள்போன்று) பகற்குறி விலக்கியது.

இறவரையும்பர்க்கடவுட்பராய்நின்றெழிலியுன்னிக்
குறவரார்க்குங்குளிர்வரைநாடகொழும்பவள
நிறவரைமேனியன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ
லுறவரைமேகலையாட்கலராம்பகலுன்னருளே.

(இ - ள்.) இற எழிலி உன்னி - (தொடர்ந்துபெய்யாது) இறுதலான் மேகத்தைநினைந்து,—வரை உம்பர்க்கடவுள் பராய் குறவர் நின்று ஆர்க்கும் குளிர் வரைநாட - மலைமேலுறையுந் தெய்வங்களைப்பராவிக்குறவர் நின்று ஆர்ப்பரவஞ்செய்யுங் குளி ர்ந்த மலைநாட்டையுடையாய்!—கொழு பவளம் நிறம் வரை மே னியன் சிற்றம்பலம் நெஞ்சுறாதவர்போல் உற-கொழுவிய பவள நிறம்பொருந்திய வரைபோலும் திருமேனியையுடையவனது சிற்றம்பலத்தை நினையாதவரைப்போல வருந்த,—அரை மே

கலையாட்கு பகல் உன் அருள் அலராம்-அரைக்கணித்தமேகலையையுடையாட்குப் பகலுண்டா முனதருள் மிக்க அலராகா நின்றது. எ - று. மெய்ப்பாடு - அழுகை ; பயன் - பகற்குறிவிலக்குதல்.

குறவரை யென்புழி ஐகாரம் அசைநிலை. அசைநிலை யென்னாது குறமலை யென்றுரைப்பாருமுளர். வரையையுடைய நாடெனினு மமையும். குறவர்பரவும் பருவத்துத் தெய்வத்தைப் பரவாது, பின் மழைமறுத்தலா னிடர்ப்பட்டு அதனைமுயல்கின்றாற்போல, நீயும் வரையுங்காலத்து வரையாது, இவளையெய்தற்கரிதாகியவிடத்துத் துன்புற்று வரையமுயல்வையென உள்ளுறைகாண்க. (உகூ0)

இரவும்பகலும் வரவுவிலக்கல்.

இரவும் பகலு ம
வரவொழி கென்ற து.

(எ - து.) (இரவுடம்பட்டாள்போன்று பகல்வரவு விலக்கிய பாங்கி, நீ பகல்வரின் எங்கட்குப் பழியெய்தும், இரவுவரின் எவ்வகையாலும் நின்னை யெதிர்ப்படுதலாற் சிறிதும் பயனில்லை,) எனத் தலைமகனை இரவும் பகலுமாகிய இருபொழுதினும் வருதலை யொழிக வென்றது.

கழியாவருபெருநீர்சென்னிவைத்தென்னைத்தன்றொழும்பிற்
கழியாவருள்வைத்தசிற்றம்பலவன்கரந்தருமான்
விழியாவரும்புரிமென்குழலாடிறத்தையமெய்யே
பழியாம்பகல்வரினீயிரவேதும்பயனில்லையே.

(இ-ள்.) ஐய நீ பகல் வரின் - ஐயனே! நீ பகற்காலத்தில் வரின்,—கழியா வரு பெரு நீர் சென்னிவைத்து - கழிந்துவரும் பெரிய கங்கையைச் சென்னியின்கண் வைத்து,— தன்தொழும்பில் என்னை கழியா அருள் வைத்த சிற்றம்பலவன் - தனக்குத் தொண்டுபடுதற்கண் என்னை நீங்காத தன்னருளில் வைத்த சிற்றம்பலவனது,—கரம் தரு மான் விழியா வரும் புரி மெல் குழலாள் திறம் மெய்யே பழியாம் - கரத்தின்கண் வைக்கப்பட்ட மான்போல விழித்துவரும் சுருண்ட மெல்லிய குழலையுடையாள் திறத்து மெய்யாகவே அலருண்டாம்,—இரவு ஏதும் பயனில்லை - இராக்காலத்தில்வரின் (எதிர்ப்படுத லருமையாற்) சிறிதும் பயனில்லை. எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - இரவுக்குறியும் பகற்குறியும் விலக்கி வரைவுகடாதல்.

பரந்துவரும் பெரும்புனலை வேகந்தணித்துத் தன் சென்னியின்கண் வைத்தாற்போல, நில்லாது பரக்கு நெஞ்சை யுடையேனைத் தன்னருட்கணடக்கினனென்பது கருத்து. தன்றொழும்பினின்றும் யானீங்காமைக்குக் காரணமாகிய அருட்கணென்னை வைத்தவனெனினு மமையும். (உகூக)

காலங்கூறிவரைவுகடாதல்.

முந்தியபொருளைச் சிந்தையில்வைத் து
வந்தருகிளவியிற் றெரியவுரைத்த து.

(எ - து.) (இருபொழுதும் வரைவுவிலக்கின பாங்கி,) முற்பட்டபொருளைச் சிந்தையினிலெண்ணி (வரைவொடு வருதற்குக் காலமிதுவென) வரைவு மொழியினைத் தெரியச்சொன்னது.

மையார்கதலிவனத்துவருக்கைப்பழம்விழுந்தே
னெய்யாதயின்றிளமந்திகள்சோருமிருஞ்சிலம்பா
மெய்யாவரியதெனம்பலத்தான்மதியூர்கொள்வெற்பின்
மொய்யார்வளரின்வெங்கைபோன்மாலையின்முன்னினவே.

(இ - ள்.) மை ஆர் கதலி வனத்து வருக்கை பழம் விழு தேன்-இருளார்ந்த வாழைக்காட்டினகத்து பலாவின் பழம் விழுதலா

னிடாகியதேனை,—இளமந்திகள் எய்யாது அயின்று சோருமிருஞ்சிலம்பா - இளையமந்திகள் அறியாதேயுண்டு (பின்களியால்) சோரும் பெரிய சிலம்பையுடையாய்!—மதி ஊர்கொள் - மதிநிரம்பாநின்றது,—அம்பலத்தான் வெற்பின் - அம்பலத்தானுடைய வெற்பின்கண்,—மொய் ஆர் வளர் இளவேங்கை பொன் மாலையின் முன்னின,—செறிவார்ந்த வளராநின்ற இளைய வேங்கைகள் (பூத்துப்) பொன்மாலைபோலத் தோன்றின,—மெய்யா அரியது என் - (இனி) மெய்யாக வுனக்கு அரியது யாது? எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வரைவு கடாதல்.

ஊர்கோடல் - குறைவின்றி மண்டலமாக வொளி பரத்தல், அல்லதூஉம் பரிவேடித்தலெனினு மமையும். வேட்டபொருள் உள்ளத்து முற்பட்டுத் தோன்றுதலின், வரைவை முந்திய பொருளென்றான். நின்மலைக்கண் விலங்குகளும் இத்தன்மைத்தாகிய தேனைக்குறியாதுண்டு இன்புறாநின்றனவாகலின் குறித்தவற்றில் நினக்கரியதியாது, இதுவன்றே பருவமுமெனை வரைவுபயப்பக் கூறியவாறாயிற்று. மந்திகடேறு மென்பது பாடமாயின், தேனையறியாதுண்டு அதன்சுவை மிகுதியாற் பின்னைத் தேர்ந்து தேறுமென்றுரைக்க. (௨௯௨)

கூறுவிக்குற்றல்.

ஒத்ததொவ்வா துரைத்ததோ ழி
கொத்தவிழ்கோதையாற் கூறுவிக்குற்றது.

(எ - து.) இராவரலென்றலும் பகல்வரலென்றலும் பின்னிரண்டையு மறுத்தலுமாகிய ஒத்தது மொவ்வாததுங்கூறியபாங்கி, (தலைமகனுக்குக் காலங்கூறி வரைவுகடாவவும் அவன்வரைவுடம்படாமையின், நீயாகிலுஞ்சென்று கூறென்பது குறிப்பாற் றோன்ற) மலர்க்கொத்தவிழ்ந்த கோதையாகிய தலைமகளைக்கொண்டு கூறுவிப்பாளாகத் துணிந்தது.

தேமாம்பொழிற்றில்லைச்சிற்றம்பலத்தவிண்ணோர்வணங்க
நாமாதரிக்கநடம்பயில்வோனைநண்ணாதவரின்
வாமான்கலைசெல்லநின்றாரிடத்தநம்மல்லல்கண்டாற்
றாமாவறிகிலராயினென்னாஞ்சொல்லுந்தன்மைகளே.

(இ - ள்.) தேமாம் பொழில் தில்லை சிற்றம்பலத்து விண்ணோர் வணங்க - தேமாம் பொழிலையுடைய தில்லைச்சிற்றம்பலத்தின்கண் விண்ணோர் வணங்கவும்,—நாம் ஆதரிக்க நடம்பயில்வோனை நண்ணாதவரின் - நாம் விரும்பவும் நடம்புரிவோனைச் சேராதாரைப்போல (வருந்த),— வாமம் மான் கலை செல்ல நின்றார் இடத்த நம் அல்லல் கண்டால் - அழகுமாட்சிமைப்பட்ட மேகலை கழலும்வண்ணம் (கண்டு தலையளிசெய்யாது) நின்றவர் பெருகிக்கிடந்த நம்மல்லலைக்கண்டால்,— தாமா அறிகிலராயின் - (நம்மாற் றலையளிக்கப்படுவார் இவ்வாறு வருந்துதல் தகாதென்று) தாமாக அறிகின்றிலராயின்,— நாம் சொல்லும் தன்மைகள் என் - நாஞ்சொல்லும் இயல்புகள் என்? எ - று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்தவிளிவரல். பயன் - வரைவு கடாதல்.

அவரான் வருநாணினையும் காணாமையான்வருமாற்றாமையையும் பற்றிக்கிடந்த நம்மல்லலென்றாள். (௨௯௩)

செலவுநினைந்துரைத்தல்.

பாங்கிநெருங்கப் பணிமொழிமொழிந் து
தேங்கமழ்சிலம்பற்குச் சிறைப்புறக்கிள வி.

(எ - து.) (தலைமகன் வரைவுடம்படாமையின்) பாங்கி நெருக்கியவாறு தலைமகள் பணிவைப் புலப்படுத்திய மொழியைச்சொல்லை, அது மணங்கமழ்கின்ற சிலம்பையுடைய தலைமகனுக்குச் சிறைப்புறக் கிளவியாயிற்று.

வல்சியினெண்குவளர்புற்றகழமல்கும்மிருள்வாய்ச்
செல்வரிதன்றுமன்சிற்றம்பலவரைச்சேரலர்போற்
கொல்கரிசீயங்குறுகாவகைபிடிதானிடைச்செல்
கல்லதரென்வந்தவாறென்பவர்ப்பெறிற்கார்மயிலே.

(இ - ள்.) கார் மயிலே - கார்காலத்து மயிலையொப்பாய்! — சிற்றம்பலவரைச் சேரலர்போல் - சிற்றம்பலவரைச் சேராதாரைப்போல (வருந்த), — சீயம் கொல் கரி குறுகா வகை பிடி தான் இடைசெல் கல்லதர் - சிங்கம் கொல்யானையைச் சென்றணையாதவண்ணம் பிடி தானிரண்டற்கும் இடையே சென்று புகும் கல்லதரின்கண், — வந்தவாறு என் என்பவர் பெறின் - நீர் வந்தவாறெங்ஙனேயென்று சொல்லுவாரைப் பெற்றோமாயின், — வல்சியின் எண்கு வளர் புற்று அகழ மல்கும் இருள்வாய் செல்வரிது அன்று - (குரும்பியாகிய) உணவுகாரணமாகக் கரடி யுயர்ந்தபுற்றைத் தோண்ட மிகுந்த விருளின்கண் அவரிருந்தவழிச்சேற லரிதன்று. (சென்றேமாயினு மவ்வாறு சொல்லுவாரில்லை). எ - று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்தவிளிவால்; பயன் - வரைவு கடாதல்.

செல்வரி தென்பது - 'செலவழிக்க' வென்பதுபோல மெய்யீற் றுடம்படுமெய். செல்லவென்பது கடைக்குறைந்துநின்ற தெனினு மமையும். மன் - ஒழியிசைக்கண்வந்தது. கல்லதர் கற்கண்ணதர். கல்லதரினென்பது பாடமாயின் வந்தவாறென்னென ஒருசொல் வருவித்துரைக்க. (உஎச)

பொலிவழிவுரைத்து வரைவுகடாதல்.

வரைவுவிரும்பு மன்னுயிர்ப்பாங்கி
விரைதருகுழலி மெலிவுரைத்தது.

(எ - து.) வரைவுவேண்டிநின்ற நிலைபெற்ற உயிர்போன்ற பாங்கி, மணக்கமழுங் கூந்தலையுடைய தலைமகளது பொலிவழிவு கூறி வரையும்படி யறிவித்தது.

வாரிக்களிற்றின்மருப்புகுமுத்தம்வளைமகளிர்
வேரிக்களிக்கும்விழுமலைநாடவிரிதிரையி
னாரிக்கமர்நன்மாச்சடைமுடிநம்பர்தில்லை
யேரிக்களிக்கருமஞ்ஞையிந்நீர்மையெய்துவதே.

(இ - ள்.) களிற்றின் மருப்பு உகு முத்தம் வளை மகளிர் வேரிக்கு வாரி அளிக்கும் விழு மலைநாட - யானையின் மருப்புக்களினின்றுஞ் சிந்திய முத்துக்களை மலையில்வாழும் மகளிர் மதுவுக்கு (விலையாக) முகந்து கொடுக்குஞ் சிறந்த மலைநாட்டையுடையாய்! — விரி திரையின் நாரிக்கு அளிக்க அமர் நல் மா சடைமுடி நம்பர் தில்லை - விரியுந் திரையையுடைய பெண்ணிற்குக் கொடுத்தற்குப் பொருந்திய நல்ல பெரிய சடைமுடியையுடைய நம்பரது தில்லையின்கணுளதாகிய, — ஏர் இ களி கருமஞ்ஞை - எழுடைய இக்களியையுடைய கரியமஞ்ஞையை யொப்பாள், — இ நீர்மை எய்துவது என் - (தன்றன்மையை விழுத்து) இத்தன்மையை யெய்துவதென்? (நீயுரை) எ - று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த விளிவரல்; பயன் - வரைவு கடாதல்.

மலையையுடைய நாடெனினுமமையும். விரிதிரையினென்பது ஐந்தாம் வேற்றுமை ... வழிச்சாரியை. விரிதிரையையுடைய நாரியெனினு மமையும். நாரிக்களித்தமரென்பது பாடமாயின் நாரிக்களித்தலான் அவளமருஞ்சடையென்றுரைக்க. அனைத்தரிய களிற்றின் மருப்பினின்றுமுக்க முத்தத்தின தருமையைக் கருதாது தமக்கின்பஞ்செய்யும் வேரிக்குக் கொடுத்தாற்போல என்னையாது காவலின்கீழ் நின்வயத்தளாகிய இவளதருமை கருதாது நினக்கின்

பஞ் செய்யுங் களவொழுக்கங் காரணமாக இகழ்ந்து மதித்தா யென வுள்ளுறைகாண்க. (௨௨௫)

வரைவுமுடுக்கம் முற்றிற்று.

வரைபொருட்பிரிதல்.

என்பது, பாங்கியால் வரைவு முடுக்கப்பட்ட தலைமகன் வரைவுடம்பட்டு அதற்குவேண்டிய பொருள்தேடிக்கொண்டுவரப் பிரிந்து செல்லல்.

இக்கிளவி முப்பத்துமூன்று துறைகளையுடைத்து. அவை வருமாறு:—

முலைவிலைகூறல் வரைவுடம்படுத்தல், வரைபொருட்கேகலை யுணர்த்தென்றல், நீகூறென்றல் சொல்லாதேகல், பிரிந்தமை கூறல் வன்சொற்கூறல், நெஞ்சொடுவருந்தல் வருத்தங்கண்டுரைத்தல், வற்புறுத்தல்லொழி வன்புறையழிதல், வாய்மை கூறல் மன்னவன்மெய்யுரை, தேறாதுபுலம்பல் காலமறைத்துரைத்தல், தூதுவரவுரைத்தல் தூதுகண்டழுங்கல், மெலிவு கண்டு செவிலியுரைத்தல், மெலியசெவிலி கட்டுவைப்பித்தல், கலக்குற்றுநிற்றல் கட்டுவித்திகூறல், வேலனையழைத்தல் இன்னலெய்தல், விலக்கநினைத்தல் நிலைமையுரைத்தல், அறத்தொடுநிற்றல் ஐயந்தீர்த்தல், அவன்வெறிவிலக்கல் செவிலிக்குத்தோழி அறத்தொடுநிற்றல் நற்றாய்க்குச்செவிலி, அறத்தொடுநிற்றல் தேர்வரவுரைத்தல், மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல், ஐயுற்றுக்கலங்க லவனிதிகாட்டல், ஆறைந்துடனே கூறியமூன்றும் விளைமலர்க்குழலாய் வரைபொருட்பிரிதல். (௨௨௬)

முலைவிலைகூறல்.

கொலைவேற் கண்ணிக் கு
விலையிலை யென்ற து.

(ஈ-து.) கொலைத்தொழிலையுடைய வேல்போலுங் கண்ணையுடைய தலைமகளுக்கு (ஏழுலகமும்) விலை போதாதென முலைவிலைகூறியது.

குறைவிற்குங்கல்விக்குஞ்செல்விற்குநின்குலத்திற்கும்வந்தோர்
நிறைவிற்குமேதகுநீதிக்குமேற்பினல்லாலினையி
னிறைவிற்குலாவரையேந்திவண்டில்லையனேழ்பொழிலு
முறைவிற்குலாநுதலாள்விலையோமெய்ம்மையோதுநர்க்கே.

(இ - ள்.) குறைவிற்கும் - (வரைவுவேண்டி) நீ எம்மாட்டுக் குறையுடையையாய் நிற்குமதனானும்,—கல்விக்கும் - கல்வி மிகுதியானும்,—செல்விற்கும்- இருமுது குரவரால் கொண்டாடப் படுதலானும்,—நின்குலத்திற்கும் - (தங்குலத்திற்கேற்ற) நின்குலந்தானும்,—வந்தோர் நிறைவிற்கும் - நீவிடுக்க வந்தசான்றோரது நிறைவானும், — மேதகு நீதிக்கும் - மேவுதற்குத்தகு நீதியானும், — ஏற்பின் அல்லால் - (நின்வரவையெமர்) ஏற்றுக்கொள்ளினல்லது (விலை கூறுவாராயின்),—இனையின் - ஆராயுமிடத்து, — மெய்ம்மை ஓதுநர்க்கு - மெய்ம்மை சொல்லுவார்க்கு,— உறைவில் குலாவு நுதலாள் - உறையையுடைய விற்போல் வளைந்த நுதலையுடையாட்கு,—இறை - (எல்லாவற்றிற்கும்) இறைவன்,—வில் குலா வரை ஏந்தி-வில்லாகிய வளைதலையுடைய வரையை யேந்துவான், — வள் தில்லையன் - வளவிய தில்லைக்கண்ணான், — ஏழ்பொழிலும் விலையோ - ஏழுலகமும் விலையாமோ. (விலைக்குறையாம்). ஓ - அ. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - வரைவுகடாதல்.

நிறைவு - அறிவொடுகூடிய வொழுக்கம். நீதி - உள்ளப்பொருத்த முறைவழி மறுத்துக்கொடுத்தல். (௨௨௭)

வருமதுகூறி வரைவுடம்படுத்தல்.

தொடுத்தனவிடுத்துத் தோகைதோளை ய
இடுக்கண்பெரி திரவரினென்ற து.

(எ - து.) (மூலவினைகூறியபாங்கி, தலைமகனைநோக்கி நீ வரைவொவொராது) இராவரின் தோகை தோனைத்தோய்வதால் கெர்ப்பமுண்டாயின் இடுக்கண் பெரிதாம்; ஆகையால் எம்மாற் றொடுக்கப்பட்டனவாகிய பொருள்களை நீ வாவிட்டுத் தலைமகளை வரைவுடம்படுவாயாகவெனக் கூறியது.

வடுத்தனநீள்வகிர்க்கண்ணிவெண்ணித்திலவாணகைக்குத்
தொடுத்தனநீவிடுத்தெய்தத்துணியென்னைத்தன்றொழும்பிற்
படுத்தநன்னீள்கழலீசர்சிற்றம்பலந்தாம்பணியார்க்
கடுத்தனதாம்வரிற்பொல்லாதிரவினின்னாருளே.

(இ - ள்.) என்னை தன் தொழும்பில் படுத்த நல் நீள் கழல ஈசர் சிற்றம்பலம் தாம் பணியார்க்கு அடுத்தனதாம்வரின் என்னைத் தன்னடிமைக்கட் படுவித்த நல்ல நீண்ட கழலையுடைய ஈசரது சிற்றம்பலத்தைத் தாம்பணியாதார்க்குத் தக்கனவாகிய தீதுகள் எனக்கு வரக்கூடுமாயின், — இரவில் நின்னாருள் பொல்லாது - இரவின்கணுண்டாகிய நின்னாருள் (எமக்குப்) பொல்லாது, — வடுத்தன நீள் வகிர் கண்ணி வெண்ணித்திலம் வாள் நகைக்கு தொடுத்தன நீ விடுத்து எய்த் துணி - (அதனான்) மாம்பிஞ்சின் நீண்ட பிளவுபோலுங் கண்ணை யுடையாள்து தூய முத்துப்போலும் ஒளியையுடைய முறுவலுக்கு (எமரால்) தொடுக்கப்பட்டனவாகிய பொருள்களை நீ வாவிட்டு வரைந்தெய்தத் துணிவாயாக. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம் ; பயன் வரைவுகடாதல்.

நீள்வகிர்க் கண்ணியாகிய வெண்ணித்திலவாணகைக்கென்றுரைப்பினு மமையும். படுத்தன நீள்கழலென்பதூஉம் பாடம். சிற்றம்பலந்தாம் பணியார்க்கடுத்தனதாம் வருகையாவது கெர்ப்பம் வருகை. அடுத்தனதாம் வரினென்பதனக்கெரிற்கு நீவ

கடுத்தனதா முளவாமென்று பொருளுரைப்பாருமுளர். அடுத்தன தான்வரினென்பது பாடமாயின் தானென்பது அசைநிலை()

வரைபொருட்பிரிவை யுரையெனக்கூறல்.

ஆங்கவள்வயி னீங்கலுற்றவ ன்
இன்னுயிர்த்தோழிக்கு முன்னிமொழிந் தது.

(எ-து.) (மேல்வருமதுகூறி வரைவுடம்படுத்திய) இனியவுயிர்போலும் பாங்கிக்கு அவ்விடத்தினின்றும் தலைமகளது வரைபொருட்குப் பிரிகின்ற தலைமகன் அவளை யான்வருந்துணையும் ஆற்றிக்கொண் டிருவெனக் கூறியது.

குன்றங்கிடையுங்கடந்துமர்கூறுசிதிகொணர்ந்து
மின்றங்கிடைநும்மையும்வந்துமேவுவனம்பலஞ்சேர்
மன்றங்கிடைமருதேகம்பம்வாஞ்சியமன்னபொன்னைச்
சென்றங்கிடைகொண்டுவாடாவகைசெப்புதேமொழியே.

(இ-ள்.) மின் தங்கு இடை - மின்போலும் இடையையுடையாய்!—குன்றம் கிடையும் கடந்து - இனிக்குன்றக்கிடப்புக்களையுடைய சுரத்தையுங் கடந்துபோய்,—உமர் கூறு சிதி கொணர்ந்து - நுமர்சொல்லு சிதியைத் தேடிக்கொணர்ந்து,— நும்மையும் வந்து மேவுவன் - நும்மையும் வந்து மேவுவேன்,— தேமொழியே - தேமொழியினையுடையாய் !— சென்று அம்பலம் சேர் மன் தங்கு இடைமருது ஏகம்பம் வாஞ்சியம் அன்ன பொன்னை - நீ சென்று அம்பலத்தைச் சேர்ந்தமன்னவன் தங்கும் இடைமருது ஏகம்பம் வாஞ்சியம் ஆகிய இவற்றை யொக்கும் பொன்னை,—இடைகொண்டு வாடாவகை - இடைகொண்டு வாடாதவண்ணம், — அங்கு செப்பு - அவ்விடத்துச் (சொல்லவேண்டுவன) சொல்லுவாயாக. எ - று. மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த பெருமிதம் ; பயன் - வரை பொருட்பிரியுந் தலைமகனாற்றுவித்தல்.

குன்றக்கிடை என்பது - மெலிந்துநின்ற தெளிவுமமையும். தம்வயி னென்பதூஉம்பாடம். என்னைப்பட்டவற்றெடுபடாது அம்பலஞ்சேர் மன்னனெனக் கூறியவதனால், அம்பலமே அவர்க்கிடமாதல் கூறினார். இடைகொண்டெனப்புழி இடை-காலம். ()

நீயேகூறென்றல்.

காய்கதிர்வேலோய் கனங்குழையவட் கு
நீயேயுரை நின்செலவென்ற து.

(எ-து.) (பிரிவறிவிப்பக்கூறின தலைமகனுக்கு) பிறரை வருத்தும் ஒளியையுடைய வேலையுடைய தலைமகனே! கனமாகிய குழையையுடைய தலைமகட்கு நின்போக்கினை நீயே சொல்லென்றது.

கேழ்வரையுமில்லோன்புலியூர்ப்பயில்கிள்ளையன்ன
யாழ்மொழியாளிரவினும்பகற்சேறியென்று
வாழேனெனவிருக்கும்வரிக்கண்ணியைநீவருட்டித்
தாழேனெனவிடைக்கட்சொல்லியேகுதனிவள்ளலே.

(இ-ள்.) தனிவள்ளலே - ஒப்பில்லாத வள்ளலே! — கேழ் ஏவரையும் இல்லோன் புலியூர் பயில் கிள்ளையன்ன யாழ்மொழியாள் - (தனக்கு) உவமையாக யாவரையும் உடையனல்லாதவனது புலியூரின்கண் பயிலுங் கிளியையொக்கும் யாழோசைபோலும் மொழியை யுடையாள், — இரவினும் பகல் சேறி என்று வாழேனென இருக்கும் வரி கண்ணியை - இரவில் (நீ) வரினும் பகற்பிரிந்து செல்வையென்று (நின்னொடு கூடிய வப்பொழுதும் யான்) உயிர்வாழேனென்று நினைத்திருக்கும் வரிக்கண்ணை யுடையாளை, — வருடி தாழேனென இடைக்கண் நீ சொல்லி ஏகு - வசமாக்கி (பெற்றதோர் செவ்வியில்) தாழேனென்னும் உரைமுன்னாக (நின்பிரிவை) நீயேசொல்லி யேகுவாயாக. எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - தலைமகளதாற்றாமையை யுணர்த்துதல்.

புலியூர்ப்பயிலு மொழியாளென வியையும். வாழேனென விருக்கு மென்பதனை முற்றாக்கி மொழியாளிவ்வாறு செய்யும் அவ்வரிக்கண்ணியையென ஒருசுட்டு வருவித்துரைப்பினு மமையும். வருடி - வருட்டியென மிக்குநின்றது. வாழேனென விருக்குமென்றதனான் இத்தன்மைத்தாகிய இவளது பிரிவாற்றாமையை மறவாதொழிய வேண்டுமென்றாளாம். இடைக்கணென்றது இவ்வொழுக்கத்தால் நினக்குவருமேதம் நினைந்து ஆற்றாளாஞ் செவ்விபெற் றென்றவாறு. வடிக்கண்ணியை யென்பதூஉம் பாடம். (உகூக)

சொல்லாதேகல்.

நிரைவளை வா ட
வுரையா தகன்ற து.

(எ-து.) (நீயே கூறென்றபாங்கிக்குத் தலைமகன் நானெவ்வாறு கூறினும் அவள் பிரிவுடம்படாளாதலின் நீ யாற்றிக்கொண் டிருவென்று) நிரையாகிய வளையலையணிந்த தலைமகள்வாட அவளுக்குத் தன் போக்கறிவியாமல் சென்றது.

வருட்டிற்றிகைக்கும்வசிக்கிற்றுளங்குமனமகிழ்ந்து
தெருட்டிற்றெளியலள்செப்பும்வகையில்லைசீருக்கன்
குருட்டிற்புகச்செற்றகோன்புலியூர்குறுகார்மனம்போல்
இருட்டிற்புரிகுழலாட்கெங்ஙனேசொல்லியேகுவனே.

(இ-ள்.) வருடில் திகைக்கும் - (ஒன்று சொல்லக்குறித்துத் தோள்முதலியவற்றைக் கையால்) தடவின் (இஃதென் கருதிச் செய்கின்றானென்று) மயங்காநிற்கும், — வசிக்கில் துளங்கும் - (இன்சொல்லாயினும்) அழுத்திச் சொல்வேனாயின் (அக்குறிப்பறிந்து) உள் நடுங்காநிற்கும், — தெருட்டில் மனம் மகிழ்ந்து தெளியலள் - (இனி) வெளிப்படப் பிரிவுணர்த்தின் மனமகிழ்ந்ததனைத் தேறாள்; — செப்பும் வகை இல்லை - (ஆக.

லான்) அறிவிக்கும் வகை வேறில்லை.—சீர் அருக்கன் குருட்டில் புக செற்ற கோன் புலியூர் குறுகார் மனம்போன்று இருட்டில் புரிகுழலாட்கு எங்ஙனம் சொல்லி ஏகுவன் - அதனால் பெருமைபொருந்திய அருக்கன் குருடாகிய இழிபிறப்பிற் புகும்வண்ணம் (அவனை) வெகுண்ட தலைவனது புலியூரை யணுகாதார்மனம்போன்று இருட்டுதலையுடைய சுருண்ட குழலையுடையாட்கு (என்பிரிவை) எவ்வண்ணஞ் சொல்லிப்போவேன் (ஒருவாற்றானுமரிது). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - வரைவு மாட்சிமைப் படுத்துதற்குப் பிரிதல். (உஎ௦)

பிரிந்தமை கூறல்.

தேங்கமழ் குழலிக்கு ப்
பாங்கி பகர்ந்த து.

(எ - து.) (தலைமகன் முன்னின்று பிரிவுணர்த்த மாட்டாமையின் சொல்லாது பிரியாநிற்ப) மணங் கமழ்கின்ற கூந்தலையுடைய தலைமகளுக்கு (வரைவு காரணமாகத் தலைமகன் பிரிந்தமையானது நமக்கின்பமேயெனப்) பாங்கி அவன்பிரிந்தமை கூறியது.

நல்லாய்நமக்குற்றதென்னென்றுரைக்கேனமர்தொடுத்த
வெல்லாநிதியுமுடன்விடுப்பானிமையோரிறைஞ்சு
மல்லார்கழலழல்வண்ணர்வண்டில்லைதொழார்களெல்லாஞ்
செல்லாவழற்கடமின்றுசென்றார்நஞ்சிறந்தவரே.

(இ - ள்.) நம் சிறந்தவர் - நமக்குச்சிறந்த அவர்,—நமர் தொடுத்த எல்லாநிதியும் உடன் விடுப்பான் - நமராற்றொடுக்கப்பட்ட எல்லா நிதியத்தையுமொருங்கே வரவிடுவான்வேண்டி,—இமையோர் இறைஞ்சும் மல் ஆர் கழல் அழல் வண்ணர் வண் தில்லை தொழார்களெல்லாம் செல்லா அழல் கடம் இன்று சென்றார் - இமையோர் (சென்று) வணங்கும் வளம்பொருந்திய கழலை

யுடைய தீவண்ணரது வளவியதில்லையைத் தொழாதாரெல்லாரும் (நம்போல்வார்) செல்லாத அழலையுடைய சுரத்தை இன்று சென்றார்,— நல்லாய் நமக்குற்றது என் என்று உரைக்கேன் - (அதனால்) நல்லாய்! நமக்கு வந்ததனை யாதென்று சொல்லுவேன். எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - வரைவுநீட்டியாமை யுணர்த்துதல்.

என்னென்றுரைக்கேன் என்றதனான் தொடுத்தது விடுப்பச் சென்றாராகலின் இன்பமென்பேனோ, அழற்கடஞ் சென்றமையாற் றுன்பமென்பேனோவெனப் பொதுப்படக் கூறுவாள் போன்று, வரைவு காரணமாகப் பிரிந்தாராகலின், இது நமக்கின்பமே யென்றுற்றுவித்தாளாம். தொழார்களெல்லார் செல்லா வென்று பாடமோதுவாருமுளர். (உஎக)

நெஞ்சொடு கூறல்.

கல்வரைநாடன் சொல்லாதக ல
மின்னொளிமருங்கு றன்னொளிதளர்ந்த து.

(எ-து.) வரைநாடனாகிய தலைமகன் வரைபொருட்குச் சொல்லாமற்போக மின்னொளிக்கு மிடையையுடைய தலைமகள் அவன் பிரிந்தமை கூறக்கேட்டு வருந்தாநின்றநெஞ்சிற்கு அவன்பிரிந்தமை நாமின்புற்று வாழ்வதற் குபாயமேயெனத் தன்னெஞ்சின் வருத்தந் தீரக்கூறியது.

அருந்தும்விடமணியாமணிகண்டன்மற்றண்டர்க்கெல்லா
மருந்துமமிர்தமுமாகுமுன்னோன்றில்லைவாழ்த்தும்வள்ள
றிருந்துங்கடனெறிசெல்லுமிவ்வாறுசிதைக்குமென்றால்
வருந்தும்மடநெஞ்சமேயென்னையாமினிவாழ்வகையே.

(இ - ள்.) அருந்தும் விடம் அணியாம் மணிகண்டன் - உண்ணப்பட்ட நஞ்சம் நின்று அலங்காரமாய நீலமணிபோலுங் கண்

டத்தையுடையவன்,—அண்டர்க்கெல்லாம் மருந்தும் அமிர்தமுமாகும் முன்னோன் - தேவர்க்கெல்லாம் (உறுதிபயக்கும்) மருந்தும் (இன் சுவையையுடைய) அமிர்தமும் ஆகாநிற்கும் முன்னோன்,—தில்லை வாழ்த்தும் வள்ளல் - அவனது தில்லையை வாழ்த்தும் நம்வள்ளல்,— திருந்தும் கடன் நெறி செல்லும் இ ஆறு சிதைக்கும் என்றால் - குற்றந்தீர்ந்திருக்கும் முறைமையாகிய இந்நெறியைச் செல்கின்ற இந்த நீதி (நம்மைக்) கெடுக்குமென்று (நீ) கருதின்,— வருந்தும் மட நெஞ்சமே யாம் இனி வாழ் வகை யென்ன - வருந்துகின்ற அறிவில்லாத நெஞ்சமே யாமின்புற்று வாழுமுபாயம் வேறு யாது. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீக்குதல்.

அருந்துமென்பது காலமயக்கம். அருந்துதற்றொழில் முடிவதன்முன் நஞ்சங்கண்டத்து நிறுத்தப்பட்டனியாயிற்றாகலின் நிகழ்காலத்தாற் கூறப்பட்டதெனினு மமையும். மற்று - அசை. திருந்துங் கடனெறியைச் செல்லுமென்றும் களவாகிய இவ்வாற்றைச் சிதைக்குமென்றும் முற்றாக அறத்துறைப்பாருமுளர்.()

நெஞ்சொடு வருந்தல்.

வெற்ப னீங்க . ப்
பொற்பு வாடிய து.

(எ-து.) பிரிந்தமை கூறக்கேட்ட தலைமகள் (அன்று என்னைவிட்டு அவரைவிடாது அவரது தேர்ப்பின் சென்ற நெஞ்சம் இன்றுமவ்வாறு செய்யாமல் என்னை வருத்துகின்றதெனத் தன்னெஞ்சொடு) வருந்தியது.

ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தவனேத்த வெழிறிகழுஞ் சீர்ப்பொன்னை வென்ற செறிகழலோன்றில்லைச் சூழ்பொழில்வாய்க், கார்ப்புன்னை பொன்னவிழ் முத்தமணலிற் கலந்தக

ன்றார், தேர்ப்பின்னைச் சென்றவென் னெஞ்சென்கொலாமின்று செய்கின்றதே.

(இ-ள்.) ஏர் பின்னை தோள் முன் மணந்தவன் ஏத்த - அழகையுடைய பின்னையினது தோள்களை முற்காலத்துக் கலந்த மாயோன் (நின்று) துதிக்க,— எழில் திகழும் சீர் பொன்னை வென்ற செறி கழலோன் தில்லை சூழ் பொழில்வாய் - எழில் விளங்குஞ் செம்பொன்னைவென்ற திருவடிகளையுடையவனது தில்லைக்கண் சூழ்ந்த பொழிலிடத்து,—கார் புன்னை பொன் அவிழ் முத்தம் மணலில் கலந்து அகன்றார் - கரிய புன்னை பொன்போலமலராநின்ற முத்துப் போலு மணலையுடைய தோ ரிடத்துக் கூடி நீங்கினவரது,— தேர் பின்னை சென்ற என் நெஞ்சு என்கொலாம் இன்று செய்கின்றது - தேர்ப்பின்சென்ற என் நெஞ்சம் இவ்விடத்தின்று செய்கின்ற தென்னோ? (அறிகின்றிலேன்). எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீக்குதல்.

ஏத்தவெழிறிகழு மெனவியையும். என்னோடும் நில்லாது அவர் தேர்ப்பின்போன நெஞ்சம், இன்றென்னை வருத்துகின்ற விஃதென்னென்று நெஞ்சொடு நொந்து கூறினாளாக வுரைப்பினு மமையும். செறிகழலும் முத்தமணலும் அன்மொழித்தொகை. செய்கின்றதே யென்பது பாடமாயின், அன்றவரைவிடாது சென்றநெஞ்சம் செல்லாது என்னிடத்திருக்கு மென்னைப்போல இன்று செய்கின்றதென்னென்று கூறினாளாக வுரைக்க. (உளங)

வருத்தங்கண்டுரைத்தல்.

அழலுறுகோதையின் விழுமுறுபேதை யைய
நீங்கலொனப் பாங்கிபகர்ந் து.

(எ-து.) நீயிவிட்ட மாலைபோலும் (தன்னெஞ்சொடு) வருந்துகின்ற தலைமகளை (வெற்பர்) விட்டு

நீங்கலராகலின் விரைய வரைவொடு வருவரென (அவள் வருத்தந்தீரப்) பாங்கி கூறியது.

கானமர் குன்றர் செவியுற வாங்கு கணைதுணையா
மானமர் நோக்கியர் நோக்கென மானற் றொடைமடக்கும்
வானமர் வெற்பர்வண் டில்லையின் மன்னை வணங்கலர்போற்
றேனமர் சொல்லிசெல் லார்செல்லல் செல்லல் திருநுதலே.

(இ-ள்.) தேன் அமர் சொல்லி - தேனைப்பொருந்துஞ் சொல்லையுடையாய்,—கான் அமர் குன்றர் செவி உற வாங்கும் கணை - கானின்கணமருங்குன்றவர் செவியுறும்வண்ணம் வலித்த அம்பை,—துணையாம் மான் அமர் நோக்கியர் நோக்கென - (தாம் எய்யக்குறித்தவற்றின் நோக்கும்) தந்துணைவியராகிய மானைப் பொருந்திய நோக்கத்தையுடையவரது நோக்கோடொக்குமென்று கருதி,—மான் நல் தொடை மடக்கும் வான் அமர் வெற்பர் செல்லார் - அம்மானைக்குறித்த நல்ல அம்பைமடக்கும் முகில் தாங்கும்வெற்பர் செல்கின்றாரல்லர்,—வண் தில்லையின் மன்னை வணங்கலர்போல் திருநுதலே செல்லல் செல்லல் - வளவிய தில்லையின் மன்னனை வணங்காதாரைப்போல திருநுதலாய்! இன்னாமையை யடையா தொழிவாய். எ - று. மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம்; பயன் - தலைமகளை யாற்றுவித்தல்.

துணையாமென்பது "ஏவலிளையர்தாய்" என்பதுபோல மக்கமாய் நின்றது. மானமர்நோக்கியர் நோக்கு என்பதனை உறழ்வால் உவமைப்பாற் படுக்க. கொலைத்தொழிலோருந் தந்துணைவியரோ டொப்பனவற்றிற்கும் இடர்செய்யாத வெற்பராதலின், நீ இவ்வாறு வருந்தநீட்டியாரென்பது கருத்து. (௨௭௪)

வழியொழுகி வற்புறுத்தல்.

சூழிருங் கூந்தலைத்
தோழி தெருட்டியது.

(எ - து.) (தலைமகளது வருத்தங்கண்ட) பாங்கி (அவளை வழியொழுகி ஆற்றுவிக்கவேண்டு மாதலின்) ஆற்றாமைக்குக் காரணமானவற்றைக்கூறித் தானு மவளொடு வருத்தமுற்று அவளையாற்றுவித்தது.

மதுமலர்ச் சோலையும் வாய்மையு மன்பு மருவிவெங்கான்
கதுமெனப் போக்கு நிதியி னருக்கு முன்னிக் கலுழ்ந்தா
ளேதுமலர் நோக்க மோர்மூன் றுடையோன் தில்லைநோக்கலர் போ
லிதுமலர்ப் பாவைக்கென் றோவந்த வாறென்ப ரேந்திழையே.

(இ - ள்.) மது மலர் சோலையும் - (அவரை முதலிற் கண்ணுற்ற) மதுமலரையுடைய சோலையையும்,—வாய்மையும் - (அவர் நின்னிற் பிரியேன் பிரியினாற்றேனென்று கூறிய சபதத்தினது) மெய்ம்மையையும், — அன்பும் - (வழிமுறை பெருகிய) அன்பையும்,—மருவி கதுமென வெம் கான் போக்கும் - (நம்மோடு) மருவி வைத்து (பின்) கதுமென வெங்கானிற் போகிய போக்கையும்,—நிதியின் அருக்கும் - போய்த்தேடு நிதியி னருமையும்,—உன்னி கலுழ்ந்தால் - (நீ) நினைந்து வருந்தினால்;—ஏந்திழையே - ஏந்திழாய்!,—ஏதுமலர் - அயலார்,—மலர் பாவைக்கு - மலர்ப் பாவையன்னாட்கு,—நோக்கம் ஓர் மூன்றுடையோன் தில்லை நோக்கலர்போல் - கண்கள் ஒரு மூன்றுடையவனது தில்லையைக்கருதாதார் போல,—இது வந்தவாறு என்றோ என்பர் - இவ்வேறுபாடு வந்தவாறென்னென்றேயென் றையுறுவர். (அதனால் நீ ஆற்றுவாயாக). எ-று. மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம்; பயன் - தலைமகளை யாற்றுவித்தல்.

அன்பு - வழிமுறையாற் சுருங்காது கடிது சுருங்கிற்றென்னுங் கருத்தாற் கதுமெனப் போக்குமென்றான். அருக்குமென்றதனால் நீட்டித்தல் கருதினான். (௨௭௫)

வன்புறை யெதிரழிந்திரங்கல்.

வன்கறைவேலோன் வரைவுநீ டு
வன்புறையழிந்தவன் மனமழுங்கிய து.

(இ-ள்.) வன்மையாகிய கறைதங்கிய வேலையுடைய தலைமகனது வரைவு நீடுதலால் (வழியொழுகி வற்புறுத்தின) பாங்கியொடு தலைமகள் வன்புறை யெதிரழிந்து மனம் வருத்தமுற்றது.

வந்தாய்பவரையில்லாமயின்முட்டையிளையமந்தி
பந்தாடிரும்பொழிற்பல்வரைநாடன்பண்போவினிதே [போற்
கொந்தார்நறுங்கொன்றைக்கூத்தன்றென்றில்லைதொழார்குழுப்
சிந்தாகுலமுற்றுப்பற்றின்றிநையுந்திருவினர்க்கே.

(இ-ள்.) கொந்தார் நறு கொன்றை கூத்தன் தென் தில்லை தொழார் குழு போல் - கொத்தார்ந்த நறுங்கொன்றையையணிந்த கூத்தனது தென்தில்லையை வணங்காதாரது திரள்போல்,—சிந்தாகுலம் உற்று பற்று இன்றி நையும் திருவினர்க்கு - மனக்கலக்கத்தையுற்றுத் தமக்கோர்பற்றுக்கோடின்றிவருந்துந் திருவினையுடையவருக்கு,—வந்து ஆய்பவரை இல்லா மயில் முட்டை இளைய மந்தி பந்தாடும் - சென்று ஆய்வாரையுடைத்தல்லாத மயிலின் முட்டையை இளையமந்தி பந்தாடிவிளையாடும்,—இரு பொழில் பல்வரை நாடன் பண்பு இனிது - பெரிய பொழிலையுடைய மலைநாடுடையவனது இயல்பு இனிது. எ-று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த பெருமிதம்; பயன் - தலைமகளையாற்றுவித்தல்.

நையுந்திருவினர்க்கென்றது - நையுந் தன்மையாயிறந்துபடா திருந்து அவனளிபெற்று தூன்று இன்புறவெய்தும் நல்வினையாட்டியர்க்கென்றவாறு. எனவே, யானது பெறுமாறில்லையென்றுளாம். உற்றதாராய்ந் தோம்புவாரில்லாத மயிலினது

முட்டையால், ஈன்ற வருத்தமறியாத விளமந்தி மயிலின் வருத்தமும் முட்டையின் மென்மையும் பாராது பந்தாடுகின்றாற்போல, காதலரான் வினவப்படாத என்காமத்தை நீ இஃதுற்றறியாமையான் எனது வருத்தமும் காமத்தினது மென்மையும் பாராது இவ்வாறுரைக்கின்றாயென உள்ளுறைவகையாற் பாங்கியை நெருங்கி வன்புறை யெதிரழிந்தவாறு கண்டுகொள்க. அல்லதூஉம் வந்தாய்பவர் பாங்கியாகவும், இளமந்தி தலைவனாகவும், பந்தாடுதல் தலைமகளது வருத்தம் பாராது தான் வேண்டியவாறொழுகுமவனது ஒழுக்கமாகவும், உரைப்பினு மமையும். திருவினர்க்கே யென்பது பாடமாயின் இவ்வாறு வன்கண்மையேனும் வாழுந் திருவையுடையேற்கென வுரைக்க. இதற்குத் திரு - ஆகுபெயர். (௨௭௬)

வாய்மைகூறி வருத்தந்தணித்தல்.

வேற்றடங் கண்ணரி வை
யாற்று வித்த து.

(இ-ள்.) (வரைவுநீடுதலான் வன்புறை யெதிரழிந்து வருந்துகின்ற) வேல்போன்ற விசாலமாகிய கண்களையுடைய தலைமகளுக்குப் பாங்கி அவனது வாய்மைகூறி வருத்தந் தணிவித்தது.

மொய்யென்ப தேயிழை கொண்டவனென்னைத் தன்மொய்
கழற்காட், செய்யென்பதேசெய்த வன்றில்லைச்சூழ்கடற் சேர்
ப்பர்சொல்லும், பொய்யென்பதேகருத் தாயிற்புரிகுழற் பொ
ற்றொடியாய், மெய்யென்பதேது மற்றில்லைகொலா மிவ்விய
விடத்தே.

(இ-ள்.) மொய் என்பு அதே இழை கொண்டவன் - வலிமையையுடைய எலும்பதனையே தனக்கணியாக்கொண்டவன்,—என்னை தன் மொய் கழற்கு ஆள் செய்யென்பதே செய்தவன்-

என்னைத் தன்னுடைய வலிய திருவடிகளுக் காட்செய்யென்று (வெளிப்பட்டுநின்று) சொல்லுதலையே செய்தவன், — தில்லை சூழ்கடல் சேர்ப்பர் சொல்லும் பொய் என்பதே கருத்தாயின் - அவனது தில்லைவரைப்பினுண்டாகிய சூழ்ந்தகடலையுடைத்தாகிய சேர்ப்பையுடையவரது சொல்லும் பொய்யென்பதே (நினக்குக்) கருத்தாயின், — புரிகுழல் பொன் தொடியாய் இவ்வியலிடத்து மெய் என்பது ஏதும் இல்லை கொல் - சுருண்டகுழலையுடைய பொற்றொடியாய்! இவ்வுலகத்து மெய்யென்பது சிறிது மில்லை போலும். எ-று. மெய்ப்பாடு - அழுகையைச் சார்ந்தபெருமிதம்; பயன் - தலைமகளையாற்றுவித்தல்.

அரிமுதலாயினா ரென்பாகலின், மொய்யென் பென்றார். இழிந்தன கைக்கொள்வாராகலின், என்பை யணியாகவும் என்னை யடிமையாகவும் கொண்டானென்பது கருத்து. (௨௭௭)

தேறாது புலம்பல்.

தீதறுகண்ணி தேற்றத்தேறா து
போதுறுகுழலி புலம்பிய து.

(இ-ள்.) (தலைமகனது வாய்மைகூறிக்) குற்றமற்ற கண்ணையுடைய பாங்கி தேற்றப் பூவைமுடித்தகுழலையுடைய தலைமகள் தேறாது புலம்பியது.

மன்செய்தமுன்னாண்மொழிவழியேயன்னவாய்மைகண்டு
மென்செய்தநெஞ்சுநிறையுமில்லாவெனதின்னுயிரும்
பொன்செய்தமேனியன்றில்லையுறாற்பொறையரிதா
முன்செய்ததீங்குகொல்காலத்துநீர்மைகொன்மொய்குழலே.

(இ-ள்.) மொய் குழலே - மொய்த்தகுழலை யுடையாய்! — முன் நாள் மன் செய்த மொழிவழியே அன்ன வாய்மை கண்டும் - முற்காலத்து மன்னன் நமக்குதவிய மொழியின்படியே அத்தன்மைத்தாகிய மெய்ம்மையைக்கண்டுவைத்தும், — நெஞ்

சும் நிறையும் இல்லா என் செய்த - என் நெஞ்சமும் நிறையும் என்வயமாய் நிற்கின்றில, இவை என் செய்தன, — எனது இன் உயிரும் பொன் செய்த மேனியன் தில்லை உறாரின் பொறை அரி தாம் - எனதினியவுயிரும், பொன்னையொத்த மேனியையுடையவனது தில்லையைப் பொருந்தாதாரைப் போல, வருத்தம் பொறுத்த லரிதாகாநின்றது, — முன் செய்த தீங்குகொல் - (இதற்குக்காரணம்) யான்முன்செய்த தீவினையோ? — காலத்து நீர்மை கொல் - (அல்லது) பிரியுங்காலமல்லாத இக்காலத்தினியல்போ (அறிகின்றிலன்). எ-று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - ஆற்றுதல்.

மொழிவழியேகண்டு மெனவியையும். நெஞ்சில்லாமையாவது - நம்மாட்டு அவரதன்பு எத்தன்மைத்தோ வென்றையப் படுதல். நிறையில்லாமையாவது - பொறுத்தலருமையான் அந்நோய் புறத்தார்க்குப் புலனாதல். இல்லாவென்பது பாடமாயின் தனித்தனிக் கூட்டுக. பொன்செய்தவென்புழிச் செய்தவென்பது உவமச்சொல். உயிர் துன்பமுழத்தற்குக் காரணமாதலின், அதனையுந் துன்பமாகநினைந்து இன்னுயிரும் பொறையரிதா மென்றாள். (௨௭௮)

காலமறைத் துரைத்தல்.

காந்தள்கருவுறக் கடவுண்மறைக்கெ ன்
றேந்திழைப்பாங்கி யினிதியம்பிய து.

(இ-ள்.) (தேறாமைகூறிப்புலம்பாநின்ற தலைமகள்) காந்தள் மலரக்கண்டு (இஃதவர்வரவுகுறித்த காலமென்று கலங்காநிற்ப), காலமன்றியுங் கடவுளான் மழைதரப்பட்டது ஆகலான் கலங்க வேண்டாமென்று பாங்கி, காலமறைத்துக் கூறியது.

கருந்தினையோம்பக்கடவுட்பராவிநமர்கலிப்பச்
சொரிந்தனகொண்மூச்சிரந்ததன்பேரருளாற்றொழும்பிற்

பரிந்தெனை யாண்ட சிற்றம்பலத்தான் பரங்குன்றிற் றன்றி
விரிந்தன காந்தள் வெருவரல் காரென வெள்வளையே.

(இ - ள்.) வெள் வளையே - வெண்மையாகிய வளையையுடை யாய்!,—நமர் கரு இனை ஓம்ப கடவுள் பராவி கலிப்ப - நம் ஐயன்மார் கரிய தினையைப்பாதுகாக்கவேண்டிக் கடவுளை வணங்கி ஆரவாரிப்ப,—கொண்மூ சொரிந்தன - (அக்கடவுளாணையால்) மேகங்கள் (காலமன்றியும்) நீரைச்சொரிந்தன,—ஈர்ந்த தன் பேரருளால் என்னை தொழும்பில் பரிந்து ஆண்ட சிற்றம்பலத் தான் பரங்குன்றில் காந்தள் அன்றி விரிந்தன - (அதனைக்காரெ ன்று கருதி) தானே ஈர்ந்த தனது பெரிய அருளாலென்னைத் தன் அடிமைக்கண்ணே கூட்டிப் பரிந்தாண்ட சிற்றம்பலத்தா னது பரங்குன்றின்கண் காந்தள் செருந்தியலர்ந்தன,—காரெ ன வெருவரல் - (அதனால்) நீ காரென அஞ்சவேண்டா. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் ஆற்றுவித்தல். (௨௭௧)

தூதுவரவுரைத்தல்.

ஆங்கொரு தூதுவர ப்
பாங்கிகண் டுரைத்த து.

(எ - து.) (காலமறைத்த) பாங்கி, ஏதிலார் தூது வரக்கண்டு இஃதின்னார் தூதென்று தெரியாதெனத் தலைமகள் மனமகிழ வுரைத்தது.

வென்றவர் முப்புரஞ் சிற்றம்பலத்து நின்றும் வெள்ளிக்
குன்றவர் குன்றா வருடரக் கூடினர் நம்மகன்று
சென்றவர் தூதுகொல் லோவிருந் தேமையுஞ் செல்லல்செப்பா
நின்றவர் தூதுகொல் லோவந்து தோன்றுந் திரைவளையே.

(இ - ள்.) திரை வளையே - திரைவளையையுடையாய்!—வந்து தோன்றும் - (ஒருதூது) வந்துதோன்றாநின்றது.—முப்புரம் வென்றவர் சிற்றம்பலத்துள் நின்றும் வெள்ளி குன்றவர் -

(இத்தூது) முப்புரத்தைவென்றவர், சிற்றம் பலத்தின்கண் நின்றும் வெள்ளிமலையையுடையவர்,—குன்றா அருள் தர கூடி னர் நம் அகன்று சென்றவர் தூதுகொல் - அவரது குறையாத வருள் கொணர்ந்துதர வந்து கூடிப் பின் நம்மைப் பிரிந்து செ ன்றவரது தூதோ?—இருந்தேமையும் செல்லல் செப்பா நின்ற வர் தூது கொல் - (அல்லது) அவர் பிரிய இருந்த நம்மிடத்தும் இன்னாமையைச் சொல்லாநின்ற அயலாருடைய தூதோ? (அறி யேன்). எ - று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த மருட்கை; பயன் - ஐயந்தீர்தல்.

இருந்தேமையென்னு மிரண்டாவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. இரண்டாவதாயே நின்று இன்னாமையைச் சொல் லாநின்றவ ரென்னுந் தொழிற்பெயரோடு முடிந்ததென்பாரு முளர். (௨௮௦)

தூதுகண் டழுங்கல்.

அயலுற்ற தூதுவர க்
கயலுற்ற கண்ணி மயலுற்ற து.

(எ-து.) (தூதுவரக்கேட்ட) கயல்போலுங் கண்ணை யுடைய தலைமகள் (தம்காதலர் தூதன்றி) அயலார் தூதுவரக்கண்டு வருந்தியது.

வருவனசெல்வன தூதுகளேதிலவான்புலியூ
ரொருவனதன்பரின்பக்கலிகருள்ளுருகத்
தருவனசெய்தனதாவிகொண்டேகியென்னெஞ்சிற்றம்மை
யிருவினைகாதலரோதுசெய்யானின்றிருக்கின்றதே.

(இ - ள்.) ஏதில தூதுகள் வருவன செல்வன - அயலாரு டைய தூதுகள் வருவன போவனவா யிருக்கின்றன,—வான் புலியூர் ஒருவனது அன்பரின் - பெருமைபொருந்திய புலியூர்க் கணுளாகிய ஒப்பிலாதவனது அன்பர்களைப்போல,— உள்

ளுருக தருவன இன்பம் கலவிகள் செய்து - (யான்) இன்புறவுள்ளுருகுந் தரப்படுவனவாகிய இன்பக்கலவிகளை (முன்) செய்து,—எனது ஆவி கொண்டேகி - (பின்) என்னுயிரைக் கொண்டுபோய்,—என் நெஞ்சில் தம்மை இருவின காதலர் - என் நெஞ்சத்தின்கண் தம்மை யிருத்தின காதலர்,—இன்று இருக்கின்றது ஏது செய்வான் - இன்று வாளாவிருக்கின்றது ஏது செய்யக்கருதி? எ - று. மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த மருட்கை; பயன் - ஐயந்தீர்தல்.

ஒருவனை தன்பு - ஒருவன்கணன்பு. உள்ளுருகத் தருவன வென்பதற்கு உள்ளுருகும்வண்ணஞ் சிவைந்தைத் தருவனவாகிய கலவி யென்றுரைப்பினு மமையும். தன் மெய்யன்பர்போல யானு மின்புற வுள்ளுருகுங்கலவிகளை முன்செய்து பின்னெனை நாவிபோயினும் போலத் தாம் பிரிந்துபோய் ஒருஞான்றுங் கட்புலனாகாது யானிலைந்து வருந்தச்செய்த காதலர் இன்று ஏது செய்ய விருக்கின்றாரென வேறுமொரு பொருள் தோன்றியவாறு கண்டுகொள்க. (௨௮௧)

மெலிவுகண்டு செவிலிகூறல்.

வண்டமர்புரிகுழ லொண்டொடிமெலி ய
வாட்டாநின்ற கோடாய்கூறிய து.

(எ - து.) வண்டுகளமருங் குழலையும் ஒள்ளிய தொடியையு முடைய தலைமகள் (ஏதிலார் தூதுகண்டு) மனமெலிய, அதனைக்கண்டு வாடிய செவிலி கூறியது.

வேயினமென்றோண்மெலிந்தொளிவாடிவிழிபிறிதாய்ப்
பாயினமேகலைபண்டையளல்லள்பவளச்செவ்வி
யாயினவீசனமரர்க்கமரன்சிற்றம்பலத்தான்
சேயினதாட்சியிற்பட்டனளாமித்திருந்திழையே.

(இ-ள்.) வேய் இன மெல் தோள் மெலிந்து ஒளிவாடி விழி பிறிதாய் பாயின மேகலை பண்டையள் அல்லள் - வேய்க்கிணையாகிய மெல்லியதோள் மெலிந்து, ஒளிமழுங்கி, விழி தன்னியல்பிழந்து வேறாய், பரந்தமேகலையையுடையாள் பழயதன்மையளல்லளாயினள்,—இத்திருந்திழை - (அதனால்) அழகிய ஆபரணத்தையுடைய இவள்,—பவளம் செவ்வியாயின ஈசன் அமரர்க்கு அமரன் சிற்றம்பலத்தான் - பவளம் போன்ற அழகிய திருமேனியையுடைய ஈசன், தேவர்களுக்குத்தேவன், சிற்றம்பலத்தின்கணுள்ளான்,— சேயினது ஆட்சியில் பட்டனளாம் - (அவனது) சேயினது ஆட்சியாகிய இடத்துப் பட்டாள் போலும். எ - று. மெய்ப்பாடு மருட்கை; பயன் - தலைமகட்குற்ற துணர்த்தல்.

செவ்வி - கருகுதலும் வெளுக்குதலு மில்லா நிறம். ஆட்சி - அவனதாணையான் மக்களுக்கணையலாகாதவிடம். (௨௮௨)

கட்டுவைப்பித்தல்.

நால்கொண்ட கட்டு க்
கால் கொண்ட து.

(எ - து.) (மெலிவுகண்டசெவிலி) தலைமகள்கொண்ட நோயைத் தெரியவறிந்து சொல்லுமெனக் கட்டுவித்திக்குணர்த்துக் கட்டு வைப்பியா நின்றது.

சுணங்குற்றகொங்கைகள்சூதற்றிலசொற்றெளிவுற்றில
குணங்குற்றங்கொள்ளும்பருவமுறாள்குறுகாவசுரர்
நிணங்குற்றவேற்சிவன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ
லணங்குற்றநோயறிவுற்றுரையாடுமினன்னையரே.

(இ - ள்.) சுணங்கு உற்ற கொங்கைகள் சூது உற்றில - சுணங்கைப் பொருந்திய கொங்கைகள் சூதின்தன்மையை யுற்றனவில்லை,—சொல் தெளிவு உற்றில - குதலைச் சொற்கள் தெளிவு

பெறவில்லை,—குணம் குற்றம் கொள்ளும் பருவம் உறுள் - நன்மை தீமையறியும் பெதும்பைப்பருவத்தையடையவில்லை; இவளிளமை யிவ்வாறு யிருந்தது.—குறுகா அசுரர் இனம் குற்ற வேல் சிவன் சிற்றம்பலம் நெஞ்சு உறுதவர்போல் - சென்றடையாத அசுரருடைய இனத்தைக்குற்ற சூல வேலையுடைய சிவனது சிற்றம்பலத்தை நெஞ்சில் நினையாதாரைப்போல,—அன்னையரே - அன்னையீர்!—அணங்கு உற்ற நோய் அறிவுற்று உரையாடுமின்-(இப்போது) இவ்வணங்குற்ற நோயைத் தெளியவறிந்து சொல்லுவீராக. எ - று. மெய்ப்பாடு-மருட்கை; பயன் - தலைமகட் குற்றதுணர்த்தல். இளமை கூறிய வதனாற் பிறிதொன்று சிந்திக்கப்பட்டா ளென்பது கூறினுளாம். (உ௮௩)

கலங்கழற்று நிற்றல்.

தெய்வத்திற் றெரியுமெ ன
எவ்வத்தின் மெலிவுற் றது.

(எ - து.) (செவிலிகட்டுவைப்பியாநிற்ப) கட்டுக்குரிய தெய்வத்தினால் யாவுந்தெரியுமென்று பாங்கி, கலங்கமுற்று வருந்தியது.

மாட்டியன்றேயெம்வயிற்பெருநாணினிமாக்குடிமா
சூட்டியன்றேநிற்பதோடியவாறிவளுள்ளமெல்லாங்
காட்டியன்றேநின்றதில்லைத்தொல்லோனைக்கல்லாதவர்போல்
வாட்டியன்றோர்குழலார்மொழியாதனவாய்திறந்தே.

(இ - ள்.) இவள் உள்ளம் ஓடியவாறு எல்லாம் காட்டி - இவள் மனஞ்சென்றவாறு முழுதையும் புலப்படுத்தி,— அன்று நின்ற தில்லைத்தொல்லோனை கல்லாதவர்போல் வாட்டி - அன்றுதொட்டுநின்ற தில்லைக்கணுளனாகிய பழையோனைக் குருமுகத்தா லறியாதவரைப்போல வருந்த (நம்மை) வாட்டி,—ஏர் குழலார் அன்று மொழியாதன வாய்திறந்து-(அவர்தாற்றி) அவ்வழகிய குழலையுடைய அயலவர் அன்று மொழியத்தகாத பழிச்சொற்களையும் வெளிப்படச்சொல்லி,— எம் வயின் பெருநாண் மாட்டியன்றே - (இப்பொழுது) எம்மிடத்துண்டாகிய பெரிய நாணினை மாள்வித்தல்லவே,— மா குடி மாசு ஊட்டியன்றே - (எம்) பெருங்குடியைக் குற்றப்படுத்தியல்லவே,— நிற்பது - (இக்கட்டுவித்தி) நிற்பது,— இனி - இனி (யென் செய்தும்). எ - று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் அறத்தொடுநிற்றற் கொருப்படுத்தல்.

மூன்வித்தற்கண் மூட்டியென நின்றவாறுபோல மாள்வித்தற்கண் மாட்டியென நின்றது. தள்ளியென்னும் பொருள்பட நின்ற தென்பாருமுளர். நிற்பதென்றதனை மூன்னையதோடுங் கூட்டுக. இவளென்றது கட்டுவித்தியை யென்று, இவணிற்பதெனக்கூட்டித் தலைமகள் கூற்றாக வுரைப்பினு மமையும். தில்லைக்கணின்றதான் இத்தானென் றுணரலாகாமையின் அன்றே நின்ற வென்றார். (உ௮௪)

கட்டுவித்திகூறல்.

கட்டு வித் தி
விட் டுரைத்த து.

(எ-து.) (பாங்கி கலக்கமுற்றுநிற்ப, இருவரையும் கன்மையாகக் கட்டுவித்து தெய்வம் முருகனுக்கு காட்ட, இவளுக்கு முருகனல்லாது வேறொன்றுமில்லையெனக்) கட்டுவித்தி நெற்குறி காட்டிக் கூறியது.

குயிலிதன்றேயென்னலாஞ்சொல்லிகூறன்சிற்றம்பலத்தா
னியலிதன்றேயென்னலாகா[illegible]றைவிறற்சேய்கடவு
மயிலிதன்றேகொடிவாரணங்காண்கவன்சூர்தடிந்த
வயிலிதன்றேயிதன்றேநெல்லித்தோன்றுமவன்வடிவே.

(இ - ள்.) இது குயில் [illegible]ன்னலாம் சொல்லி கூறன் - இது குயிலோசையா மென்று சொல்லலாகுஞ் சொல்லையுடைய

வளது கூற்றையுடையான்,— சிற்றம் பலத்தான் - சிற்றம் பலத்தின்க ணுள்ளான்,— இயல் இது அன்று என்னலாகா இறை - அவனது தன்மை இதுவாமென்று கூற முடியாத இறைவன்,— விறல் சேய் கடவும் மயில் இது அன்றே - அவனது வெற்றியையுடைய குமரன் ஊரும் மயிலிதுவல்லவே,— கொடி வாரணம் காண்க - அவன் கொடிக் கணுளதாகிய கோழியையும் எல்லீரும் காண்மின், — வல் சூர் தடிந்த அயில் இதன்றே - அது வேயு மன்றி வலிய சூரனைப் பிளந்தவேல் இதுவல்லவே, (இவை யெல்லாஞ் சொல்லுகின்றதென்),— நெல்லில் தோன்றும் அவன் வடிவு - (இப்பரப்பிய) நெல்லின்கண் வந்துதோன்றுகின்றது அவனதுருவமாம்,— இதன்று - இதுவல்லவே காண்மின் எ-று. மெய்ப்பாடு - பெருமிதம் ; பயன் - தன்கருமமுற்றுதல்.

முருகனெனவே, முருகனாங்கிறளென்று கூறினாளாம். கட்டுவித்தியை வினவ அவளறியாதாள் போல இக்கருமமுடித்தற் பொருட்டு இவ்வுகை சொன்னாள். வரைபொருட்குத் தலைமகன் போக அவன்வரவு நீட்டித்தலான், இவளாற்றாமையா னுண்டாகிய நோயை முருகனால் வந்ததெனக் கூறலாமோ, இஃதங்ஙனமாயின் குறியென்பதனைத்தும் பொய்யேயா மென்னும் வினாவுக்கு விடை, குறியும் பொய்யல்ல இவளும் பொய்சொன்னா ளல்லள், அஃதெங்ஙன மெனின், குறிபார்க்கச் சென்றிருக்கும் பொழுதே தெய்வமுன்னிலையாகக் கொண்டிருத்தலான் அத்தெய்வத்தின் வெளிப்பாட்டானே தலைமகனுடன் புணர்ச்சியுண்மையை யறிந்தாள். இவளிங்ஙனமறிந்தா ளென்பதனை நாமறிந்தவாறு யாதினாலெனின், இக்களவொழுக்கந் தெய்வமிடை நிற்பப் பான்மை வழியோடு நடக்குமொழுக்க மாதலானும் சிற்றம்பலத்தானியல்பு தெரிந்திராதேயென் றிவள் சொல்லுதலானும், அறிந்தாம். இப்படிவரு மொழுக்கம் அகத்தமிழொழுக்க மென்பதனை முதுபெண்டருமறிந்து போதலை யானும், இவளுணாக் கின்றுழி முதுபெண்டனை முகநோக்கியே சிற்றம்பலத்தானியல்

பு தெரியாதென வுரைத்தாள், அவரும் அக்கருத்தேபற்றிய மதனையுணர்ந்தார், இக்கருத்தினால் நாமறியப்பட்டது. இனி அயலாரையுஞ் சுற்றத்தாரையும் நீக்கவேண்டு மாகையானும் இக்களவொழுக்க முடியுமிடத்து வேலனைக் கூவுகையும், வெறித் தொழில்கொள்கையும், அவ்வெறித்தொழிலை அறத்தொடுநின்று விலக்குகையும், அகத்தமிழிலக்கண மாகையின் முருகனாங்கென் றே கூறப்பட்டது.

குறிக்கிலக்கணம்-நெல் மூன்றும் இரண்டும் ஒன்றும் படுகை. அஃதாவது அடியுங்கொடியு முவகையும். எனவே அடி - மயில், கொடி - கோழி, உவகை - வேல், ஆகலான் முருகனாங்கனவே கூறப்பட்டதென வறிக. (௨அ௫)

வேலனை யழைத்தல்.

வெறியாடிய வேலனைக்கூ உ ய்
நெறியார்குழலி தாயர்நின் று து.

(எ - து.) (கட்டுவித்தி முருகனாங்கென்று கூறக் கேட்ட) நெறியார்ந்த கூந்தலையுடைய தலைமகளது தாயர் வெறியாட்டாளனாகிய வேலனை யழைத்தது.

வேலன்புகுந்துவெறியாடுகவெண்மறி யறுக்க
காலன்புகுந்தவியக்கழல்வைத்தெழிற்றில்லைநின்ற
மேலன்புகுந்தென்கணின்றானிருந்தவெண்காடனைய
பாலன்புகுந்திப்பரிசினினிற்பித்தபண்பினுக்கே.

(இ - ள்.) புகுந்த காலன் வீய கழல்வைத்து - (மார்க்கண்டேயரைப் பற்றப்) புகுந்த யமன்வலிகெட வொரு காலைவைத்து,— எழில் தில்லை நின்ற மேலன் - அழகிய தில்லைக்கண் நின்ற எல்லாப் பொருட்கு மேலாயுள்ளவன்,— புகுந்து என்கண் நின்றான் - புகுந்து (அணியனாய்) என்னிடத்து நின்றவன்,— இருந்த வெண்காடு அனைய பாலன் - (அவன்) இருந்

தவெண்காட்டை யொக்கும் இப்பின்னை,—புகுந்து இ பரிசினின் திறப்பித்த பண்பினுக்கு - இக்குடியிற் பிறந்து (வெறியாடு வித்தலாகிய) இம்முறைமைக்கண் திறப்பித்தபண்பால்,— வேலன் புகுந்து வெறியாடுக - வேலன் என்டுப்புகுந்து வெறியாடுவானாக,— வெள் மதி அருக்க - பலியாக வெள்ளிய மதியையும் அறுப்போமாக. எ-று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - தலைமகளது வேறுபாடு நீக்குதல்.

பாலன் பால் மயக்கம். வெறியாடுதலே யன்றி இதுவுந்தகாதென்னுங் கருத்தால் மதியறுக்கவெனப்பிரித்துக் கூறினாம். கழல்வைத் தென்றான் - எளிதாகச் செய்தலான். (௨௮௬)

இன்னலெய்தல்.

ஆடியவெறியிற் கூடுவதறியா து
நன்னுதற்கோதையின்னலெய்திய து.

(எ - து.) (வெறியாடுதற்குத் தாயர் வேலனை யழைப்பக்கேட்ட) நன்மையாகிய நறியமாலையை யுடைய தலைமகள் ஆடிய வெறியாட்டத்திற் கூடுவ தறியாமல் துயரடைந்தது.

அயர்ந்தும்வெறிமறியாவிசெகுத்தும்விளர்ப்பயலார்
பெயர்ந்துமொழியாவிடிலென்னைபேசுவபோர்த்திருவ
ருயர்ந்தும்பணிந்துமுணரானதம்பலமுன்னலரிற்
றுயர்ந்தும்பிறிதின்மொழியென்னுந்துறைவனுக்கே.

(இ-ள்.) வெறி அயர்ந்தும்-வெறியை விரும்பியாடியும்,—மறி ஆவிசெகுத்தும்-மறியினது ஆவியைக்கெடுத்தும்,—பெயர்த்தும் ஒழியாவிடில் - பின்னும் (இவ்வேறுபாடு) ஒழியாதாயின்,— அயலார் பேசுவ என்னை-அயலார் கூறுவன என்னாகும்,—பிறிதின் விளர்ப்பு ஒழியின்-(வெறியாட்டாகிய) பிறிதினால் இவ்விளர்ப்பொழியுமாயின்,—இருவர் பேர்த்து உயர்ந்தும் பணிந்தும் உண

ரானது அம்பலம் உன்னலரின் -(யான்தலைவன் யான் தலைவன் என்று தம்முள் மாறுபட்ட) பிரமனும் திருமாலும் தம் நிலையினின்றும் பெயர்ந்து (தழற்பிழம்பாகிய தன்வடிவையறியலுற்று) ஆகாயத்தின் மேற்சென்றுயர்ந்தும், நிலத்தின் கீழ்புக்குத் தாழ்ந்தும், அறியப்படாதவனது அம்பலத்தை நினையாதவரைப்போல,—துயர்ந்தும் துறைவனுக்கு என்னுதும் - துயர முற்றும் அத்துறைவனுக்கு நாம் என்னுதும்; (இருவாற்றுளும் உயிர்வாழ்தலரிது). எ-று. மெய்ப்பாடு-அச்சத்தைச்சார்ந்த மருட்கை; பயன் - தலைமகள் தன்னெஞ்சொடு சொல்லியாற்றுதல்.

பிறிதுமொழியென்பது பாடமாயின் வெறியினாற் றணியாதாதலின் இந்நோய் பிறிதென்று *பிறர் மொழியினென்றுரைக்க.

(௨௮௭)

வெறிவிலக்குவிக்கநினைதல்.

அயறருவெறியின் மயறருமே ன
விலக்கலுற்ற குலக்கொடிநினைந்த து.

* (எ-து.) அயல்வழியினுல் நமக்கு வருத்தமுண்டாமெனப் (பாங்கியைக்கொண்டு) வெறியாட்டைவிலக்கத் தலைமகள் நினைத்தது.

சென்றார்திருத்தியசெல்லலின்றார்கலிதப்பவொன்று
னென்றுவழுதிதன்றேயிறைதில்லைதொழாரினைந்து
மொன்றுமிவட்குமொழிதலில்லேன்மொழியாதுமுய்யேன்
குன்றூர்துறைவர்க்குமேனுரைப்பனிக்கார்மறையே.

(இ - ள்.) இறை தில்லை தொழாரின் நைந்தும் - இறைவனது தில்லையைத் தொழாதாரைப்போல வருந்தியும்,— ஒன்றும் இவட்கு மொழிதலில்லேன் - (நாணினால்) என்னேடொன்று மிறுக்கும் (எவ்வேதொழியாகிய) இவட்குச் சொல்லமாட்டுகி

லேன், — மொழியாதும் உய்யேன் - சொல்லா திருப்பினும் (வேறோராற்றால்) உயிர் வாழேன், — குன்று ஆர் துறைவர்க்கு உறுவேன் இ சூர் மறை உரைப்பன் - (ஆயினும் இனி) மலைக்குன்றுக ளார்ந்த துறையை யுடையார்க்குச் சிறந்த யான் இம் மிக்கமறையை (இவளுக்குச்) சொல்லுவேன், — சென்றார் திருத்திய செல்லல் நின்றார்கள் சிதைப்பரென்றால் - (புணர்ந்து) போயினர் மிகவு முண்டாக்கிய (இந்) நோயை (இங்கு) நின்றவர்கள் தீர்ப்பாராயின், — நன்று அழகிது - (இது) பெரிது மழகிது. எ - று. மெய்ப்பாடு - இளிவரலைச் சார்ந்த நகை; பயன் - வெறிவிலக்குதற் கொருப்படுதல்.

நன்றுவழகி தன்றே யென்பது குறிப்புநிலை. குன்றார் துறைவர்க்குறுவேனென்றவதனால், நாண் றுறந்தும் மறையுரைத்தற் குக்காரணங் கூறினாளாம். இந்நோயை யேதிலார் சிதைப்பவிடேன், மறையுரைத்தாயினும் வெறிவிலக்குவே னென்னுங் கருத்தால் நன்றுவழகிதன்றே யென்றாள். (௨௮௮)

அறத்தொடுநிற்றலை யுரைத்தல்.

வெறித்தலைவெரீஇ வெருவருதோழிக்
கறத்தொடுநின்ற வாயிழையுரைத்தது.

(எ - து.) (வெறிவிலக்குவிக்கநினைந்த) அறத்தொடுநின்ற ஆய்ந்த அணியையுடைய தலைமகள் வெறியாட்டுக்கு வெருவுகின்ற பாங்கிக்குக் கூறியது.

யாயுந்தெறுகவயலவரேசுகவூர்நகுக
நீயுமுனிகநிகழ்ந்ததுகூறுவலென்னுடைய
வாயுமனமும்பிரியாவிறைதில்லைவாழ்த்துநர்போற்
றூயனினக்குக்கடுஞ்சூடருவன்சுடர்க்குழையே.

(இ - ள்.) சுடர் குழையே - ஒளிபொருந்திய குழையையுடையாய்! — என்னுடைய வாயும் மனமும் பிரியா இறை தில்லை வாழ்த்துநர்போல் தூயன் - எனது வாயையும் மனத்தையும் பிரியாத இறைவனது தில்லையை வாழ்த்துவாரைப் போலத் தூயேன், — நினக்கு கடுஞ்சூள் தருவன் - (நீ தேறாயாயின்) நினக்குக்கடிய ஆணையிடுவேன், — அயலவர் ஏசுக - அயலாரேசுக, — ஊர் நகுக - ஊரார் நகுவதாக, — யாயும் தெறுக - அன்னையும் கோபிப்பாளாக, — நீயும் முனிக - நீயும் வெறுப்பாயாக, — நிகழ்ந்தது கூறுவல் - நிகழ்ந்ததனைச் சொல்லுவேன் (கேட்பாயாக). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன்- அறத்தொடு நிற்றல்.

தூயேனென்றது - நிற்குகரந்தவுள்ளத் தேனல்லே னென்றவாறு. தூயனெனக்கென்பது பாடமாயின், எனக்கியான்றூயே னென்றுரைக்க. (௨௮௯)

அறத்தொடுநிற்றல்.

செய்தவெறியி னெய்துவதறியாது
நிறத்தொடித்தோழிக் கறத்தொடுநின்றது.

(எ - து.) செய்தவெறியாட்டினா லெய்துவதை யறியாமல் நிறமமைந்த தொடியையுடைய பாங்கிக்குத் தலைமகள், (முன் தலைமகன் தனக்குச்செய்த அருட்செய்கையை வெளியிட்டுரைத்து) அறத்தொடுநின்றது.

வண்டலுற்றேமெங்கண்வந்தொருதோன்றல்வரிவளையீ
ருண்டலுற்றேமென்றுநின்றதோர்போழ்துடையான்புலியூர்க்
கொண்டலுற்றேறுங்கடல்வரவெம்முயிர்கொண்டுதந்து
கண்டலுற்றோர்நின்றசேரிச்சென்றானொர்கழலவனே.

(இ - ள்.) வண்டல் உற்றேம் எங்கண் - விளையாட்டைப் பொருந்தினேமாகிய நம்மிடத்து, — ஒரு தோன்றல் வரி வளையீர் உண்டல் உற்றேம் என்று வந்து நின்றதோர் போழ்து - ஒருதோன்றல் வரிவளையுடையீர்! நாம் வண்டல்மனைக்கு (விரு

ர்துன்னைக் கருதினேமென்று சொல்லி வந்துநின்ற அக்காலத்து,—உடையான் புலியூர் கொண்டல் உற்று ஏறும் கடல் வர - உடையானது புலியூர் வரைப்பில் கீழ்காற்று மிகுதலால் கரை மேலே வந்தேறும் கடல் (எம்மேல்) வர,—எம் உயிர் கொண்டு தந்து - அதங்க ளொழுந்தாமல் எம்முயிரைக் கைக்கொண்டு எமக்குத்தந்து,—ஓர் கழலவன் கண்டல் உற்று ஏர் நின்ற சேரி சென்றான் - (அவ்) வொப்பற்ற கழலையுடையவன் தாழை மிக்கு அழகு நின்ற வச்சேரியின்கண் சென்றான். (இனித்தக்கது செய்வாயாக). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - அறத்தொடு நிற்றல்.

வண்டலுற்றே மெங்களென்பது பாடமாயின், அங்களென்பதனை ஏழாம்வேற்றுமைப் பொருள்பட நின்றதோரிடைச் சொல்லாகவுரைக்க. புலியூர்க்கடலென வினையும். தேரிற்சென்றானென்பது பாடமாயின் நம்மைக்காண்டல் விரும்பித் தேர்மேலேறிச் சென்றானென்றுரைக்க. தோன்றல் கழலவன் என்றதனால், அவனது பெருமையும், எம்முயிர்கொண்டு தந்தென்றதனாற் மெய்யுறவுங் கூறினாளாம். (௨௧௰)

ஐயந்தீரக்கூறல்.

விலங்குதல்விரும்பு மேதகுதோ ழி
அலங்கற்குழலிக் கறியவுரைத்த து.

(எ-து.) மாலையையணிந்த கூந்தலை யுடைய தலைமகளுக்குப் பழிவருமென, அதினின்றும் விலக்கு தலைவிரும்பு மேலான பாங்கி, தானவளைப் பாதுகாத்தலை யறியச்சொன்னது.

துடிக்கலர்கூறினுங்கூறுவியன்றில்லைக்கூத்தனதாள்
முடிக்கலராக்குமொய்பூந்துறைவற்குமுரிபுருவ
வடிக்கலர்வேற்கண்ணிவந்தனசென்றுநம்யாயறியும்
படிக்கலராமிவையென்றேமறைக்கும்பரிசுகளே.

(இ-ள்.) முரிபுருவம் வடிக்கு அலர் வேல் கண்ணி - முரிந்த புருவத்தையுடைய வடிவுமிகப் பரந்த வேல்போலுங்கண்ணையுடையாய்!—கூறு வியன் தில்லை கூத்தனதாள் முடிக்கு அலராக்கும் - கூறலாகாத வகன்ற தில்லையிற்கூத்தனுடைய தாளைத் தன்முடிக்குப் பூவாக்கும்,— மொய் பூ துறைவற்கு வந்தன - மொய்த்த பூவையுடைய துறைவனுக்கு வந்தபழிகளை,—சென்று நம் யாய் அறியும் - (அவை) போய்ப் பரந்தவாள் நம்முடையதாயு மறிவள்,— படிக்கு அலராம் - (அன்றியும்) உலகத்திற்கெல்லாம் அலராகும்,— துடிக்கு அலர் கூறினும் - அதனால் நம் குடிக்களர் கூறினேமாயினும்,— இவை மறைக்கும் பரிசுகள் என்றும் - இவற்றை நாம் மறைத்துச் சொல்லும் பரிசுகளென்றோ? எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளை யாற்றுவித்தல்.

கூறுத்தாளென வினையும். வடிவுமிகுதியோடு பிறபண்பாலொக்குமாயினும் பெருமையாலொவ்வாதென்னுங் கருத்தான் வடிக்கலர்கண்ணென்றான், வடித்தவாள் விளக்கும் வெள்ளிலுமையும். அறத்தொடுநிற்கு மிடத்து எம்பெருமாற்குப் பழிபடக்கூறுமோவென் றையுறுந் தலைமகட்கு நங்குடிக்கலர் கூறினுந் துறைவற்குப் பழிபடக் கூறேனென்பதுபடக் கூறித் தோழியறத்தொடு நிற்றலையுடம் படுவித்தவாறு. கூறுவென்பதற்குக் கூத்தனதாள் தனக்குக் கூறாகவென்றும் யாயறியும் படிக்கலராமென்பதற்கு யாயுமறியும்படியாகச் சென்றனவாமென்றுரைப்பாருமுளர். (௨௧௧)

வெறிவிலக்கல்.

அறத்தொடுநின்ற திறத்தினிற்பாங் கி
வெறிவிலக்கிப் பிரிதுரைத்த து.

(எ-து.) (தலைமகளை ஐயந்தீர்த்து) அறத்தொடு நின்றதன்மைத்தாகப் பாங்கி, வெறிவிலக்கிப் (புனலிடையன்றுவந்ததனை)வேலனை நோக்கிக், கூறியது.

விதியுடையாருண்கவேரிவிலக்கலமம்பலத்துப்
பதியுடையான்பரங்குன்றினிற்பாய்புனல்யாமொழுகக்
கதியுடையான்கதிர்த்தோணிற்கவேறுகருதுநின்னின்
மதியுடையார்தெய்வமேயில்லைகொல்லினிவையகத்தே.

(இ-ள்.) விதி உடையார் வேரி உண்க விலக்கலம் - (இவ்வெறி யாட்டு விழவின் மதுவுண்ண) விதியுடையவர் மதுவுண்ணா வமை யும், யாமதனைவிலக்கேம்,— அம்பலத்து பதி உடையான் பரங் குன்றினில் பாய்புனல் யாம் ஒழுக- அம்பலமாகிய பதியையுடை யானது பரங்குன்றினிடத்துப் பரந்த புனலோடே யாமொ ழுக,— கதியுடையான் கதிர் தோள் நிற்க - (எம்மையெடுத்தற் பொருட்டு ஆண்டு) வரவையுடையவனது ஒளிபொருந்திய தோள்கள் நிற்க,— வேறு கருதும் நின்னின் மதியுடையார் - (இந்நோய் தீர்த்தற்கு) வேறோருபாயத்தைக் கருதும் நின்னைப் போலறிவுடையார், — தெய்வமே வையகத்து இனி இல்லை கொல் - தெய்வமே! இவ்வுலகத்து இப்பொழுதில்லை போலும். எ - று. மெய்ப்பாடு - பெருமிதத்தைச்சார்ந்த நகை; பயன் - குறிப்பினால் வெறிவிலக்குதல்.

ஓரிடத்தா னெதுக்கப்படாமையிற் பதியுடையவனென்று சொல்லப்படாதவன் அம்பலத்தின்கண்வந்து பதியுடையனாயி னா னென்பதுபட வுரைப்பினு மமையும். ஒழுகவென்னும் வினை யெச்சம் கதியையுடையா னென்னு மாக்கத்தை யுட்கொண்ட வினைக் குறிப்புப் பெயரோடு முடியும். கதி - ஆண்டுச்சென்ற செலவு. கதிர்த்தோணிற்க வென்பதற்கு எடுத்தற் பொருட்டு அவன்தோள்வந்துநிற்கவென்று பொருளுரைத்து அவ்வெச்சத் திற்கு முடிபாக்கினு மமையும். (௨௧௨)

செவிலிக்குத்தோழி யறத்தொடுநிற்றல்.

சிறப்புடைச் செவிலி க்
கறத்தொடு நின்ற து.

(எ-து.) (வெறிவிலக்கிநிற்ப, நீ வெறிவிலக்குதற் குக் காரணமென்னோவென்று கேட்ட) சிறப்பினை யுடைய செவிலித்தாய்க்குப் பாங்கி, அறத்தொடு நிற்றலைக் கூறியது.

மனக்களியாயின்றியான்மகிழ்தூங்கத்தன்வார்கழல்க
ளெனக்களியாநிற்குமம்பலத்தோனிருந்தண்கயிலைச்
சினக்களியானைகடிந்தாரொருவர்செவ்வாய்ப்பசிய
புனக்கிளியாங்கடியும்வரைச்சாரற்பொருப்பிடத்தே.

(இ - ள்.) மனம் களியாய் இன்று யான் மகிழ்தூங்க - மனக் களிப்புண்டாயின்று யான் மகிழும்வண்ணம்,— எனக்கு தன் வார் கழல்கள் அளியாநிற்கும் அம்பலத்தோன் இரு தண் கயிலை - எனக்குத் தன்னுடைய நீண்ட கழல்களையுடைய திரு வடிகளை யளியாநிற்கும் அம்பலத்தானது பெரிதாகிய குளிர்ச்சி பொருந்திய கயிலையின்கண்,— புனம் செவ்வாய் பசிய கிளி யாம் கடியும் வரைச்சாரல் பொருப்பிடத்து - (எம்) புனத்தின் கண்வருஞ் சிவந்த வாயையுடைய பசிய கிளிகளையாமோட்டும் மலையடியிலுண்டாகிய பொருப்பிடத்தின்கண் (வந்து),— ஒரு வர் சினம் களி யானை கடிந்தார் - ஒருவர் (எம்மேல்வரும்) கோ பத்தையுடைய களியானையைத் துரத்தினார்; (இனி யிப்பது செய்வாயாக). எ - று. மெய்ப்பாடு - பெருமிதத்தைச்சார்ந்த நகை; பயன் - வெளிப்படையா லறத்தொடு நிற்றல்.

கயிலையென்றது - கயிலையையடுத்த விடத்தை. கடியும் பொருப்பென வியையும். வரை - உயர்ந்தவரை. பொருப்பு- பக்கமலை. கிளிகடியும் பருவமென்றதனாற் களவொழுக்கம் பிறர் கொள்ளாமை முதலாயின கூறினாளாம். (௨௧௩)

நற்றாய்க்குச் செவிலியறத்தொடுநிற்றல்.

கற்பினின்வழாமை நிற்பித்தெடுத்தோ ன்
குலக்கொடிதாயர்க் கறத்தொடுநின்ற து.

(எ - து.) (பாங்கி யறத்தொடுநிற்பக்கேட்ட, தம்பி யின்றும் வழுவாம லொழிவுகொளுத்திவளர்த்த செவிலி) நற்றாய்க்கு அறத்தொடு நிற்றலைக் கூறியது.

இளையாளிவளையென்சொல்லிப்பரவுதும்சீரெயிறு
முளையாவளவின்முதுக்குறைந்தாண்முடிசாய்த்திமையோர்
வளையாவழுத்தாவருதிருச்சிற்றம்பலத்துமன்னன்
திளையாவருமருவிக்கயிலைப்பயில்செல்வியையே.

(இ-ள்.) இமையோர் முடி சாய்த்து வளையா வழுத்தாவரும் திருச்சிற்றம்பலத்து மன்னன் - இமையோர் தம்முடியைச் சாய்த்து வணங்கியும் வாழ்த்தியும் வரும் திருச்சிற்றம் பலத் தின்கணுளனாகிய மன்னனது, — திளையாவரும் அருவி கயிலை பயில் செல்வியை - திளைத்துவரும் அருவியையுடைய கயிலைக் கண் பயிலுந்திருவாட்டியை, — இளையாள் இவளை - இளைய ளாகிய இவளை, — என்சொல்லி பரவுதும் - என்சொல்லிப் புகழ்வோம்! — சீர் எயிறு முளையா அளவின் முதுக்குறைந் தாள் - (முன்னெழும்) இரண்டெயிற்கள் முளையாத இளமைக் கண் அறிவு முதிர்ந்தாள். எ - று. மெய்ப்பாடு-உவகை; பயன்-நற்றாய்க்கறத்தொடு நிற்றல்.

நிலைத்தல் - ஈண்டிடைவிடாது அவ்விடத்தேயொழிதல். ()

தேர் வரவுகூறல்.

மணிநெடுந்தேரோன்மணிதிறவின்வருமெ ன
யாழியன்மொழிக்குத் தோழிசொல்லிய து.

(எ-து.) (நற்றாய்க்குச் செவிலி யறத்தொடு நில்லா நிற்ப) மணிகட்டிய நெடியதேரையுடைய தலைமகன் அணித்தாகவருமென யாழினைப்போலு மியலையுடை ய மொழியாளாகிய தலைமகளுக்குப் பாங்கி கூறியது.

கள்ளினமார்த்துண்ணும்வண்கொன்றையோன்றில்லைக்கார்க்க
புள்ளினமார்ப்பப்பொருதிரையார்ப்பப்புலவர்கடம் [டல்வாய்ப்
வள்ளினமார்ப்பமதுகரமார்ப்பவலம்புரியின்
வெள்ளினமார்ப்பவரும்பெருந்தேரின்றுமெல்லியலே.

(இ-ள்.) மெல்லியலே - மெல்லியால்! — கள் இனம் ஆர்த்து உண்ணும் வண் கொன்றையோன் தில்லை கார் கடல்வாய் - தேனை வண்டினங்கள் ஆரவாரித்துண்ணும் வளவிய கொன்றைமாலை யை யுடையவனது தில்லையைச்சார்ந்த கரியகடலிடத்து, — புள் ளினம் ஆர்ப்ப - பறவைக்கூட்டஞ் சத்திக்கவும், — பொருதிரை ஆர்ப்ப - கரையைப்பொரும் திரைகள் சத்திக்கவும், — புலவர் தம் வள் இனம் ஆர்ப்ப - மங்கலங் கூறும் புலவர்களது வள் ளிய கூட்டம் ஆரவாரிக்கவும், — மதுகரம் ஆர்ப்ப - (நறுவி ரையால்) வண்டுகள் சத்திக்கவும், — வலம்புரியின் வெள்இ னம் ஆர்ப்ப - வலம்புரியினது வெள்ளிய இனஞ் சத்திக்கவும், — இன்று பெருந்தேர் வரும் - இன்று (நங்காதலரது) பெருந்தேர் வாரா நின்றது. எ-று. *மெய்ப்பாடு - பெருமிதம்; பயன்-தலைமக ளை யாற்றுவித்தல், வரைவுமலிந்தமையுணர்த்துதலுமாம்.

கள்ளென்பது - வண்டினுளொருசாதி யென்பாருமுளர். புள்ளினத்தையும் பொருதிரையையும் அவன்வரவிற்கு உவந் தார்ப்பனபோலக் கூறினள். இதனை மங்கலமொழிப்பாற்படுத் திக்கொள்க. முன்னர்த் தலைமகன் பிரிந்தகாலத்துத் தலைமகளு டைய ஆற்றாமையைத் தமாற்றுவிக்க மாட்டாது பொறுத்துக்கொண் டிருந்த புள்ளினமுங் கடலும் அவனது தேர்வரவுகண்டு, இனிப் பிரிவும் பிரிவாற்றாமையு மில்லையென்று மகிழ்வுற்றார்த்தன வென்றறிக. (௨௧௫)

மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல்.

இலங்காவலர் கீண்மணத் தி.
னலங்கண்டவர் நயந்துரைத்த து.

(எ-து.) (பாங்கி தலைமகளுக்குத் தேர்வரவு கூறாநிற்ப அந்நிலைமைக்கண்) விலங்காவலியுடைய அரசர் நின்மணத்தின் லைத்தைக்கண்டவர் விரும்பிக் கூறியது.

பூரணபொற்குடம்வைக்கமணிமுத்தம்பொன்பொரித்த
தோரணநீடுகதூரியமார்க்கதொன்மாலயற்குங்
காரணனேரணிகண்ணுதலோன்கடற்றில்லையன்ன
வாரணவும்முலைமன்றலென்றேங்குமணமுரசே.

(இ-ள்.) தொல் மால் அயற்கும் காரணன் - பழையராகிய அரியயனுக்குங் காரணமாயுள்ளான், — ஏர் அணி கண் நுதலோன் - அழகிய நெற்றிக்கண்ணையுடைய நுதலையுடையான், — கடல் தில்லை அன்ன வார் அணவும் முலை - (அவனது) கடலையடுத்த தில்லையை யொக்கும் வாராற்கட்டப்படுமிளவைச் சென்றணவும் முலையையுடையாளது, — மன்றல் என்று மண முரசு ஏங்கும் - மணமென்றுமணமுரசேங்கா நின்றது, — பூரண பொன் குடம் வைக்க - (அதனால் வாயில் கள்தோறும்) நீரால் நிறைக்கப்பட்ட பொற்குடத்தை வைக்க, — மணி முத்தம் பொன் பொரித்த தோரணம் நீடுக - மணியும் முத்தும் பொன்னின் கணழுத்திய தோரணம் (எங்கும்) ஓங்குவதாக, — தூரியம் ஆர்க்க - தூரியங்கள் நின் றார்ப்பனவாக. எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - நகரியலங்கரித்தல். வாரணவுமுலையென்பதற்கு வாரைப்பொருந்து முலையெனினுமமையும். (௨௧௬)

ஐயுற்றுக் கலங்கல்.

நல்லவர்முரசுமற் றல்லவர்முரசென த்
தெரிவரிதெனவரிவைகலங்கிய து.

(எ-து.) நல்லவரது முரசம் அயலவர்முரசம் போல வெற்றோ அறிகின்றிலேனெனத் தலைமகள் கலக்கமடைந்து கூறியது.

அடற்களியாவர்க்குமன்பர்க்களிப்பவன்றுன்பவின்பம்
படக்களியாவண்டறைபொழிற்றில்லைப்பரமன்வெற்பிற்
கடக்களியானைகடிந்தவர்க்கோவன்றிநின்றவர்க்கோ
விடக்களியாநம்விழுநகரார்க்கும்வியன்முரசே.

(இ-ள்.) இடம் களியா நம் விழு நகர் ஆர்க்கும் வியன் முரசு - மிகவுங்களிப்புண்டாய நமது சிறந்த இல்லின்கண் முழங்காநின்ற இப்பெரிய முரசமானது, — துன்பம் இன்பம் பட - (பிறவியான்வரும்) துன்பமு மின்பமுங்கெட, — அடற் களி யாவர்க்கும் அன்பர்க்கு அளிப்பவன் - இயல்பாகிய பேரின்பத்தை யாவராயினு மன்பராயினார்க்கு வரையாது கொடுப்போன், — களியா வண்டு அறை பொழில் தில்லை பரமன் - களித்து வண்டுகளொலிக்கும் பொழிலையுடைய தில்லைக்கணுளனாகிய பரமன், — வெற்பில் கடம் களியானை கடிந்தவர்க்கோ - (அவனது) வெற்பின்கண் மதத்தையுடைய களியானை நம்மேல் வாராமல் மாற்றினவர்க்கோ? — அன்றி நின்றவர்க்கோ - அன்றி யாதும் இயைபில்லாதவர்க்கோ? (அறிகின்றிலேன்) எ-று. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்த மருட்கை; பயன் - ஐயந்தீர்தல்.

அடற்களி - அடுதல்செய்யாத பேரின்பம். அடக்களி யென்பது பாடமாயின், பேரின்பம் யானென்னு முணர்வினைக் கெடுப்பவென் றுரைக்க. (௨௧௭)

நிதிவரவு கூறாநிற்றல்.

மகிழ்தருமனத்தொடு வண்புகழ்த்தோ ழி
திகழ்நிதிமடந்தைக்குத் தெரியவுரைத்த து.

(எ-து.) (முரசொலிகேட்டு ஐயமுற்றுக் கலங்கிய தலைமகளுக்கு) சிறப்புக் காத்தலான் வந்த புகழினையுடைய பாங்கி, மகிழ்ச்சியைத்தரும் மனத்தோடுநின்று

(நமர் வேண்டினபடியே யருங்கலங்கொடுத்து நின்னை வரைந்துகொள்ளத்) தலைவர் குறைவில்லா நிதியைக் கொணர்ந்தாரெனத் தலைமகளுக்கு நிதிவரவு கூறியது.

என்கடைக்கண்ணினும்யான்பிறவேத்தாவகையிரங்கித்
தன்கடைக்கண்வைத்ததண்டில்லைச்சங்கரன்றாழ்கயிலைக்
கொன்கடைக்கண்டரும்யானைகடிந்தார்கொணர்ந்திறுத்தார்
முன்கடைக்கண்ணிதுகாண்வந்துதோன்றுமுழுநிதியே.

(இ - ள்.) கடை என்கண்ணினும் - கடையாகிய என்னிடத்தும்,— யான் பிற ஏத்தா வகை இரங்கி தன் கடைக்கண் வைத்த தண் தில்லைச்சங்கரன் தாழ் கயிலை - யான் பிறதெய்வங்களையேத்தாதவண்ணம் இரங்கித் தனது கடைக்கண்ணை வைத்த குளிர்ச்சிபொருந்திய தில்லைக்கண் உளனாகிய சங்கரன்மேவுங் கயிலையிடத்து,— கொன் கடை கண்தரும் யானை கடிந்தார் - (தமக்கொரு) பயன் கருதாது நமக்கிறுதியைப் பயக்கும் யானையை அன்று கடிந்தவர்,— கடைக்கண் முன் வந்துதோன்றும் முழுநிதி கொணர்ந்து இறுத்தார் - நம்வாயில்முன் வந்துதோன்றுங் குறைவில்லாத நிதிகொணர்ந்து விட்டார்,— இது காண் - இதனைக் காண்பாயாக. எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - ஐயந்தீர்த்தல்.

என்கடைக்கண்ணினு மென்பதற்கு மொழிமாற்று எனது கடையாகிய நிலைமைக்கண்ணு மென்றுரைப்பினு மமையும். கொன்கடைக்கண்டரும் யானையென்பதற்கு, அச்சத்தைக்கடைக்கண்டரும் யானையென் றுரைப்பாருமுளர். வன்புகழ் - அறத்தொடுநின்று கற்புக்காத்தலான் வந்தபுகழ். (௨௬)

வரைபொருட்பிரிதல் முற்றிற்று.

மணஞ்சிறப் புரைத்தல்.

என்பது, வரைந்தபின்னர் மணஞ்சிறப்புக் கூறுகிற்றல்.

இக்கிளவி ஒன்பது துறைகளையுடைத்து. அவை வருமாறு:— மணமுரசுகூறல் மகிழ்ந்துரைத்தலொடு, வழிபாடு கூறல் வாழ்க்கைநலங்கூறல், காதல்கட்டுரைத்தல் கற்பறிவித்தல், கற்புப்பயப்புரைத்தல் காதன்மருவுரைத்தல், கலவியுரைத்தல் கருதியவொன்பது, நலமிகுமணமிசை நாடுங்காலே.

மணமுரசுகூறல்.

வரைவுதோன்ற மகிழ்வுறுதோழி
நிரைவளைக்கு நின்றுரைத்தது.

(எ - து.) வரைபொருட் பிரிந்துவந்தபின்னர் அருங்கலம் விடுத்தற்கு முன்றிற்கணின்று தலைமகனது முரசம் முழங்கக்கேட்டு மகிழ்வுறுகின்ற பாங்கி, நிரையாகத்தொடுத்த வளையலையணிந்த தலைமகட்கு மணமுரசு கூறியது.

பிரசந்திகழும்வரைபுரையானையின்பீடழித்தார்
முரசந்திகழுமுருகியநீங்குமெவர்க்குமுன்று
மரசம்பலத்துநின்றாடும்பிரானருள்பெற்றவரிற்
புரைசந்தமேகலையாய்துயர்தீரப்புகுந்தின்றே.

(இ - ள்.) சந்தம் புரை மேகலையாய் - நிறத்தையுடைய உயர்ந்த மேகலையை யுடையாய்! — எவர்க்கும் முன்றாம் அரசு - (அரியயன் முதலாகிய) யாவர்க்கும் முன்னாயிருக்கும் அரசு,— அம்பலத்து நின்று ஆடும் பிரான் - (இவ்வாறு பெரியனாயினும் எளியனாய்) அம்பலத்தின்கண் (யாவருங்காண) நின்றாடு முதல்வன்,— அருள்பெற்றவரில் துயர்தீர - (அவனது) அருளைப் பெற்றவரைப்போல (நாம்) துயர்தீர,— புகுந்து இன்று -

(நம்மில்லின்கண்) புகுந்து நின்று, — பிரசம் திகழும் வரை புரை யானையின் பீடு அழித்தார் - பெருந்தேன் திகழும் மலை போலும் யானையின் வலியை (நம் காரணமாக) அழித்தவரது, — முரசம் திகழும் - முரசு முழங்கி விளங்காநின்றது, — முருகியம் நீங்கும் - (அதுவேயுமன்றி வெறி காரணமாக வொலிக்கும்) முருகியமும் நீங்காநின்றது. (இனியென்ன குறையுடையேம்) எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - தலைமகளைமகிழ்வித்தல்.

புகுந்துநின்று திகழுமெனக் கூட்டுக. வரையுயர் யானையென் பதூஉம் பாடம். முருகுங் கமழுமென்று பாடமோதி கலியாணத்திற் குறைப்பாம் நறுவிரை நாறுகின்றனவென் றுரைப்பாருமுளர். (௨௯௯)

மகிழ்ந் துரைத்தல்.

மன்னியகழலிற் பொன்னறுங்கோதை யை
நன்னுதற்றோழி தன்னின்மகிழ்ந்த து.

(எ - து.) (மணமுரசொலிகேட்ட) நன்மையாகிய நெற்றியையுடையபாங்கி, விரைபெற்ற கற்பினுஞ் (சிலம்பன் தந்த தழைகளை வாடாமல் வைத்து அவையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளென) அழகிய நறுங் கோதையை யுடைய தலைமகளைத் தன்னின்மகிழ்ந்து கூறியது.

இருந்துதியென்வயிற்கொண்டவன்யானெப்பொழுதுமுன்னு
மருந்துதிசைமுகன்மாற்கரியோன்றில்லைவாழ்த்தினர்போ
லிருந்துதிவண்டனவாலெரிமுன்வலஞ்செய்திடப்பா
லருந்ததிகாணுமளவுஞ்சிலம்பனருந்தழையே.

(இ - ள்.) சிலம்பன் அரும் தழை - சிலம்பன்தந்த பெறு தற்கரிய தழைகளானவை, — முன் எரி வலஞ்செய்து இடப்

பால் அருந்ததி காணுமளவும் - (இப்பொழுது) முன் தீயை வலங்கொண்டு பின்பு (வசிட்டன்) இடப்பக்கத்திற்றோன்றும் அருந்ததியைக்காணுமளவும், — இரும் துதி என்வயின் கொண்டவன் - (அன்பர் துதிப்ப அவர்வயின் றான்கொள்ளும்) பெருந்துதியை என்வயின் உண்டாக்கிக்கொண்டவன், — யான் எப்பொழுதும் உன்னும் மருந்து - யானெப்பொழுதும் உன்னும்வண்ணஞ்சுவையுடைத்தாய தோர்மருந்து (இவ்வாறெனக்கெளியனாயினும்), — திசைமுகன் மாலுக்கு அரியோன் - பிரமவிஷ்ணுக்களுக்கரியவன், — தில்லைவாழ்த்தினர்போல் - (அவனது) தில்லையை வாழ்த்தினரைப்போல, — இருந்து திவண்டன - வாடாதிருந்து விளங்கின. எ - று. மெய்ப்பாடு - உவகை. பயன் - மகிழ்தல்.

ஆல்-அசை. திவண்டனவென்பதற்குவாடாதிருந்து இவளைத் தீண்டி இன்புறுத்தின வென்றுரைப்பினு மமையும். தழைவாடாதிருந்தனவென்றது, முன்னர்த்தான் அவன்தந்த தழையையேற்ற முகூர்த்தத்தைக் கொண்டாடியவாறு. வேயினமென்றே னென்னு மதுதொட்டு இதுகாறும்வரி இப்பாட்டுப் பத்தொன்பதும் அறத்தொடு நிலையியலும், அதன்பின்னர் வரைதலையு றுதலின வென்பது. அகத்திணையின்மிகத்திகழுமின்பக்கலவியின்பக்களவு முற்றிற்று. எண்பத்தொன்றும் பாட்டுமுதல் இப்பாட்டீறாகப் பாங்கியாலாய கூட்டம். (௩௦௦)

வழிபாடு கூறல்.

மணமனைகாண வந்தசெவிலிக்கு த்
துணைமலர்க்குழலி தோழிசொல்லிய து.

(எ - து.) மணஞ்செய்தபின்னர் மணமனையைக் காணவந்த செவிலிக்குப் பாங்கி, தலைமகன் தலைமகள் வழியொழுகாநின்றமை கூறியது.

சீரியலாவியும்யாக்கையுமென்னச்சிறந்தமையாற்
காரியல்வாட்கண்ணியெண்ணகனார்கமலக்கலந்த

வேரியுஞ்சந்தும்வியப்பத்தெனக்கற்பினினிற்பரன்னே
காரியல்கண்டர்வண்டில்லைவணங்குமெங்காவலரே.

(இ - ள்.) அன்னே - அன்னாய்! — காரியல் கண்டர் வண் தில்லை வணங்கும் எம் காவலர் - கார்போலுங்கண்டத்தையுடையவரது வளவிய தில்லையை வணங்கும் எம்முடைய காவலரானவர், — சீர் இயல் ஆவியும் யாக்கையும் என்ன சிறந்தமையால் - சீர்மையியலும் உயிரும் உடம்பும்போல ஒருவரையொருவரின்றியமையாமையால், — கார் இயல் வாள் கண்ணி எல்லார் - கரியவியல்பையுடைய வாள்போலுங் கண்ணையுடையாளது கருத்தைக்கடவார், — கமலம் கலந்த வேரியும் சந்தும் வியல் தந்தென - தாமரைப் பூவைச்சேர்ந்த தேனும் சந்தனமரமும் (இடத்துநிகழ்பொருளு மிடமுமா யியைந்து) தம்பெருமையைப் புலப்படுத்தினாற் போல இயைந்து, — கற்பினில் நிற்பர் - இவளதுவழிபாட்டின் கண்ணே நிற்பர். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்வித்தல்.

காரியல்கண்டர் வண்டில்லை வணங்குமென்றதனான் இவரதில் வாழ்க்கை, இன்றுபோல என்றும் நிகழுமென்பது கூறினளாம். இன்னே யென்பது பாடமாயின் இப்பொழுதே யென்றுரைக்க. எல்லார் என்றதனாற் காதலியாததூஉம் கற்பினிற்ப ரென்றதனால் வாழ்க்கைத் துணையாதலுங் கூறப்பட்டன. ஆவியும் வேரியும் தலைமகட் குவமையாகவும், யாக்கையும் சந்தும் தலைமகற் குவமையாகவு முரைக்க. பிரித்துவமையாக்காது இவரது கூட்டத்திற்கு அவற்றதுகூட்டம் உவமையாக வுரைப்பினு மமையும். (௩௦௧)

வாழ்க்கை நலங்கூறல்.

மணமனைச்சென்று மகிழ்தருசெவிலி
அணிமனைக்கிழத்திக் கதன்சிறப்புரைத்தது.

(எ - து.) மணமனைக்கண்டு மகிழ்ந்தசெவிலி, நற்றாய்க்கு வாழ்க்கை நலங்கூறியது.

தொண்டினமேவுஞ்சுடர்க்கழலோன்றில்லைத்தொன்னகரிற்
கண்டினமேவியினியவனின்கொழுநன்செழுமென்
றண்டினமேவுந்திணைத்தோளவள்யானவன்றற்பணிவோன்
வண்டினமேவுங்குழலாளயன்மன்னுமிவ்வயலே.

(இ - ள்.) தொண்டு இனம் மேவும் சுடர்க்கழலோன் தில்லை தொல் நகரில் - தொண்டாகிய இனத்தைப் பொருந்தும் ஒளியையுடையகழலையணிந்தவனது தில்லையாகிய பழையநகரிடத்து, — கண்ட இல் மேவும் நம் இல் - (யான்) கண்ட (அவளது) இல்லம் மேம்பட்ட நமதில்லத்தோடொக்கும், — அவள் நீ - அவள் நின்னோடொக்கும், — தண்டு இனம் மேவு செழு மென் திணை தோளவன் நின் கொழுநன் - தண்டாகிய இனத்தையொக்கும் வளவிய மென்மையாகிய திண்ணிய தோளையுடையான் நின் கொழுநனோடொக்கும், — அவன்தன் பணிவோன் யான் - அவனைப் பணிந்து குற்றேவல் செய்வாள் என்னோடொக்கும், — வண்டு இனம் மேவும் குழலாள் அயல் இ அயலே - வண்டினம் பொருந்துங் குழலையுடையாளது அயல் இவ்வயலோடொக்கும் (வேறுசொல்லாவதில்லை). எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்வித்தல்.

கண்டவென்பது கடைக்குறைந்து நின்றது. பெண்மைக்கு ஊதினீற்றல்நோக்கித் தோளிற்கு மென்மைகூறினாள். தண்டினமென்புழி இனமென்றது சாதியை. மற்றும் - அசைநிலை. பெரும்பான்மையு மென்பதுபட நின்றதெனினுமமையும். கண்டென்பதனைத் தன்மைவினையென்று, அவ்வில்வாழ்க்கையோ கண்டேனென முன் போதவகையாற்கூறிப் பின் இரப்புவகையாற் கூறிற்றாக வுரைப்பாருமுளர். (௩௦௨)

காதல்கட் டுரைத்தல்.

சோதி வேலவ ன்
காதல் கட்டுரைத் தது.

(எ - து.) (அவனதில்வாழ்க்கை நலங்கேட்க) செவிலி, அவன் அவள்மேல்வைத்த காதன்மிகுதியைக் கட்டுரைத்தது.

பொட்டணியா னுதல்போயிறும் பொய்போலிடையெனப்பூ
ணிட்டணியான் றவிசின்மலரன்றி மிதிப்பக்கொடான்
மட்டணிவார்குழல்வையான்மலர்வண்டுறுதலஞ்சிக்
கட்டணிவார்சடையோன் றில்லைபோலிதன் காதலனே.

(இ - ள்.) கட்டு அணி வார் சடையோன் தில்லைபோலிதன் காதலன் - (முருட்டாகக்) கட்டப்பட்ட வழகிய நீண்ட சடையையுடையவனது தில்லையையொப்பாளுடைய காதலன், — பொய்போல் இடைபோய் இறும் என பூண் இட்டு அணியான் - பொய்போலும் இடைபோயிறுமென்று கருதி ஆபரணத்தைப் பூட்டியணியான், — தவிசில் மலரன்றி மிதிப்பக்கொடான் - மெல்லடிநோதல் அஞ்சி பஞ்சணையில் மிதிப்பதூஉம் மலரினன்றி மிதிப்பவிடான், — வண்டு உறுதல் அஞ்சி மட்டு அணி வார் குழல் மலர் வையான் - வண்டுற்று மொய்த்தல் அஞ்சித் தேனையுடைய அழகிய நீண்டகூந்தலிடத்து மலர்களை வையான், — நுதல் பொட்டு அணியான் - (இவைசொல்லுகின்றதென் பொறையாமென்று) நெற்றியின்கண் பொட்டையும் இடான். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்தல்.

கட்டணிவார் சடை - மிக்க வழகையுடைய சடையெனினு மமையும். தவிசின் மிசையென்று பாடமோதுவாருமுளர். ([illegible])

கற்பறி வித்தல்.

விற்பொலி நுத லி
கற்பறி வித்த து.

(எ-து.) (தலைமகனது காதன்மிகுதியைக்கூறிய செவிலி) வில்லைப்போலும் விளங்கும் நெற்றியை யுடைய தலைமகளது கற்பினை யறிவித்தது.

தெய்வம்பணிகழலோன்றில்லைச்சிற்றம்பலமனையா
டெய்வம்பணிந்தறியாளென்றுநின்றுதிறைவழங்காத்
தெவ்வம்பணியச்சென்றுமன்வந்தன்றிச்சேர்ந்தறியான்
பவ்வம்பணிமணியன்னார்பரிசின்னபான்மைகளே.

(இ - ள்.) தெய்வம் பணிகழலோன் தில்லை சிற்றம்பலம் அனையாள் - (பிறரான் வழிபடத்தக்க) தெய்வங்கள் வணங்குந் திருவடிகளை யுடையவனது திருச்சிற்றம்பலத்தை யொப்பாள், — என்றும் தெய்வம் பணிந்து அறியாள் - எஞ்ஞான்றும் வேறொரு தெய்வத்தைப் பணிந்தறியாள், — நின்று திறை வழங்கா தெவ்வம் பணிய சென்றும் மன் வந்தன்றி சேர்ந்து அறியான் - முன்னின்று திறைகொடாத பகைவர் வந்து பணியும் வண்ணம் (வினைவயத்தாற்) சென்றாலும், அம்மன்னவன் (அவளது இல்லத்து) வந்தல்லது அன்புடன் தங்கி யறியான், — பவ்வம் பணி மணி அன்னார் பரிசு இன்ன பான்மைகள் - சமுத்திரத்தக்க மணிபோலப் (பெருங்குலத்துப்பிறந்து) தூயோரதியல்பு இன்னமுறைமைகளை யுடையன. எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்தல்.

தெவ்வு - தெவ்வமெனா விரிக்கின்றது. தெவ்வம்பணிய - தெவ்வர் அம்பையணிய வென்றும், பவ்வம்பணிமணி - கடலிடத்தும் பாம்பிடத்து முளவாகிய முத்தும், மாணிக்கமு மென்று உரைப்பாருமுளர். (௧0௪)

கற்புப் பயப்புரைத்தல்.

கற்புப் பயக் த
அற்பத முரைத்த து.

(எ - து.) (கற்புமிகுத்தசெவிலி) படிகடக்குங் கற்புடைய வள்ளாம் எடுத்துக்கொண்டவினையை யிடையூறின்றி இனிது முடித்ததைச்சொன்னது.

சிறப்பிற்றிகழ்தருதிண்மதிற்றில்லைச்சிற்றம்பலத்துப்
பொற்பத்தியன்னசடையவன்பூவணமன்னபொன்னின்
கற்பத்திவாய்வடமீனுங்கடக்கும்படிகடந்து
இற்பத்திவாயன்றிவைகல்செல்லாதவளிர்க்கனிதே.

(இ - ள்.) சிறப்பிற் றிகழ்தரு திண்மதில் *தில்லைச்சிற்றம்பலத்துப் பொன் பத்தி அன்ன சடையவன் - சிறப்பொடு விளங்கும் திண்ணியமதிலையுடைய தில்லைச்சிற்றம்பலத்தின்கணுளனாகிய, பொற்றகட்டு நிரைபோலுஞ் சடையை யுடையவனது,—பூவணம் அன்ன பொன்னின் கற்பு அத்திவாய் வடமீனுங் கடக்கும் - பூவணத்தையொக்கும் பொன்னையொப்பாளது கற்பானது அத்திக்காலத்துளதாகிய வடமீனையும் வெல்லும்,—அவள் ஊர் களிறு படி கடக்கும் இல் பத்திவாயன்றி வைகல் செல்லாது - (அதனுள், எடுத்துக்கொண்ட வினையை இடையூறின்றி இனிது முடித்து) அவனூரும் (மதத்தான்) களிய யானை நிலத்தைக்கடக்கும் இல்லின்கண் தன்பக்கமிடத்தல்லது தங்காது.—எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்தல்.

பொற்பத்தியன்ன சடையென்பதற்கு அழகிய அத்திவானம் போலுஞ் சடையென்பாருமுளர். அத்திக்காலத்துக் கற்புடை மகளிரால் தொழப்படுதலின், அத்திவாய் வடமீனென்றான். ()

மருவுதலுரைத்தல்.

இருவர் காதலு ஞ்
மருவுத லுரைத்த து.

(எ-து.) (கற்புப் பயப்புரைத்த செவிலி) இருவர் காதலும் மருவுதலைக் கூறியது.

மன்னவன்றெம்முனைமேற்செல்லுமாயினுமாலரியே
றன்னவன்றேர்புறத்தல்கல்செல்லாதுவரகுணனாந்
தென்னவனேத்துசிற்றம்பலத்தான்மற்றைத்தேவர்க்கெல்லா
முன்னவன்மூவலன்னாளுமற்றோர்தெய்வமுன்னலளே.

(இ - ள்.) மன்னவன் தெம் முனைமேல் செல்லுமாயினும் - மன்னவனது பகைமுனைமேல் ஏவப்பட்டுப் போமாயினும்,—மால் அரி ஏறு அன்னவன் தேர்புறத்து அல்கல் செல்லாது - பெரிய ஆண்சிங்கத்தையொப்பான் ஏறுந்தேர் (தன்னிலையினல்லது) புறத்துத் தங்காது,—வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான் - வரகுணபாண்டியனாலேத்தப்படுஞ் சிற்றம்பலத்தின்கணுள்ளான்,—மற்றைத் தேவர்க்கெல்லாம் முன்னவன் - மற்றெல்லாத் தேவர்களுக்கும் முன்னேயுள்ளான்,—மூவல் அன்னாளும் மற்றோர் தெய்வம் முன்னலள் - (அவனது) மூவலையொப்பாளும் வேறொரு தெய்வத்தைத் தெய்வமாகக் கருதாள். எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்தல். ()

மற்றைத் தேவர்கட்கு மென்பதூஉம் பாடம். மூவல் - திருப்பதி.

கலவியின்பங் கூறல்.

கன்னு தன்மடந்தை தன்னல மன்ன ௭
மகிழ்ந்துக் குளத்தோ டுரைகூறிய து.

(எ-து.) (இருவர்காதலு மருவுதல்கூறிய செவிலி) கன்னுதலையுடைய தலைமகளது வாழ்க்கை நலங்கண்டு மகிழ்ச்சிதங்கிய உள்ளத்துடன் சொல்லியது.

அனைத்தவெள்ளத்தழுந்துமொராருயிர்குருக்கொள
உடனைத்தவெள்ளத்திடைத்திளைத்தாலொக்குமம்பலத்தே
நானைத்தவெள்ளத்தழைகழுகோனருள்பெற்றவரி
ருனைத்தவெள்ளம்வற்றுதமுறைநுதிவ்வணிகலமே.

(இ - ள்.) ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஓர் ஆருயிர் - (இருவரது காதலும் களிப்பும்) இன்பவெள்ளத்திடை யழுந்தப் புகுகின்ற தோருயிர்,—ஈர் உரு கொண்டு ஆனந்த வெள்ளத்திடை திளைத்தால் ஒக்கும் - இரண்டுடம்பைக்கொண்டு அவ் வின்பவெள்ளத்தில் அழுந்தியனுபவித்ததனோ டொக்கும், — அம்பலம் சேர் ஆனந்த வெள்ளத்து அறைகழலோன் அருள் பெற்றவரின் - (அன்றியும்) அம்பலத்தைச் சேர்ந்த இன்ப வெள்ளத்தைச்செய்யும் ஒலிக்குங் கழலையுடையவனது அருளைப் பெற்றவரின் (இன்பம்போல),—ஆனந்தவெள்ளம் வற்றாது-இவ் வின்பவெள்ளமு மொருகாலுங் குறைவுபடாது, — இ அம் கலம் முற்றாது-இவ்வணிகலமும் முதிராது. எ-று. மெய்ப்பாடு உவகை; பயன் - மகிழ்தல். (௩0௭)

மணஞ்சிறப்புரைத்தல் முற்றிற்று.

ஓதற்பிரிவு.

என்பது, வரைந்துகொண்ட பின்னர்த் தலைமகனுக்கு முதற் பிரிவு * ஓதலாதலாற் கல்வியின் மிகுதிகூறி நீங்காநிற்றல்.

இக்கிளவி நான்கு துறைகளை யுடைத்து. அவை வருமாறு:—

கல்விநலங்கூறல் பிரிவுநினைவுரைத்தல், கலக்கங்கண்டுரைத் தல் காதலர் தமது, வாய்மொழிகூறல் வருவனநான்கும், நிலை யில்கல்வி தேருங்காலே.

கல்விநலங்கூறல்.

கல்விக்ககல்வர் செல்வத்தவரென
செறிகுழற்பாங்கிக் கறிவறிவித்தது.

(எ - து.) இல்வாழ்க்கைச்செல்வத்தவர் ஓதற் ககல்வரென இயற்கைமணந்தங்கிய கூந்தலையுடைய பாங்கிக்கு அறியப்படுவதனை யறிவித்தது.

சீரளவில்லாத்திகழ்தருகல்விச்செம்பொன்வரையி
னாரளவில்லாவளவுசென்றாரம்பலத்துநின்ற
வோரளவில்லாவொருவனிருங்கழலுன்னினர்போ
லேரளவில்லாவளவினராகுவரேந்திழையே.

(இ - ள்.) ஏந்திழையே - ஏந்திழாய்!— சீர் அளவில்லா திகழ்தரு கல்வி செம்பொன் வரையின் ஆர் அளவில்லா அளவு சென்றார் - நன்மைக்களவில்லாத விளங்குங்கல்வியாகிய மேருக் குன்றத்தினது மிக்க அளவில்லாத எல்லையையடைந்தவர்கள், — அம்பலத்துள் நின்ற ஓர் அளவில்லா ஒருவன் இரு கழல் உன்னினர்போல் - அம்பலத்தின்கணின்ற ஓரளவையுமில் லாத ஒப்பில்லாதவனது பெரியதிருவடிகளையறிந்து நினைந்தவ ரைப்போல,—ஏர் அளவில்லா அளவினர் ஆகுவர் - நன்மைக் கெல்லையில்லாததன்மையராவர். எ-று. மெய்ப்பாடு - பெருமி தம்; பயன் - பிரிவுணர்த்தல்.

ஆய்மையும் பெருமையுங் கலங்காமையு முடைமையால் செம்பொன் வரையென்றான். கற்றதின்மேலுங் கற்கநினைக்கின் றானாதலான், ஆரளவில்லாவளவு சென்றாரென்றான். ஆரளவு - காதலும் புகையு முதலாயின அளவு. ஓரளவு - காட்சியும் அனு மானமு முதலாயின அளவு. (௩0௮)

பிரிவுநினைவுரைத்தல்.

கல்விக்ககல்வர் செல்வத்தவரெனப்
பூங்குழன்மடந்தைக்குப் பாங்கிபகர்ந்தது.

(எ - து.) (கல்விநலங்கூறக்கேட்ட) பாங்கி, இல் வாழ்க்கைச் செல்வத்தையுடையதலைவர் ஓதற்ககல்வ ரெனப் பூங்குழலையுடைய தலைமகட்குக் கூறியது.

* "ஓதல்காவல் பகைதணிவினையே, வேந்தற்குற்றுழி பொ ருட்பிணிபரத்தையென், றன்னவாறே யவ்வயிற் பிரிவே".

வீதலுற்றார்தலைமாலையன்றில்லைமிக்கோன்கழற்கே
காதலுற்றார்நன்மைகல்விசெல்வீதருமென்பதுகொண்
டேதலுற்றாருற்றுணர்தலுற்றார்செல்லன்மல்லழற்கான்
போதலுற்றார்நின்புணர்முலையுற்றபுரவலரே.

(இ - ள்.) செல்வீ - செல்வீ! — வீதல் உற்றார் தலை மாலை யன் தில்லைமிக்கோன் - கெடுதலையடைந்தவர் தலைமாலையையுடையவன் தில்லைக்கணுளனாகிய பெரியோன், — கழற்கே காதலுற்றார் நன்மை - (அவனது) திருவடிக்கே யன்புற்றவரது நன்மையை, — கல்வி தருமென்பது கொண்டு - கல்வி தருமென்பதனைக்கருதி, — நின் புணர்முலை உற்ற புரவலர் - நினது புணர் முலையைச் சேர்ந்த காவலர், — ஏதலுற்றார் உற்று உணர்தல் உற்று - ஓதுதலான்மிக்காரை யடைந்து (எல்லா நூல்களையும்) உணர்தலுற்று, — செல்லல் ஆர் மல் அழல் கான்போதல் உற்றார் - இன்னாமையைச் செய்யும் மிக்கவழலையுடைய கானகத்தைப் போக நினைத்தார். எ-று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த வெகுளிதம்; பயன் - பிரிவுணர்த்துதல்.

ஓத்தான் உயர்ந்தாரைக்கிடைத்து அவரோடுசாவித் தமது கல்வி மிகுதியை யறியலுற்றாரென் றுரைப்பாருமுளர். நின் புணர்முலையுற்ற வென்றதனான் முலையிடத்துத் தயிலையினைத் நீட்டியாது வருவரென்றும், புரவலரென்றதனான் நின்னைத் தெளியாமற் காப்பரென்றுங் கூறிப் பிரிவுடம்படுத்தாளாம்.

கலக்கங்கண் டுரைத்தல்.

ஓதற்ககல்வர் மேதக்கவரென ப்
பூங்கொடிகலக்கம் பாங்கிகண்டுரைத்த து.

(எ-து.) மேதாவியாகியதலைவர்ஓதற்ககல்வரென உரைப்பக்கேட்ட பூங்கொடிபோல்வாளாகிய தலைமகளது கலக்கங்கண்டு பாங்கி தன்னுட்கூறியது.

கற்பாமதிற்றில்லைச்சிற்றம்பலமதுகாதற்செய்த
விற்பாவிலங்கலெங்கோனைவிரும்பலர்போலவன்பர்
சொற்பாவிரும்பினரென்னமெல்லோதிசெவிப்புறத்துக்
கொற்பாவிலங்கிலைவேல்குளித்தாங்குக்குறுகியதே.

(இ - ள்.) கல் பா மதில் தில்லை சிற்றம்பலம் அது காதல் செய்த - கல்லாற்செய்யப்பட்ட பரந்த மதிலையுடைய தில்லையின்கண் - சிற்றம்பல மதனைக்காதலித்த, — வில் பா விலங்கல் எம் கோனை விரும்பலர் போல் - வில்லாகச் செய்யப்பட்ட பரந்தமலையை யுடைய எம்முடைய இறைவனை விரும்பாதாரைப் போல, — அன்பர் சொல்பா விரும்பினர் என்ன - நம் மன்பர் சொல்லா னியன்றபாவாகிய நூல்களைக்கற்க விரும்பினா ரென்று சொல்ல,— மெல் ஓதி செவிப்புறத்து - (அச்சொல்) மெல்லிய கூந்தலை யுடையாளது செவியின்,— கொல் பா இலங்கு இலை வேல் குளித்தாங்கு குறுகியது - கொல்லுந் தொழில் பரந்த பிரகாசிக்கின்ற இலைபோன்ற வேல் சென்று மூழ்கினாற் போலச்சென்றெய்திற்று. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - செலவழுங்குவித்தல்.

பொருப்பு வில்லிமேல் விருப்புடையார் கல்விக்கடலிலே யிருந்தாலமையின் விரும்பலர்போலச் சொற்பா விரும்பினரென்றாள். பூங்கொடி கலக்கம் பாங்கி தன்னுள்ளே சொல்லியது தலைமகற்குக் கூறியதென் றுரைப்பாருமுளர். (௧௯௦)

வாய்மொழிகூறித் தலைமகள்வருந்தல்.

நீகற்கல்விக்குச் செல்வன்செல்லுமென ப்
போதுறுகுழலி புலம்பியது.

(எ - து.) (கலக்கங்கண்டுரைத்த பாங்கி,) குற்ற மற்ற கல்விக்குத் தலைமகன் செல்வதாகச்சொல்ல மனமுடித்த கூந்தலையுடைய தலைமகள் கூறியது.

பிரியாமையுமுயிரொன்றாவதும்பிரியிற்பெரிதும்
தரியாமையுமொருங்கேநின்றுசாற்றினர்தையன்மெய்யிற்
பிரியாமைசெய்துநின்றோன்றில்லைப்பேரியலூரரன்ன
புரியாமையுமிதுவேயினியென்னும்புகல்வதுவே.

(இ - ள்.) தையல் மெய்யில் பிரியாமை செய்து நின்றோன் தில்லை - மாதேவியைத் தனது திருமேனியி னின்றும் பிரியாமையைச் செய்து நின்றவனது தில்லையில்,—பேர் இயல் ஊரர் - பெருந் தன்மையை யுடைய ஊரர்,—பிரியாமையும் - நம்மிற் பிரியாமையையும்,— உயிர் ஒன்றாவதும் - நம்மிருவருக்கும் உயிர் ஒன்றாதலையும்,—பிரியில் பெரிதும் தரியாமையும் - பிரியின் பெரிது மாற்றாமையையும்,—ஒருங்கே நின்று சாற்றினர் - ஒருங்கே (அக்காலத்து) நம்முன் னின்று கூறினவர்,—அன்ன புரியாமையும் இதுவே - இப்பொழுது (அவற்றுள் பிரிவுகண்டமையின் அது நீங்க) மற்றவை செய்யாமையும் இதுபோலவே செய்ததோ டொக்கும்,— இனி நாம் புகல்வது என் - (ஆதலான்) இனி நாம் சொல்லுவது என். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - செலவுழுங்குவித்தல்.

தையல்மெய்யிற்பிரியாத பெருமானுடைய தில்லைக்கட்டாயினும் அன்புபெருகு பிரிதல் எங்ஙனம் வல்லராயினரென்னுங் கருத்தால் பிரியாமைசெய்து நின்றோன்றில்லைப் பேரியலூரரென்றாள். பிரிவுகாணப்பட்டமையின் அன்னவென்றது ஒழிந்த இரண்டுமேயாம். அன்னபுரியாமையு மிதுவேயென்பதற்கு பிரிவுமுதலாகிய நமக்கின்னாதவற்றைத் தாம் செய்யாமையு மிதுவேயாயிருந்ததெனினு மமையும். இன்னல்புரியாமையு மிதுவேயென்று பாடமோதுவாருமுளர். (௩௧௪)

ஓதற்பிரிவு முற்றிற்று.

காவற்பிரிவு.

என்பது, எல்லாவுயிர்களையும் அரசன் பாதுகாக்கவேண்டுந் தருமநூல்விதியான் அக்காவற்குப் பிரிதல்.

இக்கிளவி இரண்டு துறைகளை யுடைத்து. அவை வருமாறு:—

பிரிவறிவித்தல் பிரிவுகேட்டிரங்கல், வருபவையிரண்டும் வையக்காவல்.

பிரிவறிவித்தல்.

இருநிலங்காவற் கேகுவர்நமரெனப்
பொருசுடர்வேலோன் போக்கறிவித்தது.

(எ - து.) தலைமகன் உலகத்தைப் பாதுகாப்பான் பிரியக் கருதுகின்றானைப் பாங்கி, போர்செய்கின்ற சுடர்வேலையுடைய தலைமகனது போக்கைத் தலைமகட் கறிவித்தது.

மூப்பானிளையவன்முன்னவன்பின்னவன்முப்புரங்கள்
வீப்பான்வியன்றில்லையானருளால்விரிநீருலகங்
காப்பான்பிரியக்கருதுகின்றார்நமர்கார்க்கயற்கட்
பூப்பானல்வென்றிரும்புரிதாழ்குழற்பூங்கொடியே.

(இ-ள்.) கார் கயல் கண் பால்பூ நலம் ஒன்றும் புரிதாழ் குழல் பூங்கொடியே - கரிய கயலையொக்குங் கண்ணினையும், பூவின் பகுதியாகிய நறு நாற்றத்தால் விளக்குஞ் சுருண்ட தாழ்ந்த குழலினையு முடைய பூங்கொடியை யொப்பாய்,!—மூப்பான் - (எல்லார்க்கும்) மூத்தவன்,— இளையவன் - என்றும் இளையவன்,— முன்னவன் - உலகிற்கு முன்னுள்ளவன்,— பின்னவன் - அதற்குப் பின்னு முள்ளவன்,— முப்புரங்கள் வீப்பான் - மூன்று புரங்களையு மழிப்பவன்,—வியன் தில்லையான் - அகன்ற தில்லையின்க ணுள்ளவன்,—அருளால் நமர் விரிநீர் உலகம் காப்பான் பிரிய கருதுகின்றார் - (அவனது) அருளால் நம்மவர் சமுத்திரத்

இறைச் சூழப்பட்ட வுலகத்தைக் காக்கவேண்டிப் பிரியக் கருது கின்றார். எ - று. மெய்ப்பாடு - அழுகையைச் சார்ந்த பெருமிதம்; பயன் - காவற்குப் பிரியும் பிரிவுணர்த்துதல்.

தில்லையா னருளாவது - எல்லாவுயிர்களையு மரசன் காக்க வென்னுந் தருமநூல்விதி. காத்தலாவது - தன்வினைசெய்வாரானுங் கள்வாரானும் பகைவரானும் உயிர்கட்கு வருமச்சத்தை நீக்குதல். தில்லையானருளா லென்பதற்கு அவனருளா லுலகத்தைக் காக்குந் தன்மையை யெய்தினானாதலின் அக்காவற்குப் பிரிகின்றானென் றுரைப்பினு மமையும். (௩௪௨)

பிரிவுகேட் டிரங்கல்.

மன்னவன்பிரிவு நன்னுதலறிந் து
பழங்கணெய்தி யழுங்கல்சென்ற து.

(எ-து.) தலைமகனது பிரிவினைத் தலைமகளறிந்து துன்பமடைந் திரங்காநின்றது.

சிறுகட்பெருக்கைத்திண்கோட்டுக்குழைசெவிச்செம்முகமா
தெறுகட்டழியமுன்னுய்யச்செய்தோர்கருப்புச்சிலையோ
னுறுகட்டழலுடையோனுறையம்பலமுன்னலரின்
அறுகட்புரிகுழலாயிதுவோவின்றடுக்கின்றதே.

(இ - ள்.) கள் துறு புரி குழலாய் - பூவிற் றேனையுடைத்தாய் நெருங்கிய சுருண்ட குழலை யுடையாய்!—சிறு கண் பெருங் கை திண் கோடு குழை செவி செம் முகம் மா - சிறிய கண்ணினையும் பெரிய கையினையுந் திண்ணிய கோட்டினையுங் குழைந்த செவியினையும் சிவந்த முகத்தினையுமுடைய யானையினது தெறு கட்டு அழிய முன் உய்யச் செய்தோர் - வருத்தும் வலியைக் கெடக் (சூரவாற் பாதுகாக்கப் பட்டு) முற்காலத்து நம்மை யுய்வித்தவர்,— கருப்பு சிலையோன் உறு கண் தழல் உடையோன் உறை அம்பலம் உன்னலரின் - கருப்பு வில்லையுடைய

மன்மதனைக் காய்ந்த கண்ணிற் றீயையுடையவ னுறையும் அம்பலத்தை நினையாதவரைப்போல,—இன்று சூழ்கின்றது இதுவோ - (கண்ணோட்டமின்றித் தம்மல்லது இல்லாத) இக்காலத்து நினைக்கின்ற திதுவோ (இதுதகுமோ). எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - செலவழுங்குவித்தல்.

அக்காலம் - சூரவாற் காக்கப்பட்ட காலம்; இக்காலம் இவனையன்றி வேறு காவலரில்லாத காலம். தெறுகட்டழியமுன்னுய்யச்செய்தோரென்பது பாடமாயின் தெறுகின்றவிடத்துத் தழுவி முன்னம்மை யுய்வித்தவரென்றுரைக்க. கருப்புச்சிலை யோ னென்பதனை எழுவாயாக்கியுரைப்பினு மமையும். (௩௪௩)

காவற்பிரிவு முற்றிற்று.

பகைதணிவினைப்பிரிவு.

என்பது, தம்மிற்பகைத்த வேந்தரைப் பகையைத்தணித்து இருவரையும் பொருந்தப்பண்ணுதல்.

இக்கிளவி இரண்டு துறைகளை யுடைத்து. அவை வருமாறு:—

பிரிவுகூறல் வருத்தந்தணித்தல், இருபகைதணித்தற் கேக லென்ப.

பிரிவு கூறல்.

துன்னுபகைதணிப்ப மன்னவன்பிரி வு
நன்னுதற்கோதைக்கு முன்னிமொழிந்த து.

(எ-து.) (தம்முட்பகைத்த இருவேந்தரது) நெருங்கிய பகையைத் தணிக்கத் தலைமகன் பிரியாநின்றமை (பாங்கி) நல்லவாசனை பொருந்திய கூந்தலை யுடைய தலைமகட்குக் கூறியது.

பகைதணித்தற்கரிதாமிருவேந்தர்வெம்போரிடைந்து
பகைதணித்தற்குப்படர்தலுற்றார்நமர்பல்பிறவித்[பொழில்வாய்
தொகைதணித்தற்கென்னையாண்டுகொண்டோன்றில்லைச்சூழ்
முகைதணித்தற்கரிதாம்புரிதாழ்கருமொய்குழலே.

(இ - ள்.) பல் பிறவி தொகை தணித்தற்கு என்னை ஆண்
கொண்டோன் - பல பிறவித் தொகையான் வருந் துன்பத்
தைத் தணித்தற்கே யென்னை யடிமை கொண்டவனது, —
தில்லை சூழ் பொழில்வாய் முகை தணித்தற்கு அரிதாம் - தில்லை
க்கண் சூழ்ந்த பொழிலிடத் துளவாகிய போதுகளான் மாற்று
தற் கரிதாம் (நறுநாற்றத்தை யுடைய), — புரி தாழ்தரு மொய்
குழலே - சுருண்ட தாழ்ந்த நெருங்கிய கூந்தலை யுடையாய், —
மிகை தணித்தற்கு அரிதாம் - ஒருவருள்ளமிகுதியை யொரு
வர் தணித்தற் கரிதாகா நின்ற, — இரு வேந்தர் வெம் போரி
மிடைந்த பகை தணித்தற்கு - இரு வேந்தரது வெய்ய போர்
நெருங்கிய பகையை மாற்றுதற்கு, — நமர் படர் தலுற்றார் - நம்
மவர் போக நினைந்தார். எ - று. மெய்ப்பாடு - அழுகையைச்
சார்ந்த பெருமிதம்; பயன் - பகைதணிவினை யிடைப்பிரி வுணர்த்
துதல்.

மிகைதணித்தற் கரிதாம்பகையென வியையும். எளிதிற்சமைத்
து செய்வித்துக் கடிதின்மீள்வரென்பது பயப்ப, மிகைதணித்
தற்கரிதாம் இருவேந்த ரென்றதனுல் ஒத்தவலியின ராதலும்
வெம்போர்மிடைந்த வென்றதனுல் ஒத்ததொலைவின ராதலும்
கூறினாம். (௩௧௪

.வருத்தந்தணித்தல்.

மணிப்பூண்மன்னவன் றணப்பதில் லை
அஞ்சல்பொய்யென வஞ்சியைத்தணித் தது.

(எ - து.) பாங்கி, தலைமகனது பிரிவுகேட்டு வருந்
தாநின்ற கொடிபோல்வாளாகிய தலைமகட்கு மணிப்
பூணையணிந்த தலைமகன் உன்னைவிட்டுப் பிரிவதில்லை,
அவர்போக்குப் பொய், நீ அஞ்சவேண்டாமென அவ
ள்வருத்தந் தணித்தது.

நெருப்புறுவெண்ணெயுநீருறுமுப்புமெனவிங்ஙனே
பொருப்புறுதோகைபுலம்புறல்பொய்யன்பர்போக்குமிக்க
விருப்புறுவோரைவிண்ணோரின்மிகுத்துமன்னோர்கழியத்
திருப்புருவத்திறைன்றில்லைபோலுந்திருநுதலே.

(இ - ள்.) மிக்க விருப்பு உறுவோரை - (தன்னிடத்து) மிகு
ந்தவன்புடையவரை, — விண்ணோரின் மிகுத்து - தேவரினு
மிகச்செய்து, — மன்னார் கழிய - பகைவர் மாய, — திருப்புரு
வத்திறைவன் தில்லை போலும் திரு நுதலே - விதிர்க்கப்படுந்
தூலவேலை யுடையவனது தில்லை போலு மழகிய நுதலை யுடை
யாய்! — பொருப்பு உறு தோகை - பொருப்பைச் சேர்ந்த
மயில்போல்வாய்! — நெருப்பு உறும் வெண்ணெயும் நீர் உறும்
உப்பும் என - தீயையுற்ற வெண்ணெயும் நீரையுற்ற வுப்பும்
போல, — இங்ஙன் புலம்புறல் - இவ்வாறு வருந்தா தொழி, —
அன்பர் போக்கு பொய் - அன்பர் நின்னை விட்டுப் பிரிந்த தெ
னல் பொய். எ - று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைம
கனை யாற்றுவித்தல்.
(௩௧௫)

பகைதணி வினைப்பிரிவு முற்றிற்று.

வேந்தற்குற்றுழிப்பிரிவு.

என்பது, ஒருவேந்தனுக் கொருவேந்தன் றொலைந்துவந்
தடைந்தால் அவனுக்குதவி செய்யப்பிரியாநிற்றல்.

இஃதெவ்வப்ப இருது துறைகளையுடைத்து. அவை வருமாறு:—

பிரிந்தமைகூறல் பிரிவாற்றாமை, கார்மிசைவைத்தல் காலை
நோக்கி, வருந்தியுரைத்தல் மலர்க்குழலிவை, கூதிர்கண்டுகவ
றல் குளிர்முன்பனிக்கவன், கொந்துகூறல் நோக்கிப்பின்பனிக்

இரங்கியுரைத்த லிளவேனில்கண்டவள், இன்னலெய்தல்இது
வவர்குறித்த, பருவமாமெனு வரவுகூறல், பருவமறைத்துரைத்
தல் மறுத்துரைத்தல்லொடு, தேர்வரவுகூறல் வினைமுற்றிநினை
தல், நிலைமைநினைந்துரைத்தன் முகிலொடுகூறல், வரவெடுத்து
ரைத்தல் மறவாமைகூறல், மற்றிவையீரெட்டு முற்றுழிப்பிரி
வாம்.

பிரிந்தமைகூறல்.

விறல்வேந்தர் வெம்முனைக்க ட
டிறல்வேந்தர் செல்வதொன்ற து.

(எ - து.) பாங்கி, வெற்றியையுடைய தலைமகன் வெய்யபோரையுடைய பாசறைக்கண் செல்வதனைத் தலைமகட் கறிவித்தது.

போதுகுலாயபுனைமுடிவேந்தர்தம்போர்முனைமேன்
மாதுகுலாயமென்னோக்கிசென்றார்நமர்வன்புலியூர்க்
காதுகுலாயகுழையெழிலோனைக்கருதலர்போ
லேதுகொலாய்விளைகின்றதின்றொன்னாரிடுமதிலே.

(இ - ள்.) மாதுகுலாய மென்னோக்கி - மடமை பொருந்திய அழகு பெற்ற மெல்லிய நோக்கத்தை யுடையாய்!—போதுகுலாய புனை முடி வேந்தர்தம் போர் முனைமேல் - பூவழகு பெற்ற புனைந்த முடியையுடைய அரசரது போரையுடைய பாசறைமேல்,—நமர் சென்றார் - நம்மவர் சென்றனர்,— வன் புலியூர் காது குலாய குழை எழிலோனைக் கருதலர்போல் - வளப்பத்தையுடைய புலியூரில் காதழகு பெற்ற குழையா னுண்டாகிய அழகையுடையவனை நினையா தாரைப்போல,— ஒன்னாரிடு மதில்-பகைவரா லிடப்பட்ட மதில்,—இன்று ஏதாய் விளைகின்றது - இன்று யாதாய் முடியுமோ. எ-று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த பெருமிதம் ; பயன் - வேந்தற் குற்றுழிப் பிரிவுணர்த்துதல்.

வினைமுடித்துக்கடிது மீள்வரென்பது பயப்ப ஒன்னாரிடுமதி லின்றே யழியுமென்று கூறினாளாம். சென்றானைத் துணிவு பற்றி இறந்தகாலத்தாற் கூறினள். கொல் - அசை. (௩௪௬)

பிரிவாற்றாமை கார்மிசைவைத்தல்.

வேந்தற்குற்றுழி விறலோன்பிரி ய
ஏந்திழைபாங்கிக் கெடுத்துரைத்த து.

(எ - து.) ஓர் வேந்தனுக்கு நேர்ந்த துன்பத்தை நோக்கித் தலைமகன்பிரியத் தலைமகள், பாங்கிக்கெடுத்துச் சொன்னது.

பொன்னிவனைத்தபுனல்சூழ்நிலவிப்பொலிபுலியூர்
வன்னிவனைத்தவளர்சடையோனைவணங்கலர்போற்
றுன்னிவனைத்தநந்தோன்றற்குப்பாசறைதோன்றுங்கொலோ
மின்னிவனைத்துவிரிநீர்பருகும்வியன்முகிலே.

(இ - ள்.) பொன்னி வனைந்த புனல் சூழ் நிலவி பொலி புலியூர் - காவேரி நதி சுற்றுதலா னுண்டாகிய நீராற் சூழப்பட்ட நிலைபெற்றுப் பொலிகின்ற புலியூரின்,—வன்னி வனைந்த - வன்னித் தளிராற் சூழப்பட்ட,— வளர் சடையோனை வணங்கலர் போல் - நீண்ட சடையை யுடையவனை வணங்காதாரைப் போல,—துன்னி வனைந்த நந் தோன்றற்கு - பகைவரைத் திட்டுவனைந்த நம்முடைய தோன்றலுக்கு,—மின்னி வனைந்து விரி நீர் பருகும் வியன் முகில் - மின்னி வளைந்துப் பரந்த கடலைப் பருகும் இப்பெரிய மேகம்,—பாசறை தோன்றுங் கொலோ - பாசறைக் கண்ணே சென்று தோன்றுமோ. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றுவித்தல்.

வனைந்தவென விரிநீர்மேலேற்றிவுரைமையும். தோன்றுமாயின் அவர் ஆற்றாரவரென யானுற்றே றுகின்றேனென்பது கருத்து. பொன்னிவனைந்த புனலென்பதற்குப் பொன்னியாற் றகையப்பட்ட புனலென்றும், வன்னிவனைந்த வென்பதற்குத் தீயை வனைந்தாற்போலுஞ் சடையென்றுமுரைப்பாருமுளர். (௩௪௭)

வானோக்கி வருந்தல்.

மானோக்கி வடிவுநினைந்தோ ன்
வானோக்கி வருந்திய து.

(இ - து.) உற்றுழிப்பிரிந்தபின், மான்போலும் பார்வையுடைய தலைமகளது வடிவத்தை நினைந்த தலைமகன் வானைநோக்கி வருந்தியது.

கோலித் திகழ்சிறகொன்றினொடுக்கிப் பெடைக்குருகு
பாலித்திரும்பனிபார்ப்பொடுசேவல்பயிலிரவின்
மாலித்தனையறியாமறையோனுறையம்பலமே
போலித்திருநுதலாட்கென்னதாங்கொலென்போதரவே.

(இ - ள்.) சேவல் பார்ப்பொடு பெடைக்குருகு திகழ் சிறகு ஒன்றின் கோலி ஒடுக்கி பாலித்து இரும் பனி பயில் இரவின் - சேவலானது தன் குஞ்சுகளோடு பெட்டைக் குருகை விளங்குகின்ற தன் சிறகொன்றினாற் கோலியொடுக்கிப் பாதுகாத்து மிக்க பனியால் வருந்து மிரவின்கண், — மால் இத்தனை அறியா மறையோன் உறை அம்பலம் போல் - திருமால் சிறிது மறியாத அந்தணன் வசிக்கும் அம்பலத்தைப் போல், — இ திருநுதலாட்கு - இவ்வழகிய நெற்றியை யுடையாளுக்கு, — என் போதரவு என்னதாங்கொல் - எனது போக்கு எத்தன்மையதாகுமோ. எ-று. மெய்ப்பாடு-அச்சம்; பயன் - மீளற் கொருப்படுதல்.

இரவினென்னதா மெனவியையும். போலித்திருநுதலாட்கு அம்பலம்போலு மித்திருநுதலாட்கென் றுரைப்பினு மமையும் இத்திருநுதலா ளென்றான் தன்னெஞ்சத்தளாகலின். (௩௧௭)

௬. நீர்கண் டேவுறல்.

இருங்கடந் தெதிர்வுகண் டு
கருங்குழலி கவலையுற்ற து.

(இ - து.) பெரியகடற்றிரட்பருவம் வருவதுகண்டு தலைமகள் கவலையடைந்தது.

கருப்பினமேவும்பொழிற்றில்லைமன்னன்கண்ணாரருளால்
விருப்பினமேவச்சென்றார்க்குஞ்சென்றன்றுங்கொல்வீழ்பனிவாய்
நெருப்பினமேநெடுமாலெழிற்றோன்றச்சென்றாங்குநின்ற [ய்
பொருப்பினமேறித்தமியரைப்பார்க்கும்புயலினமே.

(இ - ள்.) வீழ் பனிவாய் - வீழ்கின்ற பனியிடத்து, — நெருப்பு இனம் மேவ - எல்லோரும் நெருப்புத் திரளை விரும்ப, — நெடு மால் எழில் தோன்ற சென்று - நெடிய மாயவனது அழகு கண்டார்க்குப் புலப்படும்படிச் சென்று, — ஆங்கு நின்ற பொருப்பினம் ஏறி தமியரை பார்க்கும் புயலினம் - அவ்விடத்து நின்ற மலைத்திரளை யேறித் துணையில்லா தவரைத் தேடும் மேகக்கூட்டங்கள், — கருப்பு இனம் மேவும் பொழில் தில்லை மன்னன் கண் ஆர் அருளால் - கரும்புத்திரள் பொருந்தும் பொழிலையுடைய தில்லையின் மன்னவன் கண்ணுநிறைந்த மிக்க வருளான், — விருப்பு இனம் மேவ சென்றார்க்கும் - விருப்பையுடைய தம்மினம் (தம்மா லுதவி பெற்றுய்) பொருந்தும் வண்ணஞ் சென்றவர்க்கும், — சென்று அன்றுங்கொல் - சென்று தங்குமோ. எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - தோழியை யாற்றுவித்தல்.

நெருப்பினமே யென்பதனைப் புயலின்மேலேற்றி இடிநெருப் பென்றும், சென்றென்பதனை மேலேற்றி உயர்ந்தென்றும் உரைப்பினு மமையும். (௩௧௮)

முன்பனிக்கு நொந்துரைத்தல்.

ஆன்றபனிக் காற்றுதழீஇ நு
ஈன்றவளை யேழைநொந்த து.

(இ - து.) தலைமகன் மிகுத்த பனிக்காற்றுதவுற்று நித் தன் தாயொடுநொந்து கூறுகின்றது.

கூற்றின்வீழ்பனிக் காக்கத் துவண்டு துயர்கவென்று
பெற்றவளேயெனைப் பெற்றாள்பெடைசிறகானொடுக்கிப்
புற்றில்வாளரவன் றில்லைப்புள்ளுந் தம்பிள்ளைதழீஇ
மற்றினஞ்சூழ்ந் துயில்பெறுமிம்மயங்கிருளே.

(இ - ள்.) புற்றில் வாள் அரவன் தில்லை புள்ளும் - புற்றை யுடைய வல்லாத ஒளிபொருந்திய பாம்பை யணிந்தவனது தில்லையின்கணுள்ள பறவைகளும்,—பெடை சிறகான் ஒடுக்கி தம்பிள்ளைதழீஇ இனம் சூழ்ந்து துயில் பெறும் இமயங்கு இருள்-பெட்டையைச் சிறகா லொடுக்கித் தமது பிள்ளைகளையுந் தழுவி யினஞ் சூழ்ந்து நித்திரைசெய்யப் பெறுகின்ற இச்செறிந்த விருளின்கண்,— கூற்றின் வீழ்பனி தாங்க் துவண்டு துயர்க என்று - (மெனிபெய்கருங்) கூற்றைப் பெய்கின்ற பனி யிடையுழந்து பெய்ய அதனுல் துவண்டு துயர்வாயாக வென் று,—எனை பெற்றவளே பெற்றாள் - என்னை யீன்றவளே சன் ருள், (இனியான், யாருரகோவது). எ-று. மெய்ப்பாடு-அழுகை; பயன் - ஆற்றாமை நீக்குதல்.

கூற்றினதாக்க வெனவிளைபும். மயங்கிருட்கட்பெயர்வாயாக வெனக் கூட்டுக. மற்று அசைநிலை. கூற்றினவென்பது பெய ரெச்சமுமாம். (௧௨௦)

பின்பனி நினைந்திரங்கல்.

இரும்பனிபி னெதிர்வுகண் டு
கரும்பிவர்குழலி துயரநினைந்த து.

(எ - து.) பின்பனியி னெதிர்தலைக்கண்டு வண்டு மொய்க்கும் கூந்தலையுடைய தலைமகளது துயரந் தலைமகனினைந்து வருந்தியது.

புரமன்றயரப்பொருப்புவில்லேந்திப்புத்தேளிர்காப்பட்
சிரமன்றயனைச்செற்றோன்றில்லைச்சிற்றம்பலமனையான்

பரமன்றிரும்பனிபாரித்தவாபார்த்தெங்கும்வையஞ்
சரமன்றிவான்றருமேலொக்குமிக்கதமியருக்கே.

(இ - ள்.) இரும் பனி வையம் எங்கும் பார்த்து பாரித்தவா - பெரிய பனி வையமெங்கும் பார்த்து (அவலைகளைப்) பரப்பிய வாறு,—புரம் அயர அன்று பொருப்புவில் ஏந்தி புத்தேளிர் காப்பன் அயனை அன்று சிரம் செற்றோன் - புரம் வருந்த அன் று வரையாகிய வில்லேந்தித் தேவர் கடுவே அயனைக் கோபித் துச் சிரமரிந்தவனது,— தில்லைச் சிற்றம்பலம் அனையான் பர மன்று - தில்லையின்க ணுள்ள சிற்றம்பலத்தை யொப்பான் அளவன்று,— மிக்க தமியருக்கு - மிகுந்த தனிமையை யுடை யாருக்கு (இப்பனி உயிர்கவா வெகுண்டு),— வான் சரம் தருமேல் ஒக்கும் - வான் பாணத்தைத் தருமாயின் அத னோடொக்கும். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைம களை யாற்றுவித்தல்.

பார்த்தெங்குந் தருமேலென்றியைப்பினு மமையும். இக்கா லத்து அவளாற்றாமை சொல்லவேண்டுமோ எனக்கு மாற்றுத லரிதென்பது போதரத் தமியருக்கெனப் பொதுமையாற் கூறி னான். இதனைத் தோழிக்கூற்றாக வுரைப்பாருமுளர். (௧௨௧)

இளவேனில்கண் டின்னலெய்தல்.

இன்னிளவேனில் முன்னுவதுகண் டு
மென்னகைப்பேதை யின்னலெய்திய து.

(எ - து.) இளவேனிற்பருவம் முன்னுவது கண்டு மென்னகையையுடைய தலைமகள் துன்பமெய்தியது.

வாழும்படியொன்றுகண்டிலம்வாழியிம்மாம்பொழிற்றேன்
குழுமச்சற்றும்பற்றினவாற்றெண்டையங்கலிவா
ழாழின்மொழிமங்கைபங்கன்சிற்றம்பலமாதரியாக்
கூழின்மலிமனம்போன்றிருளாகின்றகோகிலமே.

(இ - ள்.) அம் தொண்டை கனி வாய் - அழகிய தொண்டைக் கனிபோலும் வாயினையும்,—யாழின் மொழி மங்கை பங்கன் - யாழோசை போலுமினிய மொழியினையு முடைய உமாதேவியின் கூற்றை யுடையவனது,— சிற்றம்பலம் ஆதரியா கூழின் மலிமனம் போன்று - சிற்றம்பலத்தை விரும்பாத உணவாற் செருக்குற்ற மனம்போல,— இருளாகின்ற கோகிலம் - கருநிறம் பெற்றிருளா நின்ற குயில்கள்,— இ மாம்பொழில் தேன் குழு முகம் சுற்றும் பற்றின - இம்மாஞ் சோலையின்கண் (குடைதலால்) தேன் சுற்றுமுக மெங்கும் வந்து பற்றின,—வாழும்படி ஒன்றும் கண்டிலம் - இனியுயிர் வாழுமாறு ஒன்றும் கண்டிலேம். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

வாழியென்றது வாழ்வாயாகவென்னும் பொருட்டாய் எதிர்முகமாக்கி நின்றது. தேன்குழுமுகைச்சுற்றும் பற்றினவென்பது பாடமாயின் மலருமளவுங் காலம்பார்த்துத் தேன்கள் குழுமுகையென்க. "இளவிநிலையே விளையிடத்துளையார் - வென்றிக்காலத்து விளங்கித்தோன்றும்" என்பதனான் இக்கிளவியைத் துங் காலங்காட்டவேண்டி இத்துறையுட் கூறினானென்பது கருத்தாகக் கொள்க. (௩௨௨)

பருவங்காட்டி வற்புறுத்தல்.

கார்வருமெனக் கலங்குமாதனைத்
தேர்வருமெனத் தெளிவித்தது.

(எ-து.) கார்ப்பருவம் வருமென்று கலக்குகின்ற தலைமகளுக்குத் தலைமகனது தேர்வருமெனத் தெருட்டியது.

பூண்பதென்றேகொண்டபாம்பன்புலியூரான்மிடற்றின்
மாண்பதென்றேயெனவானின்மலருமணந்தவர்தேர்

காண்பதன்றேயின்றுநாளையிங்கேவரக்கார்மலர்த்தேன்
பாண்பதன்றேர்குழலாயெழில்வாய்த்தபனிமுகிலே.

(இ - ள்.) கார் மலர் தேன் பாண் பதம் தேர் குழலாய்-கார் காலத்து மலரையூதும் வண்டுகளின் பாட்டினது செவ்வியை யாராயுங் குழலை யுடையாய்!—பூண்பது என்றே கொண்ட பாம்பன் - பூணப்படும் ஆபரணமென்றே கொள்ளப்பட்ட பாம்பினையுடையான்,— புலியூரான்-சிதம்பர நகரத்தை யுடையாரென்னுந் திருநாமத்தை யுடையான்,—மிடற்றின் மாண்பதென்றே என்ன - (அவனது) கண்டத்தினழகாமென்று கருதும் வண்ணம்,—எழில் வாய்த்த பனி முகில்-அழகுபொருந்திய குளிர்ந்தமேகங்கள்,— வானின் மலரும் - ஆகாயத்தினிடத்துப் பரவாநின்றன,—மணந்தவர் தேர் இன்று நாளை இங்கே வர காண்பதன்றே - (அதனால்) நம்மைக் கலந்தவரது தேர் இன்றாக நாளையாக இங்கு வாராநிற்பக் காணப்படுவதல்லவோ. (இனி ஐயுறுதற் பாலையல்லை). எ-று. மெய்ப்பாடு - அழுகையைச் சார்ந்த பெருமிதம்; பயன் - தலைமகளை வற்புறுத்தல்.

தேர் இங்கே வருவதனைக் காணுமதல்லவோ இனியுள்ளதென மொழிமாற்றி புணர்ப்பினுமமையும். காண்பதென்பதூஉம் எழிலையென்பதூஉம் பாடம். (௩௨௩)

பருவமன்றென்று கூறல்.

காரெனக்கலங்கு மேமொழிக்கன்னிக்
கின்றுனைத்தோழி யன்றென்றுரைத்தது.

(எ-து.) கார்ப்பருவமெனக் கலங்குகின்ற மிக்க அழகமைந்த கன்னியுடைய தலைமகளுக்கு, இனிமையாகிய உயிர்ப்பாங்கி, அவள்கூறக்கேட்டொழிய அது கார்ப்பருவமன்றென்றது.

தேனிதரக்காரெனச்சீறனஞ்சிற்றம்பலத்தடியேன்
கனிதரக்கார்மிடற்றோனடமாடக்கண்ணுற்றுழவக்

துளிதரற்காரெனவார்த்தனவார்ப்பத்தொக்குன்குழல்போன்
றளிதரக்காந்தளும்பாந்தளைப்பாரித்தலர்ந்தனவே.

(இ - ள்.) அடியேன் களிதர - அடியேன் களிப்பையுண் டாக்க, — சிற்றம் பலத்துகார் மிடற்றோன் கடமாட - சிற்றம் பலத்தின்கண்ணே கரியகண்டத்தையுடையவன் கடனாஞ்செய் யாநிற்ப, — கண் ஆர் முழவம் துளி தரல் காரென ஆர்த்தன - முகமமைந்த முழவங்கள் துளியைத்தருதலையுடைய மேகம் போல முழங்கின, — ஆர்ப்ப காந்தளும் தொக்கு உன் குழல் போன்று அளி தர பாந்தளை பாரித்து அலர்ந்தன - முழங்க (அவற்றை முழவமென்றுணராது) காந்தளும், திரண்டு உன் குழலையொத்து (நறு நாற்றம்) வண்டுகளைக்கொணர்தர, பாம்பு போலும் (தும்புகளைப்) பரப்பியலர்ந்தன, — சீர் அனம் - (அதனால்) சீரையுடைய அன்னமே! — கார் என் தெளிதரல் - இதனைக்காரென்று தெளியற்பாலையல்லை எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளை வற்புறுத்தல்.

களித்தரவென்பது - களிதரவென்றுநின்ற தெளிவுமமை யும். பாரித்தென்பது-உவமச்சொல்லெனினுமமையும். (௧௨௪)

மறுத்துக்கூறல்.

பருவமன்றென்று பாங்கிபக ர
மருவமர்கோதை மறுத்துரைத்த து.

(எ-து.) பாங்கி கார்ப்பருவமன்றென்றுகூற மனம் தங்கிய மாலையினையுடைய தலைமகள் அவனோடு மறுத்துக்கூறியது.

தேன்றிக் கிலங்கு கழலழல் வண்ணன் சிற்றம்பலத்தெங்
கோன்றிக் கிலங்கு திண்டோட் கொண்டற் கண்டன்குழை யே
யீன்றுன், போன்றிக் கடிமலர்க் காந்தளும்போந்த வன்கை
யனல்போற், றோன்றிக் கடிமலரும் பொய்ம்மையோ மெய்யிற்
றோன்றுவதே.

(இ-ள்) தேன் - தேனையொப்பான், — திக்கு இலங்கு கழல் அழல் வண்ணன் - திசைகளிலே விளங்காநின்ற வீரக்கழலையு டைய அழல்வண்ணன், — சிற்றம்பலத்து எம் கோன் - சிற் றம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய இறைவன், — திக்கு இலங்கு திண் தோள் கொண்டல் கண்டன் - திசைகளிலே விளங்கா நின்ற திண்ணிய தோள்களையும், மேகம்போலும் கண் டத்தையுமுடையவன், — குழை எழில் நாண் போன்று - (அவ னது) குண்டலமும், அழகுபொருந்திய நாணுமாகிய பாம்பை யொத்து, — இ கடி மலர் காந்தளும் போந்து - இக்கடிமலரை யுடையகாந்தளினது தம்புகளும் புறப்பட்டு, — அவன் கை அனல்போல் தோன்றி கடி மலரும் மெய்யில் தோன்றுவது பொய்ம்மையோ - அவனது கரத்தின்கண் விளங்குந் தீயைப் போலத்தோன்றியினது புது மலரும் மெய்யாகத் தோன்றுகின் ற இது பொய்யோ? எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன்-ஆற் றுமைமிக்குதல்.

கடி-நாற்றம், கடிமலர்-முதலாயின தன்பொருட்கேற்றவடை. மெய்யிற்றோன்றுவ தென்பதற்கு மெய்போலத்தோன்றுவ தெ னினு மமையும். காந்தளுமின்றென்பதனுஉம்பாடம். (௧௨௫)

தேர்வரவுகூறல்.

பூங்கொடி மருள ப்
பாங்கி தெருட்டிய து.

(எ - து.) பூங்கொடி போல்வாளாகிய தலைமகள் மருள, அவள் கலக்கந்தீரப் பாங்கி, தலைமகனது தேர் வரவுகூறித் தெளிவித்தது.

திருமாலறியாச்செறிகழற்றில்லைச்சிற்றம்பலத்தெங்
கருமால்விடையுடையோன்கண்டம்போற்கொண்டலெண்டி
வருமாலுடன்மன்பொருந்தவிருந்தமைக்கவர்தேர் [சையும்
பொருமாலையிற்கணல்லாயின்றுதோன்றும்பொன்னைவர்க்கே.

(இ - ள்.) திருமால் அறியா செறிகழல் - திருமாலா லறியப் படாத செறிந்த, வீரக்கழலணிந்த திருவடியையுடைய,— தில்லைச்சிற்றம்பலத்து எம் கரு மால் விடையுடையோன் - தில்லையிற் சிற்றம்பலத்தின் கணுளனாகிய எம்முடைய கரிய விஷ்ணுவாகிய விடையை யுடையவனது, — கண்டம் போல் - கண்டத்தைப்போல (இருண்டு), — கொண்டல் எண்டிசையும் வரும் - மேகங்கள் எட்டுத் திசைக்கண்ணும் வராநின்றன, — பொரும் மால் அயில் கண் நல்லாய் - (அதனால்) தம்மிற் பொரும் பெரிய வேல்போலுங் கண்ணையுடைய நல்லாய், — மணந்தவர் தேர் - நம்மைக் கலந்தவரது தேர், — உடன் மன் பொருந்தல் திருந்த - உடன்ற மன்னவர் தம்முட்பொருந்தல் திருந்துதலால், — நம் பொன் நகர்க்கு - நம்முடைய பொலிவினையுடைய இல்லின்கண், — இன்று தோன்றும் - இன்று வந்து தோன்றும். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளை யாற்றுவித்தல்.

உடன்மன் பொருந்ததிருந்த மணந்தவரென்பதற்கு மன்னர் பொருந்தும் வண்ணம் அவரைச்சென்று கூடினவரென் றுரைப்பாருமுளர். ஆல் - அசை. (௩௨௬)

விணைமுற்றி நினைதல்.

பாசறைமுற்றிப் படைப்போர்வேந்த ன்
மாசறுபூண்முலை மதிமுகநினைந்த து.

(எ - து.) பாசறைக்குச் சென்ற விணைமுடித்துப் பின்னர் படையொடுசென்ற போர்வேந்தன் குற்றமற்றபூணை யணிந்த முலையையுடைய தலைமகளது மதியை யொக்குமுகத்தை யெண்ணியது.

புயலோங்கலர்சடையேற்றவன்சிற்றம்பலம்புகழு
மயலோங்கிருங்களியானைவரகுணன்வெற்பின்வைத்த

கயலோங்கிருஞ்சிலைகொண்டுமன்கோபமுங்காட்டிவருஞ்
செயலோங்கெயிலெரிசெய்தபினின்றோர்திருமுகமே.

(இ - ள்.) செயல் ஓங்கு எயில் எரிசெய்தபின் இன்று ஓர் திருமுகம் - செய்தலையுடைய வுயர்ந்த மதிலை யெரியாக்கிய பின் இன்று திருவையுடைய தொருமுகமானது, — புயல் ஓங்கு அலர்சடை ஏற்றவன் - கங்கையை உயர்ந்த விரிந்த சடையின்க ணேற்றவனது, — சிற்றம்பலம் புகழும் மயல் ஓங்கு இரு களியானை வரகுணன் - சிற்றம்பலத்தையே பரவும் மயக்கத்தையுடைய வுயர்ந்த பெரிய களியானையையுடைய வரகுணன், — வெற்பின் வைத்த கயல் - இமயமலையின்கண்வைத்த கயல்போலுங் கண்ணையும், — ஓங்கு இரு சிலைகொண்டு - மிகப்பெரிய வில்லைப்போலும் புருவத்தையுமுடைத்தாய், — மன் கோபமும் காட்டிவரும் - தங்கிய இந்திரகோபம்போலும் வாயையுங்காட்டி வராநின்றது. (கடிது போதும்). எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - தேர்ப்பாகன் கேட்டுக்கடிதூர்தல்.

இன்று ஓராணையோலை அரையன் பொறியாகிய கயலையும் வில்லையு முடைத்தாய் மன்னன் முனிவையுங்காட்டி வராநின்றதெனச் சிலேடை வகையான் ஒருபொருள் தோன்றியவாறறிக.

நிலைமைநினைந்துகூறல்.

பொற்றொடிநிலைமை மற்றவனினைந் து
திருந்துதேர்ப்பாகற்கு வருந்துபுகன்ற து.

(எ-து.) பொன்னாலாகிய தொடியை யுடையாளாகிய தலைமகளது நிலைமையைத் தலைமகனெண்ணித் திருந்திய தேர்ப்பாகனுக்கு நீ விரையத் தேரைச் செலுத்தெனக் கூறியது.

சிறப்பிற்றிகழ்சிவன்சிற்றம்பலஞ்சென்றுசேர்ந்தவர்தம்
பிறப்பிற்றுணைந்துபெருகுகதேர்பிறங்குமொளியார்

சிறப்பொற்புரிசைமறுகினிற்றுன்னிமடநடைப்புள்
ளிறப்பிற்றுயின்றுமுற்றத்திரைதேருமெழினகர்க்கே.

(இ-ள்.) பிறங்கும் ஒளி ஆர் திறம் பொன் புரிசை மறுகினில் துன்னி - மிக்க வொளிபொருந்திய திறத்தையுடைய செம்பொ ன்னானியன்ற வுயர்ந்த மதிலையுடைய வூரின் தெருவின்கண் சேர்ந்து,—மடம் நடை புள் இறப்பில் துயின்று முற்றத்து இரை தே ரும் எழில் நகர்க்கு - (விளையாடும்) மெல்லிய நடையையுடைய மாடப்புறாக்கள் இறப்பின்கண் துயின்று, முற்றத்தின்கண் இ ரைதேர்ந் துண்ணும் (அவளிருந்த) அழகிய இல்லத்திற்கு, — சிறப்பில் திகழ் சிவன் சிற்றம்பலம் சென்று சேர்ந்தவர் தம் - சிறப்புக்களாற் பொலியுஞ் சிவனது சிற்றம்பலத்தைச் சென்ற டைந்தவரது, — பிறப்பில் துனைந்து பெருகுக தேர் - பிறவி போல விரைந்து முடிகுவதாக, இத்தேர். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - கேட்டபாகன் விரைந்து தேர் பண்ணுவானு தல்.

சிற்றம்பலஞ் சென்று சேர்ந்தவர் பிறவியிறுதிக்கண் பேரின் பமெய்து மாறுபோல, யானுஞ் சாருஞ்செல விறுதிக்கண் பெருந் தோள் முயங்குவ லென்னுங் கருத்தால் பிறப்பிற்றுனைந்து பெ ருகுகதேரென்றான். துன்னுமென்பதூஉம் பாடம். (௩௨௮)

முகிலொடுகூறல்.

முனைவற்குற்றுழி வினைமுற்றிவருவோ ன்
கழுமலெய்திச் செழுமுகிற்குரைத்த து.

(எ-து.) தனக்கு நட்பாளனாகிய அரசனொருவனு க்கு ஆபத்தெய்திய விடத்து அதனை யொழித்து வருந்தலைமகன் செழுமையாகிய மேகத்தைக்கண்டு துயரமெய்தி அதனோடு முழங்கவேண்டாமெனக் கூறியது.

அருந்தேரழிந்தனமாலமென்றோலமிட்டிமையோர்
மருந்தேரணியம்பலத்தோன்மலர்த்தாள்வணங்கலர்போற்
றிருந்தேரழிந்தபழங்கண்டருஞ்செல்விசீர்நகர்க்கென்
வருந்தேரிதன்முன்வழங்கேன்முழங்கேல்வளமுகிலே.

(இ-ள்.) ஆலம் அருந்து - நஞ்சையுண்ணவேண்டும், — ஏர் அழிந்தனம் - (அன்றேல் அந்நஞ்சால்) அழகழிந்தோம், — என்று ஓலமிடும் இமையோர் - என்று முறையிடுந்தேவர்க்கு, — மருந்து - (அந்நஞ்சால் வரும் இடர்க்கு) மருந்தாயவன், — ஏர் அணி அம்பலத்தோன் - அழகையுடைய அம்பலத்தின் கண் வீற்றிருப்பவன், — மலர் தாள் வணங்கலர் போல் - (அவனது) மலர் போலும் தாளைவணங்காதாரைப்போல, — திருந்த ஏர் அழிந்து - திருந்திய அழகெல்லாமழிந்து, — பழங்கண் தரும் செல்வி சீர் நகர்க்கு - துன்பத்தையுண்டாக்கும் இல்வாழ்க் கைச் செல்வத்தையுடையவளது அழகையுடைய வூரின்கண், — வள முகிலே - வளப்பத்தையுடைய மேகமே, — வரும் தேர் இதன் முன் - வருகின்ற (எனது) தேராகிய இதன் முற் பட்டு, — வழங்கேல் - சென்றியங்காதொழிய வேண்டும், — முழங்கேல் - (இயங்கினும் அவள் கேட்க) முழங்காதொழிய வேண்டும். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - கேட்டபா கன் தேர்விரைந்து கடாதல்.

ஏரணி - மிக்கவழகு; பழங்கண்டரும் - துன்பத்தை யெனக் குத்தரும்; நகர் - இல்; எனவுரைப்பினுமமையும். வழங்கே லென்பதற்குப் பெயரவேண்டாமென் றுரைப்பாருமுளர். ().

வரவெடுத்துரைத்தல்.

வினைமுற்றிய வேந்தன்வர வு
புனையிழைத்தோழி பொற்றொடிக்குரைத்த து.

(எ-து.) பகைப்புலஞ் சென்று வினைமுற்றிய வேந் தன் வரவினை, இலங்குகின்ற அணிகலத்தையுடை

டபாங்கு, அழகிய தொடியையுடைய தலைமகட்கு இனி நமக்கொரு குறையில்லையென அவன் வரவெடுத்துக் கூறியது.

பணிவார்க்குழையெழிலோன்றில்லைச்சிற்றம்பலமனைய
மணிவார்க்குழன்மடமாதேபொலிகநம்மன்னர்முன்னாப்
பணிவார்திறையும்பகைத்தவர்சின்னமுங்கொண்டுவண்டேர்
அணிவார்முரசினொடாலிக்குமாவொடணுகினரே.

(இ-ள்.) பணி வார் குழை எழிலோன் - பாம்பாகிய நீண்ட குழையாலுண்டாகிய அழகையுடையவனது, — தில்லைச்சிற்றம்பலம் அனைய - தில்லையின்கணுள்ள சிற்றம்பலத்தையொக்கும், — மணி வார் குழல் மட மாதே, — (நீல) மணிபோலும் நீண்ட குழலையுடைய மடப்பம் பொருந்திய மாதே, — பொலிக - பொலிக, — நம் மன்னர் - தம்முடைய மன்னவர், — பணிவார் திறையும் - வந்து வணங்குவாராகவுடம்பட்டவர் கொடுத்த திறையையும், — பகைத்தவர் சின்னமும் - பணியாது மாறுபட்டவரது அடையாளங்களையும், — வண் தேர் முன்னு கொண்டு - தமது வளம் பொருந்திய தேருக்கு முன்னாகக் கொண்டு, — அணி வார் முரசினொடு - அணியப்பட்ட வாரையுடைய வீர முரசினோடும், — ஆலிக்கும் மாவொடு - கனைக்கும் மாவினோடும், — அணுகினர் - வந்து சேர்ந்தனர். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - தலைமகளைமகிழ்வித்தல். (௩௧௦)

மறவாமைகூறல்.

பாசறைமுற்றிப் பைந்தொடியோடிருந் து
மாசறுதோழிக்கு வள்ளலுரைத்த து.

(எ-து.) பாசறையில் வேந்தர்க் குற்றுழிச் சென்று வினையை முடித்துப் பைம்பொற் றொடியையுடைய தலைமகளோ டினிதிருந்து குற்றமற்ற பாங்கிக்குத் தலைமகன் யான் பாசறையி லிருந்த விடத்தும் இவள் என்னெஞ்சை விட்டகலா திருந்தனளெனத் தானவளை மறவாமையை யெடுத்துக் கூறியது.

கருங்குவளைக்கடிமாமலர்முத்தங்கலந்திலங்க
நெருங்குவளைக்கிள்ளைநீங்கிற்றிலனின்றுநான்முகனோ
டொருங்குவளைக்கரத்தானுணராதவன்றில்லையொப்பாய்
மருங்குவளைத்தமன்பாசறைநீடியவைகலுமே.

(இ-ள்.) நான்முகனோடு - பிரமனுடன், — வளை கரத்தான் உணராதவன் தில்லை யொப்பாய் - சங்கேந்திய கையையுடைய விஷ்ணுமூர்த்தி! மறியாதவனது தில்லையை யொப்பாய்! — மருங்கு வளைத்து மன் பாசறை நீடிய வைகலும் - மூலை மருங்கு சூழ்ந்து மன்னனது பாசறைக்கண்யான் தாழ்த்த வைகற்கண்ணும், — கரு குவளை கடி மா மலர் - (கண்ணாகிய) கருங்குவளையினது புதிய பெரியமலர், — முத்தம் கலந்து இலங்க நின்று - (கண்ணீராகிய) முத்தத்தைக் கலந்து விளங்காநின்று, — நெருங்கு வளை கிள்ளை ஒருங்கு நீங்கிற்றிலள் - நெருங்கின வளையையுடைய இக்கிளியையொப்பாள் ஒருக்காலமு மென்னைவிட்டு நீங்கிற்றிலள். (அதனாற் பிரிவில்லை). எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - தலைமகனை மகிழ்வித்தல்.

வைகலுமென்பதற்கு வைகல்தோறுமென்றுரைப்பாருமுளர்.

வேந்தற் குற்றுழிப்பிரிவு முற்றிற் று.

பொருள்வயிற்பிரிவு.

என்பது, தம்முன்னோராற் சேகரித்து வைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ்செய்தால் அதனான் வரும்பயன் அவர்க்காமல்லது தமக்காகாமையால் தமது பொருள்கொண்டு இல்லறஞ்செய்தற்குப் பொருள்தேடப் பிரியாநிற்றல்.

இக்கிளவி இருபது துறைகளையுடைத்து. அவை வருமாறு:—
வாட்டங்கூறல் பிரிவுநினைவுரைத்தல், ஆற்றுதுபுலம்ப லாற்றாமைகூறல், இனைபெயர்த்துரைத்தல் பொருத்தமழிந்துரைத்தல், பிரிந்தமைகூறல் பிரிவாற்றாமையான், இரவுறுதுயரத்திற் இரங்கியுரைத்தல், இகழ்ச்சிநினைந்தழிதல் உருவெளிப்படுதல், நெஞ்சொடுநேர்தல் நெஞ்சொடுபுலத்தல், நெஞ்சொடுமறுத்தல் நாளெண்ணிவருந்தல், ஏறுவரவுகண் டிரங்கியுரைத்தல், பருவங்கண்டிரங்கல் முகிலொடுகூறல், தேர்வரவுகூறல் இளையரெதிர்கோடல், உண்மகிழ்ந்துரைத்த லோதியவிருபதும், மாமதிநுதலாய் வான்பொருட்பிரிதல்.

வாட்டங்கூறல்.

பிரிவுகேட்ட வரிவைவாட்டம்
நீங்கலுற்றவன் பாங்கிக்குரைத்தது.

(எ-து.) பொருள்வயிற் பிரிகின்ற தலைமகன், இருமையும் பொருளான் முற்றுப் பெறுமென்ற சொல்லைக்கேட்ட தலைமகளது வாட்டத்தைப் பாங்கிக் குணர்த்தியது.

முனிவருமன்னருமுன்னுவபொன்னான்முடியுமெனப்
பனிவருங்கண்பரமன்றிருச்சிற்றம்பலமனையாய்
தனிவருநீர்மையிதென்னென்றுதூநீர்தெளித்தளிப்ப
நனிவருநாளிதுவோவென்றுவந்திக்குநன்னுதலே.

(இ-ள்.) முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியுமென - துறந்தாருமரசருங் கருதுவனவாகிய (மறுமையும் இம்மையும்) பொருளான் முற்றுப் பெறுமென்று (பொதுவகையிற்) கூற, — கண் பனி வரும் - (அக்குறிப்பறிந்து) கண்கள் பனிவரா நின்றன, (அதனால் அறிவழிந்த விடத்து), — பரமன் திருச்சிற்றம்பலம் அனையாய் - பரமனது திருச்சிற்றம்பலத்தையொப்பாய், — தனிவரு நீர்மை இது என்னென்று -

(நீ) துன்பமடையுந்தன்மையிஃ தென்னகாரணத்தான் வந்தது (யான்பிரியேன்) என்று, — தூ நீர் தெளித்து அளிப்ப - தூய நீரைத்தெளித்து அன்புசெய்ய (அறிவுபெற்று), — நனி வரு நாள் இதுவோவென்று நன்னுதல் வந்திக்கும் - (நீர்) நனி தாழ்த்து வருநாளிதுவோ வென்று நன்னுதலாள் வணங்கு கின்றாள். (இனி நீ உணர்த்து மாற்றா னுணர்த்து) எ-று. மெய்ப்பாடு - இளிவரலைச்சார்ந்த பெருமிதம்; பயன் - பிரிவுணர்த்துதல்.

பரமன் திருச்சிற்றம்பல மனையாளென்று பாடமோது வாருமுளர். நீயெனவுந் தாழ்த்தெனவு மொருசொல் வருவித்துரைக்கப் பட்டது. நனிவந்திக்கு மெனினு மமையும். (௩௬௨)

பிரிவுநினைவுரைத்தல்.

பொருள்வயிற்பிரியும் பொருவேலவனெனச்
சுருளுறுகுழலிக்குத் தோழிசொல்லியது.

(எ-து.) (பொருளில்லாதார் இருமையின்கண் வருமின்பமும் அறியாரெனவுட்கொண்டு) பொருவேலையுடைய தலைமகன் பொருள்தேட நினையாநின்றானெனச் சுருண்டகுழலையுடைய தலைமகளுக்கு (வாட்டங்கேட்ட) பாங்கி சொல்லியது.

வறியாரிருமையறியாரெனமன்னுமாநிதிக்கு
நெறியாருஞ்சுரஞ்செல்லலுற்றார்நமர்நீண்டிருவ
ரறியாவளவுநின்றோன்றில்லைச்சிற்றம்பலமனைய
செறிவார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்திருநுதலே.

(இ-ள்.) இருவர் அறியா அளவு நீண்டு நின்றோன் தில்லைச் சிற்றம்பலம் அனைய - அரியுமயனுமாகிய இருவர் அடியுமுடியும் அறியாத எல்லையின்கண் நீண்டு நின்றவனது திருச்சிற்றம்பலத்தை யொக்கும், — செறிவார் கரு குழல் வெண் நகை

செவ்வாய் திருநுதலே - செறிந்த நீண்ட கரிய குழலினையும், வெள்ளிய பற்களையும், செய்ய வாயினையு முடைய அழகிய நெற்றியை யுடையாய்! — வறியார் இருமை அறியார் என - பொருளில்லாதார் இம்மை மறுமை யின்பங்களை யறியாரெனக் கருதி, — மன்னும் மா நிதிக்கு - நிலைபெறும் பெரிய அரும்பொருள் தேடுதற்கு, — நெறி ஆர் அரு சுரம் நமர் செல்லலுற்றார் - வழியறிதற் கருமையாகிய அரிய சுரத்தில் நம்மவர் போகலுற்றார். எ-று. மெய்ப்பாடு - அழுகையைச் சார்ந்த பெருமிதம்; பயன் - பிரிவுடம்படுத்தல்.

செறியாரென்பதூஉம் பாடம். சிறியகால்வழிகள் பலபொருட்சியவருஞ் சுரமெனினு மமையும். (௩௱௩௰௩)

ஆற்றாதுபுலம்பல்.

பொருடரப்பிரியு மருடருபவனெனப்
பாங்கிபகரப்பூங் கொடிபுலம்பியது.

(எ - து.) நமக்கருளைச்செய்யாநிற்குந் தலைமகன் பொருள்தேடப் பிரிந்தானென்று பாங்கி சொல்லக் கேட்ட பூங்கொடி போல்வாளாகிய தலைமகள் புலம்பியது.

சிறுவாளுகிருற்றுறுமுன்னஞ்சின்னப்படுங்குவளைக்
கெறிவாள்கழித்தனடோழியெழுதிற்கரப்பதற்கே
யறிவாளொழிவதஞ்சனமம்பலவர்ப்பணியார்
குறிவாழ்நெறிசெல்வரன்பரென்றம்மகொடியவளே.

(இ - ள்.) தோழி கொடியவள்-பாங்கியாகிய கொடியவள்,— அஞ்சனம் எழுதின் கரப்பதற்கு - அஞ்சனமெழுதின் (எழுதுகின்றகாலமத்துணையும் காதலர்) தோன்றாமையான், — ஒழிவது அறிவாள் - (அவ்வஞ்சனத்தை) ஒழிவதறிவாள், — அம்பலவர் பணியார் குறிவாழ் நெறி அன்பர் செல்வர் என்று - அம்பலவரைவணங்காதார் (அவ்வணங்காமைக்கு) குறியாக வாழும் நெறிவழியை யன்பர் செல்வரென்று, — வாள் சிறு உகிர் உற்று உறுமுன்னம் சின்னப்படும் குவளைக்கு - ஒளியையுடைய சிறியவுகிர் சென்றுற்றுச்சிதறுமுன்னம் பொடியாகும் குவளைப்பூவிற்கு,— எறி வாள் கழித்தனள் - எறிதற்குக் கருவியாகியவாளை உறைகழித்தனள், (யான் கூறுவதுண்டோ). எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - செலவுழுங்குவித்தல்.

கொடியவளே யென்பது பாடமாயிற் கொடியராகிய வன்பரெனக் கூட்டுக. அம்ம - அசைநிலை. (௩௱௩௰௪)

ஆற்றாமைகூறல்.

ஏழை யழுங்கத்
தோழி சொல்லியது.

(எ - து.) தலைமகளது பிரிவாற்றாமைகண்ட பாங்கி தலைமகனுக்குக் கூறியது.

வானக்கடிமதிற்றில்லையெங்கூத்தனையேத்தலர்போற்
கானக்கடஞ்செல்வர்காதலரென்னக்கதிர்முலைகள்
மானக்கனகந்தருமலர்க்கண்கண்முத்தம்வளர்க்குந்
தேனக்கதார்மன்னனென்னொளிச்சென்றுதேர்பொருளே.

(இ - ள்.) வானம் கடி மதில் தில்லை - முகில்களை யுடைத்தாகிய காவலையுடைய மதிலாற் சூழப்பட்ட தில்லையின்கண்,— எம் கூத்தனை ஏத்தலர்போல் - எம்முடைய கூத்தப் பிரானை வாழ்த்தாதார் போல, — காதலர் கானம் கடம் செல்வர் என்ன - காதலர் கானகத்தையுடைய சுரத்தைச்செல்வரென்றுசொல்ல, — கதிர் முலைகள் மான கனகம் தரும் - ஒளியையுடைய முலைகள் கொண்டாடப்படும் பொன்னைத் தாராநின்றன, — மலர் கண்கள் முத்தம் வளர்க்கும் - மலர்போன்ற கண்கள் முத்தத்தைப் பெருக வுண்டாக்காநின்றன, — தேன்

நக்க தார் மன்னன் இனி சென்று தேர் பொருள் என்னோ - (அதனால்) தேனோடுமலர்ந்த மாலையையுடைய அரசன் இனி (வெளியே) சென்று தேடும்பொருள் யாது? எ - று. மெய்ப்பாடு - இளிவரலைச் சார்ந்த பெருமிதம்; பயன் - செலவழுங்குவித்தல்.

மானம் - அளவை, பிரமாணம். மாற்றுணிப்பொன்னென்றுரைப்பினு மமையும். மன்னனென்பது ஈண்டு முன்னிலைக்கண் வந்தது. இயல்புவிளி யென்பாருமுளர். (௩௩௫)

திணைபெயர்த்துரைத்தல்.

துணைவன்பிரியத் துயருறுமனத்தொ ௫
திணைபெயர்த்திட்டுத் தேமொழிமொழிந்த து.

(எ-து.) யான் தலைமகனுக்கு நின்தாற்றுமை கூறினேன், இனி அவர் நினைவறியே னென்ற பாங்கிக்குத் தலைமகள், அவர் கருத்து யாதோ வறியேனென்ற துயரங்கொண்ட மனமுடையளாகிப் பிரிவினையெண்ணிப் பாலை நிலத்தாளாகிய அவனை மருதநிலத்தானாக்கி வருந்திக் கூறியது.

சுருடருசெஞ்சடைவெண்சுடரம்பலவன்மலயத்
திருடருபூம்பொழிலின்னுயிர்போலக்கலந்திசைத்த
வருடருமின்சொற்களத்தனையும்மறந்தத்தஞ்சென்றோ
பொருடரக்கிற்கின்றதுவினையேற்குப்புரவலரே.

(இ - ள்.) சுருள்தரு செம் சடை வெள் சுடர் அம்பலவன் - சுருண்டசெஞ்சடைக்கண் வெண்மையாகிய சுடரையுடைய மதியைத்தரித்த அம்பலவனது, — மலயத்து இருள் தரும் பொழில் - பொதியின் மலைக்கண் இருண்டபூவையுடைய சோலையினிடத்து, — இன் உயிர்போல கலந்து - இனியவுயிர்போல (இனியரா யொன்றுபட்டு வந்து) கூடி, — இசைத்த

அருள்தரும் இன்சொற்கள் அத்தனையும் மறந்து - (நமக்கு) சொன்ன அருளைப் புலப்படுத்தும் இனியசொற்களெல்லாவற்றையும் மறந்து, — அத்தம் சென்றோ - (தாம்) அருஞ்சுரஞ் சென்றோ, — புரவலர் - காவலர், — வினையேற்கு பொருள் தரக்கிற்கின்றது - தீவினையேற்குப் பொருளைத்தரத்தொடங்குகின்றது. (இதுதகுமோ ?) எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் செலவழுங்குவித்தல்.

இருளைத்தரு மென்றுரைப்பினு மமையும். உடம்போடுயிர் கலக்கு மாறுபோலக் கலந்தெனினு மமையும். பிரிவுள்ளிப் பாலை நிலத்தனாகியானை மருத நிலத்தனாக்குதல். (௩௩௬)

பொருத்தமறிந்துரைத்தல்.

பொருள்வயிற்பிரிவோன் பொருத்தநினைந் து
சுருளுறுகுழலிக்குத் தோழிசொல்லிய து.

(எ-து.) (திணைபெயர்த்துக் கூறக்கேட்ட) பாங்கி, பொருள் வயிற்பிரியுந் தலைமகனது உள்ளத்து நெகிழ்ச்சியை யறிந்து சுருண்ட குழலையுடைய தலைமகளுக்குப் பொதுவகையான் வருந்திக் கூறியது.

மூவர்நின்றேத்தமுதல்வனாடமுப்பத்துமும்மைத்
தேவர்சென்றேத்துஞ்சிவன்றில்லையம்பலஞ்சீர்வழுத்தாப்
பாவர்சென்றல்குநரகமனையபுனையழற்கான்
போவர்நங்காதலரொன்றுமுரைப்பதுபூங்கொடியே.

(இ - ள்.) மூவர் நின்று ஏத்த - பிரமன் திருமால் இந்திரன் ஆகிய மூவரும் நின்று துதிக்க, — முதல்வன் ஆட - எல்லாப் பொருட்கும் காரணமாகியவன் நடிக்க, — முப்பத்து மும்மை தேவர் சென்று ஏத்தும் - முப்பத்து மூவரது தொகுதியாகிய தேவர்கள் சென்றுவழுத்தும், — சிவன் தில்லை அம்பலம் சீர்வழுத்தா - சிவனது தில்லையம்பலத்தை நன்மைபுகழாத, —

பாவர் சென்று அல்கும் நரகம் அனைய - தீவினையார் சென்று தங்கும் நரகத்தையொத்த, — புனை அழல் கான் போவர் நம் காதலர் - மூட்டப்பட்டாற்போலும் அழலையுடைய காட்டிற் போவார் போன்றிருந்தார் நம் காதலர், — பூங்கொடியே - பூங்கொடி போல்வாய்! — நாம் உரைப்பது என் - (இனி) நாம் சொல்லுவது என்னோ? எ-று. மெய்ப்பாடு - அழுகை. பயன் - செலவழுங்குவித்தல். (௧௬௭)

பிரிந்தமைகூறல்.

> எதிர்நின்றுபிரியிற் கதிர்நீவாடுத ற்
> குணர்த்தாதகன்றான் மணித்தேரோனென்றது.

> (எ - து.) (பொதுவகையா லுணர்த்திய பாங்கி)
> தலைமகட்கு நின்முன்னின்று பிரிவுணர்த்தின் நீபொ
> லிவிழந்து வருந்துவாயென நமதுமன்னர் சொ
> ல்லாதகன்றாரெனத் தலைமகன் பிரிந்தமை கூறியது.

> தென்மாத்திசைவசைதீர்தத் தில்லைச்சிற்றம்பலத்து
> னென்மாத்தலைக்கழல்வைத்தெரியாடுமிறைதிகழும்
> பொன்மாப்புரிசைப்பொழிற்றிருப்பூவணமன்னபொன்னே
> வன்மாக்களிற்றொடுசென்றனரின்றுநம்மன்னவரே.

(இ-ள்.) தென் மா திசைவசை தீர்தர - தெற்காகிய பெரிய திசை குற்றம்நீங்க, — என் மா தலை கழல் வைத்து - எனது கருந்தலைக்கண் கழல்களைவைத்து, — தில்லைச்சிற்றம்பலத்துள் எரி ஆடும் இறை - தில்லைச்சிற்றம்பலத்தின்கண் எரியோடாடும் இறைவனது, — திகழும் பொன் மா புரிசை பொழில் - விளங்கும் பொன்னணியன்ற பெரிய மதிலாற் சூழப்பட்டபொழிலையுடைய, — திருப்பூவணம் அன்ன பொன்னே - திருப்பூவணத்தையொக்கும் பொன்னே! நம் மன்னவர் - நம்மன்னர், — வல் மா களிற்றொடு இன்று சென்றனர் - வலியபெரிய யானைகளுடன் (வினைகுறித்து) இன்று சென்றனர். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - பிரிவுணர்த்துதல்.

நால்வகைத் தானையோடுஞ் சென்றனெனிறு மமையும். ()

இரவுறுதுயரத்திற் கிரங்கியுரைத்தல்.

> அயிறருகண்ணியைப் பயிறருமிரவினு ட்
> டாங்குவதரிதெனப் பாங்கிபகர்ந்த து.

> (எ-து.) பிரிவுகேட்ட தலைமகளை நாற்றாமுகக்கொண் டபாங்கி,இரவும்பகலு மொப்பவருமாயினும் இரவுறு துயரத்திற் காற்றாமையால் இராப்பொழுது நீடித்து வருவதுபோல வெண்ணுகின்ற அவளை யாற்றுவதரி தாமென்று அவளிரவுறு துயரத்திற் கெண்ணியிரங் கியது.

> ஆழியொன்றீரடியும்மிலன்பாகன்முக்கட்டில்லையோ
> னூழியொன்றுதனாளுமைம்பூதமுமாறொடுங்கு
> மேழியன்றாழ்கடலும்மெண்டிசையுந்திரிந்திளைத்து
> வாழியன்றேவருக்கன்பெருந்தேர்வந்துவைகுவதே.

(இ - ள்.) ஆழி ஒன்று - காலுள்ளது ஒன்று, — பாகன் இரண்டு அடியும் இலன் - பாகன் இரண்டடியுமுடைய னல்லன் (ஆகலான்), — ஐம்பூதமும் ஆற ஒடுங்கும் - ஐந்துபூதமும் தோன்றியவாறொடுங்கும், — முக்கண் தில்லையோன் - மூன்று கண்களையுடைய தில்லையானது, — ஊழி ஒன்றுதனாளும் - ஊழியுமொவ்வாத (பெருமையையுடைய) நான்கு யாமத்தின் கண்ணும், — ஏழு இயன்ற ஆழ் கடலும் - ஏழாகவியன்ற ஆழ்ந்த கடல்களையும், — எண் திசையும் - எட்டுத்திசைகளையும், — திரிந்து இளைத்து அன்றே அருக்கன் பெரு தேர் வந்து வைகுவது - திரிந்திளைத்தன்றோ சூரியனது பெரியதேர் (ஈண்டு) வந்து தங்குவது. (அதனால் அத்தேர்வருவதெப்போது? இவளாற்று

வதெப்போது?) எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - செல வழுங்குவித்தல்.

வாழி - அசைநிலை. குன்றுதலையென்பதனை நான்குமென்று மெழுவாய்க்குப் பயனிலையாக்கி யுரைப்பினு மமையும். ஐம்பூதமும் ஆறுகளொடுங்கும் எழ்கடலு மென்றெண்ணிக்கடவே டருக்கற் கியைபுண்மையான் ஐம்பூதத்திற் பிரித்துக் கூறினு ரென்பாருமுளர். ஈாடியுமென்பதனையெழுவாயாக்கினு மமையும். நான்குந் திரிந்தென வியையும். (௩௩௯)

இகழ்ச்சி நினைந் தழிதல்.

உணர்த்தாது பிரிந்தாரெ ன
மணித்தாழ்குழலி வாடிய து.

(எ - து.) (பாங்கியிரக்கமுற்றுக் கூறுவிற்ப) நீல மணிதாழுங் கருமையாகிய குழலையுடைய தலை மகள், தலைவர் தனக்குச்சொல்லாது பிரிந்தாரென இகழ்ச்சி நினைந்தழியா நின்றது.

பிரியாரெனவிகழ்ந்தேன்முன்னம்யான்பின்னையெற்பிரியிற்
றரியாளெனவிகழ்ந்தார்மன்னர்தாந்தக்கன்வேள்விமிக்க
வெரியாரெழிலழிக்குமெழிலம்பலத்தோனெவர்க்கு
மரியானருளிலர்போலன்னவென்னையழிவித்தவே.

(இ - ள்.) முன்னம் - முற்காலத்து (அவருலைின்மேல் வைத்தக்கூறியவழி நீட்டித்துப்பிரிவாராயினும்), — பின்னை பிரியரென யான் இகழ்ந்தேன் - இப்பொழுது பிரியாரென யானிகழ்ந்திருந்தேன், — என் தாம் பிரியின் தரியாளென மன்னர் இகழ்ந்தார் - என்னைத் தாம் பிரிகின்றாராகவுணரின் (இவள்) உயிர் தாங்காளென மன்னர் (தாம் பின்னுணர்த்துதலை) இகழ்ந்தார் (அத்தன்மைத்தாகிய இரண்டிகழ்ச்சியும்), — தக்கன் வேள்வி எரி ஆர் மிக்க எழில் அழிக்கும் - தக்கனது வேள்வி

யின் முத்தீ நிறைந்த மிக்கவழகையழித்த, — எழில் அம்பலத்தோன் - எழிலையுடைய அம்பலத்தான், — எவர்க்கும் அரியான் - யாவர்க்குமரியவன், — அருளிலர்போலன்ன என்னை அழிவித்த - (அவனது) அருளில்லாதாரைப்போல வருந்த என்னையழிவித்தன. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமைநீங்குதல்.

எரியாரெழிலழிக்கு மென்பதற்கு எரியினதெழிலழிக்கு மென்பார் ஆணைக்கிளவி கொடுத்திழித்துக் கூறினுரெனினு மமையும். அழிக்கு மென்பது காலமயக்கம். கற்பந்தோறும் அவ்வாறு செய்தலின் நிகழ்காலத்தாற் கூறினுரெனினு மமையும். (௩௪0)

உருவுவெளிப்பட்டு நிற்றல்.

பொருள்வயிற்பிரிந்த வொளியுறுவேலவ ன்
ஒங்கழற்கடத்துப் பூங்கொடியைநினைந்த து.

(எ-து.) (தலைமகளிகழ்ச்சி நினைந்தழியாநிற்ப) பொருள்வயிற்பிரிந்த வொளிபொருந்திய வேலை யுடைய தலைமகன், சுடர்விட்டெரியுமழலையுடைய காத்திடைக்கண் தலைமகளைநினைந்து (மேற்போகவு மாட்டாது மீளவுமாற்று) வருந்தியது.

சேணுந்திகழ்மதிற்சிற்றம்பலவன்றெண்ணீர்க்கடலந்
குணுந்திருத்துமொருவன்றிருத்தாருலகினெல்லாங்
காணுந்திசைதொறுங்கார்க்கயலுஞ்செங்கனியொடைபம்
புணும்புணர்முலையுங்கொண்டுதோன்றுமொர்பூங்கொடியே.

(இ - ள்.) சேணும் திகழ் மதில் சிற்றம்பலவன் - சேய்மைக் கண்ணும் விளங்குமதிலையுடைய சிற்றம்பலத்தையுடையான், — தெள் நீர் கடல் நஞ்சு ஊணும் திருத்தும் ஒருவன் - தெளிந்த நீரையுடைய கடலின்கணுண்டாகிய நஞ்சையுண்வாகவுஞ் செய்யு சொப்பில்லாதான், — திருத்தும் உலகின் எல்லாம் காணும்

திசைதொறும் - (அவனால்) செய்யப்படும் உலகினெங்கும் பார்க்குந்திசைதோறும், — கார் கயலும் - (கண்ணாகிய) கரியகயல்களையும், — செங்கனியொடு - (வாயாகிய) செய்யகனியோடும், — பைம் பூணும் புணர் முலையும் கொண்டு - பசும் பொன்னணியணிந்த பூணையும் (தம்முட்) புணர்ந்த முலைகளையு முடைத்தாய், — ஓர் பூங்கொடி தோன்றும் - ஒரு பூங்கொடிதோன்றா நின்றது. எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - செலவழுங்குவித்தல்.

நஞ்சுண்டலையுங் குற்ற நீக்குமென வுரைப்பினு மமையும். உணர்திருத்து மென்பது அதுசெய்யுந் தன்மையனென்னும் பொருட்டாகலின் நிகழ்காலத்தாற் கூறினார். (௩௪௧)

நெஞ்சொடு நேர்தல்.

வல்லழற்கடத்து மெல்லியலினைந் து
வெஞ்சுடர்வேலோ னெஞ்சொடுநொந்த து.

(எ - து.) வன்மையாகிய அழற்சுரத்து மெல்லியலையுடையளாகிய தலைமகளை நினைந்து (மீளலுற்று) வெம்மையாகிய சுடர்பொருந்திய வேலையுடையனாகிய தலைமகன், பொருளாசையால் மீளவுமாட்டாது நின்று தன்னெஞ்சொடு நொந்து கூறியது.

பொன்னணிமீட்டியவோட்டருநெஞ்சமிப்பொங்குவெங்கா
னின்னணிநிற்குமிதென்னென்படுநயிமையோரிறைஞ்சு
மன்னணிதில்லைவளநகரன்னவன்னநடையாள்
மின்னணிநுண்ணிடைக்கோபொருட்கோநீவிரைகின்றதே.

(இ - ள்.) பொன் அணி ஈட்டிய ஓட்டரும் நெஞ்சம் - பொற்றிரளையீட்டுவானோடுதற்கரிய நெஞ்சமே! — நீ விரைகின்றது - (இப்பொழுது) நீ விரைகின்றது, — இமையோர் இறைஞ்சும் மன் - இமையோர் சென்று வணங்கும் இறைவனது, — அணி தில்லை வளம் நகர் அன்ன - அழகியதில்லையா

கிய வளம்பொருந்திய நகரையொக்கும், — அன்னம் நடையாள் மின் அணி நுண் இடைக்கோ - அன்னத்தினது நடைபோலும் நடையை யுடையாளது மின்னலையொத்த நுண்ணிய இடைக்கோ? — பொருட்கோ - (எடுத்துக்கொண்ட) பொருளுக்கோ? (அன்றி இவ்விரண்டற்குமல்லவோ?) — இ பொங்கு வெம் கானின் நண்ணி நிற்கும் இது என் என்பது - இவ்வழலைப் பொங்கும் வெவ்விய கானத்தைச்சேர்ந்து (போவதும் மீள்வதுஞ் செய்யாது) நிற்கின்ற இந்நிலையாதென்று சொல்லப்படுவது? எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - செலவழுங்குவித்தல்.

நண்ணியென்பது உண்ணியென விடைகுறைந்து நின்றது. அணியென்றுபிரித்து வெங்கானின்கணணித்தாக நிற்பதென் றுரைப்பினு மமையும். இமையோ ரிறைஞ்சுந் தில்லைவளநக ரென வினையும். (௩௪௨)

நெஞ்சொடு புலத்தல்.

அழற்கடத் தழுங்கமிக் கு
நிழற்கதிர்வேலோ னீடுவாடிய து.

(எ - து.) (தன்னெஞ்சொடுநொந்து கூறுகின்ற) அழற்சுரத்துத் துன்பமிக்கு மிகுந்த ஒளிபொருந்திய வேலையுடையனாகிய தலைமகன் (அந்நெஞ்சொடுபுலந்துகூறி) மிகவும் வாட்டமுற்றது.

நாய்வயினுள்ளகுணமுமில்லேனைநற்றொண்டுகொண்ட
தீவயின்மேனியன்சிற்றம்பலமன்னசின்மொழியைப்
பேய்வயினும்மரிதாகும்பிரிவெளிதாக்குவித்துச்
சேய்வயிற்போக்கநெஞ்சேயஞ்சத்தக்கதன்மிக்கனவே.

(இ - ள்.) நாய்வயின் உள்ள குணமும் இல்லேனை - நாயினிடத்திலுள்ள நன்மையுமில்லாத என்னை, — நல் தொண்டு கொண்ட தீவயின் மேனியன் - நல்ல தொண்டாகக் கொண்ட

தீயிடத்து நிறம்போலு நிறத்தை யுடையவனது, — சிற்றம் பலம் அன்ன இன்மொழியை - சிற்றம்பலத்தை யொக்கும் இனிதாகிய மொழியை யுடையாளிடத்து, — பேய்வயினும் அரிதாகும் பிரிவு - பேயினிடத்துஞ் செய்தலரிதாம் பிரிவை, — எளிதாக் குவித்து செய்வயின் போக்த நெஞ்சே - எளிதாக்குவித்துச் செய்த்தாகிய இவ்விடத்துப் போக்த நெஞ்சமே, — உன் சிக்கனவு அஞ்சத்தக்கது - உன்னுடைய சிக்கனவு அஞ்சத் தக்கது. எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - செலவழுங் குவித்தல்.

சிக்கனவு - இறுக்கம். (௩௭௩)

நெஞ்சொடு மறுத்தல்.

நீணெறிசென்ற நாயினர்த்தாரோ ன்
சேணெறியஞ்சி யீணெறிசென்ற து.

(எ-து.) பொருள்மேற்சென்ற மணங்கமழ்கின்ற பூங்கொத்தினாலாகிய மாலையை யுடைய தலைமகன், (நெஞ்சொடு புலந்துகூறி) செலவுடம்படாது பொருள்வயித்த நெஞ்சொடு மறுத்துக் கூறியது.

நீமேவியநிருத் தன்திருச்சிற்றம்பலமனைய
பூமேவியபொன்னைவிட்டுப்பொன்றேடியிப்பொங்குவெங்கா
னாமேநடக்கவொழிந்தனம்யாநெஞ்சம்வஞ்சியன்ன
வாமேகலையைவிட்டோபொருடேர்ந்தெம்மைவாழ்விப்பதே.

(இ - ள்.) நெஞ்சம் - நெஞ்சமே! — தீமேவிய நிருத்தன் திருச்சிற்றம்பலம் அனைய - தீயைப் பொருந்திய நிருத்தத்தை யுடையவனது இல்லையின்கணுள்ள சிற்றம்பலத்தை யொக்கும், — பூ மேவிய பொன்னைவிட்டு பொன் தேடி - பூவின்கண் மேவிய பொன்போல்வாளை விட்டு வேறு பொன்னைத்தேடி, — இ பொங்கு வெம் கான் நாமே நடக்க - இவ் வழல் பொங்கும் வெவ்விய காட்டின் நாமே நடக்கவெனின், —

யாம் ஒழிந்தனம் - யாமொழிந்தேம், — பொருள் தேர்ந்து எம்மை வாழ்விப்பது - (ஆகலான்) பொருள்தேடி யெம்மை வாழச்செய்வது, — வஞ்சி அன்ன வாமம் மேகலையை விட்டோ - வஞ்சியை யொக்கும் அழகிய மேகலாபரணத்தையுடையாளை விட்டோ? (யாமிதற்குடம் படேம்). எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - செலவழுங்குவித்தல்.

இதுவும் பெருந்திணைப்பாற்படும். மீளநினைந்த துணையல்லது மீண்டிலனென்பார் மீணெறியைப்புள்ளத்தாற் சென்றதென்றுணைப. (௩௭௪)

நாளெண்ணி வருந்தல்.

சென்றவர் திறத்து நின்றுநனிவாடு ந்
குழிருட்கடந்தற்குத் தோழிநனிவாடிய து.

(எ - து.) கொய்பொருட்குச் சென்றவர் சென்ற நாளை யெண்ணுந் தன்மையால் மிகவாடுகின்ற நெருங்கிய பெருங்குழலையுடைய தலைமகட்குப் பாங்கி மிகவும் வாடியது.

தேன்வண்ணீரணிவன்சிற்றம்பலஞ்சிந்தியாதவரிற்
பண்ணீர்மொழியிவளைப்பையுளெய்தப்பனித்தடங்க
ணுண்ணீருகவொளிவாடநீடுசென்றார்சென்றநா
ளெண்ணீர்மையினிலனுங்குழியும்விரலிட்டறவே.

(இ - ள்.) தேன் நீர் அணி சிவன் சிற்றம்பலம் சிந்தியாதவரின் - தெளிந்த கங்கையை (சடையிற்) சூடிய சிவனது சிற்றம்பலத்தைச் சிந்தியாதாரைப்போல (வருந்த), — பண் நீர் மொழி இவளை - பண்ணினது நீர்மையை யுடைய மொழியை யுடைய இவளை — பையுள் எய்த - நோய்பொருந்த, — பனி தடம் கண் உண் நீர் உக - குளிர்ச்சியையுடைய பெரிய கண்ணினுள்ள நீர் பெருக, — ஒளி வாட நீடு சென்றார் - மேனியொளி வாட காலம் நீட்டித்தவராது, — சென்ற நாள் எண் நீர்மை

யின் இட்டு விரல் அற - பிரிந்தானே யென்னுந் தன்மையள் தீ பலகாலிடுதலின் விரல்தேய, — நிலனும் குழியும் - நிலமுங் குழியும்; (இனி எங்ஙனமாற்றும்). எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைமகனை யாற்றுவித்தல்.

ஒளிவாழ்ந் தென்பது பாடமாயின் விரலிட்டென்பதனைப் பாங்கிமே லேற்றுக. (௩௪௰)

ஏறுவரவு கண்டிரங்கி யுரைத்தல்.

நீடியபொன்னி னெஞ்சுநெகிழ்ந் து
வாடியவன் வரவுற் று.

(எ - து.) நீண்டபொருள்வயிற் பிரிந்தமையின் மனநெகிழ்ந்து வாடிய (மீளலுறுகின்ற) தலைமகன், (மாலைக்காலத்து நாகொடுவாராநின்ற ஏறுவரவுகண்டு இச்செக்கர் மாலைக்காலம் தலைமகள்) பொறுக்குமளவன்றென இரங்கிக்கூறியது.

சிற்றம்பலமின்மைகாட்டித்தன்றொல்கழறந்ததொல்லோன்
சிற்றம்பலமனையாள்பரமன்றிண்கோட்டின்வண்ணப்
புற்றங்குதர்ந்துநன்னேர்பொன்னார்மணிபுலம்பக்
கொற்றமருவுகொல்லேறுசெல்லாநின்றகூர்ஞ்செக்கரே.

(இ - ள்.) திண் கோட்டின் - வலிய கோடுகளால், — வண்ணம் புற்றம் குதர்ந்து - நிறத்தையுடைய புற்றைப் பேர்த்து, — பொன் ஆர் மணி புலம்ப - இரும்பு பொருந்திய மணி யொலிப்ப, — கொற்றம் மருவு கொல் ஏறு நல் நாகொடும் செல்லா நின்ற - வெற்றியைப்பொருந்திய கொல்லவல்லஆனேறு கன்னி நாகோடும் (ஊர்வயின்) செல்லா நின்றன, — கூரும் செக்கர் - சிறக்குஞ் செக்கர்வானத்தையுடைய இம்மாலைப்பொழுது, — சிற்றம் பலம் இன்மை காட்டி தொல் தன் கழல் தந்த தொல்லோன் - சிற்றத்தாற் பல பின்மையையறிவித்து (பிறவிமறுத்தற்கு) பழையவாய் வருகின்ற தன் கழல்களை யெனக்குத் தந்த பழையோனது, — சிற்றம்பலம் அனையாள் பரமன்று - சிற்றம்பலத்தையொப்பாளது அளவன்று. (அவள் இனியெங் குருவள்). எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - தேர்ப்பாகன் மீள்வதற்கொருப்படுதல்.

சிற்றம் பயினையுடைத்தன்மை யெனினுமமையும். மண்ணைப் புற்றென்பதூஉம்பாடம். (௩௪௧)

பருவங்கண்டிரங்கல்.

மன்னியபருவ முன்னியசெலவி ன்
இன்னலெய்தி மன்னனேகிய து.

(எ-து.) (ஏறுவரவுகண்டிரக்கமுற்று வாராநின்ற) தலைமகன் நிலைபெற்ற கார்ப்பருவத்து மேகத்தின் முற்பட்ட செலவினால் வருத்தமெய்திச் சென்றது.

கண்ணுழையாதுவிண்மேகங்கலந்துகணமயிறொக்
கண்ணுழையாத்தழைகோலிநின்றாடுமினமலர்வாய்
மண்ணுழையாவுமறிதில்லைமன்னனதின்னருள்போற்
பண்ணுழையாமொழியாளென்னளாங்கொன்மன்பாவியற்கே.

(இ-ள்.) விண் மேகம் கலந்து - ஆகாயத்தில்மேகங்கள் (ஒன்றோடொன்று) விரவுதலால், — கண் நுழையாது - கண் சென்று நுழையமாட்டாது, — இனமலர் வாய் - இன மலரையுடைய இடமெங்கும், — மயில் கணம் தொக்கு கண் நுழையா தழை கோலி நின்று ஆடும் - மயிலினங்கள் இரண்டு கணக்கில்லாத பீலியை விரித்து நின்றாடாநிற்கும், — மண் நுழை யாவும் அறி தில்லை மன்னனது - மண்ணிடத் தெல்லாவுயிர்களும் அறியுந் தில்லையின் மன்னனது, — இன் அருள் போல் பண் நுழையா மொழியாள் - இனிய அருள் போலும் பண் நுழைதற்கியலாத தேமொழியை யுடையாள், — பாவியற்கு என்னாம் கொல் - தீவினையேற்கெத்தன்மையளாமோ?

(அறிகின்றிலேன்). எ-று. மெய்ப்பாடு - அச்சம் ; பயன் - தேர்ப்பாகன் மீள்வதற்கொருப்படுதல்.

என்னென்பது உணவாகிய வென்னென்பாருமுளர். பன்னுமிழையா மொழியென்பதற்குப் பண்ணப்பட்டவுழையாகிய கரும்புபோலும் மொழியாளெனினுமமையும். மன் - அசைநிலை.

முகிலோடு கூறல்.

என்னைப்பலதுயரமோ டேகாநின்றவ ன்
துனைக்காரதற்குத் துணிந்துசொல்லிய து.

(எ - து.) (பருவங்கண்டிரங்கி) எத்தனையோ பல துயரமுடையனாகிச் செல்லாநின்ற தலைமகன் விரைவையுடைய மேகத்துக்குத் துணிந்து சொல்லியது.

அற்படுகாட்டினின்றாடிசிற்றம்பலத்தான்மிடற்றின்
முற்படுநீள்முகிலென்னின்முன்னேன்றுமுதுவோர்குழுமி
வில்படுவாணுதலாள்செல்லறீர்ப்பான்விரைமலர்தூய்
நெற்படுவான்பலிசெய்தயராநிற்குநீணகர்க்கே.

(இ - ள்.) அல் படு காட்டில் நின்றாடி - (மாலைக்காலத்து) இருளுண்டாகாநின்ற மயானத்தின்கண் நின்றாடுவான், — சிற்றம்பலத்தான் - சிற்றம்பலத்தின் கண்ணுளான், — மிடற்றின் முற்படு நீள் முகில் - (அவனது) மிடறுபோல இருண்டு முற்பட்டோடுகின்ற நீண்ட முகிலே இவ்விடத்தெல்லாம் முற்பட்டாயாயினும், — முதுவோர் குழுமி வில் படு வாள் நுதலாள் செல்லல் தீர்ப்பான் - முதுபெண்டிர் திரண்டு வில்தாழும்படி ஒளியையுடைய நுதலாளது துன்பத்தை நீக்கவேண்டி, — விரை மலர் தூய் நெல் படு வான் பலிசெய்து அயராநிற்கும் - நறுநாற்றத்தை யுடைய மலர்களைத் தூவி நெல்விரவிய தூய பலியைக்கொடுத்து (இல்லுறைகடவுட்கு) பூசனை செய்யா நிற்கும், — நீள் நகர்க்கு என்னின் முன்னேல் - பெரிய இல்லத்

திற்கு என்னின் முற்படா தொழிவாயாக. எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - பாகன் தேரைவிரையக் கடாவுதல்.

வான்பலி செய்தயரா நிற்குமென்பதற்குப் பலிகொடுத்து விரிச்சியயராநிற்குமெனினு மமையும். ஆடுசிற்றம்பலவனென்பதூஉம் பாடம். (௨௪௮)

தேர்வரவு கூறல்.

வேந்தன்பொருளொடு விரும்பிவருமெ ன
ஏந்திழைப்பாங்கி யினிதியம்பிய து.

(எ - து.) (முகிலொடுவந்து புகாநிற்கும்) தலைமகன் பொருளொடும் விரும்பிவருவானென ஏந்திழையாகிய பாங்கி யினிதுகூறியது.

பாவியைவெல்லும்பரிசில்லையேமுகில்பாவையந்தீ
ராவியைவெல்லக்கருக்கின்றபோழ்தத்தினம்பலத்துக்
காவியைவெல்லுமிடற்றோனருளிற்கதுமெனப்போய்
மேவியமாநிதியோடன்பர்தேர்வந்துமேவினதே.

(இ - ள்.) முகில் பாவை அம் சீர் ஆவியை வெல்லக் கருக்கின்ற போழ்தின் - மேகமானது பாவையினுடைய சீர்மையையுடைய உயிரைச் செகுப்பான் கோபித்துநின்றபொழுதின்கண், — அம்பலத்து காவியை வெல்லும் மிடற்றோன் அருளின் - அம்பலத்தின்கணுளனாகிய நீலப்பூவை வென்று மிடற்றையுடையவனது அருள்போல, — போய் மேவிய மா நிதியோடு அன்பர் தேர் கதுமென வந்து மேவினது - போய்த்தேடிய பெருநிதியோடும் அன்பர் தேர்கதுமெனவந்து பொருந்திற்று, — பாவியை வெல்லும் பரிசு இல்லை - அதனுக் காரக்கடவதனை வெல்லுமா றில்லையேபோலும். எ-று. மெய்ப்பாடு - பெருமிதம் ; பயன் - ஆற்றுவித்தல்.

அருளின் மேவிய தெனவியையும். அருளான் வந்து மேவிற் றெனினு மமையும். தமியளா அற்றம்பார்த்து வெல்லக் கருதிக்

சிலர் வெருள்கின்ற காலத்து, அத்தலைவியார்க்குத் துணையாக ஒருதேர்வந்து காத்ததென வேறொருபொருள் விளங்கின வாறறிக. (௩௨௯)

இளையரெதிர் கோடல்.

செறிகழல்வன் றிருநகர்புகுத
எறிவேலிளைஞ ரெதிர்கொண்டது.

(எ - து.) (பாங்கி தேர்வரவுகூறக்கேட்ப) செறிந்த கழலையுடையனாகிய தலைமகன் அழகிய இல்லிற்புக எறிகின்ற வேலையுடைய இளையர்சென்று எதிர்கொண்டது.

யாழின்மொழிமங்கைபங்கன்சிற்றம்பலத்தானமைத்த
ஊழின்வலியதொன்றென்னையொளிமேகலையுகளும்
வீழும்வரிவளைமெல்லியலாவிசெல்லாதமுன்னே
சூழுந்தொகுதியொடன்பர்தேர்வந்துதோன்றியதே.

(இ - ள்.) ஒளி மேகலை உகளும் - ஒளியையுடைய மேகலாபரணம் துள்ளிவீழாநின்றும் போகாநின்றது, — வரி வளை வீழும் - வரியையுடைய வளைகள் கழன்று விழாநின்றன, — மெல்லியல் ஆவி செல்லாத முன்னே - இத்தன்மைத்தாகிய மெல்லியலுயிர் செல்வதற்கு முன்னே, — சூழும் தொகுதியொடு அன்பர் தேர் வந்து தோன்றியது - சூழ்ந்த சுற்றத்திரளோடு அன்பரது தேர்வந்து தோன்றிற்று, — யாழின் மொழி மங்கை பங்கன் - அதனான் யாழோசை போலுமினிய மொழியையுடைய உமாதேவியின் கூற்றையுடையான், — சிற்றம்பலத்தான் - சிற்றம்பலத்தின்கணுள்ளான், — அமைத்த ஊழின் வலியது ஒன்று என்னை - (அவனால்) அமைக்கப்பட்ட ஊழின்வலியதொன் றென்னுளது. எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மெய்ம்மகிழ்தல், மகிழ்வித்தல். (௩௩௦)

உண்மகிழ்ந் துரைத்தல்.

பெருநிதியொடு திருமனைபுகுந்தவெ ன்
வளமனைக்கிழத்தியோ டுளமகிழ்ந்துரைத்த து.

(எ - து.) (இளையரெதிர்கொள்ள) பெரும்பொருளோடு சிறந்தமனையிற் புகுந்த தலைமகன் தலைமகளோ டுள்ளமகிழ்ந்து கூறியது.

மயின்மன்னு சாயலிம் மானைப் பிரிந்து பொருள்வளர்ப்பான்
வெயின்மன்னு வெஞ்சுரஞ் சென்றதெல்லாம் விடையோன் புலியூர்க்
குயின்மன்னு சொல்லிமென் கொங்கையென் னங்கத் திடைக்குளிப்பத்
துயின்மன்னு பூவணை மேலணை யாமுன் றுவளுற்றதே.

(இ - ள்.) மயில் மன்னு சாயல் இம் மானை பிரிந்து - மயில்போலு மென்மையை யுடைய இம்மானைப் பிரிந்து, — பொருள் வளர்ப்பான் வெயில் மன்னும் வெம் சுரம் சென்றது எல்லாம் - பொருளையீட்டுவான் வெயில் நிலைபெற்ற வெய்ய சுரத்தைச்சென்ற துன்பமெல்லாம், — விடையோன் புலியூர் - விடையை யுடையவனது புலியூரிடத்து உளவாகிய, — குயில் மன்னு சொல்லி மென் கொங்கை என் அங்கத்திடை குளிப்ப - குயிலோசைபோலுஞ் சொல்லை யுடையாளுடைய மெல்லிய கொங்கைகள் என்னுடம்புக்கணி விடைகுளிக்கும்வகை, — துயில் மன்னு பூவணைமேல் அணையாமுன் துவளுற்றது - துயில் நிலைபெறும் பூவணையிடத்து அணைவதன்முன் மாய்ந்தது. எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மெய்ம்மகிழ்தல், மகிழ்வித்தல்.

எல்லாமென்பது முழுதுமென்னும் பொருள்படநிற்பதோர் உரிச்சொல். (௩௩௧)

பொருள்வயிற்பிரிவு முற்றிற்று.

பரத்தையிற்பிரிவு.

என்பது, தலைமகளை வரைந்தெய்தியபின்னர் வைகலும் பாலே நுகர்வா னொருவன் இடையே புளிங்காடியு நுகர்ந்து அதனினிமை யறிந்தாற்போல, அவள் நுகர்ச்சியினிமை யறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப் பிரியாநிற்றல். அல்லதூஉம், பண்ணும் பாடலு முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால் தானெல்லார்க்குந் தலைவனாகலின் அவர்க்கு மின்பஞ் செய்யப் பிரியாநிற்றல் என்றுமாம். அல்லதூஉம், தலைமகளை யூடலறிவித்தற்குப் பிரிதல் என்றுமாம்.

இக்கிளவி நாற்பத்தொன்பது துறைகளையுடைத்து. அவை வருமாறு:—

கண்டவர் கூறல் காதற்றோழி, பொறையுவந்துரைத்தல் பொதுப்படக்கூறி, வாயிலுழுங்கல் மாறுகொண்டலறுதி, கலவி ழுக்குரைத்தல் விளக்கொடுவெறுத்தல், வரம்பகர்ந்து வாயின் மறுத்தல், பள்ளியிடத்தூடல் பழிமொழியாடல், செவ்வணி விடுக்க வில்லோர்கூறல், அயலறிவுரைத்தல் எழுச்சு மெய்தல், செவ்வணிகண்ட வாயிலவர்கூறல், மனைபுகல்கண்ட வாயிலவர் கூறல், முகமலர்ச்சிகூறல் முன்னிலைதன்னைக், காவிசேர் வுரைத்தல் மன்னியெய்தல், எதிர்த்துரைத்தலொடு கலவிகரு திப், புலத்தல்குறிப்பறிந்து புலந்தமைகூறல், வாயிலவர்வாழ்த் தல் புனல்வரவுரைத்தல், தேர்கண்டுமகிழ்தல் சேடியர்விழ வில், தம்முறுநரைத்தல் தன்னைவியத்தல், நகைத்துரைத்த லொடு. தான்கண்டுரைத்தல், பாணன்வரவுரைத்தல் பாங்கி யற்பழித்தல், உழையரியற்பழித்த லொன்றுதலானவற், இய ற்படமொழிதல் இயல்புணர்த்துரைத்தல், வாயில்பெறுது மக ன்றிறமினைதல், வாயிற்கணின்று தோழிக்குரைத்தல், வாயில் வேண்டித் தோழிகூறல், மன்னியதோழி வாயில்வேண்டல், மனையவர்மகிழ்தல் வாயின்மறுத்தல், பாணனெறுபெருளால் பா

ணன்புலத்தல், விருந்தொடுசெல்லத் தணிந்தமைகூறல், ஊட ல்தணிவித்த லணைந்தவழியூடல், புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தல், கலவிகருதிப் புலவிபுகறல், விருந்துரைத்தூடல் விற ல்வேற்காளை, ஊடனீட வாடியுரைத்தல், துனியொழிந்துரைத் தல் துகளொன்றில்லாப், புதல்வன்மேல்வைத்துப். புலவிதீர் தல், கலவியிடத்தூடல் முன்னிகழ்வுரைத்தல், பரத்தையைக் கண்டமை பயன்படக்கூறல், ஊடியமெலித்துரைத் தூடல்தீர்த் தல், என்றுறொன்றிவை பரத்தையிற்பிரிவெனப், பண்ணுந் மொழியாய் பகர்ந்திசினோரே.

கண்டவர் கூறல்.

உரத்தகுவேலோன் பரத்தையிற்பிரிய த்
திண்டேர்வீதியிற் கண்டோருரைத்த து.

(எ-து.) உரத்தாற்றக்க வேலையுடையனாகிய தலைமகன் பரத்தையிற் பிரியத் திண்ணிதாகிய தேரோடும் வீதியிற் கண்டவர் கூறியது.

உடுத்தணிவாளரவன்றில்லையூரன்வரவொருங்கே
யெடுத்தணிகையேறினவளையார்ப்பவிளமயிலேர்
கடுத்தணிகாமர்கரும்புருவச்சிலைகண்மலரம்
படுத்தணிவாளிளையோர்சுற்றும்பற்றினர்மாதிரமே.

(இ-ள்.) உடுத்து அணி வாள் அரவன் - (கச்சாகவும்) உடுத்து (அணியாகவும்) அணிந்த வாளரவையுடையவனது, — தில்லை ஊரன் வர - தில்லைக்கணுளனாகிய ஊரன் இவ்வீதிக்கண்வர, — எடுத்து அணி கை ஏறு இன வளை ஆர்ப்ப - தெரிந்தணியப்பட்ட கையினிடத் தேறாவாகிய இனவளைகளொலிப்ப, — இள மயில் ஏர் கடுத்து - இள மயிலினது சாயலையொத்து, — அணி காமர் கரு புருவம் சிலை கண் மலர் அம்பு அடுத்து - மிக்க அழகையுடைய கரிய புருவமாகிய வில்லோடு கண்மலராகிய அம்பைச் சேர்த்தி, — அணி வாள் இளையோர்

ஒருங்கே சுற்றும் மாதிரம் பற்றினர் - அணிக லுண்டாகிய ஒலியையுடையமகளிர் ஒருங்கே சுற்றுந் திசைகளைப் பற்றின (இஃதியவன் காதலிமாட்டென்னும்). எ-று. மெய்ப்பாடு - மரு ளகை ; பயன் - பிரிவுணர்த்துதல்.

ஒன்றாக வெழுந்து அணியினுங் கையினு மூளவாகிய சங்கொ லிப்ப. இளமைக்க ணுண்டாகிய வுள்ள வெழுச்சியிக்கு வி லோடம்பை யடுத்துப்பற்றி ஆசைக்கணியப்பட்ட வுடைவா யுடைய இளையோர் திசைமுழுதுஞ் சூழ்ந்து பற்றினரொ விழிது மோர்பொருள் தோன்றி நின்றவாறு கண்டுகொள் கருப்புருவச்சிலை யென்பது பாடமாயின், புருவமாகிய கா னது உட்கையுடைய கருப்புச்சிலையோடு கண்ணாகிய கள் யுடைய மலரம்பை யடுத்தென்றுரைக்க. சுற்றும்பற்றிய மாதி மென்பது பாடமாயின் சுற்றும்பற்றி மேவாநிற்ப அவ்விடத் கைக்குறிப்பா லெடுக்கப்பட்டு இவர் கைகள் வினையோ பத் தலைமை லெறின்வெனக் கூட்டியுரைக்க. இதற்குச் றும்பற்றிப் போர்செய்யாநிற்பப் படைக்கலமெடுத்துச் கொலிப்ப அணியுங் கையு மொருங்கெழுந்தனவெனப் பிற வொருபொருளாகக் கொள்க. (௩௭

பொறையுவந் துரைத்தல்.

கள்ளவிழ்கோதையைக் காதற்றோ ழி
உள்ளவிழ்பொறைகண் டுவந்துரைத் தது.

(எ-து.) (தலைமகளைப் பாத்தைய வெதிர்கொண்ட மைகேட்ட) தேனெறி மலர்ந்த மலர்மாலையணிந்த தலைமகள் நெஞ்சுடைந்து புறத்து வெளிப்படாது பொறுத்தமைகண்ட உயிர்ப்பாங்கி உவந்துகூறியது.

கரும்புறுகொன்றையன்றொல்புலியூர்ச்சுருங்கும்மருங்குற்
பெரும்பொறையாட்டியையென்னின்றுபேசுவபேரொலிநீர்க்
கரும்புறையூரன்கலந்தகன்றானென்றுகண்மணியு
மரும்பொறையாகுமென்றுவியுந்தேய்வுற்றழிகின்றதே.

(இ - ள்.) பேர் ஒலி நீர் கரும்பு உறை ஊரன் - பெரிய வொலிக்கு நீரையுடைய கரும்பு தங்கும் ஊரையுடையவன், — கலந்து அகன்றானென்று கண்மணியும் அரும் பொறையாகும் - கலந்திருந்து நீங்கினனென்று கருதுதலான் என்கண்மணியும் (பயனின்மையால்) தாங்குதற்கரிய பாரமாகா நின்றன, — என் ஆவியும் தேய்வுற்று அழிகின்றது - எனதுயிருந் தேய்ந்து அழியாநின்றது,— கரும்பு உறு கொன்றையன் - (யாணிவ்வாறுகவுங் கலங்காது நின்ற) வண்டுகள் மொய்க்குங் கொன்றைப்பூவினை யுடையானது, — தொல் புலியூர் சுருங்கும் மருங்குல் பெரும் பொறையாட்டியை - பழையதாகிய புலியூரிற் சுருங்கின இடையையுடைய பெரும் பொறையாட்டியை, — இன்றுபேசுவ என் - யான் இன்று பேசுவனவென்! எ-று. மெய்ப்பாடு - அழுகையைச் சார்ந்த உவகை ; பயன் - தலைமகளை வியத்தல்.

என் கண்மணியுந் தேய்வுற்றழியாநின்றது, ஆவியு மரும்பொறையாகா நின்றதென்று கூட்டுவாருமுளர். உள்ளவிழ்பொறை- நெஞ்சுடைந்து புறத்து வெளிப்படாதபொறை. (௩௭௩)

போதுப்பாக்கூறிவாடி யழுங்கல்.

பொற்றிகழரவன் மற்றிகழ்தில்லைப்
பிரிந்தவூரனை யருந்துவாடிய து.

(எ - து.) (பொறையுவந்துரைத்த பாங்கிக்குத் தலைமகள்), அழகு விளங்குகின்ற அரவாபரணத்தை யுடைய இறைவனது வளப்பமமைந்த தில்லையைப் பிரிந்த யாரன்குறைகளை நினைந்து (பரத்தையர்க் கிரங்குவான்போன்று) வாடியது.

அப்புற்றசென்னியன்றில்லையுறாரினவருறுநோ
யொப்புற்றெழினலமூரன்கவரவுண்ணும்புறம்பும்
வெப்புற்றவெய்துயிர்ப்புற்றுத்தம்மெல்லணையேதுணையாச்
செப்புற்றகொங்கையர்யாவர்கொலாருயிர்தேய்பவரே.

(இ - ள்.) அப்பு உற்ற சென்னியன் - கங்கையைத் தரித்த சென்னியை யுடையவனது, — தில்லை உறாரின் - தில்லையை (மனமொழி மெய்களால்) அணுகாதாரைப் போல, — எழில் கலம் ஊரன் கவர - எழிலையுடைய கலத்தை ஊரன் கவர்ந்து கொள்ள, — அவர் உறு நோய் ஒப்புற்று - அத்தில்லையையுறா தாருறு நோயையொத்து, — உள்ளும் புறத்தும் வெப்புற்று - அகத்தும் புறத்தும் வெப்பத்தையுற்று, — வெய்து உயிர்ப்பு உற்று - வெய்தாகவுயிர்த்தலை யுற்று, — தம் மெல் அணையே துணையா - (வேறு துணையின்மையின்) தமது மெல்லணையே தமக்குத் துணையாகக் கொண்டு, — செப்பு உற்ற கொங்கையர் ஆருயிர் தேய்பவர் யாவர்கொல் - செப்புப்போலுங் கொங்கையையுடைய மகளிர் ஆருயிர் தேய்வார் (யானல்லது) பிறர் யாவரோ. எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீக்குதல்.

இத்தன்மையராய் என்போல் இனி ஆருயிர் தேய்வார் யாரோவெனப் பாத்தையர்க்கிரங்குவாள் போன்று தலைமகனது கொடுமை கூறினாளாகவுரைக்க. தில்லையுறாதவருறு நோயென்பது பாடமாயின், எழில் கலமூரன்கவரத் தில்லையையுறாத தீவினையாருறு நோயையொத் தென்றுரைக்க. (௩௱[illegible])

கனவிழந் துரைத்தல்.

சினவிற்றடக்கைத் தீம்புனலூரனை க
கனவிற்கண்ட காரிகையுரைத்தது உ.

(எ - து.) (தலைமகனது கொடுமைநினைந்து வாடாநின்ற தலைமகள்); சினங்கொண்ட வில்லேந்திய தடக்கையையுடைய தீம்புனலூரனைத் தலைமகனைக் கனவிற்கண்டதனைத் தன்பாங்கிக்குக் கூறியது.

தேவாசுரரிறைஞ்சுங்கழலோன்றில்லைசேரலர்போ
லாவாகனவுமிழந்தேனனவென்றமளியின்மேற்

பூவாரகலம்வந்தூரன்றரப்புலம்பாய்க்கலம்பாய்
பாவாய்த்தழுவிற்றிலேன்விழித்தேனரும்பாவியனே.

(இ - ள்.) கலம் பாய் பாவாய் - கலம் பரந்த பாவாய்! — அமளியின் மேல் பூ ஆர் அகலம் ஊரன் வந்து தர - அமளியின்கண் மாலையையுடைய மார்பை ஊரன் வந்து தர, — புலம்பாய் - (அவனொடு மேவாமையின்) பின்னுந் தனிமையாய், — கனவு என்று தழுவிற்றிலேன் - கனவென்று மயங்கித் தவறுதலினாற் புல்லிற்றிலேன், — அரும் பாவியன் விழித்தேன் - (அன்றியும்) பொறுத்தற்கரிய தீவினையையுடையேன் விழிப்பதுஞ்செய்தேன், — தேவாசுரர் இறைஞ்சும் கழலோன் - (அதனால்) தேவருமசுரரு மிறைஞ்சுங் கழலையுடையவனது, — தில்லை சேரலர் போல் - தில்லையைச் சேராதாரைப்போல, — ஆஆ கனவும் இழந்தேன் - ஐயோ கனவான் வருமின்பத்தையு மிழந்தேன். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீக்குதல்.

தில்லை சேரலர்போ லென்பது உத்தப்பிலவு - துன்பமுறுதலும் இன்பமிழத்தலுமாம். (௩௱[illegible])

விளக்கொடு வெறுத்தல்.

பஞ்சணைத்துயின்ற பஞ்சின்மெல்லடி ம
அன்பதொடர்மூழ்கிச் செஞ்சுடர்க்குரைத்தது ரு.

(எ - து.) பஞ்சணையிற் றுயின்ற செம்பஞ்சூட்டிய மென்மையாகிய அடியையுடைய தலைமகள் தலைமகனை (கனவிலிழந்தமையை) நினைந்து வருந்தி விளக்கொடு வெறுத்துக் கூறியது.

செய்ம்முகச்செல்வர்தில்லைச்சிற்றம்பலத்தாற்குக்
கைம்முகக்கூம்பக்கழும்பணியாரிற்கலந்தவர்க்குப்
பொய்ம்முகக்காட்டிக்கரந்தபொருந்தமன்றென்றிருளே
செய்ம்முகமாக்கியிருண்முகக்கீழ்கெடுநெஞ்சுடரே.

(இ - ள்.) செய் முகம் மாக்கி இருள் முகம் தேடும் செஞ்சுடரோ - செம்முகத்தைப் பருகி இருள் முகத்தைத் தேடுகின்ற கொடியசுடரோ, — கலந்தவர்க்கு - எம்மைக்கலந்தவர்க்கு, — பொய் முகம் காட்டி - பொய்ம்மையுடைய முகத்தைக்காட்டி, — செய் முகம் நீலம் மலர் - செம்முகத்துள வாகிய நீலப்பூ மலரா நின்ற, — தில்லைச்சிற் றம்பலத்து அரற்கு - தில்லைச்சிற்றம்பலத்தின் கண்ணுளனாகிய அரனுக்கு, — கை முகம் கூம்ப கழல் பணியாரின் - கைம்முகங் குவியக் கழலைப் பணியாதாரைப் போல (கண்ணோட்டமும் மெய்ம்மையுமின்றி), — காத்த பொருத்தம் அன்று என்றிலையே - தெளித்தாரை வஞ்சித்தல் தகுதியன்றென்று கூறிற்றிலையே; (வேறுகூறுவார் யாவர்) என்-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

வாரம்பகர்ந்துவாயின் மறுத்துரைத்தல்.

வார்புனலூரனோர் திகழ்தோள்வயி ற்
கார்புனைகுழலி வாரம்பகர்ந்த து.

(என் - து.) (தலைமகன் பரத்தையிற் பிரிந்துவந்து வாயிற்கவிற்ப வன்றோழியர் கூடவர்; 'பூவோ ரனையர் மகளிராதலான், யாரும் அவன் தலையளி பெ ற்றபொழுது ஏற்றுக்கொள்வதன்றோ நமக்குக் காரி யம், யாம் அவனோடு புலக்கற்பாலேம் அல்லேமென்று வாயில் வேண்டிநின்றார்க்கு விளக்கொடுவெறுத்து வரு ந்தாநின்ற) மேகம்புரையுங் கூந்தலையுடைய தலைம கள், திம்புனலூரனது அழகியதோளின்கண் தனது நிலைமையைக் கூறியது.

பூங்குவளைப்பொலிமாலையுமூரன்பொற்றோளிணையு
மாங்குவளைத்துவைத்தாரேனுங்கொள்கதெள்ளாரரணந்
தீங்குவளைத்தவில்லோன்றில்லைச்சிற்றம்பலத்தயல்வா
யோங்குவளைக்காத்தார்க்கறித்தோமன்னுருவரையே.

(இ-ள்.) பூ குவளை பொலி மாலையும் - பொலிவையுடைய குவளைப் பூவானியன்ற பெரிய மாலையையும், — ஊரன் பொன் தோளிணையும் - ஊரனது பொன்போலுந் தோளிணையையும், — ஆங்கு வளைத்து வைத்து ஆரேனும் கொள்க - தம்மில்லத்து வளைத்துவைத்து வேண்டியவர்கள் கொள்வாராக, — தெள்ளார் அரணம் தீங்கு வளைத்த வில்லோன் - பகைவரது கோட்டை கள் தீங்கெய்த வளைக்கப்பட்ட வில்லையுடையவனது, — தில் லைச் சிற்றம்பலத்து அயல்வாய் ஓங்கு வளை காத்தார்க்கு - தில் லைச் சிற்றம்பலத்துக் கயலாகிய விடத்து வாழும் உயர்ந்தவளை யையுடைய கையையுடையார்க்கு, — மன் உருவரை அறித் தோம் - மன்னனை உருவரையாகக் கொடுத்தோம். என்-று. மெய்ப் பாடு - அழுகை; பயன் - ஆற்றாமை நீங்குதல்.

உருவரை - முற்றூட்டு. ஓங்குவளை - விலையாலுயர்ந்த வளை யென்றுமமையும். 'அறித்தோமென்றதனால் தனதுரிமை கூறி னாளாம். மன் - அசைநிலையாக்கி மாலையுந் தோளுமறித் தோமென்று மமையும். (௧௫௯)

பள்ளியிடத்தூடல்.

சீர்பவர்கற்பிற் சேருங்கோ தை
ஆடவன்றன்னோ டூடியுரைத்த து.

(என்-து.) (வாயின்மறுத்த) பெருமிதமிக்க முல்லை மாலையணிந்த கூந்தலையுடைய தலைமகள், ஆற்றாமை யே வாயிலாகப் புக்குப் பள்ளியிடத்தானாகிய தலைவ னோடூடி மொழிந்தது.

தவஞ்செய்திலாதவெந்தீவினையேம்புன்மைத்தன்மைக்கேற்ப
வவஞ்செய்யநின்றனையென்னேகொலோநந்தனத்தன்முத்தன்
சிவன்செய்தசீரருளார்தில்லையூரநின்சேயிழையார்
கவஞ்செய்தபுல்லங்கண்மட்டேட்டொடல்விகைக்கலையே.

(இ - ள்.) அத்தன் - (உலகத்துள்ளா ரெல்லாருக்குந்) தந்தை,—முத்தன் - (இயல்பாகவே) பாசங்களினீங்கியவன்,—சிவன் - (எவ்வுயிர்க்கு மெப்பொழுது நன்மையைச் செய்தலால்) சிவன்,—செய்த சீர் அருள் ஆர் தில்லை ஊரா - அவனாற் செய்யப்பட்ட சீரிய அருள் நிறைந்த தில்லையி லூரனே! தவம் செய்திலாத வெம் தீவினையேம் புன்மை தன்மைக்கு எள்ளாது—முற்காலத்துத் தவஞ்செய்யாத வெய்ய தீவினையையுடையயாம் (நின்னுலாதரிக்கப்படாத எமது) புன்மைத்தன்மை காரணமாக எம்மையே இகழாது,—எவ்வம் செய்து நின்று - நினைக்குத் துன்பத்தைச் செய்து நின்று,— இன்று இனி உன்னை நோவது என் - இப்பொழுது இனி நின்னை நோதலென்னும்?—நின் சேயிழையார் - (அழகிதாக) நின்னுடைய சேயிழையார்,—தவம் செய்த புல்லங்கள் மாட்டேம் - நினக்குப் புதிதாகச்செய்த புல்லுதல்களை யாமாட்டேம்,—நல் கலை தொடல் விடு - (அதனால், எமது) நல்லமேகலையைத் தொடாதொழி, விடுவாயாக என்றவாறு. மெய்ப்பாடு - வெகுளி; பயன் - புணர்தல்.

புல்லென்பது புல்லுமென விரிக்கின்றது. புல்லலென்பதனைப் புன்மை யென்று நின் சேயிழையார் புதிதாகச் செய்த குறிப்பை பொறுக்கமாட்டேமென் றுரைப்பினு மமையும். எவ்வம் செய்து நின்றனைப் பாடமோதித் தவஞ்செய்திலாத வெந்தீவினையேம் இன்றுன்னை நோவது என்செய்து நின்றென்றும் என்னத்தகுமென்று முரைப்பாரு முளர். என்னாதென்பதுவும் பாடம். (௩௭௪)

செவ்வணிவிடுக்க வில்லோர் கூறல்.

> பாற்செறுமொழியார் மேற்செலவிரும்ப ல்
> பொல்லாதென்ன வில்லோர்புகன்ற து.

(எ-து.) கேட்டார்க்குப் பாலினுமினிதாகிய சொல்லு மொழியையுடைய மகளிர்மேற் சென்று தலைவன் விரும்பல் பொல்லாதெனச் (செவ்வணிவிடுக்க விரையா நின்ற) இல்லோர் தம்முட் கூறியது.

> துணியுறப்பொங்குமிக்கொங்கைகடாங்கித்தளர்மருங்குல்
> பிணியுறப்பேதைசென்றின்றெய்துமாலரவும்பிறையு [னே
> மணியுறக் கொண்டவன் றில்லைத்தொல் லாயநல் லார்கண்முன்
> பணியுறத்தோன்று நுடங்கிடையார்கள்பயின்மனைக்கே.

(இ - ள்.) பிறையும் அரவும் அணியுற கொண்டவன் தில்லை - பிறையையும் (அதற்குப் பகையாகிய) அரவையும் அழகுபெறத் தனக்கணியாகக் கொண்டவனது தில்லையில்,— தொல் ஆயம் நல்லார்கள் முன் - (இவனது) பழைய கூட்டத்திலுள்ளாராகிய நல்லார்கள்முன்னே,— பணி உற தோன்றும் நுடங்கு இடையார்கள் பயில் மனைக்கு - அரவுபோலத் தோன்றும் நுடங்கும் இடையையுடையார்கள் நெருங்கும் (பரத்தையர்) மனைக்கண்,— துணிவு உற பொங்கும் இ கொங்கைகள் தாங்கி தளர் மருங்குல் பிணி உற - துணிதலுறும் வண்ணம் வளரா நின்ற இக்கொங்கைகளைத் தாங்கித் தளராநின்ற மருங்குலையுடைய (இவள்) வருந்த,—பேதை சென்று இன்று எய்துமால் - (செவ்வணியணிந்து செல்கின்ற) இம்மாது இன்று சென்றெய்துமாயின் (இஃது பெரிது மிளிவரவுடைத்து.) எ - று. மெய்ப்பாடு - நகை; பயன் - தலைமகளைச் செலவழுங்கு வித்தல்.

செவ்வணி - தலைமகனைக்கூடிய தலைமகள், அத்தலைமகன் விடுத்த பெண்ணுக் கணியுஞ் செஞ்சிறமணி. (௩௭௫)

அயலறிவுரைத்தவ ளழுக்கமெய்தல்.

> உலகியலறியச் செலவிடலுற் ற
> விழுத்தகைமாதர்க் கழுக்கஞ்சென்ற து.

(எ - து.) (இல்லோர் செவ்வணி விடுக்க நினையா நிற்ப) உலகியலறியும்படிச் செலவிடலுற்ற தலைமகள் அயலறிவுரைத்து அழுக்கமுற்றுக் கூறியது.

இரவணையும்மதியேர்நுதலார்நுதிக்கோலஞ்செய்து
குரவணையுங்குழலிங்கிவளாலிக்குறியறிவித்
தரவணையுஞ்சடையோன்றில்லையூரனையாங்கொருத்தி
தரவணையும்பரிசாயினவாறுநந்தன்மைகளே.

(இ - ள்.) இரவு அணையும் மதி ஏர் நுதலார் நுதி - இராக்காலத்தைப் பொருந்தும் பிறைபோலும் நெற்றியை யுடையார் முன்,— இங்கு கோலம் செய்து - இவ்விடத்து செவ்வணியா(கிய) கோலத்தைச்செய்து,—குரவு அணையும் குழல் இவளால் குறி அறிவித்து-குரவம்பூச்சேருங் குழலையுடைய இவளால் (குறி)யை யறிவித்து,— அரவு அணையும் சடையோன் தில்லை ஊரனை - பாம்புசேருஞ் சடையை யுடையவனது தில்லையி(லுள்ள ஊ)ரனை,—ஆங்கு ஒருத்தி தர - (பின்) அவ்விடத்து ஒருத்தி (கொ)டுத்) தர,—அணையும் பரிசு ஆயினவாறு - (நாம் அவனை) (அணையு)ம்படியாயினவாறென்? — நம் தன்மைகளோ - (இவை) (நம்)முடைய பெண்தன்மைகள். எ - று. மெய்ப்பாடு - அழு(கை); பயன் - ஆற்றாமை நீக்குதல். நுதலார் நுதியறிவித்தெ... வினையும். குறி - பூப்புநிகழ்தற்குறி. (௩௬௦)

செவ்வணிகண்ட வாயிலவர்கூறல்.

மணிக்குழைபூப்பிய லுணர்த்தவந் த
ஆயிழையைக்கண்ட வாயிலவருரைத்த து.

(எ - து.) மணிக்குழையை யுடையளாகிய தலைமகள் பூப்பியலுணர்த்தவந்த ஆய்ந்த இழையையுடையாளைக்கண்ட (பரத்தை) வாயிலவர் கூறியது.

சிவந்தபொன்மேனிமணிதிருச்சிற்றம்பலமுடையான்
சிவந்தவந்தாளணியூரற்குலகியலாறுரைப்பான்
சிவந்தபைம்போதுமஞ்செம்மலர்ப்பட்டுங்கட்டார்முலைமேற்
சிவந்தவஞ்சாந்தமுந்தோன்றினவந்துதிருமனைக்கே.

(இ - ள்.) சிவந்த பொன் மேனி மணி - செம்பொன்போலு மேனியையுடைய மணியையொப்பான், — திருச்சிற்றம்பல முடையான் - திருச்சிற்றம்பலத்தை யுடையான், — சிவந்த அம் தாள் அணி ஊரற்கு - (அவனது) சிவந்த அழகிய தாளினை முடிக்கணியாக்கு மூரனுக்கு, — உலகியல் ஆறு உரைப்பான் - உலகியல் நெறியை அறிவிப்பான் வேண்டி, — திரு மனைக்கு - (நமது) திருவையுடைய மனைக்கண், — சிவந்த பைம் போதும் - சிவந்த செவ்விப்பூவும், — அம் செம் மலர்ப் பட்டும் - அழகிய செய்ய பூத்தொழிற் பட்டும், — கட்டு ஆர் முலைமேல் சிவந்த அம் சாந்தமும் - கட்டுதலார்ந்த முலைமே லுண்டாகிய அழகிய செய்ய சாந்தமும், — வந்துதோன்றின - வந்துதோன்றின. (இனித் தருமக் குறைவாராமல் ஊரற்கும் அகல வேண்டும்.) எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - பூப்புணர்த்துதல். (௩௬௧)

மனைபுகல்கண்ட வாயிலவர்கூறல்.

கடனறிந்தூரன் கடிமனைபுகுத ர
வாய்ந்தவாயிலவ ராய்ந்துரைத்த து.

(எ-து.) மனைக்கடனை யறிந்து (செவ்வணிகண்ட) தலைமகன் காவலையுடைய மனையகத்துப்புகத் தலைமகள்வாயிலவர் தம்முள் ஆய்ந்து கூறியது.

ஆராப்பயில்கூழைவலின்மிக்கம்பலத்தான்குழையா
மராப்பயிலுண்ணிடையாரடங்காரெவரோயினிப்பண்
டிராப்பகனின்றுழைக்கீர்க்கடையித்துணைப்போழ்திற்சென்று
காரப்பயில்பூம்புனலூரன்புகுமிக்கடிமனைக்கே.

(இ-ள்.) பண்டு இரா பகல் நின்று உழைக்கும் - முற்காலத்து இரவும் பகலும் (தான்வாயில் பெறாது) நின்றுழைக்கும்,— ஈரம் கடை இத்துணை போழ்தில் சென்று - குளிர்ச்சி பொருந்திய கடைவாயிலை (நீட்டியாது) இத்துணைக்காலத்தில் கழிந்து,—

குரா பயில் பூம்புனல் ஊரன் இ கடி மனைக்கு புகும் - முதல் கள் பயில்கின்ற பூம்புனலையுடைய ஊரையுடையான், இக்காவலையுடைய மனைக்கண்புகா நின்றான்,—குரா பயில் கூழை இ ளின் மிக்கு - (அதனால்) குராப்பூப்பயின்ற குழலையுடைய இளமையினும் மேம்பட்டு, — அம்பலத்தான் குழையாம் அரா பயின்றன இடையார் - அம்பலத்தான் குழையாகிய அரவுபோலுநுண்ணிய இடையினை யுடையார், — அடங்கார் இனி எவர் (புலந்து) அடங்காதார் இனியாவர்? (மனைக்கடன் பூண்டவர் எல்லாரு மடங்குவர்), எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மெய்ம்மகிழ்தல். (௩௯...

முகமலர்ச்சிகூறல்.

பூம்புனலூரன் புகமுகமலர்ந்த
தேம்புனைகோதை திறம்பிறருரைத்தது.

(எ-து.) (பரத்தையிற் பிரிந்துவந்த) பூம்புனலூரனாகிய தலைமகன் மனையிற்புக முகமலர்ச்சி யெய்திய தேம்புனை கோதையளாகிய தலைமகளது தன்மையைப் பிறர்கூறியது.

வந்தான்வயலணியூரனெனச்சினவாண்மலர்க்கண்
செந்தாமரைச்செவ்விசென்றசிற்றம்பலவன்னருளான்
முந்தாயினவியனோக்கெதிர்நோக்கமுகமதியிற்
பைந்தாட்குவளைகள்பூத்திருள்சூழ்ந்துபயின்றனவே.

(இ - ள்.) வந்தான் வயல் அணி ஊரன் என - வந்தான் வயலணிந்த வூரன் என்று சொல்லுமளவில், — சினம் வாள் மலர்க்கண் செந்தாமரை செவ்வி சென்ற - சினம்பொருந்திய வாள்போலு மலர்க்கண்கள் சிவந்ததாமரைப் பூவினது செவ்வியையடைந்தன, — சிற்றம்பலவன் அருளான் முந்தாயின வியன் நோக்கு எதிர் நோக்க - சிற்றம்பலவனதருளான் முந்தாகிய பெரிய (அப்புலவி) நோக்கெதிர் (காதலன்) நோக்க,

முகம் மதியில் பைந்தாள் குவளைகள் பூத்து இருள் சூழ்ந்து பயின்றன - (உடனே) முகமாகிய மதியிற் பைந்தாளையுடைய குவளைப் பூக்கள் மலர்ந்து இருண்டு நெருங்கின (என்னை இல்லறக்கிழத்தியோ). எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மெய்ம்மகிழ்தல்.

இயல் சேக்கென்று பிரிந்து முன்னுண்டாகிய தனித்தல் இயல்பையுடைய சேக்கென் றனைப்பிறமையையும், கண்களது சிறந்த செவ்வியைப் குவளைமலர்கள் பலகூடிநறும் போன்றிருத்தலென்பது தோன்ற, பயின்றன வென்றார். பயின்றல் - ஏ தலைவியின் பழமையை செளிது மனைமறந் தலைமகனுக்குப் புலவிகாலத்து வருந்துன்பமிகுதியும், புலவிநீக்கத்துவரு மின்பமிகுதியுங்கருதி, சிற்றம்பலவ னருளாலெனக் காரணத்தை மிகுத்துக் கூறினர்.

(௩௯௩)

காலநிகழ்வுரைத்தல்.

இகழ்வரிதவன்கொ ணிகழ்வதிவ்வாறெனச்
செழுமலர்க்கோதை புழையருரைத்தது.

(எ - து.) (பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனது ஆற்றாமை) நீக்காதிருத்தல் யாதுகொல்? (அவன் வந்த) மல்லிகைப்போதானும், அந்திப்பிறையானும், சுற்றும் பொழுதானும், ஆற்றுமைப் புகுதாநின்றான்) இனி நிகழ்வ திவ்வாறுகலான் (நீ புலக்கற் பாலையல்லை) யெனத் தலைமகளுக் குழையர் கூறியது.

வில்லிகைப்போதின்விரும்பாவரும்பாவியர்களன்பிற்
செல்லிகைப்போதினெரிபுடையோன்றில்லையம்பலஞ்சூழ்
மல்லிகைப்போதின்வெண்சங்கம்வண்டேவிண்டோய்பிறையோ
டெல்லிகைப்போதியல்வெவ்வயலூரற்கெதிர்கொண்டதே.

(இ - ள்.) வில்லி கை போதின் விரும்பா அரும் பாவியர்கள் அன்பில் செல்வி - மன்மதன் கையிலுள்ள (அம்பாகிய) பூக்களில் ஆதரமில்லாத அரிய குறிப்பையுடையவர்கள் (தனக்குச் செய்த) அன்பின்கண் (வேட்டுச்) செல்வோன், — கை போதின் எரி உடையோன் - கையாகிய பூவின்கண் அக்கினியையுடையவன், — தில்லை அம்பலம் சூழ் - (அவனது) தில்லையம்பலத்தைச்சூழ்ந்த, — மல்லிகைப்போதின் வெண்சங்கம் வண்டு ஊத - மல்லிகையின் மலராகிய வெண்சங்கை வண்டுகளூத, — விண் தோய் பிறையோடு - ஆகாயத்தையடைந்த (அந்திப்) பிறையோடு, — எல்லி - இராப்பொழுது, — கை போது இயல் வேல் வயலூரற்கு - கையாகிய பூவின்கண் விளங்கும் வேலையுடைய வயலூரற்கு, — எதிர்கொண்டது - மாறுகொண்டது. எ-று. மெய்ப்பாடு-உவகை; பயன் தலைமகளைச் சிலப்பாற்றுவித்தல்.

வில்லிகைப் போதாற் புலன்களை விரும்பாத அரும்பாவியரெனினு மமையும். (௩௱௯௪)

எய்தலெடுத்துரைத்தல்.

சீரிய லுலகிற் றிகழ்தாக்கூ- டி

வாங்புன லூரன் மகிழ்வுற்ற து.

(எ - து.) (பரத்தையிற் பிரிந்துவந்த) வளம்பொருந்திய வூரையுடைய தலைமகன், பூப்புகழ்ந்த மனைக்கிழத்தியைத் தேவருலகத்திலுள்ள இன்பமெல்லாவற்றினும் விளக்கக்கூடிப் புலவிதீர்ந்து இன்புறப்பண்ணி யெய்தவுற்று மகிழ்ந்தமையை அங்குள்ளாரொடுத்துச் சொன்னது.

புலவித்திரைபொரச்சிறடிப்பூங்கலஞ்சென்னியுய்ப்பக்
கலவிக்கடலுட்கலிங்கஞ்சென்றெய்திக்கதிர்கொண்முத்த
நிலவிநிறைமதுவார்ந்தம்பலத்துநின்றோனருள்போன்
றுலவியலாத்தனஞ்சென்றெய்தலாயினவூரனுக்கே.

(இ - ள்.) புலவி திரை பொர - புலவியாகிய அலைமோத, — சிறு அடி பூ கலம் சென்னி உய்ப்ப - (காதலியின்) சிற்றடியாகிய பொலிவினையுடைய அணியை (தன்) சென்னியிலுய்த்தலான் (அப்புலவிநீங்க), — கலவி கடலுள் கலிங்கம் சென்று எய்தி - கலவியாகிய சமுத்திரத்துள் துகிலைச்சென்று பற்றி, — கதிர் கொள் முத்தம் நிலவி நிறை மது ஆர்ந்து - பற்களாகிய ஒளிபொருந்தின முத்தின்கட்பொருந்தி நிறைந்த (நீராகிய) மதுவைப்பருகி, — அம்பலத்து நின்றோன் அருள்போன்று - அம்பலத்து நின்றவனது அருளையொத்து, — உலவு இயலா தனம் ஊரனுக்கு சென்று எய்தலாயின - (ஒருக்காலும்) தளர்வில்லாத முலைகள் ஊரனுக்குச்சென்று பெறலாயின. எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மெய்ம்மகிழ்தல்.

புலவியாகிய திரைகள்வந்து மோதச் சிறியவடியையுடைய பொலிவையுடைய மாக்கலத்தைக் கடலின் சென்னியிலேசெலுத்தக் கடலுட்கலந்து கலிங்கமாகிய தேயத்தைச் சென்றெய்தி ஒளிபொருந்திய முத்தங்கள் தன்னிடத்துவந்து நிலைபெற அவ்விடத்துள்ள மதுக்களை நுகர்ந்து அம்பலத்து நின்றவனருளையொத்து ஒருஞான்றுங் கேடில்லாத பொருள்சென்றெய்தலாயினவென வேறுமொருபொருள் விளங்கியவாறறிக.

கலவிகருதிப்புலத்தல்.

மன்னிய வூடலிற் றன்னியவன்பொ ரு

கலவி கருதிப் புலவியெய்திய து.

(எ - து.) நிலைபெற்ற வூடலின்கண் வைத்துச் செறிந்தவன்போடு (புலவிதீர்த்தின்புறப்புணரப்பட்டு மயங்காநின்ற) தலைமகள் பின்னு மவனுடன் கலவியைக் கருதிப் புலவிகொண்டது.

செவ்வாய்த்துடிப்பக்கருங்கண்பிறழச்சிற்றம்பலத்தெம்
மொய்வார்சடையோனருளின்முயங்கிமயங்குகின்றாள்
வெவ்வாயுயிர்ப்பொடுவிம்மிக்கலுழ்ந்துபுலந்துநைந்தா
ளிவ்வாறருள்பிறர்க்காகுமெனநினைந்தின்னகையே.

(இ - ள்.) இன் நகை - இனிய நகையையுடையாள்,— செவ்வாய் துடிப்ப - சிவந்த இதழையுடைய வாய் துடிப்ப, — கருங்கண் பிறழ - கரியகண்கள் பிறழ,— சிற்றம்பலத்து எம் மொய்வார் சடையோன் அருளின் முயங்கி - சிற்றம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய நெருங்கிய நீண்ட சடையையுடையவனது அருள்பெற்றவர்போலத்தழுவி,— மயங்குகின்றாள் - (இன்பக் களியின்) மயங்குகின்றவள்,— இவ்வாறு அருள் பிறர்க்கு ஆகுமென நினைந்து - இவ்வாறு (நமக்கு அருளும்) அருள் ஒருக் கால்) பிறருக்குமாமென மனத்துட்கொண்டு, — வெவ்வாய் உயிர்ப்பொடு விம்மி கலுழ்ந்து புலந்து நைந்தாள் - வெய்யவிடத்தையுடைய நெட்டுயிர்ப்போடு பொருமியழுது புலந்து வருந்தினாள். எ - று. மெய்ப்பாடு - உவகையைச்சார்ந்த வெகுளி; பெருமிதம்; பயன் - மெய்ம்மகிழ்தல்.

அருளான்முயங்கி யென்பாரு முளர். (௩௱௬௪)

குறிப்பறிந்து புலந்தமைகூறல்.

குறிப்பினிற்குறிப்பு நெறிப்படநோக் கி
மலர்நெடுங்கண்ணி புலவியுற்ற து.

(எ-து.) (இவ்வா றருள் பிறர்க்காகுமென நினைந்து இன்னகை புலந்தாளென்று தலைமகன் கூறிய கூற்றையே தவறாக நினைந்து நம்மையொழிந்து பிறரு முண்டாகக் கூறினுகலான் இவ்வமளி பலைப் பொருதெனப்புலந்த) தலைமகள் குறிப்பாலே தலைமகனது குறிப்பையறிந்து புலவியுற்றாளென (உழையர் தம்முட்கூறியது).

மலைப்பொருவடிமானுந்தமியன்மன்னனொருவன்
பலைப்பொருதென்றிழிந்துநின்றான்பள்ளிகாமனெய்த
அலைப்பொருதன்றழல்விழித்தோனம்பலம்வணங்காக்
கலைப்பொருச்சிறியானென்னைகொல்லோகருதியதே.

(இ - ள்.) மன்னன் ஒருவன் - மன்னன் ஒருவனே, — மலை பொரு அடி மானும் தமியன் - (மென்மையான்) மலையும் பொருத அடியையுடைய மான்போல் வாளுந் தமியனே,— பள்ளி பலை பொருதென்று இழிந்து நின்றான் - (ஆயினும்) இப்பள்ளி பலைத் தாக்கமாட்டாதென்று கூறி (பள்ளியினின் றும்) இழிந்து நின்றான், — காமன் எய்த அலை பொருது அன்று அழல் விழித்தோன் - காமன் எய்த மலரம்பைவெகுண் டு அன்று அழலாகிய கண்ணைவிழித்தவனது, — அம்பலம் வணங்கா கலை பொரு சிறியான் - அம்பலத்தை வணங்காத் தீய மக்களைப் பொருத சிறியவன், — கருதியது என்னைகொல் - (இந்நிலைமைக்கண்) கருதியது என்னோ. எ-று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - ஐயந்தீர்தல்.

பள்ளியிடத்தாளாகிய தலைமகள் நண்ணிதாகிய தோர் காரணம்பற்றி இவ்வகையுணர்ந்து ஊடக்கண்டபாங்கி தன்னெஞ் சொடு உசாவிற்றென்பது. தலைமகன் தன்னெஞ்சொடு சொவிற்றென்னின் அதுபொருந்தாது. (௩௱௬௫)

வாயிலவர்வாழ்த்தல்.

தலைமகனது தகவுடை மை
நிலைதகுவாயி னின்றோருரைத்த து.

(எ - து.) (செவ்வணி விடுக்கப் பூப்பியற்செவ்வி கெடாமல் மெலிவுநீங்கு பரத்தையிற்பிரிந்து வந்த) தலைமகனது தகுதியுடைமையை வாயில் நின்றவர் வாழ்த்தியது.

வில்லைப்பொலிநுதல்வேற்பொலிகண்ணிமெலிவறிந்து
வல்லைப்பொலிவொடுவந்தமையானின்றுவான்வழுத்துந்
தில்லைப்பொலிசிவன்சிற்றம்பலஞ்சிந்தைசெய்பவரின்
மல்லைப்பொலிவயலூரன்மெய்யேதக்கவாய்மையனே.

(இ - ள்.) வில் பொலி நுதல் வேல் பொலி கண்ணி மெலிவு அறிந்து - வில்போலு நுதலையும் வேல்போலும் கண்களையுமுடையாளது வாட்டமறிந்து,—வல்லை பொலிவொடு வந்தமையால் - விரைய இவளது பொலிவுடன் வந்தமையால், — வான் நின்று வழுத்தும் தில்லை பொலி சிவன் - வானத்துள்ளார் நின்றுவழுத்துந் தில்லைக்கண் பொலியும் சிவனது, — சிற்றம்பலம் சிந்தை செய்பவரின் - சிற்றம்பலத்தைக் கருதுவாரைப்போல, — மல்லல் பொலி வயலூரன் - வளப்பத்தாற் பொலியும் வயலையுடைய வூரையுடையவன், — மெய் தக்க வாய்மையன் - மெய்யாக நல்லமெய்ம்மையன். எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மகிழ்தல்.

வில்லையென்னுமைகாரம் இசைநிறையாய்வந்தது. காதலன் வர இவள் இடையின்றிப் பொலிந்தமையாற் பொலிவொடென ஒடுக்கொடுத்துக்கூறினர். பொலிசிற்றம்பலமென வியையும். மல்லல்கடைக்குறைந்து ஐகாரம் விரிந்துநின்றது. மல்லற்பொலியென் பதூஉம் பாடம். (௩௪௮)

புனல்வரவுரைத்தல்.

புனலாடுகவெனப் புனைந்துகொண்டு
மனைபுகுந்தவனை வையமுரைத்தது.

(எ-து.) மனைவயிற்றங்கி இன்புறுநின்றதலைமகனைப் பரத்தையர் புனலாடுவோயாக வெனப் புனைந்துகொண்டு புனலாட்டினுள் இவன்காதலி புலக்கும் போதுமென வையத்தார் தம்முட் புனல்வரவுகூறியது.

சூன்முதிர் துள்ளுநடைப்பெடைக்கிற்றுணைச்சேவல்செய்வான்
தேன்முதிர்வேழத்தின் மென்பூக்குதர்செம்மலூரன்றிண்டோ
மான்முதிர்நோக்கினல்லார்மகிழத்தில்லையானருளே [ன்
போன்முதிர்பொய்கையிற்பாய்ந்ததுவாய்ந்தபுதுப்புனலே.

(இ - ள்.) சூல் முதிர் துள்ளு நடை பெடைக்கு இல் செய்வான் துணை சேவல் - சூல் முதிர்ந்த துள்ளுநடையை யுடைத்தாகிய பெடைக்கு (கூடும்) இல்லைச் செய்யவேண்டித் துணையாகியசேவல், — தேன் முதிர் வேழத்தின் மெல் பூ குதர் - தேன்போலும் (சாறு) முதிர்ந்த கரும்பினது மெல்லிய பூவைக் கோதும், — செம்மல் ஊரன் திண் தோள் - தலைமையுடையவூரனது திண்ணிய தோள்களை, — மான் முதிர் நோக்கின் நல்லார் மகிழ - மானினது நோக்கம்போலும் நோக்கினையுடைய நல்லார் கூடிவிளைய,—தில்லையான் அருள் போல் முதிர் பொய்கையில் வாய்ந்த புது புனல் பாய்ந்தது - தில்லையானது அருளையொத்து (நீர்) முதிர்ந்த பொய்கையுள் நல்லபுதுப்புனல் பாய்ந்தது. (இனிப்புனலாட்டினுள் தன்காதலியைச் சிவப்பிக்கும்போதும்). எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - பிரிவுணர்த்துதல்.

சூன் முதிர்தலால் குறுகவடியிடுதலின் துள்ளுநடையென்றார். (௩௪௯)

தேர்வரவுகண்டுமகிழ்ந்துகூறல்.

பயின்மணித்தேர்செலப்பரத்தையூர்சேரிக்
கயன்மணிக்கண்ணியர் கட்டுரைத்தது.

(எ-து.) (புனல்வரவுகேட்ட தலைமகன்புனலாட்டு விழவிற்குப்பரத்தையர் சேரிக்கண் செல்லாநிற்ப) இனியிவனது தேரினையைத் தோய்வோமெனக் கயல்போலு மழகியகண்ணையுடைய பரத்தையர் அவனது மணித்தேர்வரவுகண்டு தம்முண்மகிழ்ந்து கூறியது.

தேவேயெனமன்னுதிப்புனலூரன்றிண்டோளிணைக
டோய்பீர்புணர்தவத்தொண்மைசெய்திர்கடர்இன்றகொலைத்

தீயேயெனமன்னுசிற்றம்பலவர் தில்லைநகர்வாய்
வீயேயெனவடியீர்நெடுந்தேர்வந்துமேவினதே.

(இ - ள்.) சுடர்கின்ற கோலம் தீயே என - சுடரா நின்ற வடிவு தீயேயென்று சொல்ல, — மன்னு சிற்றம்பலவர் தில்லை நகர்வாய் வீ என அடியீர் - நிலைபெற்ற சிற்றம்பலவரது தில்லை நகரிடத்துள்ள பூவையொக்கும் அடியையுடையீர், — நெடு தேர் வந்து மேவினது - நெடியதேர் (நம்பி) வந்து தோன்றிற்று, — புணர் தவம் தொன்மை செய்தீர் - (இவனைப்) புணர்தற்குத் தக்க தவத்தை முற்காலத்துச்செய்தீர்கள், — சேயே என மன்னு தீம் புனல் ஊரன் - (வடிவு) முருகவேளேயென்று சொல்ல நிலைபெறுகின்ற இனிய புனலையுடைத்தாகிய ஊரையுடையவனது, — திண் தோள் இணைகள் தோயீர் - திண்ணிய தோளிணைகளை யினியணைமின். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - தலைமகன் வரவு சேரிப்பரத்தையர்க்குப் பாங்காயினார் அவர்க்குணர்த்தல்.

ஒன்றற்கொன் றிணையாயிருத்தலின் இணையெனத் தனித் தனி கூறப்பட்டன. கோலமென்பது குறிகின்றது. (௩௭௰)

புனல்விளையாட்டிற் றம்முளுரைத்தல்.

தீம்புனல்வாயிற் சேயிழைவருமெனக்
காம்பனதோளியர்கலந்துகட்டுரைத்தது.

(எ-து.) தலைமகனுடன் புனலாடாநின்ற மூங்கிலையொத்த தோளையுடைய (பரத்தையர்) சேடியர் பரத்தையிற்றலைவியாகிய தம் இப்பரத்தை அவனைத் தன்னிடத்துத் திரிப்பவருமென்று (அவ்வாறு நேராது முன்னுறக்காப்பேமெனத்) தம்முட் கலந்து கூறியது.

அரமங்கையரெனவந்துவிழாப்புகுமவ்வவர்வா
னரமங்கையரெனவந்தணுகும்மவளன்றுகிராற்
சிரமங்கயனைச்செற்றோன்றில்லைச்சிற்றம்பலம்வழுத்தாப்
புரமங்கையரினையாதையகாத்தும்பொற்பணையே.

(இ - ள்.) அரமங்கையர் என வந்து விழா புகும் அவ்வவர் - அரமங்கையரைப்போல வந்து (புனலாட்டு) விழவின்கண் புகா நின்ற (சேடியர்), — வான் அரமங்கையர் என அவள் வந்து அணுகும் - (நாமெல்லாம் இத்தன்மையேமாக) வானிடத்தரமங்கையரென்று கருதும் வண்ணம் (நந்தலைவியாகிய) இப்பரத்தை வந்தணுகி (தன்னிடத்திவரைத் திரித்துக் கொள்ளக்கொடுத்து), — அன்று அங்கு உகிரால் அயனை சிரம் செற்றோன் - அன்று அவ்விடத்து நகத்தினாற் பிரமனைச்சிரந் தடிந்தவனது, — தில்லைச்சிற்றம்பலம் வழுத்தா புரம் மங்கையரின் - தில்லைச்சிற்றம்பலத்தைத் துதியாத புரங்களின் மங்கையரைப்போல, — நையாது - (நாம் பின்) வருந்தாது, — நம் பொற்பணை ஐய காத்தும் - நம் மலைநாட்டவரை வியப்ப (முன்னுடைத்தாகக்) காப்பேம். எ-று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - தலைமகனைத் தங்கட் டாழ்வித்தல்.

அரமங்கையர் - தெய்வப்பெண்களுக்குப் பொதுப்பெயர். வானரமங்கையர் - அவரின்மேலாயவர். ஐயபொற்பணையெனக்கூட்டினு மமையும். (௩௭௧)

தலைவியிகழ்ந்துரைத்தல்.

ஆரத்தவர்வாய்ப் பரத்தைத்தலைவி
முனிவுதோன்ற நனிபுகன்றது.

(எ-து.) (சேடிமார் தலைமகனை முன்னுறக்காப்பேமென்று தம்முட்கூறுவதனைக்கேட்டு) செம்பவளம் போன்ற வாயையுடைய இப்பரத்தை (இவனை யமரப் புல்லும் பரத்தையர்மாட்டு இவனருள்செல்லாமல் விலக்கேனாயின், என்மாட்டிவனைத்தக் தழாநின்ற இவன்மனைக்கிழத்தி யாகின்றேனை) முனிவுதோன்றத் தன்னைவியந்து கூறியது.

கனலூர்கணை துணையூர்கெடச்செற்றசிற்றம்பலத்தெம்
மனலூர்சடையோனருள்பெற்றவரினமரப்புல்லும்
மினலூர்நகையவர்தம்பாலருள்விலக்காவிடின்யான்
புனலூரனைப்பிரியும்புனலூர்கணைப்பூங்கொடியே.

(இ - ள்.) கனல் ஊர் கணை துணை ஊர் கெட செற்ற - அனல் வீசிய கணையால் ஒத்த ஊர் கெடும்படி வெகுண்ட,—சிற்றம்பலத்து எம் அனல் ஊர் சடையோன் - சிற்றம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய அனலொக்குஞ் சடையையுடையவனது,—அருள் பெற்றவரின் - அருளைப் பெற்றவர்போலச் (செம்மாந்து),—அமர புல்லும் மின்னல் ஊர் நகையவர் தம்பால் அருள்விலக்காவிடின் - (அவனைச்) செறியப் புல்லாநின்ற ஒளி பரந்த நகையையுடைய சேடியரிடத்து (அவன்) அருள்செல்லாது விலக்கேனாயின்,— யான் புனலூரனை பிரியும் புனல் ஊர் கண் அ பூங்கொடியே - யான், புனலூரனைப் பிரிந்து (வருந்தும்) புனல் பரக்குங் கண்ணையுடைய (அவன் மனைக்கிழத்தியாகிய) அப்பூங்கொடியே யாகின்றேன். எ-று. மெய்ப்பாடு - வெகுளி: பயன் - தனது பிணைர்த்தல். (௧௭௦)

நகைந் துரைத்தல்.

வேந்தன்பிரிய வேந்திழை ... டந் ... தை
பரத்தையைநோக்கி விரித்துரைத்த ... து.

(எ - து.) தலைமகன்பிரியத் தலைமகள்(தன்னையே தான்வியக்கும்) இற்பரத்தையை நோக்கி விரித்துக் கூறியது.

இறுமாப் பொழியு மன்றே தங்கை தோன்றினென் னெங்கை யங்கைச், சிறுமான் றரித்த சிற்றம் பலத்தான் றில்லையூரன் றிண்டோள், பெறுமாத் தொடுந்தன்ன பேரனுக்குப் பெற்றிபெற்றிலேன், றிறுமாப் பொழிய விறுமாப் பொழிந்த வின்முலையே.

(இ - ள்.) அங்கை சிறு மான் தரித்த சிற்றம்பலத்தான் - அங்கைக்கண் சிறுமானைத்தரித்த சிற்றம்பலத்தானது,—தில்லையூரன் திண் தோள் பெறும் மாத்தொடும் - தில்லைக்கணுளனாகிய ஊரனுடைய திண்ணிய தோள்களைப் பெறுதலானுண்டாகிய பெருமையோடும்,—தன்ன பேர் அனுக்கு பெற்ற பெற்றியினோடு இறுமாப்பு ஒழிய - தன்னவாகிய (அவனோடுண்டாகிய) பெரிய அனுக்கைப்பெற்ற தன்மைகளோடும் தான் செம்மாத்தலையொழிய,—இனை முலை இறுமாப்பு ஒழிந்த - இனைமுலைகள் எந்தலையொழிந்து நின்றன,—தங்கை தோன்றின் என் எங்கை இறுமாப்பு ஒழியும் அன்றே - (இனிதனக்கொரு) தங்கை தோன்றின் என்னுடைய தங்கையும் செம்மாத்தலையொழியுமன்றே. (அதனால் இற்பரத்தை வருவதறியாது தன்னைப்புகழ்கின்றாள்). எ-று. மெய்ப்பாடு - வெகுளியைச் சார்ந்த வழுகை: பயன் - பரத்தையது சிறுமை புணர்த்துதல்.

அவ்வகை பரத்தை தன்னைத்தானே வியந்துகூறிய வஞ்சினம் தன் பாங்காயினாரால் கேட்ட தலைமகள் பரத்தைக்குப் பாங்காயினர் கேட்ப இவ்வகை சொன்னாளென்பது. மாத்து - தலைமகற்குரியளாய் நிற்றலான் உண்டாகிய வரிசை. (௧௭௧)

நாணுதல்கண்டு மிகுத்துரைத்தல்.

மன்னவன்பிரிய நன்மனைக்கிழத்தி ... யை
நாணுதல்கண்ட வாணுதலுரைத்த ... து.

(எ - து.) தலைமகன் பிரியத் தலைமகள் நாணுவதைக்கண்டபாங்கி அவளது கற்புங்கலனும் கல்ல பகுதியையுடையவளா யிருக்தனவென அவள் கலத்தை மிகுத்துக்கூறியது.

வேயாதுசெப்பினடைத்துத்தமிவைகும்வீயினன்ன
நீயோடிசிற்றம்பலமனையாடில்லையூரனுக்கின்

தேயாப் பழியென நாணியென் கண்ணின் றனைமறைத்தாள்
ஓயா மியல்பிவள் கற்புநற் பாலவி யல்புகளே.

(இ-ள்.) வேயாது செப்பின் அடைத்து தமி வைகும் வீயின் அன்ன - சூடாது செப்பின்கணிட்டடைப்பத் தனியேவைகும் பூவைப்போலும்,— தீ ஆடு சிற்றம்பலம் அனையாள் - தீயின்கணாடுவானது சிற்றம்பலத்தை யொப்பாள்,— இல்லை ஊரனுக்கு இன்று ஏயா பழி என நாணி - தில்லையூரனுக்கு இன்று தகாதபழியெனக்கருதி நாணித் (தனதாற்றாமையை),— என்கண் இங்ஙனே மறைத்தாள் - என்னிடத்தும் இவ்வண்ணமே மறைத்தாள்,— இவள் கற்பு ஓயாம் இயல்பு - (அதனால்) இவளுடைய கற்பு (நமக்குத்) தாயா மியல்பையுடைத்து,— இயல்புகள் நல் பால - (இவளுடைய நாணமுதலிய) இயல்புகள் நல்லகூற்றன. எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - தலைமகளது பெருமை யுணர்த்துதல்.

தமிவைகும்வீ - அக்காலத்தி னிகழ்ந்த வேறுபாட்டிற் குவமை. அம்பலம் - இயற்கைநலத்திற் குவமை. (௩௭௪)

பாணன்வர வுரைத்தல்.

இகல்வேல வனகல் வறியாப்பாணனைப்
பூங்குழன்மாதர்க்குப் பாங்கிபகர்ந்தது.

(எ-து.) வலிமையையுடைய வேலனாகிய தலைமகனது அகற்சியையறியாத பாணன்வரவை, (நாணொடு துணியிருந்து வருந்தாநின்ற) பூங்குழலையுடைய தலைமகளுக்குப் பாங்கி, கூறியது.

விறலியும்பாணனும்வேந்தர்க்குத்தில்லையிறையமைத்த
திறலியல்யாழ்கொண்டுவந்துநின்றார்சென்றிராத்திசைபோம்
பறலியல்வாவல்பகலுறைமாமரம்போலுமன்றே
உறலியல்கூழைநல்லாய்தமியோமையறிந்திலரே.

(இ-ள்) விறலியும் பாணனும் தில்லை இறை அமைத்த திறல் இயல் யாழ் வேந்தற்கு கொண்டு வந்து நின்றார் - விறலியும் பாணனும் தில்லையிறைவனாலமைக்கப்பட்ட வெற்றியையுடைய யாழை நம்வேந்தனுக்குத் (தமிலெழுமங்கலம் பாடக்) கொண்டுவந்து நின்றார்கள்,— உறல் இயல் கூழை நல்லாய் - கருமணல் போலும் கூந்தலையுடைய நல்லாய்!—இரா சென்று திசை போம் பறத்தல் இயல் வாவல் பகல் உறை மாமரம் போலும் - இராப் பொழுதின்கண் சென்று திசையைக்கடக்கும் பறத்தலாகிய இயல்பினையுடைய வாவல் (இரைதேருங் காலமல்லாத பகற் பொழுதின்கணுறையும்) பெரியமரம் போலும்,— தமியோமை அறிந்திலர் - (இராப்பொழுதின்கண் துணையில்லாத) தமியோமை (இவர்) அறிந்திலர் போலும். எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - பாணனும் விறலியும் வரவுணர்த்திச் சிவப்பாற்றுவித்தல்.

மன்னும் - ஏவும் - அசைநிலை. வெற்றி வினைகளுடையா தல். சென்று பகலுறை மாமரமென்றியைப்பினு மமையும். இவர்வந்து நின்றதற்குத் தலைமகள் நம்மை இவர்கையாடிய வந்தாரென்றுமுனிந்தாளாகப் பாங்கி, இவ ரவன் செயலையறிந் தாரல்லரென்றும், தலைவர்க்கியல்பு நம்மிடத்துவருதலும் அவ ரிடத்துச் சேறலுமெனவும் இயல்பு சொல்லுதலாற் சிவப்பாற் றுவித்தாளாம். (௩௭௫)

தோழியெயற் பழித்தல்.

தலைமகனைத் தகவிலனெனச்
சிலைநுதற்பாங்கி நீங்குசெப்பியது.

(எ-து.) (பாணன் வரவுரைத்த) சிலைபோலு நுதலையுடைய பாங்கி, தலைமகனைத் தகவிலனென இயற் பழித்துக் கூறியது.

நீக்கின்றவங்குநின் றோவிறைதில்லைச்சிற்றம்பலத்தைக்
கோக்கின்றகணிந்துநின்றாடிதென்கூடலன்ன

லக்கின்னகையிவளையலயல்வயினல்குதலாற்
றக்கின்றிருந்திலனின்றசெவ்வேலெந்தனிவள்ளலே.

(இ - ள்.) திக்கின் இலங்கு திண் தோள் இறை - திசைகள் தோறும் விளங்காநின்ற திண்ணிய தோள்களையுடைய இறைவன், — தில்லைச்சிற்றம்பலத்து கொக்கின் இறகு அணிந்து நின்று ஆடி - தில்லைச்சிற் றம்பலத்தின்கண் கொக்கின் இறகதனை யணிந்து நின்றாடுவான், — தென் கூடல் அன்ன - (அவனது) தென்றிசைக் கணுண்டாகிய மதுரையை யொக்கும், — அக்கு இன் நகை இவள் நைய - அக்குமணிபோலும் இனிய நகையையுடைய இவள் வருந்த, — அயல்வயின் நல்குதலால் - அயலாரிடத்துப் பொருந்துதலால், — நின்ற செவ்வேல் எம் தனி வள்ளல் - (எல்லாராலு மறியப்பட்டு) நின்ற செவ்வேலேந்திய எம்முடைய ஒப்பில்லாத வள்ளல், — இன்று தக்கு இருந்திலன் - இன்று தகவுடைய னல்லன். எ-று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த நகை ; பயன் - தலைமகனை யியற்பழித் துத் தலைமகளை யாற்றுவித்தல்.

அயல் வயினென்பதற்குப் பொருணசை யுள்ளத்தாயகளின் காமத்திற் கயலென்றுரைப்பினு மமையும். (௧௭௬)

உழையரியற் பழித்தல்.

ஆரத்தவேலன்னனல் பரத்தையிற்பிரியக்
குழைமுகத்தவளுக் குழையருரைத்தது.

(எ-து.) குருதிதோய்ந்த வேலையுடைய தலைமகன் பரத்தையிற்பிரிய அவன் தகவிலனெனக் குழைந்த முகத்தையுடைய தலைமகளுக்கு உழையர் சொல்லி ஆற்றுவித்தது.

அன்புடைநெஞ்சத்திவள்பேதுறவம்பலத்தடியா
ரென்பிடைவந்தமிழ்துறநின்றாடியிருஞ்சுழியல்

றன்பெடையைத்தகவழிந்தன்னஞ்சலஞ்சலத்தின்
வன்பெடைமேற்றுயிலும்வயலூரன்வரம்பிலனே.

(இ - ள்.) அடியார் என்பிடை அமிழ்து வந்து ஊற - அடியவரது என்புகளிடையே யமிழ்தம் வந்தூற, — அம்பலத்து நின்றாடி - திருவம்பலத்தின்கண்ணே நின்றாடுவானது, — இரு சுழியல் தன்பெடையை தகவு அழிந்து அன்னம் சலஞ்சலத்தின் வன் பெடைமேல் துயிலும் வயல் ஊரன் - பெரிய சுழியலின்கண் தன்பெடைவருந்தத் தகுதிகெட்டு அன்னம் சலஞ்சலமென்னும் சங்கினது வலிய பெடைமேற் கிடந்துறங்கும் வயலாற் சூழப்பட்ட வூரையுடையவன், — அன்புடை நெஞ்சத்து இவள் பேதுற - தன்மாட்டன்புடைய நெஞ்சத்தை யுடைய இவள் மயங்காநிற்ப (இதற்குப் பிரியாமையின்), — வரம்பிலன் - தகவிலன். எ - று. மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த நகை; பயன் - தலைமகனை யியற்பழித்துத் தலைமகளை யாற்றுவித்தல்.

அன்புடை நெஞ்சத்திவ ளென்றதனால், பரத்தைய ரதன்மின்மைகூறப் பட்டதாம். சுழியல் - ஒரு திருப்பதி. வன்பெடை யென்றதனான் பரத்தையரது வன்மை விளக்கும். (௧௭௭)

இயற்பட மொழிதல்.

வரிசிலையூரன் பரிசுபழித்த
உழையர்கேட்ப வெழினகையுரைத்தது.

(எ-து.) (தலைமகனை யியற்பழித்த) உழையருக்கு நீர் கொடுமை கூறுகின்ற தென்னோ வெனத் தலைமகள், அவனை இயற்பட மொழிந்தது.

அஞ்சார்புரஞ்செற்றசிற்றம்பலவரந்தண்கயிலை
மஞ்சார்புனத்தன்றுமாத்தழையேந்திவந்தாரவரெ
னெஞ்சார்விலக்கினுநீக்கார்நனவுகனவுமுண்டேற்
பஞ்சாரமளிப்பிரிதலுண்டோசெம்பயோதரமே.

(இ-ள்.) அஞ்சார் புரம் செற்ற - (இறைவனென்று) அஞ்சாதவருடைய புரங்களையெரித்த, — சிற்றம்பலவர் அம் தண் கயிலை - சிற்றம்பலவரது அழகிய குளிர்ச்சிபொருந்திய கயிலையின்கண், — மஞ்சு ஆர் புனத்து - மஞ்சார்ந்த புனத்தின்கண், — அன்று மாந்தழை ஏந்தி வந்தார் அவர் - அன்று மாந்தழையையேந்தி வந்தவராகிய அவர், — கனவு என் நெஞ்சார் - (இன்று) கனவில் என் னெஞ்சத்தின் கண்ணார், — விலக்கினும் நீங்கார் - (யான்) தடுப்பினும் (அவ்விடத்தினின்றும்) நீங்கார், — கனவும் உண்டேல் - துயிலுமுண்டாயின், — பஞ்சு ஆர் அமளி எம் பயோதரம் பிரிதல் உண்டோ - பஞ்சார்ந்த படுக்கையின்கண் எங் கொங்கையைப் பிரிதலுண்டோ! (ஆசையால் நீர் கொடுமை கூறுகின்றதென்)? எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளை யியற்படமொழிந்தாற்றுதல்.

மஞ்சு - மேகம். அஞ்சார் - தறுகண்ணரெனினு மமையும். தழையேந்திவந்தார் என்பதனை முற்றென்று, இனி வெருவுதனைசெய்து நம்மைப் பாதுகாத்தார் இன்றிவ்வா றொழுகுநரென் றுரைப்பினு மமையும். எனது நெஞ்சாரென்பதூஉம், ஊரனைப் பரிசுபழித்த வென்பதூஉம் பாடம். (௧௫௭)

நினைந்துவியந் துரைத்தல்.

மெல்லியற்பரத்தையை விரும்பிமேவினோன்
அல்லியங்கோதையை யகனமர்ந்துரைத்தது.

(எ-து.) புனலாடப்பிரிந்து பரத்தையிடத் தொழுகாநின்ற தலைமகன் தலைமகளைப் பிரிந்து நீண்டிருத்தல் மிகவு மரிதென அவளை நினைந்து வியப்பாகக் கூறியது.

தெள்ளம்புனற்கங்கைதங்குஞ்சடையன்சிற்றம்பலத்தான்
கள்ளம்புகுநெஞ்சர்காணாவிறையுறைகாழியன்னா

ளுள்ளம்புகுமொருகாற்பிரியாதுள்ளியுள்ளுதொறும்
பள்ளம்புகும்புனல்போன்றகத்தேவரும்பான்மையளே.

(இ-ள்.) தெள் அம் புனல் கங்கை தங்கும் சடையன் - தெளிந்த நல்ல நீரையுடைய கங்கைதங்குஞ் சடையையுடையவன், — சிற்றம்பலத்தான் - சிற்றம்பலத்தின்க ணுள்ளவன், — கள்ளம் புகு நெஞ்சர் காணா இறை - பொய் நுழையு நெஞ்சத்தையுடையவர் ஒருஞான்றுங் காணாத இறைவன், — உறை காழி அன்னாள் - (அவன்) வசிக்கின்ற காழியை யொப்பாள், — உள்ளி ஒருகால் பிரியாது உள்ளம் புகும் - (யான் அவளை நினையாது வேறொன்றன்மேல் உள்ளத்தைச்செலுத்தும்போது தான் என்னை) நினைந்து ஒருகாலும் பிரியாது (என்) உள்ளம் புகாநின்றாள், — உள்ளுதொறும் பள்ளம் புகும் புனல் போன்று - (அவ்வாறன்றியான் அவளை) நினையுந்தோறும் (உயர்ந்த விடத்தினின்றும்) பள்ளத்திற்புகும் புனலையொத்து, — அகத்தே வரும் பான்மையள் - (தடுப்பரியளாய்) என் மனத்தின்கண்வரும் முறைமையளாகா நின்றனள். (ஆதலால் அவளைப்பிரிந் திண்டிருத்தல் அரிது போலும்). எ-று. மெய்ப்பாடு - மருட்கை; பயன் - பரத்தையி னீங்கித்தலைமகளிடத்தணுகல். தெள்ளம் புனல் - பண்புத் தொகை. (௧௫௮).

வாயில்பெறாது மகன்றிறநினைத்தல்.

பொற்றொடிமாதர் நற்கடைகுறு இ
நீடியவாயிலின் வாடினன்மொழிந்தது.

(எ-து.) (பரத்தையிற்பிரிந்து தலைமகள்நினைவொடுவந்த) தலைமகன், அவள் வாயிலின்கணின்று (இத்தகைய சிறுவன் என்னைவந்தணைகின்றிலன், ஆதலான், அவனை யெவ்வாறு காண்பதென) மனம்வாடி மகன்றிற நினைந்து கூறியது.

தேவன்றெனதருகொன்றையன்சிற்றம்பலம்வழுத்தும்
நாவன்றெனதருவாய்மையன்மன்னுகுதலையின்வா

யான்வண்டுறைதருமாலமுதன்னவன்வந்தணையா
றான்வண்டுறைதருகொங்கையெவ்வாறுகொ னண்ணுவதே.

(இ - ள்.) தேன் வண்டு உறைதரும் கொன்றையன் - தேனும் வண்டும் உறையுங் கொன்றைப் பூவையணிந்தவனது, — சிற்றம்பலம் வழுத்தும் - சிற்றம்பலத்தைத் துதிக்கும், — வான் வள் துறைதரு வாய்மையன் - வானிடத்துள்ளவாகிய வளவிய இடங்களை (எனக்குத்) தரும் மெய்ம்மையையுடையனும், — மன்னு குதலை இன் வாயான் - நிலைபெற்ற குதலையையுடைய இனியவாயையுடையானும், — வள் துறை தரும் மால் அமுது அன்னவன் - வளவிய கடல் தந்தபெருமையையுடைய அமிர்தத்தை யொப்பானுமாகிய மைந்தன், — வந்து அணையான் - என்னை வந்தணைகின்றிலன், — வண்டு உறை தரு கொங்கை தான் நண்ணுவது எவ்வாறுகொல் - (நறு நாற்றத்தால்) வண்டுகள் தங்கும் கொங்கையையுடையாளை யான் பொருந்துவது இனி யெவ்வாறோ? எ-று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - வாயில் கோடல் நெஞ்சொடு சொல்லியது.

தேனை நுகரும் வண்டெனினு மமையும். வழுத்துவார் பெறும் வானென்பது - வழுத்தும் வானென இடத்துநிகழ்பொருளின் றொழில் இடத்துமேலேறிற்று. இப்பொழுது குதலையையுடைத்தாகிய வாயான் மேல் வளவிய நாற்றுறைகளைச் சொல்லி எனக் கின்பத்தைச் செய்யும் அமிழ்து தன்னவனென் றுரைப்பினு மமையும். வாயிலின் - வாயிலால். (௩௯௦)

வாயிற்கணின்று தோழிக்குரைத்தல்.

பெருந்தகைவாயில் பெறாதுநின்
றருந்தகைப்பாங்கிக் கறியவுரைத்தது.

(எ - து.) வாயில்பெறாது மகன்றிறம் நினைகின்ற தலைமகன், தலைமகள் தன்வாட்டத்தை நீக்காத விரதம் யாதெனப் பாங்கிக்கறியக் கூறியது.

கயல்வந்தகண்ணியர்கண்ணிணையான்மிகுகாதரத்தான்
மயல்வந்தவாட்டமகற்றுவிரதமென்மாமதியி
னயல்வந்தவாடரவாட்டவைத்தோனம்பலநிலவு
புயல்வந்தமாமதிற்றில்லைநன்னாட்டுப்பொலிபவரே.

(இ - ள்.) வந்த ஆடு அரவு மாமதியின் அயல் ஆட்டவைத்தோன் - (துன்பஞ்செய்யக் கருதி) வந்த ஆடும் பாம்பைப் பெருமைபொருந்திய பிறையின்பக்கத்து (அதனை வருத்தாமல்) ஆட்டவைத்தவனது, — அம்பலம் நிலவு புயல்வந்த மாமதில் தில்லை - அம்பலம் நிலைபெற்ற புயல் தங்கிய பெரிய மதிலையுடைய தில்லையைச்சூழ்ந்த, — நல் நாடு பொலிபவர் - நல்ல நாட்டிற் பொலியும் மகளிர், — கயல் வந்த கண்ணியர் - கயல் போலுங் கண்ணையுடையவரது, — கண்ணிணையான் மிகுகாதரத்தால்வந்த - கண்ணிணையால் (ஒருகாலைக் கொருகால்) மிகாநின்ற அச்சத்தால்வந்த, — மயல் வாட்டம் அகற்று விரதம் என் - மயக்கத்தினுண்டாகிய வாட்டத்தை நீக்காத (இவ்) விரதம் யாதாம்? எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் - வாயில் கோடல் நெஞ்சொடு சொல்லியது.

தில்லைநன்னாட்டுப் பொலிபவர் அகற்றாதவென வினையும். பொலிபவர்க்கு என்னு நான்கனுருபு விகாரவகையாற் றொக்க தெனினு மமையும். இது முன்னிலைப் புறமொழி. இதனுள் கயல்வந்த கண்ணியென்றது தலைமகளை. தில்லைநன்னாட்டுப் பொலிபவளென்றது பாங்கியை இளமதிக்குவமை தலைமகளும் அரவிற்குவமை தலைமகனும் ஈசனுக்குவமை பாங்கியுமென்று க்கி, அவ்வகைத்தாகிய பாம்பையும் மதியையும் தம்மிற் பகையறுத்து ஓரிடத்தே விளங்கவைத்தாற்போல என்னுடன் அவட்குண்டாகிய வெறுப்பைத் தீர்த்து விளங்கவைத்தல் உனக்குக் கடனென்றுரைத்ததென வுள்ளுறைகாண்க. மதியையரவு ஏதங் குறித்து வந்தாற்போலத் தலைமகளைத் தலைமகன் ஏதங்குறித்து

வருதலாவது தலைமகளுக்கு ஊடல் புலவி துனியென்னும் வெறுப்புத் தோன்றுதற்குத் தக்க காரணங்களைத் தலைமகன் உண்டாக்கிக்கொண்டு வருதல். அதனைக்கண்டு மதிக்கச்சந்தோன்றினாற்போலத் தலைமகனைக்கண்டு தலைமகளுக்கும் ஊடல் புலவி துனியென்னும் வெறுப்புத் தோன்றிற்று. ஆதலால் அத்தலைமகனையும் தலைமகளையும் மதிக்கு மரவுக்கு மொப்பச் சிலேடித்த சிலேடைக்கு மறுதலையாகாது "தேவரனையர் கயவர்" என்றும் போலவா மென்க. கயல்வந்த கண்ணியர் கண்ணிணையால் வந்த அச்சத்தால்வந்த மயக்கத்தால்வந்த வாட்டம் இவனுக்கு வருவதற்குக் காரணம் தலைவி பராமுகஞ் செய்யும்படி தான் வருதல். இதனைத் தீர்த்தல் இல்லை நன்னுட்டுப் பொலியு மகளிர்க்குக் கடனென்றுமென்க. அது "பிணிக்குமருந்து பிறமனணி யிழை தன்னோய்க்குத் தானேமருந்து" என்று சொல்லியவாறு போலக் கண்ணுலுண்டாகிய நோய்க்குக் கண்ணே மருந்தாமென்று சொல்லியவாறு மெனக் கொள்க. (௩௮௧)

வாயில்வேண்டத் தோழிகூறல்.

> வைவேலண்ணல் வாயில்வேண்டப்
> பையரவல்குற்பாங்கிபகர்ந்தது.

(இ - ள்.) வாயில்வேண்டிய தலைமகனுக்குப் பட வரவல்குலையுடைய பாங்கி, அவன் செய்தியைக் கூறியது.

> கூற்றுயினசினவாளியென்னீர்கண்கள்கோளிழித்தாற்
> போற்றுன்செறிபிருட்பொக்கமென்னீர்கன்றகன்றபுனிற்
> றீற்றுவெனநீர்வருவதுபண்டின்றெம்மீசர்தில்லைத்
> தேற்றுர்கொடிநெடுவீதியிற்போதிரத்தேர்மிசையே.

(இ - ள்.) கூற்றுயின சினம் ஆளி என்னீர் - கூற்றம்போலக் கொடியவாகிய கோபத்தையுடைய ஆளிகளைக் (கொலை செய்வனவாகக்) கருதாது,—கண்கள் கோள் இழித்தாற் போற்றுன் செறி இருள்பொக்கம் என்னீர் - கண்களின் பார்வையை நீக்கினாற்போலச் செறிந்த இருளின்மிகுதியை (தான் இடையூருக) நினையாது,—கன்று அகன்ற புனிற்று ஈற்று என - கன்றை யகன்ற ஈன்றணிமையையுடைய ஈற்றுவையொத்து,—பண்டு நீர் வருவது-பண்டு நீர் எம்மாட்டு வருவது,—இன்று எம் ஈசர் தில்லை-இன்று எம்முடைய ஈசரது தில்லையிலே,—தேற்றுர் கொடி நெடு வீதியில் - (எமது) பொருந்தாதவரது கொடியையுடைய நெடிய வீதியில், — தேர்மிசை போதிர் - (எம்மாட் சேர்ந்து வந்த) அத்தேரின்மே லேறிச் சென்றீர். (இதுவன்றே எம்மாட்டு நும் அருளாயினவாறு). எ - று. மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயின் மறுத்தல்.

ஆளியென்னீர் பொக்கமென்னீர் என்பனவற்றை முற்றுக வுரைப்பினுமமையும். கண்களுக்குக் கோளென்றது பார்வை. இதனை யிழித்தலென்பது கண்மணியை வாங்குதல். தானென்பது அதுவன்றி இது வொன்றென்பதுபட நின்ற தோரிடைச்சொல். அசைநிலை யெனினு மமையும். ஈற்றுவென்றது கடுஞ்சூல் ஈகன்றிப் பசுவாலின்ற ஆவை. (௩௮௨)

தோழி வாயில்வேண்டல்.

> வாயில்பெறுது மன்னவனிற்ப
> ஆயிழைபவட்குத் தோழிசொல்லியது.

(இ - ள்.) தலைமகளுக்குத் தலைமகன் முன்செய்த உதவியைக் கூறிச்சென்று அவர் தன் பெருமையை நினையாது இன்று நம்வாயிலில்வந்து ஒன்றுங் கூறிலர், இதற்குயாம் செய்வதியாதெனப் பாங்கி வாயில் வேண்டுகின்றது.

> வியந்தலைநீர்வையமெய்யமிறைஞ்சவின்டோய்குடைக்கீழ்
> வயந்தலைகூர்ந்தொன்றுய்வாய்திறவார்வந்தவாளரக்கன்
> புயந்தலைநீரப்புலியூரமைத்தோர்க்கும்பொருப்பிற்
> கயந்தலையானைகடிந்தவர்க்காமிலே.

(இ - ள்.) கார் மயிலே - கார்காலத்து மயிலையொப்பாய்! — வந்த வான் அரக்கன் புயம் தலை நிர - (வரையையெடுக்க) வந்த வாலியினையுடைய அரக்கனது கையுந்தலையும் உடலினின்றும் நீங்க, — புலியூர் அரன் இருக்கும் பொருப்பில் - புலியூரான் வாளாவிருக்கும் கைலைமலையின்கண், — கயம் தலை யானை கடிந்த விருந்தினர் - மெல்லியதலையையுடைய யானையை (நம்மேல்வாராமல் அன்று) மாற்றிய (நம்) விருந்தினர், — விண் தோய் குடைக்கீழ் - விண்ணைத்தோயா நின்ற (தமது) குடையின் கீழ், — அலை நீர் வையம் வியந்து மெய்யே இறைஞ்ச - கடலாற் சூழப்பட்ட வுலகத்துள்ளாரெல்லாரும் வியந்து சென்று அகனமர்ந்து வணங்க, — வயா தலைகூர்ந்து ஒன்றும் வாய் திறவார் - (தாம் தம்பெருமையை நினையாது நம் கடைவாயிலின்கண் வந்து நின்று) வேட்கைப் பெருக்கம் தம்மிடத்துச்சிறப்ப ஒன்றுஞ்சொல்லுகின்றிலர். (இனிமறுத்தல் அரிது). எ-று. மெய்ப்பாடு - இளிவரல்; பயன் - தலைமகளைச் சிவப்பாற்று வித்தல்.

விண்டோய் குடைக்கீழிறைஞ்ச வெனவினையும். இருந்து அனையல்லது, ஒருமுயற்சி தோன்றுமையின் இருக்குமென்றும். இற்றிலிழைத்து விளையாடும் வழி விருந்தாய்ச்சென்று நின்றுழி விடத்தகலின் விருந்தின ரென்றாள். இற்செறிக்கப்பட்ட விடத்து ஞான்காலத்து விருந்தாய்ச் சென்றுழுகலின் விருந்தினரென்றுளெனினு மமையும். கார்ப்புனத்தே யென்பதூஉம் பாடம். ()

மனையவர் மகிழ்தல்.

கன்னிமானேக்கி கனன்றுநோக் க
மன்னியமனையவர் மகிழ்ந்துரைத்த து.

(எ - து.) இளமானேக்குமுடைய தலைமகள் கண் சிவந்துநோக்க இவள்கண் சிவக்கவும் கற்றனவென மனையவர் மகிழ்ந்து கூறியது.

தேவியங்கண்டிகழ்மேனியன்சிற்றம்பலத்தெழுது
மோவியங்கண்டன்னவொண்ணுதலாட்கோகையுய்ப்பான்
மேவியங்கண்டனையோவந்தனனெனவெய்துயிர்த்துக்
காவியங்கண்கழுநீர்ச்செவ்விவெளவுதல்கற்றனவே.

(இ - ள்.) தேவி அங்கண் திகழ் மேனியன் - தேவி யவ்விடத்து விளங்கு மேனியை யுடையவனது, — சிற்றம்பலத்து எழுதும் - சிற்றம் பலத்தின்கண் எழுதப்பட்ட, — ஓவியம் கண்டன்ன - ஓவியத்தைக் கண்டாற்போலும், — ஒள் நுதலாள் தனக்கு ஓகை உய்ப்பான் வந்தனன் - ஒள்ளிய நுதலையுடையாள் தனக்கு ஓகைகொண்டு செல்லவேண்டி (காதலன்) வந்தான், — மேவு இயம் கண்டனையோ என - வந்துபொருந்து இன்ற இயவொலி கேட்டனையோவென்று (கண்டார் வந்து சொல்லக்கேட்டு), — வெய்து உயிர்த்து காவியம் கண், — வெய்தாகவுயிர்த்துக் குவளைப்பூப் போலுங்கண்கள், — கழுநீர் செவ்வி வெளவுதல் கற்றன - கழுநீர்மலர்ச் செவ்வியை வெளவுதல் வல்லவாயின; (இனியென்னிகழும்). எ-று. மெய்ப்பாடு-அழுகை; பயன்-தலைமகள்வாயில் நேராமையுணர்த்துதல்.

அங்கட்டிகழ் மேனியென்பது மெலிந்து நின்றது. தேவியினுடைய வழகிய கண்மலர்கள் சென்று விளங்கு மேனியையுடையவனெனினு மமையும். மேவியங்கண்டனையோ வந்தனனென வென்பதற்கு அழகியகண்டன் வந்தானென்று மேவியுரைப்ப வெனினு மமையும். ஐயோவென்றது உவகைக்கண் வந்தது. வெய்துயிர்த்தற்கு வினைமுதல் உயிர்த்தற்குக் கருவியாகிய பொறியெனினு மமையும். (௩௮௨)

வாயின்மறுத் துரைத்தல்.

மடவரற்றோழி வாயில்வேண் ட
அடல்வேலவ னருளுரைத்த து.

(எ - து.) கற்பின் வரலாற்றையுடைய பாங்கி, வாயில்வேண்டத் தலைமகனரு ளிறுவன்றோ வெனப் பாங்கிக்குத் தலைமகள் வாயின் மறுத்தது.

உடைமணிகட் டிச்சிறுதேருருட் டியுலாத்தருமிந்
நடைமணியைத்தந்தபின்னர் முன்னான்முகன்மாலறியா
விடைமணிகண்டர்வண்டில்லைமென் றோகையன்னார் கண்முன்ன [ம்
கடைமணிவாணகையாயின்று கண்டனர் காதலரே.

(இ - ள்.) மணிவாள் நகையாய் - முத்துப்போலு மொளியையுடைய நகையையுடையாய், — உடைமணிகட்டி சிறுதேர் உருட்டி உலாத்தரும் - உடைமணியை யரையிற்கட்டிச் சிறு தேரையுருட்டி உலாவும், — இ நடைமணியை தந்த பின்னர் - இப்புதல்வனை நமக்குத்தந்தபின், — முன் நான்முகன் மால் அறியா விடை மணிகண்டர் - முற்காலத்து நான்முகனுமாலுந் தேடியுமறியாத விடையையுடைய மணிகண்டரது, — வண் தில்லை மெல் தோகையன்னார் கண் முன் - வளவிய தில்லையின் மெல்லிய மயிலையொப்பார்கண் முன்னே, — நம் கடை காதலர் இன்று கண்டனர் - நங்கடையைக்காதலர் இன்று கண்டார்; (இதுவன்றோ நம்மாட்டு அவரருள்). எ-று. மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயின் மறுத்தல்.

கட்டியென்பதீண்டுத் தங்கியென்னும்பொருட்டாய் நின்றது.

பாணனொடு வெகுளுதல்.

மன்னியாழ்ப்பாணன் வாயில்வேண் டு
மின்னிடைமடந்தை வெகுண்டுரைத் தது.

(எ-து.) (பாங்கிக்குவாயின்மறுத்த) தலைமகள், நின்னிடத்து நீங்காதவருளுடையாரென்று நீ சொல்லவேண்டுமோ நினது நல்ல நல்ல பொய்யைப் பொருந்தி நிற்கலுற்றோ நீ என்னில்லிற் போந்ததெனவாயில்வேண்டிய பாணனொடு வெகுண்டு கூறியது.

மைகொண்டகண்டர்வயல்கொண்டதில்லைமல்கூரர்நின்வாய்
மெய்கொண்டவன்பினரென்பதென்னிள்ளாவருள்பெரியர்
வைகொண்டவூசிகொற்சேரியின்விற்றெம்மில்வண்ணவண்ணப்
பொய்கொண்டுநிற்கலுற்றோபுலையாத்தின்னிபோந்ததுவே.

(இ - ள்.) மைகொண்ட கண்டர் - கருமையைப் பொருந்திய கண்டத்தையுடையவரது, — வயல் கொண்ட தில்லை மல்கு ஊரர் - வயலைப்பொருந்திய தில்லைக்கணுளராகிய வளமல்கிய ஊரையுடையவர், — நின்வாய் மெய்கொண்ட அன்பினர் என்பது என் இள்ளா அருள் பெரியர் - நின்கண் மெய்ம்மையைப் பொருந்திய அன்பையுடையரென்று நீ சொல்லவேண்டுமோ (அவர் எம்மிடத்து)நீங்காத அருள்பெரியரன்றோ! (அதுகிடக்க),—வை கொண்ட ஊசி கொல் சேரியின் விற்று - கூர்மை பொருந்திய ஊசியைக் கொற்சேரியின்கண்விற்று,— எம் இல் வண்ண வண்ண பொய்கொண்டு நிற்கலுற்றோ - எம்மில்லத்து நின்னுடைய நல்ல நல்ல பொய்ம்மையைப் பொருந்தி நிற்கலுற்றோ,—புலை ஆ தின்னி போந்தது - புலையனாகிய ஆத்தின்னி என்டு நீ போந்தது? (இதுசாலநன்று). எ-று. மெய்ப்பாடு - வெகுளி; பயன் - வாயின் மறுத்தல். (௩அ௬)

பாணன் புலந்துரைத்தல்.

கருமலர்க்கண்ணிக னன்றுகட்டுரைப்ப ப்
புரியாழ்ப்பாணன் புறப்பட்ட து.

(எ - து.) கருமையாகிய குவளைமலர்போன்ற கண்ணையுடைய தலைமகள் வெகுண்டுகூற வாயில் பெறுமையின் பாணன்புலந்து கூறியது.

கோல்லாண்டிலங்குமழுப்படையோன்குளிர் தில்லையன்னாய்
வில்லாண்டிலங்குபுருவநெரியச்செவ்வாய்துடிப்பக்
கல்லாண்டெடேல்கருங்கண்சிவப்பாற்றுகறுப்பதன்று
டல்லாண்டியேனடிவலங்கொள்வன்பணிமொ

(இ - ள்.) சொல் ஆண்டு இலங்கு மழு படையோன் - சொற்றொழி லவ்விடத்து விளங்கும் மழுவாகிய படையை யுடையவனது,—குளிர் தில்லையன்னாய் - குளிர்ச்சிபொருந்திய தில்லையை யொப்பாய்!—வில் ஆண்டு இலங்கு புருவம் நெரிய செவ்வாய் துடிப்ப கல் ஆண்டு எடேல் - வில்லை யடிமைக்கொண்டு விளங்காநின்ற புருவம் நெரியச் செவ்வாய் துடிப்ப எறிதற்குக் கல்லை அவ்விடத் தெடுக்கவேண்டா,—கரு கண் சிவப்பு ஆற்றுக - கரியகண்களைச் சிவப்பாற்றுவாயாக,—கறுப்பது அன்று - வெகுளப்படுவதன்று,—பல்லாண்டு - நினக்குப் பல்லாண்டுகள் உளவாகவேண்டும்,—பணிமொழி - பணிமொழியை யுடையாய்,—அடியேன் அடிவலம் கொள்வன் - (யான்வேண்டிய தேயத்துக்குப்போக) அடியேன் நின்னடியை வலங்கொள்ளா நின்றேன் எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - சிவப்பாற்றுவித்தல்.

கருங்கண்ணினது சிவப்பெனினு மமையும். பல்லாண்டென்றது - தலைமகளுடை ஞான்டாகிய வெறுப்புத்தீர்ந்து கூடியிரு மென்று சொல்லியது நமக்குத் தவறுயிற்றுயின் பல்லாண்டும் இப்படி யிருப்பீரொன்றுன். இப்படி யிருப்பீரென்றது பல்லாண்டு மிப்படித் தனித்திருப்பீரென்று வளமாகத் தன் பாண் வார்த்தை சொல்லியவா றென்றறிக. புருவநெறிக்க வென்பதூஉம் வெவ்வாயென்பதூஉம் பாடம். புரி - நரம்பு. (௩௮௭)

விருந்தொடுசெல்லத் துணிந்தமைகூறல்.

பல்வினை பரிசக ... ன்ன
டில்லோ ரியம்பிய ... து.

(எ - து.) (வாயில் பெறுது பாணன்புலந்து நீங்க யாவர்க்கும் வாயிலோராது வெகுண்டிருத்தலால் தலைமகன் விருந்தொடு வந்தானென்னத் தலைமகள் புன்மையளாக), இவ ளென்ன மனையறக் கிழத்தியோவென இல்லோர் தம்முட் கூறியது.

மத்தக்கரியுரியோன்றில்லையூரன்வரவெனலுந்
தத்தைக்கிளவிமுகத்தாமரைத்தழல்வேல்மிளிர்ந்து
முத்தம்பயக்குங்கழுநீர்விருந்தொடென்றோதுமுன்னஞ்
சித்தக்கருங்குவளைச்செவ்வியோடிக்கெழுமினவே.

(இ - ள்.) மத்தம் கரி உரியோன் - களிப்பை யுடைத்தாகிய யானையின் தோலை யுடையவனது,— தில்லையூரன் வரவெனலும் - தில்லையூரனது வரவென்று சொல்லத் தொடங்குதலும்,—தத்தை கிளவி - கிளியின் மொழியை யுடையாளது,—முகம் தாமரை தழல்வேல் மிளிர்ந்து முத்தம் பயக்கும் கழுநீர் - முகமாகிய தாமரைக்கண்ணே தழலையுடைய வேல்போலப் பிறழ்ந்து நீர்த்துளியாகிய முத்தத்தை யுண்டாக்காநின்ற கண்ணாகிய செங்கழுநீர் மலர்,—விருந்தொடு என்றோத முன்னம் - விருந்தொடென்று சொல்லுவதற்கு முன்,—சித்தம் கருகுவளை செவ்வி ஓடி கெழுமின - விளையப்பண்டை நிறமாகிய கரிய குவளைச்செவ்வி பரந்து மேவின. (என்னை மனையறக்கிழத்தியோ?) எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன்-மெய்ம்மகிழ்தல்.

மத்தம் - மதமென்பாருமுளர். ஊரன் வரவென வினையெச்சமாகப் பிரிப்பினு மமையும். சித்தமென்பதனைச் செய்யப்பட்டதென்னும் பொருளதோர் வடமொழித் திரிபென்பாருமுளர். விருந்து வாயிலாகப்புக்க வழி இல்லோர் சொல்லியது. (௩௮௮)

உடனணிவித்தல்.

தோன்றலைத்துணையொடு தோழிகண் டு
வான்றகைமடந்தையை வருந்தத்தணித்த து.

(எ-து.) (விருந்தேற்றுக்கொண்ட) தலைமகளிடஞ் சென்று நம்முடைய தோன்றலைத் தனக்குத் துணையாகக் கொண்டுவந்து தோன்றுதலான் நினது கவலையொழிகவெனப் பாங்கி அவளை யுடன்தணிவித்தது.

கவலங்கொள்பேய்த்தொகைபாய்தரக்காட்டிடையாட்டுவந்த
தவலங்கிலாச்சிவன்றில்லையன்னாய்தழுவிம்முழுவிச்
சுவலங்கிருந்தநந்தோன்றற்றுணையெனத்தோன்றுதலா
லவலங்களைந்துபணிசெயற்பாலையரசனுக்கே.

(இ-ள்.) கவலம்கொள் - கவற்சி கொள்ளுதற்கேதுவாகிய,—பேய் தொகை - பேய்த்திரள்,— பாய்தர - (காணங்களைப்) பாயாநிற்ப,—காட்டிடை - புறங்காட்டின்கண்,—ஆட்டு உவந்த தவல் அங்கு இல்லா சிவன் - ஆடுதலை விரும்பிய கேடங்கில்லாத சிவனது,— தில்லை யன்னாய் - தில்லையை யொப்பாய்! — தழுவி முழுவி சுவல் அங்கு இருந்த நம் தோன்றல் துணையென தோன்றுதலால் - தழுவி முத்தங்கொண்டு சுவலிடத்தே தங்கியிருந்த நம்முடைய தோன்றலைத் தமக்குத் துணையெனக்கருதிவந்து தோன்றுதலான்,—அவலம் களைந்து அரசனுக்கு பணிசெயற்பாலை - நினதுள்ளத்துக் கவற்சியை நீக்கி இனியரசற்குக் குற்றேவல் செயற்பாலை. எ-று. மெய்ப்பாடு - பெருமிதம்; பயன் - தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல்.

தழுவிமுழுவித் தோன்றுதலா னெனவியையும். (ஙஅக)

அணைந்தவழி யூடல்.

தெளிபுன லூரன் சென்றணைந்தவ ழி
ஒளிமதி நுதலி யூடியுரைத்த து.

(எ-து.) (பாங்கியானூடல் தணிக்கப்பட்டுப் பள்ளியிடத்தானாகிய) மதிபோலு நெற்றியையுடைய தலைமகள் தன்னையணைந்தவழி அவனோடூடியுரைத்தது.

சேலுந்திகழ்வயற்சிற்றம்பலவர்தில்லைநகர்வாய்
வேலுந்திகழ்கண்ணிளையார்வெகுள்வர்மெய்ப்பாலன்செய்த
பாலுந்திகழும்பரிசினமேவும்படிறுவவேங்
காலுந்தொடரேல்விடுதீண்டலெங்கைத்தலமே.

(இ-ள்.) சேல் திகழ் வயல் சிற்றம்பலவர் - சேல்விளங்கும் வயலையுடைய சிற்றம்பலவரது,— தில்லை நகர்வாய் - தில்லை நகரிடத்துளராகிய,—வேல் திகழ் கண் இளையார் - வேல்போலுங் கண்ணையுடைய (நின் காதலிமாராகிய) இளையவர்,—வெகுள்வர் - (நீ செய்கின்ற விதனை யறியின்) கோபிப்பார்,— மெய்ப்பாலன் செய்த பால்திகழும் பரிசினம் - (அன்றியும்) மேனியானது சிறுவனா லுண்டாக்கப்பட்ட பால் புலப்படுந்தன்மையை யுடையேமாதலின் (நினக்குத்தகேம்), — மேவும் படிறு உவவேம் - (அதுவேயுமன்றி யாமும்) நீயும் மேவு நாணின்மையோடு கூடிய கள்ளத்தை விரும்பேம், — கால் தொடல் - (அதனால்) எங்காலைத் தொடாதொழி,— தொடரேல் - எம்மைத் தொடரவேண்டா,—எம் கைத்தலம் தீண்டல் - எங் கைத்தலத்தைத் தீண்டற்பாலையல்லை, — விடு - விடுவாயாக. எ-று. மெய்ப்பாடு - வெகுளி; பயன் - ஊடனீக்குதல்.

திகழ்வயற்றில்லையென வியையும். நான்கிடத்தும் தாவென்பது அசைநிலை. பரிசினமேனு மென்பதூஉம் பாடம். (ஙஅஉ)

புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தல்.

ஆங்கதனுக் கழுக்கமெய் தி
நீங்குமென்முலை விட்டுரைத்த து.

(எ-து.) தலைமக னணைந்தவழியூடுகின்ற தலைமகள் ஊடல்தீராநின்ற தலைமகனோடு புனலாட்டுவித்தமை கூறி அப்படிநிற்று நிலையால் வெளிப்பட வுரைத்தது.

சேந்தார்ந்தன்கொன்றைச்சிற்றம்பலவர்தில்லைநகரோர்
பந்தார்விரலியைப்பாய்புனலாட்டிமன்பாவியேற்கு
வந்தார்பரிசமன்றாய்நிற்குமாறென்வளமனையிற்
கொந்தார்தடந்தோள்விடங்காலயிற்படைக்கொற்றவரே.

(இ-ள்.) கொந்தார் தடம் தோள் - கொத்துமாலை நிறைந்த பெரிய தோளினையும்,—விடம் கால் அயில் படை கொற்றவர் -

நஞ்சைக்காலுங் கூரிய படையினையுமுடைய கொற்றவர், — பாவியெற்கு - தீவினையேற்கு, — என் வளமனையில் நிற்குமாறு - எனது வளமனையில்வந்து நிற்கின்றபடி, — ஓர் பந்தார் விரலி - பந்து பயின்ற விரலை யொருத்தியை, — செந்தார் நறுங்கொன்றை சிற்றம்பலவர் தில்லைநகர் - செய்ய தாராகிய நறிய கொன்றைப் பூவினையுடைய சிற்றம்பலவரது தில்லையாகிய நகர் (வரைப்பில்), — பாய் புனல் ஆட்டி வந்தார் பரிசம் அன்றாய் - பாய்ந்த புனலை யாட்டுவித்து (வெளிப்படத் தவறுசெய்து) வந்தார் (இவர் நிற்கும்) பரிசமன்றாய் (மனத்தவறு செய்யாதார் வந்து நிற்குமாறு வந்து நின்றாராயின், அது பொறுத்தலரிது). எ-று. மெய்ப்பாடு - வெகுளி, பயன் - ஊடனீங்குதல்.

தில்லைநகரோர் பந்தார்விரலியென வியைப்பினு மமையும். மன் - ஒழியிசைக்கண் வந்தது, அசைநிலை யெனினு மமையும். கொற்றவர் ஒருத்தியைப் புனலாட்டிவந்தார் பரிசமன்றாய்ப் பின்னே மனைக்கண்வந்து நிற்குமா றென்னென்று கூட்டியுரைப்பினு மமையும். கொந்துமாலை - பலவாயொன்றாகிய மாலை. (...)

கலவிகருதிப் புலத்தல்.

கலைவளரல்குலை மகன்றன்னொ டு
கலவிகருதிப் புலவிபுகன்ற து.

(எ - து.) புனலாட்டு வித்தமைகூறிப் புலந்தமே கலையணிந்த தலைமகள், (ஊடல் தீர்க்க நுதலுந்தோ ளுழுதலியவற்றைத் தைவந்து வருடித் தலையளிசெய்த) தலைமகனோடு கலவியைநாடிப் புலந்து கூறியது.

மின்றுன்னியசெஞ்சடைவெண்மதியன்விதியுடையோர்
சென்றுன்னியகழற்சிற்றம்பலவன்றென்னம்பொதியி
னன்றுஞ்சிறியவரில்லெமதில்லநல்லூரமன்னோ
வின்றுன்றிருவருளித்துணைசாலுமன்னெங்களுக்கே.

(இ - ள்.) மின் துன்னிய செஞ்சடை வெண் மதியன் - மின்னையொத்த செஞ்சடைக்கண் வைத்த வெண்பிறையை யுடையான், — விதியுடையோர் சென்று உன்னிய கழல் சிற்றம்பலவன் - நற்பாலை யுடையோர் (சிற்றின்பத்திற்குக் காரணமான புலன்களைவிட்டுச்) சென்று நினைத்த கழலையுடைய சிற்றம்பலவன், — தென்னம் பொதியின் - (அவனது) தெற்கின்கணுண்டாகிய பொதியிலிடத்து, — எமது இல்லம் நன்றும் சிறியவர் இல் - எமது குடி பெரிதுஞ் சிறியவரது குடி (அதனால்), — நல்லூர - நல்ல வூரையுடையாய், — இன்று உன் திருவருள் எங்களுக்கு இத்துணை சாலும் - (முற்காலத்து நின் தலையளி வேண்டுமாயினும்) இப்பொழுது உனது திருவருள் எங்கட்கு (நீ வந்த) இத்துணையு மமையும்; (நீ தலையளி செய்யவேண்டுவதின்றே). எ-று. மெய்ப்பாடு - வெகுளி; பயன் - புலந்தல் புலவிநீங்கியதூஉமாம். மன்னும் ஓவும் மன்னும் அசைநிலை. ( )

மிகுத்துரைத் தூடல்.

நாடுமூரு மில்லுஞ்சுட் டி
ஆடற்பூங்கொடி யூடியுரைத்த து.

(எ - து.) (கலவிகருதிப் புலவாநின்ற) நாடகத் தையுடைய தலைமகள் (புணர்தலுறுகின்ற தலைமகனுடன்) நீர் விழுமியநாட்டு விழுமியநல்லூர் விழுமிய குடியிலுள்ளீர் எம்போல்வாரிடத்து இவ்வாறு புணரவிரும்புதல் நுமக்கு விழுமிய வல்லவென வூடியுரைத்தது.

செழுமியமாளிகைச்சிற்றம்பலவர்சென்றன்பர்சிந்தைக்
கழுமியகூத்தர்கடிபொழிலேழினும்வாழியரோ
விழுமியநாட்டுவிழுமியநல்லூர்விழுக்குடியீர்
விழுமியவல்லசொல்லோவின்னவாறுவிரும்புவதே.

(இ - ள்.) செழுமிய மாளிகை சிற்றம்பலவர் - செழுமிய மாளிகைகளாற் சூழப்பட்ட சிற்றம்பலத்தை யுடையார், — அன்பர் சிந்தை சென்று கழுமிய கூத்தர் - அன்பர் சிந்தைக்கண் சென்று பொருந்திய கூத்தர்,—கழி பொழில் ஏழினும் - அவரது காவலையுடைய உலகமேழினுள்ளும், — விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுகுடியீர் - சிறந்த நாட்டின்கண் சிறந்த நல்லவூரில் சிறந்த குடியிலுள்ளீர், — இன்னவாறு விரும்புவது விழுமிய வல்லகொல் - (எம்போல்வாரிடத்து) இத்தன்மையவாகிய நெறியை விரும்புதல் (உமக்குச்) சிறந்தன வல்லபோலும். எ-று. மெய்ப்பாடு - வெகுளி ; பயன் - புலத்தல், புலவி நீங்கியதூஉமாம்.

வாழியும் அரோவும் அசைநிலை. விரும்புவதென்புழி, இன்னவாறு விரும்புவ போல்வனவென்பது கருத்தாகலின், ஒருமைப் பன்மை மயக்கம் அமையுமாறு முடைத்து. இன்னவாறென்பதற்கு இன்னவண்ணம் விரும்புதலெனினு மமையும். விரும்புதலென்பதூஉம்பாடம். ஆடல் - நடக்கம். (ருகா.)

ஊடல் வீட வாடியுரைத்தல்.

வாடா வூ ட
னீடா வாடிய து.

(எ-து.), (தணிக்கத்தணியாது மிகுத்துரைத்துத் தலைமகள் மேன்மேலும்) ஊடிநிற்பத் தலைமகன் இவள் பண்டைய ளல்லள். இது நம்மை வருத்துவதோர் மாயமாமென்னத் தன்னெஞ்சிற் குரைத்து வாடி நின்றது.

திருந்தேனுயநின்றசிற்றம்பலவர்தென்னம்பொதியி
லிருந்தேனுயவந்திணைமலர்க்கண்ணினின்னோக்கருளிப்
பெருந்தேனெனநெஞ்சுகப்பிடித்தாண்டநம்பெண்ணமிழ்தம்
வருந்தேலதுவன்றிதுவோவருவதொர்வஞ்சனையே.

(இ - ள்.) திருந்தேன் உய்ய நின்ற சிற்றம்பலவர் - (ஒருவாற்றானும்) திருந்தாத யான் பிறவித் துன்பத்திற் பிழைக்க வந்து நின்ற சிற்றம்பலவரது,—தென்னம் பொதியில் - தெற்கின்கணுளதாகிய பொதியிலிடத்து, — இருந்தேன் உய்ய வந்து - ஒரு முயற்சியுமின்றி யிருந்த யானுய்யும் வண்ணம் வந்து,—இணை மலர் கண்ணின் இன் நோக்கு அருளி - (தன்னுடைய) இணைந்த மலர்போலுங் கண்களினது (உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் நாணொடு கூடிய நோக்கமாகிய) இனிய கடைக்கண் ணோக்கத்தை முன்னெனக்குத்தந்து,—பெரு தேனென - பெருந்தேன்போ லினிதாய், — நெஞ்சு உக - என்னெஞ்சமுருக, — பிடித்து ஆண்ட நம் பெண்ணமிழ்தம் அது அன்று - என்னைப் பிடித்துத் தன் வயமாக்கிய நமது பெண் வடிவை யுடைய அமிழ்தமாகிய அது இதுவன்று,—இதுவோ வருவதோர் வஞ்சனை வருந்தேல் - இதுவோ வருவதொரு மாயம், அதனான் நீ வருந்தாதொழி. எ - று. மெய்ப்பாடு - அழுகை; பயன் தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல்.

ஓகாரம் - ஒழியிசைக்கண்வந்தது. தன்னைநோக்கி யொரு முயற்சியுமில்லாத யான் பிறவித்துன்பத்திற் பிழைக்கத்தானே வந்து தன்னிணைமலர்க்கண்ணினினிய கடைக்கணோக்கத்தைத் தந்து பெருந்தேன் போன்றினிதாய், என் வன்மனநெகிழ்வித்துப்பிடித் தடிமைக்கொண்ட பெண்ணமிழ்தமென வேறுமொருபொருள் விளக்கியவாறு கண்டுகொள்க. (ருகூ)

துனியொழிந் துரைத்தல்.

தகுதியி னூரன் மிகுபதநோக்கி ப்
பனிமலர்க்கோதை துனியொழிந்த து.

(எ-து.) (ஊடனீடனால்) பனிமலராகிய மாலையையணிந்த தலைமகள் தலைமகனது தகுதியாற்றமை மிக்க அளவுநோக்கி யவனொடும் புணர்ச்சிக்குடன்பட்டது.

இயன்மன்னுமன்புதந்தார்க்கென்னிலையிமையோரிறைஞ்சுஞ்
செயன்மன்னுஞ்சீர்க்கழற்சிற்றம்பலவர்தென்னம்பொதியிற்
புயன்மன்னுகுன்றிற்பொருவேறுணையாப்பொம்மென்னிருள்
வயன்மன்னும்யானைதுரந்தரிதேருமதரகத்தே. [வா

(இ-ள்.) இமையோர் இறைஞ்சும் செயல் மன்னும் சீர் கழல் சிற்றம்பலவர்-இமையோரிறைஞ்சும் நன்செயல் தங்கிய நல்ல வீரக்கழலணிந்த திருவடியையுடைய சிற்றம்பலவரது,—தென் னம் பொதியில் - தெற்கின்கணுளதாகிய பொதியிலிடத்து,— புயல் மன்னு குன்றில் பொம்மென் இருள்வாய் - மேகந்தவ ழும் இக்குன்றிற்செறிந்த இருளின்கண்ணே,—அயல் மன்னும் யானை துரந்து அரி தேரும் அதரகத்து - பக்கத்துத் தங்கும் யானைகளை யோட்டி, அரிமா அவைபுக்கவிடந்தேடும் வழியக த்து, — பொருவேல் துணையாய் - தமது பொருவேலே துணை யாக (வந்து),—இயல் மன்னும் அன்பு தந்தார்க்கு நிலை என் - இயல்பாகிய நிலைபெற்ற வன்பை நமக்குத் தந்தவர்க்கு (யா னிவ்வா றுடம்படாதவிடத்து) நிலையென்னும்; (இது தகாது). எ - று. மெய்ப்பாடு - அச்சம்; பயன் - சிவப்பாற்றுதல்.

இயல்பைப் பொருந்திய வன்பெனினு மமையும். புயன்மன்னு குன்றிலன்பு தந்தார்க்கெனக் கூட்டுக. (௩௯௫)

புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல்.

புதல்வனது திறம்புகன் று
மதராரிக்கண்ணரி வாட்டந்தவிர்ந்த து.

(எ-து.) மதர்த்த செவ்வரிபரந்த கண்ணையுடைய தலைமகள் (துனியொழிந்தகூடிப் பிரிந்தவழிப்பின் னும் தலைமகன் பரத்தையிடத்துப் பிரிந்தானென்று கேட்டுப் புலந்து வாயின்மறுக்க, தலைமகன் வாயிலில் விளையாடும் புதல்வனை யெடுத்துத் தம்பலமிட்டு முத் தங்கொடுத்து அதுவாயிலாகக்கொண்டு செல்ல, இத னைத் தந்தவாறு சொல்லுவாயாகவெனத் தலைமகள் தன்) புதல்வன்திறங்கூறி வாட்டமகன்றது.

கதிர்த்தநகைமன்னுஞ்சிற்றவ்வைமார்களைக்கண்பிழைப்பித்
தெதிர்த்தெங்குநின்றெப்பரிசளித்தானிமையோரிறைஞ்ச
மதுத்தங்கியகொன்றைவார்சடையீசர்வண்டில்லைநல்லார்
பொதுத்தம்பலங்கொணர்ந்தோபுதல்வாவெம்மைப்பூசிப்பதே.

(இ - ள்.) மது தங்கிய கொன்றை வார்சடை ஈசர் - தேன் தங்கிய கொன்றைப்பூவையுடைய நீண்ட சடையையுடைய ஈசரது, — இமையோர் இறைஞ்சும் வள் தில்லை - இமையோ ரால் வணங்கப்படும் வளவிய தில்லையி லுளராகிய, — நல்லார் பொது தம்பலம் கொணர்ந்தோ - நல்லோ ரெல்லார்க்கும் பொ துவாகிய தம்பலத்தைக்கொண்டு வந்தோ,—புதல்வா எம்மை பூசிப்பது - புதல்வா! நீ யெம்மைக் கொண்டாடுவது?—கதிர் த்த நகை மன்னும் சிறு அவ்வைமார்களை கண்பிழைப்பித்து எதிர்த்து - (அது நிற்க, இது நினக்குத் தருகின்றவிடத்து நின் றந்தை) ஒளிவிட்ட முறுவல் பொருந்திய உன்சிறிய அன்னைமா ரைக்கண்ணைத் தப்புவித்து அவர் காணுவண்ணம் ஒருவாற்றால் நின்னை யெதிர்ப்பட்டு,—எங்கு நின்று எப்பரிசு அளித்தான் - எவ்விடத்து நின்று எவ்வண்ணமிதனை நினக்குத் தந்தான்? (நீ யிதுசொல்லவேண்டும்). எ - று. மெய்ப்பாடு - இளிவாலைச் சார்ந்தநகை; பயன் - ஊடனீங்குதல். (௩௯௬)

கலவியிடத்தூடல்.

சிறைக்குடைந்த நாறினார்த்தாரவ ன்
றன்மைகண்டு பின்னுந்தளர்ந்த து.

(எ-து.) புதல்வனை வாயிலாகப்புக்குப் புலவிதீர்த் திப் புணர்கின்ற தலைமகனைத் தலைமகள் ஒரு கார ணத்தால் வெகுண்டு மார்பிறுகத்தழுவ அவ்வெகுளி தீரவேண்டி) அவனவள் காலைத் தலைமே லேற்றுக்

கொள்ள அது குறையாக அவள் புலந்தழு இன்றமை
யை அவ்விடத்து உழையர் தம்முட்கூறித் தளர்ந்தது.

சிலைமலிவாணுதலெங்கையதாகமெனச்செழும்பூண்
மலைமலிமார்பினுதைப்பத்தக்தான்றலைமன்னர்தில்லை
யுலைமலிவேற்படையூரனிற்கள்வரிலென்னவுன்னிக்
கலைமலிகாரிகைகண்முத்தமாலைகலுழ்ந்தனவே.

(இ - ள்.) மலைமலி செழும்பூண் மார்பின் உதைப்ப - (யான் வெகுண்டு) மலைபோலும் வளவிய பூணையுடைய தன்மார்பகத்து மிதிப்ப,—ஆகம் சிலை மலி வாள் நுதல் எங்கையதென - அவ்வாகத்தைச் சிலைபோலும் வாணுதலையுடைய எங்கையதென்றே கருதி,—தலை தந்தான் - தன் சென்னியைத் தந்தனன்,—மன்னர் தில்லை - (அதனால்) மன்னனது தில்லையில்,—உலை மலி வேல் படை ஊரனின் கள்வர் இல் என்ன உன்னி - உலையிடத்துண்டாகிய தொழிலான்மிக்க வேலாகிய படையையுடைய ஊரனைப்போலக் கள்வரில்லையென்று கருதி,—கலை மலி காரிகை கண் முத்தம் மாலை கலுழ்ந்தன - (மகளிர்க்குத்தக்க யாழ் முதலாகிய) கலைகளான்மிக்க காரிகை நீர்மையையுடையாளுடைய கண்கள் (கண்ணீர்த்துளித்தாரையாகிய) முத்தமாலையைப்பொருக்கின; (அதனான் இவள் புலத்தற்குக் காரணம் வேண்டுவ தில்லைபோலும்). எ-று. மெய்ப்பாடு - இளிவரலைச் சார்ந்த நகை; பயன் - தலைமகளைச் சிவப்பாற்றுவித்தல்.

தலைமகள், பிள்ளை வாயிலாகப்புக்க தலைமகனை யேற்றுக்கொண்டு பள்ளியிடத்தாளான காலத்து, பரத்தைகாரணமாக அவனுண்ணின் றெழுந்த பொறாமையைக்கண்ட தலைமகன் ஆற்றானாக, அவ்வாற்றாமையைக்கண்ட தலைமகள் வெகுண்டனள். ()

முன்னிகழ்வுரைத்தூட றீர்தல்.

முன்னிகழ்ந்தது நன்னுதற்குரைத் து
மன்னுபுனலூரன் மகிழ்வுற்ற து.

(எ - து.) கலவிபிடத்தூடிய தலைமகளுக்கு முன்னிகழ்ந்தது கூறுவானாய்த் தலைமகன் உள்ளின்ற சிவப்பாற்றி மகிழ்வித்தது.

ஆறூர்சடைமுடியம்பலத்தண்டரண்டம்பெறினு
மாறூர்மழவிடையாய்கண்டிலம்வன்கதிர்வெதுப்பு
நீறூர்கொடுநெறிசென்றிச்செறிமென்முலைநெருங்கச்
சீறூர்மனையதனிற்றங்குகங்குற்சிறுதுயிலே.

(இ - ள்.) ஊர் மழவிடையாய் - தவழாநின்ற இளையவேற்றை யுடையாய்!—ஆறு ஊர் சடைமுடி அம்பலத்து அண்டர் அண்டம் பெறினும் - ஆறு பரந்த சடைமுடியையுடைய அம்பலத்தின்கணுளராகிய அண்டரது அண்டமுழுதையும் யாம் பெறினும்,—வன் கதிர் வெதுப்பு நீறு ஊர் கொடு நெறி சென்று - (ஞாயிற்றினுடைய) வளவிய கதிர்கள் வெதுப்பிய நீறு பரந்த கொடிய நெறியைச் சென்று,—இ செறி மென் முலை நெருங்க - இச்செறிந்த மெல்லிய முலைகள் (எம்முடைய மார்பினிடை) வந்தடர,—சிறு ஊர் மனை அதனில் தங்கு கங்குல் - (நெறியாற்) சிறிய வூரின்கண் மனையதட் பள்ளியிற் றங்கிய இரவில்,—சிறு துயில் மாறு கண்டிலம் - சிறிய துயிற்கு மாறு கண்டிலம்; (அதனை நீ யுள்ளியுமறிதியோ). எ - று. மெய்ப்பாடு - உவகை; பயன் - தலைமகளை மகிழ்வித்தல்.

இளவேறு - புதல்வன். தமக்குத்தக்க பள்ளியுமிடமு மின்மையிற் சிறுதுயிலென்றான். துயிலும் பொழுதிற்றுயிலாப் பொழுது பெரிதாகலின் அவ்வாறுகூறினானெனினுமமையும். முன்னிகழ்ந்தது கூறுவானாய் உள்ளின்ற சிவப்பாற்றுவித்தது. நெருங்கவென்பதூஉம் மரவதளென்பதூஉம் பாடம். (௧௯௮)

பரத்தையைக்கண்டமை கூறிப்புலத்தல்.

பரத்தையைக்கண்ட பவளவாய்மாத ர்
அரத்தநெடுவேலன்னற்குரைத்த து.

(எ - து.) (முன்னிகழ்ந்ததனை யுணர்ந்தாடலின்றிப் பின்புறப் புணரப்பட்ட தலைமகள், பிறர்க்கும் இவ்வாறின்பஞ் செய்தியென்று சொல்ல) குறிப்பறிந்த வேலையுடைய தலைமகன் (நின்னையல்லது பிறரை யறியேனென்று கூறக்கேட்டு யானவனை யறியேனாக நீ மாயங்கூற வேண்டுவ தில்லையெனத்) தான்பரத்தையைக் கண்டமைகூறிப் பின்னு மவளொடு புலந்து நின்றது.

ஐயுறவாய்நம்மகன்கடைக்கண்டுவன்றேருருட்டு
மையுறவாட்கண்மழலைத்தழுவமற்றுன்மகனே
மெய்யுறவாமிதுவுன்னில்லேவருகெனவெள்கிச்சென்றாள்
கையுறுமான்மறியோன்புலியூரன்னகாரிகையே.

(இ - ள்.) கை உறு மான் மறியோன் புலியூர் அன்ன காரிகை - கையைப் பொருந்திய மான் மறியை யுடையவனது புலியூரைப் போலுங் காரிகையாகிய (நின்பரத்தை),—நம் அகல் கடை கண்டு - நமது அகன்ற கடைக்கட் கண்டு,—வன் தேர் உருட்டும் மை உறு வாள் கண் மழலை - வலிய சிறுதேரையுருட்டும் மையுற்ற வாட்கண்ணையுடைய நம் புதல்வனை,— ஐயுற தழுவ - (நின் மகனென) ஐயுற்றுத் தழுவ,— உன் மகனே உறவு மெய்யாம் இது உன் இல்லே வருகென - (அதனைக்கண்டு) அவனை உன்மகனே உறவு மெய்யாகிய உறவே, இதுவும் நினதில்லமே யாண்டு வருவாயாகவென்று (யான்கூற),—வெள்கி சென்றாள் - (அவள்) நாணிப்பெயர்ந்தனள்; (அதனால் யானவளையறியேனாக நீ நினைந்து மாயங் கூறவேண்டுவதில்லை.) எ-று. மெய்ப்பாடு - நகை; பயன் - சிவப்பாற்றுதல்.

ஐயுறவாகவெனத் திரித்துக்கொள்க. ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகன் தலைமகளைச் சிவப்பாற்றுவிப்பான் நின்னின் வேறு சிலரெனக்கில்லையால், நீ வெகுளற்க வென்றற்குத் தலைமக ளிவ்வகை சொன்னாளென்பது. (நகை

ஊதியமெடுத்துரைத்தூட றீர்த்தல்.

இரும்பரிசி லேற்றவர்க்கரு . ளி
விரும்பினர்மகிழ மேவுதலுரைத்த து.

(எ-து.) (பரத்தையைக் கண்டமைகூறிப் புலந்து வேறுபட்ட தலைமகளுக்கு உண்ணின்ற சிவப்பு ஒரு காரணத்தாற் சிறிது புலப்படக்கண்ட பாங்கி, நம் மூரன் யாவர்க்கு மூதியமாகலின்) அன்பானன்றி யருளாற் பரத்தையர்க்குத் தலையளி செய்யுமன்றே, அதனால் நீ புலக்கும்பாலையல்லை யெனத் தலைமகளது சிவப்பாற்று வித்தது.

காரணிகற்பகங்கற்றவர்நற்றுணைபாணரொக்கல்
சீரணிசிந்தாமணியணிதில்லைச்சிவனடிக்குத்
தாரணிகொன்றையன்றக்கோர்தஞ்சங்கநிதிவிதிசே
ரூருணியுற்றவர்க்கூரன்மற்றியாவர்க்குமூதியமே.

(இ-ள்.) ஊரன் கார் - ஊரன் (வேண்டாமை கொடுத்தலின்) காரோடொக்கும்,— அணி கற்பகம் - (வேண்டக் கொடுத்தலின்) அழகிய கற்பகத்தோடொக்கும்,— கற்றவர் நற்றுணை - (நுண்ணிய கல்வியனாகலின்) கற்றவர்க்கு நல்லவுசாத்துணை,— பாணர் ஒக்கல் - (இசை புணர்வானுங் கெழுதகைமையானும்) பாணர்க்கு அவர் சுற்றத்தோடொக்கும்,— சீர் அணி சிந்தாமணி - (நினைத்தது கொடுத்தலின்) சீரையுடைய நல்ல சிந்தாமணியோ டொக்கும்,—அணி தில்லை சிவனடிக்கு தார் அணி கொன்றையன் - அழகிய தில்லைக்கண் சிவனது திருவடிக்குத் தாராகி அவனாலணியப்படுங் கொன்றைப் பூவின் தன்மையை யுடையன்,— தக்கோர் தம் சங்கநிதி - சான்றோர் தமக்குத் (தொலையாத நிதியாயிருத்தலின்) சங்கநிதியோ டொக்கும்,— விதி - (கட்டார்க்கும் பகைவர்க்குந் தப்பாது பயன் கொடுத்த

லின்) விதியோடொக்கும்,—உற்றவர்க்கு சேர் ஊருணி - சுற்றத்தார்க்கு (அவர்வேண்டிய செய்யவிருத்தலின்) அணித்தாகிய ஊருணியோ டொக்கும், — யாவர்க்கும் ஊதியம் - (அதனால் வரைவின்றி) எல்லார்க்கும் இவன் பெறும்பயன். எ-று. மெய்ப்பாடு - உவகை; பயன் - மெய்ம்மகிழ்தல்.

தாரணி கொன்றையனென்பது குரங்கனனென்பதுபோல உவமைப்பொருட்பட நின்றதெனினு மமையும். விதிசேருருணியென்பதற்கு முறைமையாற் சேரப்படு மூருணியெனினு மமையும். தக்கார்க்குஞ் சுற்றத்தார்க்குங் கொடுத்தல் வண்மையன்மையின் அவரை வேறுபிரித்துக் கூறினர். (சOO)

திருக்கோவையார்

பதவுரை

முற்றிற்று.

திருக்கோவையார்

உண்மைக்கருத்து.

திருக்கோவையார் இயற்கைப்புணர்ச்சி முதலிய இளவிக்கொத்தெனப்படும் இருபத்தைந்து துறைகளையுடைத்து. அவ்விளவிக்கொத்துகளுக்கும் அவற்றின் துறைகளுக்கும் உண்மைக் கருத்துவருமாறு: —

க-வது. இயற்கைப்புணர்ச்சி.

சற்குரு தரிசனம்.

" இயற்கைப்புணர்ச்சித்துறையீரொன்பதுஞ் சத்தினிபாதமொத்திடுங்காலத், துத்தமசற்குருதரிசனமாகும்." இக்கிளவிக்கொத்தின் துறை வருமாறு: —

க. காட்சி - குருவின் திருமேனிகாண்டல்.
உ. ஐயம் - திருமேனியை வியந்து ஐயுறுதல்.
ங. தெளிதல் - பார்வைபோதும் வடிவென்றுணர்தல்.
ச. நயப்பு - திருமேனியாற் பயன் பெறலாமென்றுணர்தல்.
ரு. உட்கோள் - தன்னிடத்திற் கருணையுண்டென்றுணர்தல்.
சு. தெய்வத்தை மகிழ்தல் - தன் தவத்தினை வியத்தல்.
எ. புணர்ச்சி துணிதல் - இன்பம் பெற நினைதல்.
அ. கலவியுரைத்தல் - பெற்ற* இன்பத்தை வியத்தல்.
கூ. இருவயினொத்தல் - பெற்ற இன்பம் புதிதாய்ப்பேணல்.
கO. கிளவிவேட்டல் - குருமொழிவேண்டிக்குறையிரத்தல்.
கக. நலம்புனைந்துரைத்தல் - அன்பால் நலங்கொண்டாடல்.
கஉ. பிரிவுணர்த்தல் - திருமேனிப் பிரிவான் மயங்கல்.

௧௩. பருவரலறிதல் - திருவுளத் திரக்கங்காண்டல்.
௧௪. அருட்குணமுரைத்தல் - அருட்குப் பிரிவில்லையெனல்.
௧௫. இடமணித்துக்கூறிவற்புறுத்தல் - பிரிதல்போலன்றிப் பிரிவில்லையென்னல்.
௧௬. ஆடிடத்துய்த்தல் - சிவமருளுடனே சேர்தலறிதல்.
௧௭. அருமையறிதல் - கண்டவின்பநு் கனவென வியத்தல்.
௧௮. பாங்கியையறிதல்-சிவமறிவிக்கத்திருவருளைக்காண்டல்.

௨-வது. பாங்கற் கூட்டம்.

ஆன்மபோததரிசனம்.

"பாங்கற் கூட்டம் பதினெட்டின்பம், தாங்குதற்போதந் தான்கண்டகுறல்." இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

௧. பாங்கனைநினைதல்-அருள்போல்போத மாமெனநினைதல்.
௨. பாங்கன்வினுதல் - மனத்தாற்கண்டிஃ தென்னெனவுருத் தல்.
௩. உற்ற துரைத்தல்-உயிர் உளத்துடனே யுற்றதுரைத்தல்.
௪. கழறியுரைத்தல் - மனம் உயிருடனே மயங்கியுரைத்தல்.
௫. கழற்றெதிர் மறுத்தல் - போதத்தாற்காணும் பொருளன் றென்னல்.
௬. கவன்றுரைத்தல் - பின்னும்போதந் தன்னிலை சொல்லல்.
௭. வலியழிவுரைத்தல்-உயிர்நெஞ்சுடன்பட்டுருகியுரைத்தல்.
௮. விதியொடு வெறுத்தல் - பின்னும் மனத்தொடு பேதுற்று நிற்றல்.
௯. பாங்கனொந்துரைத்தல் - போதம் பின்னும் புகன்றுத னழிதல்.
௧௦. இயலிடங்கேட்டல் - 'உறுதிகண்டின்பிட மெங்கென் றுரைத்தல்.

௧௧. இயலிடங்கூறல் - மகிழ்ந்திட நெஞ்சுக்கு வாழ்வெடுத் துரைத்தல்.
௧௨. வற்புறுத்தல் - போதம்போய்க்காணும் பொலிவெடுத் துரைத்தல்.
௧௩. குறிவழிச்சேறல் - நெஞ்சாற்கண்ட இன்பந்தேடல்.
௧௪. குறிவழிக்காண்டல் - போதமருளாற்போ யின்பங்காண் டல்.
௧௫. தலைவனை வியந்துரைத்தல் - நெஞ்சமுயிர்நினைவு அறி வெனப் புகழ்தல்.
௧௬. கண்டமைகூறல் - போதம் நம்மாற் பொருந்துவதன் றென ஆதாவாயுயிர்க் கறியவுரைத்தல்.
௧௭. செவ்விசெப்பல் - இன்ப மறியும் இயல்பன்றெனினும் நெஞ்சமணியெலாம் நின்றெடுத்துரைத்தல்.
௧௮. அவ்விடத்தேகல்-போதநீங்கப் பொற்பாங்குரவன் தெ ரிசனங்காணச் சென்றதன்மை.

௩-வது. இடந்தலைப்பாடு.

அன்பாலானந்தம் பெற்றனுபவித்தல்.

"இடந்தலைப்பாடீராறுமொன்றும், அருட்குருதரிசனத் தன் புமிகுதியால் பேரானந்தம் பெற்றனுபவித்தல்." இக்கிளவிக் கொத்தின் துறை வருமாறு :—

௧. மின்னிடைமெலிதல் - சிவமுயிர்நோக்கித் திருவுளத்தெ ண்ணல்.
௨. பொழில்கண்டுமகிழ்தல் - பார்க்குமிடமெங்கும் பரனுங் காண்டல்.
௩. உயிரொவியத்தல் - ஆதியின்ப மரனெனக்காண்டல்.

௪. தளர்வகன்றுரைத்தல் - திருவிகாரமாய் நிலைபெறல்காண்டல்.

௫. மொழிபெற வருந்தல் - திருவாய்மலராவிடி னுய்யேனென்னல்.

௬. நாணிக்கண் புதைத்தல் - இன்பநாணுதல்போலுயிர் இன்னலெய்துதல்.

௭. கண்புதைக்கவருந்தல் - உயிர் தன்வருத்த முற்றுற்றுரைத்தல்.

௮. நாண்விடவருந்தல் - இன்பநாணின்றி யெய்தல் கண்டிப்புறல்.

௯. மருங்கணைதல் - திருவுருப்பரிவால் பெருகுசுகம் பெறல்.

௧௦. இன்றியமையாமைகூறல் - சித்தியெவையுஞ் சேர்த்திடுமாயினும், இத்தகையின்ப மிகமேனென்னல்.

௧௧. ஆயத்துய்த்தல் - மெய்யடியாரிடை வேறறக்கலந்தி ஐயமின்றியமர் தலையறிதல்.

௧௨. நின்றுவருந்தல் - திருவுருநீங்கும் திறமரிதென்னல்.

௧௩. பொழிலிடைச்சேறல் - கைம்மாறின்றிக் கருணைசெய்தலால் இன்னமுமிவ்விடை யின்புறுமென்னல்.

௪-வது. மதியுடம்படுத்தல்.

அருள்சிவங்கலந்து உயிர்தரிசனஞ்செய்தல்.

"மதியுடம்படுத்தல் வருமீரைந்தும், குருவறிவித்த திருவருளதனைச், சிவத்துடன் கலந்து தெரிசனம் புரிதல்." இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

௧. பாங்கியிடைச்சேறல்-திருவருளாற்சிவம் பெறுதலறிதல்.

௨. குறையுறத்துணிதல்-சிவமேகாட்டத்திருவருளையுணர்தல்.

௩. வேழம்வினாதல்-அருள்சிவங்கலந்த வருமையுயிர்தேர்தல்.

௪. கலைமான்வினாதல் - அருள்விடைபெறுமற் பின்னும்புகறல்.

௫. வழிவினாதல் - வழிமேல்வைத்துப் புகலிலையென்னல்.

௬. பதிவினாதல் - அருளறியாவிடின் அறியேனென்னல்.

௭. பெயர்வினாதல் - இன்பருள்நாம மேதெனவினாதல்

௮. மொழிபெறாது கூறல் - திருவாய்மலராத் திறமெடுத்துரைத்தல்.

௯. கருத்தறிவித்தல் - சாத்தும்பச்சிலை தான்கொண்டருளி அருளுந்திறத்தை யறியவுரைத்தல்.

௧௦. இடைவினாதல் - சிவத்திடையன்பு செல்லுதலன்றி வேறிலையென்று விரும்பி யுரைத்தல்.

௫-வது. இருவருமுள்வழி யவன்வரவுணர்தல்.

சிவமுயிர்விரவிய தருளோர்தேறல்.

"இருவருமுள்வழி யவன் வரவுணர்தல், துறையோரிரண்டுஞ் சிவமுயிர்விரவிய, தருளேயுணர்ந்திட லாகுமென்ப." இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

௧. ஐயுறுதல் - சிவமுயிர்கலத்தல் அருள்தெறிவினாதல்.

௨. அறிவுநாடல் - உயிர்சிவங்கலந்த தருளேதேறல்.

௬-வது. முன்னுற வுணர்தல்.

சிவமுயிர்கூட அருள்வினவுதல்.

"முன்னுறவுணர்த லெனவிஃதொன்றுஞ், சிவமுயிர்கூடலருள்வினவியது." இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

௧. வாட்டம்வினாதல் - சிவனதுகருணையும் உயிரது தெளிவும் அருளேகண்டின்பதனுடன்வினவுதல்.

௭-வது. துறையுற வுணர்தல்.

சிவமுயிர்கலத்தல் அருள் பணியாற்காண்டல்.

"குறையுறவுணர்தல் துறையொருநான்கும், உயிர்சிவத்திடைச் சென்றுருப்படுந்தன்மை, பணியாற்கண்டு பரிவால் விளையது." இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

௧. குறையுற்றுநிற்றல் - திருவுளப்பணியைச் செய்வேனென்னல்.

௨. அவன்குறிப்பறிதல் - பளிக்குபோற்சிவத்திடைப் பதிந்ததுயிரொனல்.

௩. அவள் குறிப்பறிதல்-கருணையுயிரிடத்துக் கண்டருள்தேறல்.

௪. இருவர்நினைவு மொருவழியுணர்தல்-இன்புயிரொன்றென் றருளதிசயித்தல்.

௮-வது நாணநாட்டம்.

அருளுயிர்ப்பக்குவ மறிந்துவியத்தல்.

"நாணநாட்டத் துறையோரைந்தும், அருளேசிவத்தை யதிசயித்துயிரின், பக்குவந்தன்னைப் பலவும்வியந்தது." இக்கிளவிக் கொத்தின் துறைவருமாறு:—

௧. பிறைதொழுகென்றல் - அருள்சிவத்திடையுயி ரார்ந்ததன்மை வெளிப்படநின்று வினவியுரைத்தல்.

௨. வேறுபடுத்துக்கூறல் - உயிர்க்கின்பிச்சைகண் டுவந்தருள் வினவல்.

௩. சுனையாடல்கூறி நகைத்தல் - கருணையுயிர்க்குக் காட்டும் பரிவு தானறிந்தறியாத் தன்மை யுரைத்தல்.

௪. புணர்ச்சியுரைத்தல்-சிவனதுகருணை யருளேதேறி இவ்வதிசயமெங்குமில்லென்றல்.

௫. மதியுடம்படுதல் - உயிர்சிவமொன்றல் தொழிலாலறிதல்.

௯-வது நடுங்கநாட்டம்.

சிவமேகருணை யென்றருள் நோக்கல்.

"நடுங்கநாட்டமொன்றுஞ்சிவமே, யுயிரிடைக்கருணையென் றற்றருணோக்கல்." இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

௧. புலிமிசை வைத்தல் - கருணையளவின்மை யருள்கண்டு மகிழ்தல்.

௰வது. மடற்றிறம்.

உயிர் இன்புறவே யருளோடுரைத்தல்.

"மடற்றுறை யொன்பதுஞ் சிவத்திடைமோகம், உற்றவுயிரருள்பற்றியுரைத்தது." இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

௧. ஆற்றுதலுரைத்தல் - அருளைநம்பியுயிர் மிகவுமிரங்கல்.

௨. உலகின்மேல் வைத்துரைத்தல் - இன்பம்பெறுநர்க்குடம் பெனவுரைத்தல்.

௩. தன் துணிபுரைத்தல் - சிவம்பெறுவிடி லுய்யேனென்று அருளுடன் செப்பல்,

௪. மடலேறும்வகை யுரைத்தல்-இவன்சிவனடிமையென் றெவருஞ்செப்ப இழிபாயெங்குந் திரிவேனென்னல்.

௫. அருளாலரிதெனவிலக்கல் - அருளேயுயிரையழுத்திநிக் கைத வருமோபக்குவ வகையாலென்றல்.

௬. மொழிகடையெழுத லரிதெனவிலக்கல் - அருள் சிவத்தருமை யறியப்படாதெனல். (அருமை - குணக்குறி.)

௭. அவயவமெழுத லரிதெனவிலக்கல் - சிவனதுகருணையுஞ் செயலுமொருவரா லறியப்படாவிஃ தரிதே யென்னல்.

௮. உடம்படாது விலக்கல் - சிவத்திடையாமே சேர்த்துமென்று வன்மையொழியும் வகையை யுரைத்தல்.

௯. உடம்பட்டுவிலக்கல் - என்வழிச்சிவமே யிருத்தலானுன் றன் குறையுங்கூறிக்கூட்டுவேனென்னல்.

கக-வது. துறைநயப்புக்கூறல்.

உயிர்ப்பறிவின்புக் கருள்புகன்றிடுதல்.

" குறைநயப்புத்துறை யவையிருநான்கும், சிவத்தோடுயிரைச் சேர்க்கவேண்டி, உயிர்ப்பரிவெடுத்தெடுத் துரைத் தறிவுறுத்தல்." இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

க. குறிப்பறிதல் - சிவத்தோடுயிரைச் சேர்பரிவுரைத்து அவ்வருள்சிவக்குறிப்பை யாராய்தல்.

உ. மென்மொழியாற்கூறல் - அருள்பணிமொழியால் அரற்கு அறிவுறுத்தல்.

ங. விரவிக்கூறல் - உயிர்ப்பரிவுவமையா லவந்தருளுரைத்தல்.

ச. அறியாள்போறல்-சிவமருட்கறியமற் றொன்றாற்செப்பல்.

ரு. வஞ்சித்துரைத்தல் - சிவமுயிர்க்கொன்றாற் பின்னுஞ்செப்பல்.

சு. புலந்துகூறல்-அருள்தனைவெறுத்தரற் கறியவுரைத்தல்.

எ. வன்மொழியாற்கூறல்-அருள்செயாவிடி னுலகலரா மழிவா மலனெனல்.

அ. மனத்தொடுநேர்தல்-சிவமுயிர்க்கின்பஞ் சேரவிரங்கல்.

கஉ-வது. சேட்படை.

கிடையாவின்பத் தருமைகாட்டல்.

"சேட்படையிருபத் தாறுதுறையுங், கிடையாவின்பங் கிடைத்தலானுயிரை, அருமைகாட்டியறியாள்போலப் பலபலவருமை பற்றியுரைத்த, அருளேசிவத்தோ டாக்கவருளல்." இக்கிளவிக் கொத்தின் துறைவருமாறு:

க. தழைகொண்டுசேறல்-மலனொடுத்துயிரருள்வழியேசேறல்.

உ. சந்தனத்தழைதகா தென்றுமறுத்தல் - உன்னறிவாம் மல ரொவ்வாதென்னல்.

ங. நிலத்தின்மை கூறிமறுத்தல் - உன்னறிவு அடியாருருவாகாதென்னல்.

ச. நினைவறிவுகூறிமறுத்தல் - சிவத்துளங்கண்டுனைத் தேற்றுவேனென்னல்.

ரு. படைத்துமொழியான்மறுத்தல் - சிவங்கொளுமுன்னுணர் வாகாதென்றல்.

சு. நாணுரைத்துமறுத்தல் - அடியாரறிவுக்கு உன்னறிவுபிறிதென்னல்.

எ. இசையாமைகூறி மறுத்தல் - அடியாரறிவுபோல் உன்னறிவாகாதென்னல்.

அ. செவ்வியிலையென்று மறுத்தல் - சிவக்கனிபழுத்த திலையுனக்கென்னல்.

கூ. காப்புடைத்தென்று மறுத்தல் - மேலா மின்பத்துக்குக் காலமிலையென்னல்.

கo. நீயேகூறென்று மறுத்தல் - உன்னறிவா லின்புறுவை நீயென்னல்.

கக. குலமுறைகூறி மறுத்தல்-உன்றனக்கின்ப மொக்குமோவென்னல்.

கஉ. நகையாடிமறுத்தல் - உன்னறிவின்ப முறலரிதென்னல்.

கங. இரக்கத்தொடுமறுத்தல் - என்னறிவிலையென்றெய்த் தற்கிரங்கல்.

கச. சிறப்பின்மைகூறிமறுத்தல் - சிவத்திடைசேருந் திறமுயிர்க்கிலையெனல்.

கரு. இளமைகூறிமறுத்தல்-இன்பமுதிர்ந்த திலையுனக்கென்னல்.

௧௬. மறைத்தமைகூறிநகைத்துரைத்தல் - அருளன்றிச்சிவ மமையாதென்னல்.

௧௭. நகைகண்டு *மகிழ்தல் - அருள்நோக்கமின்றியின்பாமோவென்னல்.

௧௮. அறியாள்போன்று நினைவுகேட்டல் - இன்பம்பலவுநின் எங்ஙனருட்சிவமெனல்.

௧௯. அவயவங்கூறல் - இன்பக்கனமரன் திருமேனியென்னல். (இன்பக்கனம் - ஆனந்தமயம்).

௨௦. கண்ணயக்துரைத்தல் - திருநோக்கின்பச் சேதனமென்னல்.

௨௧. தழையெதிர்தல் - அடிமைத் திறத்தாற் சிவத்தாக்குவனென்னல்.

௨௨. குறிப்பறிதல் - பரிவுயிர்க்கருளெனப் பகர்ருள்கூறல்.

௨௩. குறிப்பறிந்து கூறல் - வேறறியாவுயிர்க்கு அருளவேண்டுமென்னல்.

௨௪. வருத்துரைத்தல் - சிவமுயிர்ப்பரிவருள் தனக்குச்செப்பல்.

௨௫. தழையேற்பித்தல் - அருளே யுயிர்ப்பணி சிவத்தக்காக்கல்.

௨௬. தழைவிருப்புரைத்தல் - உன்பணிசிவத்துக் குவப்பெனவுரைத்தல்.

---

௧௩ - வது. பகற்குறி.

இயற்கைபோற் சிவத்தோ டியலுறக் கூட்டல்.

"பகற்குறித்துறைமுப் பதின்ளோரிரண்டும் இயற்கைபோற் சிவத்தோ டியலுறக்கூட்டிப் பிரித்தவருளின் பெரும்பகற்குறியே." இக்கிளவிக் கொத்தின் துறைவருமாறு:—

௧. குறியிடங்கூறல் - அருளுயிர்க்கின்ப மாயிடமுரைத்தல்.

௨. ஆடிடம்படர்தல் - இன்பந்தனைக்கொண்டேகாந்தத்தேயல்

௩. குறியிடத்துக்கொண்டுசேறல் - அருளையாற்சிவத்தையுயிரிடத்தாக்கல்.

௪. இடத்துய்த்துநீக்கல் - அருள்சிவத்திடைச்சேர்த் தகன்றுநிற்றல்.

௫. உவந்துரைத்தல் - உயிர்சிவந்தரிசித் தன்மகிழ்ந்துரைத்தல்

௬. மருங்கணைதல் - இன்பங்கண்டது வியல்பெடுத்துரைத்தல்.

௭. பாங்கியறிவுரைத்தல் - இன்பங்கண்டபின் அருள்தெரிசித்ததென்னல்.

௮. உண்மகிழ்ந்துரைத்தல் - கண்ட வின்பம் அருளுக்கியம்பல்.

௯. ஆயத்துய்த்தல் - அடியார்கூட்டத் தன்டாவுய்த்தல்.

௧௦. தோழிவந்துகூடல் - அருள்சிவங்கலந்தவபேதங்காண்டல்

௧௧. ஆடிடம்புகுதல் - அன்பர்க்கின்பம் அருளேயாக்கல்.

௧௨. தனிகண்டுரைத்தல் - அருளுயிர்தனைக்கண்டகமகிழ்ந்துரைத்தல்.

௧௩. பருவங்கூறி வரவுவிலக்கல் - அருள்சிவத்தின்படுத் தறிவுறுத்தல்.

௧௪. வரைவுடம்படாது மிகுத்துக்கூறல் - இன்பமெளியேற்கெய்துமோவென்னல்.

௧௫. உண்மைகூறி வரைவுகடாதல் - அன்புக்கருளுயின்பெளிதென்னல்.

௧௬. வருத்தங்கூறி வரைவுகடாதல் - இன்புறுதிருத்தவெல்லைபிறழுமென்னல்.

௧௭. தாயச்சங்கூறி வரைவுகடாதல் - பரையுமுயிரின் பக்குவங்காண்டல்.

௧௮. இற்செறிவறிவித்து வரைவுகடாதல் - அருளிலின்பமரிதென விரைதல்.

ககூ. தமர்நினைவுரைத்து வரைவுகடாதல் - இன்பம்பெருவிடிவிகருமுலகெனல்.

உ0. எதிர்கோள்கூறிவரைவுகடாதல் - திரோதையும் பணையுஞ் சேர்த்திடுமென்னல்.

உக. ஏறுகோள்கூறி வரைவுகடாதல் - அன்புபுரிபவர்க் கின்பெளிதென்னல்.

உஉ. அயலுரையுரைத்து வரைவுகடாதல்-அடியாரின்பே யார்வாரென்றல்.

உங. தினைமுதிர்வுரைத்து வரைவுகடாதல் - பணியொழித்தாற்சிவம் பலியாதென்னல்.

உச. பகல்வரல்விலக்கிவரைவுகடாதல்-பசுகரணத்தாற் பலியாதென்னல்.

உரு. தினையொடுவெறுத்து வரைவுகடாதல் - தவங்கள்செய்துஞ் சலிப்பிலையென்னல்.

உசா. வேங்கையொடுவெறுத்து வரைவுகடாதல் - பசுகரணங்களே பீசையாமென்னல்.

உஎ. இரக்கமுற்று வரைவுகடாதல் - அருளுயிர்க்கிரங்கி யன்பெடுத்துரைத்தல்.

உஅ. கொய்தமைகூறி வரைவுகடாதல் - சரியையாதி மூன்றுங்கடத்தல்.

உகூ. பிரிவருமைகூறி வரைவுகடாதல் - பழக்கந்தவிரப் பயிறல்பெரிதெனல்.

ஙO. மயிலொடுகூறி வரைவுகடாதல்-அருள்காணத்தி லார்த்தினி துரைத்தல்.

ஙக. வறும்புனங்கண்டுவருந்தல்-அருளன்றியின்ப மாராதென்னல்.

ஙஉ. பதிநோக்கிவருந்தல்-இன்பப்பெருமைகண் டெளிமையன்றென்னல்.

கச - வது. இரவுக்குறி.

அருளே சிவத்தோடாக்கி யவ்வருமை கருணை பலவு மெடுத்துக்காட்டல்.

“இரவுக்குறித்துறை முப்பத்துமூன்றும், அருளேசிவத்தோடாக்கியவ்வருமை, தெரியவற்புறுத்திச் சிவனது கருணையின் இச்சைபலவு மெடுத்தெடுத்தருளல்.” இக்களவிக்கொத்தின் துறைவருமாறு:—

க. இரவுக்குறிவேண்டல்-அருளையிரந் துயிரன்பாய்க்கலத்தல்.

உ. வழியருமைகூறி மறுத்தல் - அருளுயிர்ப்போத மகறல்கண்டின்புறல்.

ங. நின்றுநெஞ்சுடைதல் - இன்பங்கிடைக்குமோ வென்றுநெஞ்சுடைதல்.

ச. இரவுக்குறிநேர்தல் - உயிர்ப்பரிவருள்கண் டுவந்தியம்பல்.

ரு. உட்கோள்வினாதல்-அருளுயிர்கண்ட வனுபவங்கேட்டல்.

சா. உட்கொண்டுவினாதல் - அறிவித்தாலறிவனென் றனுபவங் கேட்டல்.

எ. குறியிடங்கூறல் - உயிர்க்கின்பமாம்ட மருளெடுத்துரைத்தல்.

அ. இரவுக்குறியேற்பித்தல் - சிவத்துக்கருளுயிர்ச் செய்கையுரைத்தல்.

கூ. இரவரவுரைத்தல் - மலத்தடைகடந்துயிர் மருவிற்றென்னல்.

க0. ஏதங்கூறிமறுத்தல் - பரிவுயிரருளிற் படற்கிரங்கல்.

கக. குறைநேர்தல் - திருமேனியருமை தெரிதலாலாமெனல்.

கஉ. குறைநேர்ந்தமைகூறல் - உயிர்க்குக்கருணை யுண்மையுரைத்தல்.

கங. வரவுணர்ந்துரைத்தல் - சிவத்துக்கருளுயிர்த்திறமெடுத்துரைத்தல்.

கச. தாய்துயிலறிதல் - பணைக்கும்பாங்காம் பண்பருள்காண்டல்.

கரு. துயிலெடுத்துச்சேறல் - உயிர்ப்பக்குவங்கண்டுவந்தறிவித்தல்.

கசு. இடத்துய்த்துநீங்கல் - சிவத்திற் சேர்த்தருள் சென்றுநிற்றல்.

கஎ. தளர்வகன்றுரைத்தல் - உயிர்சிவங்கண்டன்புற வுவந்துரைத்தல்.

கஅ. மருங்கணைதல் - இன்பக்கனங்கண் டின்பனுபவித்தல்.

ககூ. முகங்கண்டுமகிழ்தல் - திருமேனிகண்டின் பதுவாய்த்தேறல்.

உ0. பள்ளியிடத்துய்த்தல் - அறமாயிடத்தன்பா யமர்தருயிர்காண்டல்.

உக. வரவுவிலக்கல் - அருளுயிர்க்குச்சிவத் தருமைகூறல்.

உஉ. ஆற்றுரைத்தல் - இன்பமேயன்றி யுயிரிலையென்னல்.

உங. இரக்கங்கூறி வரைவுகடாதல் - கருணையேயின்பக் கனமெனவுரைத்தல்.

உச. இரவு வெளிப்படவருந்தல் - உயிர்க்குமாயையு மொளியென்றிரங்கல்.

உரு. அல்லகுறியறிவித்தல் - உன்பரிவின்புக் குறுமென்றுரைத்தல்.

உசு. கடலிடைவைத்துத் துயரறிவித்தல் - அருளுயிர்மோகங் கடலொடியம்பல்.

உஎ. காமமிக்க கழிபடர்கிளவி - உயிர்மோகங்கண்டரு ளுவகையொடியம்பல்.

உஅ. காப்புச்சிறைமிக்ககையறுகிளவி - உயிர்பெறுமோக முறவற்றியம்பல்.

உகூ. ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி - இன்பத்தின்வழியேக வரிதெனல்.

ஙo. தன்னுட்கையாறெய்திடுகிளவி - சிவத்தின்கருணைத் திறம்பரிவாதல்.

ஙக. நிலைகண்டுரைத்தல் - அருளேயுயிர்க்குப் பரிவாயுரைத்தல்.

ஙஉ. இரவுறுதுயரங் கடலொடுசேர்த்தல் - கருணையாற் சிவமே யுயிர்போற்கனிதல்.

ஙங. அலரறிவுறுத்தல் - அருளுயிர்க்கின்பம்பெறவுறுத்துதல்.

கரு - வது. ஒருவழித்தணத்தல்.

சிவனதுகருணை யருள்தெரிவித்தல்.

"ஒருவழித்தணத்த லொருபதின்மூன்றுஞ், சிவனதுகருணை யருடெரிவித்தது" இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

க. அகன்றணைவுகூறல் - பிரிந்துகூடிப் பெறுமின்பென்னல்.

உ. கடலொடுவரவுகேட்டல் - உயிராய்ச்சிவமே யுற்றுற்றுணர்த்தல்.

ங. கடலொடுபுலத்தல் - பின்னுமுயிராய் மன்னியுரைத்தல்.

ச. அன்னமோடாய்தல் - பின்னுமுயிர்போன் மன்னியுரைத்தல்

ரு. தேர்வழிநோக்கிக் கடலொடுகூறல் - சிவனுயிர் மோகஞ்சென்றியம்புதல்.

சு. கூடலிழைத்தல் - உயிர்த்தொழில் சிவமா யுறுங்குறிபார்த்தல்.

எ. கடலொடுபுலம்பல் - இன்பேயுயிரா யிடருற்றியம்பல்.

அ. பொழுதுகண்டுமயங்கல் - பருவநோக்கிப்பரிவின்புறுதல்.

கூ. பறவையொடுவருந்தல் - இன்பருணைக்க மெங்குமாதல்.

க0. பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல் - இன்புற்றிடரோக்கி யன்புற்றிரங்கல்.

கக. அன்னமோடழிதல் - இன்பமுயிர்க்கா யெடுத்திரங்கல்.

கஉ. வரவுணர்ந்துரைத்தல்-அருளேசென்றங் கரற்றியம்பல்.

கங. வருத்தமிகுதிகூறல் - இவனதுகருணையி னளவெடுத்து ரைத்தல்.

கசா-வது. உடன்போக்கு.

அருளுயிர்க்கருமை யறியவுரைத்தலு மானந்தத் திடையழுத்துவித்தலும்.

"உடன்போக்கைம்பதோ டாறுதுறையு, மருளுயிர்க்கருமை யறியவுணர்த்தலு, மானந்தத்திடையழுத்தித் திரோதை, பண்வழியாகப் பண்புணர்த்தியது" இக்கிளவிக்கொத்தின் றுறை வருமாறு:—

க. பருவங்கூறல் - அருள்சிவம்பெறும்பத மிதுவெனவுரைத்தல்.

உ. மகட்பேச்சுரைத்தல்-விளைவிலின்பம் பெறுவாயென்னல்.

ங. பொன்னணிவுரைத்தல் - அன்புடையோர்க்கே யின்பமென்னல்.

ச. அருவிலையுரைத்தல் - இன்பதனுக்களவில்லையென்னல்.

ரு. அருமைகேட்டழிதல் - உயிரின்பமெமக் குறுமோவென்னல்.

சா. தளர்வறிந் துரைத்தல் - உன்னுடன்சிவமுறு மெனவருளுரைத்தல்.

எ. குறிப்புரைத்தல் - கண்டகுறியாற் கலவேமென்னல்.

அ. அருமையுரைத்தல் - சிவன்றன்பெருமை யுயிருக்குரைத்தல்.

கூ. ஆதரங்கூறல் - அன்புக்கிரங்குமின்பெனவுரைத்தல்.

க0. இறந்துபாடுரைத்தல் - இன்புக்குயிரோ யிடமென்றுரைத்தல்.

கக. கற்புநலனுரைத்தல் - அருள்சிவத்திடைச்சென் றுதரங்கூறல்.

கஉ. துணிந்தமைகூறல் - சிவத்துக்கருளுயிர்ச் செய்கையுரைத்தல்.

கங. துணிவொடுவினவல் - உயிர்வழிவருங்காரணமேதென்னல்.

கச. போக்கறிவித்தல்-உயிருடன்படலரற்கருளேயுரைத்தல்.

கரு. நாணிழந்துவருந்தல்-இன்பமேயுயிருக்கேகாந்தமுன்னல்.

கசா. துணிவெடுத்துரைத்தல் - இன்பத்துணிவுயிர்க் கருளியம்பல்.

கஎ. குறியிடங்கூறல்-யான்கொடுவரும்வழி நீவருகென்னல்.

கஅ. அடியொடுவழிநினைந் தவனுளம்வாடல் - இன்பத்துக் கென்வழி வருந்தமேயென்னல்.

ககூ. கொண்டுசென்றுய்த்தல் - அருளேசிவங்கொண் டுயிர்க்கறிவித்தல்.

உ0. ஓம்படுத்துரைத்தல் - சிவத்திடைநெஞ்சந் திறம்பாயென்னல்.

உக. வழிப்படுத்துரைத்தல் - இன்பம்விடாதினி தேகென்றியம்பல்.

உஉ. மெல்லக்கொண்டேகல் - இன்பைப்பிரிவின்றி யினிதியம்புதல்.

உங. அடலெடுத்துரைத்தல் - இன்பைப்பார்த்ததன்வலியுயிரெடுத்தியம்பல்.

உச. அயர்வகற்றல்-இன்பேயிடர்க்குத்துணையென்றியம்பல்.

உரு. நெறிவிலக்கிக்கூறல்-பெற்றுமின்பம் பற்றியுரைத்தல்.

௨௬. கண்டவர்மகிழ்தல் - உயிர் சிவங்கலந்த வுண்மைக்குமகிழ்தல்.

௨௭. வழிவிளையாடல் - இன்பிற்கலக்குயி ரன்புசெய்தல்.

௨௮. நகரணிமைகூறல் - சிவந்தங்கிடமிது வென்றுதேர்தல்.

௨௯. நகர்காட்டல் - அன்பாலடுத்த தென்றியம்புதல்.

௩0. பதிபரிசுரைத்தல் - இன்பமாமிடமிவையென்றியம்பல்.

௩௧. செவிலிதேடல் - திரோதையைக்கடந்த செய்கையுரைத்தல்.

௩௨. அறத்தொடுநிற்றல் - அருளேதிரோதை யாந்திறமுரைத்தல்.

௩௩. கற்புநிலைக்கிரங்கல் - திரோதையுமிரங்கித் திரும்பியுரைத்தல்.

௩௪. கவன்றுரைத்தல் - இன்பச்சின்னங்கண்டேனென்னல்.

௩௫. அடிநிலைக்கிரங்கல் - சிவனதுகருணையைத் திரோதைவியத்தல்.

௩௬. நற்றாய்க்குரைத்தல்-திரோதை பரைக்குயிர்ச் செய்கையுரைத்தல்.

௩௭. நற்றாய்வருந்தல்-திரோதையுரைக்கப்பரைபிரிந்திரங்கல்.

௩௮. கிளிமொழிக்கிரங்கல்-பரையின்பத்தின்பண்புக்கிரங்கல்.

௩௯. சுடரோடிரத்தல் - பரைதிருமேனிப் பண்புக்கிரங்கல்.

௪0. பருவங்கண்டுகவறல்-இன்பமுயிரன் பெய்கொளவென்னல்.

௪௧. நாடத்துணிதல்-திரோதையின்யானேதேடுவனென்னல்.

௪௨. கொடிக்குறிபார்த்தல் - பரையேசிவத்தின் குறிப்பன்புபார்த்தல்.

௪௩. சோதிடங்கேட்டல் - திரோதையுயிர்ப்பண்பு திருமேனிவென்னல்.

௪௪. சுவடுகண்டறிதல் - திரோதைசிவம்பெறுஞ் சின்னங்காண்டல்.

௪௫. சுவடுகண்டிரங்கல்-திரோதைசிவத்தின்சின்னத்திற்கிரங்கல்.

௪௬. வேட்டமாதரைக்கேட்டல்-திரோதையேபெற்றவர்தேறவுணர்த்தல்.

௪௭. புறவொடுபுலத்தல்-திரோதைசிவத்தின் செய்கையுணர்த்தல்.

௪௮. குரவொடுவருந்தல் - திரோதையெங்குஞ் சிவமேவினுவல்.

௪௯. விரதியரைவினுவல்-திரோதைதவத்தர் திறத்தில்வினுவல்.

௫0. வேதியரைவினுவல்-திரோதைபெற்றோரைச் சென்றுவினுவல்.

௫௧. புணர்ந்துடன்வருவோரைப்பெரிருந்திவினுவல் - திரோதைபெற்ற சிவத்தைக்காட்டல்.

௫௨. வியந்துரைத்தல் - திரோதையின்புயிர்க்குச் செய்திறங்காண்டல்.

௫௩. இயைபெடுத்துரைத்தல்-திரோதையின்புருவைச் சிவமாக்காண்டல்.

௫௪. மீளவுணர்த்தல் - அடியார்சிவத்தோடாவாயென்னல்.

௫௫. உலகியல்புணர்த்தல் - பெற்றவின்பம் பிறர்கொள்வரென்னல்.

௫௬. அழுங்குதாய்க்குணர்த்தல் - அடியார்திரோதை யருளேயென்னல்.

கஎ-வது. வரைவுமுடுக்கம்.

சிவனதுகருணை தெரியவுணர்த்தவ் வின்பம்பெற வருளெடுத்தியம்பியது.

"வரைவுமுடுக்க மொருபதினாறுஞ், சிவனதுகருணைதெரிய வுணர்த்தவ், வின்பம்பெறவருளெடுத்தியம்பியது" இக்கிளவிக் கொத்தின் துறைவருமாறு:—

க. வருத்தமிகுதிகூறிவரைவுகடாதல் - சிவனதுகருணைதெரி யவுணர்த்தவ் வின்பம்பெறவகுத்துணர்த்தல்.

உ. பெரும்பான்மைகூறிமறுத்தல்-உயிர்சிவப்பெருமை யெ டுத்தருட்கியம்பல்.

ங. உள்ளதுகூறிவரைவுகடாதல் - இன்பத்துக்கிடமியல் பரு ளுயிர்க்கியம்பல்.

ச. ஏதங்கூறியிரவரவுவிலக்கல் - இன்புருக்காண்டற்கிரவில்லை யென்றல்.

ரு. பழிவரவுரைத்துப்பகல்வரவுவிலக்கல் - இன்புருக்கொளி வேறில்லையென்னல்.

சு. தொழுதிரந்துகூறல் - இன்புக்கிருளிலை யேகாவென்னல்.

எ. தாயறிவுகூறல் - திரோதையுந்திரும்பலாமென்றுகூறல்.

அ. மதிமேல்வைத்துவரைவுகடாதல் - பெற்றோர்பேறெடு த்தருள்பெருங்கருணையுரைத்தல்.

கூ. காவன்மேல்வைத்துக்கண்டுயிலாமைகூறல் - உயிர்க்கின் பிடையூறுண்டென்றியம்பல்.

க0. பகலுடம்பட்டாள்போன்றிரவரவுவிலக்கல்-சகலமுடன் பட்டுக் கேவலமொருவல்.

கக. இரவுடம்பட்டாள்போன்றுபகல்வரவுவிலக்கல் - கேவ லம்போற்சகல மென்றருளியம்பல்.

கஉ. இரவும்பகலும்வரவுவிலக்கல் - கேவலசகலமு மேலில்லை யென்னல்.

கங. காலங்கூறிவரைவுகடாதல்-பக்குவமீதெனப்பரிந்தருளி யம்பல்.

கச. கூறுவிக்குற்றல் - சிவத்திலுயிரின்பார்வதன்றி யாகாதெ ன்றேயருளியம்பல்.

கரு. செலவுநினைந்துரைத்தல்-அருளாற்சிவமுயிர்க் கன்பறிவி த்தல்.

கசு. பொலிவழிவுரைத்துவரைவுகடாதல் - இன்னுங்கருணை கண் டிலையோவென்னல்.

கஅ-வது. வரைபொருட்பிரிதல்.

கருணையருடிரோதைபரையின்புணர்தல்.

"வரைபொருட்பிரிதற் றுறைமுப்பத்து, மூன்றுங்கருணை தோன்றவருளே, யுணர்த்தலுமுணர்தலுந் திரோதையும்பரை யும், தெரிசனமாகித்திவ்வியவின்பங் கூடுங்குறியுங்குலவியுணர் த்தல்" இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:—

க. முலைவிலைகூறல் - கைம்மாறின்பக் கனத்துக்கிலையெனல்.

உ. வருமதுகூறி வரைவுடம்படுத்தல் - அடியார்க்கலராகா தணையின்பென்னல்.

ங. வரைபொருட்பிரிவையுரையெனக்கூறல் - யானென்பா லின்ப மாவுரையென்னல்.

ச. நீயேகூறென்றல் - அன்பாலின்புறலுனக்கெளிதென்னல்.

ரு. சொல்லாதேகல் - எக்காலும்பிரி வில்லையென்னல்.

சு. பிரிந்தமைகூறல் - அருளுயிர்ப்பிரிவின் பாரவுரைத்தல்.

எ. நெஞ்சொடு கூறல்-உயிர்ப்பிரிவாற்சிவன் கருணையுறுதல்.

அ. நெஞ்சொடுவருந்தல் - உயிர்க்கேகருணை யுற்றின்பாதல்.

௯. வருத்தங்கண்டுரைத்தல் - அருள்சிவன்கருணைக் குறிநோக்கல்.

௧0. வழியொழுகி வற்புறுத்தல் - கருணையிங்ஙனமாயினுயிருமின்பெயாருமென் றன்புறவுரைத்தல்.

௧௧. வன்புறை யெதிரழிந்திரங்கல் - பின்னுஞ்சிவமே பெருங்கருணையாதல்.

௧௨. வாய்மைகூறி வருத்தந்தணித்தல் - உயிர்ப்பரிவெடுத்ததருளுவந்தரற்குரைத்தல்.

௧௩. தேறாது புலம்பல் - அருளியம்பியுமரன் கருணைமிக்கெழுதல்.

௧௪. காலமறைத்துரைத்தல் - அருள்சிவநோக்கிக் காலமீதென்னல்.

௧௫. தூதுவரவுரைத்தல் - உயிர்க்குக்கரணம்யான் வேறிலையென்னல்.

௧௬. தூதுகண்டழுங்கல் - கரணமொன்றுண்டோ வென்றருள்கருதுதல்.

௧௭. மெலிவுகண்டுசெவிலிகூறல் - திரோதைசிவத்திற் சேர்ந்ததெனத் திரும்பல்.

௧௮. கட்டுவைப்பித்தல் - திரோதைசிவத்திற்சேர்சின்னங்காண்டல்.

௧௯. கலக்கமுற்றுநிற்றல் - சிவத்துயிர்சேர்ந்த திறமுலகறிதலருள்கண்டிதுவழி யாமோவென்னல்.

௨0. கட்டுவித்திகூறல் - சிவமுயிருற்ற தியல்பியக்தெரிதல்.

௨௧. வேலனையழைத்தல் - திரோதைசிவத்தின் செயல்வெளியாக்கல்.

௨௨. இன்னலெய்தல் - எங்குராமன்றி யில்லையின்பென்னல்.

௨௩. வெறிவிலக்குவிக்கநினைதல் - யாமன்றிப்பிறவிலை யென்றன்பியம்பல்.

௨௪. அறத்தொடுநிற்றலையுணர்த்தல் - சிவமேயருட்குயிர்ச் செய்தியுணர்த்தல்.

௨௫. அறத்தொடுநிற்றல் - அருட்சிவமே யெடுத்தியம்புதல்.

௨௬. ஐயந்தீரக்கூறல் - அருளேசிவத்தை வியந்தெடுத்துரைத்தல்.

௨௭. வெறிவிலக்கல் - அருள்பிறிதொன்றுமிலையுயிர்சிவமேயாதல்கண்டவேதியம்பல்.

௨௮. செவிலிக்குத்தோழியறத்தொடுநிற்றல் - திரோதைக்கருளே சென்றியம்புதல்.

௨௯. நற்றாய்க்குச்செவிலியறத்தொடுநிற்றல் - திரோதைபரைக்குச்சென்றியம்புதல்.

௩0. தேர்வரவுகூறல் - அருளுயிர்வரல்சிவற் கடுத்தியம்பல்.

௩௧. மணமுரசுகேட்டுமகிழ்ந்துரைத்தல் - சிவமணமுயிர்பெறலருள்கண்டுமகிழ்தல்.

௩௨. ஐயுற்றுக்கலங்கல் - இன்னுமுயிர்க்கிடையூறுண்டோவென்னல்.

௩௩. நிதிவரவுகூறாநிற்றல் - உடல்பொருளுயிரின் புவந்ததென்னல்.

௧௬-வது மணஞ்சிறப்புரைத்தல்.

உயிர்சிவமணம் பெற்றுண்மையாதல்.

"மணஞ்சிறப்புரைத்தல்வருமாறொன்பது, முயிர்சிவமணம்பெற்றுண்மையின்பாகிப், பரைகடந்தின்பப் பண்பாய்நிற்றல்." இக்கிளவிக்கொத்தின் றுறைவருமாறு:—

௧. மணமுரசுகூறல் - உயிர்சிவமணஞ்சிவத்துக் கருளேயுரைத்தல்.

௨. மகிழ்ந்துரைத்தல் - அருளேசிவனாகிக்கருணைமணம்வியத்தல்.

௩. வழிபாடுகூறல்-அருடிரோதைக்குயிரத்துவிதஞ்செப்பல்.

௪. வாழ்க்கைநலங்கூறல்-திரோதைபரைக்குயிர் சேரின் புணர்த்தல்.

௫. காதல்கட்டுரைத்தல்-திரோதைபரைக்குயிர் செய்பணியுரைத்தல்.

௬. கற்பறிவித்தல்-திரோதைபரைக்கின் பாகவுறத்திற முவமைத்திறத்தாலுவந்துரைத்தல்.

௭. கற்புப்பயப்புரைத்தல் - போதமின்புயிர்க் கெனப்பரைக்குரைத்தல்.

௮. மருவுதலுரைத்தல் - உயிரின்பொன்றாய் மருவுதலுரைத்தல்.

௯. கலவியின்பங் கூறல் - ஒன்றற்றிரண்டற் றொன்றுமுலவாதொழியாததையுரைத்தல்.

௨௦-வது. ஓதற்பிரிவு.

பூரணவின்பத் திறம்பாராட்டல்.

"கல்வியிற்பிரி வொருநான்குங்காதல், புல்லுமானந்த வின்பப்பூரணஞ், சொல்லும்பயனின் றிறம்பாராட்டல்" இக்கிளவிக்கொத்தின் றுறைவருமாறு:—

௧. கல்வி நலங்கூறல் - இன்பனு போகனாற் பாராட்டென்னை யன்பினருளே யாற்கறிவுறுத்தல்.

௨. பிரிவுநினைவுரைத்தல் - அறியார்போன்றிருக்கு மனுபவவிலக்கண மென்றருளின்புக் கன்பற்றதுரைத்தல்.

௩. கலக்கங்கண்டுரைத்தல் - இன்பிற்பிரிவிலை யென்றருள் காண்டல்.

௪. வாய்மொழி கூறித்தலைமகள் வருந்தல் - பிரிவொருகாலு மின்றெனவருளுக் கின்பேயன்பாயெடுத் தெடுத்துரைத்தல்.

௨௧-வது. காவற்பிரிவு.

இன்பத்திறத்தை யெங்குங் காண்டல்.

"காவற்பிரிவுத் துறையோரிரண்டு மின்பத்திறத்தை யெங்குங்காண்டல்." இக்கிளவிக்கொத்தின் றுறைவருமாறு:—

௧. பிரிவறிவித்தல் - உலகம்பரவுமின்பாய்க்காணு மருமையருளேயறிந்துரைத்தல்.

௨. பிரிவு கேட்டிரங்கல் - இன்பமனாதியியல்பெடுத்தருளி யன்பிற்கருணையெடுத்தியம்புதல்.

௨௨-வது. பகைதணி வினைப்பிரிவு.

இன்பக்கனமன்றி வேறிலையுலகென்றல்.

"பகைதணிவித்தந் துறையோரிரண்டு, மெங்குமின்பக்கனமென்றியறல்." இக்கிளவிக் கொத்தின்றுறைவருமாறு:—

௧. பிரிவு கூறல் - உலகின்பன்றியறியாமையிலையென் றனுபவமுற்ற தருளேசெப்பல்.

௨. வருத்தந்தணித்தல் - வேறாய்க்காண்டலனுபவமன்றெனவருளேயுருக்கத்தான்மிகவறிதல்.

௨௩-வது. வேந்தற் குற்றுழிப்பிரிவு.

இன்பாராமை யன்பேயென்றல்.

"உற்றுழிப்பிரிவீ ரெட்டுமானந்தம், பெற்றவாராமைமுற்று முரைத்தல்." இக்கிளவிக்கொத்தின் றுறைவருமாறு:—

க. பிரிந்தமைகூறல்-அருளுயிரின்பமடைந்தோர்க்குரிமை யெ ன்னவுதவியாமென்றாற்குரைத்தல்.

உ. பிரிவாற்றாமைகார்மிசைவைத்தல் - அனுபவமடைந்தோர்க் கறிவித்திடவு மன்பேயின்பாயங்குங்கலந்தல்.

ங. வீரனுக்கிவருந்தல் - அனுபவம்பிறருக்கடுத்ததுகண்டவ் வின்பப்பிரிவையெண்ணியன்பாதல்.

ச. கூதிர்கண்டுகவறல்-இன்பன்பாயிருந்தலாலுயிரா யன் பேபிரிவாற்றாமையியம்பல்.

ரு. முன்பனிக்குநொந்துரைத்தல் - பிரிவன்புக்கில்லையெனப் பரையைநோதல்.

சு. பின்பனிநினைந்திரங்கல் - பிரிவுண்டேலின்பம்பெறலாமெ ன்றுயி ரின்பநோக்கியெடுத்துரைத்தல்.

எ. இளவேனில்கண்டின்னலெய்தல்-உயிரின்பின்பே யுன்னி யுரைத்தல்.

அ. பருவங்காட்டிவற்புறுத்தல் - அருள்சிவத்துக்குயிர் வரவு நலங்கூறல்.

கூ. பருவமன்றென்றுகூறல் - அன்புயிர்ப்பருவமின்பல்லவில்ல யென்னல்.

க0. மறுத்துக்கூறல்-அருளுயிர்ப்பருவமன்றெனச்சிவமு மு ண்டேயன்பதுபருவமென்றுணர்த்தல்.

கக. தேர்வரவுகூறல் - அருட்குச்சிவமுமன்புணர்த்ததனா லு யிர்பிரியாமைவரவெடுத்துரைத்தல்.

கஉ. வினைமுற்றிநினைதல் - அனுபவங்கண்டவன்புயிர்சிவனது கருணைமுகநோக்கிக்களித்துருகல்.

கங. நிலைமைநினைந்துகூறல் - சிவம்பிரிவின்றிக்கருணைசெய் திறத்தைப் போதவருளொடுபுகன்றுசெல்லல்.

கச. முகிலொடுகூறல்-அன்புக்குமுன்பின்பாரவுயிர்செல்லல்.

கரு. வரவெடுத்துரைத்தல் - பரசமயாதிபாற்சிவமேயாக்கி யுயிர்வரலருளேயுரைத்தல்.

கசு. மறவாமைகூறல் - அறிவுபிறிதாயின்மறதியுண்டென்ன வருட்குயிரியம்பியன்பாதல்.

உச-வது. பொருள் வயிற்பிரிவு.

தானதுவது தானுகுந்தன்மை.

"பொருட்பிரிவிருபது மருட்பிரிவுயிரே, யானந்த மாகியதுவே தானுய்த், தானேயதுவாய்ப்பேசியகருணை." இக்கிளவிக் கொத்தின்றுறைவருமாறு:—

க. வாட்டங்கூறல் - பிரிவையுரைக்கின்ற பிரிவிலையாதலால் நீயேயுரையெனவருளோடியம்பல்.

உ. பிரிவுநினைவுரைத்தல் - அனுபவப்பொருளையளவாவுத லே பிரிவெனவின்புக்கருளியம்பல்.

ங. ஆற்றுதுபுலம்பல் - பிரிவிலையெனிற்பிரிவுண்டோவென்ன வருளுக்கின்பேயாரவுரைத்தல்.

ச. ஆற்றாமைகூறல் - பிரிந்தவனாவலால்வரும்பெரும்போ தத் திருமேனிதன்னிற்றிகழுமென்றல்.

ரு. நினைபெயர்த்துரைத்தல் - பெற்றவுயிர்க்குப்பிரிவிலையெ ன்னல்.

சு. பொருத்தமறிந்துரைத்தல் - அருளும்பாராட்டலன்பேய ன்றி வேறனவளாவதும்வேண்டாமென்றல்,

எ. பிரிந்தமைகூறல் - பிரிந்தும்பிரியாபோதுயிரன்பை யரு ளேசிவத்துக்காரவுரைத்தல்.

அ. இரவுறுதுயரத்திற்கிரங்கியுரைத்தல் - அருளுயிர்ப்பிரிவு ஞனியத்திலுண்டேயென வின்பக்கதிர்வரை வல் பெடுத்துரைத்தல்.

கூ. இகழ்ச்சிநினைந்தழிதல் - முன்னும்பிரிவிலைபின்னும்பிரிவிலை யாகினுமேனியைப்பிரிதலரிதென்றல்.

க0. உருவுவெளிப்பட்டுநிற்றல்-பிரியுமிடமெலாஞ் சிவமேகாண்டல்.

கக. நெஞ்சொடுநோதல்-செல்லிடமெங்குஞ் சிவமெனவுணர்தல்.

கஉ. நெஞ்சொடுபுலத்தல் - போதந்தனையிழந் தருளே பூண்டல்.

கங. நெஞ்சொடுமறுத்தல் - இன்பன்றிவேறுபிரிவரலிலையென் றன்பாய்ப்போதமருளேயாதல்.

கச. நாணொண்ணிவருந்தல் - அருளேபிரிவி னளவாராய்தல்.

கரு. ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல் - அருளுயிர்ப்பருவங்கண் டன்பாயுரைத்தல்.

கசு. பருவங்கண்டிரங்கல் - இன்பந்தனக்கிதுபருவமென்றே யன்பாயுயிர்மிகுமருளாலுரைத்தல்.

கஎ. முகிலொடுகூறல்-போதத்துக்குமுன்னே பின்பமுறுதல்.

கஅ. தேர்வரவுகூறல் - அருளுயிரன்பினமர்ந்துவருதலின்பந் தனக்குமுன்னியம்பல்.

ககூ. இளையஎதிர்கோடல்-சிவப்பெருங்கருணையாலுவப்பின் பாமுயி ரருட்பெருவளத்தொடுமன்பின்பாதல்.

உ0. உண்மகிழ்ந்துரைத்தல் - அறிவும்போகமும்பிரிவிலையென் றுநெஞ்சிடையின்பாய்நிறைந்ததென்னல்.

உரு-வது. பரத்தையிற்பிரிவு.

அறிவுபூரண மாகியின்பாதல்.

"பரத்தையிற் பிரிதலெண்ணுறுமென்று, முரைத்த சிவானந்த முற்றதுவாம்பி, னெப்பதமெவ்வுயிரெவ்வுலகியாவு, மப்படியே

கண்டறிவுபூரண, மாகிநின்றளவி லனுபவம்பெற்று, நின்றதன் மை நிலைமையுரைத்தது. இக்கிளவிக்கொத்தின் துறைவருமாறு:

க. கண்டவர்கூறல் - பத்தியிட்டதும்விதியுண்டோ வென்று தம்மடியாருள்ளேநினைதல்.

உ. பொறையுவந்துரைத்தல் - அருளேசிவப்பொறையறிந் துரைத்தல்.

ங. பொதுப்படக்கூறிவாடியழுங்கல் - இன்பமுயிர்விதியெண்ணியிரங்கல்.

ச. கனவிழந்துரைத்தல் - மறந்துமுயிரின் பகலாதென்றல்.

ரு. விளக்கொடுவெறுத்தல் - இன்பஞ்சுடரோ டிரங்கியுரைத்தல்.

சு. வாரம்பகர்ந்துவாயின்மறுத்துரைத்தல் - இன்புயிரன்பேயெடுத்துரைத்தல்.

எ. பள்ளியிடத்தூடல் - இன்பமிகழ்த லன்பெனக்காண்டல்.

அ. செவ்வணிவிடுக்கவில்லோர்கூறல் - பலபாராட்டினுமின் பகலாதென வடியார்தாமேயறிந்துகூறுதல்.

கூ. அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல் - பலர்கண்டாலுமின் பகலாதென்றல்.

க0. செவ்வணிகண்டவாயிலவர்கூறல் : இன்பங்கண்டவர்க் கெங்குமின்பாகல்.

கக. மனைபுகல்கண்டவாயிலவர்கூறல் - இன்புடையோர்க்குப் புகலின்பேயென் றன்புடையோர்களறியவுரைத்தல்.

கஉ. முகமலர்ச்சிகூறல் - உயிரின்படைந்ததடியார்தேறல்.

கங. காலநிகழ்வுரைத்தல் - இன்புடையோர்க்குக்கருணையெளிதென அன்புடையோர்களறியவுரைத்தல்.

கச. எய்தலெடுத்துரைத்தல் - இன்பம்பெற்றவுயிரன்பாய் மகிழ்தல்.

௧௫. கலவிகருதிப்புலத்தல் - இன்பமிகும்படியன்பறிவித்தல்.

௧௬. குறிப்பறிந்துபுலந்தமைகூறல் - அன்பாலின்பென் றூரா
யிந்துரைத்தல்.

௧௭. வாயிலவர்வாழ்த்தல் - அடியாருயிரின்பகமிகமகிழ்தல்.

௧௮. புனல்வரவுரைத்தல் - அடியாருயிர்க்கின் பாமெங்குமெ
ன்றல்.

௧௯. தேர்வரவுகண்டுமகிழ்ந்துகூறல் - இன்புடையோராளெ
வர்க்குமின்பாமென வடியார்நோக்கி யகமிகமகிழ்
தல்.

௨௦. புனல்விளையாட்டிற்றம்முளுரைத்தல்-உலகிலெப்பணிக
ளுற்றுமுயிருக் கின்பம்பிரிவிலையென்றேயுரைத்தல்

௨௧. தன்னைவியந்துரைத்தல் - செய்பணியெல்லாஞ்சிவனின்
பென்றல்.

௨௨. நகைத்துரைத்தல் - இன்பமேபணிகண்டன்பாய்க்கொ
ள்ளல்.

௨௩. நாணுதல்கண்டுமிகுத்துரைத்தல் - அருளுயிரன்புக்குக்
கண்டுவத்தல்.

௨௪. பாணன்வரவுரைத்தல் - அருளுயிர்ப்பாராட்டன்பெனி
றியம்பல்.

௨௫. தோழியியற்பழித்தல்-அருளின்பக்கனி வறியவலருரை
த்தல்.

௨௬. உழையரியற்பழித்தல்-அடியாருயிரின்பறியமாறு புரை
த்தறுபின்னுமெடுத்தெடுத்தியம்பல்.

௨௭. இயற்படமொழிதல் - அடியார்க்குச்சிவனுயிரன்புரைத்
தல்.

௨௮. கிளைந்துவியந்துரைத்தல் - பலபணிசெய்யினும்பரனின்
பன்றி வேறிலையெனவுயிர்வியந்துரைத்தல்.

௨௯. வாயில்பெறுதுமகன்றிறநினைதல் - இன்புமடியார்கூட்
டமென்றே யன்பாயுயிரேயகமிகங்குதல்.

௩௦. வாயிற்கணின்றுதோழிக்குரைத்தல் - எப்பணிசெயினு
மரு ளின்றியன்பிலையென வுயிரேயருளுக் குவந்து
ரைத்தல்.

௩௧. வாயில்வேண்டத்தோழிகூறல் - எப்பணியுஞ்சிவனன்றி
யிலையென் வருளேசிவனுக்கறியவுரைத்தல்.

௩௨. தோழிவாயில்வேண்டல் - அருளேசிவத்துக்குயிரின்பா
கி யென்றுவந்தருளேசிவத்துக்குரைத்தல்.

௩௩. மனையவர்மகிழ்தல் - அடியாருயிரின் பண்புகாண்டல்.

௩௪. வாயின்மறுத்துரைத்தல் - சிவமருளேக்கியருட்செய்
கையுரைத்தல்.

௩௫. பாணனெடுவெகுளுதல் - பரசமயத்திற்பரிவாகாதெ
ன் றின்பேயுயிருக்கெடுத்துரைத்தல்.

௩௬. பாணன்புலந்துரைத்தல் - பரசமயங்கள் பாறியெய்த்
தல்.

௩௭. விருந்தொடுசெல்லத்துணிந்தமைகூறல் - உண்மைப்ப
ணிகள் டடியாருவத்தல்.

௩௮. ஊடாணிவித்தல் - அருளேயன்புகள் டாற்கெடுத்து
ரைத்தல்.

௩௯. அணைந்தவழியூடல் - இன்பம்பணிமுழுதன்பாக்கொண்
டு பின்பும்புதிதாயன்புபேணல்.

௪௦. புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தல் - உண்மைப்பணியு
முண்டோவின்பஞ் செம்மையாய்விடிலெனக் சிவ
மேயுரைத்தல்.

௪௧. கலவிகருதிப்புலத்தல் - ஆனந்தத்தாக்கன்புபிறிதிலை யென்றுசிவமேயெடுத்துரைத்தல்.

௪௨. மிகுத்துரைத்தூடல் - பெற்றிடின்ஞான முதன்மூன்றிலையெனல்.

௪௩. ஊடனீடவாடியுரைத்தல் - பெற்றார்க்கானந்தம் பிறிவிலையென்றல்.

௪௪. துனியொழிந்துரைத்தல் - பெத்தம்போல முத்தியினிற்றல்.

௪௫. புலவன்மேல்வைத்துப்புலவிதீர்தல் - முத்தியினுஞ்சுகம் புதிதாய்த்தோன்றல்.

௪௬. கலவியிடத்தூடல் - ஆனந்தங்குரு வடிவேபேணல்.

௪௭. முன்னிகழ்வுணர்த்தூடறீர்த்தல் - அநாதியே யின்பமாலயர்ந்து யிருந்ததற்கெண்ணி யின்பமாதல்.

௪௮. பரத்தையைக்கண்டமைகூறிப்புலத்தல் - இன்பசுகம் புணர்வெய்துமாகி மற்றென்றறியாவகையாயிற்றல்.

௪௯. ஊதியமெடுத்துரைத்தூடறீர்த்தல் - அருளுயிர்பூரணவானந்தமாதல் சிவத்துக்குணைத்தாத் திறம்பாதின்ப மாக்கியிகவுமருண் மிகமகிழ்தல்.

ஆகக்கிளவிக்கொத்து இருபத்தைந்துக்குத் துறைநானூறு.

உண்மைக்கருத்து முற்றிற்று.

உ

பாட்டுமுதற் குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
அகலிடக்	௪௩	ஆரத்தழை	௯௬
அகல்கின்ற	௬	ஆரம்பரந்து	௧௯௮
அகிலின்புகை	௧௭௯	ஆலத்தினு	௨௯
அக்கின்றவா	௭௦	ஆவாவிருவ	௭௫
அக்குமரவு	௧௦௯	ஆவியன்னாய்	௩௮
அஞ்சார்	௪௦௯	ஆழமன்னோ	௬௨
அடற்களி	௩௨௫	ஆழிதிருத்தும்	௨௦௩
அடிச்சந்த	௮௧	ஆழியெழான்	௩௬௯
அணியுமமிழ்து	[illegible]	ஆளரிக்கும்	௨௪௫
அந்தியின்வா	௧௦௫	ஆறார்சடைமு	௪௩௬
அப்புற்ற	௩௮௫	ஆனந்தமாக்கட	௧௫௯
அயர்த்தும்	௩௧௪	ஆனந்தவெள்ள	௩௩௫
அரமங்கையரோ	௪௦௨	இங்கயலென்னீ	௨௨௨
அருந்தும்	௨௯௭	இயன்மன்னு	௪௨௮
அருந்தோழிந்த	௩௫௯	இரதமுடைய	௫௮
அலராயிரம்	௧௯௬	இரவணையும்	௩௯௨
அழுக்தே	௧௮௦	இருங்களியா	௫௩
அளவியை	௧௨	இருந்துதியென்	௩௨௮
அளிநீடளகத்தி	௧௩௦	இளையாளிவளை	௩௨௨
அளியமன்னும்	௬௬	இறவனையும்பர்	௨௮௩
அறுகாவிறை	௧௩௫	இறுமாப்	௪௦௪
அற்பகோட்டி	௩௭௮	இன்னறவார்	௧௯௦
அன்பணைத்	௨௩௮	ஈசற்கியான்	௧௧௫
அன்புடை	௪௦௮	ஈண்டொல்லை	௨௩௩
ஆண்டிலெடுத்த	௨௭௦	ஈவிளையாட	௧௪௨

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
உடுத்தணி	௩௮௩	கயலுளவே	௩௬
உடைமணி	௪௧௮	கயல்வந்த	௪௧௩
உணர்ந்தார்க்	௧௧	கருங்கண்ணனை	௫௫
உயிரொன்றுளமு	௨௦	கருங்கழி	௨௦௭
உருகுதலைச்	௧௧௦	கருங்குவளைக்	௩௬
உருப்பனையன்ன	௧௪௮	கருந்தினை	௩௦௫
உளமாம்வகை	௨௪	கருப்பினை	௩௪௯
உள்ளப்படுவன	௯௧	கலராயினர்	௨௮௨
உள்ளுருகு	௨௦௨	கலைக்கிழக	௯௦
உறுகண்ணிவர்த	௧௦௦	கவலங்கொள்	௪௨௨
ஊர்வாயொழிவா	௮௩	கழிகட்டலை	௨௭௭
எயிற்குல	௩௭	கழிசென்ற	௭௯
எலும்பாலணி	௨௧௬	கழைகாண்டலு	௧௧௮
எழில்வாயிள	௯௯	களிறுற்ற	௨௭௬
எழுங்குலைவா	௨௭௧	கள்ளினமார்த்	௩௨௩
எளிதன்றினிக்	௫௨	கற்பாமதிற்	௩௩௯
என்கடைக்கண்	௩௨௬	கற்றிலகண்டன்ன	௧௦௩
என்னறிவால்	௫௦	களவூர்கனை	௪௦௪
ஏர்ப்பின்னை	௨௯௮	கனைகடற்	௧௫௨
ஏழுடையான்	௯	கார்கத்திரு	௭௩
ஏறும்பழி	௧௨௦	காமனைவென்ற	௧௭௮
ஏனற்பசுங்	௧௭௩	காம்பிணையாற்	௩௯
ஐயுறவாய்	௪௩௨	காயமுமாவியு	௨௨௬
ஓராகமிரன்	௨௧௩	காய்சினவேலன்	௭௭
ஒருங்கட	௫௭	காரணிகற்பகங்	௪௩௩
ஓங்குமொரு	௧௭௧	கார்த்தரங்கந்	௨௦௪
கடந்தொறும்	௨௭௫	காவிநின்றேர்தரு	௪௨
கணியார்	௧௫௬	காணமர்குன்றர்	௩௦௦
கண்கடம்மாற்	௨௩௯	குடிக்கலர்	௩௧௮
கண்ணுழையா	௩௭௭	குயிலிதன்றே	௩௧
கதிர்த்தநகை	௪௨௯	குயிலைச்சிலம்படி	௩௩
கம்பஞ்சிவந்த	௨௨௮	குராப்பயில்	

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
குருகான்	௪௫	சிற்பந்திகழ்	௩௩௪
குவளைகொங்	௧௧௪	சீரளவில்லாத்	௩௩௭
குவளைக்களத்	௩௪	சீரியவாவியும்	௩௨௯
குவளைக்கருங்	௫௨	சுணங்குற்ற	௩௦௯
குறப்பாவை	௨௨௪	சுத்தியபொக்க	௨௬௨
குறைவிற்குங்	௨௯௧	சுருடருசெஞ்ச	௩௬௬
குன்றங்கிடையு	௨௯௩	சுரும்பிவர்சந்து	௨௬௮
கூடாரா	௧௭௫	சுரும்புறுகொன்	௩௮௪
கூம்பலங்	௧௩	சுரும்புறுநீலங்	௧௮௨
கூரிமிரைக்க	௪௬௪	சுழியாவரு	௨௮௪
கூற்றாயின	௪௧௪	சுற்றம்பலமின்	௩௭௬
கேழ்வளையு	௨௯௪	சுற்றினவீழ்	௩௫௦
கொடித்தேர்	௨௩௫	சுற்றுஞ்சடைக்	௧௪௪
கொடுங்கால்	௩௨	சூளாமணி	௪௮
கொல்லான்	௪௧௯	சூன்முதிர்	௪௦௧
கொழுந்தாரகை	௧௩௩	செந்தார்	௪௨௩
கொன்னுனை	௨௫௧	செந்திறமேனி	௭௧
கோங்கிற்	௧௫	செம்மலராயிரங்	௧௬௬
கோம்பிக்	௨௩	செய்குன்றுவை	௨௪௨
கோலத்தனிக்	௪௬	செய்ம்முகநீல	௩௮௭
கோலித்திகழ்	௩௪௮	செவ்வாய்	௩௯௮
சங்கர்தரு	௮௯	செழுங்கார்	௧௭௦
சிந்தாமணி	௧௪	செழுநீர்மதி	௧௩௧
சிலம்பணி	௫௬	செழுமிய	௪௨௫
சிலைமலி	௪௩௦	சென்றார்	௩௧௫
சிலையொன்று	௧௦௭	சேணிற்பொலி	௨௫
சிவந்தபொன்	௩௯௨	சேணுந்திகழ்	௩௭௧
சிறப்பிற்றிகழ்	௩௫௭	சேயேயென	௪௦௧
சிறார்கவண்	௨௭௪	சேறுன்றிகழ்	௪௨௨
சிறுகட்	௩௪௨	சொற்பாலமு	௧௦
சிறுவாணுதி	௩௬௪	சோத்துன்	௧௮௮
சிறைவான்	௨௨	தணியுறப்	௩௯௧

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
தலைப்படு	௨௭	தேவியங்கண்	௪௧௭
தவஞ்செய்	௩௮௯	தேன்வண்டு	௪௧௯
தவளத்தநீறணியு	௧௧௯	தென்றிக்கிலங்கு.	௩௫௪
தழங்குமருவி	௧௩௬	தொண்டினை	௩௩௧
தழுவினகை	௨௪௯	தொத்தின்	௧௨௯
தள்ளிமணி	௧௩௭	தோலாக்கரி	௧௧௯
தாதிவர்	௪௧	நடனும்	௮௦
தாதேய்	௮௬	நந்தீவர	௧௭௭
தாமேதமக்	௨௪௮	நரல்வேயினை	௧௨௭
தாயிற்சிறந்தன்று	௨௨௩	நல்லாய்	௨௯௯
தாருறு	௧௯௧	நல்வினை	௨௮
தாழொன்ன	௫௭	நமனை	௧௦௨
தாழச்செய்தார்	௬௪	நறைக்கண்	௨௮௧
திக்கினிலங்கு	௪௦௭	நற்பகற்சோம	௧௮௩
திருந்தேனுய	௪௨௬	நாகந்தொழ	௧௮௬
திருமாலறியாச்	௩௫௫	நாய்வாயினுள்ள	௩௭௩
திருவளர்	௩	நிருத்தம்	௬௪
திளைவளங்	௧௨௬	நில்லாவளை	௨௦௯
தீமேவிய	௩௭௪	நிழற்றலை	௨௨௫
தெங்கம்பழங்	௧௦௬	நினைவித்துத்	௧௫௧
தெண்ணீரணி	௩௭௫	நின்னுடை	௩௦
தெய்வம்பணி	௩௩௩	நீகண்டனை	௮௮
தெவ்வனை	௧௨௧	நீங்கரும்	௪௭
தெளிதரற்	௩௫௩	நெருப்புறு	௩௪௫
தெளிவளர்	௧௮	நேயத்ததாய்	௪௦
தெள்வன்	௨௫௭	பகலோன்	௨௦௫
தெள்ளம்	௪௧௦	பகன்றுமனை	௨௦௦
தென்மாத்	௩௬௮	படமாசுணப்	௧௨௮
தேமாம்பொழிற்	௨௮௭	படையார்	௧௪௯
தேமென்	௯௫	பனைக்களஞ்	௨௫௫
தேவநிற்	௧௯	பனைத்தாழா	௩௫
தேவாசுர	௩௮௬	பணிவார்	௩௬௦

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
பண்டாலியது	௧௧௧	பூங்கணையார்	௨௧
பரம்பயன்	௨௭௩	பூங்குவளைப்	௩௮௮
பரிவுசெய்	௧௫௫	பூண்படதென்றே	௩௫௨
பருங்கண்	௭௨	பூரணபொற்	௩௨௪
பல்லிலனைகப்	௬௨	பெற்றேறொடுங்	௨௫௨
பழந்திருந்தம்பர்	௨௩௨	பேணத்திருத்திய	௨௩௪
பற்றொன்றிலார்	௧௯௩	பேதைப்பருவம்	௨௫௯
பனிச்சந்திர	௨௩௦	பைங்காணரவன்	௮௪
பனித்துண்டஞ்	௧௪௧	பைவாயரவனை	௧௮௪
பனிவளர்	௧௬௭	பைவாயரவு	௧௮௫
பாசத்தனை	௧௨௨	பொட்டணியா	௩௩௨
பாணிகர்	௧௯௯	பொதுவினிற்	௧௫௮
பாப்பணி	௨௧௫	பொய்யுடையார்க்	௪௯
பாயும்விடையான்	௫	பொருப்பர்க்	௧௫௪
பாயும்விடையோன்	௨௬௧	பொருளா	௭௬
பாலொத்த	௨௫௮	பொன்னணி	௩௭௨
பாவியைவெல்லும்	௩௭௯	பொனீனெனை	௧௩௪
பிணையுங்கலையும்	௨௨௧	பொன்னுர்	௯௪
பிரசந்திகழும்	௩௨௭	பொன்னிவளைத்த	௩௪௭
பிரியாமையு	௩௪௦	பொன்னுமணியும்	௨௦௬
பிரியாரென	௩௭௦	போதுகுலாய	௩௪௯
பிழைகொண்	௬௭	போதோவிசும்	௪
புகழும்பழியும்	௧௯௭	மடுக்கோ	௬௫
புணர்ப்போ	௧௯	மணியக்கணியு	௨௧௪
புலன்றலர்	௨௯௦	மதுமலர்ச்	௩௦௧
புயலோங்	௩௫௬	மத்தகஞ்சேர்	௧௧௨
புயல்வள	௪௨௫	மத்தக்கரி	௪௨௧
புரக்கடர்தா	௯௦	மயிலெனப்	௨௪௩
புரமன்றயரப்	௩௫௦	மயின்மன்னு	௩௮௧
புலவித்திரை	௩௯௬	மருந்துநம்	௧௬௧
பூங்கணை	௧௯௫	மலைப்பொரு	௩௯௯
பூங்கயிலாயப்	௨௬௫	மலவன்குரம்பை	௧௬௮

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
மற்பாய்விடை	௨௨௭	மேவியர்தோ	௯௨
மனக்களியா	௩௨௧	மைகொண்ட	௪௧௯
மன்செய்த	௩௦௪	மைதயங்குர்	௨௧௮
மன்னவன்	௩௩௫	மைத்தழையா	௧௦௮
மன்னுந்திரு	௧௪௦	மையார்கதலி	௨௮௫
மாடஞ்செய்	௧௩௮	மைவார்க்குருங்	௬௯
மாட்டியன்றே	௩௧௦	மொய்யென்பதே	௩௦௩
மாதிடங்கொண்	௧௪௯	மோட்டங்	௧௬௯
மாதுற்றமேனி	௧௮௯	யாயுந்தெறு	௩௧௬
மாவைவர்	௨௧௯	யாழார்மொழி	௯௮
மாற்றேனென	௧௬௩	யாழியன்மென்	௨௫௦
மிகைதணித்தற்	௩௪௩	யாழின்மொழி	௩௮௦
மின்போல்	௨௪௧	யாழுமெழுதி	௮௨
மின்றங்கிடை	௨௪௦	வடிக்கணிவை	௩௩
மின்றுன்னிய	௪௨௪	வடிவார்வயற்	௧௫௦
மின்றெருத்திடு	௨௬௬	வடுத்தனநீள்	௨௧௨
மின்னங்கலருஞ்	௧௮௭	வடுத்தான்	௨௪௬
மீண்டாரென	௨௬௪	வண்டலுற்றே	௩௧௭
மீள்வதுசெல்வ	௨௬௮	வந்தாய்பவனா	௩௦௨
முறுவலக்	௨௪௭	வந்தான்	௩௬௪
முனிதருமன்னை	௧௦௪	வரிசேர்	௮௭
முனிவருமன்ன	௩௬௨	வருங்குன்ற	௧௭
முன்னுங்கடுவிட	௨௫௬	வருட்டிற்	௨௧௫
முன்னுமொருவ	௧௭௪	வருவன	௩௦௭
முன்னோனருண்	௨௩௬	வளாயன்றெரு	௧௧௫
முன்னோன்மணி	௨௨௯	வல்சியினெண்கு	௨௮௪
முன்றகர்த்	௯௭	வழியுமது	௧௪௫
மூப்பானிளையவ	௩௪௧	வழுவாவிய	௧௫௩
மூவர்நின்றேத்த	௩௬௭	வளருங்கறி	௨௧௦
மூவரறிகிய	௨௦௮	வளைபயில்	௮
மெய்யேயிவற்	௬௮	வறியாரிருமை	௨௬௩
மெல்லியல்	௨௨௦	வாரிக்களிற்றின்	௨௮௧

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
வாழும்படி	௩௫௧	வில்லிக்கப்	௩௬௫
வானக்கடி	௩௬௫	வில்லைப்	௪௦௦
வாருழை	௧௨௪	விழியாற்	௩௧
வான்றோய்	௨௮௦	விறலியும்	௪௦௬
விசும்பினுக்	௧௬௨	வின்னிறவானுத	௫௫
விசும்புற்ற	௨௧௭	வீதலுற்றார்	௩௩௮
விடலை	௨௩௭	வெதிரோய்	௨௬௩
விதியுடையா	௩௨௦	வென்றவர்	௩௦௯
விண்ணிறந்தார்	௧௧௩	வேயாது	௪௦௫
விண்ணுக்கு	௧௭௬	வேயினதோளி	௨௫௪
விண்ணுஞ்	௨௭௯	வேயினமென்	௩௦௮
விண்ணை	௭௮	வேய்தந்த	௧௩௧
விட்டலை	௧௯௨	வேலன்புகுந்து	௩௧௩
விடுத்தலை	௪௧௫	வைம்மலர்	௨௫௩
வில்லிலைக்	௨௬	வைவந்து	௨௩௧

பாட்டுமுதற்குறிப்பகராதி

முற்றிற்று.

விளம்பரம்.

பின்வரும் புத்தகங்கள் உயர்ந்தகாகிதத்தில் பெரிய எழுத்தில் வர்ணம்வைத்த திருவுருவப் படங்களுடன் சுத்தப்பிரதியாக அச்சிற் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றன.

[illegible] திருமுறைகள்.

வால்யூம். I. ஸ்தலமுறைத் தேவாரம் (அடங்கன் முறை) (தேவார சந்தர்ப்பங்களுக் கேற்பச் சரித்திரங்களுடன் அந்தத் தஸ்தலத்துக்குரிய பதிகங்கள் பண் முறைக்கிரமப்படி வகுக்கப்பட்டிருக்கின்றன). ரூ. ௫.

,, II. திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் (அரும்பத விளக்கத்துடன்). ,, ௩௨.

,, III. * திருமூலர் திருமந்திரம், பதினோராந் திருமுறை (அரும்பத விளக்கத்துடன்). ,, ௩௨.

திருச்சிற்றம்பலக் கோவையார் (பதவுரை, திருக்கோவையார் உண்மைக்கருத்துடன்). ,, ௧௫.

திருவாசகம் (திருவாசகச் சிறப்புடன் அரும்பத விளக்கஞ் சேர்த்து). ,, ௫.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை (பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரையுடன்). ,, ௩.

* தாயுமானசுவாமி பாடல் (உண்மைக்கருத்து விளங்கும்படியாகச் சைவசித்தாந்த சாஸ்திர மேற்கோள்களுடன்).

* அச்சி லிருக்கின்றன.